Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

சங்க இலக்கியத்தில் சைவ சமய மூலக் கூறுகள்

பழ.முத்தப்பன்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை
2023

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

C.S.S.

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

சங்க இலக்கியத்தில்
சைவ சமய மூலக் கூறுகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சங்க இலக்கியத்தில் சைவ சமய மூலக் கூறுகள்

பழ. முத்தப்பன்

सत्यमेव जयते

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம்
சென்னை - 600 100.

2023

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

CICT Publication No: 113

சங்க இலக்கியத்தில் சைவ சமய மூலக் கூறுகள்
© Central Institute of Classical Tamil, Chennai
Subject: Classical Tamil Literature -- Criticism

Edition: First, 2023

Pages: xiv+244 = 258

Size: Octavo 1/8 (Hardbound)

Published by

Central Institute of Classical Tamil
Chemmozhi Salai, Perumbakkam, Chennai - 600 100
Email: registrar@cict.in | *Website:* www.cict.in | *Phone:* 044-22540125

Price: Rs.600/-

ISBN: 978-81-963293-8-9

Typeset by

Central Institute of Classical Tamil

Printed by

VS Graphics, Royapettah, Chennai - 600 014.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொருளடக்கம்

அணிந்துரை vii

முன்னுரை ix

சுருக்கக் குறியீட்டு விளக்கம் xiii

1. இந்திய மெய்ப்பொருளியல் சமயங்கள் 1
2. சைவ சமயத்தின் தொன்மை 101
3. பண்டைத் தமிழரின் தெய்வ நம்பிக்கை 126
4. சங்கத் தொகை நூல்களில் கடவுள் வாழ்த்து 133
5. சங்க இலக்கியங்களில் இறை பற்றிய மூலக் கூறுகள் 142
6. சங்க இலக்கியங்களில் உயிர்க் கொள்கை 183
7. சங்க இலக்கியங்களில் பாசக் கொள்கை 197
8. சங்க இலக்கியங்களில் சிவத்துவம் 212

துணைநூற் பட்டியல் 241

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பதிப்புக்குழு

தலைமைப் பதிப்பாசிரியர்

பேராசிரியர் இரா. சந்திரசேகரன்
இயக்குநர்

இணைப் பதிப்பாசிரியர்

முனைவர் சி. இராமச்சந்திரன்
இளநிலை ஆராய்ச்சி அலுவலர்

அட்டை வடிவமைப்பாளர்

திரு. கி. கண்ணன்
இளநிலை ஆய்வு வளமையர்

நூல் வடிவமைப்பாளர்

திரு. க. சங்கர்
இளநிலை எழுத்தர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பேராசிரியர் இரா. சந்திரசேகரன்
இயக்குநர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
சென்னை - 600 100

அணிந்துரை

சைவ சமயம் தொன்மையான சமயங்களுள் ஒன்றாகும். இச்சமயம் உலகின் பல்வேறு பகுதிகளில் பின்பற்றப்பட்டு வருகிறது. பழம்பெரும் நூல்கள், வரலாற்றுச் சான்றுகள், அகழாய்வுகள், தொல்பொருள்கள், வழிபாட்டு முறைகள் இச்சமயத்தின் தொன்மைக்குச் சான்றாதாரங்களாக விளங்குகின்றன. சைவ சமயத்தின் தொன்மைக்கு ஆதாரமாக விளங்கும் வேதங்கள் மற்றும் புராணங்களில் வேதங்களின் காலம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவ்வேதங்களிலும் பழைய வேதங்கள் இருந்தன என்பதைத் தொல்காப்பியப் பாயிர உரையில் நச்சினார்க்கினியர் குறிப்பிடுகின்றார்.

யாரால் தோற்றுவிக்கப்பட்டது என அறுதியிட்டுக் கூற இயலாததாய்த் தொல்பழங்காலந்தொட்டு வழங்கிவரும் சைவ சமயம் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், திருமூலர், காரைக்காலம்மையார், சுந்தரர் போன்ற பல்வேறு அடியவர்களால் போற்றிப் பாடப்பட்டு மக்களிடம் கொண்டு சேர்க்கப்பட்டது. இவ்வாறு காலங் காலமாக இச்சமயம் அடியவர்களாலும் சமயப் பற்றாளர்களாலும் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. சமண சமயத்திற்கு இழுக்கு ஏற்படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டு மகேந்திரவர்ம பல்லவனால் பல்வேறு துன்பங்களுக்கு ஆளானார் திருநாவுக்கரசர். இத்துன்பங்களையெல்லாம் தன் மன உறுதியாலும் தமது சமய நம்பிக்கையாலும் வென்றார் அவர். இதனைக் கண்ட பல்லவ மன்னன் இவர் பெருமையை உணர்ந்து இவரை வணங்கி நல்லறிவு பெற்றுச் சைவனாகிச் சிவாலயம் கட்டினான் என்பது வரலாறு. இத்தகைய சிறப்புவாய்ந்த சமயத்தைப் பண்டைய சித்தர்களும், முனிவர்களும் பின்பற்றியுள்ளனர். ஆதிசோழ அரசனான முசுகுந்தன் பல இடங்களில் சிவலிங்கங்களை நிறுவினான் என்று வரலாறு கூறுகின்றது. திருக்கயிலை, காசி, காளத்தி, காஞ்சி, சிதம்பரம், திருவண்ணாமலை, மதுரை ஆகிய பகுதிகள் புராதனமான சிவத் தலங்களாகும். சிந்துவெளியின் அகழ்வாராய்ச்சியின்போது கிடைத்த சிவலிங்கங்களும், அதனோடு தொடர்புடைய பிற தொல்பொருட்களும், சிவ வழிபாடு ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை நமக்கு உணர்த்துகின்றன. ஆஸ்திரேலியாவிலும், நியூசிலாந்திலும் உள்ள ஆதி மக்களின் மொழிகளில் இலிங்கம் எனும் சொல் காணப்படுகின்றது. கம்போடியாவிலும் பழைய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவவழிபாட்டு உருவ வடிவங்கள் கிடைத்திருக்கின்றன. பாபிலோனில் நடந்த அகழ்வாராய்ச்சியின்போது, ஆறாயிரம் ஆண்டுப் பழைமை வாய்ந்த சிவலிங்கமும், ஆலயத்தின் சிதைவுகளும் கிடைத்திருக்கின்றன. சிவன் வழிபாடு மேற்காசியா, கிரீஸ், உரோம் முதலிய நாடுகளிலும் பழங்காலத்தில் பரவியிருந்தது. இதற்கு ஆதாரமாக உரோம் நாட்டிலும் சிவலிங்கங்கள் கிடைத்துள்ளன. இவையெல்லாம் தமிழர்களின் வழிபாட்டுமரபுகடல்கடந்தும்பரவிஇருந்ததுஎன்பதற்குச்சான்றுகளாகும்.

இறையனார் களவியலுரை, கடல்கொண்ட தென்னாட்டில் இருந்த தலைச் சங்கத்தில் சிவபெருமான் - திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் புலவராக இருந்து தமிழாய்ந்தார் எனக் குறிப்பிடுகின்றது. முதுமுதல்வன், ஈர்ஞ்சடை அந்தணன், காரியுண்டிக் கடவுள், ஆலமர் கடவுள் எனச் சிவபெருமானின் பெயர்கள் சங்க நூல்களில் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு சங்க இலக்கியங்களில் சிவனைப் பற்றிக் கூறும் செய்திகள் சைவத்தின் தொன்மைக்குச் சான்றாக இருக்கின்றன எனலாம். இவற்றையெல்லாம் உறுதிப்படுத்தும் விதமாக பழ. முத்தப்பன் அவர்களால் சங்க இலக்கியங்களில் சைவ சமய மூலக் கூறுகள் என்னும் இந்நூல் எழுதப்பெற்றுள்ளது.

எட்டுத் தலைப்புக்களில் இந்திய மெய்ப்பொருள் சமய, தத்துவங்கள் குறித்தும் சைவ சமயத்தின் தொன்மை குறித்தும் விரிவாக ஆய்வு செய்யும் இந்நூலாசிரியர், பண்டைத் தமிழர்களின் தெய்வ நம்பிக்கை குறித்து விளக்கமளிக்கின்றார். அடுத்ததாக, சங்க இலக்கியங்களில் இடம்பெற்றிருக்கும் கடவுள் வாழ்த்துப் பாடல்களை மட்டுமே ஆய்வுக்கு உட்படுத்திச் சைவ சமயத்தின் தொன்மையை நிறுவ முயலும் ஆசிரியர், சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே இருக்கும் இறை பற்றிய சிந்தனைகளைச் சைவ சமய நெறியில் விளக்கியுரைக்கின்றார். சங்க இலக்கியங்களில் உயிர்க்கொள்கை, சங்க இலக்கியங்களில் பாசக் கொள்கை, சங்க இலக்கியங்களில் சிவத்துவம் என்னும் தலைப்புக்களில் சங்க இலக்கியத்தில் இருக்கும் சைவ சமயத்தின் பல்வேறு பரிமாணங்களை, மூலக் கூறுகளைப் பட்டியலிடுகின்றார். பண்டைத் தமிழ் இலக்கியத்தை ஆதாரமாக எடுத்துக்கொண்டு அதனோடு சைவ சமய நூல் கருத்துக்களை ஒப்புமைப்படுத்திச் சைவ சமய கருத்துக்களின் பிறப்பிடமாக சங்க நூல்கள் விளங்குகின்றன என்பதை ஆய்வு அணுகுமுறையோடு எடுத்துக் காட்டியுள்ள நூலாசிரியர் பழ. முத்தப்பனின் பணி பாராட்டுக்குரியது. இந்நூலாக்க முயற்சியில் பங்கெடுத்துக்கொண்ட இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் சி.இராமச்சந்திரன், நூல் வடிவமைப்பாளர் க. சங்கர், அட்டைப்பட வடிவமைப்பாளர் கி. கண்ணன் ஆகியோருக்கு நன்றியும் வாழ்த்தும்.

ஒ-ம்

(இரா. சந்திரசேகரன்)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முன்னுரை

"தென்னாடுடைய சிவனே போற்றி- எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்ற மணிவாசகரின் திருவாக்கு சைவ சமய நெஞ்சங்களில் எல்லாம் கொலுவிருக்கும் திருவாக்காகும். இது சைவ சமயத்தின் பெருமையையும் அதன் பரப்பினையும் வெளிப்படுத்தும் வாக்கும் ஆகும். "சைவத்தின் மேல் சமயம் வேறில்லை" என்ற உணர்வோடு வாழ்வது சைவ சமய உலக வாழ்வு. சிவபெருமானின் சம்பந்தம் உடைய சைவ வாழ்வு இன்று நேற்றல்ல, அநாதி காலந்தொட்டு அமைந்தது. சைவ சமய வாழ்வு, தொன்மையும் சிறப்பும் மிக்கது. மெய்ப்பொருளியலார் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுகின்ற உலகச் சமயங்களில் சைவ சமயமும் ஒன்றாக இருக்கின்றது. இச்சைவ சமயத்தின் தோற்றம் யாரால் எப்பொழுது அமைந்தது என்பதை அறுதியிட்டுக் கூறமுடியாத அளவிற்குப் பழமை வாய்ந்தது. மேலும், தமிழருக்கே உரிய சமயமாகவும் இது சிறப்புற்றுத் திகழ்கின்றது. எனவேதான் தமிழ் மக்களின் பண்பாட்டையும், உயர்வையும் நிலைநாட்டிக் கொண்டிருக்கும் சங்க இலக்கியங்களில் இச்சைவ சமயக் கருத்துக்கள் இடம்பெற்றிருக்கின்றன.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் சங்க இலக்கியங்களில் சமயம் சார்ந்த கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. அக்கருத்துக்கள் சைவ சமயக் கொள்கைகளுக்கு மூலக்கூறுகளாக (அடிப்படையாக) எவ்வாறு அமைந்துள்ளன என்பதை ஆய்ந்து எடுத்துக் காட்டுவதன் மூலம் சைவ சமயத்தின் சிறப்பினை உணரலாம் என்ற அடிப்படையில் "சங்க இலக்கியங்களில் சைவ சமய மூலக் கூறுகள்" எனும் இந்நூல் உருவாக்கம் பெற்றது. சங்க இலக்கியங்கள் தோன்றிய காலத்தில் பௌத்தம், சமணம், சைவம், வைணவம் உள்ளிட்ட சமயங்கள் இருந்தன. இதனால் அச்சமயங்களின் மூலக்கருத்துக்களும் சங்க இலக்கியங்களில் பரவியிருப்பதை மறுக்கவியலாது. இவ்வாறு பல்வேறு சமயக் கூறுகள் இடம்பெற்றிருக்கும் சங்க நூல்களில் சைவ சமயத்திற்குரிய மூலக் கூறுகளைப் பிரித்து ஆய்வதின் மூலம் சங்ககால மக்களின் சைவ சமய உணர்வு புலப்படும் எனலாம்.

எட்டு தலைப்புக்களில் எழுதப்பெற்றுள்ள இந்நூலில், இந்திய மெய்ப்பொருள் சமயங்கள் என்பது முதல் பகுதியாகும். இதில் இந்திய மெய்ப்பொருளியல் ஆய்வில் இடம்பெறுகின்ற உலகாயதம், பௌத்தம், சமணம், ஆசீவகம், சாங்கியம், யோகம், நியாய வைசேடிகம், மீமாம்சை, ஏகான்மவாதம் என்ற சமயங்கள் எடுத்துக் கொள்ளப்பெற்று - அவ்வச் சமயங்களின் அடிப்படைக் கொள்கைகள் கிடைத்த தரவுகளால் தொகுத்துத் தரப்பெற்று, அந்தந்த சமயங்களின் அடிப்படைக் கொள்கைகள் சைவ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூல்களில் இடம்பெற்றிருப்பதையும் சுட்டிக்காட்டி, அவ்வச் சமயக் கொள்கைகளின் மூலக் கூறுகள் எவ்வாறு இடம்பெற்றிருக்கின்றன என்ற செய்திகளும் இப்பகுதியில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. சைவ சமயம் தன் தத்துவங்களை விளக்கும் பொழுது பரபக்கம், சுபக்கம் என்று இருவகையில் அமைத்துக் கொள்ளும். பரபக்கம் என்பது பிற மதக் கருத்துக்களைக் கூறி, அவை பொருத்தமற்றவை என மறுத்துச் சைவ சமயத்தை நிலைநாட்டுவது. சுபக்கம் என்பது சைவ சமயத்தின் கொள்கைகளை விளக்கிக் கூறி அதன் சிறப்பை நிலைநாட்டுவது. எனவே, சைவ சமயக் கொள்கைப்படி சங்க இலக்கியங்களில் இடம்பெற்ற பிற மதக் கருத்துக்களும், ஆய்வின் பிற பகுதிகளில் சங்க இலக்கியத்தில் இடம்பெற்ற சைவ சமயத்தின் மூலக் கூறுகளையும் எடுத்துக்காட்ட வேண்டியிருப்பதால் இப்பகுதியில் பிற மதங்களின் கருத்துக்களும் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன.

சைவ சமயத்தின் தொன்மை என்பது இரண்டாவது பகுதியாகும். இதில் சைவ சமயத்தின் தொன்மையை எடுத்துக்காட்டுவதற்காக அகழாய்வுச் சான்றுகள், வேதத்தில் உருத்திரன் வழிபாடு, காஷ்மீர் சைவம், வீர சைவம், அகப்புறச் சைவம், அகச்சைவம் ஆகியவற்றின் தரவுகளைக் கொண்டு காலம் வரையறுக்க இயலாத சைவ சமயத்தின் தொன்மை எடுத்துக்காட்டப் பெற்றுள்ளது. மேலும், வேதங்களில் சிவன் இடம்பெறாமையும், காஷ்மீர சைவமும், வீர சைவமும் சைவ சமயத்தின் தொன்மைக்குத் தரவுகளாக அமைந்துள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்விரு சமயங்களுக்கும் சைவ சமயத்திற்கும் இடையே உள்ள தொடர்பினை எடுத்துக்காட்டி - சைவ சமயத்தோடு தொடர்புடைய பிற அகப்புறச் சமயத்தையும், அகச்சமயத்தையும் அறிமுகப்படுத்தி சைவ சமயத்தின் தொன்மை புலப்படுத்தப் படுகின்றது.

பண்டைத் தமிழரின் தெய்வ நம்பிக்கை என்னும் மூன்றாம் பகுதி, தமிழின் முதன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின்வழி கிடைக்கப்பெற்ற தெய்வ நம்பிக்கைகள் குறித்த செய்திகளைத் தொகுத்துத் தருவதாக அமைந்துள்ளது.

சங்கத் தொகை நூல்களில் கடவுள் வாழ்த்து என்னும் பகுதியில், எட்டுத்தொகை நூல்களில் இடம்பெற்றுள்ள கடவுள்வாழ்த்துப் பாடல்கள் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. பத்துப்பாட்டிற்கெனத் தனி ஒரு செய்யுள் கடவுள் வாழ்த்தாக அமையாது. ஆகையால் ஆற்றுப்படை நூல்களில் கடவுள் வாழ்த்தாக முதல் பாட்டாகத் திருமுருகாற்றுப்படை அமைந்துள்ளது. அப்பாட்டில் உள்ள கருத்துக்கள் மூலக் கூறுகளில் இடம்பெறுகின்றன. எட்டுத்தொகை கடவுள் வாழ்த்துப் பாடல்களில் சைவம் சார்ந்த பாடல்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அப்பாடல்களில் காணப்பெறும் சைவ சமயக் கருத்துகள் தொகுக்கப்பெற்றுள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சங்க இலக்கியங்களில் இறை பற்றிய மூலக் கூறுகள் என்ற தலைப்பு, சைவ சமயத்தின் அடிப்படையான முப்பொருள்கள் பதி, பசு, பாசம் என்பன. இவை தமிழில் இறை, உயிர், தளை என்று குறிப்பிடப்பெறும். முப்பொருள்களில் தலைமையானது இறை என்ற கடவுட் பொருளாகும். சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள கடவுள், தெய்வம் என்ற பகுதிகள் எடுத்துக் கொள்ளப்பெற்று, அவை சைவ சமயத்தின் மூலக் கூறுகளாக அமைந்த சிறப்பை வெளிப்படுத்துகின்றது. சங்க இலக்கியங்களில் கடவுள் உண்டு என்பதற்கும், அவர் முதன்மையானவர் என்பதற்கும், தலைமையானவர் என்பதற்கும், நிலையானவர் என்பதற்கும் கிடைக்கப் பெற்ற தரவுகள் தொகுக்கப் பெற்றுள்ளன. மேலும், பெண் தெய்வ வழிபாடு, செவ்வேள் வழிபாடு, பிற தெய்வ வழிபாடு, சிவபெருமானுக்குரிய பெயர்கள், விழாக்கள், புராண வரலாறுகள், தத்துவ நிலைகள் ஆகியவை பற்றிய தரவுகளும் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. இவை சங்க இலக்கியங்களுக்குப் பின்வந்த திருமுறைகளிலும் சாத்திரங்களிலும் வளர்நிலையில் இடம்பெற்றமை குறித்தும் தொகுத்தளிக்கப் பட்டுள்ளன.

சங்க இலக்கியங்களில் உயிர்க்கொள்கை என்னும் பகுதி, உயிர் பற்றிய பிற மதக்கொள்கைகள் எடுத்துக்காட்டப்பெற்று, அவை பொருத்தமற்றவை என்பதை நிறுவுகின்றது. சைவ சமயத்தின் உயிர் பற்றிய கொள்கையை எடுத்துக்காட்டுகின்றது. மேலும், உயிருக்கும் உடம்பிற்கும் உள்ள தொடர்பு, உயிர் நிலையானது என்பது சொர்க்கம் நரகம் பற்றிய செய்திகள், சீவன் முத்தரின் செய்திகள் சங்க இலக்கியத் தரவுகளிலிருந்து எடுத்தளிக்கப்பட்டுள்ளன. இத்தரவுகளின் வளர்ச்சிநிலை திருமுறைகளிலும், சித்தாந்த சாத்திரங்களிலும் இடம்பெற்ற செய்திகளும் தொகுத்தளிக்கப் பட்டுள்ளது.

சங்க இலக்கியங்களில் பாசக்கொள்கை என்ற தலைப்பில் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்ற வினைக் கொள்கைக்குரிய தரவுகள் தொகுக்கப் பெற்று, அவை நல்வினை தீவினையாகவும், ஊழ்வினை யாகவும் திகழுகின்றன என்பது நிறுவப்பெற்றுள்ளது. இக்கொள்கைகள் திருமுறைகளிலும், சாத்திரங்களிலும் அமைந்தமையும் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளது.

சங்க இலக்கியங்களில் சிவத்துவம் என்னும் பகுதி, சைவ சமயத் தத்துவங்கள் அளவை, இலக்கணம், சாதனம், பயன் என்ற நான்கின் அடிப்படையில் வகுத்துக் கூறுகின்றது. இறை, உயிர், தளை என்ற முப்பொருளும் உண்டு என்பதை அளவைகளால் நிறுவும் பொருட்டு, அனுமான அளவையை மையமாகக் கொண்டு செய்திகள் தரப்படுவதுண்டு. அம் முப்பொருள்களின் இலக்கணம் என்ற பகுதியில் கூறப்படுவதுண்டு. இறையருளை அடைவதற்கு உரிய வழிகளைக் கருவிகளாகக் கொண்டு,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அக்கருவிகளைச் சாதனப் பகுதியில் கூறுவதுண்டு. கருவிகளைக் கொண்டு இறைவனை வழிபட்டால் கிடைக்கக் கூடிய பேரருளைப் பயன் என்ற பகுதியில் கூறப்படுவதுண்டு. இந்த நான்கில் சாதனம், பயன் என்ற இரண்டின் அடிப்படையில் காணப்படுகின்ற செய்திகள் சங்க இலக்கியங்களில் அமைந்துள்ள நிலையினை எடுத்துக் காட்டுகின்றது. இதில் வேதம், வேள்வி, கோயில், நிலையாமை, வழிபாடு, முத்தி என்ற செய்திகள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றிருப்பது குறித்து எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இவற்றின் வளர்நிலை திருமுறை, சித்தாந்தங்களால் நிறுவப்பெற்றுள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

கலி.	-	கலித்தொகை
கா.பு.	-	காரைக்கால் அம்மையார் புராணம்
குறள்.	-	திருக்குறள்
குறிஞ்சிப்.	-	குறிஞ்சிப்பாட்டு
குறுந்.	-	குறுந்தொகை
சிலம்பு.	-	சிலப்பதிகாரம்
சிவஞான.	-	சிவஞான போதம்
சிவஞான.சூ.	-	சிவஞான போதம் சூத்திரம்
சிவஞான.சி.	-	சிவஞான சித்தியார்
சிவஞான.சுப.	-	சிவஞான சித்தியார் சுபக்கம்
சிவப்.	-	சிவப்பிரகாசம்
சிறுபாண்.	-	சிறுபாணாற்றுப்படை
தத்துவப்.	-	தத்துவப் பிரகாசம்
திருஇரட்டை.	-	திரு இரட்டைமணி மாலை
திருக்களிறு.	-	திருக்களிற்றுப்படியார்
திரு.கந்தர்கலி.	-	திருச்செந்தூர் கந்தர் கலிவெண்பா
திருஞான.	-	திருஞானசம்பந்தர்
திருநாவுக்.	-	திருநாவுக்கரசர்
திரு.	-	திருமந்திரம்
திருமுருகு.	-	திருமுருகாற்றுப்படை
திருவருட்.	-	திருவருட்பயன்
தொல்.கிளவி.	-	தொல்காப்பியம் கிளவியாக்கம்
தொல். அகத்.	-	தொல்காப்பியம் அகத்திணையியல்
தொல். மரபு.	-	தொல்காப்பியம் மரபியல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தொல். மெய்.	-	தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல்
தொல். செய்யு.	-	தொல்காப்பியம் செய்யுளியல்
தொல். புறம்.	-	தொல்காப்பியம் புறத்திணையியல்
தொல். கற்பு.	-	தொல்காப்பியம் கற்பியல்
நற்.	-	நற்றிணை
நன்.	-	நன்னூல்
நான்மணி.	-	நான்மணிக்கடிகை
நெஞ்சுவிடு.	-	நெஞ்சுவிடு தூது
நெடுநல்.	-	நெடுநல்வாடை
பட்டினப்.	-	பட்டினப்பாலை
பதிற்.	-	பதிற்றுப்பத்து
பரி.	-	பரிபாடல்
புறம்.	-	புறநானூறு
பெரிய.	-	பெரியபுராணம்
பெரும்பாண்.	-	பெரும்பாணாற்றுப்படை
பொருநர்.	-	பொருநராற்றுப்படை
போற்றிப்.	-	போற்றிப் பஃறொடை
மதுரைக்.	-	மதுரைக்காஞ்சி
மலைபடு.	-	மலைபடுகடாம்
மெய்ப்.	-	மெய்ப்பொருள் நாயனார் புராணம்
மேகலை.	-	மணிமேகலை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. இந்திய மெய்ப்பொருளியல் சமயங்கள்

தமிழ் இலக்கணங்களில் ஒன்றான நன்னூல், எழுவகை மதம் பற்றி "பிறிதொடு படாஅன் தன்மதம் கொளலே" (நன்.11) என்பது ஒரு கொள்கையாகும் என்று குறிப்பிடுகின்றது. பிறர் கொள்கைக்கு உடன்படாமல் தன் கொள்கையையே கொள்வது என்பது இதன் பொருளாகும். இந்த அடிப்படையில் சைவ சமயக் கொள்கைகளைத் தந்திடும் பனிரெண்டு திருமுறைகளிலும், பதினான்கு சாத்திரங்களிலும் பிற மதக் கொள்கைகள் இன்னவென்று கூறப்பெற்று, அவற்றை உடன்படாது தம் சைவ சமயக் கொள்கைகளே சிறந்தவை என்று எடுத்துக் காட்டுகின்ற வழக்கம் காணப்படுகிறது. இச்செய்திகள் மூலம் திருமுறைகளின் காலத்திலும், சித்தாந்த சாத்திரங்களின் காலத்திலும் இந்திய மக்களிடையே வழங்கிவந்த பிற மதக் கொள்கைகளை அறிந்துகொள்ள முடிகின்றது. எனவே, இப்பகுதி சைவ சமய நூல்கள் குறித்திடும் பிற சமயங்கள் பற்றிய செய்திகளைக் கிடைத்திருக்கும் ஆதாரங்களைக் கொண்டும், அறிஞர்களின் கட்டுரைகளைக் கொண்டும் அம்மதங்களின் செயல்பாடுகள் விளக்குகின்றது.

திருமுறைகளின் காலத்தில் பௌத்தமும் சமணமும் நேரடியாகக் கண்டனம் செய்யப் பெற்றிருக்கின்றன. திருஞானசம்பந்தர் தேவாரத்தில் பத்தாவது பாடல்தோறும் சமணமும் பௌத்தமும் கண்டனத்தைப் பெற்றிருக்கின்றன. திருநாவுக்கரசர் தேவாரத்தில் ஆங்காங்கு சமணம் கண்டனம் செய்யப் பெற்றிருக்கின்றது. இவ்விருவர் தேவாரத்திலும் கடவுளைப் போற்றாதவர்கள் அதாவது கடவுளை நம்பாதவர்கள் என்று கடவுள்மறுப்புக்கொள்கையர்களாகிய உலகாயதரும், சாங்கியரும் குறிப்பாகக் காட்டப்பெற்றுள்ளனர். சுந்தரர் தேவாரத்திலும் கடவுள் மறுப்புக் கொள்கை சுட்டிக்காட்டப் பெற்றுள்ளது. பனிரெண்டாம் திருமுறை பெரியபுராணத்தில் தமிழகத்தில் நிலவிய பௌத்த, சமணத்தின் தாக்கம் அவ்வவ் வரலாற்றுப் பகுதியில் இடம்பெற்றிருக்கின்றது. எனவே, திருமுறைகளில் நேரடியாக இல்லை என்றாலும் ஆங்காங்கே பிற மதக்கொள்கைகள் கண்டனத்திற்கு உட்படப் பெற்றுள்ளமையை அறியலாம்.

ஆயின் சைவ சித்தாந்த சாத்திரங்களிலோ பிற மதக் கொள்கைகள் எடுத்துக் காட்டப்பெற்று, அவை சைவ சமயக் கொள்கைகள் அடிப்படையில் மறுக்கப்பெற்று, சைவ சமயக் கொள்கைகளை நிலைநாட்டும் பகுதியாகப் பரபக்கம் இடம்பெற்றுள்ளது. தனித்த சைவ சமயக் கொள்கையை நிலைநாட்டும் பகுதி சுபக்கமாக அமைந்துள்ளது. பதினான்கு சாத்திரங்களில் நேரடியாகப் பிற மதக் கொள்கைகள் எடுத்துக் காட்டப்பெற்று அவை பொருத்தமற்றவை என்று கூறுகின்ற பரபக்கப் பகுதியைச் சிவஞான சித்தியாரின் பரபக்கப் பகுதியும், உமாபதி சிவம் பாடியருளிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சங்கற்பநிராகரணமும் சுட்டிக்காட்டுகின்றன. சிவஞான சித்தியார் பரபக்கத்தில் இடம்பெற்றுள்ள மதங்கள் உலகாயதம், பௌத்தத்தில் சௌத்திராந்திகம், யோகசாரம், மாத்திமிகம், வைபாடிகம் ஆகியவையும், சமணத்தில் நிகண்டவாதம், ஆசீவக மதங்களும், மீமாம்சையில் பட்டாச்ச ாரியார் மதமும், பிரபாகரன் மதமும், ஏகான்ம வாதத்தில் சத்தப்பிரம வாதமும், மாயாவாதமும், பாற்கரியன் மதமும், சாங்கிய மதமும், பாஞ்சராத்திர மதமும் இடம்பெற்று மறுக்கப் பெற்றுள்ளன.

உமாபதி சிவத்தின் நூலாகிய சங்கற்ப நிராகரணத்தில் மாயாவாதி, ஐக்கியவாதி, பாடாணவாதி, பேதவாதி, சிவசமவாதி, சங்கராந்தவாதி, ஈசுவர அவிகாரவாதி, நிமித்த காரண பரிணாமவாதி ஆகிய பிற மதக் கொள்கைகள் சங்கற்பம் என்ற நிலையில் அவற்றினுடைய மறுப்புக்கள் சங்கற்ப நிராகரணம் என்ற பகுதியாகத் தரப்பெற்றுள்ளன.

இதன் அடிப்படையில் சைவ சமயக் கருத்துக்கள் பிற மதக் கண்டனம் மற்றும் மறுப்புக்களோடு திருமுறைகளிலும் சாத்திரங்களிலும் தரப் பெற்றிருப்பதால் சங்க இலக்கியத்தில் சைவ சமய மூலக் கூறுகள் என்ற ஆய்வுக்கு ஏற்ப சங்கம் நிலவிய காலத்தில் நாட்டில் வழங்கிவந்த பிற சமயங்களைப் பற்றிய செய்திகளைத் தருவது இன்றியமையாதது ஆகின்றது. அக்காலத்தில் குறிப்பிடத்தக்க இந்திய மெய்ப்பொருள் மதங்களைப் பற்றிய செய்திகள் இங்கு தொகுத்துத் தரப்பெற்று, சைவ சமயத்தில் சங்க இலக்கியங்களில் காணப்பெறும் குறிப்புகளும் தொகுத்து இக்கட்டுரையில் தரப்பெறுகிறது.

1. உலகாயதம்

சைவ சமயக் கொள்கைகளில் முதலில் உலகாயதம் மறுக்கப்படுவதால் அதன் பொருட்டுக் கிடைத்திருக்கும் உலகாயதச் செய்திகள் தொகுக்கப் பெறுகின்றன. மனிதன் பகுத்தறிவு நிலையை எய்திய நாள்முதல் தன்னைச் சுற்றியுள்ள சூழல்களை ஆராயத் தொடங்கினான். உயிர் என்பதற்குப் பொருள் யாது? வாழ்க்கையின் அடிப்படைகள் யாவை? அவை உண்மைப் பொருளா அல்லது நிலையற்றவையா? என்று ஆராயத் தொடங்கினான். அந்த ஆய்வே மெய்ப்பொருள் இயல் ஆய்வாக மலர்ந்தது. மனிதன் தன்னால் காணப்பெற்ற உலகமும் அதனுள் இருக்கும் பொருள்களும், அந்தப் பொருள்களைப் பயன்படுத்தும் தன்னையும் அதாவது உயிரையும் ஆராய்ந்த பொழுது அந்த மெய்ப்பொருளாய்வு பல்வேறுபட்ட முரண்பாட்டுக் கருத்துக்களையும் மாறுபட்ட கருத்துக்களையும் தந்தது. எனவே, மெய்ப்பொருள் ஆய்வு ஒரு படித்தான ஆய்வாக அமையாமல் பல்வேறு கோணங்களில் அமைந்தன என்றாலும் மெய்ப்பொருள் ஆய்வு பகுத்தறிவோடு கூடிய ஆய்வாக வளரத் தொடங்கியது.

கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டு வரையில் ஐரோப்பிய மெய்ப் பொருளியல் வரலாறுகளே - இத்துறையில் முன்னணியில் இருந்தன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஐரோப்பிய மெய்ப்பொருள் வளர்ச்சியை மெய்ப்பொருளியல் நோக்கில் ஊன்றி நின்று ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. என்றாலும், மெய்ப் பொருளியல் வரலாற்றை சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்ட கீழை, மேலை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு என்ற நூல் இன்று அறிந்துகொள்ளுகின்ற அளவிற்குத் தெளிவாகத் தந்துள்ளது. அந்த நூலில் குறிக்கப்பெற்றுள்ள செய்திகளைச் சுருக்கமாகக் கீழ்வருமாறு காணலாம்.

மெய்ப்பொருள் ஆய்வாளர்கள், ஐரோப்பியர், மெய்ப்பொருள் இயல் அறிஞர்களைப் பற்றியும் அவர்களின் கொள்கைகளைப் பற்றியும் அடிப்படையாகக்கொண்ட மெய்ப்பொருள்வரலாற்றை எழுதி வைத்துள்ளனர். இதனை உண்மையான மெய்ப்பொருள் இயல் வரலாறு என்று கூற முடியாது. அது போலவே அரேபிய நாட்டு வரலாற்று ஆசிரியர்களும் மெய்ப்பொருள் அறிஞர்களும் அதனையே பின்தொடர்ந்தனர். இவையெல்லாம் பழமையான நிலைகளாகும். மெய்ப்பொருள் வரலாறு என்பது பத்தொன்பதாம் நூற்றாண்டில் தான் முழு வடிவம்பெறத் தொடங்கிற்று. இந்த நூற்றாண்டில் இருந்துதான் மெய்ப்பொருளைப் பற்றிய உயர்ந்த ஆய்வும் வரலாறும் எழுத வேண்டிய சூழல் ஏற்பட்டது. மெய்ப் பொருளையும் அதன் வரலாற்றையும் கற்க வேண்டிய காலகட்டம் ஏற்பட்டது. வரலாற்று அறிஞர்களும் மெய்ப்பொருள் வரலாற்றைப் புத்தகங்களாக எழுதத் தொடங்கினர். அப்புத்தகங்களின் மூலம் கிரேக்கர்களின் மெய்ப்பொருள் இயலின் முந்தைய பகுதி, எகிப்தியரின் பழைய அறிவால் பெரிதும் இயக்கப்பட்டது என அறியமுடிகிறது. எகிப்தியரின் கொள்கைகளைக் குறிப்பிடும் பிளேட்டோவின் முறையானது அறிவின் ஊற்றாகக் கருதப்பட்டது. அவருடைய கொள்கை எதிர்ப்பின்றி ஒத்துக்கொள்ளப் பெற்றது. அரிஸ்டாட்டில் பிளேட்டோவின் கொள்கைகளுக்கு மேலும் உயர்வு தந்தார். அதாவது எகிப்தியர்களின் குருமார்களே உலகத்தின் முதல் மெய்ப்பொருள் அறிஞர்கள் என்று கூறினார். என்றாலும் இவர்களின் கொள்கைகள் மெய்ப்பொருள் இயலின் கொள்கைகளை முழுமையாகத் தந்தது என்று உறுதிபடக் கூற முடியவில்லை. இந்த வரிசையில் உலக நாடுகளின் மெய்ப் பொருளியலின் வரலாற்றை ஆராய்கின்ற பொழுது இந்திய நாட்டு மெய்ப் பொருள் இயலின் ஆய்வு, பழமையான வளர்ச்சியிலிருந்து தோன்றி வளர்ந்து கிரேக்கர்களின் முந்தைய கால வரலாற்றைவிடப் பழமையானதாக அமைந்துள்ளது என்ற கருத்து கிடைக்கிறது. அதற்கு அடிப்படைக் காரணம் ஐரோப்பிய அறிஞர்கள் கிறித்துவ மதம் தோன்றிய நாளிலிருந்துதான் மனித வளர்ச்சியைக் காணுகின்றனர் என்பதாகும். எனவே, ஐரோப்பிய, கிரேக்க மெய்ப்பொருள் இயல் வரலாற்றை வரலாற்று ஆய்வாளர்கள், கிறித்துவுக்கு முற்பட்ட பகுதி என்றும் கிறித்துவுக்குப் பிற்பட்ட பகுதி என்றும் தர முற்பட்டனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிடைத்துள்ள வரலாற்றின்படி கிறித்து சகாப்தம் தொடங்குவதற்கு முன்னமேயே பௌத்த மதத்தின் புலன்கடந்த பொருளியல் கருத்துக்கள் தெளிவுபெற்ற கொள்கைகளாக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்திய மெய்ப்பொருளியலில் வழங்கி வந்தன. இதனை மெய்ப்பொருள் ஆய்வாளர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். பௌத்த மதத்தின் தெளிவுபெற்ற கொள்கைகள் இந்திய நாட்டில் வழங்கிய வேதங்களின் கொள்கைகளுக்கு மாறாக அமைந்தன என்பதையும் வரலாற்றால் அறியமுடிகின்றது. கௌதம புத்தர் உலக அறிஞர்கள் யாரும் அடைய முடியாத சிறந்த இடத்தைப் பெற்றவர். வாழ்க்கையின் தீர்க்க வேண்டிய சிக்கல்களுக்குத் தெளிவுகாண அல்லது உண்மையைக் காணத் தம்முடைய ஆராய்ச்சியைத் தொடங்கியவர். கணக்கற்ற ஆண் தெய்வங்களையும் பெண் தெய்வங்களையும் நம்பிய அக்கால இந்தியாவின் வேத சமய வரம்பை முழுதும் உடைத்தெறிந்தவர். அவருடைய ஆழ்ந்த ஆராய்ச்சி இந்திய மெய்ப்பொருள் ஆய்வுக்குப் பெருமை சேர்த்தது.

அதே காலத்தில் இந்தியாவில் சைன மதமும் வழங்கி வந்தது. பௌத்தத்தைப் போல சைனமும் கடவுள் உண்மையைப் புறக்கணித்தது. இரு சமயங்களும் கடவுள் உண்மையைப் பற்றிப் பெரிதும் வற்புறுத்தாமல் வாழ்வில் தெளிவு காணவேண்டிய சிக்கல்களுக்கு மட்டும் வழிகாட்டின. எனவே, கடவுள் உண்டு என்பதையாவது அவர் அருளையாவது முன்வைத்துக் கொள்ளாமல் வாழ்க்கையின் சிக்கல்களைத் தீர்க்க முடியும் என்ற நிலையை இரு சமயக் கொள்கைகளால் அப்பொழுதே மெய்ப்பொருள் இயலை இந்தியநாடு அடைந்திருந்தது என்பதைத் தெளிவாக அறியமுடிகிறது. இத்தகைய காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டு என்பதை இந்திய வரலாற்றால் அறிய முடிகிறது. கௌதம புத்தரும், மகாவீரரும் இத்தகைய கருத்துக்களைப் பரப்புவதற்கு முன்னமேயே வேத உபநிடதங்களில் மெய்ப்பொருளியல் தோன்றியிருந்தது என்பதை ஆய்வாளர்கள் அனைவரும் ஏற்பர். உபநிடதங்களில் மிகப் பழமையானவை கி.மு.எட்டாம் நூற்றாண்டில் தொகுக்கப்பெற்றவை என்பதை அனைவரும் ஏற்பர். எனவே, கி.மு.எட்டாம் நூற்றாண்டிற்கும் ஆறாம் நூற்றாண்டிற்கும் இடையில் சாருவாகமுறை எனப்படும் உலகாயதக் கொள்கைகள் தோன்றின என்பதும் சிலருடைய கருத்தாகும். அவர்கள் பிரபஞ்சங்களை விளக்க உபநிடதங்களில் காணும் சில குறிப்புக்களைச் சான்றாகக் காட்டுவர். சாத்வீகம், யோகம் என்ற இரு முறைகளும் புத்தருக்கு முன்பே தோன்றின என்பது தெளிவு. இந்த ஆய்வை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் பொழுது கி.மு.ஏழாம் நூற்றாண்டிற்கு முன்னமேயே பல நூற்றாண்டுகள் தள்ளி இந்திய மெய்ப் பொருளியலின் தோற்றத்தைக் கணக்கிடலாம்.

இவ்வாறு இந்திய மெய்ப்பொருளியலின் காலத்தைப் பல்வேறு கோணங்களில் ஆய்கின்ற பொழுது கிறித்துவுக்கு ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே இந்திய மெய்ப் பொருளியல் தோன்றியது என அறியமுடிகின்றது. இந்திய மெய்ப்பொருளியல் கருத்துக்கள் கிரீஸ் நாட்டில் தோன்றுவதற்கு முன்னமேயே இந்திய நாட்டில் தோன்றின என்பதை முடிவாகக் கொள்ளலாம். கிரீஸ் நாட்டின் மெய்ப்பொருள் இயல் தோற்றம் கி.மு.ஆறாம் நூற்றாண்டு என்பது அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உண்மையாகும். அந்தக் காலக்கட்டத்தில் இந்திய நாட்டின் மெய்ப்பொருள் இயல் மிக விரிவடைந்திருந்தது. எனவே, மெய்ப்பொருள் இயல் வரலாற்றில் இந்திய மெய்ப்பொருளியலே தொன்மையானது என்று கீழை, மேலை நாடுகளின் மெய்ப்பொருள் இயல் வரலாற்று நூல் குறிப்பிடுகின்றது.

உலகாயதத்தின் தோற்றம்

உலகம் மட்டுமே உள்ள பொருள் எனக் கொண்டமையால் இக்கொள்கைக்கு உலகாயதம் என்ற பெயரும், சர்வாகர் என்ற தத்துவ ஞானியால் முதன் முதல் இதன் கொள்கைகள் வெளிப்படுத்தப் பட்டமையால் சார்வாகம் என்ற பெயரும் ஏற்பட்டது. இந்தியத் தத்துவ ஞானங்களைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிய அறிஞர்கள் அனைவரும் இம்மதத்தின் கொள்கையைப் பற்றி விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ளனர். குறிப்பிட்டுச் சொல்லும் அளவில் சிலரின் வெளியீடுகள் அமைந்துள்ளன. பண்டைக்கால இந்தியப் பொருள் முதல் வாதம் பற்றிய ஆய்வு என்ற பொருளில் உலகாயதம் என்ற விரிவான நூலை தேவிபிரசாத் சட்டோபாத்தியாயா வெளியிட்டுள்ளார்கள். ஏறக்குறைய 900 பக்கங்களைக் கொண்ட அந்நூலைத் தமிழில் எஸ்.தோத்தாத்திரி அவர்கள் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்கள். அடுத்துக் கீழை, மேலை வரலாற்று முதல் தொகுதியில் சாருவாக மெய்ப்பொருள் இயல் என்ற தலைப்பில் தட்சண ரஞ்சன் பட்டாச்சார்யா அவர்கள் ஒரு கட்டுரை வழங்கியுள்ளார்கள். இலங்கை கி. லெட்சமணன் அவர்கள் தம்முடைய இந்தியத் தத்துவ ஞானம் என்ற நூலில் உலகாயதக் கொள்கைகளைத் தனியொரு கட்டுரையாகத் தந்துள்ளார்கள். மணிவாசகர் நூலகத்தில் வெளியிடப்பட்ட தத்துவ தரிசனம் என்ற நூலில் உலகாயதக் கொள்கைகளை டாக்டர்.கி.முப்பால்மணி கட்டுரையாகத் தந்துள்ளார்கள். பேராசிரியர் சோ.ந.கந்தசாமி அவர்கள் தம்முடைய இந்தியத் தத்துவக் களஞ்சியம் தொகுதி - 1ல் உலகாயதம் பற்றிய விரிவான செய்திகளைத் தந்திருக்கிறார்கள். இவை இன்றைக்குக் கிடைத்திருக்கக் கூடிய உலகாயதம் பற்றிய நூல்களாகும். இவ்வாய்வு நூல்களுக்கு எல்லாம் முற்பட்டதாகச் சைவ சித்தாந்த ஆசிரியர் அருணந்தி சிவம் உலகாயதம் பற்றித் தமக்குக் கிடைத்த செய்திகளைப் பரபக்கச் செய்தியாகத் தந்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும். அதுபோல அதற்கும் முன்பு மணிமேகலையில் பூதவாதி என்று சமயவாதியாகச் சித்தரிக்கப் பெற்று உலகாயதத்தின் கருத்துக்கள் வெளிப்படுத்தப் பெற்றுள்ளன. சமணக் காப்பியமான நீல கேசியில் பூதவாதச் சருக்கத்தில் உலகாயதத்தின் கொள்கைகள் இடம்பெற்றுள்ளன.

உலகாயதம் பற்றிய ஆய்வு தொன்றுதொட்டு நடைபெற்று வந்துள்ளது என்பதைப் பேராசிரியர் சோ.ந.கந்தசாமி அவர்கள், பிருகஸ்பதி என்பவர் உலகாயத நூல் ஒன்று எழுதியுள்ளார். பௌத்தப் பேறிஞர் சந்தரகீர்த்தி எழுதிய பிரஞ்ஞான சாத்திரத்தில் உலகாயத சாத்திரம் இடம்பெற்றுள்ளது. யோகாசார பௌத்த ஞானி ஆரிய தேவர் இயற்றிய சத சாத்திரத்தில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிரகஸ்பதியின் சூத்திரம் இடம்பெற்றுள்ளது. கி.மு.300ல் பாகுரி என்பார் உலகாயத சாத்திரம் வெளியிட்டமை புலப்படுகின்றது. வாசஸ்பதி என்பார் எழுதிய உலகாயத சாத்திரம் குரு சீடர் மரபில் போதிக்கப்பட்டு வந்துள்ளது. கி.மு.எட்டாம் நூற்றாண்டுக்கு உரியதாகக் கருதப்பெறும் தத்துவோப பலவ வாதம் என்ற உலகாயத நூல் வெளியிடப்பெற்றுள்ளது என்கிறார். பேராசிரியரின் இச்செய்திகள் உலகாயதத்தைப் பற்றிய வெளியீடுகளைக் குறிப்பிட்டு உலகாயதத்தின் தொன்மை வரலாற்றை நினைவுபடுத்துகின்றன. மேலும், சோ.ந.கந்தசாமி அவர்கள், பார்ஹஸ் பத்தியம், உலகாயதம், சார்வாகம், நாத்திக மதம், நிகண்டா வாதம், பூதவாதம், தேகாத்தும வாதம், இந்திரிய யாத்தும வாதம், அந்தக் கரண ஆத்தும வாதம், பிராணாத்தும வாதம் என்று உலகாயதத்திற்குரிய வேறு சில பெயர்களையும் குறிப்பிடுகின்றார்.

தட்சண ரஞ்சன் பட்டாச்சார்யா அவர்கள், இந்திய நாட்டில் வழங்கி வந்த ஆன்ம உணர்ச்சிகளுக்கு எதிராக அவற்றின் கோட்பாடுகளையும் சடங்குகளையும் எதிர்த்த மனிதர்களும் இருந்தனர். அவர்களின் கருத்து முறைகள் சார்வாக மெய்ப்பொருள் இயல் என வழங்கப்பெற்றது. இக்கொள்கைகளுக்கு மூலமான நூல்கள் இருந்தன என்றாலும் தற்பொழுது கிடைப்பன சமணம், பௌத்தம், சைவம் ஆகிய மதத்தார் தங்கள் எதிர்ப்புகளுக்கு வெளியிடப்பட்ட மறுப்புரைகளே சார்வாகக் கொள்கை முறைகளை அறிவதற்கு அடிப்படையாக அமைகின்றன. இருக்கு வேதத்தில் பிரகஸ்பதி என்பவர் பிராணபதி என்று வழங்கப்பெறுகிறார். சார்வாகர்கள் பிரகஸ்பதியைப் பின்பற்றியவர்கள். அவர்கள் பிரகஸ்பதியர், லோகாயதர் என்ற பெயர்களைப் பெற்றனர் என்பார்.

இந்திய வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும் சார்வாகக் கருத்து ஆதரிக்கப்பெற்று வந்திருக்கிறது. வால்மீகி இராமாயணத்தில் ஜபாலி என்பவர் பொருளே முதல் என்னும் (உலோகாயதம்) கொள்கையைப் போதித்த ஆசிரியர் ஆவார். அவர் கூறிய அறிவுரைகள் சார்வாகச் சாயலைக் கொண்டதாகும். உலகாளும் மன்னவனைவிட மேலானவர் இல்லை என்ற சார்வாகர் கருத்தை அரி வம்சத்தைச் சேர்ந்த வேனா என்ற அரசர் ஆதரித்தமை பெறப்படுகிறது. புத்தரின் சம காலத்தவரான அசிதகேச காம்பலர் என்பவரின் போதனைகள் சார்வாகக் கொள்கைகளை ஒத்தவையாகும். பாயாசி என்பவரும் பாகுரி என்பவரும் சார்வாகக் கொள்கைகளை ஆதரித்தனர். சதானந்தர் என்பவர் எழுதிய அத்வைத பிரம்மசித்தி என்ற நூலில் சார்வாக மறுப்புகள் சுட்டிக்காட்டப் பெற்றுள்ளன.

சார்வாகரின் கொள்கைகள் அறிவியல் கொள்கைகளாகும். அவர்கள் உண்மையை அறிவதற்கு ஒரே வழி காட்சி என்று கொண்டனர். புலனால் அறியக்கூடியவைகளே உண்மையானவை. புலன்களுக்கு அப்பாற்பட்டவை எல்லாம் ஐயத்திற்கு உரியவை. உண்மையை அறிவதற்கு அனுமானத்தை அளவாகக் கொள்ளக் கூடாது. உரை அளவையும் கூட அனுமானத்தால் பெற வேண்டியவை ஆதலால் அச்சான்றுகளும் நம்பத்தக்கவை அல்ல. அது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பகுத்தறிவுக்குப் பொருந்தாது. காரணம் உரையளவைக்கு உரிய வேதங்களுக்கு உள்ளேயே கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஒன்றை ஒன்று மறுக்கின்றன. நிலம், நீர், காற்று, நெருப்பு என்ற நான்குவகை மூலப்பொருள்களையே சார்வாகர் ஏற்பர். ஆகாயத்தை அவர்கள் ஏற்பதில்லை. அது காட்சிக்கு உட்படாததால் அதனை ஒரு மூலப்பொருளாகக் கருதமுடியாது. பல மன நுகர்வுகளை ஏற்கும் ஆன்மா என்ற உடல் சார்பற்ற ஒரு பொருள் இல்லை. உடலே ஆன்மாவாகும். இவ்உடலை ஆக்கிய ஒவ்வொரு மூலப்பொருளும் அழியும்பொழுது சாம்பல்களாக, தூசுகளாகத் தங்கி அவற்றின் இனத்தோடு கலந்துவிடுகின்றன. ஆகையால் மறுபிறப்பு என்பதும் வினைக்கு ஏற்ற தண்டனை என்பதும் பொருளற்றதாகும். பலவகை உலக நிகழ்ச்சிகள் எல்லாம் பொருள்களின் இயற்கைத் தன்மையிலிருந்து தாமே உண்டாவன. இயற்கைக்கு மேம்பட்ட படைப்போனாகிய கடவுள் என்பவர் ஒருவர் இல்லை. இவ்வுலக அரசர் ஒருவரே கடவுள். அவரே நாட்டை ஆள்பவர். சொர்க்கம் நரகம் என்பவை சில வஞ்சகர்களின் கற்பனை. இயற்கைக்கு மேம்பட்ட ஒன்று உண்டு என்று மனிதர்களை நம்பச் செய்வதால் தாம் பிழைப்பதற்கு வழி தேடுவோரின் தொழிலாகும் இது. சார்வாகர் கொள்கை மூட நம்பிக்கைகளையும் தப்பு எண்ணங்களையும் எதிர்த்தவை. சொர்க்கம், நரகம், கடவுள் என்ற கொள்கைகளால் நிலை தடுமாறாமால் வாழ்க்கையின் அழகுகளை நுகரவிடுத்த அழைப்பாகும். என்பது சார்வாகம் பற்றிய முக்கியச் செய்திகளாகும். கி. லெட்சுணமன் கருத்து - உலகாயதம் மட்டுமே பிரத்யட்சம் என்னும் காட்சி அளவையைக் கொண்டதாகும். பூதங்கள் நான்கும் வெவ்வேறு விதத்தில் ஒன்றுசேர, அச்சேர்க்கையால் எழுந்தனவே இவ் உலகமும் உலகிலுள்ள பல்வேறு பொருள்களும் ஆகும். திரிகையில் வைத்த மண்ணில் பல்வேறு வடிவினவாகிய பல மட்கலங்கள் உற்பத்தி ஆவதைப் போன்றதே இவ் உலகில் உள்ள பொருள்கள் உற்பத்தி ஆவதும். இச்சேர்க்கை நீங்க பொருள்கள் அழிந்து மீண்டும் நான்கு பூதங்களாக மாறும். இவை இவ்வாறு மாறி மாறித் தோன்றி அழிவது அவற்றின் சுபாவமாகும். உலகாயதர் உடலின் வேறாய் உடல் தோன்றுவதற்கு முன்னும் உளதாய், உடல் அழிந்த பின்பும் நிலைத்து நிற்பதாய் உள்ள உயிர் ஒன்று உண்டு என்பதை ஒப்புக் கொள்ளாதவர் ஆவர். உயிரும் உடலும் ஒன்றே. பூதங்களின் சேர்க்கையால் உடல் உண்டாகும் பொழுதே அவ்வுடலுக்கு உணரும் சக்தியும், சிந்திக்கும் சக்தியும் உண்டாகின்றன. பெண்ணிடம் பெறுவதே உயர்ந்த இன்பம். அதைப் பெற ஒழுங்கோ முறையோ தேவையில்லை என்ற செய்திகளை ஆசிரியர் இந்தியத் தத்துவ ஞானம் என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

அடுத்து தேவிபிரசாத் சட்டோபாத்தியாயா அவர்கள் 1959ல் ஆங்கிலத்தில் உலகாயதம் என்ற பெயரில் ஒரு நூல் எழுதி வெளியிட்டார். அதன் தமிழ் மொழிபெயர்ப்பு 2010ல் வெளிவந்துள்ளது. சுமார் 900 பக்கங்கள் கொண்ட அந்நூலில் மூன்று பாகங்களில் உலகாயதம் பற்றிய செய்திகள் விரிவாகத் தரப்பெற்றுள்ளன. முதல் பாகத்தில் இடம்பெற்றுள்ள இயல் ஒன்று தவிர மற்ற ஏழு இயல்களிலும் உலகாயத மதக்கொள்கைகள் பிறரால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எவ்வாறு கூறப்பெற்றுள்ளன அல்லது பிறரால் உலகாயத மறுப்புகள் எவ்வாறு கூறப்பெற்றுள்ளன என்பன எடுத்துக்காட்டப் பெற்று, அம்மறுப்புகளுக்கு மறுப்பாகப் பெரும்பாலான செய்திகளைத் தேவிபிரசாத் அவர்கள் தந்துள்ளார்கள். அந்நூலிலிருந்து சில கருத்துக்கள் முன்வைக்கப் பெறுகின்றன.

இந்தியாவின் தத்துவ தரிசனங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். முதலாவது பொருள் முதல் வாதத்தினை அடிப்படையாகக் கொண்டது. இதற்கு உதாரணம் சாருவாகம் என்ற பண்டை உலகாயதம். இரண்டாவது கருத்து முதல் வாதத்தினை அடிப்படையாகக் கொண்டது. இதற்கு உதாரணம் வேதாந்தம். மூன்றாவது இரண்டும் கலந்தவை. உதாரணம் சைவம், பௌத்தம், சாங்கியம், மீமாம்சம், வைசேடிகம், நியாயம் என்பன. இந்தத் தரிசனங்களில் காலத்தால் முற்பட்டது சாருவாகம் என்னும் உலகாயதம் ஆகும்.

இந்தியத் தத்துவத்தின் வரலாறு கி.மு. ஆறாம் நூற்றாண்டினைச் சேர்ந்த உபநிடதங்கள் தொடங்கி இந்தியத் தருக்கம், அணுக்கொள்கை ஆகியவற்றின் கடைசிப் பிரதிநிதியான கதாதரர் வரை (அவருடைய நூலை கி.பி.17-ஆம் நூற்றாண்டில் எழுதினார்) வந்த தொடர்ச்சியாகும். இந்த வரலாற்றில் மதச் சார்பின்மை, பகுத்தறிவு வாதம், விஞ்ஞானக் கண்ணோட்டம் ஆகியவற்றினைப் பொருள் முதல்வாதம் பிரதிபலித்த போது, அனுபூதி (இறைநிலை வாதம்) இருண்மை வாதம், புனிதநூல் கண்ணோட்டம் ஆகியவற்றைக் கருத்து முதல்வாதம் பிரதிபலித்தது. இவ்விரண்டு வாதங்களின் போராட்டங்களுக்கு இடையிலேதான் இந்தியத் தத்துவத்தின் அல்லது மெய்ப்பொருள் இயல் வரலாறு நகர்ந்து வந்துள்ளது.

இந்தியக் கருத்து முதல் வாதத்தில் சிறந்த பிரதிநிதி ஒருவரால் எழுதப்பெற்ற சர்வ தரிசன சங்கிரகம் என்ற தொகுப்பு நூலில் இருந்து உலகாயதக் கருத்துக்கள் துவங்குகின்றன. மேலும், ஆரம்பகாலப் புத்தமத நூல்கள் உலகாயதம் பற்றிக் கூறுகின்றன. அசுரர்களின் கருத்தாக உலகாயதக் கருத்துக்களை மிகப் பழைய உபநிடதங்களும் குறிப்பிடுகின்றன. இவற்றை எல்லாம் கொண்டு உலகாயதம் என்பது அதன் மூல வடிவத்தில் மிகப் பழமையானது என அனுமானிக்கலாம். உலகாயதம் உறுதியாகப் புத்த மதத்திற்கும், உபநிடதங்களுக்கும் முந்தியது. ஆனால், எவ்வளவு பழமையானது என்பதைத் துல்லியமாகக் கூற முடியாது.

மற்ற தரிசனங்களுக்குரிய முக்கியமான நூல்கள் அனைத்தும் பாதுகாக்கப் பெற்றுத் தரப்பெற்றுள்ளன. அதே சமயத்தில் உலகாயதம் பற்றிய மூலநூல்கள் அனைத்துமே கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு மறைந்துவிட்டன. கிடைப்பது எல்லாம் உலகாயதம் பற்றிய சில சிதைந்த குறிப்புக்களே. ஆனால், இவையெல்லாம் அதை எதிர்ப்பவர்களின் எழுத்துக்களில் தான் பாதுகாக்கப்பெற்றன. அதாவது உலகாயதக் கருத்துக்களை மறுத்துக் கேலி செய்பவர்களின் எழுத்துக்களில் அவை உள்ளன. எனவே, எதிர்ப்பவர்களின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குறிப்புகளில் இருந்துதான் உலகாயதரின் கொள்கைகளை அறிய வேண்டியுள்ளது. இக்கால அறிஞர்கள் பெரும்பாலும் கருத்து முதல்வாத நம்பிக்கையின் அடிப்படையில் உலகாயதத்தை அணுகினர். எனவே, அந்த அணுகிய நிலையை விடுத்துப் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தில் உலகாயதத்தை ஆராய வேண்டுவது இன்றியமையாதது ஆகின்றது. பொருள் முதல்வாதக் கண்ணோட்டம் பற்றித் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். மிகவும் உயர்ந்துள்ள பொருள் முதல் வாதத்தினை உருவாக்கியவர்கள் மார்க்சும், எங்கெல்சும் ஆவர். அவர்களின் உருவாக்கம் மார்க்சியம் எனப்படுகிறது. எனவேதான் உலகாயதத்தை மார்க்சியக் கண்ணோட்டத்தில் ஆராய முற்பட்டுள்ளேன் என்று தேவிபிரசாத் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு அவரது நூல் முன்னுரையில் பொதுக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. அதன்பின் எட்டு இயல்களில் உலகாயதம் பற்றிய கருத்துக்கள் இடம்பெறுகின்றன. உலகாயதத்தின் தோற்றம் ஆதிகால உலகக் கண்ணோட்டத்தின் முக்கியமான கூறாகிய தேகவாதம் பற்றியது ஆகும். அதாவது மனித உடல் பேரண்டமாகிய உலகத்தின் முன் மாதிரி என்பதும் உலகத்தின் தோற்றம் போன்றது என்பதும் ஆண் பெண் இணைவதால் தோன்றும் உடல் போல பலவகை இணைப்பால் உலகம் தோன்றியது என்பதும் ஆரம்பகால உலகாயதரின் கண்ணோட்டமாகும். ஆரம்ப காலத்தில் இருந்த இந்த உலகக் கண்ணோட்டமானது கொள்கை ரீதியாகப் பின்னால் உருவம் பெற்றதா என்பதை உறுதி செய்வது கடினம் ஆகும். என்றாலும் இந்தப் பழங்காலக் கண்ணோட்டம் ஒரு கட்டத்தினைப் பிரதிபலிக்கிறது. அதாவது கடவுள், ஆன்மா, மறு உலகம் என்னும் ஆன்மீகக் கருத்துக்களைக் காண்பதற்கு முந்தியுள்ள கட்டம் அது. எனவே, இதன் அடிப்படை புராதன கால முதல்நிலைப் பொருள்நிலை வாதம் எனலாம். இது வளர்ச்சி அடைந்து தத்துவ தரிசனமாக மாறியது. ஆரம்பகால இந்தியக் கருத்து முதல்வாதமான வேதாந்தத்திற்கு இது வலுவான எதிர்ப்பைத் தொடுத்தது. வேதங்கள் உலகாயதப் பாரம்பரியத்திற்கு மிகவும் எதிரானவை. வேதங்களின் உலகக் கண்ணோட்டமானது கருத்து முதல்வாதக் கம்பீரத்துடன் வெளியானபோதிலும் அதன் அடித்தளமானது புராண ஆரம்பகால பொருள் முதல்வாத காரணத்தினால் உருவாக்கப்பெற்றது. ஆன்மீக உணர்வு தோன்றுவதற்கு முன்புள்ள நிலையை இது காட்டுகின்றது.

உலகாயதம் என்று அழைக்கப்படுவதற்குக் காரணம் மக்களிடையே பரவியிருந்த ஆயுதம் என்பதால் ஆகும். அதாவது லோகேசு - ஆயுதா என்று சொல்லைப் பிரித்துக் கண்டால் இது விளங்கும். மத்திய காலத்தில் எழுந்த நூலான சர்வ தரிசன சங்கிரகத்தை (மாதவாச்சாரியார் இயற்றியது.கி.பி.14-ஆம் நூற்றாண்டு) மொழிபெயர்த்த ஈ.பி.கொவேல் இந்த சொல் மூலத்தை ஏற்றுக்கொண்டுள்ளார். இச்சொல் குறிப்பிடும் கொள்கை - இன்பம் துய்த்தல், பொருள் தேடுதல், ஆசை, புலன் இன்பம் ஆகியன மட்டுமே மனிதனின் லட்சியம் என்று கருதி, மறு உலகம் எதுவும் இல்லை என

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மறுக்கும் மக்கள் தான் சாருவாகரது கொள்கையைப் பின்பற்றுபவர்கள். எனவே, இந்தப் பொருள் தரும் தரிசனம் தான் உலகாயதம் என்று மாதவர் கூறி உலோகாயதர் என்ற சொல்லுக்கு விளக்கம் தருவார். மாதவர் இவ்வாறு கூறும்பொழுது அவருக்கு முன்னோடியாகப் பிரம்ம சூத்திரங்களுக்கு உரை எழுதிய சங்கராச்சாரியாரை அடியொற்றிப் பாமர மக்களை உலகாயதத்தைப் பின்பற்றுபவர்கள் என்று கூறுவார். எனவே, உலகாயதம் என்பது மக்களின் தத்துவம் என்றும் இந்த உலகம் பற்றிய பொருள் முதல் தத்துவம் என்றும் தத்துவ ஆய்வாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பெற்றன. பீட்டர்ஸ்பர்க் அகராதியிலும் பொருள் முதல்வாதம் எனக் கூறப்பெற்றுள்ளது.

உலகாயதத்திற்குரிய நூல்கள் அழிந்துவிட்டன என்பது நம்பிக்கையாகும். மூலநூல் இருந்தது என்பதை மறுக்கின்ற ஆய்வாளர்களும் உண்டு. ரைஸ்டேவிட் என்பவர் இவர்களில் ஒருவர். என்றாலும் துச்சி, கார்வே, தாஸ்குப்தா ஆகியோர் மூலநூல் இருந்திருக்கிறது என்ற நம்பிக்கை கொண்டவர்கள் ஆவர். சந்திரகீர்த்தியின் பிரஞ்ன சாத்திரத்தில் உலகாயத சாத்திரம் ஒன்று மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளது. அதுபோல ஆரிய தேவரின் சதசாத்திரம் என்பதில் பிரஹஸ்பதி சூத்திரத்திலிருந்து ஒரு மேற்கோள் உள்ளது. பதஞ்சலி, பாஸ்கராச்சாரியார் என்ற இருவரும் பொருள் முதல்வாதம் பற்றி முன்னர் இருந்த நூல்களுக்குச் சாட்சியாவர் என்று குறிக்கப்பெறுகிறது. திவ்ய வதனம் என்னும் பௌத்த நூலில் உலகாயதம் என்பது ஒரு தனியான கல்வித்துறை என்று குறிக்கப்பெற்றுள்ளது. இவ்வாறு ஆய்வாளர்களால் மூலநூல் இருந்தது என்பதும் அது அழிந்துபோயிற்று என்பதும் அதனுடைய காலம் கி.மு.100 -150 அல்லது கி.மு.300 என்பதும் தெரியவருகிறது. இத்தகைய செய்திகள் மூலம் மறைந்த நூல்களைக் கண்டுபிடிக்கும் வரை எதிரிகளின் தகவல்களை மட்டுமே ஏற்றுக்கொண்டு உலகாயதத்தின் துண்டு துண்டாகச் சிதறிக் கிடக்கும் கொள்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது என்றும் கூறுகின்றார்.

மேலும், தேவிபிரசாத் அவர்கள் குறிப்பிட்டிருக்கும் உலகாயதக் கொள்கைகளில் ஒருசில கீழ்வருமாறு.

1. புலன் உணர்வு தவிர வேறு எந்தவிதமான ஆதாரத்தையும் உலகாயதவாதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, மற்ற மெய்ம்மைகளை அவர்கள் புறக்கணித்தனர்.
2. கடவுள் இல்லை, ஆன்மா கிடையாது, மரணத்திற்குப் பின் வாழ்வு இல்லை.
3. மதம் மந்திரம் ஆகிய பழங்காலப் பழக்கங்கள் போன்றவற்றிலிருந்து விடுபடுவதற்கும், சுதந்திரச் சிந்தனை, ஆக்கப்பூர்வ முயற்சிகளுக்கும் உலகாயதம் உதவி செய்கின்றது.
4. புத்த மதத்தின் சிதைந்த பிரிவினரிடையே ஆண் பெண் உறவு ஒழுக்கமற்று இருந்தது. இப்பிரிவினர் காலப்போக்கில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உலகாயதத்துடன் இணைந்தனர். இவற்றில் ஒன்று காபாலிகப் பிரிவு. காபாலிகர் மிகவும் பழமையான பிரிவினர். மது அருந்துகிறவர்கள், நரபலி கொடுக்கின்றவர்கள், பெண்களை அனுபவிக் கின்றவர்கள், காமம் அல்லது புலன் இன்பங்களைத் துய்த்தல்தான் இப்பிரிவினரின் லட்சியம். எனவே, இப்பிரிவினர் உலகாயதத்தினர் நாத்திக வடிவத்தினருடன் இணைந்தனர்.

5. பூமி உள்ளிட்ட நான்கு பூதங்கள் அவற்றின் மூலகங்கள் மாறுதல் அடையும்போது உடல் உருவெடுக்கிறது. அறிவு உருவாகின்றது. இவை அழியும்போது அறிவும் அழிகின்றது. அதாவது இறந்த பின்பு அறிவும் அழிகின்றது.
6. உலகாயதர்கள் அனுமானத்தை மறுப்பவர்கள்.
7. உலகாயதர்கள் பிராமணியச் சடங்குகளைக் கேலி செய்தனர். அத்துடன் மறுஉலகம், துறக்கம் என்பதையும் கேலி செய்தனர். என்றாலும் உலகாயதவாதிகளுக்கு என்றே சில சடங்குகள் இருந்திருக்கின்றன. அதாவது அந்தச் சடங்குகளை அறிவுபூர்வமாக மாற்றிச் செய்துள்ளனர். இந்தச் சடங்குகளைச் சாந்திரிகச் சடங்கு என்று கூறுவார்கள்.
8. மூல சாந்திரிகமும் அதன் தத்துவ வடிவமாக எழுந்த சாங்கியமும் உண்மையான நாத்திக வாதமாகவும், பொருள் முதல் வாதமாகவும் அமைந்தன.

இவ்வாறு உலகாயதம் பற்றிய கருத்துக்களைப் பல விரிந்த நோக்கில் தந்து உலகாயதத்தை அறிமுகப்படுத்துகின்றார் தேவிபிரசாத் சட்டோபாத்தியாயா.

கிடைத்த ஆதார நூல்களில் மூன்று நூல்களின் மூலம் உலகாயதம் பற்றிய ஆய்வுக் குறிப்புக்களைக் கண்டபிறகு சைவ சமய நோக்கில் உலகாயதத்தைக் காணவேண்டிய முறைமைக்கு வரவேண்டியுள்ளது.

சைவ சமய நோக்கில் உலகாயதம்

திருமுறைகளில் தேவாரப் பகுதிகள் புத்தரையும், சமணரையும் நேரடியாகக் குறிப்பது போல உலகாயதரை நேரடியாகக் குறிப்பதாகச் சொல்ல இயலாது. அங்கொன்றும் இங்கொன்றுமாக உலகாயதம் என்ற சொல் காணப்படுகிறது. அதுபோல நாத்திகம் என்ற சொல்லும் ஒருசில இடங்களிலேயே காணப்படுகின்றது. திருநாவுக்கரசர் தேவாரத்தில்,

“நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே
படைகள் போல்வரும் பஞ்சமா பூதங்கள்
தடை ஒன்று இன்றியே தன்னடைந்தார்க் கெலாம்
அடைய நின்றிடும் ஆனைக்கா அண்ணலே”

என்பது ஐந்தாம் திருமுறையில் 31வது பதிகத்தின் ஆறாவது பாடலாகும். உலக நடையை நடையானது என்று எண்ணி நாத்திகம் பேசாதே என்பது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இப்பாடலின் முதல் வரியில் இடம்பெற்ற செய்தியாகும். நாத்திகம் என்பதற்குத் திருமுறை உரையாசிரியர்கள் கடவுளும், மறு பிறப்பும், இருவினையும் இல்லை என்று கூறும் உலோகாயதம் என்று எழுதுவர்.

இதுபோல திருவாசத்தில் நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏறினர் என்ற நான்காவது பகுதியாகிய போற்றித் திருஅகவலில் நாத்திகம் என்ற சொல் இடம்பெற்றுள்ளது. இதற்கும் உரையாசிரியர்கள் உரை எழுதும் பொழுது கடவுள் இல்லை என்று கூறும் உலகாயதர் என்று எழுதுவார்கள்.

திருவாசகத்தில் உலோகாயதம் என்ற நேரிடையான சொல் இடம் பெற்றிருக்கின்றது. உலோகாயதம் என்னும் ஒண்திறல் பாம்பின் - என்ற தொடர் நான்காவது போற்றித் திருஅகவலின் 51வது வரியாக அமைந்துள்ளது. இவ்வாறு திருமுறைகளில் சொற்களால் இந்த உலகாயதம் பேசப்பெற்றுள்ளமை அறியத்தக்கதாகும்.

திருமுறைகள் இறைவனைப் போற்றுகின்ற பாடல்கள் ஆதலால் ஒருசில இடங்களில் இடம்பெற்ற உலகாயதத் தத்துவ மரபு, திருமுறைகளின் வழிவந்த சாத்திரங்களில் வாதங்களாக இடம்பெற்றுள்ளது. சாத்திரங்களில் தலைமையாக விளங்கும் மெய்கண்டாரின் சிவஞான போதத்தின் மூன்றாம் சூத்திரம் உயிர் பற்றிய செய்திகளைத் தருவதாகும்.

“உளதுஇலது என்றலின் எனது உடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படின்
உண்டி வினைஇன்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திரத் தனுவின் உள்ஆன்மா” *(சிவஞான.சூ.3)*

என்பது சூத்திரம். இதற்கு உரை எழுதிய சிவஞான முனிவர் இலது என்ற சொல் ஆன்மா இல்லை என்ற பொருளைத் தரும் என்றும் அது பௌத்த மதத்தின் மாத்துமிகர் கூறும் சூன்ய வாதத்தைக் குறிப்பிடும் என்றும் உரைப்பார். இரண்டாவதாக அமைந்துள்ள எனது உடல் என்றலின் - என்பது உலகாயதரை மறுத்தது என்றும் எழுதுவார். மேலை அதிகரணத்து சூனிய ஆன்மவாதிகளை மறுத்து அறிபொருளாகிய ஆன்மா ஒன்று உண்டு என்று சாதித்த வழி அறிபொருள் உண்டு என்பதை ஒக்கும். அது நான்கு பூதக்கூட்டமாகிய உடம்பின் கண் அன்றி நிகழக் காணாமையினாலும், நான்கு பூதமும் சடமாகினும் பாக்கு அடையும் சுண்ணாம்பும் கூடியவழி பிறந்த செவ்வண்ணம் போல, அவற்றின் கூட்டளவில் ஓர் உணர்வு உண்டாதல் அமையும் ஆதலினாலும், யான் பருத்தேன், யான் சிறுத்தேன், யான் மனிதன், யான் பார்ப்பான் என உடம்பினையே நான் என்று வழங்கக் காண்டலானும், உடம்பே ஆன்மா என்னும் உலகாயதர் மதத்தை மறுத்ததற்கு எழுந்தது இரண்டாம் அதிகரணம் என்பது அவருடைய கூற்று. முன் அதிகரணத்தில் பௌத்தரை மறுத்து, ஆன்மா என்பது ஒன்று உண்டு, அது அறிவுடைப் பொருளாகும், ஆனால், அது உடம்புதான் என்று வாதிடுவர் அவர். இவ்வுடம்பு நாற்பொருள் பூதங்களின் கூட்டால் அமைந்தது. இவை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நான்கும் சடமாயினும் வெற்றிலையும் பாக்கும் சுண்ணாம்பும் கூடியபோது எவற்றிலும் முன்பு இல்லாத சிவப்பு நிறம் தோன்றியதைப்போல பூதங்களின் சேர்க்கையினால் அதற்கு முன்பு இல்லாத புதிதான ஒரு அறிவு தோன்றும். மேலும், உலக வழக்கில் நான் பருத்தேன். நான் சிறுத்தேன், நான் மனிதன், நான் பார்ப்பான் என்று உடம்பினையே நான் என்று வழங்குவதைக் காணுகின்றோம். எனவே, உடம்பே ஆன்மா என்பர் உலகாயதர் என்பதாகும். இதன் மூலம் சிவஞானபோத மறுப்பில் உலகாயதர் மறுப்பு கூறப்பெற்று அது மறுக்கப் பெற்றுள்ளமையை அறியமுடிகிறது.

சிவஞான போதத்திற்கு உரை எழுதிய சிவஞானமுனிவர் தனது பேருரையில், சித்தாந்திகள் வகுத்த அகச் சமயம், அகப்புறச் சமயம், புறச் சமயம், புறப்புறச் சமயம் என்ற நான்கிற்கு விளக்கம் எழுதுகின்ற பொழுது புறப்புறச் சமயத்தில் உலகாயதம் பற்றிக் குறிப்பிடுவார். அவரின் கூற்றினை அப்படியே இங்கு எடுத்துக்காட்டுவது சைவ சமயத்தார் உலகாயதம் பற்றிக் கொண்டுள்ள கருத்து தெளிவாகப் புலனாவதற்கு வழிவகுக்கும்.

புறப்புறச் சமயம் ஆறனுள் (உலகாயதம், நால்வகைப் பௌத்தம், ஆருகதம் ஆறனுள்) உலகாயதமாவது காண்டல் அளவை ஒன்றே. பிரமாணம், காணப்படும் நிலம், நீர், தீ, வளி என்ற நான்கே தத்துவங்கள். இவை நித்தப்பொருள்கள். இவற்றின் கூட்டமே உடம்பு. பாகும் அடையும் சுண்ணாம்பும் கூடியவழி செவ்வண்ணம் பிறக்குமாறு போல, இவற்றின் கூட்டுறவின் ஓர் உணர்வு உண்டாம். அவ்வுணர்வு உடம்பு வளர வளரும். தேயத் தேயும். ஆதலின் உடம்பிற்கு வேறே உயிர் என்பது பொய். உடம்பிற்கு இன்ப துன்பங்கள் இயல்பாய் உள்ளன. இவற்றிற்குக் காரணம் வினை என்பது பொய். மயிலைச் சித்தரித் தாரையும், குயிலைக் கூவி வித்தாரையும் காணாமையின் கடவுள் உண்டு என்பதும் பொய். இம்மையின் மங்கைப் பருவத்து மகளிரோடு மணந்து உண்டு உடுத்து வாழ்வதே துறக்க இன்பம். அது பெறாது பகைவரால், நோயால், வறுமையால், பிறவற்றால் வருந்துவதே நிறையத் துன்பம். வேறே துறக்கம் நிரயம் என்பதும் பொய். நான்கு பூதக் கூட்டுறவில் பிராணவாயு நீங்கில் உணர்வு இழந்து, உடம்பு நாசமாகும். அதுவே வீடுபேறு. வேறு வீடுபேறு உண்டு என்பது பொய். இவ்வுண்மை உணராத மடவோர் மறுமை உண்டு எனக் கொண்டு, தவங்கள் பட்டினி முதலியவற்றால் வருந்துவர். கற்பு முதலிய சங்கேத நூல்கள் மதுகை இன்றி மதியுடையோரால் செய்யப்பெற்றன. பொன், நிலம், உணவு முதலிய தானங்களை உயர்த்திக் கூறும் நூல்கள் பசியால் வருந்தி நல்கூர்ந்தோரால் செய்யப்பட்டன. தேவகுலம் தண்ணீர்ப் பந்தல், கூவல், பொய்கை, சோலை முதலியன செய்தலை உயர்த்திக் கூறும் நூல்கள் வழிச் செல்வோரால் கூறப்பட்டன. ஆதலால் இவற்றைக் கைவிட்டு உழவு, பசுக் காவல், வாணிகம், செங்கோல் முறைமை முதலியனவாக ஆன்றோர் காட்டிய நெறியில் நின்று இம்மை இன்பங்களை நுகர்ந்து வாழ்தல் உறுதிப் பயன் என்பதாம். இவ்வுலகாயத நூல் செய்தோன் பிருகற்பதி என்று உணர்க. இவ்வுலகாயதர் தேக ஆன்ம வாதிகளும் இந்திரிய ஆன்ம வாதிகளும், பிராண ஆன்ம

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வாதிகளும், அந்தக்கரண ஆன்ம வாதிகளும் என பலதிறப் படுவர் என்பது சிவஞான போதத்தின் அவையடக்க உரைப்பகுதியில் அமைந்த செய்தியாகும். இவை இன்றைய ஆய்வாளர்கள் அனைவரும் உலகாயதம் பற்றிக் கூறுகின்ற செய்திகளின் சுருக்கமாகும். மேலும், இரண்டாம் சூத்திர இரண்டாம் அதிகரண உரையில், உலகாயதர் வினை செய்தலும் பயனை நுகர்தலும் உடம்புக்கே உரியது என்பர். ஏனெனில் அவர்கள் ஆன்மா என்ற ஒரு பொருள் உண்டு என்பதை ஏற்றுக்கொள்வதில்லை என்றும் குறிப்பிடுவார். இவ்வாறு சிவஞானபோத உரையாசிரியர் குறிப்பிடுகின்ற உலகாயதக் கொள்கைகள் கிடைப்பதற்கு மூலகாரணமாக அமைந்தது அருணந்தி சிவாசாரியாரின் பரபக்கப் பகுதியாகும். பரபக்கத்தைத் தொடங்குகின்ற அருணந்தியார், காப்பு, வணக்கம், அவையடக்கம், நூற்சிறப்பு, நூலைக் கற்போர், நூலின் கருத்து ஆகியவற்றைக் குறிப்பிட்ட பிறகு, பிற மத மறுப்புக்களில் உலகாயதனை முதலில் மறுக்கின்றார். அவ்வாறு மறுக்கும்பொழுது முதல் இருபத்தொரு பாடல்களில் மதக் கொள்கைகளைத் தொகுத்துத் தருகின்றார். அப்பாடல்களின் கருத்துக்களை முறையாகக் காண்பது ஆய்வுக்குத் துணையாகும். ஏனென்றால் சைவ சமயக் கூறுகள் குறித்து எண்ணுகின்ற பொழுது சைவ சமயத்தாரால் மறுக்கப்பட்ட பிற சமயத்தாரின் கொள்கைகள் சங்க இலக்கியத்தில் இடம்பெறுமானால், அவற்றைச் சுட்டிக்காட்டவேண்டிய கடப்பாடு அமைகிறது. மூலக் கூறுகளுக்கு முறையான விரிந்த கருத்துக்கள் சைவ நூல்களில் காணப்படுவதை முழுவதும் தொகுத்தால்தான் அவற்றின் மூலக் கூறுகள் புலனாகும். வழக்கத்தில் உள்ள உணவுப் பொருளை அறிகின்ற பொழுது அதாவது சாம்பாரை நினைக்கும் பொழுது அச்சாம்பாரின் மூலமான காய்கறிகள் பருப்பு நினைவுக்கு வரும். அதுபோல இப்பொழுது கிடைத்திருக்கின்ற சைவசமயத் தத்துவங்களைக் கூறும் சாத்திரங்களில் இடம்பெற்றுள்ள செய்திகளை முழுமையாகத் தெரிந்துகொள்ளும் பொழுது அவற்றிற்குரிய மூலங்கள் சங்க காலத்திலேயே தோன்றியுள்ளன என்பதை வெளிப்படுத்த முடியும். ஆதலால் உலகாயதம் பற்றிய விரிவான செய்திகளைத்தருகின்ற அருணந்தி சிவாசாரியார் பாடல்களின் கருத்துக்களை அதாவது இருபத்தொரு பாடல்களின் கருத்துக்களை முழுமையாக அறிய வேண்டியுள்ளது.

பாடல் – 1

இந்திரனின் புரோகிதனாகிய வியாழ பகவான் இயற்றிய நூலை அடிப்படையாகக் கொண்டு இந்த உலகத்திற்கு உலகாயதன் தன்னுடைய கொள்கைகளைக் கூறத்தொடங்கினான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாடல் - 2

உலகத்தில் அளவை என்று கூறப்படுவது காட்சி அளவை மட்டுமே. ஐயக் காட்சி, வாயில் காட்சி, விகற்பக் காட்சி, அந்வயக் காட்சி, எதிரேகக் காட்சி, திரிபுரக் காட்சி என அக்காட்சி அளவை ஆறாகும். இவை தவிர அனுமானம் முதலாகச் சொல்லப்பட்ட பிற அளவைகள் வேண்டாம். உலகத்தில் காட்சி அளவையால் காணப்படுகின்ற பூதங்கள் நான்குதான். கடினம், குளிர்ச்சி, தொடுவதற்கு அரிய வெப்பம், அசைவு என்பனவே அவை. ஐந்தாவது பூதம் இல்லை.

பாடல் - 3

நிலம், நீர், காற்று, நெருப்பு என்று கூறப்பட்ட நான்கு பூதங்கள் நாற்றம், சுவை, உருவம், ஊறு என்ற நான்கு குணங்களைப் பெற்றுள்ளன. இவை நான்கும் அழிவில்லாதன. இவற்றின் கூட்டத்தால் (புணர்ச்சியால்) உலகத்துப் பொருள்கள் யாவும் தோன்றுகின்றன.

பாடல் - 4

மேற்கூறிய நான்கு பூதங்களும் ஒத்த அளவில் கூடுகின்ற பொழுது உலகத்தில் காணப்படுகின்ற பல்வகைப் பொருள்கள் தோன்றுகின்றன. எதுபோல என்றால், குயவனின் சக்கரத்தில் வைக்கப்பெற்ற மண்ணில் இருந்து பல்வேறு வகைப்பட்டக் குடங்கள் தோன்றுவது போன்றதாகும். இவ்வாறு தோன்றிய பொருள்களுக்குள்ளே புத்தி, குணம், புலன்கள் ஆகியவை நீரில் தோன்றுகின்ற குமிழி போல தெரிகின்றன.

பாடல் - 5

மேற்குறித்த நான்கு பூதங்களின் கூட்டத்தால் தோன்றிய உயிரானது, காற்று என்ற பூதம் பிரிந்தால் புலனை முதலில் இழக்கும். புலன்கள் இறந்தால் அவற்றின் குணம் முதலியனவும் இறக்கும். ஆதலால் நிற்பது நடப்பது ஆகிய காரியங்கள் யாவும் கெட்டு, மீண்டும் அந்நான்கு பூதங்களுக்குள் அடங்கும். இவ்வாறு காரணத்தின் வழி காரியம் நடப்பதும் முடிவில் காரியங்கள் காரணத்தில் ஒடுங்குவதும் ஆகிய முறைமையை அறிதல் வேண்டும். இவ்வாறு அறிவதே ஞானம் எனப்படும்.

பாடல் - 6

இவ்வாறன்றி வினை உயிர் இறைவன் என்ற இவை எல்லாம் உண்டு எனக் கூறி உலகத்தாரை மயக்குகின்ற சமயவாதிகளுக்கு உலகத்தார் செய்த குற்றம் என்ன, அத்தகைய சமயவாதிகள் கூற்று எவ்வாறு உள்ளது என்றால் ஒப்பில்லாத மலடி பெற்ற மகன் ஒருவன் முயற்கொம்பில் ஏறி ஆகாயத்தில் பூத்த மலரைப் பறித்தான் என்று கூறுவது போன்றதாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாடல் - 7

முன் பிறப்புக்களில் உயிர் செய்த வினைகள் தான் இப்பிறப்பில் பயன்தரும் என்று சிலர் கூறுவர். ஆனால், இப்பிறப்பில் செய்த புண்ணிய பாவங்கள் இப்பிறப்பு உடம்போடே கெட்டுப் போகும். அடுத்த பிறவிக்கு அவை எவ்வாறு வரும்? தூல வடிவை எடுத்துச் சூக்கும வடிவாய்ப் பொருந்தும் என்று கூறினால் அப்பதில் திரியோடு கூடிய விளக்கின் ஒளி அத்திரியை விட்டு விலகி நின்று தனியாக ஒளியைத் தரும் என்று கூறுவது போன்றதாகும்.

பாடல் - 8

வயலில் இடப்பெற்ற தழைகள் போன்றவற்றின் தன்மைகள் கெட்டு அழுகிப் பின்பு பயிருக்கு உரமாவது போல, ஒரு பிறப்பில் செய்யப்பெற்ற கன்மம் தன் தன்மை கெட்டு, அடுத்த பிறவியின் உயிருக்குப் பயனாகப் பொருந்தும் என்றால் தழை உள்ளிட்டவை எங்கு இடப்பெற்றதோ அங்கேயே உரமாகின்றன. வேறு இடத்திற்கு உரமாகாது. எனவே, ஒரு பிறவியில் செய்த கன்மம் அடுத்த பிறவியில் பயன்தரும் என்பது பொருந்தாது. மேலும், சோர்வுற்று வந்தவர் பசி நீங்க உண்ணுகின்ற சோறானது அவர் வயிற்றில் சென்று கெட்டு மலமாகத் தான் மாறுகிறது. அது பயன் தரவில்லை.

பாடல் - 9

உலக உயிர்களின் உடம்பின் செயலும், உணர்வின் செயலும் ஒத்தவையாக இல்லாமல் வேறு வேறாக இருப்பதற்குக் காரணம் அவ்வவற்றின் கன்மமாகும் என்று கூறப்படுகிறது. அது பொருந்தாது. கையில் உள்ள விரல்கள் ஒன்றுக்கொன்று ஒத்திராமல் நீண்டும் குறுகியும் காணப்படுவதற்கு அவ்விரல்கள் முன் பிறப்பில் என்ன வினை செய்தன? கூற இயலுமா? உடம்பும் உணர்வும் மாறி அமைவதற்குக் காரணம் நான்கு வகைப்பட்ட பூதங்கள் தம்முள் கூடும்போது மிகுந்தும் குறைந்தும் கூடுவதால் உண்டாகின்றன.

பாடல் - 10

உயிர்களுக்கு ஏற்படுகின்ற இன்ப துன்பங்கள் எல்லாவற்றிற்கும் காரணம் வினைப் பயன் என்றால் சந்தனமானது நீரில் குழைத்துப் பயன்படவும் செய்கிறது. மேலும், சந்தனக் கட்டையைத் தீயில் இட்டு எரிக்கவும்படுகிறது. அவ்வாறு நீரிலும் நெருப்பிலும் சேர்ந்து மணம் நுகர்வதற்கு அவை செய்த நன்மை தீமை என்ன? இவை எல்லாம் பொருள்களுக்குரிய இயல்பாகும்.

பாடல் - 11

உடம்பில் தோன்றுகின்ற குணம் தான் உயிர். நான்கு பதங்களின் புணர்வால் ஏற்படுவது. அதனை விடுத்து ஆன்மா என்ற ஒரு பொருள் உண்டு என்றால் அது காட்சி அளவையால் காட்டப்பட வேண்டும். அதனை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விடுத்து அனுமானத்தாலும் உரையாலும் ஆன்மா உண்டு என்று நிறுவுவது முயலுக்குக் கொம்பு உண்டு என்று கொண்டதோடு, அதனது நீளத்தையும் பெருமையையும் கூறுவதை ஒக்கும்.

பாடல் - 12

இறைவன் அருவமானவன் என்றால் அறிவு அவனுக்கு இல்லையாகும். ஆகாயத்தைப் போன்று வடிவு இல்லை என்றும் ஆகும். இறைவனுக்கு உருவம் உண்டு என்று கூறினால் பூதக் கூட்டத்தினால் தோன்றுகின்ற பொருள்களில் அவனும் ஒருவனாக வேண்டும். அருவுருவம் உடையவன் என்றால் மண்ணின்மேல் அருவமாகிய பெரிய ஆகாயமானது கல்லை ஏந்தி நிற்கிறது என்று கூறுவது போன்றதாகும்.

பாடல் - 13

நிலமாகிய பூதத்தில் இருந்து உணவு தோன்றுகின்றது. உணவால் உடம்பும் உடம்பின் புத்தியும், புத்தியில் மாறுபட்ட மனமும் உண்டாகின்றது. இதுதான் உண்மையாகும். இவ்வாறு ஒன்றுக்கொன்று வேறுபட்டவை தோன்றி ஒடுங்கும் என்றிருக்க, இவற்றை விடுத்து மாறுபட்ட கொள்கையை வேதம் சொல்லுகிறது என்றால் அதனைக் கேட்ட உலகத்தார் எல்லாம் வேதத்தில் வீழ்ந்து துன்பத்தில் வருந்துவது ஏன்?

பாடல் - 14

புலன் இன்பங்களை உலகத்தார் அனுபவிப்பது கண்டும் அதனை விடுத்து மேலுலகத்தில் இதனினும் சிறந்த இன்பம் உண்டு என்று விருப்புற்று; அதனைப் பெறுவதற்காக இவ்வுலகில் தன்னைத் துன்புறுத்திக் கொள்பவர்கள் மூடர்கள் ஆவார்கள். அவர்கள் தண்ணீர் வேட்கை உற்றபொழுது தண்ணீர் கிடைத்தும் அதனை விட்டுவிட்டு வேறு எங்கோ ஓரிடத்தில் தண்ணீர் இருப்பதாகக் கேள்விப்பட்டு, அதனைத் தேடி அலைந்து துன்புறுவது போன்றதாகும்.

பாடல் - 15

வாம மார்க்கம் உலகாயதத்தின் தோழமை ஆகும். கோழை மனிதர்கள் தீது என்று ஒதுக்குகின்ற கொலை, களவு ஆகியவற்றைக் கைக்கொண்டு அழகிய கூந்தலை உடைய பெண்களின் கூட்டத்தின் நடுவே இருப்பது இவ்விரு திறத்தார்க்கும் மகிழ்வானதாகும். (பாடலில் இடம்பெற்ற சொல் வாமி என்பதாகும். இச்சொல் வாம மார்க்கத்தைக் குறிப்பதாகும். இம்மார்க்கம் சத்தி வழிபாட்டில் ஒருவகை என்று உரையாசிரியரால் குறிக்கப்பெறுகிறது. இவர்கள் சிற்றின்பத்தைப் பெரிதும் விரும்பும் கொள்கை உடையவர்கள். கொலை, களவு, கள் இவற்றை ஒதுக்காதவர்கள்).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாடல் - 16

ஈசன், நான்முகன், திருமால், இந்திரன் ஆகியோர் பெண்கள்பால் பேசுவதற்கு உரிய வகைகளில் எல்லாம் பேசி, செயல்கள் செய்துதான் பெருமை பெற்றவர்கள் ஆனார்கள். ஆதலால் அவர்களைப் போல பெருமைபெற வேண்டுமானால் மணம் பொருந்திய கூந்தலை உடைய பெண்களோடு ஏற்றவாறு கூடி வாழ்தல் வேண்டும்.

பாடல் - 17

மகளிர் ஊடல் கொண்டால் அவர்களின் ஊடலைத் தீர்ப்பதற்கு அவர்களோடு கூடிப் புணர்ந்து அவருடைய தாமரையை வெல்லுகின்ற செம்மை நிறம் பொருந்திய கால்களுக்குச் செம்பஞ்சுக் குழம்பைத் தீட்டி, அக்குழம்பின் நிறம் தம் உடம்பெல்லாம் படும்படி அவர்தம் கால்களில் வீழ்ந்து வணங்கி வாழ்தலே உண்மையான வாழ்க்கையாகும். இதனை அறியாது பொய் வழியாகிய தவ வழியில் வாழத் தலைப்பட்டுத் தங்களுடைய வாழ்க்கையைப் பொய் மார்க்கத்தில் செலுத்தி வாழ்கின்றவர்கள் பரிதாபத்திற்கு உரியவர்கள் ஆவார்கள்.

பாடல் - 18

மணம் நிறைந்த கூந்தலை உடைய பெண்களின் அல்குல் தடத்தில் மூழ்கி அவர்களின் குமுதம் போன்ற வாயில் ஊறுகின்ற எச்சிலாகிய அமிழ்தத்தை உண்டு, அவர்களின் தோள்களில் சேர்ந்து இன்புற்று வாழ்வதை விட்டுவிட்டு, மாசுபடிந்த மனத்தவராகி மற்ற சமயத்தார் மறுமை இன்பம் உண்டு என்று நம்பி வாழ்ந்து அழிந்து போகின்றார்களே.

பாடல் - 19

பிறைச் சந்திரனைப் போன்ற நெற்றியை உடைய பெண்களோடு நிலா முற்றத்தில் கூடி, அவர்தம் புன்னகை தோன்றும் அழகில் மயங்கி, அவர்களின் முத்துவடம் அணிந்த கொங்கைகள் மறையும்படி அவர்தம் மார்போடு சேர்ந்து, பதுப்புது இன்பங்களை அனுபவிப்பதை விட்டுவிட்டுப் பிற சமய நெறியார் இன்பத்தை இழக்கின்றார்களே.

பாடல் - 20

பெண்களோடு ஊடுவது, அவர்களின் ஊட்லைத் தீர்க்கக் கெஞ்சுவது, அவர்களோடு சேர்வது, அவர்கள் பிரிந்தபோது அவர்களை நினைந்து வாடுவது, ஊடலைத் தீர்க்க அவர்கள் காலில் வீழ்வது, அவர்களின் இன்பத்திற்காக வருந்துவது இவையே அருந்தவமாகும். பின் ஊடல் தீர்ந்து அவர்களோடு கூடுவது தன்னுணர்வு கெட்டு அவர்களோடு கலப்பது ஆகியவையே முத்தி எனப்படும். இத்தகைய பெண்கள் இன்பத்தைப் பெற்றவர்களே முத்தி இன்பத்தைப் பெற்றவர்கள் ஆவார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாடல் – 21

முத்தியாகிய வீட்டின்பம் உண்டு என்று கருதித் தவம் செய்து உடல் மெலிவதையே வீட்டின்பம் எனக் காட்டியவரோ, கண்டவரோ, கேட்டவரோ யாரேனும் உண்டா. அல்லது அதற்குச் சாட்சியங்களாவது உண்டா? நாட்டை ஆளும் அரசனின் ஆணைப்படி கட்டுப்பட்டு வாழ்க்கையை நடத்தி நாளும் பொருளை ஈட்டி, அந்தப் பொருளைக் கொண்டு இவ்வுலக இன்பத்தை அனுபவித்து வாழ்வதே நலம் பயக்கும்.

இவ்வாறு இருபத்தொரு பாடல்களில் அருணந்தி சிவாசாரியார் உலகாயதக் கொள்கைகளை உலகாயதரே கூறுவது போல அமைத்துத் தந்திருக்கின்றார். எனவே, அவர் காலத்தில் அதாவது கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் உலகாயதம் பற்றிய கருத்துக்கள் மதக் கொள்கைகளாக நிலவியிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. எனவேதான் மதக் கொள்கைகளுக்கு ஏற்பப் பிற மத மறுப்புக்குத் தன்னுடைய நூலில் முதல் மதமாக உலகாயதத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

மெய்கண்டார் பிற மத மறுப்புக்களில் அதிகம் நாட்டம் செலுத்தாமல் பன்னிரெண்டு சூத்திரங்களால் சைவ சமயக் கொள்கைகளை விளக்கிட, அவருடைய மாணவராகத் திகழ்ந்த அருணந்தி சிவாசாரியார், பிற மத மறுப்புக்களில் அதிகம் நாட்டம் செலுத்தி சைவ சமயக் கொள்கைகளை வளர்த்திருக்கிறார். இவருடைய இந்த விளக்கங்களைக் கொண்டுதான் முன்னர் காட்டிய சிவஞான முனிவர் உள்ளிட்ட சிவஞானபோத உரையாசிரியர்கள் சிவஞான போதத்திற்கு உரையெழுதும் பொழுது உலகாயதர் பற்றிய செய்திகளைத் தந்திருக்கிறார்கள்.

அருணந்தி சிவாசாரியார் மெய்கண்டாருக்கு மாணவர் ஆவதற்கு முன்னர் சகல ஆகம பண்டிதர் என்ற பட்டத்தோடு வாழ்ந்து, பிற சமய வாதிகளோடு வாதம் புரிந்து சைவ சமயக் கொள்கைகளை நிலைநாட்டியவர் என்று சந்தானாசாரியார் வரலாற்றை எழுதியவர்கள் குறிப்பிடுகிறார்கள். அருணந்தி சிவாசாரியார் உலகாயத மதத்தைப் பற்றிக் கூறுகின்ற அளவுக்கு மற்ற சைவ சமய ஆசிரியர்கள் குறிப்பிடவில்லை என்றே கூறலாம். பின்னர் வந்த சைவ சமய ஆசிரியர்கள் உலகாயதரைப் பற்றிய சிறு சிறு குறிப்புகளைத்தான் தருகிறார்கள். அதில் ஒருவர் உமாபதி சிவம் ஆவார்.

உமாபதி சிவம் பார்வையில் உலகாயதம்

சைவ சித்தாந்த சாத்திர ஆசிரியர்களில் ஒருவரான உமாபதி சிவம், சிவஞான போதத்தின் சார்பு நூலாகிய சிவப்பிரகாசத்தைத் தந்தவர் ஆவார். இவர் சிவப்பிரகாசத்தின் பல இடங்களில் உலகாயதரைக் காட்டி பல மறுப்புக்களைத் தந்துள்ளார். சித்தாந்தம் குறிப்பிடும் முப்பொருள்களையும் நிலையானது என்பதை வலியுறுத்தும் இடங்களில் எல்லாம் கடவுள், உயிர், வினை இல்லை என்பாரை மறுக்க வேண்டிய சூழலுக்கு இவர் ஆட்படுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"படைத்ததொரு படியின்றிப் பறவைபசு நரராப்
பன்னியதுஎன் முன்னைவினைப் பான்மை என்பர்
அடுத்தவினை உளதாயின் இறையேன் என்னில்
அசேதனமற்றுஅவை ஆவிக்க அமைத்ததாகும்" (சிவப்.24)

என்ற பாடலில் உலகாயதரின் கேள்விகளையும் விடைகளையும் தந்துள்ளார். அக்கேள்விகள் மூலமாக உலகாயதரின் கொள்கைகள் தெரியவருகின்றன. இதன்படி, கடவுளே உலகத்தைப் படைப்பாராயின் ஒரு தன்மையதாகப் படைக்காமல் பறவை, பசு, மனிதராகப் படைத்த காரணம் ஏன்? என்பது உலகாயதரின் வினாவாகும். வினைக்கேற்ற உடம்பை அடைவது ஆன்மாவாயின் அவ்வான்மாக்களே தத்தம் வினைக்குத் தக்க உடம்புகளை எடுத்துக்கொள்ளும் என்பது அடுத்த வினா. அதற்குக் கடவுள் வேண்டுமா? என்பதும் உலகாயதரின் வினாவாகும். இவ்வினாக்களின் மூலமாக உலகாயதரின் இரு கொள்கைகள் வெளிப்படுகின்றன.

1. உலகத்தின் படைப்பு பலவிதமாக இருப்பதால் அவ்வவ் இடத்திற்கு ஏற்ப, சூழலுக்கு ஏற்ப அவை நிலம் முதலாகிய நான்கு பூதங்களின் மூலமாக உருவாகின்றனவே தவிர, உலகப் படைப்புக்களைக் கடவுள் படைத்தார் என்று கூறுவது பொய் என்பது பெறப்படுகிறது.

2. அவரவர் வினையால் உடலின் உருவம் உருவாகிறது என்பதால் அதனைப் படைக்கக் கடவுள் தேவையில்லை என்பது மற்றொரு கொள்கை. இச் செய்திகள் உமாபதி சிவத்தால் தரப்பெறுகின்றன.

அதுபோல "உலகமெலாம் ஒருவனோடு ஒருத்தி ஒன்று என்று தோன்றி நின்று மறைகின்றது. அதனைத் தோற்றுவிக்கவும் அழிக்கவும் ஒருவன் தேவையில்லை" (சிவப்.16) என்ற உலகாயதர் கருத்தைப் பதினாறாவது பாடலில் தருகின்றார். "நிலவு உலோகாயத ஆதி நிகழ் சிவாத்துவித அந்தத்துள் புலவினர்" (சிவப்.99) என்ற பாடலின் மூலமாக உலோகாயதத்தைக் குறிப்பதோடு, பிற புறச் சமயங்களையும் குறிப்பிடுகின்றார். ஐம்பதாவது பாடலில் முத்தி பற்றிக் குறிப்பிடுகின்ற பொழுது உலகாயதரின் கொள்கையான மகளிர் இன்பத்தை அனுபவிப்பதே முத்தி என்பர் உலோகயதர் என்று குறிப்பிடுகின்றார். அவர் குறிப்பிடும் தொடர், "அரிவையர் இன்புறு முத்தி" (சிவப்.50) என்பதாகும். எனவே, உலகாயதரின் கொள்கைகளில் ஒரு சிலவற்றைச் சிவப்பிரகாசத்தில் நினைவுபடுத்துகின்ற உமாபதி சிவம், தன்னுடைய மற்றொரு நூலான நெஞ்சுவிடு தூது என்ற சாத்திர நூலில் உலோகாயத மதக் கொள்கைகளைத் துன்பம் தரும் கொள்கைகளாகக் குறிப்பிடுகின்றார். உயிரானது வினைக்கு ஏற்பப் பிறந்து இறந்து இருவினைகளை அனுபவிக்கும் குணத்தினை உடையதாகும். அந்த உயிர் தொடக்கத்தில் மூலஅறிவு இல்லாத உலகாயதனோடு சேர்ந்து சிற்றறிவு கொள்ளும். வில்லிலிருந்து புறப்படுகின்ற அம்பைவிட விரைவாகச் சென்று கொடிய வினைகளைச் செய்து குடிக்குப் பழியைத் தேடும். கொடுமையான கொலை, களவு, காமம் இவற்றில் ஈடுபட்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வருந்தும். அறிய வேண்டியவற்றை அறியாது, உலகப் பொருள்களில் மயங்கி வாழும். சேர்ந்திடும் மனத்திற்கும் அதன்வழி செல்லும் புத்திக்கும் புத்தியில் தோன்றுகின்ற அகந்தைக்கும் ஆட்பட்டு, முயற்சி மேற்கொள்ள, மேற்கொள்ள மேனியில் அயற்சி ஏற்பட வருந்தும் என்று பதினோராவது கண்ணி முதல் பதினாறாவது கண்ணி வரை குறிப்பிடுகின்றார். இதன் மூலம் உலகாயதர் தங்களுக்கென்று சமய மூல நூல் இல்லாதவர் என்பதும் காமத்தில் ஈடுபட்டு வாழ்பவர் என்பதும் தெரிய வருகின்றது. மேலும், தங்களுடைய முயற்சியால்தான் இன்பத்தை அனுபவிக்க முடியும் என்று அவர்கள் பேசிவந்த கொள்கைகளாகத் தெரிய வருகின்றது.

மேலும், உமாபதி சிவம் அதே நூலில் சைவ சமயத்தைச் சார்ந்த தன்னுடைய நெஞ்சம் உலகாயதன் பால் சேர்ந்துவிடக் கூடாது என்று குறிப்பிடுகின்றார். அவ்வாறு குறிப்பிடும்பொழுது உலகாயதரின் கொள்கையான முத்தி பற்றி எடுத்துக் காட்டுகின்றார்.

"பூசிமுடித்து உண்டுஉடுத்து பூங்குழலார் தங்கலவி
ஆசைதனில் பட்டின்ப ஆர்கலிக்குள் - நேசமுற
நின்று திளைக்கும் இதுமுத்தி அல்லது வேறு
ஒன்று திளைக்கும் அதுமுத்தி - அன்றுஎன்று
இகலா இருள் அலகை போல் இகலே பேசும்
உலகாயதன்பால் உறாதே" *(நெஞ்சுவிடு.108-110)*

இதன்மூலம் உலகாயதரின் பெண் இன்பமே பேரின்ப முத்தி என்ற கொள்கை வெளிப்படுவதைப் பார்க்க முடிகிறது. இவ்வாறு உமாபதி சிவம் தன்னுடைய படைப்புகளில் சைவ சமயக் கருத்துக்களை நிலைநாட்ட உலகாயதரை மறுக்கும் நோக்கில் அவர்தம் கொள்கைகளை எடுத்துக் காட்டியுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

தத்துவப் பிரகாசம் என்ற நூல் பின்னர்வந்த சைவ சமயச் சாத்திர நூல்களில் ஒன்று. இதனைத் தந்தவர் சீர்காழித் தத்துவப் பிரகாசர் ஆவார். தத்துவப்பிரகாசர் என்ற பெயரில் பலர் வாழ்ந்ததாக மு.அருணாசலம் அவர்கள் தம்முடைய தமிழ் இலக்கிய வரலாறு பதினான்காம் நூற்றாண்டு எனும் நூலில் (ப.156) குறிப்பிடுவார். அவர்களில் ஒருவர் சீர்காழித் தத்துவப் பிரகாசர் ஆவார். இவருடைய காலம் கி.பி.பதினான்காம் நூற்றாண்டு. இவர் சிற்றம்பல நாடிகளின் மாணவர். இவருடைய தத்துவப் பிரகாச நூல் 337 விருத்தப்பாக்களைக் கொண்டது. அதிகமான வடசொற்களைக் கொண்டது. கிரியா பாதத்தை விரிவாக விளக்குவது. வடமொழி ஆகமங்களில் கூறியதற்கு ஏற்ப சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு வழிகளில் முதல் மூன்று பாகங்களை விரிவாகச் சொல்வது. இதில் பிற சமய பேதங்கள் அதிகமாக விளக்கப் பெற்றுள்ளன. இந்நூலில் உலகாயதர், அவர்களை மறுத்தல் போன்ற செய்திகள் இடம்பெற்றுள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"அறமென் றுசொல்லுவ துபிறிதொன்றில்லை
அரிவையர்க்காம் பணிசெய்த லதுதானே யறமாம்
புறநின்று தடுமாறிற் பெறலா மென்கை
போய்க் கண்டாரிலையா மாற்பொய்மை நிலையாகும்
நெறியாவ தரிவையர்க்காம் பணிசெய்து வழுத்தி
நேரின்ப மனுபவித்தல் முத்திதனி னெறியா
முறுதியெனக் கண்டுலகந் தழீஇய வொட்ப
முடையவரே யவரு முலகாயத மென்னுமுலகே" (தத்துவப்.172)

என்பது இப்பாடல் கருத்து. பெண்களுக்குப் பணி செய்வதே அறம். அறம் எனப்படுவது பிறிதொன்று இல்லை. அரிவையருடன் கூடி இன்புறுதலே முத்தி. இல்லறத்தை விட்டுத் துறவறத்தில் சென்று ஊண் உறக்கங்களை விட்டுக் கடுந்தவம் புரிந்து இறந்தபின் வீடுபேறு எய்தலாம் என்பது பொய்யாகும். ஏனென்றால் வீடு பேற்றினைப் போய்க் கண்டு வந்து சொன்னவர் யாரும் இல்லை.

இந்த நூலில் உலகாயதத்தின் மற்றொரு சாயலான சாருவாக மதமும் இடம்பெற்றிருக்கின்றது. எனவே, இவ்வாசிரியர் உலகாயதம், சாருவாகம் என்று தனித்தனியாகக் கூறியிருப்பதால் கடவுள் மறுப்புக் கொள்கை இரு பகுதியாக இவர் காலத்தில் விளங்கியிருக்கிறது என்பது பெறப்படுகிறது.

"அளவைதான் காட்சியதில் கொள்ளும் பூதம்
அவைநாலாம் காரியத்தால் மட்கலன்கள் அவைபோல்
உளவுடலவ் உடலினீர்க் குமிழிபோல் மனாதி
ஓங்குநீறு அடையிலையில் சிவப்புப்போல் அறிவு
கொளுமறிவும் உடலோடே கூட மாயும்
கொள்வது பூதங்களும்அம் மன்னனுமே கோவாம்
வளமையுடன் உண்டுடுத்து மகளிர் இன்பம்
வாழ்ந்திடுதல் முத்தியெனும் சார்வாகன் வழியே." (தத்துவப்.174)

இப்பாடலில், காட்சி அளவைதான் உண்மை. அதனால் அறியப்படும் பூதங்கள் நான்குதான். நாற் பூதங்களின் காரியமாக உடல் தோன்றுகின்றது. நீரில் எழுகின்ற நீர்க்குமிழிபோல உடலைப் பற்றி மனம் பொறிகள் தோன்றுகின்றன. பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு சேர்ந்தால் சிவப்பு நிறம் தோன்றுவது போல உடம்பில் அறிவு பிறக்கின்றது. ஆன்மா என்று ஒன்று இல்லை. உடல் மாயும்பொழுது அந்த அறிவும் மாய்கிறது. மகளிர் இன்பம் துய்த்தலே முத்தி ஆகும் என்னும் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

அருணந்தியார் விரிவாக உலகாயதம் பற்றிய கருத்துக்களைத் தந்திட, அவருக்கு முன்னும் பின்னும் வழங்கப்பெற்ற சைவ சமய நூல்கள் உலகாயதம் பற்றிய கருத்துக்களைக் குறிப்பாகத் தந்திருப்பதை நோக்க, சைவ சமய நோக்கத்தில் உலகாயதம் இடம்பெற்றிருக்கிறது என்பது உறுதியாகிறது. உலகாயதம் பற்றிய செய்தி சைவ நூல்கள் மட்டுமல்லாது மணிமேகலை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உள்ளிட்ட தமிழ் இலக்கியங்களிலும் காணப்படுவது குறிப்பிடத் தக்கதாகும். எனவே, உலகாயதம் என்ற சமயத்தின் கொள்கைகள் தமிழகத்தில் நிலவி வந்தன என்பது உண்மை. எனவேதான் தற்கால ஆய்வாளர்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்ற செய்திகளைத் தொகுத்துத் தந்திருக்கின்றனர். ஆகவே, அவற்றைப் பற்றிய வன்மை மென்மைகளை இனிக் காண்பது இவ்வாய்வுக்கு அடிப்படையாக அமைகிறது.

சங்க இலக்கியங்களில் உலகாயதம்

ஆய்வாளர்கள் உலக நாகரிகங்களைப் பத்தொன்பதாகக் குறிப்பிடுவர். சுமேரிய, எகிப்திய, பாரசீக, மத்திய தரைக்கடல், மினோமைசினிய, கிரேக்க, எட்ருஸ்கன், உரோம, பைசான்டிய, ருஷ்ய, மேற்கு ஐரோப்பிய, இஸ்லாமிய, சீன, சப்பானிய, மெக்ஸிகோ, பெரு, ஆப்பிரிக்க, மேற்கத்திய, சிந்து சமவெளி என்பன அவை. இதில் சிந்து சமவெளி நாகரிகம் மிகவும் தொன்மையானது. இந்த நாகரிகம் பற்றி கி.பி. 1922ல் மொஹஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய நகரங்கள் மார்ஷல் என்பவரால் அகழ்வு செய்யப்பட்டுப் பல முடிவுகள் பெறப்பட்டன. அதன்படி அதன் காலம் கி.மு.3250க்கு முன்னும் கி.மு. 2750க்குப் பின்னும் போக முடியாது. அங்கு வாழ்ந்த திராவிடர்களை ஆரியர்கள் அழித்து ஒழித்தனர். அங்கு கிடைத்த படிமங்கள் சிவ வழிபாட்டை மெய்ப்பிக்கின்றன என்றெல்லாம் செய்திகள் கிடைத்துள்ளன. பழந்தமிழ் திராவிடர்கள் அங்கு வாழ்ந்தமையால் தமிழர்தம் வாழ்வு அக்காலத்திலிருந்தே உலக அரங்கிற்கு அறிமுகம் ஆகின்றது. எனவே, திராவிடத் தமிழரின் இலக்கியமான சங்க இலக்கியங்கள் தொன்மை வாய்ந்தனவாகக் கொள்ளப்படுகின்றன. இதனுடைய காலம் முன்னர் சொல்லப் பெற்றிருக்கின்றது.

இத்தகைய தொன்மைவாய்ந்த சங்க இலக்கியங்களில் உலகாயதக் கொள்கைகள் இடம்பெற்றுள்ளதோடு கொள்கைகளின் மறுப்பும் இடம்பெற்றுள்ளது. இங்கு சங்க இலக்கியத்தில் காணப்படும் கொள்கைகளை வகுத்துரைத்த ஆய்வாளர்களின் கருத்துக்கள் தொகுத்துத் தரப்பெறுகின்றன. பேரா. சோ.ந.கந்தசாமி அவர்கள் தம்முடைய இந்தியத் தத்துவக் களஞ்சியத்தில் இரண்டு சான்றுகளைத் தந்துள்ளார்கள். அதில் முதல் சான்று உலகாயதர் வற்புறுத்திய பெண்மை நலத்தை உடையதாகும்.

“தொடியுடைய தோள் மணந்தனன்
கடி காவில் பூச் சூடினன்
தண் கமமும் சாந்து நீவினன்
செற்றோரை வழி தபுத்தனன்
நட்டோரை உயர்பு கூறினன்
வலியர் என வழிமொழியலன்
மெலியர் என மீக்கூறலன்
பிறரைத் தான் இறப்பு அறியலன்
இரந்தோர்க்கு மறுப்பு அறியலன்
வேத்துடை அவையத்து ஓங்கு புகழ் தோற்றினன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வருபடை எதிர் தாங்கினன்
பெயர் படை புறங் கண்டனன்
கடும் பரிய மாக் கடவினன்
நெடுந் தெருவில் தேர் வழங்கினன்
ஓங்கு இயல் களிறு ஊர்ந்தனன்
தீம் செறி தசும்பு தொலைச்சினன்
பாண் உவப்பப் பசி தீர்த்தனன்
மயக்குடைய மொழி விடுத்தனன், ஆங்குச்
செய்ப எல்லாம் செய்தனன் ஆகலின்
இடுக ஒன்றோ, சுடுக ஒன்றோ
படு வழிப் படுக, இப் புகழ் வெய்யோன் தலையே" *(புறம். 239)*

இப்பாடலில், தமிழகத்தில் வாழ்ந்த குறுநிலத் தலைவர்களில் ஒருவனான நம்பி நெடுஞ்செழியனைப் பேரெயில் முறுவலார் பாராட்டிப் பாடுகிறார். இப்பாராட்டுதலில் குறுநில மன்னனின் பல குண நலன்கள் இடம்பெற்றிருப்பதோடு, இரண்டு செய்திகள் உலகாயதரின் கருத்துக்களை வலியுறுத்துவதாகப் பேராசிரியர் குறிப்பிடுகின்றார். ஒன்று "தொடியுடைய தோள் மணந்தனன், கடி காவில் பூச்சூடினன், தண்கமழும் சாந்து நீவினன்" - என்ற பகுதி உலோகாயதரின் பெண்மைநலம் துய்க்கப்படுவதைக் குறிப்பிடுவதாகச்சுட்டிக்காட்டுகிறார். உலகாயதரின் போகக் கோட்பாட்டினைக் கவிநலம் கொண்ட இப்பாடல் சுட்டுகிறது என்றும் வாழ்க்கையில் ஒருவன் அடைய வேண்டிய பேறு இன்பத் திளைப்பு - இன்பம் என்னும் உறுதிப் பொருளே என்பதை இனிய ஓசை நலம் கெழுமிய இப்பாடல் அடிகள் புலப்படுத்துகின்றன என்றும் இஃது உலகாயதக் கொள்கை என்றே தோன்றுகிறது என்றும் குறிப்பிடுகிறார்கள்.

இப்பாடலில் பின்னர் வருகிற பகுதியில் அவனுடைய கொடைப் பண்புகளும், அவனுடைய வீரத் தன்மையும் கூறப்பெற்று, "தீம் செறி தசும்பு தொலைச்சினன்", என்ற வரி இடம்பெற்று இனிய செறிவை உடைத்தாகிய மதுவை உடைய குடங்களைப் பலருக்கு வழங்கித் தொலைத்தனன் என்ற பொருள் கிடைக்கின்றது. எனவே, உலகாயதரின் கள்ளுண் மகிழ்ச்சியே பேரின்பம் என்பதும் இப்பாடல் தருகின்ற கொள்கையாகும். பாடலின் மூன்றடிகளில்,

"செய்ப எல்லாம் செய்தனன் ஆகலின்-
இடுக ஒன்றோ, சுடுக ஒன்றோ
படு வழிப்படுக, இப் புகழ் வெய்யோன் தலையே"

என்பதன் மூலம் உலகாயதர் கொள்கை பெறப்படுகிறது என்றும் பேராசிரியர் குறிப்பிடுகிறார். அதாவது உலகத்தார் பாராட்டும் நல்வாழ்க்கையினை நடத்தியிருக்கிறான். ஆதலால் அவனை மண்ணில் புதைக்கவோ அல்லது தீயினாலோ சுடுக என்று புலவர் குறிப்பிடுவதால் உலகாயதரின் கொள்கையான இறந்தவர் உடலைப் புதைப்பது என்ற மரபு புலப்படுகிறது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்கின்றார். அவர் மேலும் குறிப்பிடுகின்ற செய்தி - இறந்த உடம்பினை அலங்கரித்து முதுமக்கள் தாழியில் கவித்து, ஐம்பூதங்களில் ஒன்றாகிய நிலத்தின் வயிற்றில் இருத்துதல் பழைய நாகரிகத்தின் பழக்கம் என்பர் மானிடவியலார். இத்தகைய பழக்கம் சுமேரியரிடமும் காணப்பட்டது. இதனால் இவ் உலகாயதப் பழக்கம் அவரிடமிருந்து நம் நாட்டிற்கு வந்திருத்தல் வேண்டும் என்று தத்துவமேதை எஸ்.என். தாஸ் குப்தா அவர்கள் கருதினார்கள் என்றும் குறிப்பிடுவார். மேலும், உலகாயதர் வாழ்ந்த காலத்தில் உடலைப் பேணி வளர்த்து உடுத்து மகிழ்ந்தது போலவே இறந்த பின்னரும் அந்த உடலுக்கு உரிய அதே மரியாதையை வழங்கினர் எனலாம். புதைத்தல் ஆரியர் அல்லாதார் வழக்கம். எரித்தல் ஆரியர் வழக்கம் என்பர் என்றும் பேராசிரியர் குறிப்பிடுவார்.

தமிழிலக்கியங்களில் உலகாயதத்தைக் காண முற்பட்ட ஆய்வு அறிஞர்களில் மிகவும் குறிப்பிடத் தக்கவர் பேராசிரியர் முனைவர் க. நெடுஞ்செழியன் ஆவார். கிடைத்திருக்கும் சான்றுகளில் அவருடைய தமிழிலக்கியத்தில் உலகாய்தம் என்ற ஆய்வு நூல் மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். இந்நூல் அவர்தம் ஆய்வுச் சிந்தனைக்கும் தரவுகள் தேடுதல் முயற்சிக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. உலகாயதம் பற்றிய செய்திகள் பலவற்றையும் தருவதோடு, சங்க இலக்கியத்தில் காணப்படுகின்ற உலகாயதம் சார்ந்த பாடல்களைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். அவர்தம் ஆய்வுக் கருத்துக்களின் சுருக்கம் இங்கு இன்றியமையாதது ஆகின்றது.

பேராசிரியர் சோ.ந.கந்தசாமி அவர்கள் சுட்டிக்காட்டியது போல உலகாயத இன்பக் கொள்கையைப் பல சங்க இலக்கியப் பாடல்கள் மூலம் எடுத்துக் காட்டியுள்ளார் பேராசிரியர் முனைவர் க.நெடுஞ்செழியன். அதில் ஒன்று - பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை மாங்குடிக்கிழார் பாடிய பாடலாகும். அப்பாடற் பகுதியில் உலகாயதர் கருத்து வலியுறுத்தப் பெற்றிருப்பதைப் பேராசிரியர் அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்.

"இரவல் மாக்கள் ஈகை நுவல
ஒண் தொடி மகளிர் பொலங்கலத்து ஏந்திய
தண் கமழ் தேறல் மடுப்ப, மகிழ் சிறந்து
ஆங்கு இனிது ஒழுகுமதி பெரும! ஆங்கு அது
வல்லுநர் வாழ்ந்தோர் என்ப - தொல் இசை
மலர் தலை உலகத்துத் தோன்றி
பலர், செலச் செல்லாது நின்று விளிந்தோரே" *(புறம்.24:30-36)*

என்ற இப்பாடலில் வளையலை உடைய மகளிர் பொற்கலத்தில் நறுமணம் மிக்க மதுவைத் தர, அதனை உண்டு மகழ்ச்சி மிகுந்து இனிதே நடப்பாயாக. இத்தகைய ஒழுக்கம் வல்லவரை வாழ்ந்தோர் என்று சொல்லுவர் அறிவுடையோர். உலகத்தின் கண்ணே பிறந்து பழைய புகழில் ஒழுகாது இறந்தோர் பலர். அவர்கள் வாழ்ந்தோர் எனப்படார்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்ற பொருள் அமைந்துள்ளது. இதனைப் பேராசிரியர் எடுத்துக் காட்டி, பூத வாதத்தார் அதாவது உலகாயதத்தார் தங்கள் கோட்பாடுகளுக்கு ஏற்ப வாழ்த்தியுள்ளார்கள் என்று குறிப்பிடுவார் (ப.48). பேராசிரியர்கள் சோ.ந.கந்தசாமி, நெடுஞ்செழியன் ஆகியோரின் எடுத்துக்காட்டின்படி சங்க இலக்கியத்தில் உலகாயதக் கொள்கையான பெண்மைநலம் புணர்தலே சிறப்பு என்பது இடம்பெற்றிருப்பதை அறியமுடிகிறது.

மேலும், சில சங்க இலக்கியப் பாடல்கள் உலகாயதரின் கொள்கையான பெண்மைநலம் துய்த்தல் கொள்கையினைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

"காமம் காமம் என்ப; காமம்
அணங்கும் பிணியும் அன்றே; நுணங்கிக்
கடுத்தலும் தணிதலும் இன்றே; யானே
குளகு மென்று ஆள்மதம் போலப்
பாணியு முடைத்துஅது காணுநர்ப் பெறினே." *(குறுந்.136)*

என்ற குறுந்தொகைப் பாடல், காமத்தைக் குறை கூறுவது தவறு. காமமானது புதிதாகத் தோன்றும் வருத்தமும் நோயும் அல்ல, நுண்ணிதும் மிகுதியும் அல்ல, கண்டு மகிழ்பவரைப் பெற்றால் அது வெளிப்படக் கூடியதுதான் என்று காமத்தின் சிறப்பைக் கூறுகின்றது. அதுபோலக் கீழ்க்காணும் குறுந்தொகைப் பாடல்,

"காமம் காமம் என்ப; காமம்
அணங்கும் பிணியும் அன்றே; நினைப்பின்,
முதைச்சுவற் கலித்த முற்றா விளம்புல்
மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளோயே." *(குறுந்.204)*

என்று காமத்தின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றது. மேட்டுநிலத்தில் விளைந்த இளம் புல்லை முதிய பசுவானது நாவால் தடவி இன்புறுவது போலக் காமம் புது இன்பத்தைத் தரும் என்ற பொருளை இப்பாடற் உணர்த்தி காம நிலையை எடுத்துக்காட்டுகிறது. மதுரைக் காஞ்சியின் இறுதிப் பகுதியில்,

"இலங்கு இழை மகளிர் பொலங் கலத்து ஏந்திய
மணம் கமழ் தேறல் மடுப்ப நாளும்
மகிழ்ந்து இனிது உறைமதி பெரும
வரைந்து நீபெற்ற நல் ஊழியையே" *(மதுரைக்.780-783)*

என்ற வரிகள் இடம்பெற்றுப் பெண்கள் தரும் கள்ளை உண்டு நாளும் மகிழ்ந்திருக்கப் பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார் வாழ்த்துகின்றார். நிலையாமையை எடுத்துக் கூறிய இப்பாடலின் இறுதியில் பெண்ணின்பம் இடம்பெற்று உலகாயதக் கொள்கை குறிக்கப்பெறுகிறது. பரிபாடலில் குன்றம்பூதனார்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர்! கேண்மின், சிறந்தது;
காதற் காமம், காமத்துச் சிறந்தது
விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி" *(பரி.9:12-16)*

என்று பெண்ணின்பத்தைக் குறிப்பிடுகின்றார். நான்மறைப் பொருளை விரித்து அதனுடைய புகழை விளக்குகின்ற புலவர்களே, சிறந்ததோர் பொருளைக் கேட்பீர்களாக, காமத்தில் சிறந்தது காதலை உடைய காமம், அஃதாவது இருவர் அன்பு ஒத்து மெய்யுறு புணர்ச்சியைக் கொண்டு, இன்பம் அனுபவித்தல் ஆகும் என்று குறிப்பிடுவதும் பெண்மை இன்பத்தைக் குறிக்கின்ற பகுதியாகும்.

இத்தகைய செய்திகள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்று உலகாயதரின் கொள்கையை வெளிப்படுத்துகின்றன எனலாம்.

உலகாயதரின் மற்றொரு கொள்கையான பூதங்களின் சிறப்பைப் போற்றுதல் என்னும் மரபு சங்க இலக்கியத்தில் பரவலாகக் காணப்பெறுகிறது. ஒருசில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு.

"மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பம்
விசும்பு தைவரு வளியும்
வளித் தலைஇய தீயும்
தீ முரணிய நீரும், என்றாங்கு
ஐம் பெரும்பூதத்து இயற்கை போல" *(புறம்.2:1-6)*

என்ற பாடற்பகுதியில் சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் நிலம், விசும்பு, காற்று, தீ, நீர் என்ற ஐம்பெரும் பூதங்களின் இயற்கைபோல - பொறை, சூழ்ச்சி, வலி, வீரம், கொடை என்ற ஐந்தும் உடையவன் என்று முரஞ்சியூர் முடிநாகராயர் பாராட்டுகின்றார். இங்கு பூதங்கள் உவமையாக்கப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். உவமை என்பது உயர்ந்ததன் மேற்றே என்பதன் அடிப்படையில் பூதங்கள் சிறப்பு பெற்றுள்ளன. உறையூர் முதுகண்ணன் சாத்தனார்,

"செஞ்ஞா யிற்றுச் செலவும்
அஞ்ஞா யிற்றுப் பரிப்பும்,
பரிப்புச் சூழ்ந்த மண் டிலமும்,
வளி திரிதரு திசையும்,
வறிது நிலைஇய காயமும், என்றிவை
சென்று அளந்து அறிந்தார் போல,ம." *(புறம்.30:1-6)*

என்று சோழன் நலங்கிள்ளியின் அடக்கமாகிய பண்பைப் பாராட்டியிருக்கிறார். செஞ்ஞாயிற்றின் வழியும், அதன் இயக்கமும், அவ் இயக்கத்தால் சூழப்பட்ட உலக வட்டமும், காற்று இயங்கும் திக்கும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓர் ஆதாரமும் இன்றித் தானே நிற்கின்ற ஆகாயமும் என இவற்றின் அளவை நேரிற் சென்று கண்டவரைப் போல, ஆராய்ந்து உரைப்போர் பலர் இவ்வுலகில் உள்ளனர். அவர்களாலும் கூறமுடியாத அடக்கத்தை உடைய மன்னவன் என்று சோழன் பாராட்டப்படுகிறான். இப்பகுதியில் ஐம்பூதங்களைப் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் என்பது உலகாயத அறிஞர்களைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. மேலும்,

"இரு முந்நீர்க் கூட்டமும்
வியன் ஞாலத்து அகலமும்
வளி வழங்கு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்றாங்கு
அவை அளந்து அறியினும், அளத்தற்கு அரியை." *(புறம். 20:1-5)*

என்னும் புறநானூற்றுப் பாடலில், குறுங்கோழியூர் கிழார் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையைப் பாராட்டியுள்ளார். பெரிய கடலினது ஆழமும், அகன்ற உலகத்தின் பரப்பும், காற்று இயங்கும் திசையும், வடிவு இன்றி நிலைபெற்ற ஆகாயமும் என்று சொல்லப்படுபவற்றை அறிந்து அளந்தாலும், அளந்து அறிய முடியாத புகழினை உடையவன் என்று இப்பாராட்டு அமைந்துள்ளது. முன் காட்டிய பாடலில் பூதங்கள் ஆராயப்படுகின்றன என்று குறிப்பிட்ட புறநானூறு, இப்பாடலில் ஐம்பூதங்களை அறிந்தாலும் அறியலாம் என்று குறிப்பிட்டு உலகாயதரின் ஆய்வுப் பொருளாகிய பூதங்களைப் பற்றிய செய்திகளைத் தருகின்றது.

உலகத்தின் தோற்றத்திற்கு பூதங்களின் சேர்க்கை காரணம் என்று சொல்லுகின்ற உலகாயதரின் கொள்கையை,

"நளிஇரு முந்நீர் ஏணி யாக
வளியிடை வழங்கா வானம் சூடிய
மண்திணி கிடக்கைத் தண்டமிழ்கல" *(புறம்.35:1-3)*

என்று புறநானூறு குறிப்பிடுகின்றது. மேலும்,

"நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்பொடு ஐந்துடன் இயற்றிய
மழு வாள் நெடியோன் தலைவனாக" *(மதுரைக்.454-456)*

என்று உலகத் தோற்றத்திற்குக் காரணம் பூதங்களின் சேர்க்கைதான் என்பதை வலியுறுத்துகிறது மதுரைக்காஞ்சி. முதற் பகுதியின் பொருள் நீர்செறிந்த பெரிய கடலை எல்லையாகக் கொண்டு, காற்று இடையில் புகமுடியாத வானத்தைச் சூடிக்கொண்டு மண்செறிந்த நிலையாக உலகம் இருக்கிறது என்ற குறிப்பைத் தருகின்றது. அடுத்த பகுதி திக்குகளை உடைய ஆகாயத்துடனே காற்று, நெருப்பு, நீர், நிலன் ஆகிய ஐந்தினையும் ஒருசேர உலகமாகப் படைத்த மழு வாளை உடையோனைத் தலைவனாகக் கொண்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்ற குறிப்புப் பொருளைத் தருகிறது. இதன் மூலம் உலகாயதரின் உலகத் தோற்றம் பற்றிய கருத்து வெளிப்படுகின்றது.

உலகாயதர் வேதத்தை மறுப்பவர்கள். சங்க இலக்கியங்களில் காணப்படுகின்ற வேத மறுப்புச் செய்திகள் பெரும்பாலும் உலகாயதக் கொள்கையைச் சார்ந்தவைகளே.

குறுந்தொகை 156 -ஆவது பாடல், வேதம் ஓதுகின்ற பார்ப்பன மகனை முன்னிறுத்தி வேதத்தில் பிரிந்தோரைப் புணர்க்கும் பண்புகள் இல்லை என்கிறது.

"பார்ப்பன மகனே பார்ப்பன மகனே
செம்பூ முருக்கின் நன்னார் களைந்து
தண்டொடு பிடித்த தாழ் கமண்டலத்து
படிவ உண்டிப் பார்ப்பன மகனே
எழுதாக் கற்பின் நின்சொல் உள்ளும்
பிரிந்தோர் புணர்க்கும் பண்பின்
மருந்தும் உண்டோ மயலோ இதுவே"

என்பது பாடலாகும். இதில் எழுதாக் கற்பு என்பது எழுதாக் கிளவியாகிய வேதத்தைக் குறிடுகின்றது. உண்டோ என்ற வினா இல்லை என்ற பொருளைத் தருகின்றது. அதுபோல முன் குறிப்பிட்ட பரிபாடற் பகுதியில்,

"நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர் கேண்மீன்......." *(பரி.9)*

என்று நான்மறைகளைக்கற்ற புலவர்கள் முன்னிலையாக்கப் பெற்றிருப்பதும், அடுத்து,

"அகறல் அறியா அணியிழை நல்லார்
இகல் தலைக்கொண்டு துணிக்கும் தவறிலர்
இத்தள்ளாப் பொருள் இயல்பில் தண்டமிழாய் வந்திலார்
....
கொள்ளார்.................." *(பரி.9)*

என்ற பகுதி அமைந்து, இன்பக் காட்சிகளை எல்லாம் குறிப்பிட்டு இதனை அறிகின்றவர்கள் அதாவது இன்பப் பொருள் இலக்கணத்தை அறிகின்றவர்கள் வேதம் உடைய வடமொழியார் அல்லர். தமிழ் இலக்கணம் அறிந்தவரே அறிய முடியும் என்று வேத மறுப்புப் பாடலில் இடம்பெற்றுள்ளது.

முத்தி என்பதை மேலுலகை அடைவது என்று ஒரு தரப்பினர் நம்புகின்றனர். இதனை ஏற்றுக்கொள்ளாதவர் உலகாயதர். இந்தச் செய்தியை மோசிகிரனார் பாடலில் காணமுடிகிறது. முரசுக் கட்டிலில் துயின்ற தனக்குக் கவரி வீசிய சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையை அவர் பாராட்டுகின்ற பொழுது,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"வீசியோயே வியலிடம் கமழ
இவணிசை உடையோர்க்கு அல்லது அவனது
உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்" *(புறம்.50)*

என்கிறார். சாமரத்தால் குளிரவீசுகின்றவனே, இவ் அகன்ற உலகத்தின்கண்ணே புகழுடன் வாழ்பவர்க்கு அல்லது மேலுலகமான உயர்ந்த நிலையை உடைய உலகத்து உறைதல் இல்லை என்ற செய்தி அறிந்ததினாலோ இச்செயலைச் செய்தாய் என்ற பொருள் அமைந்து, மேலுலகம் குறிக்கப்பெறுகிறது. இது மறுப்பு நிலையில் இல்லை என்றாலும் பாடலில் நல் தமிழ் முழுதும் அறிதல் அதனொடும் அமையாது என்ற தொடர் அமைந்து, தமிழ் அறிந்தவர்களே இத்தகைய செயலைச் செய்ய முடியும் என்ற குறிப்பு இடம்பெற்று வேதமொழிக்கு மறுப்பாக அமைந்தது எனலாம்.

இத்தகு செய்திகளால் உலகாயதம் பற்றிய அறிஞர்கள் கருத்துகளையும், சைவ சமய சாத்திரங்கள் தந்திடும் உலகாயதத் தத்துவங்களையும், சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள உலகாயதத் தத்துவங்களையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

2. பௌத்தம்

இந்திய மெய்ப்பொருளியலில் அடுத்துப் பௌத்த மதம் காலத்தால் முற்பட்டதாக விளங்குகின்றது. பௌத்த மதத் துவக்குநராம் கௌதமபுத்தர் கி.மு. 563ல் தோற்றம் கொண்டவர். சாக்ரெட்டீசுக்கு 100 ஆண்டுகளுக்கு முன்பும், லாவோசியஸ், மகாவீரர், சொரஸ்டர் ஆகியோருக்குச் சில ஆண்டுகள் பின்பும், கன்பூசியஸ், பிதாகோரஸ் முதலியோர் தோன்றிய உடன் காலத்தும் புத்தர் தோன்றினார் என்பர். இச்சமயம் பற்றி டாக்டர். எஸ். சசிவணர் என்ற மேலைநாட்டு அறிஞர் குறிப்பிடும் பொழுது, வேதங்கள் சடங்கு மயமே அறிவு மயம் என்றன. ஆனால், பௌத்தமோ அறமயமே அறிவு மயம் என்றது. இந்நிலையில் புத்தர் தம் கொள்கைகளை அவர் காலத்தில் ஆவணப்படுத்தவில்லை. அவருக்கு ஏற்பட்ட ஞானோதயம் எதுவும் அவர் இறந்தபிறகு கூட எழுதப்படவில்லை. அவர் மறைந்து பல காலம் கழிந்த பிறகுதான் அவர் வாய்மொழியாகக் கூறியவற்றை அவரின் சீடர்கள் நூல்வடிவாக ஆக்கினர். இன்று கிடைத்திருக்கும் நூல்கள் மிகப் பழமையான வடமொழியின் வழி மொழியாகிய பாலி மொழியில் எழுதப்பட்டவை. அவற்றின் பரிணாம வளர்ச்சியில் காலத்திற்குக் காலம் பௌத்த மதத் தத்துவங்களைக் கூறும் நூல்கள் தோன்றி அதன் பரப்பு நீண்டு விரிந்தது. இன்றைக்குப் பன்னூற்றுக் கணக்கான நூல்கள் பௌத்த மதத் தத்துவங்களைக் கூறுகின்றன. வடமொழி, சீன, திபேத்திய, மங்கோலிய உள்ளிட்ட பல மொழிகளில் புத்தமதத் தத்துவங்கள் வெளிப்படுத்தப்பட்டன. மேலும், அத்தத்துவங்களால் பௌத்த மதப் பிரிவுகள் பலவும் தோன்றின. அப்பிரிவுகள் பதினெட்டுக்கும் மேற்பட்டவை என்பர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புத்தருடைய தத்துவங்கள் அடங்கிய நூல்களைப் பிடகங்கள் என்ற சொல்லால் அழைத்தனர். அதில் தொன்மையானது புத்தரின் முதிர்ந்த சீடராகிய உபாலி, விநய பிடகத்தையும், அடுத்து அனந்த சுத்த பிடகத்தையும் உருவாக்க, மகாகாசிபர் அவிதம்ம பிடகத்தை உருவாக்கினார். இம் மூன்றையும் திரிபிடகம் என்பர். இந்தப் பிடகம் என்ற சொல் பௌத்தத் தத்துவங்களைக் குறிப்பிடுவது என்பதை மணிமேகலையாலும் உணர முடிகின்றது.

பௌத்த மதத்தில் மகாயான பௌத்தம், ஹீனயான பௌத்தம் என்ற இரு பிரிவுகள் மிகவும் குறிப்பிடத்தக்கன. மாற்றம் ஏற்படாத பிடக பௌத்தத்தைப் பின்பற்றுவோர் ஹீனயானர் என்றும் ஏனையோர் மகாயானர் என்றும் அழைக்கப்பட்டனர். ஹீனயானரின் கொள்கை பாலி மொழியிலும், மகாயானக் கொள்கை வடமொழியிலும் வகுக்கப்பட்டது. ஹீனயானர்கள் துறவுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். மகாயானர்கள் தொண்டுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். கௌதம புத்தரின் மறைவுக்குப் பிறகு அவரின் கொள்கைகளைப் பரப்புவதற்குச் சீடர்கள் ஒன்றுகூடிக் குழுக்களாக அமைந்தனர். அக்குழுக்கள் சங்கம் என்ற பெயரால் அழைக்கப்பட்டன. புத்தரின் மறைவின் அண்மைக் காலத்தில் முதற் சங்கம் நிறுவப்பட்டது. பின்னர் எழுந்த சங்கங்களில் அசோகர் காலத்தில் பாடலிபுத்திரத்தில் கூடிய சங்கம் குறிப்பிடத்தக்கதாக அமைந்தது.

முதன்முதலில் பீஹார் மாநிலத்தில் உள்ள ராஜகிருகம் என்ற இடத்தில் கூடியதாகவும் அதன் பின்னர் வைசாலி நகரத்தில் சங்கம் கூடியதாகவும் ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். அதன்பின் அசோகரின் தலைநகரில் கூடியதாகவும் ஆய்வாளர்கள் குறிப்பிடுவார்கள். திரிபிடகங்கள் பௌத்தர்களால் பெரிதும் போற்றிப் பாதுகாக்கப்பட்டன. கி.பி.முதலாம் நூற்றாண்டில் இலங்கையில் ஆலுவேனா என்ற இடத்தில் வட்டகாமினி அபயன் என்ற அரசனின் ஆதரவால் கூடிய பிட்சு சபைகளால் எழுத்துருவில் பதிக்கப்பட்டதாகவும் குறிப்பர். வடமொழி திரிபிடகங்கள் சீன, திபேத்திய மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டன என்றும் குறிப்பர். பௌத்த மதம் இந்தியாவில் தோன்றிய மதம் என்றாலும் அதன் செல்வாக்கு இந்தியாவை விடப் பிற நாடுகளில் அதிகம் பரவியிருந்தது. அதற்குக் காரணம் கௌதம புத்தர் வேதங்களில் கூறிய சடங்குகளைப் பெரிதும் எதிர்த்தவர். அவர் காலத்தில் அவர் பெரிதும் வெற்றிபெற்றாலும் அவர் காலத்திற்குப் பின்னர் நாட்டில் நிலவிய பிற மதத் தாக்குதல்கள் பௌத்த மதக் கொள்கைகளைத் தனிநிலையில் சிந்திக்க விடவில்லை. குறிப்பாக இந்து தத்துவத்திலிருந்து பௌத்த மதக் கருத்துக்கள் தனித்துச் செயல்பட முடியவில்லை. காலம் செல்லச் செல்லக் கடவுளே இல்லை என்ற பௌத்தரின் கொள்கைக்கு மாறாகக் கௌதம புத்தரே கடவுள் என்று சொல்லுகின்ற அளவுக்கு இந்துமதத் தாக்கம் அதிகரித்தது. சிறிது சிறிதாகக் கௌதம புத்தருக்குரிய சடங்குகள் தோன்றின. இவற்றை எல்லாம் உற்றுநோக்கிய தற்கால ஆய்வாளர்கள் சொல்லுவது போல இந்து தத்துவமும் பௌத்தமும் ஒன்றோ என்று எண்ணுகின்ற அளவுக்கு மதக்கலப்பு ஏற்பட்டது. இந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மதக்கலப்புதான் பௌத்த மதத்தை இந்தியாவில் வலுவிழக்கச் செய்தது. இந்த மதக் கலப்பினால் பௌத்த மதத்தில் பல பிரிவுகள் தோன்றலாயின. அந்தப் பிரிவுகளில் வைபாடிகம், சௌத்திராந்திகம், யோகசாரம், மாத்தியமிகம் என்பன குறிப்பிடத்தக்கன. இவைகள்தான் சைவ சமயத்தாரால் மறுப்பதற்கு எடுத்துக்கொள்ளப் பெற்றுள்ளன. இந்த நான்கில் பௌத்த மத உட்பிரிவுகள் பதினெட்டினையும் அடக்கிக்கொள்ளுவதும் உண்டு. நான்கில் வைபாடிகமும், சௌத்திராந்திகமும் ஹீனயான பௌத்தம் என்றும் யோகசாரம் மாத்தியமிகம் இரண்டும் மகாயான பௌத்தம் என்றும் கூறப்படுவதுண்டு. ஹீனயானப் பௌத்தர்களைத் தேறவாதம், சர்வாஸ்தி வாதம், அபிதர்மம் என்ற பெயர்களால் குறிப்பிடுவதுமுண்டு. வைபாடிகமும், சௌத்திராந்தகமும் தொன்மைக் கால முதல் கட்டத்தைச் சார்ந்தவையாகும். மாத்தியமிகம் இரண்டாவது காலகட்டமாகும். யோகசாரம் மூன்றாவது காலகட்டமாகும். வைபாடிகத்தைப் பற்றிக் கருத்துக்களைத் தந்தவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர் தின்னாகரும், தருமகீர்த்தியும் ஆவர். சௌத்திராந்திகத்தைச் ஸ்தாபித்தவர் குமாரகுப்தர் என்பவராவார். மாத்தியமிகத்தைத் தோற்றுவித்தவர் கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆரிய தேவரும் நாகார்ச்சுனரும் ஆவர். யோகச ாரத்தை முறைப்படுத்தியவர்கள் கி.பி.நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த அசங்காவும், வசுபந்துவும் ஆவர்.

நாகார்ச்சுனரின் மத்தியமிக சாத்திரம் விக்கிர - வியாவர்த்தனி, அசங்கா எனப்படும் அசுகரின் மகாயான சூத்திர அலங்காரம், வசுபந்துவின் அபிதர்ம கோசம், பிரமாண வார்த்திகள் ஆகிய வடமொழி நூல்கள் பௌத்த தத்துவ நூல்களில் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன.

கொள்கைகள்

பௌத்த மதம் இந்தியாவில் தோன்றியதால் அதன் கொள்கைகளைத் தருகின்ற பல நூல்கள் வடமொழியில் தோன்றின. எனவே, பௌத்த மதக் கொள்கைகள் விரிவாகத் தரப்பெற்று ஆராயப் பெற்றுள்ளன. ஒருசில நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன. அவற்றைக் கொண்டு பேராசிரியர் சோ.ந.கந்தசாமி, இலங்கை அறிஞர் கி.லெட்சுமணன், கீழை மேலை நாடுகளின் மெய்ப் பொருள் இயல் வரலாற்று ஆசிரியர்கள் பட்டாச்சாரியார், வி. மூர்த்தி, தமிழறிஞர் மு. கு. ஜகந்நாதராஜா ஆகியோர் தத்தம் நூல்களிலும் கட்டுரைகளிலும் பௌத்த மதக் கொள்கைகளையும், வரலாறுகளையும் தந்துள்ளனர். இவற்றுக்கெல்லாம் மேலாகத் தமிழ்க் காப்பியமான மணிமேகலை பௌத்தக் கொள்கைகளை விரிவாக எடுத்தியம்புகிறது. இருப்பினும் கட்டுரைக்குரிய நிலையில் சைவ சமயப் படைப்புகளால் அறியப்பெறுகின்ற பௌத்தமதக் கொள்கைகள் இங்கு சுட்டப்பெறுகின்றன.

திருமுறைகளில் திருஞானசம்பந்தர் தனது ஒவ்வொரு பதிகத்திலும் பத்தாவது பாடலில் சமண, பௌத்த மதங்களைக் கண்டன நிலையில் குறிப்பிடுவார். பெரும்பாலும் அப்பாடல்களில் சமணர் முக்கியமாகக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குறிக்கப்பெற்று, பௌத்தர் உடன் கூறப்படுபவராக அமைந்து ஒருசில பௌத்தக் கொள்கைகள் அவரால் வெளிப்படுத்தப்படுகிறது. திருநாவுக்கரசர் பாடல்களிலும் கண்டன நிலையில் ஒருசில கொள்கைகள் இடம்பெற்றுள்ளன. மணிவாசகர் பௌத்த மதக் கருத்துக்கு மறுப்பாகத் திருவுந்தியார் என்ற பதிகம் பாடியதாகக் கூறுவதுண்டு. இவ்வாறு திருமுறைகளில் மறுப்பு நிலையில் இடம்பெற்ற பௌத்த மதக் கொள்கைகள் சாத்திர நூல்களில் அதிலும் குறிப்பாகச் சிவஞான சித்தியார் பர பக்கத்தில் நால்வகைப் பௌத்தம் பற்றிய கொள்கைகள் அருணந்தி சிவாசாரியாரால் கூறப்பெற்றுள்ளன. இவற்றை நோக்கும்பொழுது வட இந்தியாவில் தோன்றிய பௌத்தம் தமிழகத்தில் ஒரு காலகட்டத்தில் வலுப்பெற்று விளங்கியிருக்கிறது என்பது தெரியவருகின்றது.

தமிழகத்தில் பௌத்தம்

அருணந்தி சிவாசாரியார் நூலில் பௌத்தம்: அருணந்தி சிவாசாரியார் தன்னுடைய பர பக்கத்தில் உலகாயதக் கொள்கைகளைக் குறிப்பிட்டு மறுத்த பிறகு, பௌத்த மதப் பிரிவுகளைக் குறிப்பிட்டு அவற்றின் கொள்கைகளை மறுக்கின்றார். சௌத்திராந்திகன் மதக் கொள்கைகளை 31 பாடல்களிலும், மறுப்புக்களை 40 பாடல்களிலும், யோகசார மதக் கொள்கைகளை ஒரு பாடலிலும், மறுப்பை இரண்டு பாடல்களிலும், மாத்தியமிகன் கொள்கைகளை ஒரு பாடலிலும், மறுப்பை இரண்டு பாடல்களிலும், வைபாடிக மதக் கொள்கையை ஒரு பாடலிலும், மறுப்பை ஒரு பாடலிலும் ஆக 79 பாடல்களில் பௌத்த மதக் கொள்கைகளையும் மறுப்புகளையும் அமைத்துள்ளார். அவர் பாடல்களில் கிடைத்திருக்கும் பௌத்த மதக் கொள்கைகளைக் காண்பது இங்கு பொருத்தமாகும்.

பாடல் - 1

நீதிகள் நிறைந்த வேதநூல் வழக்கத்திற்கு மாறுபட்டு எழுந்த பிடகநூலை நாள்தோறும் ஓதுகின்றவர்கள் ஐந்து சீலங்களை உடையவர்கள். உடல் முழுவதையும் காவி உடையால் போர்த்தியவர்கள். போதிமரத்தைத் தெய்வத் தன்மை உடையதாகக் கொள்பவர்கள். இத்தகைய பௌத்தர்களில் நால்வரில் ஒருவரானவர் சௌத்திராந்திகர்.

பாடல் - 2

அறிய வேண்டியவற்றை முழுமையாக உணர்ந்து, உலகில் கொலை முதலிய குற்றங்களை வெறுத்து, குற்றமற்ற அருளினாலே பிற உயிர்களுக்கு ஏற்படும் துன்பங்களைத் தம் துன்பமாகக் கருதி, வானவர்கள் தொழுது போற்றுகின்ற தொன்மையான திரிபிடகம் என்ற நூல்களை அருளிய நாதனாகிய புத்த பெருமானே முதல் தலைவனாவான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாடல் - 3

பிடக நூலில் அளவைகளாகக் கொள்ளப்படுபவை காட்சி அளவை, அனுமான அளவை என்ற இரண்டேயாகும். இவை அறிவும், அறியப்படும் பொருளும் ஆகும். இவை இரண்டும் ஒரு கணத்தில் தோன்றி ஒருகணத்தில் நின்று மறுகணத்தில் அழிவதாகும். இந்த இரண்டு அளவைகளால் பெறப்படுவன உருவமும், அருவமும், வீடும், வழக்கும் என்ற நான்காகும். இவை ஒவ்வொன்றும் இரண்டாக விரிந்து எட்டாக விளங்கும்.

பாடல் - 4

உருவம் பூத உருவம், உபதாதான உருவம் என்று விரியும். அருவம் சித்த அருவம், கன்ம அருவம் என்று விரியும். வீடு குற்ற வீடு, கந்தவீடு என விரியும். வழக்கு உள்வழக்கு, இல் வழக்கு என விரியும்.

பாடல் - 5

பூத உரு என்பது மண், புனல், அனல், காற்று என நான்கு ஆகும். உபதான உருவம் வண்ணம், நாற்றம், சுவை, உரு என நான்காகும். இவை எட்டும் கூடுகின்றபொழுது பொருள் உண்டாகின்றது. அவ்வாறு தோன்றுகின்ற பொருளே உருவம் எனப்படும். இவை புலன்களைப் பற்றி அவற்றின் வழி அறிவு தோன்றுகின்ற பொழுது அது சித்த அருவம் எனப்படும். அவ்வாறு அறியப்பட்ட பொருள் நல்லது, தீயது எனப் பகுத்து உணரப்படும். அப்பொழுது அது கன்ம அருவம் எனப்படும்.

பாடல் - 6

குற்ற வீடு என்று கூறப்பெறுவது அராகம் முதலிய குணங்கள் குறைந்து முத்தி இன்பத்தை அடையும்பொழுது தோன்றுவதாகும். கந்தவீடு என்று சொல்லப் பெறுவது உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்ற ஐந்து கந்தங்களும் முழுமையாகக் கெடுவதால் உண்டாவதாகும். வழக்கு என்று சொல்லப்பட்ட இரண்டும் ஒவ்வொன்றும் மூன்றாக அமைந்து ஆறாக விரியும். அவை தொகை உண்மை வழக்கு, தொகை இன்மை வழக்கு, தொடர்ச்சி இன்மை வழக்கு, மிகத்துறை உண்மை வழக்கு, மிகத்துறை இன்மை வழக்கு என்பனவாம்.

பாடல் - 7

ஒருவன் என்று சுட்டப்படுகின்றவன் உருவம், வேதனை, ஞானம், குறி, வாசனை ஆகிய ஐந்தினோடும் கூடி வருபவன் என்று கூறுவது தொகை இன்மை வழக்காகும். உருவம் முதலிய ஐந்தோடும் கூடாமல் ஒருவன் நின்று தோன்றுவான் என்பது தொகை இன்மை வழக்காகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாடல் - 8

காரண காரியத்தின் தொடர்ச்சியாய் மூன்று காலம் என்ற மயக்கம் அறுத்து ஒரு பொருள் தோன்றி அடுத்த விநாடியே கெடுதல் தொடர்ச்சி உண்மை வழக்காகும். (கண பந்தம்) ஒரு கர்த்தாவே காரண காரியத்தின் தொடர்ச்சியாய் எக்காலத்தும் உள்ளான் என்று கூறுவது தொடர்ச்சி இன்மை வழக்காகும்.

பாடல் - 9

தோன்றிய பொருள்கள் எல்லாம் ஒரு கணத்தில் கெடும் என்பது மிகுத்துறை உண்மை வழக்காம். இதற்கு மாறாகக் காரியம் கெட்டுக் காரணம் நிற்கும் என்று கூறுவது மிகுத்துறை இன்மை வழக்காம்.

பாடல் - 10

உள்வழக்கும் இல்வழக்கும் ஆறாகக் கொள்ளப்படும். அவை உள்ளது சார்ந்த உள்வழக்கு, உள்ளது சார்ந்த இல்வழக்கு, இல்லது சார்ந்த உள் வழக்கு, இல்லது சார்ந்த இல் வழக்கு என முன்னதுடன் சார்ந்து ஆறாகும். அவற்றுள் உள்ளதை உண்டு என்று கூறுவது உள்வழக்கு, உதாரணமாக யானைக்குக் கோடு உண்டு என்று கூறுவது உள்வழக்கு. இல்லதனை இல்லை என்று கூறுவது இல்வழக்கு. உதாரணமாக முயலுக்குக் கொம்பில்லை என்று கூறுவது இல்வழக்கு.

பாடல் - 11

அறிவு சார்ந்து அறிவு உண்டாம் என்று கூறுவது உள்ளது சார்ந்த உள்வழக்கு, அறிவு கெட்டால் பின்னர் அறிவு உண்டாகாது என்பது உள்ளது சார்ந்த இன்மை வழக்கு. அறிவு முன்பு இல்லையாய் பின்பு உண்டாம் என்று கூறுவது இல்லது சார்ந்த உள்வழக்கு. உள்ளங்கையில் மயிர் உண்டு என்பதும் அம் மயிரால் செய்த கயிறு உண்டு என்பதும் இல்லது சார்ந்த இல்வழக்காகும்.

பாடல் - 12

உருவம் முதலிய பொருள்கள் நான்கு மட்டுமே உள்ளன. இவையன்றி வானம், ஆன்மா, நிலைபெற்ற காலங்கள், திசைகள் என்பனவும், மனம் வாக்கால் அறியப்படாத தலைவன் (கடவுள்) உண்டு என்று கூறுவதும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. இத்தகைய பித்தேறிச் சொல்லுகின்றவர்கள் எப்படித்தான் சொல்லுகின்றார்கள் என்று அறிகிலோம். இவையாவும் நிலைப்பட்டவை அல்ல. (இவ்வாறு சௌத்திராந்திகனின் தன்மதம் கூறல் அறிவிக்கப்பெற்று இனிவரும் பாடல்களில் பிற மதம் மறுக்கும் கருத்து அமைகிறது).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாடல் - 13

ஐந்தாவது பூதமாகப் பிறரால் சொல்லப்படுகின்ற வானம், எந்தச் செயலையும் செய்யாது. மற்றைய நான்கு பூதங்களின் கூட்டுறவால் உண்டாகின்ற பொருள்களை வானம் என்கிற பூதம் தாங்கிக் கொள்கிறது என்றால், ஆகாயம் அருவம் ஆதலால் அது எப்பொருளையும் தாங்காது. ஒருசிலர் ஓசைக்குப் பிறப்பிடம் வானம் என்பர். ஓசை தோன்றுவதற்கு உருவம் வேண்டும். எனவே, உருவமற்ற வானத்தில் ஓசை தோன்றுகிறது என்பது பொருந்தாது. வானம் எங்கும் நிறைந்திருக்கிறது என்று கூறுவதும் உண்டு. ஆனால், அது எங்கும் இல்லை என்பதே உண்மை. எனவே, வானம் என்கின்ற பூதம் இல்லை (இனிவரும் பாடல்களில் ஆன்மா உண்டு என்பது மறுக்கப்படுகிறது).

பாடல் - 14

உயிர்களுக்கு அறிவு உண்டு என்று கூறப்படுகிறது. அவ்வாறு என்றால் உயிர் அறிவதற்குப் பொறிகள், புலன்கள், நூல்கள் ஆகியவற்றினைக் கொண்டு பொருள்களை அறிவது ஏன்? தானே அறிய வேண்டும் அல்லவா? இவ்வாறு கூறுவதைத் தவறு என்று கூறி? உயிரானது பொறிகளோடு கலந்தும், ஐம்புலகன்கள் வழியாகத் தீண்டியும், நூல்களைக் கற்றும் அறிகின்றன என்று கூறப்படுமானால் இருட்டில் பச்சை, சிவப்பு நிறமுடைய பொருள்கள் கிடக்க, அவற்றைத் தொட்டும், தீண்டியும், பொருந்தியும் இது என்ன நிறம் என்று அறியாமல் உயிர் கலங்குவது ஏன்?

பாடல் - 15

உயிரானது ஐம்பொறிகள் இல்லை என்றால் எந்தப் பொருளையும் அறியாது. அதே நேரத்தில் ஐம்பொறிகளுக்கு அறிவில்லை. ஆதலால் ஐம்பொறிகளைப் பற்றி நின்று அறிகின்ற அறிவு உயிருக்குத்தான் உண்டு என்று கூறப்படுமானால், பொறிகளால் அறியப்படும் பொழுது ஒவ்வொரு பொருளும் ஒரே நிலையில் அறிய வேண்டும். ஒவ்வொரு பொறிக்கும் புலனாகும் குணம் வேறு வேறு ஆதலின் அவற்றை உயிர் சார்ந்து வெவ்வேறு புலனாம் குணங்களை உயிர் அறியும் என்றால் அது குற்றமாகும். மேலும், உயிரானது பொறிகளைச் சார்ந்துதான் அறிகிறது என்றால் உயிரே அறிவுடையவன் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? எனவே, இவ்வாறு கூறுகின்றவர்கள் ஆன்மா சார்பால் அறிவது என்று கூறுவதால் புத்தரின் கொள்கையை ஏற்றுக்கொண்டவர்கள் ஆகிறார்கள்.

பாடல் - 16

அறியும் பொருளும் அறியப்படும் பொருளும் என இரண்டே உள்ளன. இவை தவிர அறியும் பொருளாகிய உயிர் என்ற மூன்றாவது பொருள் உண்டு என்று கூறினால் அது அறிவுடையதா அல்லது அறிவற்றதா? என்ற கேள்வி எழும். உயிர் அறிவற்றது என்றால் அது நிலத்தைப் போல

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சடப்பொருளாம். அறியும் பொருள்தான் என்றால் அதனை அறிவுடையான் என்ற ஒரு பெயரிலேயே கூறிவிடலாமே? உயிர் அறிவுடையது என்று இரண்டு சொல்லால் கூற வேண்டியதில்லையே. இது எவ்வாறு இருக்கிறது என்றால் அரிசியும் பருப்பும் கலந்து சமைத்த பருப்புச் சோற்றைச் சோறு என்றும் சோறு கலந்த துணை உணவு என்றும் கூறுவது போன்றதாகும்.

பாடல் - 17

உயிர் அருவம் என்று கொண்டால் உருவமாகிய உடலோடு அது பொருந்தி நிற்காது. ஆதலால் உயிர் அருவமன்று என்று கொள்ளுதல் வேண்டும். உயிர் உருவம் என்று கொண்டால் ஒரு உருவில் மற்றொரு உயிராகிய உருவம் கூடிநிற்காது. எனவே, உருவமும் அன்று. இதனை விடுத்து உயிர் அணு போன்றது என்றால் ஒன்பது துளைகள் உள்ள உடம்பில் அது தங்கி நிற்காது. ஏதாவது ஒரு துளையில் அது ஓடிவிடும். எனவே, அது அணுவும் அன்று. உயிரானது நித்தம் என்று சொன்னால் உயிரின் அறிவும் நித்தம் என்று கொள்ள வேண்டும். அவ்வாறு உலகில் காணப்படவில்லையே. எனவே, உயிர் நித்தமும் இல்லை.

பாடல் - 18

உயிர் எங்கும் நிறைந்திருக்கிறது என்று கூறினால் அதுவும் பொருந்தாது. ஏனெனில் உலகத்தில் பல்வேறு வகைப்பட்ட உயிரினங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றிலும் உயிரானது பல்வேறு வகைப்பட்ட நிலையில் காணப் படுகின்றது. எனவே, உயிரானது ஒரே தன்மையாய் எங்கும் நிறைந்திருக்கிறது என்பது பொருந்தாது. உயிர் எங்கும் நிறைந்திருக்கிறது என்பதற்கு இவ்வாறு பொருள் கொள்ளாமல் உயிர் தான் நிற்கும் உடல் முழுவதும் நிறைந்திருக்கிறது என்று கூறினால் உடல் கெடும்பொழுது உயிரும் கெட வேண்டும். எனவே, அதுவும் பொருந்தாது. உயிரானது உடலின் ஓர் உறுப்பைத் தனக்கு இடமாகக் கொண்டு தங்கியிருக்கும் என்று கூறினால் அதுவும் தவறு. ஏனென்றால் உடம்பில் தலை முதல் கால் வரை அறிவு நிகழ்வதைக் காணுகின்றோம். எனவே, உயிராகிய ஆன்மா என்ற ஒன்று இல்லை (பின்வரும் பாடல் உரையில் காலம் என்ற ஒன்று இல்லை என்று கூறப்படுகிறது).

பாடல் - 19

கூறப்படும் காலம் என்பது எத்தகையது? பொருள்களைத் தோற்றுவித்தல், காத்தல், போக்குதல் போன்ற செயல்களைக் காலம் என்று சொன்னால் மூன்றுவிதப் பொருள்களோடு கூடுகின்ற பொழுது காலம் மயங்கிவிடும். தோற்றம் முதலிய மூன்று செயல்களை உடைய பொருள்கள் அழியும் பொழுது காலமும் இல்லாததாகிவிடும். எனவே, பொருள்கள் மூன்றுவகைப் பட்டன என்று கொள்ளலாமே அன்றிக் காலம் மூன்றுவகைப்பட்டது என்று கூறுவது பொருத்தமில்லை. அது இல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வழக்காகும் (பின்வரும் பாடலில் திசை என்ற ஒன்று இல்லை என்று கூறப்படுகிறது).

பாடல் - 20

எனக்குக் கிழக்குப் பகுதியில் ஒருவன் இருந்தால் அவன் என்னை மேற்குப் பகுதி என்பான். எனக்கு மேற்குப் பகுதியில் இருக்கின்ற ஒருவன் என்னைக் கிழக்கே இருப்பவன் என்று கூறுவான். எனவே, நான் ஒருவனே மேற்கிலும் கிழக்கிலும் இருந்தேன் என்று கூறுப்பட்டால் அது எவ்வாறு பொருந்தும்? எனவே, திசை என்பதை வரையறுத்துக் கூறமுடியாது. இதனால் திசை என்பதும் இல்வழக்காகும் (இனிவரும் பாடல் கருத்துக்களில் கடவுள் இல்லை என்பது கூறப்படுகிறது).

பாடல் - 21

உலகைப் படைத்தவன் இறைவன் என்றால் அவ்விறைவன் இருக்கும் இடம் முன்பு உள்ளது தானே? எனவே, முன்பு உள்ளதை ஒருவன் படைக்க வேண்டியதில்லை. முன்பு இல்லை என்றால் இல்லாத பொருளை ஒருவன் படைக்க வேண்டியதில்லை. இதற்குப் பதில் கூறும்பொழுது உலகம் முதலில் காரண நிலையில் நின்று, பின்பு காரிய உருவில் இறைவனால் படைக்கப்பட்டது என்று கூறப்பட்டால் காரியம் என்பது ஒரு காலத்தில் அழியும். அப்பொழுது காரணம் நிற்க வேண்டும். எனவே, உலகமாகிய ஒரே பொருள் காரண நிலையில் உள்ளதாகவும், காரிய நிலையில் இல்லாததாகவும் கொள்ளப்பட வேண்டும். ஒரு பொருளுக்கு இவ்வாறு இரு தன்மைகள் உள்ளன என்று கூறுவது பொருத்தமில்லை.

பாடல் - 22

உலகம் என்பது மண் போன்ற முதற் பொருள். இறைவன் என்பவன் குயவனைப் போன்ற நிமித்த காரணன். குயவன் எவ்வாறு மண்ணைப் பிசைந்து குடம் முதலியவற்றை ஆக்குகின்றானோ அதுபோல இறைவன் உலகத்தைப் பல்வேறு வகையாக உதிக்கச் செய்கின்றான் என்று கூறப்படுகிறது. அப்படியானால் முதன் முதலில் இறைவன் உலகத்தைப் படைக்கும் பொழுது எங்கேயிருந்து கொண்டு படைத்தான்? உலகத்தில் நின்று கொண்டு படைத்தான் என்றால் முன்னரே உலகம் இருக்கிறது என்பதுதானே பொருள். இல்லை இறைவன் நீக்கமற எங்கும் நிறைந்திருந்து அவ்வுலகத்தைப் படைத்தான் என்றால் அந்த எங்கும் என்பது முதலாய் அமைய அதுதான் இறைவனைத் தந்தது என்று பொருள்கொள்ள வேண்டும்.

பாடல் - 23

இறைவன் இல்லாத உலகத்தைத் தன் கருணையினால் படைத்தான் என்றால் உலகத்தில் உயிர்களைக் கொல்லும் சிங்கத்தையும், புலியையும், பாம்பையும், உயிரை உண்ணுகின்ற எமனையும் படைத்த இறைவனுக்குக் கருணை உண்டு என்று எவ்வாறு கூற முடியும்? இறைவன் எல்லாம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வல்லவன் ஆதலால் பல்வேறு வகைப்பட்ட உயிர்களைப் படைத்தான் என்று கூறினால் காரண காரியத்தொடர்பு இல்லாமல் ஒன்றோடு ஒன்று பகைகொண்ட உயிர்களைப் படைப்பது என்பது பித்தரின் செயலாகும். அதனால் உண்டு என்று கூறப்படும் இறைவன் பித்தனாவான்.

பாடல் - 24

உலகம் படைக்கப்பட்டது இறைவனின் திருவிளையாடல் ஆகும் என்று கூறலாம். அப்படியானால் இறைவன் சிறுபிள்ளை போன்றவனா? மேலும், உயிர்களை அவற்றின் வினைக்கு ஈடாக இறைவன் படைக்கின்றான் என்றால் வினை இயற்றிய உயிர்கள் இறைவனுக்கு முன்னர் தோன்றியதாகும். ஆகையால் ஆராய்ந்து பார்த்தால் இறைவன் என்பவன் இல்லை, உலகம் தான் உண்டு. அது யாராலும் படைக்கப்படவில்லை, அது அநாதியாகும் என்பது புலனாகும்.

பாடல் - 25

இறைவன் உருவமுடையவன் என்று சொன்னால் அவனுடைய உருவத்தைப் படைக்க ஒருவன் வேண்டும். அதாவது அவனுக்கு முன்பே ஒருவன் இருந்திருக்க வேண்டும். இல்லை இறைவன் தன் விருப்பத்தாலேயே தன் உருவத்தைத் தானே படைத்துக் கொண்டான் என்று பதில் சொன்னால் உலகத்தில் உள்ளவர்களும் அவரது விருப்பப்படியே உருவத்தை எடுத்துக்கொண்டனர் என்று ஆகிவிடும். இல்லை, உலகத்தில் உள்ளவர்களின் உருவம் அவரவரின் வினைக்கு ஈடாகத் தரப்பட்டது என்று வாதிட்டால் உருவமுடைய இறைவனும் அவனது வினைக்கு ஈடாக உருவத்தைப் பெற்றான் என்று அமைந்து அவனுக்கும் வினை உண்டு என்பது பெறப்பட்டுவிடும்.

பாடல் - 26

இறைவன் அருவமுடையவன் என்றால் அவன் வான் போல செயலற்றவன் என்றாகி உயிர்களைப் பிறவிக் கடலில் இருந்து எடுக்கின்ற வல்லமை உடையவன் அல்லன் என்பது பெறப்படும். யாவரும் சென்றடைவதற்கு உரிய நிழல் போன்றவன் என்று சொன்னால் அவனைச் சென்றடைபவர்களுக்கு நிழல் தருவான் என்றமைந்து அவன் வியாபகன் அல்லன் என்றாகிவிடும். எங்கும் அவன் நிறைந்திருக்கின்ற முற்றறிவினன் என்றால் அவனுக்கு உருவம் உண்டு என்று கொள்ளுதலே தகும். ஏனென்றால் அறிவு என்பது ஒன்றைப் பற்றி நிற்குமே அன்றித் தனித்து நிற்காது.

பாடல் - 27

வேத ஆகம நூல்கள் இறைவன் அநாதியானவன் என்று கூறுவதால் இறைவன் அறியப்படுகிறான் என்று கூறலாம். அப்படியென்றால் அந்நூல்களைச் செய்தவர் யார்? ஒருவரும் எழுதாமலேயே வேத ஆகமநூல்கள் தோன்றின என்று சொன்னால் அது பொருந்தாது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இறைவன்தான் வேத ஆகமங்களைத் தந்தான். அவற்றின் மூலமே அவனை அறிகின்றோம் என்று கூறுவது ஆச்சரியமானது.

வேறு சில கொள்கைகள்

பாடல் - 28

நிலத்தில் தோன்றுகின்ற புல் முதல் மரங்கள் வரை உள்ளவை உயிர்கள் ஆகா. நிலம், நீர், தீ, காற்று என்ற பூதங்களின் சேர்க்கையால் அவை தோன்றுகின்றன. உடம்பில் உரோமக் கொம்பு தோன்றுவதைப் போன்று நிலத்தில் அவை தோன்றுகின்றன. தோன்றி வளர்ந்தபின் கெடுகின்றன. இவை ஏன் இவ்வாறு தோன்றுகின்றன என்றால் பிற உயிர்களுக்குப் பயன்படுவதற்காகவே எனலாம்.

பாடல் - 29

உயிர்களைக் கொல்லுதல் கூடாது. ஆனால், பிறரால் கொல்லப்பட்டவற்றின் இறைச்சியை உண்பது தவறாகாது. ஏனென்றால் அவை செத்தன ஆதலால் மண்ணை ஒக்கின்றன. ஆகவே, அதை உண்ணலாம். வழிப்போக்கர் தாங்கள் செல்லும் சாலையில் உள்ள தண்ணீரைப் பருகித் தாகத்தைத் தீர்த்துக் கொள்கின்றனர். இதனால் ஏற்பட்ட புண்ணியம் உண்டவர்க்கோ அல்லது தண்ணீர்ப் பந்தர் வைத்தவருக்கோ? - வைத்தவருக்குத்தான் சேரும். அதுபோல விலங்கினைக் கொன்றவருக்குத் தான் பாவம் சேரும். தின்றவரைச் சாராது.

முத்தி பற்றிய பாடல்

பாடல் - 30

உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் இவை ஐந்தும் கந்தம் எனப்படும். இவை காரண காரியத் தொடர்ச்சியாய்க் கெட்டுத் தோன்றுவனவாகும். இவை பிறப்பிற்குக் காரணமாகும் துக்கத்தைத் தரும். இவை கெட்டு ஒழிந்துபோவதே முத்தி இன்பமாகும்.

சமாதிமுறை பற்றிய செய்திகள்

பாடல் - 31

பிறர்க்குத் தீமை செய்கின்ற கேடுகளை முற்றிலும் நீக்கி நல்லறங்களைச் செய்திடல் வேண்டும். இழிவு சேர்க்கும் சிற்றின்பங்களைப் போக்கி, இன்ப துன்பம் இரண்டினையும் அழித்து, பிறர் பழித்திடாத நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்முயற்சி, நல்லொழுக்கம், நல்வாழ்க்கை, நல்லவரோடு இணங்கியிருத்தல் என்ற எட்டினையும் கடைப்பிடித்தால் ஞான சீலத்தில் ஒழுகிச் சமாதி நிலையை அடையலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இக்கொள்கைகள் அனைத்தும் சௌத்திராந்திகருக்கு உரியவை என்று குறிப்பிடும் அருணந்தி சிவாசாரியார், இக்கொள்கைகளை மறுக்கவும் செய்கிறார். சௌத்திராந்திகன் மறுப்புரை 40 பாடல்களில் அமைந்துள்ளது.

அடுத்து யோகசார மதத்தின் கொள்கையை ஒரு பாடலில் அருணந்தி சிவாசாரியார் தந்துள்ளார். அப்பாடலின் பொருள்: அறிவுதான் பொறிகளாய், பொறிகளுக்குப் புலப்படும் பொருளாய் வருகிறது. பொறிகளின் செயல்பாட்டினால் உணர்வுகள் தோன்றுகின்றன. அறிவுக்கு வடிவம் இல்லை. நிலையற்ற இவ்வுலகம் கனவு போன்றது. அறிவு ஒன்றே உள்பொருளாகும் என்பதாகும்.

இக்கருத்தினை இரு பாடல்களில் அருணந்தியார் மறுக்கின்றார். அதன்பின் மாத்தியமிகன் மதத்தின் கொள்கையை ஒரு பாடலில் தருகிறார். அப்பாடலின் பொருள்: அறிவும் இந்திரியங்களும் கூடி உலகப் பொருள்கள் தோன்றுகின்றன. இவை அழிந்துவிட்டால் பொருள்களும் அழிகின்றன. ஆதலால் ஒன்றுமில்லை என்று பொருள்பட்டுப் பொருளும் இல்லை என்பது பெறப்படும். பொருள்கள் இல்லை என்பதால் அதனைப் பொருந்திநின்ற அறிவும் இல்லை என்பதாகும்.

இக்கொள்கைக்கு உரிய மறுப்பை இரு பாடல்களில் அருணந்தியார் தந்துள்ளார். அதன்பின் வைபாடிக மதத்தின் கருத்தை ஒரு பாடலில் தருகின்றார். அப்பாடலின் பொருள்: மஞ்சளும் சுண்ணாம்பும் சேருவதால் புதிய சிவப்பு நிறம் தோன்றுகின்றது. அதுபோல உலகத்தில் காணப்படுகின்ற பொருள்களும் இந்திரியங்களின் விஷயமான அறிவும் கூடியபோது உலகத்துப் பொருள்கள் உள்ளதாகத் தோன்றுகின்றன என்பதாகும். இதுவே அறிவுக்காட்சி என்று கூறப்படுகின்ற ஞான தரிசனமாகும். இதனை அறிந்தவர்கள் வீடு பேற்றினை அடைவார்கள். இதற்குரிய மறுப்பை ஒரு பாடலில் தந்துள்ளார்.

அருணந்தி சிவாசாரியாரின் பரபக்கப் பகுதியில் பௌத்த மதப் பிரிவுகள் நான்கினைப் பற்றிய மதக் கொள்கைகள் இடம்பெற்றுள்ளன. இக்கொள்கைகள் பௌத்த மதத்தைப் பற்றி ஆராய்ந்த கருத்துக்களின் சுருக்கம் என்றே கூறலாம். அருணந்தியாரால் விரிவாகச் சொல்லப்பெற்றிருக்கின்ற இக்கொள்கைகளைக் காணும்பொழுது தமிழகத்தில் ஒரு காலகட்டத்தில் பௌத்த மதம் செல்வாக்குப் பெற்றிருந்தமையை அறியமுடிகிறது. பௌத்த மதக் கருத்துக்கள் அவர்தம் சீடர்களால் வாய்மொழியாகப் பரப்பப் பெற்றிருந்தமையால் அவற்றின் மூலக் கூறுகள் அதாவது சைவ சமயம் மறுக்கும் பௌத்த மதத்தின் மூலக் கூறுகளில் சில சங்க இலக்கியங்களிலும் காணப்பெறுகின்றன.

சங்க இலக்கியங்களில் பௌத்த மதக் கூறுகள்

கிடைத்திருக்கும் சான்றுகளின்படியும், சைவ சித்தாந்த சாத்திர நூலான சிவஞான சித்தியார் பரபக்க நூலின் அடிப்படையிலும் பௌத்த மதக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கருத்துக்கள் தெரியவருகின்றன. அம்மதத்தின் கருத்துக்களைக் கீழ்வரும் சிவஞான சித்தியாரின் பாடல் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றது.

“சொன்னநால்வகையும் அன்றிச்சொல்லிடும் பொருள்கள்எல்லாம்
என்னையோ அறிகிலோம் பித்து ஏறியோ வானம் ஆன்மா
மன்னு காலங்கள் திக்கு மனமொடு வாக்கு இறந்திட்டு
உன்னுமோர் இறையும் உண்டெனறுரைப்பது நித்தமன்றே”

(சிவஞான.சி.5:75)

எனும் இப்பாடலின் பொருள் - இதுவரை கூறப்பெற்ற உருவம், அருவம், வீடு, வழக்கு என்று பொருள்கள் நான்கு வகைப்படும். இவ்வாறு இல்லாது வானம் என்றும் ஆன்மா என்றும் நிலைபெற்ற காலங்கள் என்றும் திசைகள் என்றும் மன வாக்கால் அறியப்படாது தலைவன் உண்டு என்று கூறவதும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. இவைகள் உண்டு என்று பித்தேறிச் சொல்கின்றார்கள். எப்படித்தான் சொல்கிறார்கள்? என்று அறிகிலோம். இவை யாவும் நிலைப்பட்டவை அல்ல என்பதாகும். எனவே, காட்சிப்பொருளில் காணுகின்ற பொருளைத் தவிர வேறு எதனையும் ஏற்றுக்கொள்ளாத சமயம் பௌத்த சமயம் எனப்படுகிறது. கடவுளைப் பற்றியோ உயிரைப் பற்றியோ வினைகளைப் பற்றியோ பௌத்த மதம் அதிகம் ஆய்வு செய்யாமல் மக்களின் வாழ்வியல் முறைக்கு ஏற்ற அறிவுரைகளையே கூறுகிறது எனலாம்.

கொல்லாமை, கள்ளுண்ணாமை, பொய்யாமை, காமமின்மை என்பன உள்ளிட்ட அறங்களையே பொளத்தம் போதித்தது. உலகம் அறவழியில் நடக்க வேண்டும் என்ற சிந்தனையிலேயே நிலையாமையை அதிகம் வலியுறுத்திக் கணபங்க வாதத்தைச் சுட்டிக்காட்டி, தர்ம சக்கரத்தை நிலைநாட்டி, மக்களை நல்வழிப்படுத்த முனைந்தது பௌத்த மதமாகும். பௌத்த மதத்தைத் தோற்றுவித்த கௌதம புத்தரால் வகுக்கப்பட்டத் தத்துவங்கள் என்று கூறுவதைவிடக் கௌதம புத்தரால் உபதேசிக்கப்பட்ட அறவுரைகள் தான் பௌத்தமதக் கருத்துக்களாக இன்றளவும் நிலவுகின்றன. எனவே, தத்துவ அடிப்படையில் பௌத்தமதக் கருத்துக்கள் அமையாத காரணத்தால் சங்க இலக்கியப் பனுவல்களில் பௌத்த மதக் கொள்கைகளின் சாயல் என்று சுட்டிக்காட்டும் அளவிற்கு எத்தகைய சான்றுகளும் கிடைக்கவில்லை. இன்னும் குறிப்பிட்டுச் சொன்னால் புத்தரால் போதிக்கப்பட்ட கள்ளுண்ணாமை, கொல்லாமை, சூதாடாமை ஆகியவை சங்க இலக்கியப் பனுவல்களில் குறிக்கப்பெறாது யாகங்களில் உயிர்களைப் பலியிடுதல், அரசரும் புலவரும், மக்களும் கள்ளுண்ணுதல், சூதாடுதல் ஆகியவை வாழ்வியலில் சாதாரண நிகழ்ச்சிகளாகச் சங்கப் பனுவல்களில் இடம்பெற்றுள்ளன. எனவேதான் சங்க இலக்கியங்களில் பௌத்த மதத் தத்துவக் கருத்துக்களின் சாயல்களைக் காண முடியவில்லை.

இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில், சங்க இலக்கியங்களில் காணப்பெறாத பௌத்த மதக் கொள்கையின் முழுமையான தத்துவ நூலாகக் காணும் அளவிற்குச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பௌத்த மதக் கொள்கையாக மணிமேகலையில் காணப்பெறுகின்ற ஒருசில செய்திகள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றிருப்பதாக வலிந்தேதான் கொள்ளமுடிகிறது. உடம்பு என்பது உணவின் பிண்டம் என்பதை மணிமேகலை, "மக்கள் யாக்கை உணவின் பிண்டம்" என்று மந்திரம் கொடுத்த காதையில் *(மேகலை.10:90)* குறிப்பிடும். இதனைப் புறநானூறு,

"நீர்இன்று அமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்" *(புறம்.18)*

என்று குறிப்பிடுகிறது. மணிமேகலையின் அடிப்படைக் கொள்கையான உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்ற செய்தி இப்பகுதியில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். சான்றோரின் அறவழி நடந்தால் உடம்பில் நோய்கள் தோன்றா என்பதனை மணிமேகலை,

"கூனும் குறளும் ஊமும் செவிடும்
மாவு மருளு மன்னுயிர் பெறாஅ
அந்நாள் பிறந்தவன் அருளறம் கேட்டோர்
இன்னாப் பிறவி இகந்தோர் ஆதலின்
போதி மூலம் பொருந்திய சிறப்பின்
நாதன் பாதம் நவைகெட ஏத்துதல்" *(மேகலை.12:97-103)*

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

என்று குறிப்பிடுகின்றது. இதனைப் புறநானூறு,

"சிறப்பு இல் சிதடும் உறுப்புஇல் பிண்டமும்
கூனும் குறளும் ஊமும் செவிடும்
மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க்கு
என் பேரெச்சம் என்று இவையெல்லாம்
பேதமை அல்லது ஊதியம் இல்லென
உன்னும் அறிந்தோர் கூறினர்ம." *(புறம்.28:1-6)*

என்று குறிப்பிடுவதை ஒப்பிட்டுக் காணலாம். இதுபோல மணிமேகலை குறிப்பிடுகின்ற சில நிகழ்வுகளைச் சங்க இலக்கியப் பனுவல்களில் காணமுடிகிறது.

மக்களைப் பெற்ற புனிறு தீர்ந்த மகளிர் இரவில் சென்று குளத்தில் நீராடுவர் என்ற செய்தியை மணிமேகலை குறிப்பிடுகின்றது.

"புதல்வரைப் பயந்த புனிறுதீர் கயக்கம்
தீர்வினை மகளிர் குளன்ஆடு அரவமும்" *(மேகலை.7:75-76)*

இந்த நிகழ்வை மதுரைக் காஞ்சி கீழ்வருமாறு குறிப்பிடுகிறது.

"கணவர் உவப்பப் புதல்வர் பயந்து
பணைத்து இயந்து இளமுலை அமுதம் ஊற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புலவுப் புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு
வளமனை மகளிர் குளம்நீர் அயர" (மதுரைக்.600-606)

இவ்வாறு மணிமேகலையில் இடம்பெற்ற யாக்கையின் இழிவு, பஞ்சசீல ஒழுக்கமும், நிலையாமை பற்றிய செய்திகளும்; சங்க இலக்கியப் பனுவல்களில் ஆங்காங்கே குறிப்பாக இடம்பெற்றிருப்பதை எல்லா மதத்திற்கும் உரியதாக்கிக் கொண்டு பௌத்த மதத்திற்கும் உரியதாக்கலாம். எனவே, சங்க இலக்கியங்களில் குறிப்பாகச் சொல்லும் அளவிற்குப் பௌத்த மதத் தத்துவங்கள் இல்லை என்றாலும், பொது நிலையில் வாழ்வியல் ஒழுங்கு முறைக்குரிய செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப்பெறுவது பின்வந்த பௌத்த மதக் கொள்கைகளுக்கு உரியதாகவும் அமைந்தது எனலாம்.

3. சமணம்

இந்திய மெய்ப்பொருளியல் வைதீகக் கொள்கைகளை மறுத்த மதங்களில் சமணமும் ஒன்று. பௌத்த மதத்தைப் போலவே சமண மதமும் இந்திய மெய்ப்பொருளியல் வரலாற்றில் தனி ஒரு இடத்தைப் பெற்றிருந்தது. சமண மதம் பற்றிய பல ஆய்வு நூல்கள் கிடைக்கப்பெறுகின்றன. இந்தியத் தத்துவங்களைப் பற்றி வெளிவந்துள்ள அத்துணை நூல்களிலும் சமணம் இடம்பெற்றுள்ளது. தமிழ் மொழியிலும் சமணம் பற்றிய நூல்கள் பல வெளிவந்துள்ளன. இவற்றையெல்லாம் கொண்டு சமண மதத்தின் வரலாற்றினை ஓரளவு அறிந்துகொள்ள முடிகின்றது.

சமணம் ஆதி அந்தம் இல்லாதது. அதனைத் தோற்றுவித்தவர் இன்னார் என்று கூற இயலாதது. அதன் கொள்கைகளை வரையறுக்கும் தொன்மையான நூல்கள் கிடைக்கவில்லை. எனவே, அம்மதத்தை யாரும் உருவாக்கவில்லை. மனிதனின் அறிவுநிலை விரிந்த பிறகு தன்னை அறிவதன் மூலம் பிற அறிவைப் பெற முடியும் என்ற அறிவு நிலையில் சமணம் தோன்றியதாகக் கொள்வதுண்டு. சமணத் தீர்த்தங்கரர்களும் அவர்களுடைய சீடர்களாகிய கணதரர்களும் என்ற துறவிகளும் அனுபவித்த அறிவினால் சமண மதக் கொள்கைகள் வளர்ந்தன. இத்தகைய பெருமக்களை ஒரு பிரபஞ்ச காலச் சூழலில் வாழ்ந்தவர்கள் என்று குறிப்பிட்டு, அந்தக் காலச் சூழலை ஒரு சக்கரத்தின் சுழற்சியால் சித்தரித்துக் காட்டப்பெறுவதுண்டு. காலச் சூழலை விளக்கும் சக்கரத்தைத் தரும சக்கரம் என்று குறிப்பிடுவதுண்டு. சமண மதத்தின் செல்வாக்கு இந்திய மெய்ப்பொருளியலில் அமைந்ததன் சார்பில் இந்திய இலட்சினையில் தர்மசக்கரம் இடம்பெற்றிருப்பதை நினைவுகொள்ளலாம்.

இந்தக் காலச்சக்கரச் சுழற்சியில் ஐந்தாவது கட்டம் நடந்துகொண்டிருக்கும் பொழுது தோன்றிய முதல் தீர்த்தங்கரராக ரிஷப தேவர் அமைகின்றார். ரிஷபதேவரை முதலாகக் கொண்டு தீர்த்தங்கரர்களின் வரிசைகள் கூறப்படுகின்றன. சமணப் புராணங்கள் இவரைக் காலச்சக்கரத்தின் இறங்கு காலத்தில் மூன்றாவது பிரபஞ்சக் கட்டத்தின் இறுதியில் வாழ்ந்ததாகக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கூறுவதுமுண்டு. இவரை ஆதிநாதர் எனவும் புராணங்கள் குறிப்பிடுகின்றன. இவர் அரச வம்சத்தைச் சேர்ந்தவர் என்றும் இன்றைய அயோத்தி இருக்கின்ற இடத்தில் வினித நகரம் என்ற பெயரில் அவர் தன் தலைநகரத்தை அமைத்துக் கொண்டிருந்தார் என்றும் புராணங்கள் கூறுகின்றன. மேலும், இவர்தான் மக்களை ஆட்சி செய்வதற்கான சட்டங்களை வகுத்தார் என்றும் மக்கள் விவசாயம், போர்க்கலை, தீயைப் பயன்படுத்தும் முறைமை ஆகியவற்றைக் கைக்கொள்ள வழிவகுத்தார் என்றும் அவர்களுக்கான கலைகளை வகுத்தார் என்றும் இதன் மூலம் நல்லொழுக்கம் வரையறுக்கப்பட்டது என்றும் சமண சமயப் புராணங்கள் குறிப்பிடுகின்றன. எனவே, ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்ட சமண சமயம் வெளிப்பட்டது எனலாம்.

ரிஷபதேவர் மக்களை அவரவர் தொழில்களின் அடிப்படையில் போரிடும் சத்திரியர்கள், வர்த்தகம் செய்யும் வைசியர்கள், உடலுழைப்பில் ஈடுபடும் சூத்திரர்கள் என்று மூன்று வர்ணங்களாகப் பிரித்தார். இவர்களின் செயல்பாட்டைக் கொண்டு அரசாங்கத்தில் பொருளாதார வளத்தை உருவாக்க வேண்டும் என்பதே இவரின் நோக்கம். இந்த வர்ணங்களுக்குள் எவ்வித ஏற்றத்தாழ்வையும் இவர் உருவாக்கவில்லை. சமூகத்தில் அனைவரும் சமமானவர் என்பதையும் இவர் வலியுறுத்தினார். இத்தகைய அற உணர்வு மிக்க ரிஷபதேவர் அன்பையும் இரக்கத்தையும் கொண்டு அரச பதவியேற்ற முதல் நபராகக் கருதப்பெற்றார். நீண்ட நெடுங்காலத்திற்குப் பிறகு அரசவாழ்வில் இருந்து நீங்கி ஆன்மீக வேட்கை உடையவராக விளங்கினார். பல ஆண்டு காலம் தியானத்திலும், துறவறப் பயிற்சியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். பிறரிடம் யாசிக்க மனம் இன்றி உண்ணாது வாழக் கற்றுக்கொண்டார். இவருடை இத்தகைய தீவிர நிலை கண்டு இவரிடம் பல்லாயிரக் கணக்கானபேர் சீடர்களாக அமைந்தனர். அவ்வப்பொழுது பல புண்ணியத் தலங்களுக்குப் பயணம் செய்தார். அவருடைய கடைசிக் காலத்தைப்பற்றிப் புராணங்கள், பால்குன மாதத்தின் தேய்பிறையின் பதினோராவது நாள் ஆலமரத்தடியில் அமர்ந்து தியானத்தில் இருந்த பொழுது உயர்நிலையை எய்தினார் என்றும் தம்மை மிக நன்றாக அறிந்து அனைத்துச் செயல்களிலும் விடுதலை பெற்று, குறைவற்ற ஞானநிலையை அடைந்தார் என்றும் குறிப்பிடுகின்றன. இவரின் இறுதி உபதேசம் துறவிகளுக்கு ஐந்து பெரிய விரதங்களும், இல்லறத்தார்க்குப் பனிரெண்டு சிறு விரதங்களும் ஆகும். இத்தகைய உபதேசங்களையும், வாழ்வியல் முறைகளையும் தந்த ரிஷபதேவர் அடைந்த ஞான நிலையைக் கேவல ஞானம் என்று அப்புராணங்கள் குறிப்பிடுகின்றன. இவர் உபதேச மொழியால் பரப்பிய அகிம்சை, பற்றறுத்தல் சமணத் தத்துவங்களாக அமைந்து மதக் கொள்கைகளாக உருவாகின என்பதும் புராணங்கள் தரும் செய்தியாகும்.

ரிஷபதேவரை அடுத்து அவதரித்த 23 தீர்த்தங்கரர்கள் நான்காவது காலகட்டத்தில் வாழ்ந்தனர். அவர்களின் பெயர்களும் புராணங்களில் கூறப்படுகின்றன. இருபதாவது தீர்த்தங்கரராக வாழ்ந்த முனிசுவரதர் இராமாயண

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காலத்தில் வாழ்ந்ததாகக் கருதுவது உண்டு. இதனைப் பத்மபுராணம் குறிப்பிடுகிறது. இதே புராணத்தில் 22வது தீர்த்தங்கரர் நேமிநாதர் என்றும் அவர் பகவான் கிருஷ்ணனின் ஒன்றுவிட்ட சகோதரர் என்றும் குறிக்கப்படுகிறது. 23வது தீர்த்தங்கரராக வாழ்ந்த பாசுவநாதர் கி.மு.எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்றும் குறிப்பிடப்படுகிறது. இந்த இருபத்திமூன்று பேர்களுக்கும் பிறகு இருபத்தி நான்காவது தீர்த்தங்கரராக மகாவீரர் வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது.

பாசுவநாதர் அகிம்சை, வாய்மை, கள்ளாமை, பொருள்களின் மேல் பற்றின்மை, பிறர்மனை நயவாமை ஆகிய ஐந்நெறிகளை வகுத்தார். இந்த ஐந்து நெறிகளில் முதல் நான்கு நெறிகளைக் கொண்டது ஐந்து திரிபீடகம் என்ற பௌத்தக் கொள்கையாகவும் கூறப்படுகின்றது. அதாவது புத்தர் சிலகாலம் இந்தச் சமணக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டிருந்தார் என்பதாகும். பௌத்த மதக் கொள்கைக்குச் சமண சமயக் கொள்கை அடிப்படை என்றும் பௌத்தர் யாகங்களை மறுத்தமைக்கு வழிகாட்டியாக அமைந்ததும் சமண சமயக் கருத்துக்களாகும் என்றும் குறிப்பிடுவர். இந்தப் பாசுவநாதர் வாரணாசியில் கி.மு.870இல் பிறந்து நூறு ஆண்டுகள் வாழ்ந்தார் என்றும் அவர் தனக்கு முன் வாழ்ந்த நேமிநாதரின் ஓவியத்தைப் பார்த்துத் துறவறம் பூண்டார் என்றும் கூறப்படுவதுண்டு. கடுமையான தவத்தைப் புரிந்து கேவல ஞானத்தைப் பெற்று எல்லாம் அறிந்த உயர்நிலையை எய்தினார் என்றும் கூறப்படுவதுண்டு. அவரை அவருடைய சீடர்கள் வணக்கத்திற்குரிய ஞானி என்ற பொருளில் அர்கத் என்றும் எல்லாம் அறிந்தவர் என்ற பொருளில் கேவலி என்றும் போற்றினர் என்பதும் தெரிகிறது. அவர் தனது நூறாவது வயதில் தமது முப்பத்து மூன்று சீடர்களுடன் பீகார் மாநிலத்தில் உள்ள சம்மேத சிகரம் என்ற மலைக்குச் சென்று தவம் செய்து முத்தி அடைந்தார் என்றும் கூறப்படுகிறது.

வர்த்தமான மகாவீரர் இவருக்குப் பின் தோன்றியவர் ஆவார். கிறிஸ்து பிறப்பதற்கு முன் எட்டாவது நூற்றாண்டில் இந்தியாவில் வாழ்ந்த சான்றோர்களில் வர்த்தமானர், கௌதம புத்தர், மற்கலி என்ற மூவரும் மேதைகளாகக் கருதப்பட்டனர். இம்மேதைகள் மூவரும் வேதச் சடங்கு வலுப்பெற்றிருந்த காலத்தில் அவர்களின் உயிர்ப்பலியிடும் வழக்கத்தை எதிர்த்துத் தோன்றிய மாமேதைகள் ஆவர். சைத்திர மாதத்தின் வளர்பிறை பதின்மூன்றாம் நாளில் அதாவது கி.மு.599இல் மும்மேதைகளில் ஒருவரான வர்த்தமானரின் தோற்றம் அமைந்தது எனக் கூறப்படுகிறது. வர்த்தமானருக்கு அவதி ஞானம் என்னும் ஞானக்கண் இருந்ததாகவும் சமண நூல்கள் கூறுகின்றன. அவர்தம் கண்ணால் காண முடியாததையும், காதால் கேட்க முடியாததையும் உய்த்துணர முடிந்தது. சிறு வயதிலேயே கல்வி அறிவும், கேள்வி அறிவும் கொண்டு அதி அற்புத ஆற்றல் பெற்றிருந்தார் என்று கூறப்படுவதுண்டு. அவர் தமது இருபத்தெட்டாவது வயதில் பெற்றோரின் அனுமதி பெற்றுத் துறவறம் பூண்டார் என்றும் கூறப்படுகிறது. அவரின் இளமைக்காலம் மனம் சார்ந்த அறிவுடனும் தர்க்கம் நிறைந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆற்றலுடனும், முக்கால அறிவுடனும் விளங்கியதாகக் கூறப்படுவதுண்டு. துறவு பூண்ட காலத்தில் மற்ற உயிரினங்களின் எண்ணங்களை அறியும் திறனும், மனத்தை அடக்குகின்ற வலிமையும் அவரிடம் இருந்ததாகக் கூறப்படுவதுண்டு. இவர் துறவறம் மேற்கொண்ட பதின்மூன்றாம் ஆண்டில் முழுமையான கேவல ஞானத்தைப் பெற்றார். மகாவீரரும் கௌதம புத்தரும் சமகாலத்தவராக இருந்தாலும் ஒருவரை ஒருவர் அதிகம் சந்தித்துக் கொண்டதில்லை. மகாவீரர் மூத்தவர் என்றும் அவருடைய கொள்கையில் கௌதம புத்தர் தன்னை ஈர்த்துக் கொண்டவர் என்றும் கூறப்படுவதுண்டு. கி.மு.527இல் பீகாரில் உள்ள பாவாபுரி என்ற இடத்தில் மோட்சமடைந்தார். அவர் தன்னுடைய உபதேசங்களின் மூலம் புதிய சமண மதத்தைத் தோற்றுவிக்கவில்லை. பழைய தீர்த்தங்கரர்களின் அறிவுரைகளைக் கொண்ட சமண மதத்தையே விரிவுபடுத்திக் கூறினார். அதேநேரத்தில் சமண சமயத்தில் புகுந்த தீய கொள்கைகளையும் நீக்கினார். பழைய சமணத் தத்துவங்களை முறைப்படுத்தினார். பல சீர்திருத்தங்களைச் செய்தார். வைதீகர்களின் ஏற்றத் தாழ்வான பிறப்பு முறைமைகளையும், சடங்கு முறைகளையும் எதிர்த்து அகிம்சையை முறைப்படுத்தினார். இவ்வாறு சமண சமய தோற்றத்தின் வரலாற்றைச் சமண சமயப் புராணங்களை அடிப்படையாகக் கொண்டு வகுத்துக் காட்டலாம்.

தமிழகத்தில் சமணம்

மகாவீரரின் சீடர்களில் ஒருவர் பத்திரபாகு என்பவராவார். இவருடைய காலம் கி.மு.317 முதல் கி.மு.267 வரை என்பர். இக்காலத்தில் இவர் சமண சமயத் தலைவராக இருந்தார். இவரே சந்திரகுப்த மௌரிய அரசனுக்கு மதகுருவாக இருந்தவர். தன்னுடைய காலத்தில் வர்க்கடம் வரப்போவதை அறிந்த இம்முனிவர் அதிலிருந்து தப்பிக்கக் கருதி பன்னீராயிரம் சமண முனிவர்களை அழைத்துக்கொண்டு தென்திசை நோக்கி வந்தார். மைசூர் நாட்டிற்கு வந்து சமணர் வெள்ளைக்குளம் எனப் பொருள்படும் இன்றயை சரவணபெலகுலா என்ற இடத்தில் தங்கினார். அங்கிருந்து தம் சீடர்களில் ஒருவரான விசாக முனிவரை அனுப்பிச் சோழ பாண்டிய நாட்டில் சமண சமயத்தைப் பரப்பினார் என்று சமண வரலாறு குறிப்பிடுகிறது. எனவே, கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் விசாக முனிவரால் தமிழ்நாட்டில் சமண சமயம் பரப்பப்பட்டது என்று மயிலை சீனி.வேங்கடசாமி அவர்கள் தம்முடைய 'சமணமும் தமிழும்' என்ற நூலில் குறிப்பிடுவார் (ப.51). இதற்கு ஆதாரமாகப் பாண்டிய நாட்டில் காணப்படுகின்ற பிராமிக் கல்வெட்டு எழுத்துக்களை அவர் சுட்டிக் காட்டுவார். இந்த ஆதாரங்களோடு தீர்த்தங்கரர்களின் வரலாற்றைக் கொண்டு அதாவது நேமிநாத தீர்த்தங்கரரின் வரலாற்றைக் கொண்டு நுண்ணிதாக ஆய்ந்து பார்த்தால் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்புகூட அதாவது கண்ணபிரான் வாழ்ந்திருந்த மகாபாரதக் காலத்தில் சமண சமயம் தமிழகத்தில் பரவியிருந்தது என்றும் கூறலாம் என்று மயிலை சீனி.வேங்கடசாமி அவர்கள் குறிப்பிடுவார்கள். எனவே, தமிழகத்தில் பரவியிருந்த பழைய சமயங்களில் ஒன்று சமணம் என்பது பெறப்படுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சமணக் காப்பியமாகச் சிலப்பதிகாரம் குறிக்கப் பெறுவதுண்டு. அக்காப்பியத்தில் சமணம் பற்றிய தத்துவக் கருத்துக்கள் பரவலாகக் காணக் கிடைக்கின்றன. சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் தம் காலத்தில் மக்களிடையே பரவியிருந்த சமயக் கோட்பாடுகளைக் கதைக்கோப்பிற்கு உறுதுணையாகக் கொண்டு பாடியிருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும். மனிதகுலத்தின் ஒருமைப்பாட்டிற்காகப் படைப்பாசிரியர் பல்வேறு சமயக் கோட்பாடுகளைத் தந்து தம் காலத்தை நினைவுபடுத்தியிருப்பது படித்து மகிழத் தக்கதாகும். ஞாயிறு, திங்கள், மாமழை ஆகிய இயற்கைத் தெய்வ வழிபாடுகளையும், சைவம், வைணவம், சத்தி வழிபாடு ஆகியவற்றையும் வடநாட்டில் தோன்றித் தென்னாட்டில் பரவிய வைதீக நெறி, சமணம், ஆசிவகம், பௌத்தம் ஆகிய சமயங்களையும் தமது காப்பியத்தில் குறிப்பிட்டுத் தம்முடைய சமயப் பொறையை வெளிப்படுத்தியுள்ளார். சமண மதத்தின் வரலாறு, பிரிவுகள் ஆகியவற்றைப் பற்றிக் கூறாது சமணத் தத்துவங்களை வெளிப்படுத்தச் சாரணர்களையும், கவுந்தியடிகளையும் பாத்திரங்களாக இடம்பெற வைத்து அறிய வைத்துள்ளார். சமண சமயத்திற்குரிய தமிழகத்துப் பெரு நகரங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவார். சமண சமயத்தின் தெய்வமான அருகன் கோயிலை நிக்கந்த கோட்டம் என்று குறிப்பிட்டு வழிபாட்டு முறைகளையும் குறிப்பிடுகின்றார்.

சமணத் தத்துவங்கள் சிலப்பதிகாரத்தில் பரந்துபட்ட அளவில் காணப்படுகின்றன. பஞ்ச பரமேட்டிகள் பற்றிய செய்திகள், ஐந்து கந்தங்கள், சாவகன் நோன்பு, கொல்லாமை, கள்ளாமை, பொய்யாமை, பிறனில் விழையாமை ஆகிய ஒழுக்க நெறிகள், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்னும் அடிப்படை நெறிகள் சிலப்பதிகாரத்தில் சமணக் கொள்கைகளாக விரிவாகக் காட்டப்பெற்றுள்ளன. என்றாலும் சமண சமயத்தின் பொதுவான கொள்கைகள் சிலப்பதிகாரத்தால் அறியப்படுகின்றனவே தவிர, சமணப் பிரிவுகளைப் பற்றிய செய்திகளை அறிய முடியவில்லை.

ஆனால், சமண சமயத்தில் தமிழகத்தில் நிலவிவந்த நிகண்டவாத சமணம் பற்றிய செய்திகள் மணிமேகலையில் தனித்துக் கூறப்பெற்றுள்ளன. கி.பி.நான்காம் நூற்றாண்டில் தென்னாட்டிற்கு வருகை தந்த சமண முனிவர்கள் பத்திரபாகு கூட்டத்தார் என அழைக்கப்பெற்றனர். இவர்கள் ஆடையும் மிகை என்ற நிலையில் நிர்வாணமாய் வாழ்ந்தவர்கள். திசையையே ஆடையாகக் கொண்டவர்கள். எனவே, இவர்கள் திகம்பர சமணர் என அழைக்கப்பெற்றனர். தென்னாட்டிற்கு வாராது வடநாட்டிலேயே தங்கிவிட்ட சமணத் துறவியர் தூலபத்திரர் குழுவைச் சார்ந்தவர் ஆவர். அவர்கள் வெள்ளாடை உடுத்த வேண்டும் என்ற கொள்கையை உடையவர்கள். அவர்கள் சுவேதம்பர சமணர் என்று அழைக்கப்பட்டனர். இந்த இரு பிரிவுகளில் திகம்பர சமணப் பிரிவே தென்னாட்டில் வாழ்ந்து சமணத் தத்துவங்களைப் பரப்பிற்று. அந்த அடிப்படையில் மணிமேகலைக் காப்பியத்தின் சமயக் கணக்கர் திறம் உரைத்த காதையில் திகம்பர சமணராம் நிகண்டவாதியின் மூலம் சமணத் தத்துவங்கள் கூறப்பெற்றுள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மணிமேகலையால் அறியப்படும் நிகண்டவாத சமணத் தத்துவங்களின் சுருக்கம் பின்வருமாறு.

தேவேந்திரனாலும் தொழப்பெறுகின்ற சிறப்பை உடைய அருகனே எங்கள் கடவுள். அவன் அருளிய நூல் அங்க ஆகமம், பூர்வ ஆகமம், பகு சுருதி ஆகமம் என்ற மூன்றுமாம். அவற்றில் கூறப்படும் பொருள்களாவன - தன்மாத்திக் காயமும், அதன்மாத்திக் காயமும், காலமும் ஆகாயமும், அறிவற்ற உயிரும், நுண் அணுக்களும், நல்வினைகளும், தீவினைகளும் அந்த இருவகை வினைகளால் செய்து கொள்கின்ற கட்டும், வினையை ஒழித்தலால் உண்டாகின்ற வீடும் பத்துவகைப் பொருள்களைப் பற்றியதாகும்.

பத்துவகைப் பொருள்களோடு அவற்றின் நிலையுற்ற தன்மையும், நிலையில்லாத தன்மையும் அறிய வேண்டுவதாகும். பத்துப் பொருள்கள் ஒருகணத்தில் தோற்றமும் நிலையும் கேடும் ஆகிய மூன்றினையும் எய்தும் என்றும் கூறப்பெற்றுள்ளது. வேம்பின் வித்து வேம்பாகவே முளைத்து வளர்வது, அதன் நிலையுற்ற பண்பாகும். முளையின் கண் விதை காணாது அழிதல் நிலையாமை ஆகும். உயிரானது பழ வினையால் தனக்கு எய்திய உடம்போடு இரண்டறக் கலந்து கெடாத சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புலன்களை நுகரும். உயிரல்லாத ஓர் அணு புற்கலம் எனப்படும். இவ்வணுவே உயிருக்கு உடம்பாகவும், ஐம்பெரும் பூதங்களாகவும் திரண்டுள்ள புறப்பொருளாகவும் விளங்கும். முன்பு செய்யப்பட்ட பழவினைகளை நுகர்ந்து அவற்றாலாகிய கட்டை அவிழ்த்துவிடுதல் வீடாகும் என்று நிகண்டவாதியின் தத்துவங்கள் கூறுகின்றன.

சைவ சமய சாத்திர நூலான சிவஞான சித்தியாரில் நிகண்டவாதத் தத்துவங்களை எட்டு பாடல்களில் அருணந்தி சிவாசாரியார் குறிப்பிடுகின்றார். அவை பின்வருமாறு.

பாடல் - 1

மணம் பொருந்திய மலர்களை உடைய அசோக மரத்தைத் தெய்வமாகப் பேணி நான்கு மறைகளோடு மாறுபட்டுத் தவத்தைப் பேணவேண்டும் என்ற ஆசையால் உடை உடுத்துவதை விடுத்து, நாள்தோறும் குளிக்காததால் உடலில் மாசு அடைந்து இல்லறமாகிய நல்லறத்தைத் துறந்து, வயிறார உண்டு உடம்பைப் பாயால் மூடி, மயிற் பீலியைத் தாங்கிக்கொண்டு, தமது ஒழுக்கத்தை உயர்ந்தது என்று கூறிக் கொள்பவர் நிகண்டவாதி ஆவர்.

பாடல் - 2

தங்கள் இறைவனாகிய அருகதேவன் கேடற்ற அனந்த ஞானம் முதலிய எட்டு நற்குணங்களையும் தன்னிடத்தில் கொண்டவன். எட்டு நற்குணங்கள் எல்லையற்ற அறிவு, எல்லையற்ற காட்சி, எல்லையற்ற ஆற்றல், எல்லையற்ற இன்பம், பெயரின்மை, கோத்திரம் இன்மை, ஆயுள் இன்மை, அழிவின்மை ஆகிய குணங்களாகும். இறைவன் திங்களைப் போல விளங்குகின்றவன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வானவர்கள் அவனை வந்து வணங்குகிறார்கள். தீக்குணங்கள் நெருங்க ஒட்டாமல் ஒழித்தவன், நெடிய காலம் வாழுகின்ற பெருமை உடையவன்.

பாடல் - 3

அருகதேவன் ஐம்பொறிகளால் வருகின்ற தொடர்ச்சியைத் தன்னிடத்தில் முற்றிலும் பற்றாது ஒழித்தவன். மூன்று காலங்களிலும் நிகழ்கின்றனவற்றைத் தன்னுடைய எல்லையற்ற அறிவினால் ஒரு கணத்தில் அறியக்கூடிய தவத்தை உடையவன். தன்னைப் பொருந்தி நின்று வழிபாடு செய்தவர்களுக்கும், தன்னிடத்தில் மாறுபாடு கொண்டவர்களுக்கும் ஒரே தன்மையாக அருள் வழங்குபவன்.

பாடல் - 4

பசி, வேட்கை, அச்சம், மாச்சரியம், உவகை, மோகம், சிந்தனை, பழித்தல், நோய், இறப்பு, வியர்வை, துயரம், அகந்தை, வியப்பு, அனுபவம், பிறப்பு, உறக்கம் ஆகிய அனைத்தையும் முற்றிலும் ஒழித்தவன். அருகதேவன் பொன் எயில் வட்டத்திலிருந்து தன்னைச் சார்ந்து ஒரு சொல் அருளுக என்று வேண்டியவர்க்கு வேண்டியவாறே அருள் பாலிப்பவன்.

பாடல் - 5

அருகதேவன் தான் வாய் மலர்ந்து சொன்ன கொள்கைகளை விளக்குபவை சரணம், யோகம் எனும் நூல்களாகும். அவற்றின் வழி ஒழுகி உலக மக்கள் மயக்கத்தினின்று விடுபட வேண்டும் என்பது அவனது நோக்கம். காலம், உயிர், தன்மம், அதன்மம், புண்ணியம், பாவம், விண்ணகம், புற்கலம், பந்தம், வீடு ஆகிய பத்தும் ஒருவராலும் படைக்கப்படாத அநாதியாகும்.

பாடல் - 6

காலம் - நிகழ்வு, இறப்பு, எதிர்வு என மூன்று வகைப்படும். இக்காலத்திற்கு உடலைப் பொருந்தி வாழும் உயிர் கட்டுப்பட்டதாகும். உயிர் என்பது உடல் முழுவதும் நிரம்பியிருப்பது. உடலோடு பொருந்தியிருக்கும் இந்த உயிர் குழந்தை, இளமை, முதியவன் என்ற பல படிகளை வளர்ச்சி க்கேற்பக் கொண்டு அறிவைப் பெற்று விளங்குவதாகும்.

பாடல் - 7

தன்மாத்தி காயம் என்பது முற்பிறவியில் செய்த புண்ணியத்தின் பயனாக எடுத்த உடலைக் குறிக்கும். உடலைப் பெற்றவர்கள் மேலும் புண்ணியத்தைச் செய்கின்ற இயல்பைப் பெற்றவர்கள் ஆவார்கள். ஆதலால் மேலும் இந்த உடம்பு தோன்றாதபடி பல புண்ணியங்களைக் கொண்டு அமையும். அதன்மத்தி காயம் என்பது அதன்மம் (பாவம்) உடம்புக்குக் காரணமாய் அமைந்து மேலும் மேலும் பிறவிகள் எடுக்கும் வண்ணம் அதை நிலைநிறுத்தும். எனவே, புண்ணியம் தன்மாத்திகாயம் பெறுவதற்குக் காரணமாகும். பாவம் அதன்மாத்தி காயம் பெறுவதற்குக் காரணமாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பூதங்களில் ஒன்றாகிய வான் எல்லாப் பொருளும் இயங்குவதற்கு இடங்கொடுக்கும்.

பாடல் - 8

வானினின்று தோன்றுவது புற்கலமாகும். புற்கலம் என்ற சொல் சடப்பொருளைக் குறித்து நிற்கும். உருவமாய்த் திரண்டு இரும்பு, கல், மரம் என்ற பெயர்களைப் பெற்று, உலகில் விளங்குகின்ற பொருள்கள் எல்லாம் புற்கலப் பொருள்கள் ஆகும். புற்கலப் பொருள்களில் உள்ள மணம், சுவை, உருவம், ஊறு, ஓசை, பரிணாமம் என்ற அறுவகைப்பட்ட பொருள்களாகும். கட்டுக்களை விட்டு நீங்குவது தவம் எனப்படும். தவத்தை மேற்கொள்ளுவதினால் வருகின்ற பயன் எப்பொழுதும் நிலைபெற்று வளர்வதாகும். அந்த வளர்ச்சிதான் உயிரைப் புண்ணிய பாவங்களை அனுபவிக்க வைக்கும். இறுதியில் தவத்தின் பயனாக உயிரானது கட்டுக்களிலிருந்து விடுபட்டு வீடுபேற்றை அடையும்.

இவ்வாறு அருணந்தி சிவாசாரியார், தம்மால் அறியப்பெற்ற நிகண்டவாத சமயங்களைப் பற்றிய கருத்துக்களைத் தொகுத்தளித்துள்ளார்.

சங்க இலக்கியத்தில் சமணம்

சமண சமயத்தின் தோற்றத்தை கி.மு. எட்டாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை கொண்டு செல்வதால் சங்க இலக்கியத்தில் பரவலாகச் சமணக் கொள்கை காணப்படுவது பொது மரபாகும். சங்க காலத்திலேயே சமணமதப் பள்ளி இருந்ததை மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது.

"பூவும் புகையும் சாவகர் பழிச்சச்
சென்ற காலமும் வரூஉம் அமையமும்
இன்றிவண் தோன்றிய ஒழுக்கமுடன் நன்குணர்ந்து
வானமும் நிலனும் தாமுழுது உணரும்
சான்ற கொள்கைச் சாயா யாக்கை
ஆன்று அடர்ந்து அறிஞர் செறிந்தனர் நோன்மார்
கல் பொளிந்தன்ன இட்டுவாய்க் கரண்டை
பல்புரிச் சிமிலி நாற்றி, நல்குவரக்
கயம் கண்டன்ன வயங்குடை நகரத்துச்
செம்பு இயன்றன்ன செஞ்சுவர் புனைந்து
நோக்குவிசை தவிர்ப்ப, மேக்குயர்ந்து ஓங்கி
இறும்பூது சான்ற நறும்பூண் சேர்க்கையும்" *(மதுரைக்.476-487)*

இம்மதுரைக்காஞ்சிப் பாடல், குளிர்ச்சி உடைய குளத்தைக் கண்டாற் போன்ற குளிர் நிழல் உடையதாய், செம்பால் செய்தல் ஒத்த செம்மையான சுவர்களில் சித்திரம் எழுதி, கண் பார்க்கும் நிலைக்கு அப்பால் மேல் நிலம் உயர்ந்து, மலைகள் பலவும் திரண்டு விளங்குவன போலத் தோற்றம் உயர்ந்து, வண்டுகள் படியும்படி தேனிருந்த தோற்றத்தை உடைய பூக்களையும், புகையினடியும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஏந்தி, விரதம் கொண்டோர் துதிக்க, விளங்குதலை உடைய அருகதேவன் கோயிலிடத்தே தமக்கு அமைந்த விரதங்களையும், அவ்விரதங்களுக்கு இளையாத உடலினையும் உடையவராய், தேவர் உலகையும், அதன் செய்கைகளையும் மற்று எல்லா உலகங்களின் செய்திகளையும் தம் நெஞ்சால் அறிதற்குக் காரணமான கல்விகளை உடையவராய், களிப்பின்றி அடங்கின அறிவினை உடையவராய், சென்ற காலத்தையும் வருகின்ற காலத்தையும் இன்று இவ்வுலகில் தோன்றி நடக்கின்ற ஒழுக்கத்தோடு மிக உணர்ந்து உலகத்தார்க்குச் சொல்லுதல் அமைந்து, தவத்திற்குச் சிறிய வாயை உடைய குண்டிகையும் உறியிலே தூக்கி வாழுகின்ற அதிசயம் அமைந்த நரிய பூக்களைக் கொண்ட அமணப் பள்ளியும் (அங்கிருந்தது) என்பது பொருளாகும். இதன் மூலம் சமண முனிவர்கள் வாழுமிடமாகிய பள்ளியைப் பற்றியும், சமண முனிவர்களின் கடவுளைப் பற்றியும், சமண முனிவர்களின் தோற்றம் பற்றியும், அம் முனிவர்களின் கல்வியறிவு பற்றியும், முக்காலம் உணர்கின்ற தவம் பற்றியும், அவர்களின் தவம் சிறந்திருந்தமை பற்றியும், அத்தவத்திற்கு இளைக்காத உடம்பைப் பற்றியும், ஒழுக்கம் பேணுகின்ற குணம் பற்றியும், அவர்கள் கையில் கொண்டிருக்கும் குண்டிகை, உறி ஆகியவை பற்றியும் அறியமுடிகிறது. எனவே, சங்ககாலத்தில் அமைந்திருந்த சமணர் வாழ்வியல் நன்கு புலனாகின்றது.

சமண மதத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று நிலையாமை ஆகும். நிலையாமையைச் சமண மதம் அன்றிப் பௌத்தம், சைவம் போன்ற மதங்கள் கூறினாலும் சமண மதம் அதனை மிகவும் வலியுறுத்திய மதமாகும். எனவே, சங்க இலக்கியங்களில் இடம்பெற்றிருக்கும் நிலையாமை பற்றிய பாடல்களைச்சமண மதச்சாயல்களைப் பெற்ற பாடல்களாகக் கொள்ளுவதில் தவறில்லை. பொருள் நிலையாமையை அறிவுடை நம்பியின் நற்றிணைப் பாடலில் காணமுடிகிறது. மேலும், சிறைக்குடியாந்தையார் பாடிய,

"பொருளே
வாடாப் பூவின் பொய்கை நாப்பண்
ஓடுமீன் வழியிற் கெடுவ" *(நற்.16:4-6)*

என்னும் நற்றிணைப் பாடல், பொருளினுடைய நிலையாமையை எடுத்துக் கூறுகின்றது. மேலும், கலித்தொகையில்,

"நரம்பு அறூஉம்
யாழினும் நிலையிலாப் பொருளையும் நச்சுப" *(கலி.8:10-11)*

என்ற பகுதியும் பொருளின் நிலையாமையை எடுத்துக் கூறுகின்றது. அதுபோலக் குறுந்தொகையும்,

"மலையுடைக் கான நீந்தி
நிலையாப் பொருட்பிணிப் பிரிந்திசி னோரே" *(குறுந்.350:7-8)*

என்று நிலையாமையை எடுத்துக் கூறுகின்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அடுத்து சமணசமயத்தின் மற்றொரு பகுதியானதவம் மேற்கொள்ளுதலும், வடக்கிருந்து உயிர் துறத்தலும் சங்க இலக்கியப் பாடல்களில் ஆங்காங்கு காணப்படுகின்றன. தமிழரின் பொதுவான பண்பு, இல்லறத்தில் ஈடுபட்டு இன்பம் முற்றித் துறவறத்திற்குச் செல்லுதலாகும். தமிழர் வாழ்வு இலக்கண மரபு என்றாலும் சமணத் தலைவர்கள் தங்கள் தொண்டர்களுக்குத் தவத்தின் பெருமையை எப்பொழுதும் எடுத்துக் கூறி, தவ நோன்பு இருக்கச் செய்து முக்காலமும் அறிகின்ற ஆற்றலைப் பெற வைத்தார்கள். அத்தவ நிலையைச் சங்க இலக்கியங்களில் பெரிதும் காணமுடிகின்றது. குறுந்தொகையில்,

"தன்னையர் தந்
நிணஊண் வல்சிப் படுபுள் ஓப்பும்
நலம்மாண் எயிற்றி போலப் பலமிகு
நன்னல நயவரவு உடையை
என்நோற் றனையோ மாவின் தளிரே" *(குறுந்.365)*

என்ற பாடல் தவத்தின் மேன்மையை உணர்த்துகின்றது.

நோன்பு கொண்டோரே தலைமைக்குரியவராவர் எனும் பொருள்படும்படி,

"யாவரும் பிறரும் அமரரும் அவுணரும்
மேஅரு முதுமொழி விழுத்தவ முதல்வரும்
பற்றா கின்று நின் காரணமாகப்" *(பரி.8:8-10)*

என்று பரிபாடல் குறிப்பிடுகின்றது. இதன் மூலம் தவம் செய்து உயர்ந்தோரே முதன்மையானவர் என்பது பெறப்படுகின்றது. இல்லறத்தைவிடத் தவமே சிறந்தது என்பது சமணர்தம் கொள்கையாகும். இக்கருத்தைக் கீழ்வரும் புறநானூற்றுப் பாடல் வலியுறுத்துகின்றது.

"வையமும் தவமும் தூக்கில் தவத்துக்கு
ஐயவி அனைத்தும் ஆற்றாது ஆதலின்
கை விட்டனரே காதலர்ம." *(புறம்.358:3-5)*

உலகியலாகிய இல்லறத்தையும் தவ வாழ்வாகிய துறவறத்தையும் சீர்தூக்கினால் தவத்திற்கு வையம் சிறு கடுகளவும் நேர்படாது. எனவே, வீடுபேறைக் காதலித்தவர்கள் இல்லறத்தைக் கைவிட்டனர் என்பது பொருளாகும். இப்பாடற் பகுதியோடு "இலர் பலராகிய காரணம் நோற்பாற்/ சிலர்பலர் நோலா தவர்" (திருக்குறள்.270) என்ற திருக்குறளை ஒப்பிட்டுக் காணலாம். இதுபோன்ற தவப்பெருமை கூறும் சங்க இலக்கியப் பாடல்கள் சமணக் கொள்கை சார்பாக அமைந்தன என்று கூறுவதில் தவறில்லை எனலாம். சமணக் கொள்கையில் அடுத்து இடம்பெறுவது வடக்குத்திசை இருந்து உண்ணா நோன்பு கொண்டு உயிர் நீத்தல் ஆகும். இச்செயலைச் சமணம் சல்லேகனை எனக்குறிப்பிடும். இதன் பொருள் உண்ணா நோன்பிருந்து உயிர்விடுவது என்பதாகும். அருங்கலச் செப்பு எனும் சமணநூல்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"இடையூறு ஒழிவில் நோய் மூப்பு இவை வந்தால்
கடை துறத்தல் சல்லே கனை" *(அ.செப்பு.145)*

என்று குறிப்பிடும். சல்லேகனை இருக்கும் பொழுது எதனையும் மனதில் நினைக்காது, தீர்த்தங்கரர் அல்லது அருகரைத் தியானித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பது விதியாகும். இவ்வாறு உயிர்விடுதல் தற்கொலை ஆகாது என்பதை நீலகேசி குறிப்பிடுகின்றது.

"அழிவு காலத் தறத்தொடர்ப் பாடெலாம்
ஒழியல் வேண்டுமென்று ஒற்றுமை தாம்கொளீஇ
வழியும் காட்டும் அம்மாண்புடை யார்கள்மேல்
பழியும் இங்கிட்டுரைத் தாற்பயன் என்னையோ?" *(நீலகேசி. 320)*

என்பது பாடலாகும். இப்பாடலின்படி சல்லேகனை தவத்தின் மேன்மையாகும் என்பது பெறப்படுகிறது. வடக்கு நோக்கி அமர்ந்து தவம் இருந்ததால் சல்லேகனை தமிழில் வடக்கிருத்தல் என்ற பெயர்பெற்றது. சங்ககாலத்தில் இப்பழக்கம் பரவியிருந்தது. சமண சமயத்தவர் மட்டுமின்றி அச்சமயம் அல்லாதவர்களும் வடக்கிருந்து உயிர்விட்ட செய்தி சங்க நூல்களில் காணப்பெறுகிறது. சேரமான் பெருஞ்சேரலாதன் வடக்கிருந்து உயிர்விட்ட செய்தி புறநானூறு 65, 66-ஆம் பாடல்களில் காணப்படுகிறது. பெருஞ் சேரலாதன் வடக்கிருந்தமைக்குக் காரணம் புறப்புண் ஏற்பட்டதால் ஆகும். அதுபோலக் கோப்பெருஞ்சோழன் தன் மக்கள் தன்மீது போர் தொடுத்ததால் வடக்கிருந்து உயிர் துறந்தான் என்ற செய்தி புறநானூற்றின் (212) முதல் பத்துப் பாடல்களில் குறிக்கப்பெற்றுள்ளது. சங்கப் புலவர் கபிலரும் தன் இறுதிக் காலத்தில் வடக்கிருந்து உயிர் துறந்தார் என்ற செய்தியும் உள்ளது. எனவே, சல்லேகனை என்ற வடக்கிருத்தல் பண்பு தமிழகத்தில் சங்க காலத்தில் பரவியிருந்தது என்பதும் அது சமணர்களிடம் மட்டுமல்லாது மற்ற மக்களிடமும் பரவியிருந்தது என்பதும் பெறப்படுகின்றது.

சங்க காலத்திற்குப் பிறகு கி.பி.6, 7-ஆம் நூற்றாண்டுகளில் சமணம் செல்வாக்குப் பெற்றிருந்ததைத் திருநாவுக்கரசர் தேவாரத்திலும் பெரியபுராணத்திலும் காணமுடிகிறது. இவ்வாறு இந்திய மெய்ப்பொருள் கொள்கைகளில் ஒன்றான சமண சமயம் சைவ சித்தாந்த சாத்திரங்களில் மறுப்பதற்கு உரிய சமயமாகச் சங்க காலந்தொட்டு இன்றுவரை பரவியிருந்தது என்பதை உணரலாம்.

4. ஆசீவக மதம்

இந்திய மெய்ப்பொருளியல் வரலாற்றில் ஆசீவக மதம் தனி ஒரு மதமாக வைத்து ஆராயப்படவில்லை. சமண மதத்தின் மற்றொரு பகுதியாகக் கொண்டே ஆராயப்பெற்றது. பின்னர் ஆதாரங்கள் கிடைக்கக் கிடைக்க ஆசீவக மதத்தின் தனித்தன்மை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. வேதங்களைப் புறக்கணித்த நெறிகளில் ஆசீவக நெறியும் ஒன்றாகும். சிந்து நாகரிகம் அழிந்தபின் வேத நாகரிகத்தைச் சார்ந்த ஆரியர்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேள்விகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் சிறுதெய்வ வழிபாட்டில் சமயக் கொள்கைகளைக் கொண்டுவந்தனர். பலியிடுதல், அதாவது உயிர்க்கொலை செய்தல் மக்கள் இயல்பு போல் பரவத் தொடங்கியது. இதனை எதிர்த்து அன்பு, கருணை, கொல்லாமை ஆகியவற்றை வலியுறுத்தி மக்களை நன்னெறியில் கொண்டுசெல்ல முனைந்தனர். உபநிடத நெறி வலியுறுத்தும் ஒரு கடவுள் உண்மை வாதத்தையும் உடன்படாது, இயற்கைக்கு மாறுபட்ட தத்துவங்களையும் ஏற்றுக் கொள்ளாது, சமணமும் பௌத்தமும் பூதங்களின் சேர்க்கையையும், காணமுடியாத கடவுள் வணக்கத்தை மறுத்தும் தங்கள் கொள்கைகளைப் பரப்பின.

சமணத் தலைவர்களாம் தீர்த்தங்கரர்களில் வர்த்தமானரின் சீடராக விளங்கியவர் மற்கலி என்பது ஒருசிலர் கொள்கை. ஆயின் பேராசிரியர் சோ.ந.கந்தசாமி அவர்கள், தம்முடைய இலக்கியத் தத்துவக் களஞ்சியம் தொகுதி - 1இல் மற்கலி, மகாவீரர், புத்தர் ஆகிய மூவரும் சமகாலத்தவர் என்றாலும் மற்ற இருவருக்கும் மூத்தவர் மற்கலியே என்று குறிப்பிட்டு, ஆசீவக மதம் அவரால் தோற்றுவிக்கப்பட்ட தனி மதம் என்பார். மற்கலியே மூத்தவர் என்பது பாலி பிடகங்களாலும், சமண சூத்திர நூல்களாலும் அறியப்படுகிறது என்பார். மேலும், மணிமேகலையில் சமயக் கணக்கர் தம் திறம்கேட்ட காதையில் ஆசீவகம் பற்றிய கொள்கை இடம்பெற்ற பிறகே நிகண்டவாதம் எனப்படும் சமணநெறி இடம் பெற்றிருப்பதும் இதனை வலியுறுத்தும் என்பார். தொல்காப்பிய எழுத்ததிகார உரையில் நச்சினார்க்கினியர் ஆசீவகப் பள்ளி கூறிய பிறகே சமணர்க்கு உரிய நிக்கந்த கோட்டம் என்ற பெயரைக் குறிப்பிடுவார் என்பதையும் ஆதாரமாகக் காட்டுவார். மேலும், பிடக நூலிலும் ஆசீவக ஆசிரியரை அடுத்துச் சமணத் தலைவர் நிகண்டநாத புத்தர் குறிக்கப் பெற்றிருப்பதையும் சான்றாகக் காட்டுவார். இத்தகைய குறிப்புகளை எடுத்துக்காட்டிப் பேராசிரியர் சோ.ந.கந்தசாமி அவர்கள், தொடக்க நிலையில் மகாவீரருடன் நண்பராய் இருந்து பின்னர் அவருடன் முரண்பட்டு மற்கலி தனித்து விளங்கித் தன் கொள்கைகளைப் பரப்பினார் என்று குறிப்பிடுவார்.

ஆசீவகத்தின் கொள்கைகள் தனியொரு நூலாகக் கிடைக்கப் பெறவில்லை. அம்மதத்தை மறுப்போரின் செய்திகளில் இருந்தே அவர்தம் கொள்கைகள் கிடைக்கின்றன. ஆசீவகம் என்ற சொல்லுக்குப் பொருளாக சோ. ந. கந்தசாமி அவர்கள் பல ஆய்வாளர்களின் கருத்துக்களைத் தருகின்றார்.

1. நீலகேசியில் தொழில் பல செய்து உயிர் வாழ்பவன் என்ற கருத்தில் "அருகு இருந்தார், தாம் அறிய ஆசீவகனை" எனும் தொடர் காணப்பெறுகிறது. சமய திவாகரர் ஆசீவகன் - ஜீவிக்கின்றவன் எனப் பொருள் செய்துள்ளார்.

2. பர்னோஃப் என்பார் ஜீவ - வாழ்க்கை, அ - ஜீவ - வாழ்வின்மை, ஆதலின் பிறர் தயவில் பிச்சை ஏற்று வாழும் துறவி எனப் பொருள் கொண்டார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3. லேசன் என்பார் ஜீவனை உண்ணாதார் (புலால் மறுத்தவர்) ஆசீவகன் எனப் பொருள் உரைத்தார்.
4. ஹார்ன்லே என்பார் ஆசீவக என்ற சொல் வாழும் முறை - இல்லறத்தார் ஆயினும் துறவறத்தார் ஆயினும் பின்பற்றும் வாழ்க்கை முறையினை உரைக்கும்நெறி என்று விளக்கம் கொண்டார்.

இந்த நான்கு செய்திகளையும் குறிப்பிட்டுத் தனக்கு முன்பே வழங்கி வந்த கொள்கையினை ஆசீவகம் என்ற பெயரில் மற்கலி உருவாக்கினார் என்று குறிப்பிடுவார்.

மெய்யியல் சார்ந்த ஒரு சிந்தனைப் பள்ளியே ஆசீவகம் என்பதாகும். பௌத்தம், சமணம் போல சமய வடிவம்கொண்டு ஆசீவகம் திகழ்ந்தாலும் அதன் உள்ளடக்கம் சாங்கியம், யோகம், உலகாயதம் ஆகியவற்றைப் போலவே முழுமையான அறிவியல் ஆகும் என்பது க. நெடுஞ்செழியன் அவர்களின் கருத்து (மேலும், பூரணர், மற்கலி, பக்குவர் ஆகிய மூவரும் இணைந்து ஆசீவகத்தை உருவாக்கினர் என்றும் குறிப்பிடுவார்.).

ஆசீவகத்தின் கொள்கைகளில் முதன்மையானது நியதிக் கொள்கையாகும். மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஆற்றல்களால் மனிதர் செயல் தீர்மானிக்கப் படுகிறது என்ற பொருளில் நியதிக் கொள்கையை ஆசீவகம் கொண்டது. வினைக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுகிற ஆசீவகம், வினைகள் மனிதன் இன்ப துன்பத்தை ஆக்கவில்லை என்றும் மொத்த ஆற்றலுடைய இருவர் புரியும் ஒரே வினை ஒருவர்க்கு இன்பமும், இன்னொருவருக்குத் துன்பமும் தருதலின் வினைகள் பயன் தரவில்லை என்றும் நியதிப்படி தான் இவைகள் விளைகின்றன என்றும் உலக நிகழ்ச்சிகள் அனைத்தும் நியதியின் ஆற்றலால் நடைபெறுகின்றன என்றும் கருதினர். மனித முயற்சி எத்தனைதான் முயன்றாலும் ஏற்படுவதைப் போக்கவோ, இல்லாததை ஆக்கவோ இயலாது. எந்தச் செயலும் வினைகளால் தீர்மானிக்கப் படவில்லை. நியதியால் தான் முடிவு கட்டப்படுகிறது. எல்லா உயிர்களும் ஒரு கால எல்லையில் நன்மை தீமைகளைக் கட்டாயம் அனுபவித்துப் பின்னர் வேறுபாடு இன்றி ஒரு குறிப்பிட்ட கால முடிவில் விடுதலை அடையும் என்பதுதான் ஆசீவகத்தின் நியதிக்கொள்கை ஆகும். அதாவது ஒவ்வொரு உயிருக்கும் இப்படித்தான் அவரவர் வாழ்க்கை முறை அமைந்திருக்கிறது. அந்த வாழ்க்கை முறையில் பல பிறப்புக்கள் வாழ்ந்து இறுதியில் விடுதலை பெறுவதுதான் நியதிக்கொள்கை என்று தன் முதன்மைக் கொள்கையை வெளிப்படுத்துகிறது ஆசீவகம்.

வினைக் கொள்கை என்பது உயிர் ஒரு காலத்தில் செய்த வினையை வினைக்குரிய இன்ப துன்பங்களை அடுத்த காலகட்டங்களில் இன்ப துன்பங்களாக அனுபவித்து, அந்த இன்ப துன்பங்களை அனுபவிக்கின்ற காலத்தில் மேலும் பாவ புண்ணியங்களைச் செய்து, அவற்றிற்குரிய வினைகளையும் சேர்த்துக் கொண்டு இவ்வாறு பல பிறப்புக்களில் சேர்த்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வினைகளின் அடிப்படையில் இன்ப துன்பத்தை எடுக்கின்ற பிறவிகளில் அனுபவிப்பது என்பதாகும். ஆனால், நியதிக் கொள்கையோ ஒவ்வொரு உயிருக்கும் ஒவ்வொரு வாழ்வியல் முறை உண்டு. அந்த நியதிப்படி வாழ்வதுதான் வாழ்க்கை முறை. அந்த நியதியில் இன்ப துன்பங்களை அனுபவித்து இறுதியில் வேறுபாடின்றி ஒரு குறிப்பிட்ட கால முடிவில் விடுதலை பெறுவதாகும்.

அடுத்ததாக ஆசீவகத்தில் இருப்பது சுபாவ வாதக் கொள்கை ஆகும். பிரசின வியாக்கரண உரை இக்கொள்கையைக் குறிப்பிடும் பொழுது அண்டம் என்பது அதன் சுபாவத்தால் தோற்றப்பட்டது. மேலும், ஒவ்வொரு பொருளும் அதனதன் சுபாவம் ஒன்றினாலே வெளிப்படும் என்று ஆசீவகர் கருதினர் என்று கூறப்பட்டுள்ளது. இதனை விளக்கும்பொழுது முள்ளுக்குக் கூர்மையும், விலங்கு பறவைகளுக்கு வெவ்வேறு பண்புகளும் அமைத்தது யார்? (யாருமில்லை) அவ்வவற்றின் சுபாவத்தால் அமைந்துள்ளன, எனவே, எந்த உயிரும் தன்னிச்சையாகத் தம் பண்புகளைத் தம் முயற்சியால் ஏற்படுத்திக்கொள்ள முடியாது. ஒவ்வொரு உயிரும் தாம் ஆற்ற வேண்டிய கடமைகளைப் புரிந்துகொண்டு அவற்றைச் செயல்படுத்துவதுதான் சுபாவக் கொள்கை ஆகும். நியதிவாதக் கொள்கை என்பது உயிரைக் கட்டுப்படுத்த இயல்பாகப் புறம்பே தோன்றிய ஆற்றலாகும். சுபாவவாதக் கொள்கை என்பது உயிருக்கு உள்ளே பொதிந்து கிடக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவது ஆகும்.

உயிர் உய்தி பெறுவதற்குக் குறுக்கு வழிகளை மேற்கொள்ளக் கூடாது. நியதிக்காகக் காத்திருக்க வேண்டும். உயிர் அனுபவிக்கும் இன்ப துன்பத்திற்குக் காரணம் நியதியே தவிர, வேறு எதுவும் இல்லை. இன்ப துன்பத்தை அனுபவித்து மாறி மாறிப் பிறத்தலால் உயிர் தூய்மை பெறுகிறது. எனவே, ஒவ்வொரு உயிரும் எதிர்கால நிகழ்விற்கு ஆசைப்பட வேண்டியதில்லை என்பதும் ஆசீவகர் கொள்கை ஆகும்.

இந்தியத் தத்துவங்களில் அணுக் கொள்கையை முதன் முதலில் கையாண்டவர்கள் ஆசீவகர் ஆவர். ஓர் அணு ஓர் அணுவில் புகாது. பல அணுத் திரள்கள் இணைவதால் ஒரு பொருள் உண்டாகின்றது. அதாவது ஆகாயம் தவிர நான்கு பூதங்களின் அணுக்கள் சேர்ந்துதான் ஒவ்வொரு பொருளும் உண்டாகின்றது. அவ்வாறு சேரும்பொழுது நான்கு பூதங்களில் எந்தப் பூத அணு மிகுதியாகச் சேர்ந்திருக்கிறதோ அந்தப்பொருள் அப்பெயரினைப் பெறும். மேலும், தனித்த ஒரு அணு என்பது உயிர்களுக்குப் புலப்படாது. அணுத்திரள்களின் பொருள்தான் உயிர்களின் கண்களுக்குப் புலப்படும். இவ்வாறு ஆசீவகரின் கொள்கைகள் இன்றைக்கு வெளிவந்திருக்கும் நூல்களில் சுட்டிக்காட்டப் பெற்றுள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மணிமேகலையில் ஆசீவகக் கொள்கை

இந்திய மெய்ப்பொருளியலில் இடம்பெற்ற மதங்களில் தமிழகத்தில் பரவியிருந்த மதங்களைப் பற்றிய செய்திகளைத் தருவதில் முதன்மைபெற்றது மணிமேகலையாகும். மணிமேகலையில் சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதையில் ஆசீவக மதம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

மணிமேகலை ஆசீவக மத நூலை நன்கு கற்றுணர்ந்த புராணன் என்னும் தலைவனை அணுகி உன்னுடைய இறைவன் யார்? உன்னுடைய நூல் கூறும் நற்பொருள் யாது? என்று கேட்டாள். (பூரணன் - புராணன் என்று ஆயிற்று) புராணன் தன்னுடைய ஆசீவக மதக் கொள்கைகளைக் கூறத் தொடங்கினான். எல்லையில்லாமல் கிடக்கின்ற பொருள்களில் எல்லாம் அங்கிங்கெனாதபடி எங்கும் எக்காலத்தும் பொருந்திக் கிடந்து பொறிகளுக்குப் புலப்படுகின்ற அனந்த ஞானம் உடையவனாகிய மற்கலி தேவன் என்பவனே எம்மால் வழிபடுகின்ற கடவுளாவான். எமது நூலாகிய நவகதிர் என்பதன் கண் கூறப்பட்ட பொருள்கள் ஐந்தே ஆம். அவைதாம் அறிவைத் தருகின்ற உயிர் அணுவோடு நான்கு வகை அணுக்களுமாம். அவ் உயிர் அணுவானது தீண்டியும் பார்த்தும் உணர்த்திடும்படி ஊழ் கூட்டியவாறு தம்முள்கூடிப் பின் பிரிதலையும் செய்யும். நில அணு, நீர் அணு, தீ அணு, காற்று அணு எனக் கூறப்பட்ட நால்வகை அணுக்களாம். அவ்வணுக்கள் மலை எனவும், மரம் எனவும், உடம்புகள் எனவும் கூடுங்கால் கூடி ஒன்றாகத் திரள்வதனையும் செய்யும். பிரியுங்கால் வேறு வேறாகி விரிவதனையும் செய்யும். இங்ஙனம் ஆவதனை அறிவதுதான் உயிர் என்று சொல்லப்படும்.

நில அணுக்குரிய தன்மை வன்மையும் செறிவும் உயடையதாம். நீர் அணுவின் தன்மை வீழ்ச்சி உறும், சுவை உடையதும், நிலத்தைச் சேர்வதும் ஆகும். தீ அணுவின்தன்மை சுடுதலும், மேல்நோக்கிச் செல்லுதலும் ஆகும். காற்று அணுவின் தன்மை குறுக்காக இயங்கிப் பிற பொருளை அசைப்பதாம். இவை கூடிப் பிரிவதால் மரம், மலை, உடம்பு போன்றவை உருவாகின்றன. அதே நேரத்தில் ஒவ்வொரு அணுவும் தம் இயல்பில் சிறிது கெடுதலும், சிதைதலும் இல்லை. ஓர் அணு மற்றொரு அணுவில் புகுவதும் இல்லை. மேலும், இவ்வணுக்கள் இயங்குதலும் தாழ்தலும் உயர்தலும் ஆகிய செயல்களைச் செய்யும். கூடிப் பொருளாகிப் பிரியும் பொழுது நுண் அணுவாகப் பிரியும். அணுக்கள் தாம் மரங்களாகின்றன, புட்கள் ஆகின்றன, திங்கள் ஆகிறது. கூடும் பொழுது ஒன்றும் முக்காலும் அரையும் காலுமாகக் கூடும்.

அணுக்களின் தனித்த ஓர் அணுவைத் தவத்தால் கேவல ஞானம் பெற்ற தலைவரே தம் தெய்வக் கண் கொண்டு காண்பர். மற்றவர்கள் காணமுடியாது. இது எவ்வாறு என்றால் ஒளி மழுங்கிய மாலைப் பொழுதில் தனித்து ஒரு மயிரைக் காண முடியாதார்க்கு மயிர்கற்றை காணப்படுதல் போலதாம். கரிய பிறப்பு, கருநீல பிறப்பு, பசிய பிறப்பு, செம்பிறப்பு, பொன்பிறப்பு, வெண்பிறப்பு எனக் கூறப்படும் அறுவகைப் பிறப்புக்களிலும் பொருந்தி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நியதிப்படி பிறவி உட்பட்டுப் பிறந்தவர்கள் இறுதியாக வெண் பிறப்பினுள் புகுந்து வீட்டுலகைப் புகுவர். துன்பம் உற்று நெஞ்சு அழிதலை விரும்பாத மக்களே அவ்வீட்டு உலகத்தை எய்துவதற்கு உரியர்.

உயிர்கள் பிறப்பில் செம்போக்கு அமையவில்லை என்றால் கீழ் கீழ்ப் பிறப்புக்களில் புகுந்து சுழல வேண்டியதாகும். இவ்வாறு சுழல்வது மண்டலித்தல் ஆகும். உயிர்கள் பிறந்து உழலுங்கால் செல்வம் பெறுதலும், வறுமை உறுதலும் காலத்தில் தப்பாமல் வரும். பிறத்தலும் இறத்தலும் தருகின்ற பழவினைகள் தாய் வயிற்றில் கருவாகும் பொழுதே உயிரோடு கலந்துவிடும். இன்ப துன்பங்களும் அணுக்கள் என்றே கொள்ளத்தகும். ஒரு பிறப்பில் செய்த பழவினையே அடுத்த பிறப்பை ஊட்டுவதாகும் என்பன போன்றவை ஆசீவகரின் கொள்கைகளாக மணிமேகலையில் கூறப்பெற்றுள்ளன.

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

சித்தாந்த சாத்திரங்களில் ஆசீவகம்

சைவ சித்தாந்த சாத்திரங்களில் ஒன்றான சிவஞான சித்தியார் பரபக்கத்தில் ஆசீவகரின் கொள்கைகள் பத்துப் பாடல்களில் கூறப்பட்டுள்ளன. முதல் பாடலில் "அன்னதோர் வாய்மை ஆசீவகன் அமணர்களில் கூறும்" என்ற தொடர் காணப்படுகிறது. இதனால் பரபக்கம் தந்த அருணந்தி சிவாசாரியார், ஆசீவக மதத்தைத் தனியொரு மதமாகக் கொள்ளாது சமணர்களின் ஒரு பிரிவாகவே கொண்டிருக்கிறார் என்பது தெளிவாகிறது. மேலும், நிகண்டவாதியாம் சமணப் பிரிவைக் கூறியபிறகே ஆசீவகத்தைக் கூறுவதால் சமணத்தில் நிகண்டவாதிக்குப் பிறகு மற்றொரு பிரிவாக ஆசீவகம் அமைந்தமை பெறப்படுகிறது.

பாடல் - 1

ஒவ்வொரு உயிரும் தனக்கு அருளைத் தேடுவதுபோல மற்ற எல்லா உயிர்களுக்கும் அருளைச் செய்திடவேண்டும். தனது உடலை வருத்திக்கொள்வதுதான் தவம் என்பதால் தன் தலைமயிரைத் தானே பறித்துக்கொள்ள வேண்டும். உலகில் உள்ள உயிர்கள் எல்லாம் தத்தம் உடலை வருத்திக் கொள்வதுதான் உண்மையான அறமாகும்.

பாடல் - 2

வரம்பிலாத அறிவன் (கடவுள்) உரைத்த நூல்களில் கூறப்படுகின்ற பொருள் ஐந்தாகும். அவை நிலம், புனல், தீ, காற்று, ஆன்மா என்பவை ஆகும். அவை கொண்டுள்ள தன்மையைக் கூறினால் நிலம் கடினமாகும், நீர் குளிர்ச்சியாகும், தீ வெப்பமாகும், காற்று அசையும் தன்மையாகும், உயிர் அறிவுத் தன்மையாகும் (அறிவன் உரைத்த நூல் என்பதற்கு உரையாசிரியர்கள் ஒன்பது கதிர் என்ற நூலைக் குறிப்பிடுவர்).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாடல் - 3

முன்னர்க் கூறப்பட்ட ஐந்து பொருள்களில் நிலமும் நீரும் கீழ்நோக்கி விரியும். தீயும் காற்றும் மேல்நோக்கிப் படரும். உயிரானது உடம்போடு பொருந்தி நிற்கும். உடம்பை விட்டு நீங்கினால் நீரானது நிலம், நீர், தீ, காற்று இவற்றோடு தனித் தனியாகப் பொருந்தி நிற்கும். உயிர் இந்த நான்கையும் விட்டுவிட்டு உடம்பைச் செறிவாகப் பெற்ற இடத்து அதனையே இடமாகக் கொள்ளும்.

பாடல் - 4

ஆன்மாவைத் தவிர மற்ற நான்கும் ஒன்றை ஒன்று அறியும் தன்மை உடையன அல்ல. மேலும், ஒன்று கெட்டு மற்றொன்று ஆகாது. ஒன்றிடத்து மற்றொன்று புகுந்து கூடி நிற்காது. என்றாலும் உடம்பில் உயிர் பொருந்தி நிற்கும் பொழுது இந்த நான்கும் அவ்வவற்றிற்குரிய தன்மையில் பொருந்தி நிற்கும். இவை நான்கும் புதிதாகத் தோன்றுவதும் பின் அழிவதும் இல்லை. நித்தியமாம் இவை சேரும் பொழுது நான்கும் சேர்ந்து கூடுமே தவிர, தனித்தனியாகக் கூடுவதில்லை. என்றைக்கும் அழிவதும் இல்லை.

பாடல் - 5

கூறப்பட்ட நான்கு அணுவும் தோற்றுவிக்கப்படுதல், விரித்தல், நீட்டல், குறுக்கல், குவித்தல், ஊன்றல், உண்டு தின்று உலர்த்தல், நீட்டல், உடைத்திடல் என்ற ஒன்றும் இல்லாதவையாகும். இவை இந்த உலகத்து எல்லையைக் கடந்து அப்புறத்திற்கும் போகும். வேறு வடிவமும் கொள்ளும். எக்காலத்திலும் எல்லா இடத்திலும் பரந்திருந்தாலும் அவற்றின் இயல்புகள் மாறுபடாது.

பாடல் - 6

கூறப்பட்ட ஐந்து அணுவில் உயிர் என்பது மிக நுட்பமானதாகும். கண்ணால் காணமுடியாதது. கன்ம வினையினால் தோன்றி உருவெடுத்து நிற்கும். உருவத்தோடு பொருந்தி இருந்தாலும் அவ்வுயிரை மனிதர்கள் காண மாட்டார்கள். பொன் எயில் வட்டத்தில் பதிகின்ற தேவர்களே காண்பர். தனி ஒரு அணுவாக இருக்கும் உயிர் மற்ற நான்கு அணுக்களோடு கூடிப் பல்வேறுபட்ட வடிவங்களைப் பெற்று விளங்கும்.

பாடல் - 7

ஆன்மா ஒழிந்த நிலம் முதலாகிய அணுக்கள் நான்கும் தம்முள் கூடுகின்ற பொழுது ஒன்றினை விட்டு மூன்றணு தம்முள் கூடாது. இரண்டு அணுக்களை விட்டு இரண்டு கூடாது. எனவே, கூடுமிடத்து நான்கும் கூடும். மேலும், நிலம் எனும் அணுவில் மணம், சுவை, உருவம், ஊறு என நான்கு குணங்கள் நிற்கும். நீர் அணுவில் சுவை, உருவம், ஊறு என்ற மூன்று குணங்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இருக்கும். தீயில் உருவமும் ஊறும் இருக்கும். காற்றில் ஊறு உணர்வு ஒன்றே பொருந்தியிருக்கும்.

பாடல் - 8

நிறங்கள் அறுவகைப்படும். வெண்மை, பொன்மை, சிவப்பு, நீலம், மிக்க வெண்மை, பச்சை என்பனவாகும். இந்த ஆறில் மிகுந்த வெண்மை என்னும் நிறமே பொன் எயில் வட்டத்திற்குரிய சிறப்பான வண்ணமாகும். மற்ற ஐந்தும் உயிரல்லாத அணுக்கள் நான்கினையும் அவற்றின் வடிவுகளையும் கூடிநிற்கும். இந்த வண்ணங்கள் கூடுதல் குறைதல் அமைந்து உருவங்கள் ஏற்படுகின்றன.

பாடல் - 9

வறுமை, செல்வம் முதலியன கூடுதல், அவை நீங்குதல், துன்புறுதல், இன்புறுதல், வேற்று நாடு செல்லாமை, வேற்று நாட்டில் சேர்தல், மூப்பு அடைதல், மரணம் என்று சொல்லப்பட்ட எட்டும் முற்பிறப்பின் வினையில் உள்ளதாய், கருவினில் இருக்கும்போதே பற்றிக்கொள்ளப்பட்டதாய் அமையும். எனவே, முற்பிறப்பில் செய்த வினையில் அகப்பட்டு அம்முறை மாறாமல் நியதியாக இவ்வுலக நிகழ்ச்சிகள் யாவும் நடைபெறுகின்றன.

பாடல் - 10

புண்ணியம், பாவம் என்ற இரண்டினையும் முன் கூறிய அணுக்கள் ஐந்தினோடும் சேர வைத்து உலகப் பொருள்கள் ஏழு வகைப்படும் என்று இம்மதத் தலைவன் கூறுகின்றான். எனவே, ஞானத்தின் தன்மையை அறிந்து அதிலே பொருந்தி வாழ்கின்றவர்களே பொன் எயில் வட்டத்தை அடைந்தவர் ஆவார் என்று ஆசீவகவாதியின் கொள்கைகளை அருணந்தி சிவாசாரியார் சுட்டிக் காட்டுகிறார்.

மணிமேகலையில் கூறப்பட்ட ஆசீவகனின் கொள்கைச் சார்பே சிவஞான சித்தியாரில் அருணந்தி சிவாசாரியாரால் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளது எனலாம். மணிமேகலைக் காலமாகக் கருதப்படுகின்ற கி.பி.2-ஆம் நூற்றாண்டில் நிலவிவந்த ஆசீவகனின் அணுக்கொள்கையே கி.பி.12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய அருணந்தி சிவாசாரியார் காலத்திலும் வழக்கில் இருந்தமை பெறப்படுகிறது. ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் ஆசீவகனின் கொள்கையில் பெரிய மாற்றம் ஏதும் நிகழவில்லை எனவும் தெரியவருகிறது.

சங்க இலக்கியத்தில் ஆசீவகம்

ஆசீவகத்தைத் தோற்றுவித்த மற்கலி கௌதமபுத்தர், மகாவீரர் ஆகியோரின் சமகாலத்தவர் என்பதால் ஆசீவகத்தின் கொள்கை சங்க இலக்கியப் பாடல்களில் பதிவு செய்யப்பெற்றிருப்பது இயல்பாகும். ஆசீவகரின் தனிக்கொள்கையான நியதிக்கோட்பாடு சங்க இலக்கியங்களில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காணப்படுகிறது. அதிலும் ஆசீவகக் கொள்கையை நேரிடையாகக்கூறும் சங்க இலக்கியப் பாடலாம் புறநானூறு,

"யாதும் ஊரே யாவரும் கேளீர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவது அன்றே வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னாது என்றலும் இலமே நின்னொடு
வானம் தண்துளி தலைஇ ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லல் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" *(புறம்.192)*

என்று ஆசீவகரின் நியதிக் கொள்கை உணர்த்துகின்றது என்பது இன்றயை ஆய்வாளர்களின் கருத்தாகும். நீரின் வழியே செல்லுகின்ற புணைபோல உயிர் முறைப்படுத்தப் படுகின்றது என்ற திறவோர் ஆகிய ஆசீவக மதச் சான்றோரின் கருத்து தெளிவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்ற செய்தி இடம்பெற்றிருப் பதால் ஆசீவக மதக் கொள்கை சங்க இலக்கியக் காலத்தில் இருந்தமை புலனாகிறது. இந்நியதிக் கொள்கையின் சாயல் அகநானூற்றுப் பாடலிலும்,

"கடும் புனல் மலிந்த காவிரிப் பேரியாற்று
நெடுஞ்சுழி நீத்தம் மண்ணுநீர் போல" *(அகம்.62:9-10)*

என்று வெளிப்பட்டுள்ளது. இதேபோல ஆசீவகரின் பூதச் சேர்க்கையைப் புறநானூற்றுப் பாடல்,

"மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித் தலைஇய தீயும்
தீ முரணிய நீரும், என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்
போற்றார் பொறுத்தலும் சூழ்ச்சியது அகலமும்
வலியும் தெறலும் அளியும் உடையோய்" *(பாடல்.2)*

என்று குறிப்பிடுகின்றது. இதில் ஐம்பெரும் பூதங்களின் குணத்தின் தன்மை கூறப்பெற்றிருப்பதால் சங்க காலத்தில் பூதங்களைப் பற்றிய எண்ணங்களுடன் ஆசீவகக் கொள்கை பின்பற்றப்பட்டுள்ளது அல்லது எடுத்துரைக்கப் பட்டுள்ளது எனலாம். மதுரைக்காஞ்சியில்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்பொடு ஐந்துடன் இயற்றிய" *(மதுரைக்.453-454)*

என்று ஐம்பெரும்பூதம் இடம்பெற்றிருப்பதும் முன் கூறிய கருத்தை வலியுறுத்தும்.

ஆசீவகரின் வினைக் கொள்கைகள் ஊழ் என்ற அடிப்படையில் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றிருப்பதாகக் கருதுவதும் உண்டு. ஊழைப்பற்றி வருகின்ற செய்திகளைக் கொண்ட சங்கப் பாடல்களை ஆசீவக மதக் கொள்கைகளாக எடுத்துக்காட்டலாம் என்றாலும், சமண, சைவ மதங்களின் அடிப்படைக் கொள்கைகளில் வினைக்கோட்பாடு தலையாயதாக அமையும். எனவே, சமணத்தின் சார்போடு விளங்கிய ஆசீவக மதத்தில் வினைக் கொள்கை இருப்பது இயல்பாகும். ஆசீவகத்திற்கு மட்டும் வினைக் கொள்கை உள்ளது என்று கொள்ளாது சமண, சைவத்திற்கும் உரியது என்று பார்க்கின்ற பொழுது, சங்க இலக்கியத்தில் காணப்படுகின்ற வினை பற்றிய பாடல்கள் மூலம் சங்ககாலத்தில் ஊழ்வினை நம்பிக்கை இருந்தமை புலனாகின்றது.

"இம்மை போலக் காட்டி உம்மை
இடையில் காட்சி நின்னோடு
உடனுறை ஆக்குக உயர்ந்த பாலே" *(புறம்.236:10-12)*

"யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே
அதனால் உயர்ந்த வேட்டத்து உயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கின் எய்தலும் உண்டு எனின்
தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்" *(புறம்.214:4-8)*

என்பன போன்ற பாடற்பகுதிகள் வினைக் கோட்பாட்டைத் தருபவையாகும். இவ்வாறு ஆசீவகக் கொள்கைகளின் சாயல்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன எனலாம்.

5. சாங்கியம்

இந்திய மெய்ப்பொருளியல் வரலாற்றில் மதங்களை, வடமொழி வேத வாக்கியங்களைப் பிரமாணமாகக் கொண்டு தம் கருத்துக்களை வலியுறுத்துகின்ற மதங்கள் என்றும் வேத வாக்கியங்களை உபநிடதங்களை ஏற்காத மதங்கள் என்றும் இரண்டு பிரிவாகக் கொள்வர். வேத உபநிடதங்களை ஏற்காத பிரிவுக்கு உலகாயதம், பௌத்தம், சமணம் ஆகியவற்றைக் குறிப்பிடுவர். அவற்றைப் பற்றிய செய்திகள் இதுவரை எடுத்துக் கூறப்பெற்றன. வேத உபநிடதங்களைப் பிரமாணமாக ஏற்றுக்கொள்ளும் பிரிவுகளில் குறிப்பிடத்தக்கன சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், மீமாம்சை, வேதாந்தம், சித்தாந்தம் ஆகியவையாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இத்தகைய மதங்களில் மிகவும் தொன்மையானது சாங்கியம். இதன் கொள்கைகளை முறையாக வெளிப்படுத்தியவர் கபிலர். மூலப்பொருளைப் பற்றிய முழுமையான அறிவைப் பேசிய காரணத்தால் இக்கொள்கைக்குச் சாங்கியம் எனப் பெயர் ஏற்பட்டது எனலாம். கபிலரின் காலம் கி.மு.8,7-ஆம் நூற்றாண்டு எனக்கருதப்படுகிறது. அவரால் கூறப்பெற்ற கொள்கைகளைக் கொண்ட நூல்கள் இப்பொழுது கிடைக்கப் பெறவில்லை. ஆனால், அவருடைய சந்தான பரம்பரை அறியப்படுகிறது. அதாவது கபிலர் தன்னுடைய மாணவர் ஆசூரிக்குக் கற்பித்தார், அவர் பஞ்சசிகா என்பவருக்குக் கற்பித்தார், அவர் கார்க்கியருக்குக் கற்பித்தார், அவர் உலூகருக்குக் கற்பித்தார். இவ்வாறு பரம்பரை பரம்பரையாக இவருடைய கொள்கைகள் கற்பிக்கப்பட்டுத் தற்பொழுது கி.பி.5-ஆம் நூற்றாண்டுக்குரிய ஈசுவர கிருஷ்ணர் என்பவரால் இயற்றப்பெற்ற சாங்கிய சாரிகை என்னும் நூல் கிடைக்கிறது. அவருடைய நூலிலிருந்து சாங்கிய மதத்தின் கொள்கைகள் ஒருவாறு வெளிப்படுகின்றன. இந்நூலுக்குக் கௌடபாதர், இராசா என்போர் உரையெழுதியுள்ளனர். கி.பி.9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வாசஸ்பதி மிஸ்ரா என்பவர் எழுதிய விரிவுரை ஒன்று தெரியவருகிறது. அதற்குச் சாங்கிய தத்துவ கௌமுதி என்ற பெயரும் சூட்டப் பெற்றுள்ளது. சாங்கிய சந்திரிகா என்ற நூலும் சாங்கியக் கொள்கைகளைத் தருவதாகக் கருதப்படுகிறது. அதுபோல சாங்கிய பிரவசன சூத்திரம், சாங்கிய சூத்திர விருத்தி, சாங்கிய சூத்திர விருத்தி சாரம் ஆகியவை சாங்கிய மதம் பற்றிய செய்திகளைத் தரும் பிற்கால நூல்களாகும். கி.பி.16-ஆம் நூற்றாண்டிற்குரிய சாங்கிய பிரவசன பாடியம் என்ற உரை நூலும், சாங்கிய சாரம் என்ற நூலும் குறிப்பிடத்தக்கனவாக விளங்கின. இவ்வாறு பிற்காலத்தில் சாங்கிய மதக் கொள்கைகளை விவரிக்கின்ற பல நூல்கள் வடமொழி, பாலி மொழிகளில் தோன்றின எனலாம்.

கீழை, மேலை நாடுகளில் மெய்ப்பொருளியல் எனும் வரலாற்று நூலில், சக்காரி முகர்ஜி எழுதிய கட்டுரையில் சாங்கியம் பற்றிய வரலாற்றுச் செய்திகளை விரிவாகத் தந்துள்ளார். பதஞ்சலியின் யோக சூத்திரத்திலும் அதற்கு வியாசர் எழுதியதாகக் கருதப்படும் பாஷ்யத்திலும் சாங்கியப் பகுப்புகள் குறித்தும், கொள்கைகள் குறித்தும் நிறைந்த வாதங்களைக் காணமுடிகிறது. மேலும், மகாபாரதத்திலும் கீதையிலும் சாங்கியச் சிந்தனைகள் பதிவு பெற்றிருப்பது அதன் மிக்க தொன்மையினை மறுக்கமுடியாத நிலையில் நிறுவுகின்ற சான்றாகும். புத்தசரிதத்தில் புத்தரும் - ஆலாராகாலாமா என்பாரிடம் சாங்கியத்தைப் பயின்றதாகக் கூறப்படும் மரபுச் செய்தியும் சாங்கியம் பௌத்தத்திற்கு முற்பட்டது என்ற கொள்கையை அரண் செய்வதாகும். நியாய சூத்திரத்திலும், பிரம்ம சூத்திரத்திலும் சாங்கியக் கொள்கையின் அடிப்படையான கருத்துக்கள் பிரிவாகக் கண்டிக்கப் பெற்றிருக்கின்றன. இது அதனுடைய தொன்மையை வலியுறுத்தும். இவற்றை எல்லாம் நோக்கும்பொழுது சாங்கியம் கி.மு. நான்காம் நூற்றாண்டிற்கு முன்னரே மெய்ப்பொருள் கொள்கை வெளிப்படுத்துவதில் முன்னணியில் இருந்தது என்று கொள்ளலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சாங்கியக் கொள்கைகளைக் கிடைத்திருக்கும் சான்றுகளின்படி குறிப்பாக அறிந்துகொள்ள முடிகின்றது. சாங்கியம் இரண்டு முடிவான தத்துவங்களை அடிப்படைப் பகுப்புகளாக ஏற்கின்றது. ஒன்று புருடன், மற்றொன்று பிரகிருதி. புருடன் என்பது ஆன்மாக்கள் அல்லது உயிர்களைக் குறிக்கும். இவ்வுயிர்கள் உறுதியான மாறாத என்றும் உள்ளவையாகக் கருதப்படுகின்றன. பிரகிருதி என்பது தனித்த ஒரு பொருள் என்றாலும் முற்றிலும் மாறான தன்மைகளின் இணைப்பு அல்லது சேர்க்கை என்று கொள்ள வேண்டும். பிரகிருதியின் அடிப்படையில் சாத்வீகம், இராசதம், தாமதம் ஆகியவை தத்தம் இயல்புகளிலும் செயல் நிலைகளிலும் ஒன்றையொன்று எதிர்த்தனவாக அமைகின்றன. இந்தப் பிரகிருதி 24-ஆம் தத்துவமாகும். இதிலிருந்து தோன்றும் காரியம் புத்தி முதல் பிருதிவி ஈறான 23 தத்துவங்கள். இந்த 24 தத்துவங்களுக்கும் நேராய், நித்தமாய், வியாபகமாய், அருவாய், முற்றுணரும் தொழில் இன்றி, அறிவு மாத்திரமாக இருக்கும் ஆன்மாக்கள் 25வது தத்துவமாகும். இந்த 25-ஆம் தத்துவமாகிய புருடன் பிருத்திவியிலும் பௌத்தத்திலும் வேற்றுமை இன்றி ஒரே தன்மையாம். புருடன் தாமரை இலை நீர்போல அனைத்துப் பொருளிலும் ஒட்டு இன்றி நிற்பான். அநாதியே புத்தியைச் சார்ந்த அவிச்சை வயத்தால் பெத்தன் எனப்பட்டு, இன்ப துன்ப உணர்வு தோன்றும். பிரகிருதியையும் புருடனையும் பகுத்து உணர்ந்தால் அவிச்சை நீங்கும். அதுவே முத்தி எனப்படும். ஆன்மாக்களுக்கு வேறாய் இறைவன் உண்டு என்பதை ஏற்கமுடியாது. புருடர் பலர் என்பதும் எண்ணற்றவர் என்பதும் சாங்கியக் கொள்கையாகும். புருடனுக்கும் பிரகிருதிக்கும் இடையே அமையும் உறவு எப்படிப்பட்டது என்பதை ஆராய்வது இடருக்கு உரியதாகும். புருடனும் பிரகிருதியும் இரு பொருளாக என்றென்றும் உள்ளவையாகும். இத்தகைய கருத்துக்களைச் சாங்கியக் கொள்கையின் அடிப்படையில் சான்றோர்கள் ஆராய்ந்து வெளிப்படுத்தி உள்ளனர். இந்தக் கொள்கைகள்கொண்ட சாங்கியம் தமிழகத்திலும் பரவியிருந்தது. எனவேதான் மணிமேகலையில் சாங்கியவாதி இடம்பெறுகின்றான். சைவ தத்துவநூலான சிவஞான சித்தியாரிலும் சாங்கியம் இடம்பெற்றுள்ளது.

மணிமேகலையில் சாங்கியம்

தமிழகத்தில் நிலவிய தொன்மைச் சமயங்களில் சாங்கியமும் ஒன்று. எனவே, மணிமேகலையில் சாங்கியவாதி இடம்பெற்றுத் தன்னுடைய கொள்கைகளை வரையறுத்துச் சொல்கிறான். மணிமேகலையில் காணப்படும் சாங்கிய மதத்தின் கொள்கைகளை நினைவுகொள்வது சாங்கியக் கொள்கைகளை நினைவு கொள்வதாகும்.

தான் அருவமாதலின் மனத்தால் பற்றப்படாததாய், எப்பொருளுக்கும் தானே காரணம் என்னும் சிறப்பமைந்த பொதுப் பொருளாய், கருத்துப் பொருளும் காட்சிப்பொருளுமாகிய எல்லாப் பொருள்களும் பிறத்தற்கு இடம் என்று எம்முடைய நூலால் சொல்லப்பட்டது மூலப்பகுதி என்னும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சித்தமாம். மான் என்று கூறப்படும் புத்தி தத்துவம் வெளிப்பட, அப்புத்தி தத்துவத்திலிருந்து ஆகாயம் என்னும் வானம் வெளிப்படும். அவ்வான வெளியில் காற்றுத் தோன்றா நிற்ப, அக்காற்றிலிருந்து தீயானது வெளிப்படும். அத்தீயினின்று நீரின் தன்மை வெளிப்படும். அந்நீரினின்று மண்ணின் தன்மை வெளிப்படும். இவ்வாறு ஐம்பெரும் பூதங்களும் வெளிப்பட்டன.

அவ் ஐம்பெருங் கூட்டத்தின்கண் மனம் என்னும் தத்துவம் தோன்றும். புலன்களோடு கட்டுண்டு இருக்கும் மனத்தினின்று அகங்கார வேற்றுமைகளும், ஆகாயத்தின் பண்பாகிய செவிக்குப் புலப்படும் ஒலி வேற்றுமைகளும், காற்றிலிருந்து மெய் என்னும் பொறியும், அதற்குப் புலனாகும் ஊற்றுப் புல வேற்றுமைகளும், நெருப்பிலிருந்து கட்பொறியும், அதற்குப் புலனாம் ஒளி வேற்றுமையும், நிலத்தின் கண் தங்கியிருந்த நீரிலிருந்து வாய் என்னும் பொறியும் அதற்குப் புலனாம் சுவை என்னும் புல வேற்றுமையும், மண்ணிலிருந்து மூக்கு என்னும் பொறியும், அதற்குப் புலனாம் நாற்றப்புல வேற்றுமையும் பிறக்கும். எமது நூலின்கண் சொல்லப்பட்டுப் பின்னரும் ஈண்டு சொல்லப்பட்ட பொறிகளுள் வைத்து மெய்யின் வேறுபாடாய்ச் சொல், கை, கால், எருவாய், கருவாய் என்ற தொழிற் கருவிகளாக இயற்றப்பெற்ற இவ்வைந்தும் தோன்றும்.

இங்கு கூறப்பட்ட பூதங்களின் விகாரத்தால் மலை முதலிய உயிர் இல்லாத பொருள்களும் ஒன்றறி உயிராகிய மரம் முதலாகிய உயிர்ப் பொருள்களும் வெளிப்பட்டு, உலகமாக நடைபெற்றுத் தத்தம் கால எல்லையில் தாம் பிறந்த வழியாகவே ஒன்றனுள் ஒன்று புகுந்து ஒடுங்கி, முடிவில்லாத ஊழிக் காலமாய் ஒழிந்துபோம் வரையில் தான் ஒன்றேயாய், எவ்விடத்தும் பரவி நித்தியப் பொருளாய் நிற்கும்.

இனிப் புருட தத்துவமாவது அறிந்துகொள்ளுவதற்கு எளிதாக, முக்குணத்திற்கு வேறாய், பொறியினால் உணரும் உணர்ச்சிக்கு மூலப் பகுதியோடு சிறிதும் பொதுத் தன்மை இல்லாததாய், தன்னிடத்திலிருந்து யாதொரு பொருளும் பிறத்தற்குத் தான் நிலைக்களம் ஆகாததாய், மூலப் பகுதியிலிருந்து தோன்றும் பொருள்களை எல்லாம் அறிந்து, அறிந்து கொள்வதற்கு வேண்டிய அறிவாய் அம்மூலப் பகுதியோடு ஒன்றாய், எவ்விடத்தும் பரவி நிற்கக் கூடியதாய், உள்ளத்தின் கண் உணர்ச்சியாய் நிகழ்தலைச் செய்யும்.

இவ்வாறு எமது நூலில் பொருந்திய பொருள்கள் 25 உள்ளன. அவைதாம் நிலம், நீர், தீ, காற்று ஆகாயம் என்னும் பூதங்கள் ஐந்து, மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறி ஐந்து, இவற்றோடு பொருந்திய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய புலன் ஐந்து, வாக்கு, கை, கால், எருவாய், கருவாய் ஆகிய தொழில் ஐந்து. உள்நின்று செயல்படும் மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகிய அகக் கருவிகள் நான்கு. உயிர் என்ற ஆன்மாவோடு சேர்ந்து 25 பொருள்கள் ஆகும் என்று சாங்கிய மதவாதி தன் மதக் கருத்துக்களைக் குறிப்பிட்டிருப்பதாக மணிமேகலைக் காப்பியம் கூறுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவஞான சித்தியாரில் சாங்கியம்

அருணந்தி சிவாசாரியார் தன்னுடைய பரபக்கத்தில் நிரீச்சுர சாங்கியம் என்ற தலைப்பில் சாங்கியத்தைக் குறிப்பிட்டு அதன் கொள்கைகளைத் தந்திருக்கிறார்.

"மூலம் புரியட் டகம்விகிர்தி ஆகி மூன்றாய்ப் பிரகிருதி
தூலம் சூக்கம் பரமாய் அச் சுத்த புருடன் சன்னிதியில்
பாலன சேட்டை புரிந்து உலகம் யோனிபலவாய்ப் பரந்துஒடுங்கும்
சால என்று நிரீச்சுவர சாங்கியன் தான் சாற்றிடுமே" *(சிவஞான.சி.260)*

என்பது அவர் கூறும் பாடலாகும். இப்பாட்டின் பொருள்: பிரகிருதி என்றும் பூமான் என்ற புருடன் என்றும் உலகத்துப் பொருள்கள் இரண்டு வகைப்படும். இதில் பிரகிருதி மூன்று வகையாகும். அவை மூலம், புரியட்டகம், விகிர்தி என்பன. அவை தூலமாகவும், சூட்சுமமாகவும், பரமாகவும் விளங்கும். புருடன் பிரகிருதியின் சன்னதியில் ஒரு குழந்தை போல அறியாமையுடன் விளங்குவான். உலகில் உள்ள பொருள்கள் எல்லாம் தனது என்றே கருதி நிற்பான். இவ்வாறு கருதியதைத் தவறு என்று நினைத்து அதனை விட்டு நீங்கித் தான் வேறு, பிரகிருதி வேறு என்று உணர்கின்ற பொழுது ஞானம் பிறக்கும். அந்த ஞானமே வீடு பேற்றைத் தரும் என்று நிரீச்சுர சாங்கிய மதத்தின் கொள்கைகளை இப்பாடலில் அருணந்தி சிவாசாரியார் விளக்கியுள்ளார்.

அருணந்தியார் தனது மறுப்புக்குரிய கருத்துக்களை மட்டும் எடுத்துக்கொண்டு அந்தக் கருத்துக்களை அவ்வவ் மதத்தின் கொள்கைகளாகக் குறிப்பிட்டு, அவற்றிற்குரிய மறுப்பினைத் தருகின்ற கொள்கையை உடையவர். சாங்கிய மதத்தினுடைய 25 தத்துவங்கள் சைவ சமயம் உள்ளிட்ட சமயங்களில் இடம்பெற்றிருப்பதால் அவை பற்றிய கருத்துக்களை எடுத்துக்கொண்டு மறுக்காமல் சாங்கியத்தினுடைய புருட தத்துவத்தையும், பிரகிருதி தத்துவத்தையும் எடுத்துக்கொண்டு அவற்றின் மறுப்பை மூன்று பாடல்களில் தந்திருக்கிறார். முதல் பாடலில் சாங்கியக் கொள்கையான புருடன் பிரகிருதிக்குள் அகப்படுவான் என்பதை மறுத்துக் கூறப்பெற்றுள்ளது. இரண்டாவது பாடலில் பிரகிருதியோடு கூடி நிற்பவன் ஆன்மாவே அன்றி கர்த்தா அல்ல என்பது வலியுறுத்தப்படுகிறது. மூன்றாவது பாடலில் புருடனையும் பிரகிருதியையும் நடத்துவோன் கர்த்தா என்று கூறப்படுகிறது. எனவே, பிரகிருதி புருடன் உறவு முறைகளை மட்டுமே அருணந்தி சிவாசாரியார் எடுத்துக்கொண்டு அக் கொள்கைகளைச் சாங்கியத்தின் அடிப்படையில் வெளிப்படுத்தி அவற்றுக்கு மறுப்பும் தந்திருக்கிறார். பாடலில் அறிமுகம் என்ற நிலையில் ஏதும் இல்லாமல் இந்தப் புருடன் பிரகிருதி பற்றிய கொள்கை மட்டுமே இடம்பெற்றுள்ளது. மேலும், சாங்கியம் என்ற சொல்லைச் சொல்லாமல் நிரீச்சுர சாங்கியம் என்ற அடைமொழியோடு சாங்கிய மதம் குறிக்கப்பெற்றிருக்கிறது. இதனை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நோக்கும்போது அருணந்தியார் காலத்தில் சாங்கியம் நிரீச்சுர சாங்கியம் என வழங்கப்பெற்றிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

பதினான்காம் நூற்றாண்டில் தோன்றிய சீர்காழித் தத்துவப் பிரகாசர் அருளிச் செய்த தத்துவப் பிரகாசம் என்ற நூலிலும் நிரீச்சுர சாங்கியம் என்றே சாங்கியம் இடம்பெற்றுக் கொள்கையும் மறுப்பும் தரப்பெறுகிறது. தத்துவராயரும் ஒரே பாடலில் அதன் கொள்கையையும் மறுப்பையும் தருகிறார்.

> "திகழ்மூலம் விகிர்திபுரி யட்ட கந்தான்
> திகழ்மூன்றாம் செய்கையினிற் சிறந்தபிர கிருதி
> தகுதூலம் சூக்கபர மாம்புருடன் முன்னர்ச்
> சகமெல்லாம் எழுச்செயலாம் நிரீச்சுர சாங்கி
> புகல்வதுதான் அறியாத பிரகிருதி யாவும்
> புருடன்இவை கூடியறி குவதும் பார்த்தால்
> மிகுபுருடன் முதுகில்முட வன்தான் ஏறி
> வேண்டுநெறி செலல்போலும் விதியை அறிந்திலையே" *(பா.193)*

இதன்பொருள்: விளங்கப்பட்ட மூலம் என்றும் விகிர்தி என்றும் புரியட்டகம் என்றும் மூன்று பேதமாம். செய்கையினிற் சிறந்த பிரகிருதியானது தூலம் என்றும் சூக்குமம் என்றும் பரம் என்றும் மூன்று பேதமாம். இவையெல்லாம் சுத்தனாகிய புருடன் சன்னிதியிலே சேட்டைபடும். அது எதுபோல என்றால் பாலனானவனை மாதா அறிவிக்கும் தன்மைபோல அறிவித்து நிற்கும் என்று கண்டு புருடன் வசமாவது முத்திநெறி என்று கூறும் நிரீச்சுர சாங்கியனே, அப்படிச் சொல்வது உன்பிரகிருதிப் பேதத்திற்கு அறிவில்லையா? அதனைப் புருடன் கூடி அறிவிக்கும் என்னும் அதனை நோக்கில் குருடன் முதுகிலே முடவன் இருந்து அவன் காலும் தன் கண்ணுமாக நடக்கும் முறைமையை ஒக்கும். இப்படிக் கூடி அறியும் புருடனும், அவன் அறவிக்க அறியாமையிலே சொல்லும் பிரகிருதியும் கூடி அறிவன் என்பன். ஆதலால் இந்த நெறியை விட்டு வேத நெறியை அறிவாயாக என்பதாகும். எனவே, தத்துவப் பிரகாசரும் அருணந்தியாரைப் போலவே சாங்கியத்தின் கொள்கைகளில் புருடன் பிரகிருதி என்ற இரண்டு பற்றிய கொள்கைகளை மட்டும் எடுத்துக்கொண்டு வாதம் செய்தமை புலப்படுகிறது.

நிரீச்சுர சாங்கியம் என்ற பெயரில் தமிழகத்தில் சாங்கியம் வழங்கப்பெற்றிருக்கிறது. சாங்கியத்தைச் சைவ சித்தாந்திகள் புறச்சமயம் ஆறில் ஒன்றாக அடக்குவர். புறச் சமயம் என்பது வேதங்களைப் பொதுவாக உடன்படுவதாகும். ஆனால், சிவாகமங்களைஉண்மை நூலாகஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இதனால் இவை புறச்சமயம் என வகுக்கப்பட்டது. வேதத்தை உடன்படும்போது இம்மதங்களுக்குள்ளே வேறுபாடு உண்டு. தருக்கம், மீமாம்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சாராத்திரம் இந்த புறச்சமயம் ஆறினுள் சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் ஆகிய மூன்றும் வேதத்தில் தமக்கு உகந்த பகுதியை மட்டும் ஏற்றுக்கொண்டு மற்றதை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒதுக்கிவிடுவர் என்று புறச்சமயம் பற்றிய கருத்துக்களைச் சிவஞான போத அவையடக்க உரையில் சிவஞான முனிவர் குறிப்பிடுவார். எனவே, வேதத்தில் தனக்கு வேண்டியதை மட்டும் எடுத்துக்கொள்கின்ற சாங்கிய மதக் கொள்கைகளை மறுப்பதற்கு அருணந்தியாரும் சீர்காழித் தத்துவராயரும் தங்கள் மறுப்புக்கு உரியதை மட்டுமே எடுத்துக்கொண்டனர் போலும்.

இது நிரீச்சுர சாங்கியம் என்று இரண்டு ஆசிரியர்களாலும் குறிக்கப்படுவதற்குக் காரணம், சைவ சித்தாந்தம் கூறும் இறைவன், உயிர், உலகம் (பாசம்) என்ற மூன்று பொருள்களில் புருடனைப் பற்றியும் (உயிர்) பிரகிருதியைப் பற்றியும் (உலகம்) சாங்கிய மதத்தார் உடன்பட்டாலும் இறைவன் இல்லை என்ற கொள்கையை உடையவர்கள். ஆதலால் ஈசுவரன் இல்லாத கொள்கையை வலியுறுத்தும் பொருளில் நிரீச்சுர சாங்கியம் என்னும் பொருளில் வழங்கப்பெற்றிருக்கிறது போலும்.

சங்க இலக்கியத்தில் சாங்கியத் தாக்கம்

சாங்கியக் கொள்கையில் சிறப்பிடம் பெறுவது 25 தத்துவங்களாகும். இந்தத் தத்துவங்களுக்கு மேலாக 26- ஆவது வினைத் தத்துவத்தைக் கடவுள் உண்டு என்ற கொள்கையை உடையவர்கள் குறிப்பிடுவார்கள். ஆனால், தன்னுடைய தத்துவத்தைச் சாங்கியம் இருபத்தைந்தோடு நிறுத்திக் கொள்கிறது. 25 தத்துவங்கள் முன் குறிப்பிட்டபடி பூதங்கள் 5, தொழிற்கருவிகள் 5, தன்மாத்திரைகள் 5, அறிகருவிகள் 5, அந்தக்கரணங்கள் 3, மூலப்பகுதி (பிரகிருதி 1), புருடன் 1 ஆக 25 தத்துவங்களாகும். இந்தத் தத்துவங்களை எல்லாம் குறிப்பிட்டு 26வதாகத் திருமால் திகழ்கிறார் என்று பரிபாடல் கூறும் பாடல்களைச் சாங்கியக் கொள்கை நிறைந்ததாகப் பேராசிரியர் சோ.ந.கந்தசாமி அவர்கள் குறிப்பிடுவார்கள். எனவே, எந்தெந்த சங்கப் பாடல்களில் 5 பூதங்களைப் பற்றிய செய்திகளை தன்மாத்திரையாகிய சுவை, ஒளி, ஊறு ஓசை, நாற்றம் என்ற ஐந்தைப் பற்றியோ, மனம் புத்தி அகங்காரம் என்பதைப் பற்றியோ இடம்பெறுகின்ற கருத்துக்களைச் சாங்கிய மதச் சார்புடையதாகக் கொள்ளலாம். என்றாலும் கடுவன் இளவெயினனார், நல்லெழுநியார் ஆகிய இரண்டு பெரும்புலவர்கள் பாடிய பரிபாடலின் மூன்றாவது பாடலும், பதின்மூன்றாவது பாடலும் 25 தத்துவங்களைப் பற்றிக் குறிப்பிடுவதால் சாங்கியக்கருத்து இடம்பெற்றதாகக் கொள்ள வேண்டியுள்ளது.

கடுவன் இளவெயினனார், ஐவகைப் பூதங்கள், ஞாயிறு, திங்கள் என்னும் ஒளிதரும் பெருஞ் சுடர்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்ற ஐந்து கோள்களுக்கு உரியோர் அசுரர் என்போர், ஆதித்தர் பன்னிருவர், வசுக்கள் எண்மர், உருத்திரர் பதினொருவர், அசுவினி இருவர், பிரம்ம தேவன் ஒருவன், எமன் ஒருவன், மேல், கீழ், நடு என்னும் உலகம் இருபத்தொன்று, இவற்றில் வாழும் உயிர்கள் பல, இவை அனைத்துமாக விளங்குகின்றவன் திருமாலே என்று குறிப்பிடுகின்றார். இப்பகுதியைக் கொண்டு தத்துவங்களின் சாயலைக் கூறுகின்ற நிலையில் சாங்கியக் கொள்கை இடம்பெற்றிருக்கிறது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்பது பேராசிரியரின் கணிப்பு. அதுபோல நல்லெழுநியார் பாடலில் சுவை, இசை, தோற்றம், நாற்றம், ஊறு என்று உரைக்கப்படும் ஐந்தும், அவை உணர்ந்துகொள்ளுவதற்குரிய ஐம்புலன்களும், ஐம்புலன்களுள் ஓசையால் அறியப்படும் வானமும், ஓசை ஊறால் அறியப்படும் காற்றும், ஓசை ஊறு ஒளியால் அறியப்படும் தீயும், ஓசை, ஊறு, ஒளி, சுவையால் உணரப்படும் நீரும், ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றத்தால் அறியப்படும் நிலனும் திருமால் ஆவான். மேலும், மூவேழ் உலகப் பகுதிகளும், அவற்றுக்கு மூலமாகிய ஆதிப் பொருளும் திருமாலே ஆவார் என்று கூறியதைச் சாங்கியக் கருத்துக்களின் சாயல் என்று பேராசிரியர் கணித்திருக்கிறார். இங்கு தத்துவங்களுக்கு மேலாகத் திருமால் இடம்பெற்றிருப்பதை அறிய வேண்டும். நிரீச்சுர சாங்கியம் என்பது இறைவனை ஏற்காதது ஆகும். ஆனால், இங்கு திருமால் ஏற்றுக்கொள்ளப் பெற்றிருக்கிறார். எனவே, அப்பகுதி பொருத்தம் உடையதா என்பதைத் தம் எண்ணத்தில் ஆய்ந்து பேராசிரியர் அவர்கள் அதற்கு ஒரு முடிவும் தருகிறார்கள். அதாவது நிரீச்சுர சாங்கியம் யோக சமய நூல்களின் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட சமயத்தில் நிரீச்சுர சாங்கியம் என்ற நிலை நீங்கி, சேச்சுவர சாங்கியம் என்ற பெயரில் அதாவது இறைவனை உடன்பட்ட சாங்கியம் என்ற பொருளில் பரிபாடலில் இடம்பெற்றது என்பது பேராசிரியர் அவர்களின் துணிபாகும். இக்கருத்து ஆய்வுக்கு உரியதாகும். சைவ சித்தாந்தக் கோட்பாட்டின்படி இப்பகுதியை ஆராய்ந்தால் இருபத்திநான்கு தத்துவங்களுக்குரிய சில தத்துவங்கள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றிருப்பதற்கு இப்பரிபாடல் பகுதியை ஆதாரமாகக் கொள்ளலாமே தவிர, சாங்கியத்தின் ஒட்டுமொத்தமான பாடல் என்று கொள்ளமுடியாது என்றே தோன்றுகிறது. காரணம் அருணந்தியாரும் தத்துவராயரும் நிரீச்சுவர சாங்கியத்தைப் பற்றியே குறிப்பிடுகிறார்கள். அவர்கள் காலத்தில் சேச்சுவர சாங்கியம் தமிழகத்தில் வழங்கியிருந்தால் இரு பெரும் சைவப் பெருமக்களால் குறிப்பிட்டிருக்க முடியும். எனவே, பரிபாடலுக்குப் பன்னூறு ஆண்டுகளுக்குப் பின்னால் தோன்றிய சைவப் பெரியார்கள் காலத்திலும் நிரீச்சுவர சாங்கியமே இருந்திருப்பதால் சங்க இலக்கியச் சார்பில் 25 தத்துவங்களைக் குறிப்பிடுகின்ற பகுதிகளைக் கொண்டு சாங்கிய மதக் கொள்கையின் சார்பு சங்க இலக்கியத்தில் இருந்திருக்கிறது எனக் கொள்ளலாம்.

6. யோகம்

இந்திய மெய்ப்பொருளியலில் சாங்கிய மதத்தோடு உடன் எண்ணக்கூடிய சமயம் யோகம் ஆகும். சாங்கிய யோகம் என்று இரண்டையும் ஒருங்கே இணைத்து ஆய்வு செய்கின்ற நிலை மெய்ப்பொருள் இயலாரிடத்தில் காணப்படுகின்றது. உயிர் என்ற ஒன்றும் பிரகிருதி என்ற ஒன்றும் என்றைக்கோ எப்படியோ ஒன்றுக்கொன்று சிக்கிக் கொண்டது. அதாவது பிரகிருதி உயிராகிய புருடனைத் தன் வலையில் சிக்க வைத்துக்கொண்டது. புருடனும் தனது தூய நிலையிலிருந்து மாறுபட்டுப் பிரகிருதியின் வலையில் சிக்கிக்கொண்டான். இந்த இரண்டில் தனக்குள்ள உண்மை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நிலையைப் புருடனாகிய உயிர் உணர்ந்து, பிரகிருதியிலிருந்து தன்னைப் பிரித்துக்கொள்வது சாங்கிய யோகமதத்தின் குறிக்கோளாகும். இதில் யோகம் இதனைப் பெரிதும் வலியுறுத்துகிறது. எனவே, யோகம் என்ற சொல்லுக்குப் பிரிதல் என்பது பொருளாகிப் பிரகிருதியின் தொடர்பிலிருந்து புருடன் பிரிதல்தான் யோகம் ஆகும். ஆகவே, யோகம் என்பதற்குப் பிரிதல் என்பது பொருள்.

இந்த யோக மதத்தை முதன்முதலில் வரையறுத்தவர் பதஞ்சலி ஆவார். பதஞ்சலியின் காலத்திற்கு முன்னமேயே யோக மதக் கருத்துக்கள் இருந்தாலும், பதஞ்சலி இயற்றிய யோக சூத்திரம் என்ற நூலே யோகத்தைப் பற்றிக் கூறுகின்ற, இன்று கிடைக்கின்ற மிகப் பழமையான நூலாகும். இந்த யோக சூத்திரத்திற்குக் கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வியாசர் என்பவர் சிறந்த உரை எழுதியுள்ளார். பதஞ்சலி யோகத்தில் கடவுள் ஒரு தத்துவமாகக் காட்டப்பட்டுள்ளார். எனவேதான் இந்த யோக நெறியைப் பதஞ்சலியின் அடிப்படையைக் கொண்டு, கடவுள் கொள்கை உடைய சாங்கியம் என்று கீழை மேலை நாடுகளின் மெய்ப் பொருளியல் வரலாற்றில் சர்க்காரி முகர்ஜி குறிப்பிடுவார்.

கி. லெட்சுமணன் அவர்கள் தம்முடைய இந்தியத் தத்துவ ஞானம் என்ற நூலில், சாங்கியம் கொள்கைகைள விவரிக்கிறது என்று கொண்டால் யோகம் அக் கொள்கைகளை நடைமுறையில் செயல்படுத்த உரிய வழிவகைகளை விவரிக்கிறது எனலாம். சாங்கியம் புருடன் பிரகிருதியின் உண்மைகளையும், தன்னைப் பற்றிய உண்மைகளையும் உள்ளவாறு உணர்ந்து, வீடு பேற்றுக்கு உரிய வழியாக ஞானமார்க்கத்தை வற்புறுத்துவதாகும். யோகமோதியானத்தை வற்புறுத்துவது என்பார். மேலும், இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டையும் கி. லெட்சுமணன் அவர்கள் ஆய்ந்து கூறியுள்ளார். சாங்கியம் கண்ணுக்குப் புலனாகாத பிரகிருதித் தத்துவத்திலிருந்து கண்ணுக்குப் புலனாகும் உலகம் தோன்றுகிறது என்றும் உலகிலுள்ள உடல் உள்ளிட்ட ஜடப் பொருள்களும் பிரகிருதித் தத்துவத்திலிருந்து தோன்றுகின்றன என்றும் சாங்கியர் கூறுவர். ஆனால், அவர்கள் பிரகிருதித் தத்துவத்திலிருந்து உலகம் உள்ளிட்ட பொருள்களைத் தோற்றுவித்தவர் யார்? என்ற கேள்விக்குப் பிரகிருதியை இயக்குவதற்கு ஒருவரும் தேவையில்லை, புருட தத்துவம் உயிரின் முன்னிலையில் மட்டும் இருந்தால் போதும், தானே இயங்கும் என்று இறைவனை ஏற்றுக்கொள்ளாது நிரீச்சுவர சாங்கியமாக விளங்கினர் என்பது பதிலாகவுள்ளது. ஆனால், ஒரு ஆத்ம சக்திதான் பிரகிருதி முழுவதும் செறிந்திருந்து அதனை இயக்கி வழிப்படுத்துகிறது எனக் கொண்டு இறைத் தத்துவத்தை உணர்ந்தவர்கள் யோகப் பிரிவினர் ஆவர். எனவே, சாங்கியரால் விடை கூறமுடியாத பிரகிருதித் தத்துவத்திலிருந்து உலகைப் படைத்தவர் யார்? என்ற கேள்விக்கு யோகப் பிரிவினர் விடை காண முயன்று, கடவுள் தான் புருடத் தத்துவத்திலிருந்து உலகைத் தோற்றுவித்தான் என்பதை ஏற்றுக்கொண்டு தம் கொள்கைகளைச் சாங்கியத்திலிருந்து பிரித்துக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொண்டனர். எனவேதான் ஈசுவரன் உளன் என்று பொருள்படுகின்ற சேசுவர சாங்கியம் என்ற பெயரைக் கொண்டனர்.

இறைவனை ஏற்றுக்கொண்ட யோகத்தார் இறைவனை உலகைச் சிருட்டிப்பதற்குரிய காரணமாகக் கொண்டனர். அதாவது இறைவன் படைப்பவன் அல்லன், படைப்புக்குத் துணை புரிவதே அவனுடைய செயல் என்று கொண்டனர். சாங்கியம் கடவுளை ஒப்புக்கொள்ளாத காரணத்தால் அவர்கள் பக்தியை வலியுறுத்தவில்லை. புருடன் தானாகவே வீடுபேற்றை அடைய ஞான மார்க்கத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். கடவுளை ஒப்புக்கொள்ளுகின்ற யோகத்தில் பக்திக்கு இடம் உண்டு. தவத்தால் பக்தி செய்தால் அதாவது யோகத்தால் பக்தி செய்தால் இறைவன் அருள் கிடைக்கும் என்று யோகப்பிரிவினர் நம்பினர். இவர்களுடைய கருத்துப்படி இறைவன் என்றும் உள்ளவன், எல்லாம் அறிபவன், ஆனால் எல்லாவற்றையும் தனக்குள் அடக்குபவன் அல்லன். யோக மதத்தினரின் கொள்கைப்படி இறைவன் படைப்பவனும் அல்லன், காப்பவனும் அல்லன், உயிர்களின் நல்வினை தீவினைகளுக்கு ஏற்பப் பலன்களை அளிப்பவனும் அல்லன், உயிர்களுக்கு வீடுபேற்றை அளிக்க வல்லவனும் அல்லன், உயிர்கள் சென்று அடைவதும் அவனை அல்ல என்றெல்லாம் கூறி, இறைவனையும் தனி ஒரு புருடனாகக் குறிப்பிடுவர். இறைவனாகிய புருடன் விசேடமான புருடனாவான். இந்த விசேடம் தான் புருடனுக்கும் இறைவனுக்கும் உள்ள வேற்றுமை. அதாவது புருடன் கட்டுண்ட நிலையிலிருந்து (பெத்த நிலையிலிருந்து) முத்தி நிலையை அடைபவன். ஆனால், விசேட புருடனாகிய இறைவனோ கட்டுண்ட நிலையாகிய பெத்த நிலையை ஒருபோதும் அடைபவன் அல்லன் என்று கடவுள் நிலையை, யோகத்தார் கொண்ட தத்துவங்களைக் கி. லெட்சுமணன் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டுவார்கள்.

கி.லெட்சுமணன் அவர்கள் குறிப்பிடுவது போலத் தத்துவ தரிசனங்கள் என்ற நூலில் பன்மொழிப் புலவர் மு.கு.ஜெகன்னாத ராஜா அவர்கள் தன்னுடைய யோகம் பற்றிய கட்டுரையில் யோகம், சாங்கியம் போன்றே சிருஷ்டி கர்த்தாவாகிய கடவுளை ஏற்காவிட்டாலும் "புருஷ விசேஷ ஈசுவர யோக சூத்திரம்" (1-24) "சர்வக்ஞ ஸச புருஷ விசேஷி" (யோக சூத்திரம் 1-25) என்ற யோகப் பிரிவின் யோக சூத்திரப்படி சாதாரண புருடனைவிட உயர்ந்த நிலையில் முற்றறிவு உடைய சிறப்புப் புருடன் ஆகிய இறைவன் குறிக்கப் பெறுகிறான் என்று குறிப்பிடுகிறார். மேலும், அவர் யோகம் தியான மார்க்கமாகும். மொஹஞ்சதாரோவில் கிடைத்த முத்திரையிலும் யோக நிலையில் உள்ள முனிவரது உருவம் காணப்பெறுவது யோகத்தின் தொன்மையைக் குறிப்பிடுவதாகும். சமணம், பௌத்தம், சைவம் ஆகிய எல்லா மதங்களிலும் யோகம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இவற்றுக்கு எல்லாம் தொன்மையான நிலையில் யோகநெறியைக் காட்டுவது பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரத்தில்தான் என்றும் அவர் குறிப்பிடுவார். இவ்வாறு யோக மதம் பற்றிய கருத்துக்களைச் சாங்கியத்திலிருந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேறுபடுத்தி அறிஞர் பெருமக்கள் அதன் தொன்மையை எடுத்துக் காட்டியுள்ளனர்.

யோக மதத்தின் கொள்கைகளைப் பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரத்திற்கு வியாசர் எழுதிய உரையிலிருந்து உணரமுடிகிறது. மேலும், கி.பி.9-ஆம் நூற்றாண்டைச்சேர்ந்தவாசஸ்பதி மிஸ்ரர்என்பவரும், கி.பி.11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த போஷர் என்பவரும், கி.பி.15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இராமானந்த சுவாமி என்பவரும், கி.பி.16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விஞ்ஞான பிட்சு என்பவரும், கி.பி.18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சதாசிவ பிரம்மேந்திரர் என்பவரும், நாகோஜி பட் என்பவரும் பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரத்திற்கு உரை எழுதியுள்ளனர். இவற்றிலிருந்தும் யோக மதத்தின் கொள்கைகளை அறியமுடிகின்றது.

யோக சூத்திரம் சமாதி பாதம், சாதன பாதம், விபூதி பாதம், கைவல்ய பாதம் என்ற நான்கு பகுதிகளில் 195 சூத்திரங்களைக் கொண்டதாகும். மனதைக் கட்டுப்படுத்துவதே யோகம் என்றும் யோக நெறி எட்டு வகைப்படும் என்றும் அந்நூல் குறிப்பிடுகிறது. இந்த அஷ்டாங்க நெறியானது யமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாஹாரம், காரணா, தியானம், சமாதி என்பதாகும். இந்த அட்டாங்க யோகத்தின் மூலம் ஆன்மா துன்ப நீக்கம் பெறுதலே வீடுபேறு ஆகும். ஆன்மா புறத்தே உள்ள பொருள்களின் வடிவங்களைச் சித்த விருத்திகளின் வாயிலாகவே அறிகின்றது. அந்த விருத்திகள் ஐந்து வகைப்படும். காட்சி, கருதல், ஆகமம் என்ற மூன்று பிரமாணங்களால் புறப்பொருள் அறியப்படுவது ஐந்து வகையில் பிரமாணத்தைக் குறிக்கும். அடுத்தது விபரியாயம் எனப்படும். அந்தச் சித்த விருத்தி பிழைபட்ட அறிவைக் குறிக்கும். பழுதைப் பாம்பெனக் காண்டல் அவ் அறிவாகும். அடுத்தது விகல்பம் எனப்படும். இது உண்மையோடு பொருந்தாது, சொற்களினால் வெளிப்படும் பொருள் அளவால் அன்றி சொல் அளவினால் அமைவது ஆகும். இராகுவின் தலை என்று கூறப்படும் பொழுது ராகு வேறு, தலை வேறு என்று வேறுபடுத்தி அறிவது இந்தச் சித்த விருத்தியாகும். அடுத்தது நித்திரை என்பதாகும். தூக்கத்தில் தோன்றாத அறிவை இது குறிப்பிடும். அடுத்தது நினைவு என்பதாகும். கடந்தகால அனுபவங்களை மீட்டு உணர்வினால் அறிவது இந்த விருத்தியாகும். இவ்வாறு ஒரு ஆன்மா ஐந்து சித்த விருத்திகளின் மூலமாகப் புறப்பொருளை அறிவதை யோக நெறி கொள்கைகளாகக் கொண்டுள்ளது. ஆன்மா பெறுகின்ற துன்பங்களையும், யோக மதம் ஐந்து வகையாகப் பிரித்திடும். அறியாமை, அகமிதா, இராகம், வெறுப்பு, பற்றும் பயமும் என்பதாகும். இவ்வாறு யோக மதத்தின் கொள்கைகளை ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

தமிழகத்தில் யோகம்

மணிமேகலையில் சாங்கிய மதவாதி இடம்பெற்றது போல யோக மதவாதி தனித்து இடம்பெறவில்லை. எனவே, மணிமேகலை காலத்தில் யோக மதம் தமிழகத்தில் தனி ஒரு மதமாக பேசப்படவில்லையோ என

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எண்ணத் தோன்றுகிறது. மணிமேகலைக் காலத்திற்குப் பிறகு கி.பி.4-ஆம் நூற்றாண்டாகக் கருதப்பெறும் பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரத்திற்கு எழுதப்பெற்ற வியாசரின் உரை அறியப்பெற்ற பிறகு, யோக மதம் பற்றிய கருத்துக்கள் வழங்கியிருக்க வேண்டும் எனவும் எண்ணத் தோன்றுகிறது. என்றாலும் தமிழகத்தில் வழங்கிவந்த பௌத்தம், சமணம், சைவம், வைணவம் உள்ளிட்ட அனைத்துச் சமயங்களிலும் தவமாகிய யோக உணர்வுகள் இடம்பெற்றுள்ளன என்பதை மறுக்க இயலாது. குறிப்பாகச் சொன்னால் இம்மதங்களின் முனிவர் பெருமக்கள் தியான வடிவத்தில் அறிவிக்கப் பெற்றிருப்பதைச் சுட்டிக்காட்டலாம். யோக மதத்தின் காலம் மிகத் தொன்மையானது. ஆகையால் யோக நிலை எல்லாச் சமயங்களிலும் தாக்கம் பெற்றது எனலாம். தமிழகத்தில் யோகநிலை இடம்பெற்றதைப் பேராசிரியர் சோ.ந.கந்தசாமி அவர்கள் தன்னுடைய இந்தியத் தத்துவக் களஞ்சியம் பகுதி - 2இல் விரிவாகத் தந்துள்ளார்கள். அக்கட்டுரையின் சுருக்கத்தை இங்கு நினைவு கூர்வது இப்பகுதிக்குப் பொருத்தம் உடையதாகக் கருதப்பெறுகிறது.

தொல்காப்பியத்தில் புறத்திணை இயலில் இடம்பெற்ற வாகைத் திணைக்குரிய துறைகளை வகுக்கும்பொழுது தொல்காப்பியர், "நாலிரு வழக்கில் தாபத பக்கம்" என்று ஒரு துறையை வகுப்பார். அதற்கு உரையெழுத வந்த நச்சினார்க்கினியர் "அறிவர் கூறிய ஆகமத்தின் வழி நின்று வீடுபெற முயல்வார்க்கு உரியவாகிய எண்வகை மார்க்கத்துத் தவம் புரியும் கூறும்" என்று உரையெழுதுவார். நான்கு இரண்டு என்பது தவம் புரிவோர்க்கு உரியனவும், தவம் செய்து யோகம் செய்தார்க்கு உரியனவும் இரு வகையாம் என்பார். மேலும், தவம் செய்வார்க்கு உரியன ஊன் நசையின்மை, நீர் நசையின்மை, வெப்பம் பொறுத்தல், தட்பம் பொறுத்தல், இடம் வரையறுத்தல், ஆசனம் வரையறுத்தல், இடையிட்டு மொழிதல், வாய் வாளாமை என எட்டாகும் என்பார். இனி யோகம் செய்வதற்கு உரியன இயமம், நியமம், ஆசனம், வழிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், சமாதி என எட்டாகும் என்று குறிப்பிட்டு அந்த எட்டு நிலைக்கும் அவர் காலத்தில் வழங்கி வந்த நூல்களின் சூத்திரங்களைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். ஆனால், எந்த நூல்கள் என்று அவர் காட்டவில்லை. பகுதிகளின் மூல வரிகளை மட்டுமே குறிப்பிட்டிருக்கிறார் நச்சினார்க்கினியர். எனவே, தொல்காப்பியர் காலத்திலேயே தவ நெறியும் யோக நெறியும் தமிழகத்தில் வழங்கிவந்தன என்று அறிவதோடு நச்சினார்க்கினியர் காலத்தில் பதஞ்சலி யோகத்தில் கூறப்படுகின்ற அட்டாங்க யோகம் மக்களிடையே பரவியிருந்தது என்பதும் யோகத்தைப் பற்றி விளக்கம் தருகின்ற நூல்கள் இருந்தன என்பதும் புலனாகின்றது. அத்துடன் அந்தச் சூத்திரத்திற்கு உரை எழுதும்பொழுது புறநானூற்று 251 -ஆம் பாடலைக் குறிப்பிட்டு, அப்பாடலையும் உதாரணமாகக் கொள்ளலாம் எனவும் எழுதுகிறார். அப்பாடல் மாரிப்பித்தியார் பாடியதாகும். அப்பாடலில் தலைமகன் ஒருவன் இல்லறத்தில் இனிது இருந்து பின்னர் தாபத நிலையாம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

துறவு நிலையில் வாழ்ந்ததைச் சுட்டிக் காட்டுவதாகும். தலைவனின் துறவு நிலையை,

> **"கழைக்கண் நெடுவரை அருவி ஆடிக்**
> **கான யானை தந்த விறகில்**
> **கடுந்தெறல் செந்தீ வேட்டுப்**
> **புறந்தாழ் புரிசடை புலர்த்து வோனே."** (புறம்.251:4-7)

என்கிறது புறநானூறு. இவற்றால் தவத்தின் நிலையும் யோகத்தின் நிலையும் தமிழகத்தில் இருந்தமை புலப்படுகிறது.

திருக்குறளில் காணப்படும் யோகம் பற்றிய செய்திகளையும் அவ்வவ் திருக்குறள் மூலம் பேராசிரியர் வெளிப்படுத்தி உள்ளார். பரிமேலழகர் நீத்தார் பெருமை என்ற அதிகாரத்திற்கு யோகத் தத்துவ நிலையில் இருந்துதான் விளக்கம் எழுதியுள்ளார் என்பது பேராசிரியரின் கருத்தாகும். அதுபோல இல்வாழ்க்கை என்ற அதிகாரத்தில் இயல்புடைய மூவர் என்ற தொடருக்கும் துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் என்ற தொடருக்கும் யோகத்தின் அடிப்படையில் பரிமேலழகர் உரை எழுதியுள்ளமையையும் அவர் குறிப்பிட்டுப் பரிமேலழகரின் யோகப் பயிற்சியைச் சுட்டிக் காட்டியுள்ளார். நிறைவாகப் பற்றுக பற்றற்றான் பற்றினை என்ற தொடருக்குப் பரிமேலழகர் உரைச் சிறப்பை எடுத்துக்காட்டி, அவர் காலத்து யோகத் தத்துவ நிலையை விளக்கியுள்ளார். அதில் "ஈண்டு ஒழுக்கம் என்றது யோக நெறி ஒழுகுதலே. அஃது இயமம், நியமம், இருப்பு, உயிர்நிலை, மனஒழுக்கம், காரணை, தியானம், சமாதி என எண்வகைப்படும். அவற்றின் பரப்பெல்லாம் ஈண்டு உரைக்கின் பெருகும். யோக நூல்களில் காண்க" என்று பரிமேலழகர் குறிப்பிட்டதைச் சுட்டிக் காட்டிப் பரிமேலழகர் காலத்து யோக நூல்களை நினைவுபடுத்தியுள்ளார் பேராசிரியர். திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகரே பரிபாடலுக்கும் உரை எழுதியிருப்பதால் பரிபாடல் உரையிலும் காணப்படுகின்ற யோகக் கருத்துக்களைப் பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். கடுவன் இளவெயினனார் பாடல்களில் காணப்படுகின்ற யோகச் செய்திகளைப் பரிமேலழகர் உரைகொண்டு பேராசிரியர் சுட்டிக்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்துத் திருமந்திரத்தில் காணப்படுகின்ற யோகநெறி பற்றிய செய்திகளையும் பேராசிரியர் தொகுத்துத் தந்திருக்கிறார். மூன்றாம் தந்திரம் யோக சாஸ்திரமாகப் பாடப்பெற்றிருக்கிறது என்பது பேராசிரியரின் கணிப்பாகும். திருமூலரே யோகநெறி சார்ந்தவர் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். திருமூலரின் சிவயோக நிலையையும் அவருக்கு ஒருசாலைத் தோழராகப் பதஞ்சலி விளங்கியதையும் எடுத்துக்காட்டித் திருமூலரைத் தமிழில் யோகநெறி பாடிய பதஞ்சலியாகவே பேராசிரியர் உருவகப் படுத்தியுள்ளார். எனவே, தொல்காப்பியர் காலம் முதல் திருமூலர் காலம் வரையிலும், பின்னால் நச்சினார்க்கினியர், பரிமேலழகர் ஆகிய உரையாசிரியர்கள் காலத்திலும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யோகநெறித் தத்துவங்கள் தமிழகத்தில் வழக்கில் இருந்தன என்பது பெறப்படுகிறது.

சைவ சித்தாந்தத்தில் யோகம்

அருணந்தி சிவாசாரியார் யோகத் தத்துவத்தைக் கொண்ட சேச்சுவர சாங்கியம் கடவுளை ஒத்துக் கொண்ட காரணத்தால் பரபக்கத்தில் அம்மதத்தின் குறிப்பைத் தரவில்லை. திருமுறைகளில் பனிரெண்டாம் திருமுறையாகிய பெரியபுராணத்தில் காணப்படுகின்ற பெருமிழலைக் குறும்பர், பூசலார் ஆகிய அடியார்கள் யோக நெறியில் நின்றவர்கள் ஆவார்கள். சிவஞான போதத்திற்கு உரை எழுதிய சிவஞான முனிவர், புறச்சமயங்களைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, யோக மதம் பற்றிய குறிப்பினைத் தருகிறார். "யோக மதமாவது நிலம் முதல் புருடன் ஈறாகிய 25 தத்துவமும், பெத்த முத்திகளும் நிரீச்சுர சாங்கியர் கூறியவாறேயாம். மூலப் பகுதியையும் புருடனையும் பகுத்து உணரும் விவேக உணர்வு போல எண்வகை உறுப்பிற்றாகிய யோகமும் முத்திக்கு ஏதுவாம். 26-ஆம் தத்துவம் இறைவன் ஒருவன் உளன். அவன் முற்றுணர்வு உடையவனாய், சாத்திரங்களை அருளிச் செய்து புருடனுக்கு ஞானத்தை அறிவுறுத்துவன். ஆதலின் ஆன்மாக்களுக்கு வேறு என்று உணரப்படும் என்பதாம். இந்நூல் செய்தவன் பதஞ்சலி முனிவன் என்று குறிப்பிடுவார். அருணந்தி சிவாசாரியாரின் சித்தியார் சுபக்கப் பகுதியில் அட்டாங்க யோகம் இடம்பெற்றுள்ளது (பா.273).

இவ்வாறு சைவ சித்தாந்தத்தில் யோகம் பற்றிய சிறு சிறு குறிப்புகள் இடம்பெற்று அம்மதம் பெரிய மறுப்புக்கு ஆளாகாமல் பின்னால் வந்த அனைத்துச் சைவ சித்தாந்த தத்துவவாதிகள் யோக நெறியில் இடம்பெற்ற அட்டாங்க யோகத்தைக் குறிப்பிடுகின்ற நிலை தெரியவருகின்றது. எனவே, தமிழகத்தைப் பொறுத்தவரை யோகத் தொடக்ககாலம் முதல் யோகநெறியில் இடம்பெற்ற தவமும் அட்டாங்க யோகமும் ஏற்றுக் கொள்ளப்பெற்றன எனத் தெரியவருகிறது.

7. நியாய வைசேடிகம்

இந்திய மெய்ப்பொருள் கொள்கைகளில் தொன்மையான கருத்து முறைகளைக் கொண்ட நியாய வைசேடிகம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு கால எல்லையை உடையதாகும். நியாய வைசேடிகரின் கருத்து முறைகள் உலகின் உண்மையினை ஒத்துக்கொள்பவை. கருத்து முதற் கொள்கையை எதிர்த்து எழுந்த தனித்த சிந்தனைகளைக் கொண்டவை. நியாயக் கருத்துமுறை அளவை நெறியையும், அறிவு ஆராய்ச்சி இயலையும் அடிப்படையாகக் கொண்டதாகும். வைசேடிகம் பௌதிகத்தையும், புலன் இறந்த பொருளியல் ஆய்வையும் முதன்மையாக மேற்கொண்டதாகும். இவை இரண்டும் தனித்த நிலையில் இருந்தாலும் அடிப்படையான கொள்கையில் ஒத்திருக்கின்றன. தனி ஒரு ஆன்மாவின் விடுதலை குறித்த லட்சியத்தை உடையன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒன்றுக்கொன்று நெருங்கிய ஒற்றுமை உடையவை. நெடுங்காலமாக ஒரே மெய்ப்பொருளியலின் பகுதிகளாக இவை இரண்டும் கருதப்பெற்று ஆராய்ச்சிக்கு உரியதாயின. இவை இரண்டும் ஆன்மாவும் உண்மை, புறத்தே காணுகின்ற உலகமும் உண்மை என்ற கருத்தினைக் கொண்டவை ஆகும்.

நியாயம்

நியாயத்தின் தோற்றத்தை கி.மு.ஏழாம் நூற்றர்ணடிற்கு ஆய்வாளர்கள் கொண்டு செல்வர். அதற்குக் காரணம் நியாயத்தின் அடிப்படைக் கொள்கை அளவை முறைகளாகும். உபநிடதங்களிலும், பிடகங்களிலும் அளவைக் கருத்துக்கள் இருப்பதால் நியாயத்தின் காலத்தைக் கி.மு.ஏழாம் நூற்றாண்டிற்குக் கொண்டு செல்கின்றனர். நியாயக் கொள்கைக்கு வாதவித்தை, ஏது வித்தை, பிரமாண சாத்திரம், தருக்க சாத்திரம் என்ற பல பெயர்கள் உண்டு. இந்தக் கொள்கைக்கு இப்பொழுது கிடைக்கும் முதல்நூல் அக்கபாதரின் நியாய சூத்திரம் ஆகும். இதற்குப் பல உரைநூல்கள் தோன்றியுள்ளன. வாற்சாயணர் என்பார் எழுதிய நியாயபாடியம் சிறப்புடையதாகும். அவருக்குப் பின் உத்யோதகரர் எழுதிய பொழிப்புரை நியாய வாக்கியம் ஆகும். அதன்பின் வாசஸ்பதி மிசிரா என்பவர் எழுதிய நியாய வாத்திகத் தாத்பரிய தீகை என்ற உரையும் சிறப்புடையது ஆகும்.

அக்கபாதரின் நியாய சூத்திரத்தில் 16 வகைப் பொருட் பாகுபாடுகள் அமைந்துள்ளன. இந்த 16 வகைக் கோட்பாடுகளை அறிவுக் கோட்பாட்டியல், உலகக் கோட்பாட்டியல், உயிர்க் கோட்பாட்டியல், இறைக் கோட்பாட்டியல் என நான்கிற்குள் அடக்கலாம். இந்தப் பதினாறு பொருள்களும் அளவைகளைப் பற்றியவை ஆதலின் நியாயவாதிகளுக்குரிய இந்த அளவைக் கோட்பாடுகளை வைசேடிகர் ஏற்றுக்கொண்டனர். அதுபோல வைசேடிகரும் நியாயரின் பதினாறு கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டனர். எனவேதான் இருவரையும் ஒத்தநிலையில் கொண்டு அறியப்பெறுகின்றனர்.

நியாயர் குறிப்பிடும் பதினாறுவகைப் பொருள்களாவன,

1. பிரமாணம் - உண்மைப் பொருளை உணர்தற்கு உதவும் கருவியாகிய அளவைகள் பிரமாண அளவைகள் ஆகும்.
2. பிரமேயம் - அறிவதற்கு உரிய பொருள்களாக அமைவன எல்லாம் பிரமேயம் எனப்படும். இங்கு அறியப்படும் பொருள்களை உயிர், உடல், புலன், புத்தி, மனம், இன்ப துன்பம், துக்கம், விடுதலை முதலிய பொருள்களாகக் குறிப்பர்.
3. சம்சயம் - அறியப்படும் கருத்துக்களில் இதுவோ, அதுவோ உண்மைப் பொருள் என ஐயப்படும் ஐயக்காட்சி சம்சயம் ஆகும்.
4. பிரயோசனம் - இது பயனைக் குறிப்பது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5. திட்டாந்தம் - உதாரணத்தைக் குறிப்பது திட்டாந்தம். ஐயம் இல்லாது உணரப்படுவதாகும்.

6. சித்தாந்தம் - வாதி, பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ள அமைவது.

7. அவையவம் - உறுப்புக்களைக் குறிப்பது. பிரதிஞ்ஞை முதலிய ஐந்து உறுப்புக்கள் உள்ளன. கருதல் அளவையோடு கூடியது.

8. தருக்கம் - கருதுகோளினை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்படும் வாதம்.

9. நிர்ணயம் - அறிவினை அடிப்படையாகக் கொண்டு பொருள் உண்மையினை உறுதிசெய்தல்.

10. வாதம் - அளவைகள் தருக்கம் என்பனவற்றின் அடிப்படையில் நிகழ்த்தப்பெறுவது வாதம்.

11. சல்பை - தாம் கூறும் ஏதுக்கள் செல்லாதவை என்றாலும் அது தெரிந்தும் வாதம் புரிதல் சல்பை ஆகும்.

12. விதண்டை - குதர்க்கமும் போலி வாதமும் ஆகும்.

13. ஏதுவாபாசம் - போலி வாதமாகும்.

14. சலம் - இரட்டுற மொழிதலாகிய வாதம் ஆகும்.

15. சாதி - நியாயமற்ற விடை சாதி எனப்படும்.

16. நிர்க்கிரகத்தானம் - தோல்வி ஏற்படும் நிலைக் களன்களை உடையது.

மணிமேகலையில் நியாயம்

பொருள்முதல் வாதமாக அமைந்த நியாயக் கொள்கைகளில் அளவை முறைகளை அடிப்படையாகக் கொண்டு பதினாறுவகைப் பொருள்கள் அறியப் பெறுகின்றன. நியாய மெய்யியல் அமைப்பை மணிமேகலையில் சாத்தனார் சமயக் கணக்கர் தம்திறம் கேட்ட காதையில் முதற்கண் அளவை வாதிகளைக் குறிப்பிடுகின்றார். பொருள்களின் உண்மைத் தன்மைகளை ஆராய்ந்து காண்பதற்குரிய கருவிகளாகிய அளவைகளைப் பற்றி விளக்கிய அத்தன்மை நியாய வாதிகளாகிய நையாயிகளைச் சாரும். எனவே, மணிமேகலையில் நியாயவாதியின் அளவை இயல் கருத்துக்கள் மட்டுமே குறிக்கப் பெற்றுள்ளன. பத்து அளவைகளை அளவைவாதி கூறுவதாக மணிமேகலை குறிப்பிடுகிறது. காட்சி, கருதல், உவமம், ஆகமம், அருத்தாபத்தி, இயல்பு, ஐதிகம், அபாவம், மீட்சி ஒழிவறிவு, உண்டாம்நெறி என்பன பத்து அளவைகளாகும். இதைப் பற்றிய விரிவான செய்திகளை மணிமேகலையில் அளவைவாதி குறிப்பிடுகின்றார். இந்தப் பத்தில் வைசேடிகர் காட்சி, கருதல், ஆகமம், உவமானம், அருத்தாபத்தி என்ற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஐந்தையும் முழுமையாக ஏற்றுக்கொள்வர். இவற்றில் நையாயிகர் காட்சி, கருத்து, ஆகமம், உவமானம் என்ற நான்கை ஏற்றுக்கொள்வர்.

சித்தாந்த சாத்திரத்தில் அருணந்தி சிவாசாரியார் தாம் எழுதிய சிவஞான சித்தியார் சுபக்கத்தின் முதல் பகுதியில் அளவை பற்றிய செய்திகளைத் தருகிறார். சுபக்கத்தின் ஏழாவது பாடல் முதல் பத்தொன்பதாவது பாடல் வரை அளவை பற்றிய இலக்கணங்கள் அமைந்துள்ளன. முதற்பாடலில் அளவை என்பது காட்சி, அனுமானம், ஆகமம், இன்மை, அருத்தாபத்தி, உவமை என ஆறு வகையாகக் கூறப்படுவதுண்டு. மேலும், பாரிசேடம், சம்பவம், உலகவாதம், இயல்பு எனச் சேர்தலும் உண்டு. இந்தப் பத்துப் பிரமாணங்களும் காட்சி, அனுமானம், உரை என்ற மூன்றுக்குள் அடங்கும் என்று முதல் பாடலில் குறிப்பிட்டுப் பின்பு அளவைகளின் விளக்கங்களைத் தந்து செல்கின்றார்.

சிவஞான முனிவர் தன்னுடைய அவையடக்க உரையில் இந்த நியாயம் பற்றிய கருத்துக்களைக் குறிப்பிடுகின்றார். நையாயிகம் ஆவது வைசேடிக நூலில் கூறியவற்றைச் சிறுபான்மை வேறுபடுத்திப் பிரமாணம், பிரமேயம் முதலாகப் பதினாறு வகையாக விரித்துக் கூறுவதாகும். இதற்கு நூல் செய்தவன் அக்கபாத முனிவன் ஆவான். இவர்தம் நூலுக்கு நியாய நூல் என்று பெயர். வைசேடிகருக்கும் நியாயருக்கும் வேற்றுமை மிகக் குறைவே. வைசேடிகர் பொருள் ஏழு எனக் கொண்டனர். நியாயத்தார் பதினாறு வகையாகக் கொண்டனர். நியாயத்தார் அறிவு வரும் வழிக்கு முதன்மை கொடுத்தனர். ஏனெனில் வழி தவறாக இருந்தால் முடிவும் தவறாக இருக்கும். ஆதலால் இவர்கள் முதன்மைப்படுத்தியது பிரமாணம் ஆகும். நியாய வைசேடிகர் இருவரும் கணந்தோறும் தோன்றிக் கணந்தோறும் பொருள் அழியும் எனக் கொண்டனர். எனவே, இவர்களை அருத்தவைநாசிகர் எனக் கூறுவர். புத்த மதத்தார் கொண்ட கணபங்க வாதத்திற்கும் இவர்களுக்கும் வேறுபாடு உண்டு. இவர்கள் சில பொருள்கள்தான் கணந்தோறும் தோன்றி கணந்தோறும் அழியும் என்பர். ஆனால், புத்த மதத்தினரோ எல்லாப் பொருள்களும் கணந்தோறும் தோன்றிக் கணந்தோறும் அழியும் என்பர். இவர்கள் கூறும் கணபங்க வாதத்திற்கு உதாரணமாகக் கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடலாம்.

ஒருவன் உண்ட உணவின் சாரம் அவன் உடலின் உறுப்புக்களாக மாறி ஒவ்வொரு கணத்திலும் வளரும். உடம்பும் அவ்வாறே வளர்ந்து தேய்ந்து வரும். வளர்ச்சியும் தேய்வும் கண்ணால் காணப்பட வில்லையே எனக் கேட்டால் மழையால் குளத்து நீர் நிறைவது முதலில் புலப்படாது. நிறைந்த பிறகே புலப்படுவது போல உடலின் வளர்ச்சியும் அமைகிறது என்பர். நீர் இறைக்கக் குறையும் கிணற்று நீர் உடனே தெரியாது, பலநாள் இறைத்தபின் நீரின்மை தெரிவது போல உடம்பும் தேய்கிறது. இத்தகைய கணபங்கத்தை உடையவர்கள் இவர்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவர்கள் சௌத்திராந்திகரைப் போல பரமாணு காரண வாதிகள் என்றாலும் பரமான்மாவின் இச்சையால் உலகப் பொருள்கள் தோன்றி ஒடுங்கும் என்ற கொள்கையினை உடையவர்கள். இவர்கள் வேதநெறியில் ஒழுகி, வேதத்திற்குப் பிரமாணம் கொள்ளுதலால் புறப்புறச் சமயத்தாரோடு இணையாது புறச் சமயத்தார் ஆயினர் என்று சிவஞான முனிவர் குறிப்பெழுதுவார். இத்தகு நிலையில் நியாயம் என்ற நையாயிகர் மெய்ப்பொருள் கொள்கையில் இடம்பெற்று, மணிமேகலையில் அளவை வாதிகளாகக் குறிக்கப்பெற்று, சைவ சித்தாந்திகளால் பறச்சமய வாதிகளாகக் குறிக்கப்பெற்று நியாய மதத்தார் கொள்கைகள் தமிழகத்தில் வழங்கி வந்தன எனலாம்.

வைசேடிகர்

வைசேடிகர், ஆன்மாவும் உண்மை, புறத்தே உள்ள பொருள்களும் உண்மை என்று கொண்டாலும் உலகத் தோற்றத்திற்குக் காரணமான மூலப் பொருள் ஒன்று என்று கொள்ள இடமே இல்லை. பல்வேறு இயல்புகளை உடைய இவ்வுலகத்திற்கு மூலம் ஒரே ஒரு பொருள்தான் என்பது பொருந்தாது. மூலம் பலவாகும் என்னும் கொள்கை முடிவினை உடையவர் ஆவர்.

கிடைத்துள்ள வைசேடிக நூல்களில் மிகவும் பழமை வாய்ந்தது வைசேடிக சூத்திரம் ஆகும். இதன் ஆசிரியர் கணநாதர் ஆவார். இவர் கி.பி. மூன்றாம் நூற்றாண்டினர் எனக் கருதப்படுகிறார். இதனுடைய உரையாசிரியர் பிரசத்த பாதர் என்பவராவார். இவருடைய உரை நூலுக்குப் பதார்த்த தரும சங்கிரகம் என்பது பெயராகும். இவ்வுரை நூலுக்கு வழிநூலாகத் தசபதார்த்த சாத்திரம் என்ற நூலைச் சந்திரர் என்பார் எழுதியுள்ளார். பின்னர் வியோமசிவனின் வியோமவதி என்ற நூலும், சீதரரின் குசுமாஞ்சலி என்ற நூலும், உதயணரின் கிராணாவழி என்ற உரை நூலும், சீவத்சரின் இலிலாவதி என்ற உரை நூலும் வைசேடிகரின் கருத்துக்களை எடுத்துரைப்பவையாகும். மேலும், கி.பி.1600க்கு உட்பட்டது என்று கருதப்படுகின்ற சங்கரமிஸ்ரர் உபஸ்காரம் கி.பி.1800க்கு உரியதாகக் கருதப்படும் விஸ்வநாதரின் பாசாபரிச்சேதம் என்ற நூலும் இந்நூலுக்கு எழுந்த உரைகளும் வைசேடிகத்தின் கருத்துக்களை விளக்குகின்ற முக்கிய நூல்களாகும்.

இத்தகைய நூல்களால் பெறப்படுகின்ற செய்திகளை மெய்ப்பொருள் இயல் ஆய்வாளர்கள் ஆய்ந்து வைசேடிகத்தின் கொள்கைகளை விரிவாகத் தந்துள்ளனர். மணிமேகலையும் நீலகேசியும் வைசேடிகத்தின் கொள்கைகளைச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளன. வைசேடிகம் பொருள் உண்மையை ஏற்றுக் கொண்டதால் சைவ சாத்திர நூல்கள் புறச்சமயத்தில் ஒன்றாக இச்சமயத்தைக் கொண்டதுடன் நின்று, வைசேடிக நியாயத்தை மறுக்கவில்லை.

வைசேடிகம் பௌத்தக் கொள்கையிலிருந்து மாறுபட்டு ஐம் பொறிகளாலும் மனத்தாலும் அறியப்படும் பொருள்களை வகுத்து அவற்றின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உண்மைகளை ஒத்துக் கொண்டது. இதனால் வைசேடிகம் பொருள் முதல்வாதக் கொள்கையினை உடையது எனக் கருதப்பட்டது. மனத்தால் அறியப்படுகின்ற பொருள்களை வைசேடிகம் அறுவகையாகப் பகுத்துக் கூறுகின்றது. இப்பொருள்களைப் பதார்த்தம் என்று கூறுவர். இது தமிழில் சொற்பொருள் என்பதாகும். இந்த அறுவகைப் பொருள்களை மணிமேகலை சுட்டிக்காட்டுகிறது.

> **"பொய்தீர் பொருளும் குணமும் கருமமும்**
> **சாமா னியமும் விசேடமும் கூட்டமும்**
> **ஆம்ஆறு கூறும்..."** *(மேகலை.27:242-244)*

என்பது மணிமேகலையில் இடம்பெற்ற ஆறு பொருள்களைப் பற்றிய செய்தியாகும்.

மணிமேகலையில் வைசேடிகம்

இந்திய மெய்ப்பொருளியலில் இடம்பெற்ற வைசேடிகம் தமிழ் நாட்டிலும் பரவியிருந்தது என்பது மணிமேகலை கொண்டும் நீலகேசி கொண்டும் அறியமுடிகிறது. சமயக் கணக்கர் தம்திறம் கேட்ட மணிமேகலையின் காதையில் வைசேடிகர் தம் மதத்தின் கருத்துக்களைச் சுருக்கிக் கூறுகின்றார். வைசேடிகர் கொள்ளுகின்ற நூற்பொருள் அழியாத பொருளும் குணமும் செயலும் பொதுவும் சிறப்பும் கூட்டமும் என்று வகுத்துக் கூறப்படுகின்ற ஆறுவகையின் கண் அடங்கும். அவற்றுள் பொருள் என்று சொல்லப்படுவது பண்பும் செயலும் உடையதாய் எந்தத் தொகுதிப் பொருள்களுக்கும் காரணம் ஆகும். அத்தொகைப் பொருள் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், திசை, காலம், உயிர், மனம் என்னும் ஒன்பதாகும். இவ் ஒன்பதனுள் முதலில் நின்ற நிலம், ஒலி, ஊறு, நிறம், சுவை, நாற்றம் என்ற ஐந்தையும் தன்பால் எஞ்சாது பயிலுகின்ற குணங்களாகக் கொண்டதாகும். நீர், தீ, காற்று ஆகாயம் என்ற நான்கும் முன் கூறப்பட்ட ஐந்து குணங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குணத்தைக் குறைவாகக் கொண்டதாகும். இங்கு கூறப்பட்ட பொருள்களின் குணங்களாகிய ஓசை, ஊறு, நிறம், நாற்றம், சுவை என்பன பெருமையும், சிறுமையும், வன்மையும், மென்மையும், சீர்மையும், நொய்ம்மையும், வடிவம் என்னும் தன்மையும், பக்கமும் ஆகிய பலவற்றைக் கொண்டனவாகும்.

மேலும், இங்கு ஓதப்பட்ட பொருளும் குணமும் ஆகிய இரண்டும் தொழில் செய்தவற்கு உரியன. பொது என்பது பொருள்களின் உண்மைத் தன்மையை உணர்த்தும். அதாவது, போதலும் வருதலும் எல்லாப் பொருள்களுக்கும் பொதுக்குணம் ஆதலால் சாதலும் நிகழ்தலும் அப்பொருள்களுக்கு எல்லாம் பொதுத் தன்மையாகும். இனி சிறப்பு என்பது அணுவைக் குறிப்பதாகும். கூட்டம் என்பது பொருளும் குணமும் ஆகத் தம்முள் கூடுவதாகும் என்ற கருத்துக்களை மணிமேகலையின் வைசேடிகவாதி குறிப்பிடுகின்றார். மணிகேமலையில் இடம்பெற்ற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வைசேடிகர் கூற்றில் கடவுளைப் பற்றிய எந்தச் செய்தியும் இல்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

சைவ சமயச் சாத்திரங்களில் வைசேடிகம் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. சிவஞான போத அவையடக்கச் செய்யுளுக்கு உரை எழுத வந்த சிவஞானமுனிவர், இக்கொள்கை பற்றி விளக்கம் தருகின்றார். சமயங்களைப் புறப்புறச் சமயம் என்றும் புறச் சமயம் என்றும் அகப்புறச் சமயம் என்றும் அகச் சமயம் என்றும் நால்வகைப்படுத்துவர். உலகாயதம், பௌத்த சமயத்தின் மாத்தியமிகம், யோக சாரம், சௌத்திராந்திகன், வைபாடிகம் என்னும் நான்கும் ஆறுகதம் எனப்படும் சமணமும் ஆகிய ஆறு சமயங்களும் புறப்புறச் சமயம் என்று வகைப்படுத்துவார். இந்த ஆறு சமயத்தினரும் வேதங்களையும் சிவாகமங்களையும் உண்மை நூல்களாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். என்றாலும் தத்தமக்குரிய கொள்கையில் நிற்பதால் அவர்களும் ஒரு சமயவாதியாகிப் புறப்புறச் சமயத்தார் ஆயினர். தருக்கம், மீமாம்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என்பன புறச் சமயங்கள் ஆகும். இச்சமயத்தினர் வேதங்களைப் பொதுவாக உடன்படுகின்றனர். ஆகமங்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வயிரவம், ஐக்கியவாத சைவம் என்ற ஆறும் அகப்புறச் சமயம் எனப்படும். இவற்றுள் முதல் ஐந்து சமயத்தினர் வேதம், சிவாகமம் இரண்டையும் பொதுவாக ஏற்றுக்கொள்வர். ஆனால், அதே நேரத்தில் தத்தம் சமயத்திற்கு என்று தனித்தனிச் சிறப்பு நூல்களையும் உரை அளவையாகக் கொள்வார்கள். வேதங்களால் விலக்கப்பட்ட ஒழுக்க நெறிகளைத் தமக்கு உரியனவாகக் கொண்டு அதன்படி நடப்பவர்கள், இறுதியாகக் கூறிய ஐக்கியவாத சைவர் இவர்களிலிருந்து மாறுபட்டு வேத ஆகமங்கள் இரண்டையும் சிறப்பான உரையளவையாகக் கொள்வார்கள். வேத ஆகமம் கூறியபடி விலக்கப்பட்டவற்றைக் கைவிடுவார்கள். ஆனால், இவர்கள் ஆணவத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவேதான் சித்தாந்த சைவத்திலிருந்து வேறுபட்டனர்.

பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவ சங்கிராந்த வாத சைவம், ஈசுவர அவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம் என்னும் ஆறும் அகச் சமயங்களாகும். இவற்றுக்குரியோர் சிவனையே பரம்பொருளாகக் கொண்டு வழிபடும் சமயத்தார் ஆவர். இவர்கள் சைவ சித்தாந்தத்தில் பொருள்களின் தன்னியல்பு, பொதுவியல்பு கூறுகின்ற பொழுது சற்று முரண்பட்டு அகச்சமயத்தினர் ஆயினர். சிவஞான முனிவர் இவ்வாறு நால்வகைச் சமயத்தாரைப் பற்றிய குறிப்புகளைத் தந்து, புறச் சமயத்தைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது தருக்கம் பற்றிய விளக்கம் தருகின்றார். தருக்கமாவது வைசேடிகம், நையாயியம் (நியாயம்) என இருவகைப்படும். அவற்றுள் வைசேடிக நூலில் கூறும் பொருளாவன - திரவியம், குணம், தொழில், சாதி, விசேடம், சமவாயம், இன்மை எனப் பதார்த்தம் எழுவகைப்படும். அவற்றுள் திரவியம் - நிலம், நீர், தீ, வளி, ஆகாயம், காலம், திசை, ஆன்மா, மனம் என ஒன்பது வகைப்படும். அவற்றுள் நிலம் முதலிய நான்கும் அநித்தப் பொருள்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவற்றின் காரணங்களாகிய நால்வகைப் பரமாணுக்களும் ஆகாயம் முதலிய ஐந்தும் நித்தப்பொருள்கள். அவற்றுள் ஆகாயம் காலம், திசை மூன்றும் ஒரோ ஒன்றேயாய் வியாபகமாய் உள்ளன. ஆன்மாக்கள் வியாபகமாய் எண்ணிறந்தன ஆகும். மனம் அணு அளவிற்றாய் ஆன்மாக்கள்தோறும் வெவ்வேறாய் இருக்கும். ஆன்மா பரமான்மா, சீவான்மா என இருவகைப்படும். பரமான்மா முற்றுணர்வு உடையவன். எல்லாம் வல்லவன். அவன் இச்சை வயத்தால் உலகம் தோன்றி ஒடுங்கும். அவனால் செய்யப்பட்டது வேதம். இனிச் சீவான்மாக்கள் சிற்றறிவினராய் வினைக்கு ஈடாகப் பிறந்து இறந்து, இன்ப துன்பங்களை அனுபவிக்கும். இனிக் குணங்களாவன திரவியம் பற்றுக் கோடாக நிகழ்வன. அவை உருவம், சுவை, நாற்றம், ஊறு முதலியனவாக இருபத்தி நான்கு வகைப்படும். இவற்றுள் புத்தி, இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு, முயற்சி, அறம், பாவம் என்னும் எட்டுக் குணமும், பாவனை என்னும் வாதனையும் சீவான்மாக்களுக்குச் சிறப்புக் குணங்களாகும். இவற்றுள் புத்தி, விருப்பு, முயற்சி மூன்றும் பரமான்மாவுக்குச் சிறப்புக் குணங்கள். பரமான்மாவின் குணங்களாகிய புத்தி முதலிய மூன்றும் நித்தியம். சீவான்மாக்களின் புத்தி முதலிய மூன்றும் அநித்தியம்.

அடுத்துத் தொழிலாவன எழும்பல், வீழ்தல், வளைதல், நிமிர்தல், நடத்தல் என ஐவகைப்படும். சாதியாவது பல பொருள்களுக்குப் பொதுவாகிய தன்மை. அது பரம், அபரம் என இருவகைப்படும். விசேடமாவது ஒவ்வொரு பொருளுக்கே உரிய தன்மையாகும். அவை நிலவணு முதலிய பரமாணுக்களும் ஆகாயம் முதலிய ஐந்தும் ஆகிய நித்தப் பொருள்களின் வேறுபாடு உணர நிற்பனவாய்ப் பலவாகும். சமவாயமாவது அவையவ முதலியவற்றிற்கு அவையவி முதலியவற்றோடு நீக்கமின்றி உளதாகிய இயைபு. அஃது ஒன்றேயாம். இன்மையாவது முன்இன்மையும், அழிவுபாட்டின்மையும், இன்மையும், ஒன்றின் ஒன்று இன்மையும் என நான்கு வகைப்படும். இவ்வாறு கூறிய ஏழுவகைப் பொருள்களின் சிறப்பியல்பு, பொது இயல்பு, வேற்று இயல்பு உணரவே உடம்பு முதலியவற்றின் வேறாகிய ஆன்மாவின் இயல்பு விளங்கும். விளங்கவே உடம்பு முதலியவற்றை நான் என்று எண்ணிய மித்தை உணர்வு கழியும். அது கழியவே முயற்சியின்மையில் அறம் பாவங்கள் இல்லையாய்ப் பிறவி ஒழியும். ஒழியவே வரக்கடவதாகிய துன்பங்கள் இன்மையின், உடம்பு முகந்துகொண்ட வினைப்பயன் நுகர்ச்சியால் கழிவுழி, இறுதித் துன்பம் கெட்டு மனத்தோடு கூடுதற்கு ஏதுமின்மையின், அறிவின்றிப் பாடாணம் போல் கிடப்பதே முத்தி என்பதாம். வைசேடிக நூல் செய்தவன் கணநாதன் இவன் என்று சிவஞானமுனிவர் வைசேடிக மதத்திற்குரிய கொள்கைகளைக் குறிப்பிட்டுக் காட்டுவார். வைசேடிகக் கருத்து விரிவைச் சிவஞான முனிவர் உரையில் காணமுடிகிறது. தமிழகத்தில் சிவஞான முனிவர் காலத்தில் வைசேடிகம் ஆன்மாவை சீவான்மா என்றும் பரமான்மா என்றும் பிரித்து, பரமான்மாவை ஒத்த நிலையில் வைத்து எண்ணியிருக்கிறது என்று தெரியவருகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவ்வாறு வைசேடிகக் கொள்கைகள் இந்திய மெய்ப்பொருளியலில் இடம்பெற்று வளர்ந்ததோடு மணிமேகலை, நீலகேசி காலங்களில் தமிழகத்தில் வழக்கில் இருந்தும், கி.பி.18-ஆம் நூற்றண்டைச் சேர்ந்த சிவஞான முனிவர் காலத்திலும் சைவ சித்தாந்தவாதிகளால் உணரப் பெற்றிருந்தமையும் குறிப்பிடத் தக்கதாகும். சங்க இலக்கியங்களில் தனித்து இச்சமயக் கொள்கைகளைக் காண முடியவில்லை. ஐம்பூதச் சேர்க்கை, உயிர், இறை பற்றிய செய்திகள் ஆகியவை மற்ற சமயங்களுக்கும் உரிய நிலையாய் இருப்பதால் நியாய வைசேடிகத்திற்கும் அக்கருத்துக்கள் உடன்பாடாகக் கொண்டு, இவை பற்றிக் காணப்பெறும் செய்திகள் இம்மதங்களுக்கு உரியவை எனக் கொள்ளலாம்.

8. மீமாம்சை

இந்திய மெய்ப்பொருளியலில் சைவ சமயத் தத்துவவாதிகளால் மறுக்கப்படுகின்ற சமயங்களில் ஒன்று மீமாம்சை ஆகும். மீமாம்சை என்ற வடசொல்லின் பொருள் முறையாகச் செய்யப்படும் ஆராய்ச்சி அல்லது விசாரணை அல்லது விமர்சனம் என்பதாகும் (கலைக் களஞ்சியம், தொகுதி -8- ப.340). ஒரு பொருளைப் பற்றிய உண்மையையும் பொய்யையும் அறிவைக் கொண்டு ஆராய்ந்து தெளிதல் என்பது மீமாம்சை என்ற பொருளால் பெறப்படுகிறது. இம்மதக் கொள்கைகளை நூலாகத் தந்தவர் சைமினி முனிவராவார். இவருடைய காலம் கி.மு.400- 300-க்கு இடைப்பட்டதாகும் என்பார் கி.லெட்சமணன். இவர் எழுதிய நூல், சைமினியின் சூத்திரங்கள் என்று அழைக்கப்படுகிறது. இவருடைய காலத்திற்குப் பிறகு இவருடைய சூத்திரங்களுக்குப் பலர் உரையும் விளக்கமும் எழுதியுள்ளனர். இப்பொழுது கிடைக்கும் உரைகளில் மிகப் பழமையானது சபர பாஷ்யம் என்ற உரையாகும். இந்த உரை சபரசாமி என்பவரால் எழுதப்பெற்றது. இவருடைய உரைக்குக் கி.பி.7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குமரிலபட்டர் என்பார் வாத்திக உரை எழுதினார். குமரிலபட்டர் காலத்திலேயே வாழ்ந்த பிரபாகரர் என்பவரும் வாத்திக உரை எழுதினார். இவருடைய உரைக்குப் பிருகதீ என்ற பெயர் சூட்டப்பெற்றது. பின்னர் இவ்விருவரின் நூல்களுக்கும் விளக்கவுரைகள் பல வந்தன. குமரிலபட்டரின் கொள்கைகளை விளக்கிய பலரில் அவருடைய மாணவர் மண்டலமிசிரர் என்பார் எழுதிய உரை சிறப்படைந்தது. அதுபோல பிரபாகரரின் உரைக்கு விளக்கம் தந்தவர்களில் சாலிகநாதர் என்பவர் குறிப்பிடத்தக்கவர் ஆவார். இவர் பிரபாகரரின் கொள்கையைத் தெளிவாக விளக்கும் பிரகரண பஞ்சிகா என்ற நூலைப் படைத்தார். இவ்வாறு சைமினியின் சூத்திரங்களுடைய பரிணாம வளர்ச்சியாகப் பல நூல்கள் எழுந்து மீமாம்சையின் கொள்கைகள் உணர்த்தப்பட்டன.

இருவகைப் பிரிவுகள்

இந்திய மெய்ப்பொருளியல் வரலாற்றில் மதங்களை மூன்று வகையாகப் பிரிப்பார்கள். வேதத்தை எதிர்ப்பவை முதல் பிரிவு. இரண்டாவது பிரிவு வேதத்தை ஏற்பது. ஆனால், அதே சமயத்தில் வேதங்கள் கூறுவதைத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தங்களுடைய கொள்கையால் நிலைநாட்டுவது. மூன்றாவது பிரிவு எந்த ஆதாரத்தையும் வேண்டாது, வேத வாக்கை அப்படியே ஏற்றுக்கொண்டு அதன்வழி தம் கருத்தைக் கூறுவது. வேதங்களை மிக உயரிய நிலையில் வைத்துப் போற்றி, வேதங்கள் கூறுவனவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும், அவை பொய்யல்ல, அதனைப் பற்றி நம்முடைய அறிவைக் கொண்டு ஆராய வேண்டிய தேவையில்லை என்ற கொள்கையைக் கொண்டவர்கள் மீமாம்சர் ஆவார்கள். அவர்கள் வேத வாக்கியங்களை அப்படியே எடுத்துக்கொண்டு அவற்றுக்குப் பொருள் கூறுகின்றபொழுது, தாங்கள் கொடுத்த பொருள் சரியா என்ற நிலையிலேயே ஆராய்ச்சியைத் தொடங்கினர். அந்தச் சொல் பொருள் ஆராய்ச்சியே அவர்களில் வேறுபாடுகளை உருவாக்கிற்று. சைமினியின் சூத்திரங்களுக்கு உரை எழுதிய சபர முனிவராம் சபரசாமியின் பாஷ்ய உரையை ஏற்காது, குமரிலபட்டர் தன்னுடைய உரை நூலைச் செய்தார். இவர் வழி வருகின்ற உரைகளைக் கொண்டு மீமாம்சையின் ஒரு பகுதி வளர்ந்தது. எனவே, அவர் கருத்தை ஒட்டி வளர்ந்த கருத்துக்கள் பட்டாச்சாரியார் மீமாம்சை என்றும் பட்டாச்சாரியார் மதம் என்றும் கொள்ளப்பெற்றன. குமரிலபட்டரின் மாணவரான பிரபாகரர், சபர முனிவரின் பாஷ்ய உரையை ஆதரித்துத் தன்னுடைய விளக்கத்தைத் தந்தார். எனவே, அவருடைய கொள்கை வழி வந்தவை பிரபாகர மீமாம்சை என்றும் பிரபாகர மதம் என்றும் அழைக்கப்பெற்றன. இவர்கள் இரண்டு பேருடைய உரைகளும் வேதத்தின் முற்பகுதியான பிரமாணங்களை ஆதாரமாகக் கொண்டு எழுந்தவையாகும்.

தொடக்ககாலத்தில் மீமாம்சை, பிரமாணத்தை அடிப்படையாகக் கொண்டு கருத்துக்களை விளக்கிய காரணத்தால் பூர்வ மீமாம்சை என்று அழைக்கப்பட்டது. வேதத்தின் பிற்பகுதியாகிய உபநிடதங்களை அடிப்படையாகக் கொண்டு கொள்கைகளை வகுத்ததால் வேதாந்தத்தையே உத்திர மீமாம்சை என்றும் வழங்கினர். ஆனால், காலப்போக்கில் மீமாம்சை என்ற சொல் பூர்வ மீமாம்சையை மட்டும் வழங்க, வேதாந்தத்தை உத்திர மீமாம்சை என்று வழங்கப்பட்ட நிலை மறைந்துபோயிற்று. ஆதலால் மீமாம்சை என்ற ஆய்வு பிற்காலத்தில் பூர்வ மீமாம்சை என்ற பெயரிலேயே நடைபெற்றது. இந்தப் பூர்வ மீமாம்சை தான் பட்டாச்சாரியார் மதம் என்றும் பிரபாகரர் மதம் என்றும் இரு பகுதிகளாகப் பிரிந்து வழங்கலாயிற்று. இந்த வழக்கம் சைவ சித்தாந்த சாத்திரங்களில் ஒன்றான சிவஞான சித்தியார் காலத்தில் வழங்கி வந்தமையால், இரண்டு மதங்களும் தனித்தனியாகச் சுட்டப்பட்டு மறுக்கவும் பெறுகின்றன.

மீமாம்சையின் கொள்கைகளைப் பற்றி பூர்வ மீமாம்சை என்ற பெயரில் விளக்குவதற்குப் பல நூல்கள் இப்பொழுதும் நிலவுகின்றன. மீமாம்சர் பொருளுக்கும் அதன் குணங்களுக்கும் உள்ள சம்பந்தம் பற்றி ஆராய்ந்தனர். குணமும் குணியும் ஒன்றா வேறா என்று ஆராய்ந்து, ஒன்றுமல்ல வேறுமல்ல ஒன்றும் வேறும் என்று முடிவு கூறுகின்றனர். பஞ்சபூதங்கள் அணுக்களால் ஆனவை. நையாயியர்கள் கருதுவது போல காண்பதற்கு அரியன அல்ல.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காணக் கூடியனவே. உதாரணமாக ஒளிக் கற்றையில் இடம்பெறுகின்ற காற்றுத் துகள்கள் காண்பதற்கு உரியனவாக அமைவன போல, பொருள்களின் அணுக்களை ஆராய்ந்தால் அறியலாம். இந்த அணுககளால் ஆகிய மூலப்பொருள்கள் ஒன்று ஆகும். அது மாற்றம் பெறுவதால் பல்வகைப்படும். மேலும், மீமாம்சகர் சற்காரிய வாதத்தை ஏற்கின்றனர். ஆகாயம், காலம், இடம், ஆன்மா, மனம், ஓசை யாவும் என்றென்றும் உள்ளவை. ஆன்மா மனத்தால் நேராக அறியக்கூடிய ஒரு பொருளாகும். அழியும் உடல், அறி கருவிகள், அறிவு ஆகியவற்றிலிருந்து ஆன்மா வேறுபடுகின்றது. ஆன்மாவை உணர்வு என்று கூறலாம். ஆன்மா என்றும் அழியாதது. அறியும் பொருளாக விளங்குவது. இது பல வகையாகும் என்று ஆன்மாவைப் பற்றிய கருத்துக்களை மீமாம்சகர் தருகின்றனர்.

வேள்விகளுக்கும் வேள்விகளால் விளையும் பயன்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்தனர் மீமாம்சகர். இரண்டுக்கும் தொடர்பு இருப்பதாகக் கருதினர். இதனை அபூர்வம் என்றனர். வேள்விகள் செய்வோனது ஆன்மாவினுள் பயன்களைப் பதிய வைக்கின்றன என்று நம்பினர். சுவர்க்கத்தை விரும்புபவர்கள் வேள்வி செய்ய வேண்டும் என்றனர்.

கடவுளைப் பற்றி குமரிலபட்டர் எதையும் குறிப்பிடவில்லை. வேதத்தை மதித்தாலும் கடவுள் இல்லை என வாதிப்பதற்கு அவர்களின் வேதப்பற்றே கூடக் காரணமாக இருக்கலாம். வேதத்தை அடிப்படைப் பிரமாணமாக எண்ணும் அவர்கள், வேதங்கள் உணர்த்தும் உண்மையை ஏற்காதது வியப்பாக இருக்கிறது. வேதம் மனிதனாலோ கடவுளாலோ செய்யப்பட்டதில்லை. எனவே, அதன் அடிப்படையில் கடவுட் கொள்கையை மறுத்தனர் போலும். இத்தகைய கருத்துக்களை எல்லாம் பலவித நோக்கில் தருகின்ற மீமாம்சையாம் பூர்வ மீமாம்சை பற்றி இந்திய மெய்ப்பொருள் இயலார் தொகுத்துத் தந்துள்ளனர்.

மணிமேகலையில் மீமாம்சை

மீமாம்சைக் கொள்கைகள் மணிமேகலையில் தனி நிலையில் அமையாது அதாவது சைவவாதி, நிகண்டவாதி போல பூர்வ மீமாம்சை வாதி என்று அமையாமல், மணிமேகலை ஆசிரியரால் அங்கங்கே பூர்வ மீமாம்சைக் கருத்துக்கள் சுட்டிக்காட்டப் பெற்றுள்ளன. தொடக்கத்தில் அளவை வாதியின் கொள்கை இடம்பெற்ற பகுதியில் சைமினி குறிக்கப்பெறுகிறார்.

**"வேத வியாதனும் கிருத கோடியும்
ஏதமில் சைமினி எனும் இவ்வாசிரியர்
பத்தும் எட்டும் ஆறும் பண்புறத்
தத்தம் வகையால் தாம்பகர்ந்திட்டனர்"** *(மேகலை.27:5-8)*

என்ற பகுதியில் சைமினி பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. இதன்பொருள் அளவைவாதி, வேதவியாதனும் கிருதகோடியும் குற்றமில்லா சைமினியும் என்று கூறப்படுகின்ற பத்து அளவையையும், எட்டு அளவையையும், ஆறு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அளவையையும் தாம் ஆராய்ந்துகண்ட முறைமையினாலே அவரவரே விளக்கிக் கூறினர். எனவே, பூர்வ மீமாம்சைக்கு உரிய சைமினி ஆறு அளவைகளை ஒப்புக் கொண்டார் எனத்தெரிகிறது. இதே காதையில் சைமினியைப் பிறிதோரிடத்திலும் குறிப்பிடுகின்றார்.

"பாங்குறு உலோக யதமே பௌத்தம்
சாங்கியம் நையா யிகம்வை சேடிகம்
மீமாஞ் சகமாம் சமய ஆசிரியர்
தாம்பிரு கற்பதி சினனே கபிலன்
அக்க பாதன் கணாதன் சைமினி" (மேகலை.27:78-82)

இதன்பொருள் - அளவைப் பகுதிகளை மேற்கொள்ளுகின்ற சமயங்கள் உலகாயதம், பௌத்தம், சாங்கியம், வைசேடிகம், மீமாம்சை ஆகும். இதன் ஆசிரியர்கள் பிருகற்பதியும், புத்தனும், கபிலனும், அக்கபாதனும், கணாதனும், சைமினியும் என்னும் இம்முனிவர்கள் ஆவர் என்பதாகும் என்று சைமினியைக் குறிப்பிட்டு அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட காட்சி, கருதல், நூல், உவமன், அத்தாபத்தி, அபாவ அளவைகள் ஆறினையும் இப்பகுதியில் மணிமேகலை ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

இதே காதையில் அமைந்திருக்கின்ற வேதவாதியின் கருத்துக்களை மீமாம்சையின் கருத்துக்களாகப் பேராசிரியர் சோ.ந.கந்தசாமி அவர்கள் தம்முடைய இந்தியத் தத்துவக் களஞ்சியம் பகுதி - 2ல் குறிப்பிடுவார். இப்பகுதியில்தாம்ஒன்றிலிருந்தும்பிறவாதசிறப்பினைஉடையஆரணமாகிய வேதத்திற்குத் தோற்றமும் இறுதியும் இல்லை. அது கூறும் நெறியே வீடு எய்தும் நெறி என்று கூறப்படுகின்ற பகுதியை எடுத்துக்கொண்டு, வேதத்தை யாரும் படைக்கவில்லை என்ற கருத்து மீமாம்சகருக்கு உரியது என்பதால் பேராசிரியர் அவர்கள் வேதவாதியின் கருத்தை மீமாம்சையின் கருத்தாகக் கருதுகிறார். இது ஏற்கக் கூடியது ஆகும். ஏனென்றால் மதங்களையும் ஆசிரியர்களையும் குறிப்பிடுகின்ற பகுதியில் மீமாம்சையையும் அதன் ஆசிரியர் சைமினியையும் குறிப்பிடுகின்ற மணிமேகலைக் காப்பியத்தில், அம்மதத்தின் கருத்து தனித்து இடம்பெறாது இருக்க இயலாது. மேலும், மீமாம்சகர் வேதத்தை உடன்பட்டவர்கள். எனவே, வேதவாதியின் சார்பில் மீமாம்சையின் கருத்தை மணிமேகலை ஆசிரியர் கூறியிருக்க வேண்டும் என்பதால் பேராசிரியரின் கருத்து ஏற்புடையதாகும். இவ்வாறு மணிமேகலையில் மீமாம்சை மதமும் அதற்குரிய நூலின் ஆசிரியரும், அம்மதத்தார் வேதத்தை ஏற்றுக்கொண்ட நிலையும் அளவை முறைகளும் கூறப்பெற்றுள்ளன எனலாம்.

சித்தாந்தத்தில் மீமாம்சை

சைவ சித்தாந்த சாத்திரங்களில் ஒன்றான சிவஞான சித்தியார், பரபக்கத்தில் பூர்வ மீமாம்சை எடுத்துக்கொள்ளப்பெற்று, பட்டாச்சாரியார் மதம் என்றும் பிரபாகரன் மதம் என்றும் இரண்டாகக் குறிக்கப்பெற்றுக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொள்கைகளும், மறுப்புகளும் தரப்பெற்றுள்ளன. சித்தியாரில் முதலில் அறிமுகப் படுத்துப்படுவது பட்டாச்சாரியன் மதமாகும். சைமினி செப்பும் நூலின்/ நீதியே கொண்டு பட்டாச்சாரியன் நிகழ்த்தும் நீர்மை (பாடல்.181) என்ற அறிமுகப் பாடற்பகுதி பூர்வ மீமாம்சையின் பட்டாச்சாரியன் மதம் என்பதை நிலைநாட்டுகிறது. இவர்களின் கோலம் அறிமுகப்படுத்தப்படாமல் கொள்கையே அறிமுகப் படுத்தப்படுகிறது. வேதம் மட்டுமே உள்ளது. இறைவன் என்பான் இல்லை. வீடுபேற்றை அடையச் சோமயாகம் முதலிய யாகத்தைச் செய்ய வேண்டும் என்று கூறிய பட்டாச்சாரியாரின் மதம் என அறிமுகப்படுத்தப்படுகிறது. இவ்வாறு முதல் பாடலில் (பாடல்.181) பட்டாச்சாரியார் மதம் அறிமுகப்படுத்தப் பெற்று அதன்பின் பன்னிரெண்டு பாடல்களில் கொள்கைகள் விளக்கப்பெறுகின்றன. அதன்பின் பத்துப் பாடல்களில் அதன் மறுப்புக்கள் தரப்பெற்றுள்ளன.

பட்டாச்சாரியார் மதக் கொள்கைகள்

1. உலகில் உள்ள உயிர்களுக்குக் காமம், வெகுளி, மயக்கம் போன்ற குற்றங்கள் இயல்பாகவே உள்ளனவாகும். இக்குற்றங்களை உடைய எந்த ஒரு ஆன்மாவும் வேதங்களைத் தந்தால் அவ்வேதங்களில் உண்மை இருக்காது. குற்றம் உடையதாகவே இருக்கும். மனிதன் தான் கற்றிடும் நூல்களின் அளவிலேயே அறிவைப் பெறுகின்றான். கல்வி இல்லையேல் மனிதன் குழந்தையாகவும், ஊமையாகவும், அறிவற்றவனாகவும் விளங்குகின்றான்.

2. தானே தோன்றிய வேதங்களைக் கூறுவதற்கும் கடவுள் உண்டு என்றும் அக் கடவுள் உயிர்க்குரிய தன்மை உடையவன் அல்ல என்றும் யாரேனும் கூறினால் அது முரண்பாடு உடையதாகும். ஏனென்றால் வேதத்தைச் சொன்னான் கடவுள் என்றால் அவனுக்கு உருவம் வேண்டும், அப்படி உருவத்தை உடையவன் ஆயின் அவன் ஆன்மாவுக்குரிய தன்மையை உடையவன் ஆகின்றான். அப்படிச் சரீரம் உடைய ஆன்மாத் தன்மை உடைய கடவுள் தான் கற்ற அளவே அறிவுடையவன் ஆகின்றான். மேலும், அவனுக்கு வடிவில்லை ஆயின் வேதத்தைச் சொல்லுகின்ற தன்மையும் இல்லை. ஆதலால் வேதமானது தானே தோன்றியது ஆகும்.

3. தேவர்களும், முனிவர்களும், சித்தர்களும், மனிதர்களும் வேதத்தைச் சொன்னவர் இன்னார் என்று தமக்குத் தெரியாது என்பதில் உடன்பட்டவர் ஆவர். எனவே, வேதமானது காலங் காலமாகப் பழமை உடையதாகும். கிணற்று நீர்போலத் தானே தோன்றியது என்ற உவமையையும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் கிணறு ஒருவனால் தோண்டப்பெற்று அதில் நீர் தோன்றுகிறது. மேலும், கிணற்றுநீர் மறுமை இன்பம் தராது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. நான்கு வேதங்களும் ஆறு அங்கங்களைப் பெற்றுள்ளன. மூன்று உப வேதங்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டன. வேதங்களில் கூறப்படாத பொருள் வேறு எந்த நூலிலும் இல்லை. வேதங்கள் தோற்றமும் முடிவும் அற்றவை, நித்தியமானவை. அதன் இயல்பு ஒருபோதும் மாறுவதில்லை.

5. படைத்தல், காத்தல், அழித்தல் எனப் பல செய்திகளும், செய்திகள் நடைபெறுகின்ற நெறிகளும் ஆகிய பல்வேறு வகைப்பட்ட செய்திகள் வேதங்களில் எடுத்துரைக்கப்படுகின்றன. ஆதலால் வேதங்களில் எடுத்துரைக்கப்படுகின்ற கருத்துக்கள் ஒரே இயல்புடையன என்று கூறமுடியாது. மூன்று காலத்தையும் வேதங்களால் உணர்ந்து அதன்வழி ஒழுகி அறிந்தவருடைய நெஞ்சம் மெய்ம்மையே பொருந்தி நிற்கும்.

6. வேதங்கள் நான்கும் குற்றமற்ற சொற்களால் கூறப்பட்டவை ஆகும். பகுதி, விகுதி, பகாப்பதம் என்னும் அவையவங்களை உடையது. மந்திரங்கள் ஓதுவது, அவற்றை ஓதி யாகங்கள் செய்வது ஆகிய வழிமுறைகள் வேதங்களில் கூறப்பட்டுள்ளன. வேதம் கூறியபடி வேள்விகளைச் செய்தால் வீடுபேறு அடையலாம்.

7. உலகம் அழிவதும் தோற்றம் இல்லாததும் ஆகும். எனவே, காலத்தோடு பொருந்துவது இல்லை. காலத்தைக் கடந்த ஒன்றாகும். உலகத்தைத் தோற்றுவிக்க, காக்க கடவுள் தேவையில்லை. உலகமானது அநாதியாய் உயிர்களோடு சம்பந்தம் உள்ளதாய், புண்ணிய பாவங்களோடு கூடியதாய், நிலம் முதலிய தத்துவங்களோடு என்றைக்கும் உள்ளதாய் விளங்குகிறது.

8. ஆன்மா அழிவில்லாதது. எங்கும் பரந்து நிற்பது. அறிவே வடிவாகக் கொண்டது. புத்தி முதலாகிய தத்துவங்களோடு பொருந்துகின்றபொழுது தனக்குரிய இயல்பு மாறாதது, அருவமானது. புண்ணிய பாவங்களுக்கு ஏற்ப உடலாகிய உருவத்தைப் பெற்று, இந்திரியங்கள் வழியாகக் கண்டு கேட்டு உயிர்த்து வருகின்ற உணர்வை உடையது.

9. ஆன்மா முன் பிறப்புக்களில் மனம், மொழி மெய்களால் இயற்றிய புண்ணிய, பாவங்கள் செய்த உடம்போடு தூலநிலை கெட்டு, சூட்சும நிலை பொருந்தும். அவ்வாறு பொருந்துகின்ற பொழுது அதனுடைய வினைப்பயன்கள் ஆன்மாவோடு என்றைக்கும் பற்றியபடியே இருக்கும். மீண்டும் உலகில் பிறப்பு எடுக்கின்ற பொழுது பற்றி நின்ற வினைப்பயன்களும் இப்பிறப்பில் பொருந்தி இருக்கும். இது எதுபோல என்றால் வைக்கோல், தழை முதலானவை உரமாக வயலில் இட்டபோது, அவற்றின் வடிவம் அழிந்து, அவற்றின் ஊட்டச் சத்தானது வயலுக்குள்ளே கிடந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மீண்டும் பயிர் செய்யும்பொழுது அப்பயிருக்கு உரமாகப் பயன் தருவது போன்றதாகும் என்று பட்டாச்சாரியன் கூறுகின்றான்.

10. வேதங்களில் கூறப்பட்ட கிரியைகளை நாள்தோறும் தவறாது செய்துவந்தால் நலத்திலிருந்து நீங்கார். தாம் தாம் விரும்பிய செல்வங்களையும், வளங்களையும் பெற வேண்டுமானால் ஒவ்வொருவரும் முத்தீயை வளர்த்து வேதங்களில் விதித்த சடங்குகளைச் செய்யவேண்டும். சோயாகம் முதலிய யாகங்களை அதிகப்பொருள் செலவழித்துச் செய்தால் வீடுபேறு கிடைக்கும்.

11. வேத சூத்திரங்களால் சொல்லப்பட்ட கிரியைகளைத் தவறாமல் செய்வதாலும், வேதத்தைச் சுயம்பு என்று கருதுகின்ற ஞானத்தாலும் வீட்டின்பத்தைப் பொருந்தலாம். ஞானத்தை மட்டும் கைக்கொண்டு கன்மமாகிய கிரியைகளைச் செய்யாது விட்டால் இழிந்தவர்கள் ஆவர். அத்தகைய இழிந்தவர்களை மீண்டும் நல்ல நெறியில் செலுத்துவதற்கு உரிய கழுவாய்கள் வேதத்தில் கூறப்படவில்லை என்றும் பட்டாச்சாரியன் கூறுகின்றான்.

12. யாகப் பசுவைக் கொன்று வேதங்களில் கூறப்பட்ட வேள்விகளை முறைப்படி இயற்றினால் புண்ணியம் கிடைக்கும். மேலும், வேதங்களில் கூறப்பெற்றவற்றை உண்மையாகக் கொண்டு மந்திரங்களைத் தவறாது உச்சரித்தால் இன்பம் கிடைக்கும். எனவே, இவ்விரண்டினாலும் வீடுபேறு எய்தலாம். இது எதுபோல என்றால், பசி கொண்ட ஒருவன் உணவு உண்ட உடன் அவனுடைய பசி நீங்கி இன்பம் அடைந்தாற் போன்றதாகும். இவ்வாறு பட்டாச்சாரியன் கூறுகின்றான்.

பிரபாகரன் மதம்

பூர்வ மீமாம்சையின் மற்றொரு பகுதியான பிரபாகரன் மதக் கொள்கைகளைச் சிவஞான சித்தியார் இரண்டு பாடல்களிலும், அதன் மறுப்பினை இரண்டு பாடல்களிலும் தந்துள்ளது. அறிமுகம்:- அரிய தவத்தினை உடையவனாகிய சைமினி முனிவன் வேதத்தை ஆராய்ந்தவன். வேதம் நல்ல உலகின் கண்ணே தான் சொல்லுகின்ற வழிக்குப் பொருந்தியவற்றை வேதத்திலிருந்து எடுத்துக்கொண்டு, சைமினி முனிவனின் சூத்திர வடிவிலே பொருந்தி, பட்டாச்சாரியன் மதத்திலிருந்து சிறிது வேறாகி நிற்பவன் பிரபாகரன் மதமாகும். கொள்கை - ஒரு ஆன்மா செய்த கன்மத்தின் பயன் அபூர்வம் என்ற நிலையை அடைகின்றது. ஆன்மா கன்மத்தைச் செய்கின்ற பொழுது அறிவோடு கூடி நின்று, தொழிற்பட்டு கன்மம் முடிந்த பொழுது, அதற்குரிய பயனாக அபூர்வமே வீட்டுப் பேற்றினைத் தருகிறது. வீடுபேறு மண், கல் போன்று அறிவு செயலற்ற நிலையாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சங்க இலக்கியத்தில் மீமாம்சையின் தாக்கம்

சங்க இலக்கியங்களில் காணப்படுகின்ற வேதம் பற்றிய செய்திகள் அக்காலச் சூழலில் பொதுவாக அமைந்திருந்தாலும், ஆய்வாளர்கள் மீமாம்சையின் தாக்கத்தால் அவை இடம்பெற்றது என்று கருதுவதுண்டு. நான்மறை ஆறங்கம் பற்றிய செய்திகளும் இதன் தாக்கம் என்று கருதுவதுண்டு. புறநானூற்று 166- ஆவது பாடலில், "ஆறு உணர்ந்த ஒரு முதுநூல்" என்பதும் கலித்தொகை கடவுள் வாழ்த்தில் "ஆறு அறி அந்தணர்க்கு அருமறை பல பகர்ந்து" (கலி.1:1) என்று இடம் பெற்றிருப்பதையும் எடுத்துக்காட்டுகளாகக் கூறுவதுண்டு. அதுபோல சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள வேள்விகள் பற்றிய செய்திகளையும் மீமாம்சையின் தாக்கமாகக் கூறுவதுண்டு. இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியின் செயல்களும், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் செயல்களும் அவர்களின் வேள்வி முறைமைகளும், பரிபாடலில் கீரந்தையார் பாடலில் இடம்பெற்ற வேள்வி பற்றிய செய்திகளும் மீமாம்சையின் தாக்கமாகும்.

இவ்வாறு இந்திய மெய்ப்பொருள் கொள்கையில் ஒன்றான பூர்வ மீமாம்சை பற்றிய செய்திகள் மெய்ப்பொருள் இயலார் கட்டுரைகளிலும், மணிமேகலையிலும், சாத்திர நூல்களிலும், சங்க இலக்கியப் பனுவல்களிலும் கிடைக்கப்பெறுகின்றன.

9. ஏகான்ம வாதம்

இந்திய மெய்ப்பொருள் கொள்கையில் இந்து மதம் என்ற தனிநிலைக்குள் வேதாந்தம் சித்தாந்தம் என்ற இரு பிரிவுகள் குறிப்பிடத்தக்கனவாகும். வேதாந்தமும் சித்தாந்தமும் நூல் வழக்கிலும், உலக வழக்கிலும் மிகப்பெரிதாக விளங்குகின்றன. வேதாந்தம் என்னும் சொல்லிற்குப் பொருள் வேதத்தின் அந்தம் என்பதாகும். வேதம் என்பது வழக்கிலுள்ள ரிக், யசூர், சாம, அதர்வண என்ற நான்கினைக் குறிக்கும். அந்தம் என்பது கடைசி என்ற பொருளில் வேத வரிசையில் காலத்தால் முற்பட்ட- கடைசியாக ஆக்கப்பட்ட உபநிடதங்களைக் குறிக்கும். அதாவது நால்வகை வேதங்களும் மந்திரங்களாக அமைய, அவற்றைக் கூறுகின்றவர்க்குப் பயன் ஏற்படும் வண்ணம் அவற்றிற்குரிய தெய்வங்களை நோக்கி அவ்வேதங்கள் அமைந்தன. வேதங்களுக்கு அடுத்துப் பிராமணங்கள் அமைந்தன. பிராமணங்கள் வேத மந்திரங்களைக் கூறுகின்றவர்கள் கையாளவேண்டிய கிரியைகளைக் கூறுவனவாக அமைந்தன. பிராமணங்களுக்கு அடுத்து அமைந்தவை உபநிடதங்களாகும். வேதங்கள், பிராமணங்கள் ஆகிய இரண்டினது தத்துவங்களை விளக்குவன இவ்உபநிடதங்கள். எனவே, வேத வரிசையில் மூன்றாவதாக அமைந்த உபநிடதங்களை அந்தமாகக் கொண்டு வேதாந்தம் என்பது உபநிடத முறைமையை விளக்க எழுந்த தத்துவமாயிற்று.

வேதாந்தத் தத்துவத்தில் முதல் நூலாக விளங்குவது பாதராயணர் படைத்து அருளிய பிரம்ம சூத்திரம் ஆகும். பாதராயணரை வியாசர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று கூறுவதும் உண்டு. மேலும், வியாசர் வேறு, பாதராயணர் வேறு என்று கூறுவதும் உண்டு. இந்நூல் 545 சூத்திரங்களைக் கொண்டது. நான்கு அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வொரு அதிகாரமும் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பாதராயணர் காலத்திற்கு முன்பேயே வேத உபநிடதக் கருத்துக்களைப் பற்றிய வாதங்கள் எழுந்தன என்பதும் அதன் அடிப்படையில் தான் இதுவரை கூறப்பெற்ற பல்வகை மதங்கள் தோன்றின என்பதும் மெய்ப்பொருள் இயல் வரலாறு ஆகும். பாதராயணர் காலத்திற்கு முன்புவரை விவாதிக்கும் பொருளாக அமைந்த வேதாந்தம், பாதராயணர் காலத்தில் பிரம்ம சூத்திரம் என்ற எழுத்துவழி தனி ஒரு தத்துவமாக அமைந்தது. எனவேதான் பாதராயணர் தமது வேதாந்த சூத்திரத்தில் சாங்கியர், மீமாம்சர் உள்ளிட்ட பிற தத்துவங்களை மறுத்துத் தம் கொள்கைகளை வலியுறுத்தி இருக்கிறார். மேலும், அவர் தம்முடைய நூலில் வேதாந்தக் கொள்கைகளைக் கொண்டு பிற மதங்களை விவாதித்த ஏழு வேதாந்த ஆசிரியர்களையும் குறிப்பிடுகின்றார். எனவே, இந்திய மெய்ப் பொருளியலில் பல தத்துவங்களின் தோற்றத்திற்கு அடிப்படையாக இருந்த வேதாந்தக் கருத்துக்கள் பாதராயணர் காலத்தில் நூல்வடிவம் பெற்றுக் கொள்கைகளை வெளிப்படுத்துகின்ற தத்துவ சமயமாக அமைந்தது எனலாம்.

வேத உபநிடதக் கருத்துக்களைத் தெளிவாக்கி ஒழுங்குபடுத்தும் நோக்கத்தோடு பாதராயணரின் பிரம்ம சூத்திரம் எழுந்தாலும் முழுமையான தெளிவைத் தரவில்லை. காரணம், வேத உபநிடதக் கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்லி விளங்கவைக்க வேண்டும் என்ற அவரின் எண்ணம் மேலும் மேலும் குழப்பத்தைத்தான் ஏற்படுத்தியது. சுருங்கச் சொன்ன அவரின் கருத்துக்குப் பின்னால் விளக்கம் தர வேண்டிய சூழல் ஏற்பட்டது. விளக்கம் தந்த அறிஞர்கள் பலராவர். பிரம்ம சூத்திரத்திற்கு விளக்கம் தந்த அறிஞர்களில் தலைசிறந்தவர் ஆதிசங்கரர் எனப்படுவார். இவர் இயற்றிய பல நூல்களில் முதன்மை பெறுவது பிரம்மசூத்திர பாடியமே ஆகும். தென் இந்தியாவில் காலடியில் பிறந்த சங்கரரின் காலம் கி.பி.ஆறாம் நூற்றாண்டு என்றும் கி.பி.எட்டாம் நூற்றாண்டு என்றும் கூறுவர். இவருடைய ஆசிரியர் கோவிந்தர் என்பதும் அக்கோவிந்தரின் ஆசிரியர் கௌடபாதர் என்பதும் அவ்விருவரின் கொள்கை வித்தினைக் கொண்டே சங்கரர் தம் மதிநுட்பத்தால் வேதாந்த அத்வைதக் கொள்கைகளை வழிப்படுத்தினார் என்பதும் சங்கரரின் வரலாற்று நிகழ்ச்சிகளாகும்.

மெய்ப்பொருளார் கொள்ளுகின்ற கடவுள், ஆன்மா, உலகம் என்ற மூன்று பொருள்களையும் ஆராய்ந்து, கிடைக்கின்ற முடிந்த பொருள் பிரமம் என்ற ஒன்றுதான் என்று கூறுவதால் அக்கொள்கை பற்றி எழுந்த அனைத்து விளக்கங்களும் ஏகான்மவாதக் கொள்கைகள் எனப் பெயர் கொண்டன. இந்த முப்பொருளில் ஆன்மா என்பது எண்ணில் கோடி உயிர்களாக விளங்குகின்றது. ஒவ்வொரு உயிரையும் ஒவ்வொரு ஆன்மாவாகக் கொள்வது உண்டு. ஆனால், பிரம்ம சூத்திரத்திற்கு உரை எழுதிய சங்கரரோ,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எண்ணில் கோடி ஆன்மாக்கள் இருந்தாலும் ஆன்மா ஒன்றே பலவாகத் தோன்றுகிறது என்று வாதித்து விளக்கம் செய்தலால் சங்கரரின் கொள்கைக்கு மட்டுமே ஏகான்மவாதக் கொள்கை என்றும் கூறுவதுண்டு. ஏகான்மவாதம் என்பதைத் தமிழில் ஒருபொருட்கொள்கை என்பர். பிரம்ம சூத்திரத்திற்குப் பலப்பல உரைகள் தோன்றியதால், சங்கரர் கொண்ட கொள்கைக்கு அத்வைதக் கொள்கை என்றும் இராமானுசர் கொண்ட கொள்கைக்கு விசிஷ்டாத்துவைதம் என்றும் மத்துவர் கொண்ட கொள்கைக்குத் துவைதக் கொள்கை என்றும் பெயர்கள் சூட்டப்பெற்றன. எனவே, வேதாந்தக் கொள்கை என்ற தலைப்பில் கொள்கைகளை வகுக்கும் பொழுது - ஆதிசங்கரரின் கொள்கையான அத்வைதக் கொள்கைகள் தனியாகவும், இராமானுசரின் கொள்கை தனியாகவும், மத்துவரின் கொள்கை தனியாகவும் இக்கால மெய்ப்பொருளியலார் தனித்தனியாக ஆய்ந்து கொள்கைகளைச் சுட்டிக்காட்டியுள்ளனர். அவற்றைக் குறிப்பிட்டால் விரிந்து செல்லும் என்பதால் அம்மூவரின் கொள்கைகளைத் தனித்தனியாகக் குறிப்பதை விடுத்துச் சைவ சித்தாந்திகள் மறுப்பதற்காக வகுத்துத் தந்திருக்கின்ற கொள்கைகளைக் காண்பது இயல்பாகிறது.

மணிமேகலையில் வேதவாதம்

மணிமேகலையில் சமயக் கணக்கர்தம் திறம் உரைத்த காதையில் சைவவாதிக்குப் பின் பிரம்ம வாதி, வைணவ வாதி, வேதவாதி என்ற மூவரின் கொள்கைகள் சில சில வரிகளில் கூறப்படுகின்றன. பிரம்மவாதி அண்டங்கள் ஆகிய உலகங்கள் எல்லாம் ஒப்பற்ற பிரமதேவனால் இடப்பெற்ற முட்டைகள் என்ற பொருள் கொண்ட,

"பேருல கெல்லாம் பிரம வாதியோர்
தேவன் இட்ட முட்டை என்றனன்" *(மேகலை.27:96-97)*

எனும் வரிகள் இடம்பெற்றுள்ளன. அடுத்து வைணவவாதியின் செய்தியாக - கடல் போலும் நீல நிறமுடைய விஷ்ணுவின் புராணத்தை அன்புற்று ஓதி உணர்ந்த வைணவவாதி, இவ்வுலகமெல்லாம் திருமாலால் காக்கப்படுதலின் அவனே முழுமுதற் கடவுள் என்று கூறியதாக இரண்டு வரிகள் கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளன.

"காதல் கொண்டு கடல்வணன் புராணம்
ஓதினான் நாரணன் காப்பென் றுரைத்தனன்"*(மேகலை.27:98-99)*

இதனை அடுத்து வேதவாதி கூறுகின்ற செய்திகள் இடம்பெற்றுள்ளன. கற்பம் கையாகவும், சந்தோவிசிதி காலாகவும், சோதிடம் கண்ணாகவும், தெளிவாக உள்ள நிருத்தம் காதாகவும், சிக்கை மூக்காகவும், அதனுடைய வியாகரணம் முகமாகவும் இவ்வாறு ஆறு உறுப்புக்களைப் பெற்றுத் தான் ஒன்றிலிருந்தும் பிறவாத சிறப்பினை உடைய ஆரணமாகிய வேதத்திற்குத் தோற்றமும் இறுதியும் இல்லை. ஆதலால் அது கூறும் நெறியே வீடு எய்துவிக்கும் நன்னெறி என்று கூறியதாக வேதவாதியின் செய்திகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இடம்பெற்றுள்ளன. இவையனைத்தும் உண்மைக்குரிய செய்திகளை, அதாவது நூல் வழக்கும் உலக வழக்கும் என்று கூறுவனவற்றுள் அமைந்த மெய்ப்பொருள் செய்திகளைக் குறிப்பிடாத காரணத்தால் இச்சமயக் கணக்கர்களின் மொழிகளைப் பொருந்தாது என மணிமேகலை ஏற்றுக்கொள்ளவில்லை என சாத்தனார் குறிப்பிடுகின்றார் (106-107). எனவே, வேதநெறியில் விளங்கும் இம்மூன்று செய்திகளும் மணிமேகலைக் காப்பிய காலத்தில் பெரிதும் வாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாது வெறும் கடவுள் கொள்கையோடு வேதத்தின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்ற சூழலில் அமைந்திருந்தன என்பது தெளிவாகிறது.

சிவஞான சித்தியாரில் ஏகான்ம வாதம்

ஏகான்ம வாதம் எனப்படும் அத்துவித வேதாந்தத்தில் மாயா வாதம், பாற்கரிய வாதம், கிரீடாப்பிரம வாதம், சத்தப்பிரம வாதம் என நான்கு பிரிவுகளைச் சைவ சித்தாந்திகள் ஏற்றுக்கொண்டு மறுப்புத் தருகின்றனர். இந்த நான்கில் கிரீடாப்பிரம வாதத்தினை மட்டும் விட்டுவிட்டு மற்ற மூன்று மதங்களின் கொள்கைகளையும், மறுப்புக்களையும் அருணந்தி சிவாசாரியார் குறிப்பிடுகின்றார். சத்தப்பிரம வாதக் கொள்கைகளை நான்கு பாடல்களிலும், மாயாவாத மதத்தின் கொள்கைகளைப் பதினைந்து பாடல்களிலும், பாற்கரிய மதத்தின் கொள்கைகளை இரு பாடல்களிலும் குறிப்பிடுகின்றார்.

சத்தப் பிரமவாதி

சத்தமானது மயக்கத்தினால் பிரபஞ்சமாகத் தோன்றியது. அறியாதவர்கள் சத்தத்திற்கு மாறாக வேறு பொருள் உண்டு என்று கூறுவது உண்மையன்று. சத்தமே பிரமமாகும். வேறு பொருள் இல்லை என்று அறியும் அறிவே வீட்டின்பமாகும்.

சத்தத்தின் பரிணாமம், விவர்த்தனம் ஆகிய மயக்கங்களே உலகம் ஆகும். இந்த மயக்கங்களினாலே உலகத்துப் பொருள்கள் உண்டாகின்றன. ஆகையால் சத்தம் என்றுமே உள்ளது. சத்தத்திற்கு உள்ள பொருள் என்று சொல்லப்படுவது சத்தத்தின் நன்மையே ஆகும். சத்தத்தின் நன்மை அல்ல பொருள். பொருளின் நன்மையே சத்தம் என்று கூறினால் சத்தம் கூடாது ஒரு பொருள் உண்டாவதில்லை. சத்தத்தின் நன்மையே பொருளாகும்.

பூ எனவும் மா எனவும் இரண்டு சொற்கள் உள்ளன. அவற்றில் பூ என்பதற்கு மலர் என்றும் இலக்குமி என்றும் பொருள் கூறலாம். மா என்பதற்கு நிலம் என்றும் விலங்கு என்றும் பொருள் கூறலாம். இந்தப் பொருள்களில் சொல்லுவார் உள்ளக்கருத்தின் அடிப்படையிலே பொருள் வழங்கப்பெறுகிறதே அன்றிப் பொருளை வைத்துச் சொற்கள் பிறக்கவில்லை. அது நெல்லை வறுத்தால் பொரி கிடைக்கிறது என்பது போல. எனவே, நெல்தான் பொறியாயிற்றே தவிர, பொரி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்ற ஒரு பொருள் இல்லை. அதுபோலவே சொல்லப்படுகின்ற ஓசைதான் (அதாவது எழுத்தோசையால் எழுந்த சொல்தான்) பொருளைக் குறிக்கிறது. எனவே, பொருளுக்கு அடிப்படை சத்தமேயாகும்.

ஒரு சொல்லைக் கூறுமிடத்து அது உணர்த்தும் பொருள் அங்கு இல்லை என்றாலும் அப்பொருள் உணரப்படும். எனவே, சொல் முக்கியம் என்பது பெறப்படுகிறது. எனவே, ஓசைதான் அடிப்படை என்பதைச் சத்தப்பிரமவாதி சொல்வதாகச் சிவஞான சித்தியார் குறிப்பிடுகின்றது. பேராசிரியர் சோ.நா.கந்தசாமி அவர்கள் சத்தப் பிரமவாதியை ஏகான்ம வாதத்தின் ஒரு பிரிவாகக் கொள்ளாமல் மீமாம்சகத்தின் ஒரு பிரிவாக இருந்திருக்கலாம் (இந்திய தத்துவக் களஞ்சியம் தொகுதி - 2ல்- ப.199) எனக் கருதுகிறார்கள். அதற்குக் காரணத்தையும் விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாயாவாத மதம் பற்றிய செய்திகள்தான் ஏகான்ம வாதத்தின் கருத்துக்கள் என்பதும் அவரின் முடிபாகும். பேராசிரியர் தம் கருத்துக்கு உரிய சான்றுகளைத் தந்திருப்பதை நோக்கும்பொழுது சத்தப்பிரம வாதம், வேதத்தை முழுமையாக ஏற்ற மீமாம்ச மதத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும் என்ற முடிவிற்கே வரவேண்டியுள்ளது. சிவஞான சித்தியார் சத்தப்பிரம வாதத்தை ஒட்டியே வைத்திருப்பதாலும், மாயாவாதத்தில் ஏகான்மவாதக் கொள்கைகள் பெரும்பாலும் சுட்டிக்காட்டியிருப்பதாலும் சிவஞான சித்தியார் தந்த அருணந்தியாரும் சத்தப்பிரம்ம வாதத்தை மீமாம்சகரின் ஒரு பகுதியாகக் கொள்ளும் எண்ணம் இருந்திருக்கிறது என்பதும் தெளிவாகிறது. எனவே, சித்தியார் கூறும் மாயாவாதக் கருத்துக்களை ஏகான்மவாதக் கருத்துக்களாகக் கொள்ளுவது சாலப் பொருத்தமாகும்.

சித்தியார் தந்திடும் மாயாவாதக் கருத்துக்கள்

நானே பிரமம் என்று உரைத்து, உலகம் உள்ளிட்ட பொருள்கள் அனைத்தும் கானல்நீர் போன்றவை என்று உரைப்பவன் மாயாவாதி ஆவான் என்று முதலில் மாயாவாதியை அறிமுகப்படுத்துகிறார்.

பிரமம் என்பது அறிவே வடிவாகவும், உலகிற்குக் காரணம் ஆகவும், எல்லையில்லாத ஆனந்தம் ஆகவும், உருவமின்றியும், எங்கும் நிறைந்ததாகவும், சத்தாயும், கேடில்லாததாயும், ஓரடையாளமும் குணமும் இல்லாததாகவும், வேதங்களுக்கு எல்லாம் அளவாகவும், நீக்கமிலாத அநுபூதியைத் தனக்கே உடையதாகவும் கொண்டு விளங்குகின்றது.

வானத்தில் இருக்கும் சூரியன் பூமியில் உள்ள பல பாத்திரங்களில் இருக்கும் நீர்நிலைகளில் தனித்தனியே தோன்றுவதைப் போல, ஏகமாகிய பிரமம் உடல்கள்தோறும் தனித்தனியே தோன்றுகின்றது. அச்சூரியன் பாத்திரங்களிலுள்ள நீரால் பற்றிக்கொள்ள முடியாது, தனித்து விளங்குகின்றது. அதுபோலவே பிரமப் பொருளும் உடலில் அகப்படாது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மேற்பட்டு, இந்திரியங்களுக்கும் கரணங்களுக்கும் அறிய முடியாததாய் நிற்கும். அதாவது காட்சி முதலாகிய ஆறு அளவைகளுக்கு எட்டாததாகும்.

இருளில் கிடக்கின்ற கயிற்றினைக் கண்ட ஒருவன், அதனைப் பாம்பு என்று அஞ்சுகின்ற பொழுது, ஒளி வந்தவுடன் கயிறு என்ற உண்மை நிற்க, பாம்பு என்ற பொய்யானது மறைகின்றது. அது போலவே பொய்யாகிய உலகமும் முதலில் மயக்கத்தாலே மெய்யாகத் தோன்றும். பின்னர்ப் பிரமஞானம் தோன்றிய காலத்தில் உலகப் பொருள்கள் எல்லாம் பொய் என்று தோன்றும். பிரமமே மெய்யாகும்.

உலகமானது நிருவசனம் என்று கூறப்பட்ட பிரமத்திலிருந்து தோன்றும். அவ்வாறிருக்க உலகம் தானே தோன்றினால் அதுவும் அழியாது இருக்க வேண்டும். ஆனால், உலகம் அழிகிறதே. எனவே, உலகம் இருப்பதுபோலத் தோன்றி மறைவதால் அது பொய்யானதாகும். இது எதுபோல என்றால், வெள்ளி போலப் பிரகாசிக்கும் சிப்பியையும், வெள்ளியையும் தீயில் இட்டால் சிப்பி கெட்டு வெள்ளிதான் நிற்கும். அதுபோல ஞானத்தால் உணர்ந்தால் உலகம் பொய்யாகவும், பிரமம் மெய்யாகவும் தோன்றும்.

உலகிற்கு முதற்காரணம் சத்துப் பொருளாகிய பிரமமே ஆகும். சிலந்திப் பூச்சியானது தன் வலை நூலைத் தன்னிடத்திலிருந்து தோற்றுவித்து, அதை ஓரிடத்தில் பின்னிப் பாதுகாத்துப் பிறகு அந்நூல் அழியும்படி செய்து தான் அதிலிருந்து நீங்குவதுபோலப் பிரமம் உலகப் பொருள்கள் அனைத்தையும் தன்னிடத்திலிருந்து தோற்றுவித்துக் காத்துப் பின் இல்லை என்று கூறும்படி அழித்துவிடும்.

கேடில்லாத நிலையான பிரமத்திலிருந்து வான் தோன்றி, வானத்திலிருந்து வாயு தோன்றி, அவ்வாயுவில் அனல் தோன்றி, அனலில் நீர் தோன்றி, நீரிலே நிலம் தோன்றி, நிலத்தில் செடி கொடிகள் தோன்றுகின்றன. அவற்றிலிருந்து உயிர்களுக்கு உணவு தோன்றுகின்றது. உணவு உண்ட உயிர்களின் உடம்பில் ஆறு தாதுக்கள் உள்ளன.

ஆறு தாதுக்களுடன் உண்டாவது அன்னமய கோசமாகும். அன்னமயக் கோசத்திலிருந்து உண்டாவது பிராணமயக் கோசம். அதனோடு மனம் கூடுகின்ற பொழுது தோன்றுவது மனோமய கோசம், அவற்றோடு அறிவு கூடும்போது தோன்றுவது விஞ்ஞானமய கோசம். அவற்றோடு வாக்கு முதலானவை கூடி, ஆனந்தத்தைத் தருவது ஆனந்தமயக் கோசம் ஆகும். இந்த ஐந்து கோசங்களாகிய உருவத்தின்கண் பிரமமானது கூடிப் பிரகாசிக்கும். ஆனால், இந்த உருக்கள் தம்முடைய பாசத்தால் பிரமத்தைப் பற்றாது. பிரமமும் உருவின் பாசத்தைப் பற்றாது.

பலநிற மணிகளைக் கோர்வையாகக் கோர்க்கும் பொழுது கோர்த்த வெண்மை நூலானது, பல நிறத்தை உடையதாகத் தோன்றுவது போல, உலக யோனிகளாகிய உடம்புகள் பலவாக விளங்குவதால் அவற்றோடு கூடிய பிரமமும் அங்கங்கே பலவாகத் தோன்றும். மேலும், மணிகளைக் கோர்த்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூல் கெடாது நிற்பது போலப் பிரமமும் உயிர்களின் போகத்தை நுகர்வது போல் தோன்றினாலும் உண்மையில் அது நுகர்வதில்லை.

பிரமமானது உலகத்தோடு பொருந்தி நிற்பதால் பரமான்மா, சீவான்மா என்று பல பெயர்களைக் கொண்டு விளங்குகின்றது. பரமான்மா சீவான்மாவாக இருக்கும் பொழுது கனவு, நனவு, உறக்கம், பேருறக்கம் என்ற நான்கு நிலைகளை உடையதுபோல் தோன்றும். அதற்குக் காரணம் உயிர்களோடு பொருந்தி நிற்கும் கருவிகளே ஆகும்.

நனவில் உயிரோடு பதினான்கு கருவிகள் கூடி நான் என்று கருதி நிற்பது பந்தமாகும். அக்கருவிகளோடு கூடாது, பின் நீங்கித் துரியத்தில் நின்றால் சிவயோகம் என்ற முத்தி கிடைக்கும். பந்தத்திற்கு வித்து மூலப்பிரகிருதி ஆகும். அந்த மூலப் பிரகிருதியின் செயலாலேயே மாயா காரியங்களாகிய சுக துக்கங்கள் பொருந்துகின்றன. அவித்தையாகிய மூலப்பிரகிருதி கெட்டால் மாயை நீங்கும். மாயை நீங்கினால் ஞானம் உண்டாகும். ஞானத்தால் சிவயோகம் கிடைக்கும்.

வேதத்தால் விதிக்கப்பட்ட கிரியைகளைச் செய்தால் அந்தக் கரணம் சுத்தமடையும். அதனால் நானே பிரமம் என்ற ஞானம் கிடைக்கும்.

வேதத்தின் முடிவாகிய தத்துவமசி முதலாகிய மகா வாக்கியங்களை உண்மையாக உணரும் காலத்து, அது நீயாவாய் என்பது அல்லது மற்று ஒரு பொருளைச் சொல்ல இயலாது. இந்த வாக்கியங்களின் உண்மையைத் தெரியாதவர்கள் பஞ்ச ஆசனம் முதலிய பூசை முறைகளையும், நியமம் முதலிய எட்டு வகை யோகங்களையம் வறிதே செய்வார்கள்.

இவ்வாறு மாயாவாதியின் கொள்கைகளைச் சிவஞான சித்தியார் குறிப்பிடும்பொழுது இச்செய்திகளில் ஏகான்மவாதக் கொள்கைகளின் சாயல்களை நன்கு உணரமுடிகின்றது. எனவே, சித்தியார் காலத்தில் மாயாவாத மதம் என்ற பெயரில் ஏகான்மவாதம் திகழ்ந்திருக்கிறது என்பதை உறுதி செய்யலாம்.

பாற்கரிய மதவாதச் செய்திகள்

மாயா வாதத்தை அடுத்துச் சித்தியார் இரண்டு பாடல்களில் பாற்கரிய மதக் கொள்கைகளைக் குறிப்பிடுகின்றது. முதல் பாடல் பாற்கரிய வாதியை அறிமுகப்படுத்துகின்றது. பாற்கரியவாதி மாயா வாதியோடு வேறுபட்டவன். பிரமத்தைப் பேதா பேதத்தில் காண்பவர்கள் என்றாலும் மாயாவாதியோடு சிறிய அளவில் வேறுபட்டவர்கள்.

அடுத்த பாடலில் அறிவு வடிவாகிய பிரமமானது சித்தாகும். அது உலகமாகத் தோன்றி வளர்ந்து ஆன்மாக்களாக விளங்கும். ஆதலால் அனைத்தும் பிரமமே ஆகும். வேத வாக்கியங்களை அறிந்து ஓதி ஒழுகி ஆன்மா தன் தன்மைகெட்டுப் பிரமப் பொருளோடு ஒன்றி வீடுபேறு அடையலாம் என்பதை இவர்தம் கொள்கைகளாகச் சித்தியார் கூறுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவ்வாறு ஏகான்மவாதக் கொள்கையைச் சித்தியார் குறிப்பிடும் பொழுது, சத்தப்பிரம வாதம் மீமாம்சகரோடு ஒத்துப் போவதும், பாற்கரிய மதம் மாயா மதத்தோடு வேறுபட்டு நிற்பதும் அறிய முடிகின்றது. சங்கரரின் ஏகான்மவாதம் ஒரு காலக்கட்டத்தில் மக்களிடையே அதிக செல்வாக்கோடு இருந்து சித்தியார் காலத்தில் செல்வாக்கை இழந்து பிற மதச்சார்போடு விளங்கியிருக்கிறது. அதாவது சத்தப்பிரம வாதமாக மீமாம்ச மதத்தோடு சார்ந்தும், பாற்கரிய மதமாக வேறுபட்டும் விளங்கியிருப்பது புலனாகிறது.

பாஞ்சராத்திர மதம்

பாஞ்சராத்திரம் என்னும் ஆகமத்தைச் சிறப்பு நூலாகக் கொண்டு ஒழுகும் வைணவ சமயம் பாஞ்சராத்திரம் எனப்படும். மெய்ப்பொருளியலில் சைவம் எத்தகைய தொன்மையானதோ, விரிவானதோ அந்த அளவிற்கு வைணவமும் சிறந்து விளங்குகின்றது. சங்க இலக்கியங்களில் எவ்வாறு சைவ சமயக் கருத்துகள் இடம்பெற்றிருக்கின்றதோ அதுபோல வைணவக் கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன. வைணவம் பற்றிய ஆய்வு விரிந்து செல்லும் என்பதால் சைவ சித்தாந்த நோக்கில் பாஞ்சராத்திரம் என்ற வைணவம் எவ்வாறு கொள்ளப் பெற்றிருக்கின்றது என்ற நிலையில் அருணந்தி சிவாசாரியாரின் பரபக்கப் பகுதி மட்டும் இங்கு குறிப்பிடப்பெறுகிறது.

பாஞ்சராத்திரம் என்ற ஆகமம் வாசுதேவரால் அனந்தன், கருடன், விஸ்வச் சேனன், கபாலி, பிரமன் ஆகிய ஐவருக்கும் ஐந்து நாட்களில் அறிவுறுத்தப் பெற்றமையால் ஐந்து இரவு என்னும் பொருள்தரும் பாஞ்சராத்திரம் என்னும் பெயர்பெற்றது. இவ்ஆகமம் திருமால் ஆலயத்திற்குரிய விதிகள், குண்டங்கள் அமைப்பதற்குரிய விதிகள், கொடிமர விதிகள், தீட்சை முறைகள், வழிபாட்டு முறைகள், நாராயண பலி, ஸ்ரீவைகுண்ட இலக்கணம், மந்திர விதிகள், ஆச்சாரிய இலக்கணம் ஆகியவற்றை விரிவாகக் கூறுகின்றது. இவ்வாகமம் 108 சமித்தைகளாகிய விதிகளைக் கொண்டது. பாஞ்சராத்திரம் வைணவத்தில் ஒரு பகுதியாக இப்பொழுது கொள்ளப்பெறுகிறது. மற்றொரு பகுதியாக வைதானசம் என்ற ஆகமம் கொள்ளப்பெறுகிறது. பாஞ்சராத்திர ஆகமத்தின்படி திருவரங்கம், காஞ்சி, திருக்குடந்தை ஆகிய திருத்தலங்களில் வைணவ வழிபாடு நடைபெறுகின்றது. வைகானச ஆகமப்படி திருவல்லிக்கேணி, திருமாலிருஞ்சோலை ஆகிய திருத்தலங்களில் வழிபாடு நடைபெறுகின்றது. இதில் அருணந்தி சிவாசாரியார் தன்னுடைய பரபக்கத்தில் பாஞ்சராத்திர ஆகமத்தின் வழியில் வைணவக் கொள்கைகளைத் தருகின்றார். அவர் கூறும் செய்திகள் (மொத்தம் ஏழு பாடல்கள்) வருமாறு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாடல் - 1

மாயன் எல்லாப் பொருள்களுக்கும் ஆதியாகவும், உருவம் அற்றவனாகவும், எங்கும் நிறைந்திருப்பவனாகவும், ஞானமே வடிவமாகவும் இருப்பவன் ஆவான். மாயன் என்னும் திருமால், உயிர்களை உய்விப்பதற் காகத் தன்னிச்சையாகப் பல உருவங்களை எடுத்தான். உயிர்களுக்கு அருள வேண்டும் என்னும் முறைமையினால் திருப்பாற்கடலில் அரிதுயில் கொண்டு, அநாதியான வேதங்களை அருளிச் செய்தான்.

பாடல் - 2

வைகுண்டத்தில் இருக்கும் பரமபுருஷனாகிய திருமால், தனது திருவுந்தித் தாமரையிலே சிருஷ்டி காரணமாகப் பிரமனை உண்டாக்கி, அவனாலே இவ்வுலகத்தை உண்டாக்குவித்தும், அப்படிப் படைக்கப்பெற்ற உலகத்தை ஒடுக்குவதற்காகப் பிரமனிடத்திலிருந்து உருத்திரனை உண்டாக்கி, அவனைக் கொண்டு உலகத்தை ஒடுக்கியும், தன்னால் உண்டாக்கப்பட்ட உலகத்திற்குக் காக்கும் தலைவனாகத் தானேயாகி விளங்கினான். இவ்வாறு உலகத்தின் தோற்றம், நிலைபேறு இறுதி என்ற மூன்றினுக்கும் திருமாலே தலைவன் ஆவான்.

பாடல் - 3

உலகத்தைக் காப்பதற்காக மீன், ஆமை, பன்றி, நரசிங்கம், வாமனன், பரசுராமன், பலராமன், தயரதராமன், கண்ணன் ஆகிய அவதாரங்களாகத் திருமால் தோன்றினான். வருங்காலத்தில் குதிரை வடிவாகிய கல்கி என்னும் அவதாரமாகத் தோன்றி இவ்வுலகத்தைக் காப்பான். இவ்வாறு பத்து அவதாரங்களை எடுத்தாலும் அவனே (திருமாலே) தேவர்களின் தலைவனாகவும் இருப்பான் என்று பாஞ்சராத்திரி சமயத்தான் அறிவோடு கூறுவான்.

பாடல் - 4

திருமால் மச்ச அவதாரம் எடுத்த காலத்தில், தன்னுடைய செதிலில் ஏழு கடல்களை அடக்கியும், பாற்கடல் கடையப்பட்டபொழுது மத்தாகப் பயன்படுத்தப்பட்ட பெருமலையைக் கூர்ம அவதாரத்தில் தன் முதுகில் தாங்கியும், கடலுக்குள்ளே ஆழ்ந்து போன பூமியை வராக அவதாரத்தில் தன் ஒற்றைக் கொம்பிலே தாங்கி எடுத்தும், நரசிங்க அவதாரத்தில் இரணியன் உடம்பைப் பிளந்தும், வாமன அவதாரத்தில் தன் இரண்டு அடியால் உலகை அளந்தும், 21 தலைமுறை சத்திரியரைப் பரசுராமராய் அவதரித்து அழித்தும், தயரதன் மைந்தன் ராமனாய் அவதரித்து இராவணனைக் கொன்றும், பலராமனாய் அவதரித்து யோகநெறியில் தலைப்பட்டும், கண்ணனாய் அவதரித்து அசுரர்களைக் கொன்றும் இவ்வுலகத்தைக் காத்தான். இனிவரும் ஊழிக் காலத்தில் கல்கி என்னும் குதிரையாய் அவதரித்து உலகைக் காப்பான் திருமால்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாடல் - 5

பொய்கையிடத்தில் இறங்கிய யானை, அப்பொய்கையில் இருந்த முதலையின் வாயில் அகப்பட்டுக் கரையேற மாட்டாமல் ஐயனே, நாதா, ஆதிமூலமே என அழைக்க, யாம் ஈடேறும்படி அருளுகின்ற பரமபுருடனாம் திருமால் விரைந்து சென்று யானையைக் கொடிய முதலை வாயில் இருந்து விடுவித்து யானையையும் முதலையையும் வைகுண்டப் பதவியடையச் செய்தான்.

பாடல் - 6

பாற்கடலைக் கடைந்தபோது துணையாக நின்று அதில் தோன்றிய அமுதத்தைத் தேவர்களுக்கு அளித்து, உலகில் கொடிய கொலைத் தொழிலைச் செய்த அரக்கர்களைக் கெடுத்து, தேவர்களைக் காத்து, சர்வ கலைகள் பொருந்திய வேதத்தைத் தனது கருணையினாலே அடியவர்களுக்கு அருளி, இவ்வாறு அருளில் மிக்கவனாக, தலைமை உடையவனாக மாயன் விளங்குகின்றான் என்று பாஞ்சராத்திரி கூறினான்.

பாடல் - 7

பரமபுருஷனாகிய திருமால், உலகத்தின் சிருஷ்டிக் காலத்தில் மாய சொரூபியாக விளங்கி, மாயையின் வழியிலே மயங்குகிற ஆன்மாக்களுமாகி விளங்குகிறான். மாயையினின்றும் தோன்றும் உயிர்களைக் கட்டுக்குள் அகப்படுத்தி, மீளவும் நீக்கி நிற்பான். அவன் மாயன் ஆகையால் அவனாலன்றி மாயை நீங்காது. பதிவிரதையைப் போல மற்றொரு தெய்வத்தினை நினையாது திருமாலையே வணங்கி வழிபாடு செய்தால், பந்தமாகிய மாயை நீங்கும். அம்மாயை நீங்கவே பரமபுருஷனாகிய திருமால் ஆன்மாவைச் சுத்தமாக்கி வைகுண்டத்திலே சேர்த்து வீடுபேற்றைத் தருவான்.

இவ்வாறு சைவ சமயத்தின் அடிப்படையில் பரபக்கம் என்று கூறப்படுகின்ற பிற மதக் கருத்துக்கள் சங்க இலக்கியங்களில் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதை விளக்கும் முகத்தான் அவ்வவ் மதங்களின் கருத்துக்களையும் அவை சங்க இலக்கியங்களில் இடம்பெற்றிருப்பதையும், அக்கருத்துக்கள் பற்றிய சித்தாந்த பதிவுகளையும் காணமுடிகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. சைவ சமயத்தின் தொன்மை

இந்திய மெய்ப்பொருள் கொள்கைகளில் தொன்மையானது சைவ சமயமாகும். சைவ சமயத்தின் தொன்மை என்று எண்ணுகின்ற பொழுது சிந்துவெளி நாகரிக அகழாய்வுச் சான்றுகள் நினைவுக்கு வரும். சிந்துவெளி என்பது பலுசிஸ்தான், பஞ்சாப், ராஜஸ்தான், சௌராஷ்டிரா ஆகிய பகுதிகளைக் கொண்ட நிலப்பரப்பாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்ககாலத்தில் அதாவது கி.பி.1021-22-ஆம் ஆண்டுகளில் சேர்யோன் மார்ஷல் என்வர் தலைமையில் இந்தியத் தொல்பொருள் ஆய்வாளர்கள் சிந்துவெளிப் பகுதியில் உள்ள மொகஞ்சதாரோவிலும், பஞ்சாபில் உள்ள ஹரப்பாவிலும் உள்ள மண் மேடுகளை அகழாய்வு செய்தனர். மேலும், மசூம்தார், மக்கே ஆகிய ஆய்வாளர்கள் மேலும் இவ்வாய்வைத் தொடர்ந்தனர். இவ்வாய்வாளர்கள் தந்த அறிக்கையின்படி மேற்குறித்த நகரங்களின் காலம் கி.மு. 3250லிருந்து கி.மு.2750க்குள் இருக்கவேண்டும் என்பது முடிவாகத் தரப்பெற்றது. அகழ்வாராய்ச்சியில் இலட்சினைகள், உருவச்சிலைகள், கல் படிமங்கள் கிடைத்துள்ளன. இவற்றைக் கொண்டு முதல் ஆய்வாளராகிய மார்ஷல் தம் நூலில், சிந்துசமவெளி நாகரிகத்தில் சிவ வழிபாடே சிறப்பிடம் பெற்றிருந்தது, அங்கு அகழ்வாராய்ச்சியில் கிடைக்கப்பெற்ற பொருள்களில் பலவகையான லிங்கங்கள் நூற்றுக்கணக்காகக் கிடைத்துள்ளன. அங்கு கிடைக்கப்பெற்ற இலச்சினையில் மூன்று முகம் கொண்ட யோக நிலையில் உள்ள, சுற்றிலும் மிருகங்கள் சூழ்ந்துள்ள ஓர் ஆண்கடவுளின் உருவம் பொறிக்கப் பெற்றுள்ளது. அந்த உருவம் சிவ உருவமாகத் தோன்றுகிறது. எனவே, சிந்துவெளி நாகரிகத்தில் சிவ வழிபாடு இருந்தமையைக் குறிப்பதாகக் கொள்ளவேண்டும் என்று குறிப்பிடுகிறார். மார்ஷல் அவர்களின் ஆய்வுநூல் சைவ சமயத் தொன்மைக்கு அடிப்படை ஆதாரமாகும்.

சிந்துவெளி நாகரிக அகழாய்வால் தொன்மையான சைவ வரலாற்றை அறிந்துகொள்ள முடிகின்றது. அகழாய்வில் கிடைத்த பொருள்கள் சைவத்தின் தொன்மையினை விளக்குவனவாக அமைந்துள்ளன. கிடைக்கப்பெற்ற இலச்சினைகள் கல் சிவலிங்கச் சிலைகள், பெண் உருவக் கற்சிலைகள், உருவங்கள் பொறித்த செம்பு, வெண்கலத் தகடுகள், நந்தி உருவங்கள், வழிபாட்டிற்குரிய பொருள்கள் ஆகியன சைவ சமயத் தொன்மைக்கு ஆதாரமாக விளங்குகின்றன. யோகநிலையில் கிடைக்கப்பெற்ற சிவ உருவம், சிவ நெறியை உணர்த்துகிறது. சிந்துவெளி மக்கள் கடவுளை யோகியாகவும், ஞானியாகவும் வழிபட்டமைக்கு அச்சிற்பங்கள் சான்றுகளாகின்றன. கிடைக்கப் பெற்றிருக்கின்ற விலங்குகளுடன் கூடிய சிவ உருவம் உலகின் உயிர்கள் அனைத்திற்கும் இறைவன்தான் (சிவன்) தலைவன் என்பதைச் சிந்துவெளி மக்கள் உணர்ந்திருந்தனர் என்பதை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வெளிப்படுத்துவது ஆகும். கிடைத்திருக்கும் தகடு ஒன்றில் நந்தியோடு கூடிய ஊர்வலக் காட்சி அம்மக்களின் சமய வழிபாட்டு விழாக்களைக் குறிப்பதாக ஆய்வாளர்கள் கொள்ளுகின்றனர்.

அகழ்வாராய்ச்சியாளர் மக்கே தம் நூலில் 22வது எண் கொண்ட முத்திரையில் காணப்படும் உருவம் பற்றி ஆய்ந்து, அந்த உருவம் மூன்று முகங்களைக்கொண்ட சிவபெருமான் உருவம்தான் என்ற முடிவுக்கு வருகிறார். மேலும், அந்த முத்திரையில் காணப்படும் மரக்கிளை ஆலமர இனத்தைச் சார்ந்தது என்றும் குறிப்பிடுகிறார். அதுபோல மார்ஷல் தன்னுடைய நூலில் 420வது எண் கொண்ட இலச்சினை சிவனுக்கே உரியது என்று கூறுகின்றார். இத்தகைய சான்றுகளால் சிந்துவெளி அகழ்வாராய்ச்சி சைவ சமயத்தின் தொன்மையை விளக்குகின்ற முக்கியச் சான்றாகும் என்பது பெறப்படுகின்றது.

பிற நாடுகளில் சிவன்

சைவ சமயத்தின் தொன்மை என்று எண்ணுகின்ற பொழுது இந்திய நாட்டைத் தவிரப் பிற நாடுகளிலும் சிவ வழிபாடுகள் இருந்தமைக்குரிய செய்திகளும் சான்றுகளாக அமைகின்றன. ப.முத்துக்குமாரசுவாமி அவர்கள், சிவன் என்ற தன்னுடைய நூலில் பிற நாடுகளில் அமைந்த சிவ வழிபாடுகளைப் பற்றி, உலகில் பல நாடுகளில் சிவனுக்கு ஆலயங்கள் பல இருந்திருக்கின்றன. சிவன் என்ற பெயரோடு ஊர்ப் பெயர்களும் இடப் பெயர்களும் அமைந்திருக்கின்றன. எகிப்திய நாட்டில் இலீபிய வனப்பகுதியில் சிவன் என்னும் பாலைநிலப் பசுந்தரை ஒன்று உள்ளது. அங்கு ஞாயிறைக் கடவுளாக வணங்குகின்ற வழிபாட்டுத் தலம் இருக்கிறது என்றும் அமன்யூபிதர் என்னும் பெயரில் அங்குள்ள கடவுள் வழங்கப்பெறுகிறது. இக்கடவுளுக்கு வாகனமாக இடபம் அமைந்துள்ளது. எனவே, தொன்மையில் சிவ வழிபாட்டில் அமைந்து சிவக் கடவுளின் பெயர் அமன்யூபிதர் என வழங்கப்பெற்றிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அத்தெய்வத்தைச் சிவ உருவமே என்று ஆர்தர் பெர்னாட்குக் என்பவர் குறிப்பிடுவதாகவும் குறிப்பிடுகின்றார். வட அமெரிக்காவில் கொலராடோ என்ற ஆற்றுப் பகுதியில் உள்ள குன்றின்மீது சிவ ஆலயம் இருப்பது 1937ல் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஆலயம் பத்தாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது என்று ஆய்வாளர்கள் கருதுவதாக ஆய்வாளர் சமன்லால் அமெரிக்கா என்ற தன்னுடைய நூலில் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அமெரிக்காவின் பல பகுதிகளில் சிவலிங்க வழிபாடு இருந்ததை அவர் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

பழந்தமிழரின் குடியேற்ற நாடாகிய கிரேத்தா என்னும் தீவின் நாகரிகமும் சிந்துவெளி நாகரிகமும் ஒரே சாயலைக் கொண்டவையாகும். அங்குள்ள பழைய நகரம் ஒன்றுக்குச் சிவன் என்ற பெயர் இருந்துள்ளது. சிந்துவெளியில் கிடைத்தது போலப் பழம் பொருள்கள் அங்கு கிடைத்துள்ளன. இந்தத் தீவு பற்றிய செய்திகளை ஆய்வுசெய்த வரலாற்று ஆசிரியர் எரதோதது, இத்தீவில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வாழ்ந்த மக்கள் தமிழரே என்று குறிப்பிடுகின்றார். இலங்கையில் சிவன்மலை என்ற ஒரு மலையே உள்ளது. ஜப்பானிய மக்களின் பழைய தெய்வங்களில் ஒன்று சிவோ என்பதாகும். ஜப்பான் தீவுகளில் தெருக்களின் சந்திப்புக்களில் சிவலிங்கங்கள் நட்டு வழிபடப் பெற்றிருக்கிறது. எபிரேய நாட்டில் வழங்கப்படும் மாதங்கள் ஒன்றின் பெயர் சிவன் என்பதாகும். கடவுளுக்குரிய பெயரில் மாதங்கள் வழங்கப்படுவது பண்டைக்கால வழக்கமாகும். இந்தச் சிவன் என்ற சொல் அந்நாட்டுச் சிவ வழிபாட்டைக் குறிப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர். இவ்வாறு கிடைக்கப்பெற்ற பிற நாட்டுச் சான்றுகள் மூலம் சைவ சமயத்தின் தொன்மை பெறப்படுகிறது.

ஆரியருக்கு முற்பட்ட காலம்

ஹரப்பா, மொகஞ்சதாரோவில் கிடைக்கப்பெற்ற பழம்பொருட்கள் ஆரியர் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னமேயே சைவ சமயம் இருந்தது என்பதை வலியுறுத்தும் சான்றுகள் ஆகும். மொகஞ்சதாரோவின் காலம் கி.மு.3000த்திற்கு முற்பட்டது என்பதால், உறுதியாக ஆரியர் வருகைக்கு முன்னர் சிவ வழிபாடு இருந்தமை உறுதியாகிறது. சிவ வழிபாட்டை ஆரியர்கள் பழந்தமிழராம் திராவிடர்களிடமிருந்தே பெற்றனர் என்பது அனைத்து ஆய்வாளர்களின் முடிவாகும். திராவிட இந்தியா என்ற நூலில் சார்லஸ் எலியட் என்பார், ஆரியர்கள் வழிபடும் உருத்திரன் திராவிட மக்களின் கடவுள். இது சிவன் என்ற பெயரின் மொழிபெயர்ப்பு என்கிறார். மேலும், டாக்டர் கில்பேட் என்ற அறிஞர், லிங்க வழிபாட்டை ரிக்குவேதம் இழித்துக் கூறுவதால் வேத காலத்திற்கு முன்பே சிவ வழிபாடு திராவிடர்களிடம் வளர்ச்சி அடைந்தது என்று கூறுகின்றார். அனைத்து ஆய்வாளர்களும் ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்தபிறகே சிவ வழிபாட்டை அறிந்தனர் என்பதை உறுதி செய்கின்றனர். எனவே, ஆரியரின் வருகையை ஆய்வாளர்கள் அனைவரும் கி.மு. 1500க்குக் கொண்டு வருவதால் சிந்துவெளி அகழாய்வுகள் ஆரியருக்கு முற்பட்ட பழமையை வலியுறுத்துவதாகிச் சைவத்தின் தொன்மையை வெளிப்படுத்துகின்றன எனலாம்.

வேதத்தில் உருத்திர வழிபாடு

வேதங்களைப் பற்றிய ஆய்வுகளில் பலவேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. கீழை மேலைநாடுகளில் மெய்ப்பொருளியல் வரலாற்று நூலில், வேதங்களைப் பற்றிய கருத்துக்களை வழங்கியிருக்கும் பேராசிரியர் தரபத சௌத்திரி, மந்திரங்கள், பிராமணங்கள் ஆகிய பகுதிகளைக் கொண்டது வேதம் என்றும் மந்திரங்கள் நான்கு வகைப்படும் என்றும் முதல் மூன்று வகைகள் வேள்வி குறித்த மந்திரங்கள் என்றும் குறிப்பிடுவார். ரிக்குவேதம் நினைவில் இருந்து உரத்த குரலில் ஓதப்பெறும் செய்யுட்களை உடையது. சாம வேதம் இசை அமைந்த செய்யுட்களை உடையது. யசூர் வேதம் உரைநடையில் அமைந்த வாய்ப்பாடுகளை உடையது. நான்காவதான அதர்வண வேதம் சமயச் சடங்குகளைக் கொண்டது என்று குறிப்பிடுவார். இந்த வேதங்களை நிலைத்தது என்றும் இவை யாரும் படைக்காமல் தானே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தோன்றியது என்றும் குறிப்பிடுவதுண்டு. வேதகாலத்தை முடிந்த முடிபாகக் கி.மு.4500லிருந்து கி.மு.2500 வரை என்று வரையறுப்பது உண்டு.

இந்த வேதங்களில் தெய்வங்களைப் புகழ்ந்துபாடும் பாசுரங்கள் இடம் பெற்றுள்ளன. அப்பாசுரங்களில் சிவன் குறிப்பிடப்படவில்லை. ஆனால், உருத்திரன் என்ற சிறு தெய்வம் குறிக்கப்படுகிறது. நான்கு வேதங்களிலும் உருத்திரனுடைய குறிப்புகள் காணப்படுகின்றன. வேதங்களில் காணப்படுகின்ற உருத்திரன் பற்றி ஆய்வாளர்கள் பலவிதச் செய்திகளைத் தொகுத்துத் தந்திருக்கிறார்கள். ஒவ்வொரு வேதத்திலும் கடவுள் வழிபாடு கூறப்பெற்றிருப்பதால், வேதத்தின் தெய்வம் என்று பார்க்கின்ற பொழுது தனி ஒரு கடவுளைக் குறிப்பிடாமல் வேதத்திற்கு உரிய ஆரியர்கள் இயற்கையின் பல்வேறுபட்ட உருவங்களைத் தெய்வங்களாகக் கொண்டனர். சவிதா என்ற சூரியன், இந்திரன், அக்னி என்ற முதல் மூன்று தெய்வங்களைக் கொண்டு, பிறகு அவற்றிலிருந்து 33 சிறு தெய்வங்களைக் குறிப்பிட்டு வேதத்தில் ஆரியர்கள் வணங்கியுள்ளனர். வேதங்களில் கூறப்படும் உருத்திரன் பற்றிய செய்திகளைச் "சைவப் பெருவழியில் காலம்" என்ற நூலில் அதன் ஆசிரியர் இரா.இராசசேகரன் அவர்கள் விரிவாகத் தந்துள்ளார். உருத்திரன் எவ்வாறெல்லாம் வணங்கப்பெற்றிருக்கிறார் என்பதையும், நான்கு வேதங்களிலும் உருத்திரன் எவ்வாறு அழைக்கப்பெற்றிருக்கிறார் என்பதையும், அவ்வாசிரியர் குறிப்பிட்டு உருத்திரனாகிய சிறுதெய்வ வழிபாடுதான் வேதங்களில் குறிக்கப்பெற்றிருக்கிறது, சிவனைப்பற்றிய குறிப்பில்லை என்பதை நிறுவுகிறார். திராவிடர்களின் சிவ வழிபாட்டின் மேன்மையைக் கண்டு, சிவனோடு உருத்திரனை இணைத்துச் சிவனைப் போற்றுவதுபோலத் தங்கள் கொள்கைகளை ஆரியர்கள் வகுத்துக் கொண்டனர்.

வேத காலத்திற்குப் பிறகு கி.மு.600ல் தோன்றிய வேதத்தின் அந்தமாகிய உபநிடதத்திலும் உருத்திரனைக் குறிப்பிட்டுப் பிறகு சிவனைப் பெயர் சொல்லிக் குறிக்கின்ற அளவுக்கு உபநிடத வளர்ச்சி காணப்படுகின்றது. உபநிடதங்கள் 108ல் ஒன்றாக விளங்குகின்ற ஸ்வேதாஸ்வதர உபநிடதம் மட்டும் சிவனை முன்னிறுத்திப் பலபடப் போற்றுகின்றது. சிவனை, உருத்திர சிவன் என்று குறிப்பிட்டுச் சிவபரத்துவம் பேசுகின்றது. எனவே, உபநிடத காலத்தில் சிவன் உபநிடதங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வழிபடப் பெற்றிருக்கிறான் என்பது தெரியவருகிறது. சிவனின் தொன்மை குறித்து, கி.மு.நான்காம் நூற்றாண்டு என்று கருதப்படுகின்ற வியாசர் பாடிய மகாபாரதத்திலும், வால்மீகி பாடிய இராமாயணத்திலும் செய்திகள் இடம்பெற்றுள்ளன. அதோடு சைவக் கோயில்களைப் பற்றிய செய்திகளும் இடம்பெற்றுள்ளன. மாபாரதத்தில் அர்ச்சுனனுடைய தவமும், அவன் சிவபெருமானை வழிபட்டது பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. சிவபெருமானை வழிபட்டு அர்ச்சுனன் பாசுபத அஸ்திரம் பெற்ற செய்தியும் மாபாரதத்தில் சிவ வழிபாட்டைக் குறிப்பதாகும். வால்மீகி பாடிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இராமாயணத்திலும் சிவன் உருத்திரன் என்றும் சங்கரன் என்றும் பசுபதி என்றும் அழைக்கப்படுகிறான்.

சைவ ஆகமங்களில் சில கி.மு.ஆறாம் நூற்றாண்டிற்கு முற்பட்டே தோன்றின என்ற கருத்து ஆய்வாளர்களிடையே நிலவுகின்றது. உபநிடதங்கள் தோன்றிய காலத்திலேயே சைவ ஆகமங்கள் தோன்றின என்ற கருத்தும் உண்டு. ஆகமங்கள், இறைவனால் தரப்பெற்றன என்று போற்றப் பெறுகின்றன. ஆகமத்தில் காணப்படுகின்ற ஞான பாதப் பிரிவில் சிவனைப் பற்றிய செய்திகள் தரப்பெற்று, உயிர் விடுதலைபெற சிவனை வழிபடுதல் வேண்டும் என்ற கொள்கை வலியுறுத்தப்படுகிறது.

முப்பெரும் பிரிவு

இந்திய நாட்டில் கால்கொண்ட சைவத்தின் மூன்று குறிப்பிடத்தக்கப் பிரிவுகள் மெய்ப்பொருள் இயலில் தனியிடம் பெறுகின்றன. மிகவும் தொன்மையான தென்னாட்டிற்குரியதாக விளங்கும் சைவ சித்தாந்தம் முதலாவதாகும். அதனையடுத்துத் தொன்மை வாய்ந்ததாகக் கருதப்பட்டு கி.பி.9-ஆம் நூற்றாண்டில் சிறப்பான இடம்பெற்றது காஷ்மீர சைவம். மூன்றாவது, தொன்மைக் காலத் தோற்றத்தைக் கொண்டு பின்னர் கி.பி.12-ஆம் நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கியது வீரசைவமாகும். இம்மூன்றும் சிவபெருமானைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடும் சமுதாயத்தைக் கொண்டது. சைவ சித்தாந்தத்தைத் தவிர ஏனைய இரண்டும் தென்னாட்டிற்கு அப்பால் சிறந்துவிளங்கிய காரணத்தால் அவற்றின் தத்துவங்களை வெளிப்படுத்தும் நூல்கள் வடமொழி உள்ளிட்ட பிற மொழிகளில் தோன்றின. மெய்ப்பொருள் இயலார் அவ்விரு பிரிவுகளையும் கிடைத்திருக்கும் பிறமொழி நூல்களைக் கொண்டு, அவற்றின் தத்துவங்களை இற்றைக்குத் தந்துள்ளனர். மெய்ப்பொருள் இயல் ஆய்வாளர்களின் ஆய்வுரை அடிப்படையில் இங்கு காஷ்மீர சைவம், வீரசைவம் ஆகியவற்றின் கொள்கைகளின் சுருக்கங்களும், அவற்றோடு சைவ சித்தாந்தம் கொண்டிருக்கும் ஒற்றுமை வேற்றுமைகளும் குறிக்கப்பெறுகின்றன.

காஷ்மீர சைவம் எப்பொழுது தோன்றியது என்று குறிப்பிட்டுக் கூற முடியவில்லை. கி.பி.8-ஆம் நூற்றாண்டிற்கு முன்பு காஷ்மீரத்தில் சைவமும், பௌத்தமும் நிலவிவந்தன. தொன்மைக் காலத்து பௌத்த விகாரங்களும், சைவ சிவன் கோயில்களும், திருமால் கோயில்களும் அவ்வக்கால மன்னர்களால் கட்டுவிக்கப்பெற்றன. காஷ்மீரத்தில் நிலவிய சைவம் சிவ ஆகமங்களைக் கைக்கொண்டிருந்தது. சிவாகமங்கள் 28 ஆகும். (காமிகம், யோகஜம், சிந்த்யம், கரணம், அஜிதம், தீப்தம், சூட்மம், சகஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம், விஜயம், நிசுவாசம், சுவாயம்புகம், ஆக்னேயம், வீரம், ரௌரம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகபிம்பம், ப்ரோக்தம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேஸ்வரம், கிரணம், வாதுலம் என்பன) இவற்றுள் முதல் பத்து சிவாகமங்களைக் காஷ்மீர சைவம் த்வைத தந்திரங்கள் என்று ஏற்றுக்கொண்டது. அடுத்த பதினெட்டைத்வைதாத்வைத

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தந்திரங்கள் என்றும் ஏற்றுக்கொண்டது. இவற்றை ஏற்றுக்கொண்டு காஷ்மீர சைவம் அத்வைத சைவமாக விளங்கிற்று. அவ்வாறு ஏற்றுக்கொண்ட பொழுது அத்வைத தந்திரங்கள் 64 பிரிவுகளாக விரிந்தன. பைரவம், யாமளம், மதம், மங்கலம், சக்ராஷ்டகம், பகுரூபம், வாகீசம், சிகாஷ்டகம் என்று அவற்றை எட்டாக அடக்குவதும் உண்டு. இத்தகு நிலையில் காஷ்மீர சைவம் ஆகமங்களின் அடிப்படையில் விளங்கிற்று என்பது மெய்யியலார் தரும் செய்தியாகும். அசோகரால் பௌத்தம் காஷ்மீரத்தில் பரப்பப்படுவதற்கு முன்னால் அங்குப் பல தெய்வ வழிபாடு இருந்தமை தெரியவருகிறது. அத்தெய்வங்களில் முதன்மையாக அர்த்தநாரீஸ்வரராகிய சிவபெருமான் அதாவது சத்தியும் சிவனும் ஒன்றாகிய சிவத்தெய்வம் வழிபடப்பெற்றுள்ளது. இச்செய்தி பின்னால்வந்த காஷ்மீர சைவப்பெரியார் கல்ஹணர் நூலிலிருந்து பெறப்படுகிறது. ஆதிசங்கரர் காஷ்மீரத்திற்குச் செல்லும்வரை அவ்வழிபாடு சிறந்திருந்து, தனிநிலையில் தத்துவ நூல்கள் வெளிப்படாமல் நிலவி வந்தது எனவும் தெரியவருகிறது. ஆதிசங்கரரின் காலத்திற்குப் பிறகே காஷ்மீர சைவம் மெய்ப்பொருள் உலகத்திற்குத் தெரியவந்தது.

கி.பி.9-ஆம் நூற்றாண்டில்தான் காஷ்மீர சைவம் ஒரு வடிவம் பெற்றது என்பர். காஷ்மீரத்தில் வாழ்ந்த அறிஞர் பெருமக்களின் நூல்களால் பரப்பப்பட்ட சைவம் காஷ்மீர சைவம் ஆயிற்று. ஒட்டுமொத்தமாகக் காஷ்மீர சைவத்திற்கு த்ரிகசாஸ்திரம் என்ற பெயர் ஏற்பட்டது. த்ரிகம் என்பது சிவன், சத்தி, அணு (உயிர்) அல்லது பதி, பசு, பாசம் அல்லது பரை, அபரை, பராபரை அல்லது அபேதம், பேதாபேதம், பேதம் என்ற மூன்றினைக் குறிப்பதால் த்ரிகம் என்ற பெயர்பெற்றது. பின்னர் அத்வைத சைவம் என்று விளக்கத்திற்காகக் கூறப்பட்டதும் உண்டு.

த்ரிக சாஸ்திரம் என்ற சொல்லில் சாஸ்திரம் என்பதை மூன்று பிரிவாகப் பிரிப்பதுண்டு. இவை, 1. ஆகம சாஸ்திரம், 2. ஸ்பந்த சாஸ்திரம், 3. பிரத்ய பிஜ்ஞா சாஸ்திரம் ஆகும். தத்துவங்களை விளக்க வந்த சாஸ்திரங்கள் என்று இவற்றைக் கொள்ளவேண்டுமே தவிர, முப்பிரிவுகள் என்று கொள்ளக் கூடாது. கி.பி.9-ஆம் நூற்றாண்டில் இச்சாத்திரங்களைக் கொண்டு கொள்கைகளைப் பரப்பியவர்களை மெய்ப் பொருள் அறிஞர்கள் கீழ்வருமாறு வரிசைப்படுத்துவர்.

வசுகுப்தர் - (9-ஆம் நூ)

கல்லடர் சோமநந்தர் காச்மீர மன்னன் - (850-900) (850-900)

அவந்திவர்மன் - (855-883)

உத்பலாசாரி (மா)- ராமகண்டர்(மா) - (900- 950) (900- 925)

லட்சுமணகுப்தர் (மா) - (950-1000)

அபிநவகுப்தர் (மா) - (993-1015)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சேமராஜர் (மா) - (12 ஆம் நூ)

யோராஜர் (மா) (மா- மாணவர்) - (12 ஆம் நூ)

இத்தகைய பெருமக்களால் எழுதப்பெற்ற நூல்கள் பலவாகும். அவை பற்றி பேராசிரியர் சோ.ந.கந்தசாமி அவர்கள் தன்னுடைய இலக்கியக் களஞ்சியம் இரண்டாவது தொகுதியில் குறிப்பிடுவார்கள். அவர்கள் குறிப்பின்படி சைவ ஆகமங்களின் உட்பொருளைக் கொண்டது சிவ சூத்திரம் ஆகும். இது சிவபெருமானால் வசுகுப்தருக்கு உபதேசிக்கப்பட்டது. இப்பெரியோர் வாழ்ந்த காலம் கி.பி.8-ஆம் நூற்றாண்டாகும். இவரின் மற்றொரு நூல் ஸ்பண்டகாரிகை எனப்படும். இதற்குப் பல உரைகள் உண்டு. அவற்றில் குறிப்பிடத்தக்கவை சேமராசரின் உரையாகும். அடுத்து கி.பி.9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோமானந்தரின் சிவதிருட்டி என்ற நூல் குறிப்பிடத்தக்கதாகும். இது பிரத்ய பிஜ்ஞா சாத்திரக் கோட்பாட்டை விளக்கும் நூலாகும். பின்னர் கி.பி.10-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிரத்ய பிஜ்ஞா சூத்திரம், பரமார்த்த சாரம், பிரத்ய பிஜ்ஞா விமர்சனி, பிரத்ய பிஜ்ஞா இருதயம், தந்திர லோகம், கல்லாடரின் ஸ்பண்ட சர்வஸ்வம் என்ற உரை ஆகியவை காஷ்மீர சைவத்தின் கொள்கைகளை விளக்கும் நூல்களாகும். இந்நூல்கள் அனைத்தும் ஆசிரியர் மாணவர் என்ற சந்தான பரம்பரையில் வந்த சான்றோர்களால் படைக்கப்பெற்றவை ஆகும். எனவே, காஷ்மீர சைவத்தின் தத்துவ நூல்கள் சைவ சித்தாந்த சாத்திர நூல்களைப் போல சந்தான மரபைக் கொண்டதாகும் என்ற செய்திகள் பேராசிரியர் அவர்களின் கட்டுரையால் பெறப்படுகின்றன.

கிடைக்கப்பெற்ற நூல்களின் அடிப்படையில் காஷ்மீர சைவத்தின் முப்பொருள் தத்துவங்களை இனிக் காணலாம்.

இறைவன்

காஷ்மீர சைவம் தொடக்கத்தில் சிவனை மெய்ப்பொருளாகக் கொண்டு வழிபட்டு வந்தது. பின்னர் தத்துவ அடிப்படையில் நூல்கள் வெளிவருகின்ற பொழுது, அச்சைவம் அத்வைத சைவமாக வளர்ந்திருந்தது. எனவேதான் காஷ்மீர சைவத்தில் சங்கரரின் அத்வைதக் கொள்கைச் சார்பு காணப்பெறுகிறது. முழுமுதற் பொருளாம் சிவபெருமானைப் பற்றிக் கல்லடரின் உரையில் காணப்படுவதாவது,

1. சிவன் எனும் சங்கரன் பஞ்ச கிருத்யங்களாம் ஐந்தொழில்களைச் செய்தாலும், ஒரே தன்மையன். அவனுடைய வடிவத்தில் அல்லது சொரூப இலக்கணத்தில் எந்த மாற்றமும் இல்லை. அப்பரம்பொருள் பரமார்த்தத் என்று அழைக்கப்படுகிறார்.
2. அவன் சத்தியிலிருந்து வேறுபட்டவன் அல்லன். பல்வேறு உருவும் வண்ணமும், தன்மையும் கொண்ட பரமேஸ்வரனுடைய இச்சத்தியால் தோன்றியது பிரபஞ்சம் என்றாலும் பிரபஞ்சம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவனிடத்திலிருந்து வேறுபட்டதல்ல. இப்பிரபஞ்சத்தின் தோற்றமும், ஒடுக்கமும் அவனுடைய திருவிளையாடல்கள் ஆகும். அவனுடைய சத்தியாகிய பிரபஞ்சம் மாயையினால் பலவாகக் காணப்படுகின்றது. அவனுடைய சத்தியின் விரிவே முப்பத்தைந்து தத்துவங்களாகும்.

3. சத்தியை மூன்றுவகையாக எல்லாச் சமயங்களும் குறிப்பிடும். அதேபோல காஷ்மீர சைவமும் குறிப்பிடுகிறது. ஆனால், ஒரு சிறிய வேறுபாடுண்டு. ஞானசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி என்பன அம்மூன்று சத்திகள். இவை மூன்றும் உயிரிடத்தில் இருப்பதாகப் பிற மதங்கள் கூறக் காஷ்மீர சைவம் அனைத்திற்கும் மூலமான பரம்பொருளிடத்திலும் இம்மூன்றும் இருக்கிறது என்று குறிப்பிடுகின்றது. மேலும், அவை உயிர்களிடத்தில் மாயையால் குறுக்கப்பட்டிருக்கிறது என்பதும் காஷ்மீர சைவத்தின் கொள்கையாகும். அதாவது பரம்பொருள் நிர்மலன் ஆதலால் அவனிடத்தில் முழுமையாக மூன்று சத்திகளும் இருக்க, மாயையின் வசப்பட்டதால் உயிரிடத்தில் குறுகி நிற்கிறது என்பதாகும்.

4. காஷ்மீர சைவத்தில் பிரபஞ்சம் பரமேஸ்வரனிடத்திலிருந்து வேறுபட்டதல்ல என்ற கொள்கையால் இறைவன் ஐந்து தொழில்களைச் செய்கின்றான் என்பதை ஏற்றுக்கொள்கின்றன.

5. பரம்பொருளாக இருக்கின்ற இறைவன் மூன்று சத்திகளோடு பொருந்தி இருந்தாலும் தனக்கெனப் பிரகாசத்தை (ஒளியை) உடையவன். அவ்வாறு இருக்கும்பொழுது மக்கள் அறிவிற்கு எளிதாகப் புலப்படாத பிரகாசமாய் உள்ளான். எனவே, சூட்சுமமாகவும், தூலமாகவும் விசித்திரமாகவும் விளங்குகிறான்.

6. முக்கியமான கொள்கை: பரமேஸ்வரன் ஞானப்பிழம்பாக, அறிவுச்சுடராக இருக்கின்றவன். தன்னுடைய சத்தியால் சித்துப் பொருளாகிய உயிர்ப் பொருளாகவும், அசத்துப் பொருளாகிய உயிரில் பொருளாகவும் காட்சி தருகிறான். இவ்வாறு காட்சி தருவது இயல்பான தன்மைகள் ஆகும். இதனை காஷ்மீர சைவ நூல்கள் அக்ருத்ரிமா விஸ்வபுராணம் என்று குறிப்பிடும். இதனை அகம் பிரம்மாஸ்மி என்பதன் விரிவு என்றும் கூறலாம். (இதுதான் அத்வைதக் கொள்கை, ஆதிசங்கரர் அருளிய தட்சிணாமூர்த்தி அஷ்டகத்தில் இக்கருத்து வலியுறுத்தப்படுகிறது).

7. பிரபஞ்சத் தோற்றத்திற்குக் காரணமாக அமைவது சிதி என்பதாகும். அதாவது தாதான்மியமாக (தற்கிழமை) விளங்கும் பகவதி என்ற பெண்பாற் சொல்லாக விளங்குவது இச்சிதி ஆகும். இதுவே பராசத்தி. இதற்கு மேலானது எதுவும் இல்லை. இது இறைவனிடத்திலிருந்து பிரிக்க முடியாமல் இருக்கிறது. இச்சக்தி தொழில்படத் தொடங்கும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொழுது உலகம் தோன்றுகிறது. தொழில் அடங்கும் பொழுது உலகம் அடங்குகிறது.

8. சித்தாந்தம் கூறுவதுபோல மாயை உலகத்திற்குக் காரணம் ஆகாது. பரமேஸ்வரரின் சத்தியினாலே பொருளோ, கருவியோ இன்றி உலகமாய் விரிகிறது. அவ்வுலகம் சத்தியில் ஒடுங்குகிறது. எனவே, அச்சத்தி சுதந்திர சத்தியாகும்.

9. ஒரு கண்ணாடி முன் உள்ள பொருளே கண்ணாடியில் நிழலாகத் தெரிகிறது. கண்ணாடியில் தெரியும் உருவம் பிரதிபிம்பமாகும். அப்பிரதி பிம்பம் வேறு ஒரு பொருளைக் கொண்டு உண்டாவதில்லை. எதிரில் உள்ள பொருளைக் கொண்டுதான் உண்டாகிறது. அதுபோல பரமேஸ்வரரின் பாகவதத்தைப் பெற்றதே இப்பிரபஞ்சமாகும்.

10. பரமேஸ்வரனுக்கு மூன்று சத்திகளோடு சித் ஆனந்தம் என்ற சத்திகளும் உண்டு. பரமேஸ்வரனிடத்தில் சித் சத்தி ஓங்கியிருக்கும் பொழுது சிவன் எனப்படுகிறான். ஆனந்த சத்தி ஓங்கியிருக்கும் பொழுது சத்தி எனப்படுகிறான். இச்சா சத்தி ஓங்கியிருக்கும் பொழுது சதாசிவம் எனப்படுகிறான். ஞான சத்தி ஓங்கியிருக்கும் பொழுது ஈஸ்வரன் எனப்படுகிறான். கிரியா சத்தி ஓங்கியிருக்கும் பொழுது சுத்த வித்தை எனப்படுகிறான். இக்கொள்கை சித்தாந்தத்திற்கும் உடன்பாடு.

11. இந்தச் சத்தி மூன்று அவத்தைகளாகிய வழிகளைப் பெற்றிருக்கிறது. அவை பரை, பராபரை, அபரை எனப்படும். பரையில் சித் சத்தியம், ஆனந்த சத்தியம் உள்ளன. பராபரையில் இச்சா சத்தி உள்ளது. அபரையில் ஞான சத்தியும் கிரியா சத்தியும் ஓங்கியிருக்கின்றன. எப்படி இருப்பினும் இச்சத்திகள் பரமேஸ்வரனிடத்தில் இருந்து வேறுபட்டவை அல்ல. இதுவும் சைவ சித்தாந்தத்திற்கு உடன்பாடு.

12. சிவனும் சத்திகளும் கதிரவனும் கதிர்களும் போல இணைந்துள்ளன. கதிரவன் தோன்றி அவன் கதிர்கள் விரியும்பொழுது உலகப் பொருள்கள் விளக்கம்பெறுவது போல பரமேஸ்வரனுடைய சத்திகள் தொழிற்படும் போது பிரபஞ்சமாக அவன் காட்சி தருகிறான்.

13. சந்திரன் உருவம் ஓடும் நீரிலும் தேங்கி நிற்கும் நீரிலும் ஓடுவது போலவும் நிற்பது போலவும் தோன்றினாலும் சந்திரன் விகாரப்படுவது இல்லை. அதுபோல பரமேஸ்வரன் பல்வேறு பிறவிகளை மேற்கொண்டாலும் சொர்க்க நரகத்தை நுகர்ந்தாலும் நிர்மலனாய்த் தன் நிலையில் எவ்வித வேறுபாடும் இன்றி நிற்பான். இதுவும் சித்தாந்தத்திற்கு உடன்பாடே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

14. முற்றறிவும் பேராற்றலும் உடைய பரம்பொருள்தான் சார்புப் பொருளால் சிற்றறிவும் குறைந்த ஆற்றலும் கொண்ட உயிராகக் காணப்படுகின்றான்.

இத்தகைய காஷ்மீர சைவத்தின் இறைவனைப் பற்றிய தத்துவக் கருத்துக்கள் கிடைக்கப் பெறுகின்றன.

சைவ சித்தாந்தத்தோடு ஒற்றுமையும் வேற்றுமையும்: காஷ்மீர சைவமும் சைவ சித்தாந்தமும் சிவபெருமானையே பரம்பொருளாகப் போற்றுவதால் பெரும்பாலான கொள்கைகள் ஒன்றுபட்டே காணப்படுகின்றன. அத்வைதக் கொள்கையைக் காஷமீர சைவம் சார்ந்திருந்ததால் பரமேஸ்வரனே உயிராகவும் உலகப் பொருள்களாவும் திகழ்கின்றான் என்ற ஏகான்ம வாதத்தைக் குறிப்பிடுகின்றது. ஆனால், சைவ சித்தாந்தமோ உலகத் தோற்றத்திற்கு மாயை முதற் காரணம் என்றும் வினையும் சத்தியும் துணைக் காரணம் என்றும் சிவபெருமானை நிமித்தக் காரணம் என்றும் குறிப்பிடுகின்றது. இதுவே பெருத்த வேறுபாடாகும்.

"காரிய கார ணங்கள் முதல் துணை நிமித்தம் கண்டாம்
பாரின்மண் திரிகை பண்ணு மவன் முதல் துணைநி மித்தம்
தேரின்மண் மாயை யாகத் திரிகைதன் சத்தி யாக
ஆரியன் குலால னாய்நின் றாக்குவன் - அகில மெல்லாம்"

(சிவஞான.சி.38)

என்கிறது சிவஞான சித்தியார். ஒற்றுமை என்று வருகின்றபொழுது சைவ சித்தாந்தம் சொல்லுவது போல (திருவருட்பயன், சத்தி பின்னமிலான் எங்கள் பிரான், பா.2) காஷ்மீர சைவமும், பரமேஸ்வரனின் சத்தி பிரிப்பற்றது என்கிறது. இறைவனுக்குரிய ஐந்து தொழில்களை இரண்டு சைவங்களும் ஏற்றுக் கொள்ளுகின்றன. இறைவன் ஒளிப் பிழம்பானவன் என்பதையும், ஒளிப்பிழம்பாகி ஐந்து தொழில்களைச் செய்கின்றபொழுது எந்த நிலையிலும் விகாரப்படுதல் இல்லை என்பதையும் இரண்டு சைவங்களும் குறிப்பிடுகின்றன. இதனையே சிவஞான போதம் "காந்தம் கண்ட பசாசத்தவையே" என்று ஐந்தாம் சூத்திரத்தில் குறிப்பிடுகிறது.

உயிர்க் கொள்கை

1. காஷ்மீர சைவத்தில் பரமேஸ்வரன் தனது சுதந்திரத் தன்மையின் காரணமாகத் தன்னுடைய அபேதத்தை மறைத்துக்கொண்டு (ஒற்றுமை) பேதவியாத்தியை (வேறுபாட்டை) மேற்கொள்ளுகின்றான். அப்பொழுது அவனது இச்சை, ஞானம், கிரியை ஆகிய சத்திகள் குறுக்கப்பட்டவை போல் தோன்றுகின்றன. அப்பொழுது அவன் சீவான்மாவாக (உயிராக)க் கருதப்படுகிறான். அப்பொழுது அவன் சம்சாரி என அழைக்கப்படுகிறான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. பேத வியாத்தியாம் இறைவன் தன்னைப் பேதப்படுத்திக் கொள்ளுகின்ற பொழுது மூன்று சத்திகள் எவ்வாறு குறுகுகின்றன என்றால் - இச்சா சத்தி குறுகி ஆணவ மலமாக மாறுகிறது. ஞானசத்தி குறுகி மாயை ஆகி, அந்தக் கரணங்கள் புத்தி ஆகியவை மலமாகிறது. கிரியா சத்தி குறுகிக் கன்மமலமாக மாறுகிறது. எனவே, உயிர் என்ற தனித்த பொருள் இல்லாது இறைவனின் சத்திகள் குறுகி மலங்களாகச் சார்ந்து உயிர்களாகப் பிம்பப்படுகின்றன என்பது இச்சமயத்தின் கொள்கையாகும்.

3. பரமேஸ்வரன் தமக்குத் தொடர்பில்லாத தருமம், அதருமம், சொர்க்கம், நரகம், பிறப்பு, இறப்பு, இன்பம், துன்பம், மரணம், ஆசிரமம் என்பனவற்றுடன் யான் எனது என்னும் செருக்கின் காரணமாக அறியாமை மேலிட்டதால் உயிர்களாகிச் சுழல்கிறான்.

4. எங்கும் நிறைந்திருக்கும் சைதன்யமான இறைவன், ஆணவம் முதலாகிய மதங்களால் சூழப்பெற்றிருப்பதால் அணு என்றும் சீவன் என்றும் புருடன் என்றும் ஆன்மா என்றும் வழங்கப்படுகிறான். உயிர்கள் அனுபவிப்பதை இறைவன் அனுபவிக்கின்றான் என்பது உபசார வழக்காகும்.

5. மாயை தான் உயிர்நிலையைப் பெற்றுள்ள பரமேஸ்வரனுக்கு மறைப்பாகப் பயன்படுகிறது. மாயையை ஏற்றுக்கொண்டதால் பதியின் சுதந்திரநிலை மறைக்கப்பட்டு வரதந்திரநிலை ஏற்படுகிறது.

6. ஆணவம் என்பது நெல்லினுள் இருக்கும் உமி போன்றது. சைவ சித்தாந்தமும் இதனை ஏற்கிறது.

7. காஷ்மீர சைவத்திலும் விஞ்ஞானகலர், பிரளாயகலர், சகலர் என மூன்று பிரிவுகள் உண்டு. விஞ்ஞானகலர் பேத உணர்வற்ற சுத்த போத வடிவத்தை உடையவர் ஆவார். அடுத்து நான் என்ற உணர்வும் இது என்ற உணர்வும் இன்றி யோகியரின் சமாதி நிலையில் உள்ளது போன்ற உணர்வுகளை உடையவர் பிரளாயகலர் ஆவார். சகலர் எனப்படுபவர்கள் இறைவனின் மூன்று சத்திகளை முழுமையாகக் குறுக்கிக் கொண்டவர்கள் ஆவார்கள்.

8. ஆன்மா என்ற நிலையில் நான்குவகை அவத்தைகள் பேசப்படுகின்றன. விழிப்புநிலை (நனவு) கனவுநிலை, உறக்கநிலை, ஆனந்தநிலை என்பன அவை. பரமேஸ்வரன் எதிலும் எந்நிலையிலும் நீக்கமற நிற்பதால் முதல் மூன்று நிலைகளில் உள்ளுறையாய் இருந்து வருகிறான். நான்காவது நிலையில் பரமேஸ்வரன் தன்நிலைக்கு வருகிறான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

9. உயிர் போகத்தை அனுபவிக்கிறது. அது புரியஷ்டகத்தைக் கொள்ளுகிறது. புரி என்பது உடம்பைக் குறிக்கும். அதில் எட்டுப் பொருள்கள் அடங்கியுள்ளன. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தோடு மனம், புத்தி, அகங்காரம் என்ற மூன்றும் சேர்ந்து எட்டாகிறது. இது புரியட்ட காயம் என்று சைவ சித்தாந்தத்தில் கூறப்படும். பரமேஸ்வரன் தன்னைப் புரியட்டகத்தில் உட்படுத்திக் கொண்டு ஆன்மாவாகக் காட்சியளிக்கிறான்.

10. உயிர் பிறவிதோறும் உண்டாகும் கன்ம வாசனைகளுக்கு ஏற்ப இன்ப துன்பங்களை அனுபவிக்கிறது. இவ்வாறு அனுபவிப்பது பரிஸ்பந்த சத்தியின் லீலை என்று நூல்கள் கூறுகின்றன.

11. உயிர்கள் சீவன் முத்தர்களாக விளங்குவது உண்டு. சீவன் அருட்சத்தி படிந்த காலத்தில் மெய்யறிவு பெறுகின்றது. அந்த அறிவால் சடப்பொருளிலிருந்து நான் வேறு என்ற உறுதிப்பாடு பிறக்கிறது. தன்னுடைய உண்மையான சொரூபம் என்ன என்பதை உணர்கிறது. உணர்ந்த மாத்திரத்தில் சீவன் சிவமாகிறது. பிரபஞ்சம் சிவமாகக் காட்சியளிக்கிறது. அதனை நுகர்பவன் சீவன் அல்ல பரமேஸ்வரனே என்பதை உணர்கிறது. இந்த நிலையே சீவன்முத்தர் நிலையாகும்.

இவ்வாறு உயிர் பற்றிய காஷ்மீர சைவத்தின் கருத்துக்கள் கிடைக்கப்பெற்ற நூல்களிலிருந்து அறியப்பெறுகின்றன. சைவ சித்தாந்தத்திற்கும் காஷ்மீர சைவத்திற்கும் உயிர் அடிப்படையில் முக்கியமான வேறுபாடு உண்டு. அதாவது காஷ்மீர சைவம் அத்வைதக் கொள்கையின்படி பரமேஸ்வரனே உயிராகக் காட்சி தருகின்றான் என்று குறிப்பிடுகிறது. ஆனால், சைவ சித்தாந்தமோ உயிர் வேறு இறைவன் வேறு, இரண்டும் தனித்தனிப் பொருட்கள், ஆனால் அதே நேரத்தில் இறைவன் உயிரோடும், உயிர் இறைவனோடும் அத்துவிதமாகக் கலந்திருக்கிறது என்ற கொள்கை உடையதாகும். இரண்டு சமயங்களும் மும்மலங்களை ஏற்கின்றன. இரண்டு சமயங்களும் நனவு, கனவு, உறக்கம் என்ற மூன்று நிலைகளை ஏற்கின்றன. ஆனால், உயிர்ப்படக்கம் என்ற நிலையில் இரண்டும் வேறுபடுகின்றன. காஷ்மீர சைவம் துரியாதீத நிலையாம் உயிர்ப்படக்கத்தில் இறைவன் மட்டுமே காட்சி தருகிறான் என்று குறிப்பிட, சைவ சித்தாந்தமோ இறைவனோடு உயிர் இணைகிறது என்று குறிப்பிடுகின்றது. இரண்டு சமயங்களும் உயிர்களின் மூவகையை ஏற்றுக்கொள்ளுகின்றன. இரண்டு சமயங்களும் சீவன் முத்தர் நிலையை ஏற்றுக்கொள்ளுகின்றன.

பாசக் கொள்கை

உயிரானது தான் பரிபூரணன், பேரறிவையும் பேராற்றலையும் உடையவன் என்பதை அறியாது, குறுகிய அறிவையும், ஆற்றலையும் கொண்டவனாகக் கருதுவதே பந்தம் என்ற பாசம் என்று அபிநவகுப்தர் எழுதிய பரமார்த்த சாரம் என்ற காஷ்மீர சைவநூல் கூறுகிறது. மேலும், ஆன்மாவிற்குப் புறம்பான

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உடல், பிராணவாயு முதலிய அசேதனப் பொருள்களுடன் உயிர் தன்னை இணைத்துக்கொண்டு, நான் பருத்திருக்கிறேன், சுகமாக இருக்கிறேன் என்று கூறுவது அறியாமையாகும். இதனால் உயிர்கள் பல என்ற தவறான கருத்து ஏற்படுகிறது. இந்தநிலையில் ஆன்மா தன்னுடைய ஞான சத்தியையும் கிரியா சத்தியையும் அறியமுடிவதில்லை. அதனால் தனது பிரகாசமான சத்தியையும், ஆராய்கின்ற சத்தியையும் இழந்து, முக்குண இயல்புகளுக்கு உள்ளாகி, இன்ப துன்ப நிலைகளுக்கு ஆளாகி உழல்கிறது என்றும் அவர் தன்னுடைய நூலில் குறிப்பிடுகின்றார். இந்தநிலையில்தான் காஷ்மீர சைவம் பந்தமாகிய பாசத்தின் நிலையைக் குறிப்பிடுகிறது. மேலும், பாசத்தின் கொள்கைகளைக் காஷ்மீர சைவ நூல்களிலிருந்து வகுத்துக்காட்டுவர் ஆய்வாளர் திருஞானசம்பந்தம். அவரின் கருத்துகள் கீழ்வருமாறு.

1. அறியாமை என்பது காஷ்மீர சைவத்தில் இருளாகவே உருவகப்படுத்தப்படுகிறது. அறிவோனும் அறியப்படும் பொருளுமாக இருக்கும் இப்பிரபஞ்சம் உண்மையிலேயே பரமேஸ்வரனிடமிருந்து வேறுபட்டது அன்று என்றாலும், என் உடல், என் மகன், என் வீடு என்றெல்லாம் தன்னிடத்திருந்து வேறுபடுத்திக் காண்பதை "அனாத்மாபிமானம்" என்று கூறுவார்கள். அறிவுமயமான நானே இப்படிப் பிரகாசிக்கிறேன் என்று உள்ளபடி எண்ணாமல் பொய்யான பேத உணர்வு ஏற்படுவது அறியாமை என்ற இருளால் விளைந்ததாகும். அறியாமையில் மற்றொருவகை ஆன்மா தனக்குப் புறம்பாக உள்ள பொருள்களில் ஆத்மாபிமானம் கொள்ளுதல் ஆகும். அதாவது நான் இளைத்திருக்கிறேன், பசித்திருக்கிறேன், அனுபவித்திருக்கிறேன் என்பதெல்லாம் உடல், பிராணன், புத்தி ஆகிய நிலைகளில் ஆத்மத் தன்மையைப் பெறுவதாகும்.

2. உயிருக்கு ஏற்படுகின்ற இன்பதுன்ப அனுபவங்களுக்குக் காரணம் புரியட்ட காயம் எனப்படும் எட்டோடு தொடர்பு கொண்டிருப்பதே ஆகும். இந்தநிலையில் ஆன்மா தான் வேறு, தன்னோடு இருக்கும் பரமேஸ்வரன் வேறு என்று கொள்ளுகின்ற பேத உணர்வுதான் பந்தம் என்ற பாசம் ஆகும். இதனைப் பசுகுப்தா தன்னுடைய நூலில் குறிப்பிடுகின்றார்.

3. அறியாமையைத் த்ரிக சாஸ்திரம் இரண்டு வகையாகக் குறிப்பிடும். ஒன்று "பௌருஷ அஞ்ஞானம், மற்றொன்று பௌத்த அஞ்ஞானம் என்பதாகும்". பௌருஷ அஞ்ஞானம் என்பது ஆன்மாவோடு அநாதியே தொடர்பு உடையதாகும். இதுவே ஆணவ மலமாகும். உயிர் தன்னைக் குறுகிய சத்தி உடையதாகக் கருதுவதாகும். பௌத்த அஞ்ஞானம் என்பது அறிவைப் பற்றியது. புத்தி, மனம், கரணங்கள் ஆகியவை ஒரு குறிப்பிட்ட அறிவையும் ஆற்றலையும் எல்லையாக உடையன. எனவே, அவற்றைக் கொண்டு அறிவைக் கொள்வது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிற்றறிவு எனப்படும். அதாவது முழுமையான ஞான அறிவு அல்லாதது. இந்த நிலையில் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து உற்று அறிதலே இந்தப் பௌத்த ஞானமாகும். இந்த அஞ்ஞானத்தால் ஆன்மா உலகப்பொருள் அனுபவத்தில் சிக்குண்டு சீர்கெட்டுத் துன்புறுகிறது.

4. இந்தப் பாசுங்களிலிருந்து விடுபடுவதற்குரிய செய்திகளையும் காஷ்மீர சைவ நூல்கள் குறிப்பிடுகின்றன. மும்மலங்களை ஏற்றுக்கொள்ளுகின்ற காஷ்மீர சைவம் அவற்றைக் களைந்து பிரகாச விமர்சமயமான, போத - சுவாதந்திரிய (வேறுபட்ட, வேறுபடாத) நிலையில் உள்ள பரமேஸ்வரன் நானே என்று ஆன்மா அறிவதுதான் முத்தியாகும். முத்தியடைதல் பிற மதங்கள் கூறுவதுபோல ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைவதல்ல. முத்திக்குத் தேசம், காலம், வடிவம் என்ற எல்லைக்கோடுகள் இல்லை. துவாத சாந்த நிலையில் அனுபவிப்பதும் அல்ல. ஆத்மாபிமானம் என்ற அஞ்ஞானத்தை அகற்றி, ஆன்மா தான் பரமேஸ்வரன் தான் என்ற தன்மையை அறியக்கூடிய அறிவைப் பெறுவதுதான் முத்தியாகும். சிற்றறிவிலிருந்து மாறித் தன் முழுமையான பரமேஸ்வர நிலையில் பிரகாசிக்கும் பொழுது ஆன்மா சீவன் முத்தர் எனப்படுகிறது.

5. இந்த முத்தர் நிலையில் வினைகளைச் செய்து வந்தாலும் நானே பரமேஸ்வரன் என்றும் நான் எதையும் செய்பவன் அல்லன், பரமேஸ்வரனுடைய சுதந்திர சத்தியே செய்விக்கிறது என்றும் எண்ணி, மற்றவற்றில் ஆசையாம் அபிமானம் கொள்ளாது செயல்படும்பொழுது அந்தச் செயல்களின் பயன்கள் சீவன் முத்தரைச் சாராது. இப்படிப்பட்ட சீவன் முத்தருக்கு உமி நீக்கப்பெற்ற அரிசி எப்படி மீண்டும் முளைக்காதோ அதுபோல மலநீக்கம் பெற்ற உயிர் மீண்டும் பிறப்பதில்லை.

6. த்ரிக தரிசனத்தில் முத்தி நிலைக்கு நீரும் நீரும் கலப்பது போலவும், பாலும் பாலும் கலப்பது போலவும் சீவனும் சிவனும் சமநிலை அடைவது முத்தியாகும் என்று உவமை மூலம் விளக்கப்படுகிறது.

7. இந்த முத்தியை அடைவதற்கு நால்வகை உபாயங்கள் (வழிகள்) கூறப்பெற்றுள்ளன. ஆணவோபாயம், சாத்தோபாயம், சாம்பவோபாயம், அனுபாயம் என்பன அவை. இவற்றில் ஏதேனும் ஒன்றினைச் செய்தால்கூட முத்தி அடையமுடியும். இதனைச் சைவசித்தாந்தம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று குறிப்பிடும்.

8. காஷ்மீர சைவத்திலும் வழிபாட்டு முறைகள் கூறப்படுகின்றன. பரமேஸ்வரனைப் போற்றித் துதித்தல் வேண்டும். இதனைப் பற்றி, "உத்பலதேவர், சிவஸ்தோத்திலாவளி" என்ற நூலில், "உமாபதியே இவ்வண்ணத்தன் பண்பினன் என்றெல்லாம் பகுத்துக்கூற முடியாது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நீ அனைத்திலும் இரண்டற கலந்திருப்பவன், அனைத்துமே உனது வடிவாகக் கொண்டவன், அனைத்துப் பொருள்களையும் தன்னகத்து அடக்கிக் கொண்டிருப்பவன், அத்தகைய உன்னை, நான் எப்பொழுதும் பூசிப்பேனாக, துதிப்பேனாக என்று உயிர் வேண்ட வேண்டும்'' என்று குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு காஷ்மீர சைவ நூல்கள் கட்டு நிலையாம் பாசத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. இவை சித்தாந்த சைவத்திலிருந்து அதிகம் வேறுபடவில்லை. முத்தி அடிப்படைக் கொள்கையில் மட்டுமே வேறுபட்டுச் செயல்முறைகளில் வேறுபடவில்லை எனலாம். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களில் உடன்பட்டு, அவை அநாதி என்பதிலும் உடன்பட்டு, அதை நீக்கினால் முத்தி என்பதிலும் உடன்பட்டு, அதை நீக்குவதற்குக் குரு உபதேசத்தைப் பெறுவதையும், இறைவனை வழிபடுவதையும் உடன்பட்டு, இரு சமயங்களும் விளங்குகின்றன. ஆனால், முத்தி நிலையில் சைவ சித்தாந்தம் கன்ம, மாயை மலங்கள் ஆச்சாரியனால் நீக்கப்பட்டு, ஆணவம் செயல் இழந்து, உயிரானது முழுமுதல் தெய்வமாம் இறைவனின் திருவடியைச் சார்ந்து, இரண்டறக் கலந்திருப்பது முத்தி என்று கூறிட, காஷ்மீர சைவம் அத்வைதக் கொள்கையைக் கொண்டதால் முத்தி என்பது - ஆன்மா தான் வேறு, பரமேஸ்வரன் வேறு என்ற வாழ்விலிருந்து நீங்கி வழிபாட்டாலும், குருவின் சார்பாலும் தான் தானல்ல, பரமேசுவரன் தான் நானே என்று தன்னுடைய சுயரூபத்தை அறிவதுதான் முத்தி என்று குறிப்பிடுகிறது. இந்த அடிப்படை வேறுபாட்டைத் தவிரப் பாசப் பற்றும், பாச நீக்கமும் இரண்டு சமயத்திற்கும் ஒன்றேயாகும்.

இந்தியா என்ற வரையறைக்குட்பட்ட பகுதி முழுமையும் கி.மு.6000த்திற்கு முன்பேயே சைவசமயம் பரவியிருந்த காரணத்தால், காஷ்மீரப் பகுதியிலும் சைவம் பரவியிருக்கும் எனலாம். தேவார ஆசிரியர்கள் காலத்திலும் அப்பகுதிகளிலெல்லாம் சைவசமயம் பரவியிருந்த காரணத்தினால் தான் திருமுறை அருளாளர்கள் வடநாட்டுத் திருத்தலங்களையும், அங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானையும் பாடிப் பரவியுள்ளனர். திருக்கேதாரம், நீலப் பருப்பதம் ஆகிய தலங்களைப் பாடியிருப்பதையும், திருநாவுக்கரசர் கயிலையைக் காணாது மீளேன் என்ற உறுதியோடு கயிலைக்குச் சென்ற காட்சியையும், காரைக்கால் அம்மையாரை "வரும் இவள் நம்மைப் பேணும் அம்மை காண்'' என்று சிவபெருமானே கூறியதாகச் சேக்கிழார் கூறுவதையும் (கா.பு.58) எண்ணிப்பார்க்கும் பொழுது இமயம் என்ற கயிலைமலைப் பகுதியிலும் சைவம் பரவியிருந்ததை உணர முடிகின்றது. தொடக்ககாலத்திலேயே காஷ்மீரத்தில் பரவியிருந்த சைவம், கி.பி.9-ஆம் நூற்றாண்டில் கொள்கைகளைத் தத்துவ நூலாகப் பெற்றாலும், இனிவரும் ஆய்வுகளில் கி.பி.9-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட இலக்கிய வடிவங்கள் கிடைக்கலாம், அப்பொழுது காஷ்மீர சைவத்தின் முழுமையை அறியமுடியும். அதுவரை கி.பி.9-ஆம் நூற்றாண்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முதல் கிடைத்திருக்கின்ற நூல்களின் அடிப்படையில் அக்கொள்கைகளை வரையறுத்து மெய்ப்பொருள் இயலார் தந்திருப்பது பெருமைக்கு உரியதாகும். கிடைத்திருக்கும் சான்றுகள் மூலம் அத்வைதத்தைச் சார்ந்தது காஷ்மீர சைவம் சித்தாந்த நெறியோடு ஒப்பிடப்பெற்றது. கிடைத்திருக்கும் சான்றுகள் கி.பி.8-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டது என்பதால் சங்க இலக்கியத்தில் நேரடியாகக் காஷ்மீர சைவம் இடம்பெற்றதைக் காண இயலவில்லை. சைவ சித்தாந்த அடிப்படையில் காஷ்மீர சைவத்தோடு ஒற்றுமைப்பட்ட செய்திகள் சைவ சித்தாந்த செய்திகளாகச் சங்க இலக்கியத்தில் காணப்படுவனவற்றைக் காஷ்மீர சைவத்திற்கும் உடன்பாடாகக் கொள்ளுவதில் தவறில்லை.

வீர சைவம்

இந்திய மெய்ப்பொருள் ஆய்வியலில் இடம்பெறுகிற சமயங்களில் ஒன்று வீர சைவம் ஆகும். இது ஒரு நிறுவனமயமானது கி.பி.12-ஆம் நூற்றாண்டு என்றாலும் இச்சமயக் கொள்கைகள் சைவ சமயம் மேலோங்கிய தொன்மைக் காலத்திலேயே நிலவி வந்துள்ளது. இச்சமயம் வேதநெறிகளை மறுக்கின்ற சமயங்களில் ஒன்றாகும். எனவே, திராவிடர்களின் முதன்மை உணர்வான சைவ சமயம் மேலோங்கி இருந்த காலத்தில் வேதங்களாலோ, மற்ற சமய உணர்வுகளாலோ சைவ சமயத்திற்கு இகழ்வு தோன்றிய காலத்தில் வீர சைவ உணர்வு தோன்றியிருக்க வேண்டும். சைவம் என்ற சொல்லுக்கு வீரம் என்பது அடைமொழியாக அமைந்திருப்பதை நோக்கும்பொழுது, சைவ சமயத்தைக் காப்பதற்காகப் புத்துணர்ச்சியோடு கூடிய இச்சமயம் தோன்றியிருக்க வேண்டும் என எண்ணமுடிகிறது. வீரசைவ உணர்வுகள் தோன்றிய காலம் தொன்மையானதாக இருந்தாலும் அது ஒரு நிறுவனமாகப் பரிணமித்தது கி.பி.12-ஆம் நூற்றாண்டு என்பது மெய்ப்பொருள் அறிஞர்கள் அனைவரின் கருத்தாகும். வீரசைவம் பற்றிய செய்திகள் ஆங்கிலமொழி உள்ளிட்ட பல மொழிகளில் வெளிவந்திருந்தாலும் இன்றைக்குக் கிடைத்திருக்கும் கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாற்றியல் அறிஞர் டி.எம்.பி.மகாதேவன் அவர்கள் கட்டுரையும், வை.இரத்தினசபாபதி அவர்களின் சென்னைப் பல்கலைக்கழகத்தின் வெளியீடான வீர சைவம் என்ற நூலும், பேராசிரியர் முனைவர் சோ. ந. கந்தசாமி அவர்களின் இந்தியத் தத்துவக் களஞ்சியத்தின் மூன்றாவது தொகுதியில் உள்ள கட்டுரையும், இரா.இராசசேகரன் அவர்களின் சைவப்பெருவழியில் காலம் என்ற நூலில் இடம்பெற்ற வீரசைவச் செய்திகளும் குறிப்பிடத்தக்கனவாம்.

வீர சைவம் பெயர்க் காரணம்

சைவம் என்ற சொல்லுக்கு வீரம் என்ற தொடரில், மேலோட்டமாகப் பார்க்கும்பொழுது வீரம் பொருந்திய சைவம் என்று பொருள் தோன்றினாலும், வீரசைவம் என்ற சொல்லை ஆய்ந்து அறிஞர் பலர் கருத்துக்களைத் தந்துள்ளனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. வீர என்ற சொல்லில், வீ என்பது சிவனும் சீவனும் வேறல்ல என்ற ஐக்கிய பாவத்தை உணர்த்துகிறது. ர என்ற எழுத்து, துய்த்தல் அல்லது மகிழ்தல் என்ற பொருளைத் தரும் என்று கூறி, சிவனும் சீவனும் வேறல்ல என்ற அனன்னிய உணர்வில் திளைக்கும் சைவத்தை வீர என்ற அடைச்சொல் உணர்த்தி அம் மதத்தைக் குறிப்பிடுகிறது என்று பேராசிரியர் ரவீந்திரகுமார் குறிப்பிடுகிறார்.

2. வீர என்ற சொல் வீர தத்துவம் என்ற பொருளைத் தருகிறது என்று பரமேஸ்வர தந்திரம் என்ற நூல் குறிப்பிடுவதாக அறிஞர் தகரே குறிப்பிடுகிறார்.

3. கருநாடகத்தில் மறந்தும் புறச் சமயம் தொழாத சைவரை வீர சைவர் என்கின்றனர். சிவபெருமானிடத்தில் அழுத்தமான பக்தியைக் கன்னடர்கள் பெற்றமையால் அவர்கள் பக்தி வீரம் வாய்ந்தது என்ற அடிப்படையில் ஆர். பிளேக் மைக்கேல் என்னும் அறிஞர் இக்கருத்தைக் குறிப்பிடுகிறார்.

4. சிவப்பிரகாசரின் இட்டலிங்க மாலையைப் பதிப்பித்த மயிலம் வீர சைவ ஆதீன 18-ஆம் பட்ட சுவாமிகள், வீர ஆகமம் என்னும் ஆகமம் கூறும் நெறி ஆதலின் வீர சைவம் என்று பெயர்பெற்றது என்று குறிப்பிடுகிறார்கள்.

5. கி.பி.12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய வசபர் என்பவரால் மீட்சி அடைந்த சைவம் புரட்சி உடையதாக மாறியது. எனவே, அவர் தோற்றிய புரட்சிச் சைவம் தான் வீர சைவ சமயமாக மாறிற்று என்று லிங்கதாரண சந்திரிகா என்ற நூலில் பேராசிரியர் சாக்ஹோர் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு பலநிலைகளில் வீரசைவம் என்ற சொல்லுக்கு ஆய்வுகள் நிகழ்ந்தன என்றாலும், இறுதியாகச் சைவ உணர்வு மிக்கோர் தம் சமயத்தைக் காப்பதற்காகக் கொண்ட வீர உணர்ச்சித் தத்துவமே வீரசைவம் ஆயிற்று எனக்கொள்வது பொருத்தமாகிறது.

தோற்றம்

கி.பி.12-ஆம் நூற்றாண்டில் வீர சைவம் நிறுவனமாகப் பரிணமித்தாலும் அச்சமய உணர்வின் காலம் தொன்மை வாய்ந்ததாகும். புராதன நிலையில் ஐந்து அறிஞர்களால் அச்சமய உணர்வுகள் தோன்றின என்பது தொன்றுதொட்டு வழங்கிவரும் கருத்தாகும். வீர சைவத்திற்கு உரிய ஆகமங்கள் மகுடாகமம், சுப்பிரவேதாகமம் என்பவை உள்ளிட்ட சில ஆகமங்கள் உள்ளன. அவ்வாகம உரைகளில் ஐந்து புரவலர்களாம் ஆசிரியர்கள் குறிக்கப்பெறுகின்றனர். அவர்கள் ஐவரும் வீர சைவத்தின் மூல ஆசிரியர்கள் என்று கருதப்படுகிறார்கள். 1. இரேவண சித்தர், 2. மருள சித்தர், 3. பண்டிதாரியர், 4. ஏகோராமர், 5. விசுவாராத்தியர் என்பவர்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆவார்கள். இவர்களைப்பற்றிய விரிவான செய்திகள், பேராசிரியர் சோ.ந.கந்தசாமி அவர்களின் கட்டுரையில் இடம்பெற்றுள்ளன. இவர்களுக்குப் பின்னர் வீரசைவ குருபரம்பரை தோன்றியிருக்கிறது. அதன்பின் வீரசைவ ஆசிரியர்கள் எழுவரைப் பற்றிய குறிப்பும் கிடைக்கப்பெறுகிறது. இவ்வாறு தக்க அறிஞர்களால் வீர சைவத்தின் கொள்கைகள் பரப்பப்பட்டுக் கி.பி.12-ஆம் நூற்றாண்டில் வசபர் என்று தமிழில் வழங்கப்படுகின்ற பசவரின் காலத்தில் தனி ஒரு இயக்கமாகச் சிறப்புற்று விளங்கிற்று. இவரைப்பற்றிய வரலாறு பதிவு செய்யப்பெற்றுள்ளது. பசவர் நாட்டில் வழங்கிய சடங்குகள் கிரியைகளைக் கண்டு வெறுப்புற்றுத் தன்னுடைய உடலில் தான் தாங்கியிருந்த பூணூலை அறுத்துக் கூடல் சங்கமம் என்ற திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவனிடத்தில் அடைக்கலம் புகுந்து பல வசனப் பாடல்களைப் பாடினார். இதுவே இன்றைக்குக் கன்னடப் பகுதிகளில் போற்றப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது. பசவரால் தொடங்கிவைக்கப்பெற்ற இந்நிறுவனம் சிவானுபவ மண்டபத்தில் சமய சமூகநிலைக் கழகமாக விளங்கியது. இச்சமயம் ஆண்களை ஒத்த சம உரிமையைப் பெண்களுக்குக் கொடுக்கவேண்டும் என்ற சமுதாய அமைப்பிலும் விளங்கியது. இவரைப்பற்றிய வரலாற்றைப் பிரபுலிங்க லீலையில் சிவப்பிரகாசர் பாடியிருக்கிறார்.

கொள்கைகள்

வீரசைவக் கொள்கைகளை விரிவான நிலையில் பேராசிரியர் வை.இரத்தினசபாபதி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். வீரசைவக் கொள்கைகள் விரிவானவை என்றாலும் இந்திய மெய்ப்பொருள் இயல் வரலாற்றில் சைவத்தின் தொன்மை என்ற அடிப்படையில் சைவத்தின் ஒரு கோணமாக விளங்கிய வீரசைவத்தின் சில குறிப்பிட்ட கொள்கைகளைக் காண்பது இன்றியமையாதது ஆகின்றது.

1. சிவனும் உயிரும் பிரிக்க முடியாதது. இறைவன் உலகத்தில் உள்ள எல்லாத் தொடர்புகளையும் ஆக்க வல்லவன். அவனை மற்ற எதனாலும் அறியமுடியாது. அவனால் தான் அவனை அறியமுடியும். அவன் பரம்பொருளாவான். என்றும் உள்ள அறிவன் ஆவான். அவன் அனைத்தையும் முழுமையாக அறிய வல்லவன். இவனை இச்சமயம் அறிவுப் பொருளாகிய தலம் என்று குறிக்கிறது.

2. இத்தகைய இறைவனை லிங்கவடிவில் உடம்போடு பேணி வேறுபாடின்றி வாழ்தல் லட்சியமாகும். பிறந்தது முதல் இறக்கும்வரை வீர சைவர்கள் தம் உடலோடு அவ்விலிங்கம் உடன் உறையும்.

3. வீர சைவம் 36 தத்துவங்களையும் ஏற்றுக்கொள்கிறது. அத்துடன் ஐவகை ஒழுக்கம் (பஞ்சாசாரியம்), எண்வகைக் காப்பு (அஷ்டாவரணம்), அறுவகை நிலை (சடுத்தலம்) என்ற மரபுகளைக் கொண்டதுமாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. ஐவகை ஒழுக்கங்கள் வீர சைவத்தின் முக்கியக் கொள்கைகளாகும். இக்கொள்கைகள் அவர்தம் வாழ்வியலைச் சீர்மைப்படுத்துகின்றன. அவ் ஐவகை ஒழுக்கங்கள் லிங்க ஒழுக்கம், தன்நிலை ஒழுக்கம், சிவ ஒழுக்கம், பணிவு ஒழுக்கம், கூட்டமைப்பு ஒழுக்கம் என்று குறிப்பிடப் பெறுகின்றன.

5. லிங்க ஒழுக்கமாவது சாதிமுறைகளைக் காணாது தீட்டு என்பதையும் கொள்ளாது அனைத்து மக்களும் லிங்கத்தை அணிந்துகொண்டு வாழ்வதாகும். எல்லா உயிர்களையும் லிங்கமாகிய இறைக் கூறாகவே காண்பது இவ் ஒழுக்கமாகும்.

6. தன்நிலை ஒழுக்கமாவது உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பது. செல்வர்கள் ஆனாலும் உழைத்துத் தான் வாழவேண்டும். இதனால் ஏற்றத்தாழ்வு இல்லாத தன்மை கிடைக்கும். உடலின் உழைப்பால் உடலுக்கு இன்பதுன்பம் ஏற்பட வேண்டும். இத்தகைய உழைப்பின் மேன்மையைக் குறிப்பிடுவதுதான் தன்நிலை ஒழுக்கமாகும்.

7. சிவ ஒழுக்கமாவது சிவநெறியில் தலைமைகொண்ட சிவபெருமான் உயிர்கள் அனைத்திற்கும் வரும் துன்பத்தைத்துடைப்பவன் ஆதலால் சிவபெருமானின் வடிவத்தை உடம்போடு கொண்டிருக்கும் வீரசைவர்கள், பிற உயிர்களின் துன்பங்களைத் துடைக்க வேண்டும். உயிர்களுக்குச் செய்யும் தொண்டே இறைவனுக்குச் செய்யும் தொண்டாகும்.

8. பணிவு ஒழுக்கமாவது எல்லா உயிர்களிடத்திலும் பணிவு கொண்டு ஒழுகவேண்டும். அனைத்து உயிர்களுக்கும் குற்றேவல் செய்வதே வாழ்வில் கிடைத்த பெரும்பேறாகும்.

9. கூட்டமைப்பு ஒழுக்கம் என்பது நல்லோரைப் பாதுகாக்கவும், தீயவரின் தீமையை அகற்றவும், கூட்டமாகச் சென்று உழைத்தல் வேண்டும். தனிமனித நன்மைக்கு மேலாகச் சமுதாய நலத்திற்கு உதவுதல் வேண்டும். இத்தகைய ஐந்து ஒழுக்கங்கள் வீர சைவ வாழ்வின் ஒழுக்கங்களாகக் கூறப்பெற்றுள்ளன.

எண்வகைக் காப்பு

எண்வகைக் காப்பு அட்டாவரணம் என்று குறிப்பிடப்பெறும். வீரசைவ ஒழுக்கத்தில் ஐவகை ஒழுக்கம் முதற்படியாகும். எண்வகைக் காப்பு இரண்டாம் படியாகும். ஐவகை ஒழுக்கத்தில் நின்று வெற்றி கொண்ட சீவன், ஆத்மன் ஆகின்றான். அதன்பிறகு இவ் எண்வகைக் காப்பில் வெற்றிபெற்றால் ஆத்மன் அங்ஙன் என்ற நிலைக்கு உயர்கின்றான். இந்த உயர்வைத் தருவது அட்டாவரணம் ஆகும். இந்த எண்வகைக் காப்பு ஒவ்வொரு உயிரும் தற்காப்புக்காக அமைத்துக் கொள்வதாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எண்வகைக் காப்புக்களாவன

1. குரு, லிங்க, சங்கமம், பாதோதகம், பிரசாதம், திருநீறு, அக்கமணி, திருமந்திரம் என்னும் இந்த எட்டு பொருள்களும் உடம்பிற்குக் காப்பாக அமைகின்றன. இக்காப்பில் குருவிற்கே முதலிடம் ஆகும். உயிர்களுக்குச் செம்பொருள் காட்சியை வழங்கும் தந்தை குரு ஆவார். இக்குருவை உயிரோடு கலந்திருக்கின்ற இறைவனாகக் கொள்வதுண்டு. உயிரின் பரிபக்குவ நிலையை உள்ளிருந்து உணர்கின்ற இறைவனை அன்றி வேறு எவராலும் உயிருக்கு உண்மை நிலையைச் சொல்ல இயலாது. இந்தக் குருவால் மூன்றுவகைத் தீட்சைகள் கிடைக்கின்றன. வேதா தீட்சை, மந்திர தீட்சை, கிரியா தீட்சை என்பன அவை. இதில் ஞானாசிரியர் வீர சைவ பக்தனை நயன தீட்சையாலும், பரிச தீட்சையாலும் ஆட்கொள்வார். மந்திர தீட்சை செவிகளில் மந்திமொழிகளைக் கூறுதலாகும். கிரியா தீட்சை சடங்குகளைக் குறிப்பிடுவதாகும்.

2. லிங்கம் என்பது இஷ்ட தெய்வத்தைக் குறிக்கும். குழந்தை கருவாய் இருக்கும்பொழுது தன் உடம்பில் அணிந்திருக்கின்ற லிங்கத்தோடு குழந்தைக்கென்று ஒரு லிங்கம் அணிந்துகொள்ள வேண்டும். இதற்கு கர்ப்பலிங்க தாரணம் என்று பெயர். அதன்பின் குழந்தை பிறந்து ஞானாசிரியர் சடங்கு முறைப்படி ஏழு அல்லது ஒன்பது வயதில் குழந்தைக்கு லிங்க தாரணம் செய்வது இஷ்டலிங்க தாரணம் எனப்படும். பின்னர் இஷ்டலிங்கத்தை முறைப்படி கிரியைகளால் வழிபடுவது இன்றியமையாததாகும்.

3. சங்கமம் என்பது வீர சைவ சீவன் முத்தர்களைக் குறிக்கும். இவர்கள் கடவுள் தொடர்பும் மக்கள் தொடர்பும் ஒருங்கே பெற்றவர்கள். இவர்கள் அவதார புருஷர்கள் ஆவார்கள். இவர்கள் இறைவன் அருளால் சமுதாயத்திற்குத் தொண்டு செய்ய அவதரித்தவர்கள். இவர்களை வணங்கிப் போற்றுதல் வீர சைவர்களின் கடமையாகும்.

4. பாதோதகம் என்பது முன்பு குறிப்பிட்ட வீர சைவ சீவன் முத்தர்களின் திருவடிகளையும், குருவின் திருவடிகளையும் தான் அணிந்த இறைவனின் திருவடியையும் திருமஞ்சனமாட்டி எடுத்துக்கொள்ளுகின்ற நீர் பாதோதகமாகும். இந்த நீரை நாள்தோறும் சமையலுக்கு வேண்டிய தண்ணீரோடு சேர்த்துக்கொள்ள வேண்டும். பாதோதகநீர் கலவாத எந்த நீரையும் வீர சைவர் உட்கொள்ளக் கூடாது.

5. பிரசாதம் என்பது குருவாலும், சங்கமர்களாலும் கொடுக்கப்பெற்ற திருவருள் பிரசாதம் ஆகும். அவர்கள் உண்டு எஞ்சிய உணவு, பிரசாதத்தில் இன்றியமையாததாகும். இது தெய்வத் தன்மை உடையதாகும். இதனைப்பெற்று வாழ வீர சைவர் முயலவேண்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

6. திருநீறு என்பது இயற்கை நீரால் புற உடலைத் தூய்மைப்படுத்துவது போல திருநீற்றால் உடல், மனம், உயிர் ஆகியவற்றைத் தூய்மைபடுத்த முடியும். நாள்தோறும் திருநீற்றை அணிந்துகொள்ள வேண்டும். இதுவே நிலைபெற்ற சாதனமாகும். இத்திருநீறு இறைவனின் அருளைத் தந்து, பாவ துன்பத் தீமைகளை நீக்கும்.

7. உருத்திராக்கம் என்பது உயிருக்குரிய கவசத்தில் ஒன்றாகும். அக்கமணி என்றும் கண்டிகை என்றும் கூறப்படும். திரிபுரத்தை இறைவன் எரித்தபொழுது மூன்று அரக்கர்களுக்கு அருள்புரிகின்ற இரக்கம் காரணமாக இறைவனின் கண்களிலிருந்து கண்ணீர் சிந்தியது. அக்கண்ணீர் வடிவமே உருத்திராக்கம் ஆகும். பூத உடல் பொன்னுடலாக மாறுவதற்கு உதவுவது உருத்திராக்கம் ஆகும்.

8. மந்திரமாவது நினைப்பவரைக் காப்பதாகும். ஐந்தெழுத்தே மந்திரம் ஆகும். இதனை உயிரின் கவசமாக எண்ணி நாள்தோறும் கூறவேண்டும். இவ்வாறு எண்வகைக் காப்புக்கள் வலியுறுத்தப் பெறுகின்றன.

சடுத்தலம் என்பது அறுவகை இணைப்பினைக் கூறுவதாகும். அதாவது ஆறு இடம் என்ற பொருளைத் தந்து ஆறு இடங்களில் அறுவகைப் பயிற்சிகளை மேற்கொள்ளுகின்ற நடைமுறையைக் குறிப்பதாகும். பக்தித்தலம், மகேசுவரத்தலம், பிரசாதித் தலம், பிராணலிங்கத் தலம், சரணத்தலம், ஐக்கியத் தலம் என்பன அவை. உயிர்கள் இறைவனையடையும் நிலையைச் சொல்வதே இந்த ஆறு படிநிலைகள் ஆகும்.

பக்தித்தலம் உடம்போடு கூடிய லிங்கத்தை வழிபடுவது. மகேசுவரத் தலம் இறைவனை அன்றி வேறு பற்றுக்கோடு இல்லை என்று உறுதிநிலை அடைவது. இடைவிடாது பக்தியாலும் வழிபாட்டாலும் தன்னைத் தூய்மையாக்கிக் கொண்டு, இட்டலிங்கத்தோடு ஒன்றுவது பிரசாதித் தலமாகும். தான் வேறு அல்ல இறைவன் வேறு அல்ல என நினைப்பது பிராணலிங்கத் தலமாகும். தன்னுடைய இடையறாத பக்தியால் படிப்படியே இறைவனுடன் கலந்து ஆனந்த பக்தியை எய்துவது சரணத் தலமாகும். அங்க லிங்க வேறுபாடு அற்று லிங்கத்திற்குரிய உயர்வு எல்லாம் உள்வாங்கப்பெற்று இறைவனோடு ஐக்கியம் ஆவது ஐக்கியத் தலமாகும். இத்தகைய ஆறு படிநிலைகளில் இறைவனோடு ஐக்கியம் ஆகின்ற உயர்நிலையைத் தருவது வீர சைவம் ஆகும்.

இந்த மூன்று நிலைகளைத் தவிர, சைவ சமயத்தின் முப்பொருள் கொள்கைகளைப் பற்றிய கருத்துக்களையும் வீர சைவம் ஏற்று, இந்திய மெய்ப்பொருளியலில் வளர்ந்து வந்துள்ளது. தமிழ்நாட்டில் மிகக் குறுகிய நிலையில் இச்சமயம் விளங்கினாலும் கருநாடகம் உள்ளிட்டப் பிற மாநிலங்களில் முதன்மைச் சமயமாக விளங்கி வருகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அறுவகை அகச் சமயங்கள்

சைவ சித்தாந்திகள் மெய்ப்பொருள் இயல் சமயங்களை நான்கு பகுப்புக்களாகக் கொள்வர்.

"அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய வேறாம்
குறியது உடைத்தாய் வேதாகமங்களின் குறியிரந்து அங்கு" (சிவஞான.சி.2)

என்று சிவஞான சித்தியார் அவையடக்கத்தில் அருணந்தியார் குறிப்பிடுவதை உணரலாம். அறுவகைச் சமயம் என்பது பொதுவான நிலையாகும். இதனைப் புறப்புறச் சமயம், புறச் சமயம், அகப்புறச் சமயம், அகச் சமயம் என்ற நான்கு பெரும் பிரிவுகளாகக் கொண்டு ஒவ்வொன்றிலும் ஆறு சமயங்களைக் கொள்வது சைவ சித்தாந்திகளின் மரபாகும். புறப்புறச் சமயங்களில் அமைந்த ஆறு சமயங்கள் உலகாயதம், மாத்தியமிகம், யோகசாரம், சௌத்திராந்திகம், வைபாடிகம், ஆறுகதம் என்பனவாகும். புறச்சமயங்கள் தருக்கம், மீமாம்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் ஆகும். அகப்புறச் சமயங்கள் பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமவதம், வைரவமதம், ஐக்கியவாதம் என்பன. அகச்சமயம் பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம், ஈசுவர அவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம் என்பனவாகும். இந்த நால்வகைச் சமயத்தில் முதல் இரண்டு சமயங்கள் மெய்ப்பொருள் இயல் நிலையில் விரிவாக முன்பகுதியில் தரவுகளால் கொள்ளப்பெற்றன. பின் இரண்டு பகுதிகளான அகப்புறச் சமயமும், அகச் சமயமும் பெயரளவில் அறிந்துகொள்ளப் பெறுகின்றனவே தவிர, விரிவான நிலையில் இந்திய மெய்ப் பொருளியலில் இடம்பெறவில்லை. எனவே, இப்பன்னிரெண்டு சமயங்களைப் பற்றிய சிறு குறிப்பு மட்டும் கிடைக்கப்பெற்ற சான்றுகளின் அடிப்படையில் தரப்பெறுகின்றது.

அகப்புறச் சமயங்கள்: வேத சிவாகமங்களில் நிகழாமல் பொதுவாக ஒப்புக் கொண்டாலும் அவ்விரண்டைத் தவிர, வேறு நூல்களையும் தங்களுடைய சமய நூல்களாகக் கொண்டவை அகப்புறச் சமயங்களாகும்.

பாசுபத மதத்தின் கொள்கைகள்: ஆன்மாக்கள் பல, அவை என்றும் உள்ளவை. வியாபகம் ஆனவை. ஆணவ மலம் என்ற ஒன்று இல்லை. மாயை, கன்மம் என்ற இரண்டே உள. இரண்டு மலங்களாலும் கட்டுண்டு உயிர் இன்ப துன்பங்களை அனுபவிக்கும். இன்ப துன்பங்களில் வெறுப்புற்று ஆசிரியரை அடைந்து, அவரிடம் தீக்கை பெற்று, அதன்வழி உயிர் நிற்க வேண்டும். அப்பொழுது உயிர்களிடத்தில் ஞானம் பதியும். இறைவன் அவ்வாறு பதியும்படி செய்து, உயிர்களைவிட்டுத் தன் அதிகாரத்தில் இருந்து நீங்கியிருப்பான்.

மாவிரதம் என்பது ஆன்மாவைப் பற்றிய கொள்கைகளில் பாசுபத மதக் கொள்கைகளை முற்றிலும் ஏற்றுக்கொண்டதாகும். தீக்கை பெற்றவன் எலும்பு மாலை அணிதல் முதலிய கடுமையான ஒழுக்கங்களில் நிற்றல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேண்டும். அவ்வாறு நின்றால் அவர்கள் சீவன்முத்தர் எனப்படுவர். முத்தர்களுக்குச் சிவனோடு சமமான எல்லாக் குணங்களும் தோன்றும். இதுவே முத்தி நிலையாகும்.

காபாலம் என்பது உயிர்களைப் பற்றிய கொள்கை. தளைகளின் இயல்பு ஆகியவற்றை மாவிரதிகள் கொண்டது போலவே கொள்வர். இதில் தீக்கை பெற்றவர்கள் எப்போதும் பச்சைக்கொடி ஒன்றைக் கையிலே வைத்திருக்க வேண்டும். நாள்தோறும் மனிதத் தலையோட்டில் பிச்சை ஏற்று உண்பது இவர்கள் கைகொள்ள வேண்டிய ஒழுகலாறாகும். இவர்களே சீவன்முத்தர் ஆவர். இவர்கள் சிவனால் ஆவேசிக்கப் பெற்று, அவனது எல்லாக் குணங்களையும் பெற்றுச் சிவசமமாக விளங்குவர். இம்மூன்று பிரிவுகளும் உயிர் சிவனோடு சமமாதலே முத்தி என்று கூறுவர். எனவே, இவர்களைச் சிவசமவாதி என்றும் குறிப்பிடுவதுண்டு.

இனி, வாமம் என்பது சத்தி வழிபாடாகும். சாக்தம் என்று கூறப்படும் பாற்கரிய வாதத்தில் பிரமப் பொருளே அறிவுடைப் பொருளும், அறிவற்ற பொருளும் ஆகிய எல்லா உலகமாகப் பரிணமிக்கும் என்ற கொள்கையை உடையவர் இம்மதத்தார். இவர்கள், உலகங்கள் யாவும் சத்தியிலிருந்து பரிணமித்தது என்று கொள்வர். வாம ஆகமங்களில் கூறப்பட்ட நெறியில் ஒழுகிச் சத்தியோடு ஐக்கியம் ஆவதே முத்தி என்பர்.

வைரவம் பெரும்பாலும் வாமமதத்தை ஒத்தது. அவர்கள் சத்தியே தெய்வம் என்று கொள்ள, இவர்கள் வைரவரே பரம்பொருள் என்று கொள்பவர். வைரவரோடு இணைவதே முத்தி என்று கூறுபவர்கள் ஆவார்கள்.

ஐக்கியவாத சைவத்தில் ஆணவ மலம் என்ற ஒன்று இல்லை. மாயை, கன்மம் என்ற இரண்டு மலங்களே உண்டு. முன்செய் வினைகளுக்கு ஈடாக இறைவன் உயிர்களுக்கு உடல், கருவி முதலியவற்றை வழங்குகின்றான். அவற்றைக் கொண்டு உயிர்கள் வினைப் பயனை அனுபவிக்கின்றன. இருவினை ஒப்பு நிகழ்ந்து வினையனைத்தும் அழிகின்றது. இந்தநிலையில் உயிர்கள் தமக்குரிய பேரொளியைப் பெற்று முத்தி அடைகின்றன என்ற கொள்கையை உடையது. இவ்வாறு ஆறு அகப்புறச் சமயங்களின் கருத்துக்கள் சிவஞான முனிவரின் மாபாடிய உரையில் கூறப்பெற்றுள்ளன.

அகச் சமயங்கள்: வேத சிவாகமங்களைச் சிறந்த பிரமாண நூல்களாகக் கொண்டபோதிலும், அவற்றின் உண்மைப்பொருளை உரியநிலையில் கொள்ளாது, வேறுவேறாகத் திரிபாக ஏற்றுக்கொண்டவை அகச்சமயங்கள் ஆகும்.

பாடாணவாத சைவம் என்பது உயிர்களின் துன்பங்களுக்கு எல்லாம் காரணம் ஆணவ மலமே, சைவ ஆகமங்கள் குறித்த சரியை முதலாகிய நான்கு வழிகளில் ஒழுகிச் சிவனது அருளால் ஆணவ மலத்தை நீக்கலாம். ஆணவமலம் நீங்கப்பெற்ற உயிர் இன்பதுன்பம் என்பவற்றில் எந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அனுபவமும் இல்லாது பாடாணம்போல் (கல்போல்) கிடப்பது முத்தியாகும் என்ற கொள்கைகளை உடையது.

பேதவாத சைவம் என்பது இரசகுளிகையால் களிம்பு நீங்கப்பெற்ற செம்பு பொன்னாய் நிற்பது போல, திருவருளால் ஆணவ மலம் நீங்கப்பெற்ற உயிர், சிவமாதலே முத்தி ஆகும். இவர்கள் உயிர்கள் சிவனோடு ஐக்கியம் ஆவதில்லை என்ற கொள்கையை உடையவர்கள்.

சிவசமவாத சைவம் என்பது வேட்டுவனால் (குளவி) எடுக்கப்பட்ட புழு வேட்டுவனாதல் போல, இறைவனின் திருவருளால் பாசங்கள் நீங்கப்பெற்று உயிர் சிவனாவே ஆகி, ஐந்தொழில் புரிந்து வாழ்வது முத்தியாகும் என்ற சிறப்புக் கொள்கையை உடையதாகும்.

சிவசங்கிராந்த வாத சைவம் என்பது அழுக்கு நீங்கிய கண்ணாடியில் எதிரில் உள்ள பொருள் பிரதிபலித்தல் போல, மலம் நீங்கிய உயிரின் கருவி, கரணங்களில் சிவம் பிரதிபலிக்கும். அதனால் பசுகரணங்கள் சிவகரணங்களாகும். இது நெருப்பினால் பற்றப்பெற்ற விறகு நெருப்பாலே அழிதல் போலவும், உப்பளத்தில் வீழ்ந்த புல், வைக்கோல் முதலிய யாவும் உப்பாதல் போன்றது போலாகும். இதனால் பசுஞானமும், சிவஞானமே ஆகச் சீவன், சிவமாகி நிற்றலே முத்தி என்ற கொள்கை உடையதாகும்.

ஈசுவர அவிகார சைவமாவது, சிவனது அருளாகிய ஒளியால் ஆணவமாகிய இருள் நீங்கப்பெற்ற உயிர், வெயிலில் நின்றவன் அவ்வருத்தம் நீங்க மரநிழலைத் தேடிச் சென்று அணைந்து இன்புறுதல் போல, இறைவனது திருவடி நிழலை நாடி அடைந்து இன்புறுதலே முத்தி என்ற கொள்கையை உடையதாகும்.

சிவாத்துவித சைவ மதத்தினர் முப்பொருள் கொள்கையை ஏற்றுக் கொள்ளாமல், மூன்றும் தனித்தனி என்ற கொள்கையைக் கொள்ளாது ஒருபொருட் கொள்கையைக் கொண்டவர்கள் ஆவார்கள். இவர்கள், ஆணவ மலத்தையும் 36 தத்துவக் கொள்கையையும் ஏற்றுக்கொள்பவர்கள். இவ்வாறு அகச் சமயங்கள் ஆறினைப் பற்றிய செய்திகளை முத்தி நிலையில் மட்டும் ஒவ்வொன்றும் வேறுபட்டு நிற்கின்ற செய்திகளை உமாபதிசிவம் தனது சங்கற்ப நிராகரணத்தில் குறிப்பிட்டிருக்கிறார். சைவ சித்தாந்த உரைகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இவ் அகச் சமயங்களின் கருத்துக்கள் இந்த அடிப்படையில் இடம்பெற்றுள்ளன.

மெய்ப்பொருள் ஆய்வாளர்களின் இத்தகைய கருத்துக்களால் ஆரியர்களின் வருகைக்கு முன்னரேயே இந்திய மெய்ப்பொருளியல் வரலாற்றில் சிவ வழிபாடு தொன்மையாக அமைந்தது என்பதை அறியலாம். இச்சிவ வழிபாடு இந்தியாவில் மட்டுமல்லாது பல நாடுகளில் பரவியிருந்தது என்பதும் வேதத்தில் கூறப்பட்ட உருத்திரன் பின்னால் திராவிடர்களுக்குரிய சிவன் என்னும் தெய்வத்தோடு இணைக்கப்பெற்றுப் போற்றப்பெற்றான் என்பதும் சில உபநிடதங்களில் சிவனுக்கென்று தனி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வழிபாட்டு முறை கூறப்பட்டது என்பதும் ஆகமங்களில் சிவனுடைய முக்கியத்துவம் போற்றப்பெற்றது என்பதும் திருமால் வழிபாட்டிற்குரிய மாபாரத, இராமாயணக் காப்பியங்களில் சிவனுக்குப் பெருமை தரப்பெற்றது என்பதும் கிடைக்கின்ற காரணத்தால் கி.மு.ஆறாயிரத்திற்கு முற்பட்ட வழிபாடு சிவவழிபாடு என்பதும் சைவ சமயம் தொன்மையானது என்பதும் உறுதியாகிறது. இந்தத் தொன்மைமிக்க சைவ சமயத்தின் விரிவுகளாகத் தோன்றிய காஷ்மீர சைவம், வீர சைவம், அகப்புறச் சமயங்கள், அகச்சமயங்கள் ஆகியவை பற்றி கிடைத்திருக்கும் செய்திகளும் அறியப்பெறுகின்ற பொழுது, சைவ சமயத்தின் தொன்மை மேலும் சிறப்படைகின்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3. பண்டைத் தமிழரின் தெய்வ நம்பிக்கை

மனித வரலாற்றை அனுமான நிலையில் ஆராய்கின்ற பொழுது, சமயம் என்பது மனிதர்களின் கலை வளர்ச்சியில் ஒன்றாகவே கருதப்பெற்றது என்பது புலப்படுகின்றது. ஆதி மனிதர்கள் பேசுவதற்கும் எழுதுவதற்கும் தம்மை வலிமைப்படுத்திக்கொண்ட பொழுது தம் வலிமைக்கு மேலான ஒரு செயல் இயற்கைச் சூழலில் அமைந்திருப்பது கண்டு, இயற்கைப் பொருள்களை மேன்மை உடையதாகக் கருதினர். ஆதிகால மக்கள் தங்களைவிட வலிமையான, வியப்பளித்த காற்று, மழை, இடி, மின்னல் ஆகிய இயற்கைப் பொருள்களைப் போற்றத் தொடங்கினர். தமக்கு மேலான வல்லமையைக் கண்டு வியப்புற்ற மக்கள், தங்கள் சிந்தனையினாலும், அனுபவத்தினாலும் இயற்கைப் பொருள்களைப் பற்றி சிந்திக்கத் தொடங்கினார்கள். ஆதிகால மக்களின் இந்தச் சிந்தனை ஞாயிற்றின் வல்லமையில் அதிசயித்து, ஞாயிறாம் சூரியனை முதல் தெய்வமாகக் கொண்டனர். உலக முழுமையும் இந்தச் சிந்தனை ஒருங்கே நிகழ்ந்தது. வாழும் இடத்தாலும், பேசும் மொழியாலும், ஏற்றுக்கொண்ட பண்பாலும் உலக மக்களிடையே வேறுபாடு காணப்பெற்றாலும், ஞாயிற்றைப் போற்றும் பண்பில் உலக மக்கள் ஒரு படித்தாகவே விளங்கினர். ஞாயிற்றுக்குப் பல பெயர்கள் பல மொழிகளில் வழங்கப்பெற்றன. இல், எல், எலோசு, அல், அல்லா, எலோகிம், ஓசிரிஸ், அசுர், சிவன் என்பன போன்ற பெயர்கள் ஞாயிற்றைக் குறிக்க வழங்கியதாக அறியமுடிகின்றன. இப்பெயர்கள் எல்லாம் ஒளியை உடைய நிலையில் ஞாயிறாம் சூரியனுக்கு ஏற்பட்ட பெயர்களாகும். ஒரு காலத்தில் உலகம் முழுமையிலும் ஞாயிற்றின் வழிபாடு முதன்மைபெற்றிருந்தது. இந்த முறையில்தான் தனக்கு மேலான வல்லமையைப் போற்றிய பண்பினால் சமயம் என்ற தொகுப்பு தோன்றிற்று. தற்காலத்திலும் பண்டைய உலகமக்கள் கொண்ட அச்சமே சமயத் தோற்றத்திற்குக் காரணம் என்ற கருத்து நிலவிவருகிறது. சூரிய வழிபாடு, நாக வழிபாடு, விலங்கு உருவங்களைக் கடவுளர்களின் வாகனமாகக் கொள்ளும் நிலை என்பன போன்றவை மானிடர்களின் அச்சப் பண்பால் தோன்றிய வழிபாடுகளாகும் என்ற கருத்து இன்றும் ஏற்றுக்கொள்ளப் பெற்றிருக்கிறது. எனவே, சமயத்தின் தோற்றம் அச்சந்தருகின்ற இயற்கையோடு இணைந்திருந்தது என்பதைத் தமிழர்களும் ஏற்றுக் கொண்டமை பண்டைத் தமிழ் நூல்களால் அறியமுடிகின்றது. தமிழ் மொழியின் தொன்மை நூலான தொல்காப்பியம், சமயம் சார்ந்த இலக்கணச் செய்திகளைத்தந்து பழமையைச் சுட்டிக் காட்டுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தொல்காப்பியத்தில் தெய்வ நம்பிக்கை: தமிழ் மொழியின் இலக்கணத்தில் தொல்காப்பியம் முதன்மை வாய்ந்தது. தொல்காப்பியத்தின் காலத்தை கி.மு.5000வரை ஆய்வாளர்கள் கொண்டு செல்வர். எனவே, இன்றைக்கு வேதவழியில் கூறப்பெறுகின்ற தெய்வ நம்பிக்கை பற்றியும், வழிபாட்டு முறைமை பற்றியும் ஆரியர்களின் வருகைக்கு முன்னரேயே திராவிடராம் தமிழ் மக்களிடையே இருந்து வந்ததற்குத் தொல்காப்பியத் தரவுகள் துணைசெய்கின்றன. ஆரியர்கள் வந்தபிறகே தமிழகத்தில் வேதச் சடங்கு முறைகள் இருந்தன என்ற கருத்திற்கு மாறாகத் தொல்காப்பியத் தரவுகளை எண்ணுகின்ற பொழுது, ஆரியருக்கு முன்னமேயே தமிழ் மக்கள் வாழ்ந்த இடங்களில் தெய்வநம்பிக்கை இருந்தமை நன்கு புலனாகின்றது.

தொல்காப்பியத்தில் தனிப்பட்ட ஒரு தெய்வத்தின் வழிபாடு வலியுறுத்தப் பெறவில்லை என்றாலும் நிலம்சார்ந்த தெய்வங்களும் அதன் வழிபாடுகளும் இடம்பெற்றுள்ளன. அதேநேரத்தில் பொதுவாக வழங்கும் தெய்வம் என்ற சொல்லும், கடவுள் என்ற சொல்லும், கொற்றவை என்ற சொல்லும், திரு என்ற சொல்லும், கந்தழி என்ற சொல்லும் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளன. நடுகல்வழிபாடுகள் தெய்வ வழிபாடாகவே நடத்தப் பெற்றிருக்கின்றன. இத்தரவுகளால் கடவுள்கொள்கை தொல்காப்பியக்காலத் தமிழ் மக்களால் இலக்கிய இலக்கணங்களில் இடம்பெறும் அளவுக்குத் தெய்வ நம்பிக்கையாக இருந்தமை புலனாகின்றது.

தெய்வத்தின் தோற்றமோ, தெய்வத்தின் குணநலன்களோ, தெய்வத்தின் தொழில்களோ, தெய்வப் புராணக் கருத்துக்களோ தொல்காப்பியத்தில் இடம்பெறவில்லை என்றாலும் பொதுவான நோக்கில் தெய்வம் பற்றிய கருத்துக்கள் இடம்பெற்றிருக்கின்றன.

“வினையின் நீங்கி விளங்கிய அறிவன்
முனைவன் கண்டது முதல் நூலாகும்.” *(தொல்.மரபு.640)*

எனும் சூத்திரம் உரையாசிரியர் பலருக்குப் பலவிதமான எண்ணங்களைத் தந்தாலும், ஆன்மீக நோக்கில் இச்சூத்திரத்திற்குப் பொருள் காணும்பொழுது இருவினை நீக்கம் பெற்ற ஒருவர் என்றால் அது உயிர்களுக்கு அப்பாற்பட்ட ஒருவரையே குறிக்கும். ஏனென்றால் வினை என்ற சொல், இலக்கிய வழக்கின்படியும், உலக வழக்கின்படியும் நல்வினை, தீவினை என்ற இரண்டு வினைகளைத் தான் குறிக்கும். எனவே, அந்த இரண்டு வினைகளும் இல்லாதவர் உயிருக்கு அப்பாற்பட்ட ஒருவராகத்தான் இருக்கவேண்டும். ஏனென்றால் உயிர் என்பது இருவினைகளை உடையது என்று மெய்ப்பொருள் இயலில் இடம்பெற்ற எல்லா மதங்களும் ஏற்றுக்கொண்டதாகும். இந்த இருவினை சேராதவரை இறைவன் என்று குறிப்பிடுகின்ற வழக்கம் பண்டுதொட்டுக் காணப்பெறுகிறது. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் என்பது திருவள்ளுவரின் வாக்காகும் (குறள்.5). எனவே, சூத்திரத்தில் இடம்பெற்ற வினை நீங்கிய விளங்கிய அறிவுடையவன் இறைவன் என்ற கருத்து ஆன்மீக நோக்கில் உறுதியானதாகும். இன்னும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்தச் சூத்திரத்தில் விளங்கிய அறிவன் என்பதால் ஆன்மீகப் பகுதியில் இடம்பெற்றுள்ள இறைவனின் எட்டுவகைக் குணங்களில் ஒன்றான முற்றும் உணர்தல் என்ற குணத்தையே விளங்கிய அறிவன் என்று குறிப்பிடுகிறது எனக் கொள்ளப்பெறுகிறது. முனைவன் என்பது முதன்மையானவன் என்ற பொருளைத் தந்து கடவுளைக் குறிக்கிறது. மெய்கண்டார் கூறிய சிவஞான போதத்தில் ஐந்தாவது சூத்திரத்தில் "தாம் தம் தமியருள்" எனும் தொடர் காணப்படுகிறது. தமி - என்பதற்கு முதல்வன் என்ற பொருள் கொள்ளப்பெற்று, இறைவனைக் குறிப்பதாக அதிலும் சிவனைக் குறிப்பதாகக் கொள்ளப்பெற்றிருக்கிறது. ஆதலால் தொல்காப்பியத்தில் இருவினைகள் சேராத, முற்றும் உணர்ந்த முதல்வனாகிய இறைவனால் கூறப்பெற்ற நூல் முதன்மைநூலாகும் என்ற பொருள்கொண்டு தொல்காப்பியர் காலத்தில் இறைவனின் தன்மையும் (இலக்கணம்), இறைவனின் சிறப்பும், இறைவனின் நூல் படைத்தலாகிய செயலும் கூறப்பெற்றுப் பண்டைத்தமிழரின் நம்பிக்கை வலியுறுத்தப்பெறுகிறது எனலாம். ஆன்மீக உணர்வில் உரை காணுகின்றவர்கள் இறைவனுக்கு உரிய சூத்திரமாக இதனைக் காண்பது தவறாகச் சொல்ல இயலாது.

தெய்வம் என்ற சொல் தொல்காப்பியம் சொல்லதிகாரத்திலும், பொருளதிகாரத்திலும் பல இடங்களில் பயின்றுவருகின்றது. சொல்லதிகாரத்தில் சொற்களை வரையறுக்கும் தொல்காப்பியர், "தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்" என்று சுட்டுவார் (தொல்.கிளவி.4). தெய்வப்பெயர் சூத்திரத்தின் பொருளின்படி உயர்திணைப் பெயராகக் கருதப்பெற்றிருக்கிறது. இதற்குத் தொல்காப்பிய உரையாசிரியர்கள், வாசுதேவன், திருவாணன், முப்பத்துமூவர் என்றும் தேவன், தேவி என்றும் உதாரணங்களைக் காட்டியுள்ளனர். அதாவது தெய்வத்தன்மை உடைய ஆன்மீகப் பெயர்களையே இவர்கள் பயன்படுத்தியுள்ளனர். மேலும், தெய்வம் என்பது இன்றைக்கும் இறைத்தன்மையைக் குறிப்பதாகவே கொள்ளப் பெறுகிறது. இந்த சொல்லுக்கு எத்தகைய உரையாசிரியரும் வேறுபொருள் கூறுவதற்கு இயலாது. எனவே, தெய்வங்களைச் சுட்டுகின்ற தனியொரு சிறப்புடைய பெயர்கள் தொல்காப்பியர் காலத்தில் தமிழகத்தில் வழங்கியிருந்தது உண்மையாகும். சொல்லதிகாரத்தில் பிறிதோர் இடத்தில், பால் பிரிந்து இசைக்காத சொற்களை வரையறுக்கும்பொழுது, பால்வரை தெய்வம் என்ற சொல் இடம்பெற்றுள்ளது (தொல்.கிளவி.58). இதற்கு இளம்பூரணர், சேனாவரையர் உரை எழுதும்பொழுது, "உயிர்கள் எல்லாவற்றுக்கும் இன்ப துன்பத்திற்குக் காரணமான இருவினையை வகுப்பது" என்றே குறிப்பிடுகின்றனர். எனவே, தனக்கு வினை இல்லாது, உயிர்களுக்கு வினையை ஊட்டுகின்ற தெய்வம்தான் இச்சூத்திரத்தில் குறிப்பிடப்பெறுகிறது என்று ஆன்மீக நோக்கில் பொருள்காண்பது தவறாகாது. இருவினையை உயிர்களுக்கு இறைவன்தான் தருகிறான் என்பதைச் சைவ சித்தாந்த சிவஞான போதம் இரண்டாம் சூத்திரம், "இரு வினையின் போக்குவரவு புரிய ஆணையின்" என்று குறிப்பிடுகிறது. அதாவது உயிர்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செய்த இருவினைகளையும் கொண்டு தனது ஆணையால் உயிர்களுக்கு உரிய இன்ப துன்பங்களையும், அவற்றுக்குரிய இறப்பு, பிறப்புக்களையும் தருகின்றான் இறைவன் என்று குறிப்பிடுகின்றது. எனவே, பால்வரை தெய்வம் என்பது உயிர்களைத் தத்தம் வினைகளை அனுபவிக்குமாறு செய்கின்ற வினையிலிருந்து நீங்கிய இறைவனாம் தெய்வத்தைக் குறிக்கிறது எனக் கொள்ளலாம். தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் தெய்வம் என்ற சொல் இடம்பெற்ற சூத்திரங்கள் பின்வருமாறு.

1. தெய்வம் உணாவே மா மரம் புள் பறை
   செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
   அவ்வகை பிறவும் கரு என மொழிப *(தொல். அகத்.18)*

2. தன்னும் அவனும் அவளும் சுட்டி
   மன்னு நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்
   நன்மை தீமை அச்சம் சார்தல் என்று
   ....
   ஆகிய கிளவியும் அவ்வழி உரிய *(தொல். அகத்.37)*

3. உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலன்எனக்
   கொள்ளும் என்ப குறியறிந்தோரே. *(தொல். அகத்.47)*

4. களவு அலராயினும் காமம் மெய்ப்படுப்பினும்
   ....
   தோழியை வினாவலும் தெய்வம் வாழ்த்தலும்
   ....
   அன்னவை பிறவும் செவிலி மேன *(தொல். களவு.24)*

5. பெறற்கரும் பொருள் முடிந்தபின் வந்த
   ....
   கிழவோள் சுட்டிய தெய்வக் கடக்கினும்
   ....
   தோழிக்குரிய என்மனார் புலவர். *(தொல். கற்பு.9)*

6. தெய்வம் அஞ்சல் உரையறந் தெளிதல்
   ....
   சிறந்த பத்தும் செப்பிய பொருளே. (தொல். மெய்.24)

7. வழிபடு தெய்வம் நின்புறம் காக்க
   ....
   கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ *(தொல். செய்யு.106)*

என்று தெய்வம் என்ற சொல் வழக்கில் இருந்தமையை இக்குறிப்பிட்ட சூத்திரங்கள் வெளிப்படுத்துகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கடவுள் என்ற சொல்லும் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது.

"காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்" *(தொல். புறத்.81)*

இச் சூத்திரத்தில் கடவுள் என்ற தகுதியும், ஏனோர் என்ற பிற தகுதியும் குறிக்கப்பெற்றிருக்கிறது. இதில் உலகத்தோரில் கடவுள் வேறு, உலகோராகிய உயிர் வேறு என்பது தெளிவாகின்றது. தெய்வத்தன்மை உடைய, எல்லாவற்றையும் கடந்த ஒருவராகிய இறைவன் உண்டு என்பதைத் தொல்காப்பியம் உயிர்களிடத்திலிருந்து பிரித்துக்காட்டி, தமிழ் மக்களிடையே இறை உணர்வு இருந்தமையை எடுத்துக்காட்டுகிறது என்பது இதிலிருந்து புலப்படுகின்றது. பிறிதோர் இடத்தில் "ஏமுறு கடவுள்" என்ற சொல் இடம்பெற்றிருக்கிறது *(தொல்.கற்பு.144)*. ஏமுறு என்பதற்கு உரையாசிரியர்கள் பாதுகாப்பு என்று பொருள் கூறுகின்றனர். தெய்வத்திற்குரிய ஐந்து தொழில்களில் ஒன்று காத்தல் என்பதாகும். காத்தல் தொழிலைச் செய்கின்ற கடவுள் தொல்காப்பியத்தில் குறிக்கப்பெறுவது, இக்காலத் தெய்வப் பனுவலில், "காக்கக் காக்க கனகவேல் காக்க" (கந்தசஷ்டிக் கவசம்) என்று இடம்பெற்றதற்கு முன்னோடியாக விளங்குகிறது. இவ்வாறு தெய்வம், கடவுள் என்று பொதுநிலையில் குறிப்பிட்ட தொல்காப்பியம், நிலங்களுக்கு உரிய தெய்வங்களை வகைப்படுத்தும்பொழுது, மாயோன் என்றும் சேயோன் என்றும் வேந்தன் என்றும் வருணன் என்றும் வகைப்படுத்தியிருப்பது *(இளம்- பொருள்-அகத்திணை -5)* அக்காலப் பல தெய்வவழிபாட்டை மெய்ப்பிப்பதாகும். மாயோன் என்பது திருமாலைக் குறிப்பது, சேயோன் என்பது முருகனைக் குறித்தாலும் செம்மை நிறத்தவன் என்ற பொருளில் காணுகின்ற பொழுது அது சிவனைக் குறிக்கின்றது என்பதும் வேந்தன் என்பது இந்திரனைக் குறிக்கின்றது என்பதும் வருணன் என்பது காற்று வேந்தனைக் குறிக்கின்றது என்பதும் ஆன்மீகநோக்கு உரையாகும். இதுபோலக் கொற்றவை என்ற பெண் தெய்வம் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது.

"மறம் கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அகத்திணைப் புறனே" *(தொல். புறம்.4)*

இச்சூத்திரத்தில் வீரத்தன்மை பொருந்திய கொற்றவைநிலை குறிக்கப் பெற்றுள்ளது. "கொற்ற வள்ளையும் ஓரிடத்தான்" *(தொல்.புறம்.34)* என்ற சூத்திரத்தில் வீரத் தெய்வத்திற்கு உரிய பாட்டும் குறிக்கப் பெற்றுள்ளது. மற்றொரு தெய்வமாக வெறியாட்டினை ஏற்றுக்கொள்ளுகின்ற இறைவனை முன்வைக்கின்ற வேலனின் தெய்வத்தன்மையும் தொல்காப்பியத்துள் இடம்பெறச் செய்யப்பெற்றுள்ளது.

"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்,
வெறியாட்டு அயர்ந்த காந்தளும்..." *(தொல். புறம்.5)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எனும் செய்திகளை நோக்கும்பொழுது முழுமுதற் தெய்வமும், அத்தெய்வத்தின் ஆணையாம் அருட்தொழில்களைச் செய்கின்ற தெய்வ வகைகளும் தொல்காப்பியத்தில் இடம்பெற்று, அக்காலத் தெய்வ நம்பிக்கையை வலியுறுத்துகின்றன. இத்தகைய தெய்வத் தன்மைகள் குறிக்கப்பெற்று, தெய்வ நம்பிக்கையைக் கூறுவதோடு, சில வழிபாட்டு முறைகளையும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

உயிர்கள் தங்கள் செயலின் நன்மை தீமைகளுக்கு இறைவனின் திருவருள்தான் காரணம், அந்தத் திருவருளை அறிந்து கொள்ளுவதற்குத் தங்கள் செயல் தொடங்குமுன் நிகழ்கின்ற நிமித்தமாகிய சகுனத்தை எதிர்பார்த்து வாழ்ந்திருக்கின்றார்கள். தொழில்புரியப் புறப்படுமுன் இறைவன் அருளைக் குறிப்பாகத் தெரிந்து கொள்வதற்காகச் சகுனம் பார்க்கின்ற பண்டைத்தமிழர் வாழ்வியல் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது.

1. **தன்னும் அவனும் அவளும் சுட்டி**
   மன்னு நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்." *(தொல். அகத்.37)*

2. **காமநிலை உரைத்தலும் தேர்நிலை உரைத்தலும்**
   ...... ஆவொடு பட்ட நிமித்தங் கூறலும்
   ......அன்னவை பிறவும் பார்ப்பார்க்குரிய." *(தொல்.கற்பு.36)*

3. **அன்ன பிறவும் அவற்றொடு சிவணி**
   மன்னிய வினைய நிமித்தம் என்பர்." *(தொல்.மெய்.63)*

இத்தகைய நிமித்தமாம் சகுனம் பார்க்கும் தெய்வ நம்பிக்கை, பண்டைத் தமிழரின் வாழ்க்கையில் ஒரு பகுதியாக அமைந்திருப்பது அவர்களின் நம்பிக்கையை வெளிப்படுத்துவதாகும். இவ்வாறு சகுனம் பார்ப்பதோடு காய்களையும் கற்களையும் கொண்டு கழங்கு பார்க்கின்ற நம்பிக்கையும் பண்டைத் தமிழரின் வாழ்வியலில் தெய்வ நம்பிக்கையைக் குறிக்கின்ற செயலாக அமைந்திருக்கின்றது. "களவு அலராயினும்" என்று தொடங்கும் சூத்திரத்தில் *(தொல்.களவு.113)* "கட்டினும் கழங்கினும் வெறியென" என்ற தொடர் இடம்பெற்றுக் கழங்கு பார்ப்பதை நினைவுபடுத்துகிறது.

நடுகல் வழிபாட்டைத் தொல்காப்பியம்,

"காட்சி, கால்கோள், நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று வகையில் கல்லொடு புணர" *(தொல்.புறம்.63)*

என்று குறிப்பிடுகின்றது. இது தெய்வ உணர்வு தரும் வாழ்வாங்கு வாழ்ந்த மனிதர்க்குக் கோயில் அமைத்த தமிழர் பண்பாட்டை வெளிப்படுத்தும் சூத்திரமாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதுவரை கூறப்பெற்ற செய்திகளை வகைப்படுத்தும் பொழுது உயிர்களுக்கு மேலான வினையிலிருந்து நீங்கிய அனைத்துப் பொருள்களுக்கும் முதன்மைபெற்ற, தெய்வம் தமிழரால் ஏற்றுக்கொள்ளப் பெற்றது என்பதும் அத்தெய்வம் எல்லாவற்றையும் கடந்து நின்ற கடவுள் என்பதும் அத்தெய்வம் தொழில் நிலையில் பல தெய்வ வழிபாட்டிற்குரியதாகி, தத்தமக்குரிய பெயர்களைக் கொண்டு விளங்கியது என்பதும் அத்தெய்வத்தின் அருள் உயிர்களுக்குக் கிடைக்கும், அதனை அறிந்துகொள்ள நிமித்தம் போன்றவற்றைக் காண்பது தமிழரின் கொள்கை என்பதும் காணமுடியாத தெய்வம் என்றாலும் உருவ வழிபாட்டிற்குரியதாகக் காண்பது என்பதும் தொல்காப்பியத் தரவுகளால் கிடைக்கப்பெறுகின்ற செய்தியாகும். எனவே, தொல்காப்பியத் தரவுகள் பண்டைத் தமிழரின் தெய்வ நம்பிக்கைகளைக் குறிப்பிடுவன. அதன்வழி வரும் இலக்கியங்களிலும் தெய்வ நம்பிக்கை காணப்பெறுவது இயல்பாகிறது. அதன் அடிப்படையில் சங்க இலக்கியக் கடவுட்கொள்கை குறித்து இனிவரும் பகுதிகளில் விளக்கப்படுகின்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. சங்கத் தொகை நூல்களில் கடவுள் வாழ்த்து

இலக்கியம் கண்டு இலக்கணம் இயம்புதல் என்ற மரபுப்படி தொல்காப்பிய இலக்கணம் தம் காலத்திற்கு முன்னர் இருந்த இலக்கியங்களைக் கொண்டும், முன்னர் வழக்கிலிருந்த இலக்கண நூல்களைக் கொண்டும் எழுத்து, சொல், பொருள் இலக்கணங்களை வகுத்தது. தொல்காப்பியம் தோன்றிய பின்னர் அதில் கூறப்பட்ட இலக்கணத்திற்கு ஏற்பப் பின்னர்வந்த இலக்கியங்கள் தொல்காப்பிய இலக்கண மரபை ஏற்றுக்கொண்டன. இதனடிப்படையில் தொல்காப்பியத்தில்,

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலென மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" (தொல்.புறம்.85)

என்ற சூத்திரம் இடம்பெற்றுள்ளது. இச்சூத்திரத்திற்கு உரிய உரைகள் பின்வருமாறு.

இளம்பூரணர்: குற்றம்தீர்ந்த சிறப்பினை உடைய கொடிநிலை முதலாகச் சொல்லப்பட்ட முற்பட்ட மூன்றும் பாட்டுடைத் தலைமகனைச் சார்த்தி வரும் காலத்து கடவுள் வாழ்த்தொடு பொருந்தி வரும்.

நச்சினார்க்கினியர்: இச்சூத்திரம் தேவரும் மக்களும் எனப் பகுத்த முறைமையாலே அப்பகுதி இரண்டும் கூறி இன்னும் அத்தேவரைப் போல் ஒருவழிப் பிறக்கும் - பிறப்பில்லாத தெய்வங்களும் பாடாண் திணைக்கு உரியவை என்கிறது.

கீழ்த்திசையின் கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர் மண்டிலம், ஒரு பற்றுக்கோடின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள், தண் கதிர் மண்டிலம் என்று சொல்லப்பட்ட குற்றம் தீர்ந்த சிறப்பினை உடைய முன் கூறப்பட்ட மூன்று தெய்வமும், முற்கூறிய அமரரோடு கருதுமாற்றால் தோன்றும் என்றவாறு.

புலவர் குழந்தை: ஞாயிறும் திங்களும் உயர்குணம் என்ற குற்றம் தீர்ந்த சிறப்பினை உடைய முதன்மையான மூன்றும் கடவுள் வாழ்த்தோடு கருதுமாற்றான் வரும் என்றவாறு.

முனைவர் ச.வே.சுப்பிரமணியன்: மாற்றாரை வென்று உயர்த்திய கொடியின் சிறப்பினைக் குறிக்கும் கொடிநிலை, மாற்றாரது அரணை அழித்த வெற்றியைக் குறிக்கும் கந்தழி, வள்ளல் தன்மையைக் குறிக்கும் வள்ளி ஆகிய மூன்றும் பாட்டுடைத் தலைவனைப் பாடும்பொழுது, கடவுள் வாழ்த்தொடு பொருந்தி வரும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஞா.மாணிக்கவாசகம்: கொடிநிலை, கந்தழி, வள்ளி என்னும் குற்றமில்லா பெருமைக்கு உரியதான மூன்றும் போர்க்களப் புகழ்பாடும் வெட்சிக்குரியதாக வேந்தனைப் பாடிப்புகழ வருமாயினும், கடவுள் வாழ்த்தாக வருவதுண்டு.

இத்தகைய உரையாசிரியர்களின் உரைகொண்டு - கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்று சிறப்புக்கள் கடவுளின் சிறப்புக்களைப் போற்றிப் புகழும் கடவுள் வாழ்த்து போல, அரசனைப் போற்றிப் புகழும் பாடலாக அமையலாம் என்ற கருத்து பெறப்படுகிறது. எனவே, அரசனுக்குரிய செய்தியைச் சொல்லும்பொழுது, கடவுளை வாழ்த்துகின்ற கடவுள்வாழ்த்து குறிக்கப்பெறுவதால், எங்கும் நிறைந்திருக்கின்ற கடவுளை வாழ்த்திப் பாடுகின்ற வழக்கம் பண்டைக்காலத்தில் இருந்தமை புலனாகிறது. பின்னர் வந்த சைவத்திருமுறைகள் தேவர்கள் தாங்கள் வாழ்வதற்காக முழுமுதல் தெய்வமாம் கடவுளை வாழ்த்துவதைக் குறிப்பிடுகின்றன (வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மனநின்பால் - திருவாசகம் - திருச்சதகம்.16). எனவே, பிறரை வாழவைக்கக்கூடிய, என்றைக்கும் நிலைத்து நிற்கக்கூடிய, தோற்றமும் ஈறும் இல்லாது ஒரேநிலையில் இருக்கக்கூடிய தெய்வத்தைக் கடவுள் வாழ்த்தாகப் பாடுகின்ற மரபு தொல்காப்பியத்தில் குறிக்கப்பெற்றிருப்பது புலனாகின்றது.

தாங்கள் பாடுகின்ற நூல் இனிது முடிய விநாயகக் கடவுள்மீது கடவுள் வாழ்த்து பாடுகின்ற மரபு கி.பி.9-ஆம் நூற்றாண்டில் காணப்படுகின்றது. இந்த நூற்றாண்டில் தோன்றிய நந்திக்கலம்பகம்தான் முதன் முதலில் கடவுள் வாழ்த்தினைப் பெற்ற நூல் என்று கூறுவர் (ஜெயா.ப., விநாயகர் வழிபாடு, 1972, ப.16). இவ்வாறு தொல்காப்பியத்தில் கடவுளை வாழ்த்துகின்ற பாடல்களாகத் தனிப்பாடல்கள் அமைந்திருக்க, கி.பி.9-ஆம் நூற்றாண்டில் பாடப்படுகின்ற நூலுக்கு ஓர் அங்கமாக வளர்ந்திருக்கிறது. இதற்கு இடையில் சங்கப் பாடல்களைத் தொகுத்த பெருமக்கள் கடவுள் வாழ்த்தாகத் தனித்தனிப் பாடல்களைப் பாடச்செய்து, தொகைநூலின் முதற்கண் வைத்துத் தொகுத்தபொழுது கடவுள்வாழ்த்துப் பாடல்களை இடம்பெற வைத்திருக்கின்றனர். தொகை நூல்களில் காணப்படுகின்ற கடவுள் வாழ்த்துப் பாடல்கள், தொகை நூல்கள் தொகுக்கப்பட்ட காலத்திலேயே உடன் சேர்த்துத் தொகுக்கப்பட்டதாகவே தெரிகிறது. ஏனென்றால் கலித்தொகையில் இடம்பெற்ற கடவுள்வாழ்த்துப் பாடல், தொகைநூலைத் தொகுத்தவராகிய நல்லந்துவனாரே பாடியதாகும். எனவேதான் கலித்தொகையைத் தொகுத்த பொழுது நல்லந்துவனார் தானே கடவுள்வாழ்த்தைப் பாடிக் கலித்தொகையில் சேர்த்திருக்கிறார். மேலும், நற்றிணை நானூறு, அகநானூறு, புறநானூறு என்ற தொகை நூல்களில் நானூறு என்ற எண்ணிக்கை அவ்வவற்றில் அமைந்துள்ள கடவுள்வாழ்த்துப் பாடல்களையும் சேர்த்ததுதான். எனவே, சங்க இலக்கியங்களைத் தொகுக்கின்ற காலத்துப் பிற்காலத்தது போல் நூலை இயற்றுவதற்காக அமையாது, தொகை நூல்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்றும் நிலவ வேண்டியும், தொகுக்கும் பணி சிறப்பாக அமையவும் கடவுள்வாழ்த்துப் பாடல்கள் இயற்றி சேர்க்கப்பெற்றன.

திருக்குறள் கடவுள் வாழ்த்துக்கு உரையெழுதும் பரிமேலழகர், கடவுள் வாழ்த்து ஏற்புடைக் கடவுளை வாழ்த்துவதாகவும், வழிபடு கடவுளை வாழ்த்துவதாகவும் அமையும் என்று குறிப்பிடுவார். அதன்படி எட்டுத்தொகை, பத்துப்பாட்டுத் தொகை நூல்களில் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் எவ்வாறு பொருந்துகின்றன என்பது ஆராயத் தக்கதாகும். பத்துப்பாட்டில் முதற்பாடலாக அமைந்திருப்பது திருமுருகாற்றுப்படையாகும். இதற்கு உரையெழுதிய உரையாசிரியர்கள், முருகக் கடவுளினிடத்து வீடு பெறுதற்குச் சமைந்தான் ஓர் இரவலனாகிய புலவனை ஆற்றுப்படுத்தும் மேன்மை உடைய நூல் எனப் பொருள்படும் என்று கூறுவர். பத்துப்பாட்டில் பல பாடல்கள் ஆற்றுப்படைப் பாடல்களாக அமைந்திருப்பதால் திருமுருகாற்றுப்படை ஏற்புடைக் கடவுளுக்குரிய கடவுள் வாழ்த்து போல் எண்ணப்பட்டு முதற்பாடலாகத் தொகுக்கப்பெற்றுள்ளது. நற்றிணையில் அமைந்த கடவுள்வாழ்த்து, பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியதாகும். இது திருமாலைப் பற்றியது. பிற தொகை நூல்களான குறுந்தொகையில் முருகனைப் பற்றியும், ஐங்குறுநூற்றில் சிவனைப் பற்றியும், அகநானூற்றில் சிவபெருமானைப் பற்றியும், புறநானூற்றில் சிவனைப் பற்றியும் கடவுள்வாழ்த்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவையனைத்தும் பெருந்தேவனார் பாடியதாகும். பரிபாடலில் திருமால் பற்றிய பாடல் முதலாவதாக அமைந்துள்ளது. பாடிய ஆசிரியர் தெரியவில்லை. பதிற்றுப்பத்தில் முதல் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்காத காரணத்தால் கடவுள்வாழ்த்து உ,வே.சா. பதிப்பில் இடம்பெறவில்லை. ஆனால், புலியூர்க்கேசிகன் உள்ளிட்டோர் பதிப்பதித்த பிற்காலப் பதிப்புகளில் கடவுள்வாழ்த்துப் பாடல் காணப்படுகிறது. அது தொல்காப்பியப் புறத்திணையியல் 81-ஆம் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் உரையில் காணப்படும் பாடலாகும். "எரி எள்ளு அன்ன நிறத்தன்" என்று தொடங்கும் சிவனைப் பற்றிய இப்பாடலே பத்துப்பாட்டில் கடவுள் வாழ்த்தாக உரையாசிரியர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. நற்றிணை, பரிபாடல் தவிர பிற தொகை நூல்களில் காணப்படும் கடவுள்வாழ்த்துப் பாடல்கள் சிவனைப் பற்றியதாகவே இருப்பதால் புலவர்களின் வழிபடு கடவுளாகச் சிவபெருமான் இருந்துள்ளான் எனக் கொள்ளலாம். இங்கு பரிமேலழகர் கூறிய எட்டுத்தொகை கடவுள் வாழ்த்துப் பாடல்கள் ஏற்புடைக் கடவுள் வாழ்த்தாகவும், வழிபடு கடவுள் வாழ்த்தாகவும் அமைந்துள்ளன என்பது இதன்மூலம் உணரத்தக்கது.

தொகைப் பாடல்களில் சைவ சமய மூலக் கூறுகள்

எட்டுத்தொகை நூல்களில் குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, கலித்தொகை, புறநானூறு ஆகியவற்றுக்குச் சிவபெருமான் கடவுள் வாழ்த்தும், நற்றிணை, பரிபாடலுக்குத் திருமால் கடவுள் வாழ்த்தும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அமைந்திருப்பதை நோக்கும்போது, தொகைநூல்களைத் தொகுத்தவர்களும் தொகுப்பித்தவர்களும் கடவுள்நம்பிக்கை உடையவர்கள் என்பது பெறப்படுகிறது. தொகுத்தவர்கள் புலவர்களாகவும் தொகுப்பித்தவர்கள் பெரும்பாலும் அரசர்களாகவும் இருந்துள்ளனர். எனவே, சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கையான இறைவனைப் போற்றுதல் சங்க இலக்கியத் தொகுப்புக் காலத்திலேயே இருந்தமை பெறப்படுகிறது. சிலப்பதிகார வழிபடுதலாகிய இயற்கை வழிபாடோ, அல்லது சிந்தாமணி அருக வழிபாடோ, திருக்குறளின் பொதுமை வழிபாடோ இல்லாமல் சிவனையோ திருமாலையோ அல்லது முருகனையோ பெயர் குறிப்பிட்டு வழிபடுகின்ற வழக்கம் சங்க இலக்கியத் தொகுப்புக் காலத்தில் இருந்திருக்கிறது. சங்க இலக்கியத் தொகுப்புக்காலம் தெய்வங்களை வகைப்படுத்திக் கொண்டு அவற்றின் பெருமைகளைப் பேசுகின்ற கடவுள்நெறி நன்கு பரவிய காலமாகத் தெரிகிறது. அக்காலம் சங்ககாலத்திற்குப் பிற்பட்டதாக இருந்தாலும் சங்க இலக்கியத் தொகுப்பு கடவுட்கொள்கை சார்ந்தது என்பது உறுதியாகின்றது. தமிழரின் மரபு பண்டைக்காலத்தில் தெய்வ நம்பிக்கையோடுதான் இருந்தது என்பது இக்கடவுள் வாழ்த்துப் பாடல்களால் உறுதியாகின்றது.

திருமாலுக்குரிய வாழ்த்துப் பாடல்களைக் கொண்ட நற்றிணையையும், பரிபாடலையும் தவிர எஞ்சிய ஆறு பாடல்கள் சிவபெருமானுக்குரிய வாழ்த்துக்களைக் கொண்டதாகும். குறுந்தொகையில் உள்ள பாடல் முருகனைப் பற்றியதாக இருந்தாலும் சிவனும் முருகனும் வேறல்ல என்ற சைவ சமயக் கொள்கையின் அடிப்படையிலேயே பாடப்பெற்றிருக்கிறது. இந்த ஆறு பாடல்களில் பதிற்றுப்பத்துக்கு உரிய பாடலைப் பாடியவர் பெயர் தெரியவில்லை. கலித்தொகைப் பாடலைப் பாடியவர் கலித்தொகையைத் தொகுத்த நல்லந்துவனார் ஆவார். மற்ற ஐந்து கடவுள் வாழ்த்துப் பாடல்களையும் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார். பெருந்தேவனார் என்பது சிவன் பெயராகும்.

பெருந்தேவனார் என்ற பெயரில் தமிழ்ப்புலவர்கள் பலர் இருந்துள்ளனர். அவர்களில் சங்க இலக்கியத்தில் நற்றிணை 83-ஆம் பாடலையும் அகநானூற்றின் 51-ஆம் பாடலையம் பாடியவர் ஒருவர். அதேபோல குறுந்தொகை 255-ஆம் பாடலைப் பாடிய கடுகு பெருந்தேவனார் என்பவர் ஒருவர். தொகை நூல்களின் கடவுள்வாழ்த்தைப் பாடிய பாரதம் பாடிய பெருந்தேவனார் ஒருவர். இவர்களில் சங்க இலக்கியப் பெருந்தேவனாரையும், சங்க இலக்கியக் கடவுள்வாழ்த்துப் பெருந்தேவனாரையும் வேறுபடுத்திக் காண்பதற்காக, முன்னவரைப் பெருந்தேவனார் என்றும் பின்னவரைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்றும் பிரித்து வழங்கப்படுகின்றது. பாரதம் பாடிய பெருந்தேவனாரின் பாரதம் இப்பொழுது கிடைக்கவில்லை. ஆனால், பாரத வெண்பா என்ற ஒரு நூலைப் இயற்றிய பெருந்தேவனாரும் இருந்திருக்கிறார். தொண்டைமண்டலச் சதகம் அவரைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இந்தப் பாரதவெண்பா பாடிய பெருந்தேவனார் வேறு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தொகை நூலில் கடவுள் வாழ்த்துப் பாடிய பாரதம் பாடிய பெருந்தேவனார் வேறு. ஏனென்றால் இப்பொழுது கிடைக்கும் பாரதவெண்பா நூலில் விநாயகரைப் பற்றிய கடவுள் வாழ்த்துக்குப் பின் தெள்ளாறு எறிந்த நந்திவர்மனைப் பற்றிய சிறப்பு கூறப்பெறுவதால், தெள்ளாற்றுப் போர் என்பது கடைச்சங்கத்திற்குப் பல்லாண்டுகளுக்குப் பின் நடந்ததாகும். எனவே, அதனைப் பாடியவர் தொகைப் பாடல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடிய பெருந்தேவனாராக இருக்கமுடியாது. மேலும், உ.வே.சா. அவர்கள் தமது பதிப்பில் "பாரதம் பாடிய பெருந்தேவனாரின் வரலாற்றைக் குறிப்பிடும்பொழுது, அவர் தொண்டைநாட்டைச் சார்ந்தவர், தமிழில் பாரதக்கதையை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக இயற்றியவர். அச்செய்யுட்கள் சில தொல்காப்பியப் பொருளதிகார நச்சினார்க்கினியர் உரையிலும், யாப்பருங்கலவிருத்தி முதலியவற்றிலும் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளன. இவர் பாடியதாகக் கூறப்படும் இக்கடவுள் வாழ்த்துப் பாடல்களே அன்றி, திருவள்ளுவ மாலையிலும் இவரது பாடல் ஒன்று காணப்படுகிறது" என்றும் குறிப்பிடுகின்றார். ஆனால் உ.வே.சா. அவர்கள் இப்பாரதம் பாடிய பெருந்தேவனாரையும, சங்க இலக்கியப் பாடல்கள் பாடிய பெருந்தேவனாரையும் ஒருவராகவே குறிப்பிடுகின்றார். இக்கருத்து ஏற்புடையதல்ல என்பதை முன் கூறியபடி பாரதம் பாடிய என்ற அடைமொழியால் இருவரையும் வெவ்வேறானவர் என்று கருதுவதே பொருத்தம் உடையதாகும்.

கிடைக்கப் பெற்றிருக்கின்ற ஆறு பாடல்களில் சிவபெருமானைப் பற்றியும் முருகனைப் பற்றியும் செய்திகள் இடம்பெற்றுள்ளன. அவற்றைப் பின்வருமாறு காணலாம்.

உருவம்

சிவபெருமானின் உருவமும், முருகப்பெருமானின் உருவமும் இந்நூல்களில் விளக்கமாகக் கூறப்பெற்று சைவ சமயத்தின் உருவ வழிபாடு உணர்த்தப்படுகிறது.

1. "நீலமேனி வாலிழை பாகத்து
   ஒருவன் ...." *(ஐங்குறுநூறு)*

2. "எரி எள்ளு அன்ன நிறத்தன் விரியஇணர்க்
   கொன்றைஅம் பைந்தார் அகலத்தன் பொன்றார்
   எயிலெறி ஊட்டிய வில்லன் பயிலிருள்
   காடமர்ந்து ஆடிய ஆடலன் நீடிப்
   புறம் புதை தாழ்ந்த சடையன்
   ....நுண்ணூல்
   சிரந்தை இரட்டும் விரலன் இரண்டுருவாய்
   ஈரணி பெற்ற எழில் தகையன்" *(பதிற்றுப்பத்து)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3. "கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தரான் மாலையன் மலைந்த கண்ணியன்
மார்பின் அஃதே மையில் நுண் ஞாண்
நுதலது இமையா நாட்டம் இகல்அட்டுக்
கையது கணிச்சியொடு மழுவே மூவாய்
வேலும் உண்டத் தோலா தோற்கே
ஊர்ந்தது ஏறே சேர்ந்தோள் உமையே
செவ்வான் அன்ன மேனி அவ்வான்
இலங்கு பிறை அன்ன விலங்குவால் வைஎயிற்று
எரியகைந்தன்ன அவிர்ந்து விளங்கு புரி சடை
முதிராத் திங்களொடு சுடரும் சென்னி" *(அகநானூறு)*

4. "கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
வண்ண மார்பின் தாரும் கொன்றை
ஊர்தி வால்வெள் ஏறே சிறந்த
சீர்கெழு கொடியும் அவ்வேறென்ப
கறை மிடறு அணியலும் அணிந்தன்று அக்கறை
மறைநவில் அந்தணர் நுவலவும் படுமே
பெண்உரு ஒருதிறன் ஆகின்று அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரைக்கினும் கரக்கும்
பிறைநுதல் வண்ண மாகின் றப்பிறை" *(புறநானூறு)*

5. "தேறுநீர் சடைக் கரந்து திரிபுரம் தீ மடுத்து
....
மாறாப் போர் மணி மிடற்று எண்கையாய்...." *(கலித்தொகை)*

இவ்வைந்து பாடல்களிலும் சிவபெருமானின் வண்ணமும், தோற்றமும், மாதொருபாகமும் குறிக்கப்பெறுகிறது. ஐங்குறுநூற்றில் சிவபெருமான் மேனி, நீல நிறமுடையதாகக் குறிக்கப்பெற்றுள்ளது. கடலில் தோன்றிய ஆலகால விடத்தை உண்ட வரலாற்றின் அடிப்படையில் சிவபெருமானின் கண்டத்தை நீலகண்டமாகக் கூறுகின்ற வழக்கம் சைவப் பனுவல்களில் காணப்பெறுகின்றது. ஞானசம்பந்தப் பெருமான் திரு ஆலவாய்ப் பதிகத்தில் "நீலமா மிடற்று ஆலவாயினான்" (பாடல்.1) என்றும் நாவுக்கரசர் பெருமான் நான்காம் திருமுறை தில்லைத் திருப்பதிகத்தில் "நஞ்சுடைக் கண்டனாரைக் காணலாம்" (பாடல்.1) என்றும் நஞ்சுமிடற்றைக் குறிப்பிடுவார்கள். இந்த மிடற்றின் அமைப்பினையே நீலமேனி என்று ஐங்குறுநூறு முழுமையாகத் தருகிறது. மணிமிடற்றினைப் புறநானூறு "கறை மிடறு அணியலும்" என்றும் கலித்தொகை "மாறாப் போர் மணிமிடற்று" என்றும் குறிப்பிடுகின்றது. இவ்வாறு சிவபெருமானுடைய கருணையைக் குறிப்பதற்காகவே கருமிடறு குறிக்கப்பெறுகிறது. ஏனென்றால் தேவர்களை அழிக்கத் தோன்றிய கடல் நஞ்சினைத் தான் உட்கொண்டு தேவர்களைக் காத்தான் என்று சிவபெருமானின் கருணையைக் குறிப்பிடுவதுதான் இந்தப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புராணச் செய்தியாகும். எனவே, சைவ சமயக் கடவுளான சிவபெருமான், கருணை உள்ளம் கொண்டவன் என்ற கருத்தைச் சிவபெருமானின் வடிவமான நீலகண்டத்தைக் குறிப்பிட்டுச் சங்க இலக்கியக் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் சைவ சமய மூலக் கூறினை வெளிப்படுத்துகின்றன எனலாம்.

அடுத்து பதிற்றுப்பத்து, அகநானூறு என்ற இரண்டு பாடல்களிலும் சிவபெருமான் செம்மேனியனாக இருப்பது குறிக்கப்பெறுகின்றது. "எரி எள்ளு" என்று பதிற்றுப்பத்தும், "செவ்வானன்ன மேனி" என்று அகநானூறும் செம்மை நிறத்தைக் குறிப்பிடுவதைப் பார்க்க முடிகின்றது. சிவன் என்ற சொல்லுக்குச் சிவப்பு நிறம் உடையவன் என்பது பொருளாகும். எனவே, சிவபெருமானின் மேனியைக் குறிப்பிடுகின்ற தெய்வப்பனுவல்கள் அனைத்துமே செம்மைநிறம் கொண்டவன் என்றே குறிப்பிடுகின்றன. திருநாவுக்கரசர் "பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்" என்றும் "செக்கர்போலும் திருமேனி" (புணர்ச்சிப்பத்து.8) என்றும் "செந்தழல் புரைதரு மேனியும் காட்டி" (திருப்பள்ளியெழுச்சி, பாடல்.8) என்று மாணிக்கவாசகரும் "பவளமே திரு உடம்பு" என்று (ஒன்பதாம்திருமுறை.9:5) கரூர்த்தேவரும் சிவபெருமானின் மேனியைச் செம்மை நிறமாகக் காட்டுவர்.

கடவுள் வாழ்த்துப் பகுதியில் உமையவளை ஒருபாகத்தில் கொண்டிருக்கும் செய்தி காட்டப்படுகிறது. "வாலிழை பாகத்து ஒருவன்" என்று ஐங்குறுநூறும், "சேர்ந்தோள் உமையே" என்று அகநானூறும், "பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று அவ்வுரு தன்னுள் அடக்கி கரக்கினும் கரக்கும்" என்று புறநானூறும், "இரண்டு உருவாய் ஈறணி பெற்ற எழில்தகையன்" என்று பதிற்றுப்பத்தும் அச்செய்தியைக் குறிப்பிடுகின்றன. இறைவன் மாதொருபாகனாக இருப்பதைத் தெய்வப் பனுவல்கள் பலவாறு குறிப்பிடுகின்றன. "நீள் நெடுங்கண்ணினாளோடும் கூற்றாய் வந்து நிற்றீர்" என்று சுந்தரரும், "மாதாடும் பாகத்தன்" என்று மணிவாசகரும், "மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும்" என்று சேக்கிழாரும் சிவபெருமான் மாதொருபாகனாய் விளங்குகின்றான் என்பதைக் குறிப்பிடுகின்றன. திருமுறைகள் இவ்வாறு இறைவனின் வடிவத்தை மாதொருபாகனாகச் சங்கத்தொகை நூல்களில் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் வழி கூறியிருக்க, சைவ சித்தாந்த சாத்திரங்களோ சிவபெருமானாகிய இறைவன் உமையவளாம் சத்தி என்னும் அருளோடு பிரிப்பின்றி இருக்கின்றான் என்பதை, "நீக்கமின்றி நிற்கும் அன்றே" என்று சிவஞானபோதமும், "சத்தியும் சிவமுமாகிய தன்மையும்" (சுபக்கம்.89) என்று சிவஞான சித்தியாரும், "சத்தி பின்னமிலான் எங்கள் பிரான்" (அதிகாரம்.1, பாடல்.2) என்று திருவருட்பயனும் சிவபெருமானோடு சத்தி இணைந்திருக்கின்ற செய்தியைக் குறிப்பிடுகின்றன.

இறைவன் உலகத்தைப் படைத்துக் காத்து அழிப்பவன் என்பதை, "மூவகை உலகும் முகிழ்த்தனன்" என்று ஐங்குறுநூறும் "மணிமிடற்று அந்தணன் தாவில் தாள்நிழல் தவிர்ந்தன்றால் உலகே" என்று அகநானூறும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"எல்லா உயிர்க்கும் ஏமமாகிய" என்று புறநானூறும், இறைவனின் தொழில்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. இதனையே தமிழ்ப் பனுவல்களும் பலவாறாக எடுத்துக் காட்டுகின்றன. "கண்ணாய் உலகெலாம் காத்தாய் நீயே" (திருத்தாண்டகம், பா.5) என்று திருவையாற்றுப் பதிகத்தில் நாவுக்கரசரும், "காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி (சிவபுராணம்) என்று மணிவாசகரும் குறிப்பிடுகின்றனர். இதனையே தத்துவ நூலாகிய சிவஞான போதமும் "தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம் அந்தம் ஆதி" (சூ.1), "தோற்றுவித்து அளித்துப் பின்னும் துடைத்தருள் தொழில்கள் மூன்றும் போற்றவே உடையன் ஈசன்" (சுபக்கம்.58) என்று சிவஞான சித்தியாரும், "பல் உயிர் வெவ்வேறு படைத்தும் அவை காத்தும் - எல்லை இளைப்பு ஒழிய விட்டு வைத்தும்" (கண்ணி 5-6) என்று போற்றிப் பஃறொடையும் கூறுகின்றன.

தொகை நூல்களின் கடவுள் வாழ்த்துப் பாடல்களில் முப்புரம் எரித்த புராணச் செய்தியும் இடம்பெற்றுள்ளது. சமயக் கொள்கைகளை வலியுறுத்துவதற்காக ஆன்மீகத் தடத்தில் புராணங்கள் தோன்றின. பதினெட்டுப் புராணங்கள் உள்ளன என்பது அறியத்தக்கதாகும். இதில் சிவம் பற்றிய புராணமும் ஒன்று. இப்புராணத்தில் சிவனைப் பற்றிய கதைகள் இடம்பெற்றுள்ளன. இப்புராணம் வியாசர்வழி உலகுக்கு வந்தது என்பது மரபாகும். இவ்வரலாற்றில் ஒன்று சிவபெருமான் முப்புரம் எரித்த வரலாறு ஆகும். முப்புரம் எரித்த வரலாற்றைத் தொகை நூல்களின் கடவுள்வாழ்த்துப் பாடல்களில், "எயில் எரியூட்டிய வில்லன்" என்று பதிற்றுப்பத்தும் "திரிபுரம் தீ மடுத்து" என்று கலித்தொகையும் குறிப்பிடுவதைப் பார்க்க முடிகின்றது. முப்புரம் எரித்த செய்தியை அனைத்துத் திருமுறையாளர்களும் தத்தம் பாக்களில் குறிப்பிட்டுள்ளனர். "வளைந்தன வில்லு விளைந்தன பூசல் உளைந்தன முப்புரம் உந்தீபற" (திருஉந்தியார், பாடல்.1) என்று மணிவாசகரும், "முனிவன் மால் போற்றார் புரம் எரித்த புண்ணியன் தன் பொன்னடிகள்" (பாடல்.73) என்று கபிலதேவ நாயனாரும், "தொல் அவுணர் புரம் மூன்றும் எரியச் செற்ற வில்லானை" (திருநள்ளாறு திருத்தாண்டகம், பாடல்.8) என்று நாவுக்கரசரும் கூறியுள்ளனர். திருமுறைகள் இவ்வாறு கூறியிருக்க, சித்தாந்த சாத்திரங்களில், "மதியாதார் வல்லரணம் செந்தழலில் மூழ்கச் சிரித்த பிரான்", (கண்ணி.30) என்று நெஞ்சுவிடு தூதும் கூறுகிறது. இவ்வாறு சங்க இலக்கிய நூல்களில் இடம்பெற்றுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்களில் சிவனைப் பற்றிய பாடல்கள் மூலம் சிவபெருமானின் உருவ அமைப்பு, அதில் நீலகண்டம், செம்மைத் திருமேனி, ஆகியவையும் உமையவளை ஒரு பாகத்தில் கொண்ட தனித்தன்மையும், மூவுலகங்களையும் காத்தும், அழித்தும் செய்ய வல்லவர் சிவபெருமான் என்பதையும், சிவனைப் பற்றிய புராணச் செய்திகளில் முப்புரம் எரித்ததும் இடம்பெற்று சைவ சமயச் செய்திகள் அக்காலத்தில் பரவியிருந்ததை வெளிப்படுத்துகின்றன. சிவபெருமானைப் பற்றிய செய்திகள் அப்பாடல்களில் இடம்பெறும் அளவிற்கு ஆன்மீக உணர்வோடும், சிவ வழிபாட்டோடும், சங்க

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இலக்கியங்கள் தொகுக்கப்பட்ட காலம் விளங்கியிருந்தமை புலனாகின்றது. எட்டுத்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடல்கள், பின்னால் தோன்றிய சைவத் திருமுறைகளுக்கும், சைவ சித்தாந்த சாத்திரங்களுக்கும் வழி மொழிந்திருக்கின்றன என்பது பெறப்படுகிறது.

குறுந்தொகை செவ்வேள் கடவுள் வாழ்த்து: குறுந்தொகையின் கடவுள்வாழ்த்துப் பாடல் செவ்வேளைப் பற்றியதாகும். இதனைப் பாடியவர் பாரதம்பாடிய பெருந்தேவனார். இப்பாடலில் முருகனின் தோற்றமும், அவனது போர்ச் செயலும், அவன் கையில் ஏந்திய வேலும், சேவல் கொடியும், அவன் உலகம் இன்பமாகக் காத்தல் தொழிலைச் செய்கிறான் என்பதும் கூறப்பெற்றுள்ளது. பொதுவாகச் சைவ சமயத்தில் சிவனும், முருகனும் வேறுவேறாகக் கூறப்பட்டாலும், இவர்கள் இருவரும் ஒன்றுதான் என்ற தத்துவமரபு நெடுங்காலமாக இருந்துவருகிறது. சிவனும் முருகனும் வெவ்வேறல்ல, சிவபெருமான் சத்தியே முருகன் என்பதை வலியுறுத்துவதற்காகக் கந்தபுராணம் என்ற நூலே எழுந்தது எனலாம். கந்தபுராண வரலாற்றில் சிவபெருமான் சத்தியாகவே முருகன் காட்டப்பெற்று சிவபெருமானின் தொழிலைச் செய்ததாகக் கதை மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. இருவரும் ஒன்று என்பதைக் கீழ்வரும் கந்தபுராணப் பாடல் சுட்டிக்காட்டுகின்றது.

> "ஆதலின் தமது சத்தி அறுமுகன் அவனும் யாமும்
> பேதகம் அன்றால் நம்போல் பிரிவிலன் யாண்டும் என்றான்
> ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்
> போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருளவல்லான்"
>
> *(கந்தபுராணம்.1070)*

எனவே, முருகவணக்கம் குறுந்தொகையில் அமைந்திருந்தாலும் சிவவழிபாட்டைக் குறிப்பிடுவதாகவே கொள்ளலாம். அதற்கேற்றாற் போல பாடலில் "தாமரை மலர் போன்ற திருவடி" என்றும் "பவளம் போன்ற சிவந்த நிறமும்," என்றும் முருகனின் பாதுகாப்புத் தொழில் கூறப்பெற்றுள்ளது. கடவுளின் திருவடிகளைத் தாமரை போன்ற திருவடிகள் என்று கூறுவது ஆன்மீகத் தமிழ்ப் பாடல்களின் மரபாகும். அதுபோல முன்னர் காட்டிய சிவபெருமானின் செம்பொன் மேனியே முருகப் பெருமானுக்கும் இருந்தமையைப் "பவழத்தன்ன மேனி" என்ற தொடர் காட்டுகிறது. அடுத்து முருகப் பெருமானின் புராணச் செய்தியாகக் கிரவுஞ்ச மலையாக நின்ற தாரகனின் நெஞ்சைப் பிளந்த வேலின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. சூரபன்மனை அழித்துச் சேவல் கொடியாக்கியதும் கூறப்பட்டுள்ளது. இவையெல்லாம் பின்னால் வந்த சைவ சமய இலக்கியங்கள் வழிமொழிந்து கூறியுள்ளன என்பதால் ஐங்குறுநூற்றுப் பாடலும், சங்க இலக்கியங்கள் தொகுக்கப்பட்ட காலத்தில் சைவ சமயக் கொள்கைகளை வெளிப்படுத்துகின்றன எனலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5. சங்க இலக்கியங்களில் இறை பற்றிய மூலக் கூறுகள்

பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையில் ஒன்றாகிய திருக்கோவையார் என்ற தனி நூலிலும், பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்திலும், பனிரெண்டாம் திருமுறையாகிய பெரியபுராணத்திலும் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. எனவே, அடிப்படை நிலையில் சைவ சமயத்தில் தெய்வங்களைக்குறித்த கடவுள் என்ற சொல் பயன்படுத்தப்பெற்றிருப்பது உண்மையாகும். இந்தப் பயன்பாடு சங்க இலக்கியங்களிலேயே இடம்பெற்றுச் சைவ சமயத்திற்குரிய முதன்மை மூலக்கூறாகிய கடவுள் நம்பிக்கை இருந்தமை புலப்படுகிறது.

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் கடவுள் என்பதற்கு, "எல்லாவற்றையும் கடந்து நிற்பவன் கடவுள், எல்லா உலகங்களையும் ஆண்டவன், எங்கும் தங்கி இருப்பவன் இறைவன், எல்லா உலகங்களுக்கும் உணவைப் பகிர்ந்தளிப்பவன் பகவன் என்று பெயர் ஏற்பட்டது" என்று விளக்கம் தருவார். மேலும், "கடவுள் எனும் சொல், எல்லாவற்றையும் கடந்து, எண்ணத்திற்கும் எட்டாத பரம்பொருளையே குறிக்கும்" என்றும் குறிப்பிடுவார்.

புறநானூற்றின் 260-ஆம் பாடலில்,

"கள்ளி நீழல் கடவுள் வாழ்த்திப்
பசிபடு மருங்குலை கசிபுகை தொழாஅக்
காணலென் கொல்லென வினைவினை வரூஉம்
பாண கேண்மதி........."

என்ற பாடலில் இடம்பெற்றுள்ள கடவுள் என்ற சொல்லுக்கு ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள் தம்முடைய புறநானூற்றுப் பதிப்பில், "தீ நிமித்தத்தால் உண்டாம் எனக் கருதிய தீங்கை விலக்குதல் வேண்டித் தெய்வம் பரவினமையின் கள்ளி நீழல் கடவுள்வாழ்த்து என்றார். அணங்கெனவும், தெய்வம் எனவும் கூறாது, கடவுள் என்றது மனம் மொழிகளின் எல்லை கடந்து நின்று உயிர்கள் நுகர்தற்குரிய வினைப் பயன்கள் தாமே சென்று செய்த உயிரைச் சாரமாட்டாமையான் அவ்வினைப் பயனை வினை முதலாகிய உயிர்கள் நுகரச்செய்யும் முழுமுதற் பொருளாகும். அத்தெய்வம் தீநிமித்தம் காட்டும் தீப்பயன் வந்து சாராமை விலக்க வல்லதாம் என்பதனால் அதனைக் கடவுள் என்றும் கடவுள் வாழ்த்து எனவும் கூறினார்" என்று சிறப்புரையில் எழுதுகின்றார். எனவே, கடவுள் என்ற சொல், சொல் ஆய்வாளர்களாலும், சைவப் பெரியார்களாலும் எல்லாவற்றையும் கடந்து நிற்கின்ற இறைவன் என்னும் பொருளில் குறிக்கப் பெற்றிருக்கிறது என்பது அறியப்பெறுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சங்க இலக்கியங்களில் கடவுள் என்ற சொல் பதினாறு நிலைகளில் தொன்மைச் சொல்லாக இடம்பெற்று விளங்குகிறது என்று புலவர், வே. அண்ணாமலை குறிப்பிடுவார்கள் (சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம், பகுதி-1, மெய்யப்பன் தமிழாய்வகம், ப.94).

கடவுள்: பன்னிரு திருமுறைகளில் கடவுள் என்ற சொல் இடம்பெற்ற ஒரு சில பாடல்கள்.

"கடவுளைக் கடலுள் எழு நஞ்சுண்ட
உடலு ளானைஒப் பாரியி லாதவெம்" *(திருநாவுக்.5:3:1)*

"கதியைக் கண்டம் கறுத்த கடவுளை
மதியை மைந்தனை நான்மறக் கிற்பனே" *(திருநாவுக்.5:93:9)*

"காப்போன் காக்கும் கடவுள் காப்பவை
கரப்போன் கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவுள்.........." *(திருவாசகம்.8:3:14-16)*

"போற்றி நின் கருணை வெள்ளப் புதுமது புவனம் நீர் தீக்
காற்று இயமானன் வானம் இருசுடர்க் கடவுளானே" *(திருவாசகம்.8:5:63)*

"கடவுளே போற்றி என்னைக் கண்டுகொண்டு அருளு போற்றி
விடவுளே உருக்கி என்னை ஆண்டிட வேண்டும் போற்றி"
(திருவாசகம்.8:5:64)

இவ்வாறு திருமுறைகளில் இடம்பெற்ற கடவுள் என்ற சொல் சங்க இலக்கியங்களிலும் இடம்பெற்றுள்ளதைக் கீழ்வருமாறு காணலாம்.

"அருந்திறல் கடவுள், *(ஐங்.182)*,

"அருந்திறல் கடவுள் செல்லூர் குணாது" *(அகம்.90)*

"அருந்திறல் மரபில் கடவுள் காப்ப" *(அகம்.372)*

"தெறலரும் கடவுள் முன்னர்த்தோன்றி" *(அகம்.396)*

"அருந்திறல் கடவுள் காக்கும் உயர்சிமையப்
பெருங்கல் நாடன்........................" *(புறம்.158)*

"அருந்திறல் மரபின் கடவுள் பேணியர்" *(பதிற்.30)*

"அருந்திறல் கடவுள் வாழ்த்தி" *(பெரும்பாண்.391)*

"அருந்திறல் கடவுள் பழிச்சிய பின்றை" *(மலைபடு.538)*

சங்ககால மக்கள் கடவுள் நம்பிக்கையோடு இருந்தனர் என்பது இதன்மூலம் புலனாகின்றது. இதில் கடவுள் எல்லாம் நிறைந்த வல்லமை உடையவர் என்பதைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. இதனைத்தான் பின்வந்த சைவ சித்தாந்த சாத்திரங்கள் வழிமொழிந்து, அதாவது சங்க

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இலக்கியத் தொடர்களை மூலக்கூறாகக் கொண்டு சிவபெருமானை வல்லமை உடையவனாகக் காட்டுகின்றன. அந்த வல்லமை பல நிலைகளில் அமைகின்றது என்பதை அச்சாத்திரங்கள் விளம்புகின்றன. சிவப்பிரகாசம் கடவுளின் இலக்கணத்தையும், ஆற்றலையும் பலவாறாக சுட்டிக்காட்டுகிறது. இதனை,

"பலகலை ஆகமவேதம் யாவையினும் கருத்துப்
பதி பசு பாசம் தெறித்தல் பதிபரமே அதுதான்
நிலவுமரு உருவன்றிக் குணம் குறிகள் இன்றி
நின்மலமாய் ஏகமாய் நித்த மாகி
அலகில் உயிர்க்குணர் வாகி அசலமாகி
அகண்டிதமாய் ஆனந்த உருவாய் அன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாயச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வது தற்சிவம் என்பர் தெளிந் துளோரே" *(சிவப்.13)*

என்னும் பாடலால் அறியலாம்.

"வல்லார்கள் வல்ல வகையால் தொழில் புரிதல்
எல்லாம் உடனே ஒருங்கிசைந்து....." *(போற்றிப்.37)*

இப்பாடல்கள் கடவுளை, அருவமும் உருவமும் அல்லாதவன், குணங்களும் குறிகளும் இல்லாதவன், மலத்தில் பொருந்தாதவன், என்றும் அழிவில்லாதவன், அறிவுக்கு அறிவானவன், சலனமற்றவன், ஆனந்த வடிவுடையவன், மாறுபட்ட உணர்வினால் சென்று அடைய முடியாதவன், அணுவுக்கு அணுவாய், பெரிதுக்கும் பெரிதாய் விளங்குகின்றவன் என்றெல்லாம் குறிப்பிடுகின்றன. இத்தகைய கடவுள் என்றைக்கும் அழிவில்லாத நிலையில் நிலைத்து நிற்பவன் என்பது சைவ சமயத்தின் கொள்கையாகும். இதனைத் திருமந்திரம்,

"பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அநாதி" *(திரு.115)*

என்று குறிப்பிடுகின்றது.

"மன்னிய திருவருள் மலையே போற்றி" *(திருவாசகம்.8:4:128)*

"...மன்னும் உத்தரகோச மங்கைக் கரசே..." *(திருவாசகம்.8:6:3)*

"சிற்றம்பலம் மன்னும்....................
ஒல்லை விடையானை.............." *(திருவாசகம்.8:8:5)*

என்று திருமுறைகள் கடவுளின் நிலைத்த தன்மையைக் குறிப்பிடுகின்றன. இதனையே,

"நிலைபெறு கடவுள் ஆக்கிய" *(அகம்.209)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"நிலை உயர் கடவுட்குக் கடம் பூண்டுத் தன்மாட்டுப்
பல சூழும் மனத்தொடு பைதலேன் யானாக" *(கலி.45)*

எனும் சங்க இலக்கியப் பாடல்கள், கடவுள் நிலைத்த நிலையில் என்றைக்கும் அழிவில்லாதவன் என்று குறிப்பிடுகின்றன. இதனையே மூலக் கூறாகக் கொண்டு பின்னால் வந்த சாத்திரங்கள் இறைவனை நிலையுடையவனாகப் போற்றிப் புகழுகின்றன.

"ஒன்றலா ஒன்றால் உளதாகி நின்றவாறு
ஒன்றலவா ஒன்றிலவை ஈறாதல் - ஒன்றலா
ஈறே முதலதனின் ஈறலா ஒன்றுபல
வாறே தொழும்பாகும் அங்கு" *(சிவஞான. சூ- 1, அதி -3, பா.1)*

எனும் இப்பாடல், கடவுள் எல்லாப் பொருள்களையும் தனக்குள் அடக்கி, அழித்தல் கடவுளாக விளங்கி அதே நேரத்தில் இறுதி இல்லாத அதாவது அழிதல் இல்லாத பொருளாக விளங்குகிறான் என்பதைக் குறிப்பிடுகிறது. அதுபோல, நெஞ்சுவிடு தூது, கடவுளும் உயிரும் என்றைக்கும் நிலையானவை என்று கூறுகின்றது. மேலும், கடவுள் அழிவில்லாதவன் என்பதை,

"இடமாய் நிறைந்த இறைவன் - சுடரொளியான்
என்றுமுளன் அன்றளவும் யானும் உளனாகி" *(நெஞ்சுவிடு.1:8-9)*

என்று குறிப்பிடுகின்கிறது. இதேபோல பிறிதோர் இடத்தில் கடவுளின் மேலோங்கிய நிலையை,

"கல்லாது தோன்றா அமலன் அகிலமெல்லாம்
நில்லாமல் நின்ற நிலையினான்" *(நெஞ்சுவிடு.1:39-40)*

என்று நெஞ்சுவிடு தூது குறிப்பிடுகிறது. இவ்வாறு சாத்திரங்கள் சங்க இலக்கிய மூலக் கூறுகளை வழிமொழிந்து கடவுளின் நிலைத்த தன்மையைக் குறிப்பிடுகின்றன.

ஐந்து பூதங்களாக இறைவன் விளங்குகின்றான் என்பதைத் திருமுறைகள் பல்வேறு இடங்களில் குறிப்பிடுகின்றன. அத்துவிதமாய் அதாவது இரண்டற்ற நிலையில் ஒன்றாய் எல்லாப் பொருள்களிலும் கலந்திருக்கிறான் என்ற சைவ தத்துவக் கொள்கையைத் திருஞானசம்பந்தர்,

"ஈறாய் முதல் ஒன்றாய் இருபெண்ஆண் குணம்மூன்றாய்
மாறாமறை நான்காய் வரு பூதம் அவை ஐந்தாய்
ஆறார் சுவை ஏழு ஓசையோடு எட்டுத்திசை தானாய்
வேறாய் உடன் ஆனான் இடம் வீழிம் மிழலையே" *(திருஞான.1:11:2)*

என்கிறார். இதில், அனைத்துப் பொருள்களாகவும் இறைவன் காட்சிதருகிறான் என்றும் எல்லாவற்றிற்கும் முதலாகவும், ஈறாகவும், ஒன்றுமுதல் எட்டுவரை உள்ள எண்ணிக்கைப் பொருள்களாகவும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இருக்கின்றான் என்றும் குறிப்பிடுவது சிறப்புடையதாகும். இவ்வாறே மற்ற திருமுறைகளும் ஐம்பூதங்களில் இறைவன் இருக்கின்றான் என்பதைக் குறிப்பிடுகின்றன. அதற்குச் சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு.

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்" *(திருவாசகம்.8:5:15)*

"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி" *(திருவாசகம்.8:4:137-141)*

"மண்ணாகி விண்ணாகி மலையுமாகி" *(திருநாவுக்.6:94:2)*

"இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானன் ஆய் எரியும் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறு ஆகி
ஆகாசமாய் அட்ட மூர்த்தி ஆகி" *(திருநாவுக்.6:94:1)*

"நீராகி நெடுவரைகள் ஆனான் கண்டாய்
நிழலாகி நீள்விசும்பும் ஆனான் கண்டாய்
பாராகிப் பௌவம் ஏழானான் கண்டாய்" *(திருநாவுக்.6:39:7)*

"அவனே இருசுடர்தீ ஆகாசம் ஆவான்
அவனே புவிபுனல் காற்றாவான் - அவனே
இயமானனாய் அட்ட மூர்த்தியுமாய் ஞான
மயனாகி நின்றானும் வந்து" *(அற்புதத்.41)*

இவற்றிற்குரிய மூலமாய்ச் சங்க இலக்கியங்கள் ஐம்பெரும் பூதங்களின் நிலையில் இறைவன் காட்சி தருகின்றான் என்பதை,

"நிலத்துறைக் கடவுட்கு உளப்பட ஓச்சி" *(அகம்.156)*

"கொடுஞ்சுழிப் புகார்தெய்வம் நோக்கி
கடுஞ்சூள்தருவன்................." *(அகம்.110)*

"பெருங்கடல் தெய்வ நீர் நோக்கித் தெளித்து என்
திருந்திழை மென்தோள் மணந்தவன்......." *(கலி.131)*

...............வெம்மை தீர்ந்து உருக என
வளி தரும் செல்வனை வாழ்த்தவும் இயைவதோ" *(கலி.16)*

"வேள்வியில் கடவுள் அருத்தினை" *(பதிற்.70)*

"....................சினந் தணிந்து ஈக எனக்
கனை கதிர் கனலியைக் காமுறல் இயைவதோ" *(கலி.16)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"........................அடுநெய் ஆவுதி
இரண்டுளன் கமழும் நாற்றமொடு வானத்து
நிலைபெறு கடவுளும்........................" (பதிற்.21)

என்று விளக்குகின்றன. ஐம்பூதங்களின் வடிவாய்க் கடவுளின் காட்சி விளங்குகிறது என்பதைச் சங்க இலக்கியப் பனுவல்கள் குறிப்பாகக் காட்டுகின்றன. இந்த சைவ சமய மூலக் கூறினை அடிப்படையாகக் கொண்டு, பின்னால் வந்த சாத்திர நூல்கள் ஆன்ம தத்துவங்கள் இருபத்தி ஐந்தில் தன் மாத்திரை என்ற நிலையில் ஐம்பூதங்களையும் படைத்து, அவற்றில் தான் கலந்துநின்று உயிர்களுக்குரிய தனு, கரண, புவன, போகங்களை இறைவன் தருகின்றான் என்று சுட்டிக்காட்டுகின்றன. தத்துவங்களை விரிவாகச் சொல்லுகின்ற உண்மை விளக்கத்தில் மனவாசகங்கடந்தார்,

"நாற்கோணம் பூமிபுனல் நண்ணுமதி யின்பாதி
ஏற்கும்அனல் முக்கோணம் எப்போதும் - ஆர்க்கும்
அறுகோணம் கால்வட்டம் ஆகாயம் ஆன்மா
உறுகாய மாம்இவற்றால் உற்று" (உ.விளக்கம்.4)

என ஐந்து பூதங்களினுடைய வடிவங்களையும், அவற்றால் உடலின் தோற்றம் நிகழுகின்றது என்பதையும் குறிப்பிட்டுக் காட்டுகின்றார். இதனையே சிவஞான சித்தியாரும்,

"சாற்றிய பஞ்ச தன்மாத் திரைகளின் சத்தம் முன்னாத்
தோற்றும்வான் வளீதீ நீர்மண்தொடக்கியே ஒன்றுக்கு ஒன்றுஅங்கு
ஏற்றமாம் ஓசை ஆதி இருங்குணம் இசைந்து நிற்கும்
ஆற்றவே விடயம் பூதம் அங்காங்கி பாவத்து ஆமே" (சிவஞான.சி.155)

என்று கூறுகின்றது. இவ்வாறு சங்க இலக்கியங்களும் பிற சைவ சமய இலக்கியங்களும் ஐம்பூதங்களை வணக்கத்திற்கு உரியதாகச் சுட்டிக் காட்டியுள்ளன. சைவ சமய மூலக்கூறுகளைச் சைவ சித்தாந்த நூல்கள், வளர்ச்சி நிலையில் அவற்றைத் தெய்வப் படைப்பாக்கி அவை உள்ளிட்ட ஆன்ம தத்துவ, வித்யா தத்துவ, சிவ தத்துவங்களை முப்பத்தாறாகக் கொண்டு, தனு, கரண, புவன போகங்கள் தோன்றுவதற்குரிய மூலங்களாகக் குறிப்பிடுகின்றன. இந்த முப்பத்தாறு தத்துவங்கள் தான் சமய அடிப்படைத் தத்துவங்களாகும். இவற்றை ஏற்றுக்கொள்வதும், இவற்றில் சிலவற்றை ஏற்றுக்கொள்ளாமையும் எனும் நிலையில்தான் தமிழகத்தில் சமய வேறுபாடுகள் தோன்றின.

சைவ சமய வழிபாட்டில் இயற்கைப் பொருளில் கடவுள் கலந்திருக்கின்றான். ஆகையால் இயற்கைப் பொருள்களை வழிபாட்டிற்கு உரியனவாகக் கொள்வது இன்றைக்கும் நிலவுகிறது. மலையை வணங்குவது, புண்ணிய நதிகளை வணங்கி நீராடுவது, விளக்கினை ஏற்றி வழிபடுவது, மரங்களைத் தெய்வ உணர்வுகளாக்கி வழிபடும்முறை ஆகியவை இன்றைக்கும் சைவ சமய வழிபாட்டு முறையில் இடம்பெற்றுள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருக்கோயில்களில் உள்ள தலவிருட்சங்களும், திருத்தலங்களில் அமைந்துள்ள குளநீராம் தீர்த்தங்களும் வழிபடப்பெறுகின்றன. இத்தகைய வழிபாட்டுமரபு சங்க இலக்கியக் காலத்தில் இருந்துள்ளது. குறிப்பாகச் சங்க இலக்கியங்களில் மலையை வணங்குகின்ற பாங்கு அதிகம் காணப்படுகிறது. மேரு மலையைத் தெய்வமாகக் கொண்டு வழிபட்டதை,

"கடவுள் நிலைஇய கல்ஓங்கு நெடுவரை
வடதிசை எல்லை இமயமாகத்" *(பதிற்.43)*

"கடவுள் மால்வரை கண்விடுத் தன்ன
அடையா வாயில்…………………" *(சிறுபாண்.205)*

மேலும்,

"அணங்குடை நெடுங்கோட்டு……." *(புறம்.52)*

"…………………..வான்கோட்டுக்
கடவுள் ஓங்குவரைத்து ஓச்சிக்குறவர்" *(அகம்.348)*

"கறிவளர் சிலம்பில் கடவுள் பேணி" *(ஐங்.243)*

"……………………..கானவன்
அணங்கொடு நின்றது மலைமான் கொள்கயென
கடவுள் ஓங்குவரைப் பேண்மார் வேட்டெழுந்து
கிளையொடு மகிழும்…………………" *(நற்.165)*

"கடவுட் கற்சுனை……………" *(நற்.34)*

"நெடுவரைத் தெய்வம் எழுதிய
விணைமான் பாவை……." *(நற்.185)*

"மழை விளையாடும் கழை வளர் அடுக்கத்து
அணங்குடை யாளி தாக்கலின்……." *(பெரும்பாண்.257-58)*

என்னும் பாடலடிகள் உறுதி செய்கின்றன. இதிலிருந்து சங்க இலக்கியங்களில் மலையுறைத் தெய்வத்தையும், மலையையும் வழிபடுகின்ற மரபு இருந்தது பெறப்படுகின்றது.

காடுகளை வணங்குகின்ற மரபும் சங்க இலக்கியக் காலத்தில் இருந்துள்ளது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஆட்சியின் சிறப்பால் காடுகள் கோயில்களின் தலமாயின என்பதை,

"காடே கடவுள் மேன………" *(பதிற்.13)*

"கடவுட் பெயரிய கானமொடு……." *(பதிற்.88)*

எனும் பதிற்றுப்பத்துப் பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காட்டில் இருக்கின்ற மரங்களிலும் தெய்வத் தன்மை விளங்கிற்று என்பதை,

"எம்மூர் வாயில் ஒண்துறைத் தடைஇய
கடவுள் முதுமரத்து உடனுறை பழகிய" *(நற்.83)*

"நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து" *(நற்.343)*

"கடவுள் மரத்த முள்மிடைக் குடம்பை" *(அகம்.270)*

"மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப........" *(குறுந்.87)*

"தொன்றுஉறை கடவுள் சேர்ந்த பராரை
மன்றப் பெண்ணை...................." *(நற்.303)*

"எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்" *(நற்.216)*

"கடவுள் ஆலத்துத் தடவுச் சினை......" *(புறம்.199)*

என்றெல்லாம் சங்க இலக்கியப் பனுவல்கள் குறிப்பிடுகின்றன.

பூக்களிலும் இறைவனைக் கண்ட பழந்தமிழர் பண்பாடு சங்க இலக்கியங்களில் தெரியவருகின்றது.

"வருமுலை யன்ன வண்முகை உடைந்து
திருமுகம் அவிழ்ந்த தெய்வத் தாமரை" *(சிறுபாண்.72-73)*

"கடவுள் கயத்தமன்ற சுடரிதழ் தாமரை" *(மதுரைக்.710)*

"நீர்த்துடை நெடுங்கயம் தீப்பட மலர்ந்த
கடவுள் ஒண் பூ அடைதல் ஓம்பி" *(பெரும்பாண்.290-91)*

"சோலை அடுக்கத்துச் சுரும்புண விரிந்த
கடவுட் காந்தள் உள்ளும் ...." *(அகம்.152)*

"புல்லிலை எருக்க மாயினும் உடையவை
கடவுள் பேணேன் என்னா ஆங்கு" *(புறம்.106)*

என்று பூக்களில் கடவுளைக் கண்டு போற்றியுள்ளமை பெறப்படுகிறது.

காட்டினை, மரத்தினை, மலரினைக் கடவுளாகக்கண்ட சங்க இலக்கியச் சமுதாயம், தங்கள் வாழ்விடப் பகுதிகளில் கடவுளுக்கென்று தனி இடத்தையும், அவ்விடங்களில் கோயில் அமைப்பினையும் உருவாக்கிக் கொண்டமையும் அறியலாகிறது.

"இடுபலி நுவலும் அகன்தலை மன்றத்து
விழவுத் தலைக்கொண்ட பழவிரல் மூதூர்ப்" *(நற்.293)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

“மல்லல் மூதூர் மலர்பலி உணீஇய
மன்றம் போலும் புன்கண் மாலை” (நற்.73)

“கடவுள் கடிநகர் தோறும் இவனை
வலங்கொளீஇ வாவெனச் சென்றாய்.......” (கலி.84)

“சோறு வாக்கிய கொழுங் கஞ்சி
ஆறு போல் பரந் தொழுகி
ஏறு பொரச் சேறாகி
தேர் ஓடத் துகல் கெழுமி
நீராடிய களிறு போல
வேறுபட்ட வினை ஓவத்து
வெண் கோயில் மாசூட்டும்” (பட்டினப்.44-50)

இவ்வாறு கோயில் கட்டி வழிபட்ட கடவுளுக்குக் கையுறை கொடுத்தும், மந்திரம் கூறி வழிபடுதலும் சங்ககால மக்கள் செய்தமை புலனாகின்றது.

“தெய்வ மடையின் தேக்கிலை குவைஇநும்
பைதீர் கடும்பொடு பதம்மிகப் பெறுகுவிர்” (பெரும்பாண்.104-105)

“கள்ளும் கண்ணியும் கையுறையாக
நிலைக்கோட்டு வெள்ளை நால்செவிக் கிடாஅய்
நிலைத்துறை கடவுட்கு உளப் படயோச்சி” (அகம்.156)

“மந்திர மரபில் தெய்வம் பேணி” (பதிற். பதிகம்.9)

இத்தகைய கடவுள் வணக்கங்கள் சங்க இலக்கியங்களில் நிகழ்ந்தமை சுட்டிக்காட்டப் பெறுகின்றன. கடவுளை வணங்குவதால் மழை பொழியும் என்ற நம்பிக்கை பண்டைத் தமிழரிடம் இருந்ததை,

“குன்றக் குறவன் ஆர்ப்பின் எழிலி
நுண்பல் அழிதுளி பொழியும்....” (ஐங்.251)

“மலைவான் கொள்கஎன உயர்பலித் தூஉய்
மாரியான்று மழை மேக்கு உயர்க எனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்” (புறம்.143)

“................ மலைவான் கொள்க எனக்
கடவுள் ஓங்குவரை பேண்மார் வேட்டெழுந்து
கிளையொடு மகிழும் குன்ற நாடன்” (நற்.165)

என்றெல்லாம் சங்க இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

கடவுளை வணங்குவதால் பகைவரை வெல்ல முடியும் என்ற நம்பிக்கை இருந்ததை,

“பகை பெருமையின் தெய்வம் செப்ப
ஆர்இறை அஞ்சா வெருவரு கட்டூர்” (பதிற்.82)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என பதிற்றுப்பத்து குறிப்பிடுகின்றது. மேலும், கடவுளை வணங்கினால் வழித்துன்பம் நீங்கும் என்ற நம்பிக்கையும் இருந்ததை,

"கைவல் இளையர் கடவுள் பழிச்ச" (பதிற்.41)

என்னும் பதிற்றுப்பத்துப் பாடல் வரியாலும்,

"அழிவிலர் முயலும் ஆர்வ மாக்கள்
வழிபடு தெய்வம் கண்கண்டாங்கு" (நற்.9)

என்னும் நற்றிணைப் பாடல் வரிகளாலும் அறியலாம். கடவுளை வணங்கினால் அக வாழ்க்கை மேன்மையுறும் என்ற நம்பிக்கை இருந்ததைச் சங்க இலக்கியங்கள்,

"நிலை உயர் கடவுட்குக் கடம் பூண்டு தன்மாட்டுப்
பல சூழும் மனத்தோடு பைதலேன் யானாக" (கலி.46:16-17)

"வேறுபல் உருவின் கடவுட் பேணி
நறையும் விரையும் ஓச்சியும் அலவுற்று
எய்யா மையலை................. (குறிஞ்சிப்.6-8)

எனக் குறிப்பிடுகின்றன. இது அகவாழ்க்கை கைகூடக் கடவுளை வேண்டுகின்ற நம்பிக்கையை வெளிப்படுத்துவதாய் உள்ளது. அக வாழ்க்கையின் பயனாக அமைவது குழந்தைப் பேறு. அதுவும் கடவுளின் அருளால் நிகழ்கின்றது என்பதை,

"குன்றக் குறவன் கடவுட் பேணி
இரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள்" (ஐங்.257)

"கணவர் உவப்பப் புதல்வர் பயந்து
....
கடுஞ்சூல் மகளிர் பேணிக் கைதொழுது" (மதுரைக்.600-609)

என ஐங்குறுநூறும், மதுரைக்காஞ்சியும் குறிப்பிடுவதைப் பார்க்க முடிகின்றது.

இல்லறத்தில் தலைவனுடைய பொய்ச்சூள் துன்பத்தைத் தரக்கூடாது என்பதற்குப் பெண்கள் கடவுளை வேண்டினர் என்பதை,

"அணங்கல் ஓம்புமதி வாழியநீ என
கணம்கெழு கடவுட்கு உயர்ப்பலி தூஉய்
பரவினம் வருகம் சென்மோ தோழி" (நற்.358)

என்று நற்றிணை சுட்டிக்காட்டுகிறது. பெண்மையின் கற்புநலத்தின் பெருமையைக் கடவுள் உணர்ச்சியோடு போற்றுகின்ற மரபும் பண்டைத் தமிழரிடையே இருந்தமை புலனாகின்றது. இதனை,

"காமர் கடவுளும் ஆளும் கற்பின்" (பதிற்.65)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"கடவுள் சார்ந்த கற்பு" (புறம்.198)

"கடவுள் பத்தினிக் கற்கோள் வேண்டி" (பதிற்.பதிகம்.5)

என்றெல்லாம் புறப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு சங்க இலக்கியங்கள், மக்களின் வாழ்வியலோடு இணைந்துள்ள கடவுள் வழிபாட்டு மரபினையும் நம்பிக்கைகளையும் சுட்டிக்காட்டுகின்றன. இவை மூலக்கூறுகளாக அமைய, பின்னர்த் தோன்றிய சைவத் திருமுறைகளிலும், சாத்திரங்களிலும் இவை கடமையாகக் கூறப்பெற்றன. இந்நூல்கள் கடவுள் நம்பிக்கையோடு நடைபெறும் வாழ்வியல் நிகழ்ச்சிகளைத் தனித்தனியாகக் கூறாமல் அவைகளை ஒருசேர நால்வகை நெறிகளாகக் காட்டின. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாகும். இந்நான்கில் சரியையும் கிரியையும் கடவுளின் அருளைப் பெறுவதற்காகச் செய்யப்பெறுகின்ற நம்பிக்கையோடு கூடிய செயல்முறைகள் ஆகும்.

"விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினாற் பதிற்றி யாகும்
துளக்கில் நன்மலர் தொடுத்தால் தூய விண்ணேறலாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்
அளப்பில கீதம் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே"
(திருநாவுக்.4:77:3)

"வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே" (திருஞான.2:43:5)

என்று திருநாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் குறிப்பிடுகின்றனர். இவர்கள் பாடியருளிய திருமுறைகள், சங்க இலக்கியங்கள் கூறிய மூலக்கூறான வழிபாட்டு நெறியைச் சரியை, கிரியையாகக் குறிப்பிடுகின்றன. இதனையே சித்தாந்த சாத்திரமான அருணந்தியாரின் சிவஞான சித்தியார்,

"தாதமார்க்கம் சாற்றில் சங்கரன்தன் கோயில்
தலம் அலகுஇட்டு, இலகுதிரு மெழுக்கும் சாத்தி,
போதுகளும் கொய்து, பூந்தார் மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்து, புகழ்ந்து பாடி
தீதுஇல்திரு விளக்குஇட்டு, திருநந்த வனமும்
செய்து திரு வேடங்கண்டால் அடியேன் செய்வது
யாது? பணியீர் என்று பணிந்து அவர்தம் பணியும்
இயற்றுவது இச்சரியை செய்வோர் ஈசன்உலகு இருப்பர்" (சிவ.சி.271)

என்றும்

"புத்திரமார்க் கம்புகலின், புதியவிரைப் போது
புகைஒளிமஞ் சனம்அமுத முதல்கொண்டு ஐந்து
சுத்திசெய்துஆ சனம், மூர்த்தி, மூர்த்திமானாம்
சோதியையும் பாவித்துஆ வாகித்து, சுத்த
பத்தியினால் அருச்சித்து, பரவிப் போற்றிப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பரிவினொடும், எரியில் வரு காரியமும் பண்ணி,
நித்தலும்இக் கிரியையினை இயற்று வோர்கள்
நின்மலன்தன் அருகிருப்பர் நினையுங் காலே" (சிவ.சி.272)

என்றும் குறிப்பிடுவதைப் பார்க்க முடிகின்றது. இவ்வாறு நம்பிக்கைச் செயல்முறைகளைத் திருமுறைகள் தத்துவங்களாக்கிச் சைவ சமயத்திற்கு ஏற்றம் தருகின்றன.

சங்க இலக்கியப் பனுவல்கள் அச்சம் தீர்ப்பதும் வழிப்பகையைத் தீர்ப்பதும் கடவுள் நம்பிக்கையே என்று குறிப்பிட்ட மூலக் கூறினைக் கொண்டுதான் திருநாவுக்கரசராம் தனி மனிதரின் ஆன்மவீரம் வளர்ந்தது எனலாம்.

"நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" (திருநாவுக்.6:98:1)

என்பதிலிருந்து திருநாவுக்கரசரின் தெய்வீகத் துணிவைப் பார்க்க முடிகின்றது.

சேக்கிழார் பெருமான் தம்முடைய திருத்தொண்டர் புராணத்தில் ஏனாதி, எறிபத்தர் உள்ளிட்ட சிவனடியார்களின் ஆன்ம வீரத்தை, சங்க இலக்கியப் பனுவல்கள் காட்டிய கடவுள் கொள்கை உடையவர்கள் அஞ்சுவதில்லை என்ற மூலக்கூறை அடிப்படையாகக் கொண்டு அடியார்களின் வாழ்க்கையை வரலாறாகத் தருகின்றார்.

"பாய்தலும் இசைகொண்டு உய்க்கும் பாகரைக்கொண்டு சீறிக்
காய் தழல் உமிழ்கண் வேழம் திரிந்துமேல் கதுவ அச்சம்
தாய்தலை அன்பின் முன்பு நிற்குமே......" (பெரிய.3:9:24)

இறையன்பு கொண்டோர்க்கு அச்சம் ஏற்படுவதில்லை என்பதை இப்பாடலடிகள் உணர்த்துகின்றன. இதில் சங்க இலக்கிய மூலக் கூறைச் சேக்கிழார் வழிமொழிந்து செல்கின்றார் என்பது அறியப்படுகின்றது.

சங்க இலக்கியங்கள் குறிப்பிட்ட மழைப் பொழிவைத் தரும் என்ற கடவுள் நம்பிக்கை, பின்னால் எழுந்த திருவாசகத்தில், திருவெம்பாவைப் பாடலில் மழை, தெய்வத்தால் பெறப்படுகிறது என்று தத்துவமாக உறுதிப்படுத்தப்படுகிறது.

"முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையான் இட்டிடையின்
மின்னிப் பொழிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையான்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்'' (திருவாசகம்.8:7:16)

இப்பாடல், கடவுளை வேண்டினால் மழை பொழியும் என்ற சங்ககால மூலக் கொள்கையினை வழிமொழிகிறது. தெய்வவடிவே மழை அருளாக வருகின்றது என்று சத்தியின் பெருமையைச் சுட்டிக்காட்டுகிறது. சத்தியின் இன்சுரக்கும் இன்னருளே மழை என்று பெருமைப்படுத்துகிறது. அதுபோல, மலர்கள் தெய்வச் சார்புடையன என்ற சங்க இலக்கிய மூலச் செய்தியைத் திருமுறைகள், தாமரை மலர், கோங்குமலர், கொன்றைமலர், கடம்பமலர், அருகம்புல் ஆகியன கடவுளுக்குரியவை என்று வழிமொழிகின்றன எனலாம்.

''தாமரையான் தன்தலையைச் சாய்த்தான் கண்டாய்

பூமலரான் ஏத்தும் புனிதம் கண்டாய்'' (திருநாவுக்.6:39:6)

''சலந்துக்க சென்னிச் சடையான் கண்டாய்
தாமரையான் செங்கண்மால் தானே கண்டாய்'' (திருநாவுக்.6:23:3)

''தக்கனது பெருவேள்வி தகர்த்தானாகித்
தாரையான் நான்முகனும் தானே ஆகி'' (திருநாவுக்.6:68:5)

''கொன்றைசேர் சடையான் கொள்ளம் பூதூர்'' (திருஞான.3:264:11)

''வண்ட ணைந்தன வன்னியும் கொன்றையும்
கொண்டணிந்த சடைமுடிக் கூத்தனார்'' (திருநாவுக்.5:14:5)

''வன்னி கொன்றை எருக்கணிந்தான் மலை'' (திருநாவுக்.5:76:10)

''கோங்குமலர்க் கொன்றையந்தார்க் கண்ணியான் காண்''
(திருநாவுக்.6:52:10)

''தாளி அறுகினர் சந்தனச் சாந்தினர்'' (திருவாசகம்.8:17:8)

''தாளி அறுகாம் உவந்த தார்'' (திருவாசகம்.8:19:9)

என்ற பாடலடிகள் அவற்றிற்குரிய சான்றுகள் ஆகின்றன. அகவாழ்வியலில் கடவுள் இடம்பெற்ற சங்க இலக்கிய மூலப்பகுதியைப் பின்னர் வந்த திருமுறைகளில் இடம்பெற்ற அகத்துறைப் பாடல்களும் வழிமொழிந்து சிறப்பிக்கின்றன. அதுமட்டுமல்லாது, அகத்துறைக்கே உரிய திருக்கோவையார் என்ற தனி ஒருநூல் தோன்றுவதற்கே சங்க இலக்கிய மூலக் கூறுதான் அடிப்படையாயிற்று எனலாம். குழந்தைப்பேறு இறைவன் அருளால் நிகழ்வது என்பதைப் பெரியபுராணத்தில் கண்ணப்பர், சிறுதொண்டர் மகன் உள்ளிட்ட அடியார்களின் பிறவியை இறையருளாகத் திருமுறையாளர்கள் பாடியிருப்பது சங்க இலக்கிய மூலக் கூறின் வளர்ச்சியாகும். இச்செய்தி,

''அயிலுடைத் தடக்கை வென்றி
அண்ணலார் அருளினாரே'' (பெரிய.12:10:12)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"குழைக் கலையும் வடி
காதில் கூத்தனார் அருளாலே
....
பிழைக்கும் நெறி தமக்கு உதவப்
பெண் கொடியைப் பெற்று எடுத்தார்" (பெரிய.12:18:11)

"நீராரும் சடைமுடியார் அருளினால் நிறைதவத்துச்
சீராளதேவர் என்னும் திருமைந்தர் அவதரித்தார்" (பெரிய.12:36:17)

என்று பதிவாகியிருக்கின்றது. இல்லற வாழ்வில் மக்களைப் பெறுதல் கடவுளின் துணையால் என்ற நம்பிக்கையைச் சங்க இலக்கிய மூலக்கூறு காட்டிடத் திருத்தொண்டர் புராணமாம் பெரியபுராணம் வழிமொழிந் திருக்கிறது என்பது உண்மையாகும். எனவே, கடவுள் நம்பிக்கைக்கு உரிய நிலையில் சங்க இலக்கிய காலச் சைவ சமய வாழ்வியல் வழிபாட்டு மூலக் கூறுகளைப் பின்னர் தோன்றிய திருமுறைகள், சாத்திரங்கள் ஏற்று விரிவுதந்தன எனலாம்.

பெண்தெய்வ வழிபாடு: சைவ சமயத்தில் உருவ வழிபாடு அடிப்படையானது. சைவ சமயத்தின் மெய்ப் பொருளாம் பரம்பொருளுக்கு அருவத் திருமேனி, உருவத் திருமேனி, அருவுருவத் திருமேனி என்று மூன்றுவகைத் திருமேனிகள் கொள்ளப்பெறும். இவ்வாறு மூவகையாகக் கடவுளுக்குரிய வடிவத்தைச் சைவ சமயம் கைக்கொள்ளும்.

"அருவமும் உருவாரூபமும் ஆனதும் அன்றி நின்ற
உருவமும் மூன்றும் சொன்ன ஒருவனுக்கு உள்ளவாமே"
(சிவஞான.சுப.58)

என்று இறைவனுக்குரிய மூன்று வடிவங்களைச்சைவ சமயம் மேற்கொள்ளும். இதில் உருவத் திருமேனி உயிர்களுக்கு அருள் தருவதற்காக மேற்கொள்ளப் பெற்ற நிலையாகும். இது இன்றியமையாததாகக் கொள்ளப்பெறும். இறைவனுடைய தொழிலுக்கு இவ்வுருவத் திருமேனி இன்றியமையாதது எனக் கொள்வதும் உண்டு. இவ்வுருவத் திருமேனியைப் பற்றிச் சைவ சித்தாந்தம், பெண் உருவோடு கூடிய மாதொருபாக வடிவத்தைத்தான் அழுத்தமாகக் கூறுகிறது.

"படைப்பு ஆதித் தொழிலும் பத்தர்க்கு அருளும் பாவனையும் நூலும்
இடப்பாகம் மாதராளோடு இயைந்து உயிர்க்கு இன்பம் என்றும்
அடைப்பானாம் அதுவும் முத்தி அளித்திடும் யோகும் பாசம்
துடைப்பானாம் தொழிலும் மேனி தொடக்கானேல் சொல் ஒணாதே"
(சிவஞான.சுப.74)

என்னும் இப்பாடலின் பொருள், படைப்பு முதலாகிய தொழிலும் அன்பர்களுக்கு வழங்கும் அருளும் வேத ஆகம நூல்களை உபதேசித்தலும், உமாதேவியோடு புணர்ந்து உயிர்களுக்குப் போகத்தைக் கொடுக்கும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செயலும், முத்தியைக் கொடுக்கும் சிவயோகமும், பாசத்தை நீக்கும் செயலும் ஆகிய இவையெல்லாம் உருவத் திருமேனி கொள்ளவில்லை என்றால் உண்டென்று சொல்ல முடியாது என்பதாகும். இப்பாடல் இறைவனின் உருவத் திருமேனியின் இன்றியமையாமையைக் கூறுவதோடு, இறைவனின் உருவத் திருமேனியில் உமையவளோடு இணைந்திருக்கின்ற உருவத் திருமேனியைக் குறிப்பிடுவதைத் தனித் தன்மையாக அறியலாம். எனவே, அம்மையோடு கூடிய இறைவனின் திருமேனிதான் சைவ சமயத்தின் தலைமையான மேனியாகும் என்பது பெறப்படும். பெண்ணோடு கூடிய இந்த வடிவத்திற்கு மூலமாக அமைவது சங்க இலக்கியங்களில் காணப்படுகின்ற பெண் தெய்வ வழிபாட்டின் குறிப்புகளாகும்.

சங்க இலக்கியங்களில் நீலமணிமிடற்றன், செவ்வேள், அணங்கு, கொல்லிப்பாவை, கொற்றவை, கூற்றுவன், திருமால், பிரமன், இந்திரன் ஆகிய குறிப்பிடத்தக்கத் தெய்வங்களின் உருவங்கள் இடம்பெற்றுள்ளன. அதில் செவ்வேளும், அணங்கும் கொல்லிப்பாவையும் மிகப் பல இடங்களில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். பண்டைக் காலத்திலேயே குடும்ப நிலையில் தெய்வத்தை நினைக்கின்ற பாங்கு இருந்தமையை அறியமுடிகின்றது. செவ்வேளை சிவனின் மகன் என்பதோடு அணங்கு, கொற்றவை, கொல்லிப்பாவை ஆகிய தெய்வங்கள் பெண்மைக்குரிய நிலையிலும், கன்னிக்குரிய நிலையிலும், தாய்மைக்குரிய நிலையிலும் குறியீடுகளாக இருப்பதை அறியமுடிகின்றது.

அணங்கு தெய்வ வழிபாடு பல கோணங்களில் சங்ககாலத்தில் நடத்தப் பெற்றுள்ளது. அணங்கு பல பொருள்நிலையில் கையாளப்பெற்றாலும், தீண்டி வருத்தும் தெய்வமாக அதாவது தாக்கணங்காகச் சங்க இலக்கியங்கள் பெரிதும் பேசுகின்றன. இத் தாக்கணங்கு தெய்வமகளிராக வருணிக்கப் படுகின்றது.

"அணங்கு வீழ்அன்ன பூந்தொடி மகளிர்" *(மதுரைக்.446)*

"தாக்கணங்காவது எவன்கொல் அன்னாய்" *(ஐங்.23)*

"மூப்புடை முதுபதி தாக்கணங்குடைய
காப்பும் பூண்டிசின் கடையும் போகலை" *(அகம்.7)*

"கண்டார்க்குத் தாக்கணங்கு இக்காரிகை காண்மின்" *(பரி.11)*

"அமிர்துஅன நோக்கத் தணங்கொருத்தி……." *(பரி.12)*

"அணங்கென உருத்த கணங்கணி ஆகத்து
ஈர்க்கிடை போகா ஏரிள வனமுலை" *(பொருநர்.35-36)*

"மணம் புணர்ந்து ஓங்கிய அணங்குடை நல்இல்" *(மதுரைக்.578)*

"இளையளாயினும் ஆரணங்கினளே" *(ஐங்.256)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"கரும்புடைத் தோளும் உடையவால் அணங்கே" (நற்.39)

"அணங்காயினாள் தான் பிறந்த ஊர்க்கே" (புறம்.349)

"அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்" (பட்டினப்.298)

என்றெல்லாம் அணங்கு பற்றிய தொடர்கள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. அணங்கு ஒரு பெண்ணாக, அச்சம் தரும் பெண் தெய்வ வடிவாகச் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளமை அறியத்தக்கனவாம். அடுத்துப் பாவை என்ற சொல் சங்க இலக்கியத்தில் பல இடங்களில் இடம்பெற்றுப் பெண்தெய்வ வழிபாட்டை உறுதிப்படுத்துகிறது. பாவை, கொல்லிப் பாவையாக, மணலில் செய்யும் விளையாட்டுப் பாவையாக, மரம் இரும்பு இவற்றால் செய்த பாவையாக, சித்திரப் பாவையாக, வெறிகொள் பாவையாக சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது. வல்வில் ஓரியின் கொல்லிமலையில் விளங்கும் பெண் தெய்வத்தைக் கொல்லிப் பாவை என்று சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது.

"வல்வில் ஓரி கொல்லிக் குடவரைப்
பாவையின்............................" (குறுந்.100)

"..................கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதிது இயல்பாவை" (நற்.192)

"கொல்லித் தெய்வம் காக்கும்............
..............................குடவரை" (குறுந்.201)

என்று கொல்லிப்பாவை, பெண் தெய்வமாகச் சங்க இலக்கியங்களில் பலவாறாகப் பேசப் பெற்றுள்ளது. பாவையாகிய பெண் தெயவத்தை வலியுறுத்தும்,

"பாவையன்ன வனப்பினள் இவள் என" (நற்.301)

"பாவையன்ன பலராய் வனப்பின்" (நற்.319)

"பாவையன்ன என் ஆய்தொடி மடந்தை" (ஐங்.389)

"..........................கொல்லிக்
கருங்கண் தெய்வம் குடவரை எழுதிய
நல்லியல் பாவையன்ன..." (குறுந்.89)

"நிலைபெறு கடவுள் ஆக்கிய
பலர்புகழ் பாவையன்ன நின் நலனே" (அகம்.209)

"பாவையன்ன குறுந்தொடி மகளிர்" (புறம்.251)

"பாவையன்ன மகளிர் நாப்பண்" (பதிற்.88)

எனும் சங்க இலக்கியத் தொடர்களால் கடவுள் நிலைக்குரிய கொல்லிப்பாவை பெண் தெய்வமாகக் கருதப்பெற்று, பெண்மையின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தோற்றத்திற்கு உவமையாக்கப் பெற்றிருப்பதை அறியலாம். எனவே, சங்ககாலத்தில் பெண் தெய்வத்திற்குச் சிறப்பிடம் கொடுத்திருப்பது அறியலாகிறது. மேலும், நீர்த்துறையில் விளங்கிய பாவை, பெண்மகளுக்கு உவமையாக்கப் பெற்றிருக்கின்ற செய்தியை அகநானூற்றுப் பாடல் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"கடல்கெழு செல்வி கரை நின்றாங்கு
நீயே கானல் ஒழிய யானே
வெறிகொள் பாவையின் பொலிந்த என்அணி துறந்து
ஆடுமகள் போலப் பெயர்தல் ஆற்றேன்" *(அகம்.370)*

என்னும் இப்பாடல், கடல்கெழு செல்வியை நெய்தல் நிலத்தில் உறைகின்ற பெண் தெய்வமாகக் குறிப்பிடுகிறது. இப்பாடலில் வெறிகொள் பாவை என்ற தொடர், பாவைப் பெண் தெய்வத்தைக் குறிப்பதுடன் பெண் தெய்வத்திற்கு முக்கியத்துவம் தருவதையும் பார்க்க முடிகின்றது.

"..........................ஓங்கு புகழ்க்
கானமர் செல்வி அருளனின் வெண்கால்
பல்படைப் புரவி எய்திய தொல்இசை
நுணங்கு நுண் பனுவல் புலவன் பாடிய
..................................." *(அகம்.345)*

முதல் பாடலில் நீர்நிலைப் பெண்தெய்வம் குறிக்கப்பெற்றது போல இப்பாடலில் காட்டில் வாழும் பெண் தெய்வம் குறிக்கப்படுகின்றது. இத் தெய்வத்தின் அருளினாலே குதிரைகளைப் பெற்ற புலவனால் பாடப்பெற்ற குன்றம் என்பது குறிக்கப்படுகின்றது. இதில் கானுறைத் தெய்வத்தின் அருள் கூறப்பெற்றுள்ளது.

"பாம்புறை மருதின் ஓங்கு சினை நீழல்
பலிபெறு வியன்களம் மலிய ஏற்றிக்
கணங்கொள் சுற்றமொடு கைபுணர்ந்து ஆடும்
துணங்கைஅம் பூதம் துயிலுடுத்தவை போல" (பெரும்பாண்.232-235)

இப்பகுதியில் பாம்பு உறையும் மருதம் என்பதால் நிலம் குறிக்கப்பெற்று, அங்கு சிலம்பி நூல் போல ஆடை உடுத்தப்பெற்ற துணங்கையாம் பெண் தெய்வம் குறிக்கப் பெற்றிருக்கிறது.

"நிறம்படு குருதி புறம்படின் அல்லது
மடைஎதிர் கொள்ளா அஞ்சுவரு மரபில்
கடவுள் அயிரையின் நிலைஇக்" *(பதிற்.79)*

இப்பாடலில், அயிரை மலையில் வாழுகின்ற அச்சத்தைத் தரும் பெண் தெய்வமான கொற்றவை, குருதிப் பலியைத்தான் ஏற்கும் என்று கூறப்பட்டுள்ளது. எனவே, மலையில் பெண் தெய்வம் வாழும் என்பது இப்பகுதியால் பெறப்படுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"தாழியும் மலர் பல அணியா கேழ்கொள
காழ்புனைந்து இயற்றிய வனப்பமை நோன்சுவர்ப்
பாவையும் பலியெனப் பெறா..........." (அகம்.369)

பூந்தொட்டிகள் பூக்களைப் பெறவில்லை, சுவர்களில் எழுதப்பெற்ற பெண் தெய்வமாம் பாவையும் பலியைப் பெறவில்லை என்பது மேற்கண்ட பாடலடிகள் தரும் பொருளாகும். எனவே, சுவர்களில் பெண் தெய்வங்கள் எழுதப்பெற்று வணங்கப்பெற்றமை தெரியவருகிறது.

"நான்மறை முதுநூல் முக்கண் செல்வன்
ஆலமுற்றம் கவின்பெறத் தைஇய
பொய்கை சூழ்ந்த பொழில்மனை மகளிர்
கைசெய் பாவைத் துறை..........." (அகம்.181)

நான்கு வேதங்களை அருளிய முக்கட்செல்வனாம் சிவபெருமான் திகழும் ஆலமுற்றம் என்ற இடத்தில் பொய்கை சூழ்ந்த பொழிலில் சிறுமிகள் கையினால் செய்த பாவை வடிவங்கள் உள்ளன என்பது இப்பாடலடிகள் தரும் செய்தியாகும். எனவே, பெண் தெய்வமான பாவை, கையினால் பொம்மையாகச் செயப்பெற்றது என்பதும் பெறப்படுகிறது.

"மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர் கொற்றவை சிறுவ" (திருமுருகு.256-257)

முருகன், மலைமகளாம் உமையவள், வீரத் தெய்வமாம் கொற்றவை பெற்ற சிறுவன் என்று இப்பாடல் குறிப்பிடுகின்றது. பெண் தெய்வம் தாய்த் தெய்வமாகக் கொள்ளப்பெற்றமை இதனால் புலனாகின்றது.

பைஞ்சாய்ப் பாவை (ஐங்.155), வண்டல் பாவை (ஐங்.124), மடநல்லார் மணலில் எழுதிய பாவை (பரி.7), பொன்செய் பாவை (அகம்.127), தாதுசெய் பாவை (அகம்.392) என்றெல்லாம் பெண் தெய்வமாம் பாவை வடிவங்கள் பொன்னாலும், மண்ணாலும், கோரைப் புல்லாலும் உருவாக்கப் பெற்றுக் கைக்கொள்ளப் பெற்றன என்பதும் சங்கப் பனுவல்களால் தெரியவருகிறது. இத்தகைய பெண் தெய்வம், சைவத்தின் மெய்ப் பொருளாகிய சிவபெருமானோடு பிரியாது இருக்கும் என்பதைப் புறநானூற்றுக் கடவுள் வாழ்த்துப் பாடல்,

"பெண்ணுரு ஒருதிரு னாகின் றவ்வுருத்
தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்" (புறம்.1)

என்று குறிப்பிடுகிறது. இதனால் பெண்ணுருவில் தெய்வத்தைக் காண்பதும், அப்பெண் தெய்வம் மெய்ப்பொருளோடு இணைந்து இருப்பதை அறிவதும், வணங்குவதுமான மரபு சங்க காலத்தில் இருந்துள்ளது என்பதை அறியமுடிகின்றது. இத்தெய்வம் உமையவளாகவும், மலைமகளாகவும் சங்க இலக்கியங்களில் சில இடங்களில் குறிக்கப்பெறுகிறாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"இமயவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந்து உயர்மலை இருந்தனனாக" *(கலி.38)*

"மணிமிடற்று அண்ணற்கு மாசிலோள் தந்த" *(பரி.8:127)*

என்னும் பாடலடிகள் அதற்குரிய சான்றுகளாகும். இவ்வாறு சங்க இலக்கியப் பனுவல்கள் குறிப்பிடும் பெண் தெய்வ அமைப்பாகிய மூலக் கூறு பின்னால் தோன்றிய திருமுறைகளிலும், சாத்திரங்களிலும் சிவபெருமானோடு உடன் உறையும் உமையவளாகப் போற்றப்பெற்றது என்பது உண்மை.

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதும்ஓர் குறைவில்லை
கண்ணில் நல்லஃதுறும் கழுமலர் வளநகர்
பெண்ணின்நல்லாளொடும்பெருந்தகைஇருந்ததே" *(திருஞான.3:282:1)*

"ஒருத்தனே உமைகணவா உலகமூர்த்தீ" *(திருநாவுக்.6:61:5)*

"தத்துவன்காண் மலைமங்கை பங்கா என்பார்" *(திருநாவுக்.6:64:4)*

"உம்ப ராளியை உமையவள் கோனை" *(சுந்தரர்.569)*

"பாதி ஓர் பெண்ணை வைத்தாய்; படரும் சடைக் கங்கை வைத்தாய்"
(சுந்தரர்.201)

"தாதாடு பூஞ்சோலைத் தத்தாய் நமையாளும்
மாதாடும் பாகத்தன் வாழ்பதி என்?...." *(திருவாசகம்.8:19:3)*

"மாதிவர் பாகன் மறைபயின்ற வாசகன்
மாமலர் மேயசோதி……………" *(திருவாசகம்.8:43:1)*

"வாயும் மனமும் கடந்த மனோன்மணி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரசனுக்குத்
தாயும் மகளும் நல்தாரமும் ஆமே" *(திரு.10:4:8:24)*

"உறைந்தருளிப் பணிகின்றார் உமைபாகர் அருள்பெற்றுச்" *(பெரிய.3032)*

"உற்ற அன்பின் செந்நெறியால்
உமையாள் கணவன் திருவருளால்
பெற்ற சிவலோகத்து அமர்ந்து
……………………………." *(பெரிய.4098)*

என்பன உள்ளிட்ட திருமுறைத் தொடர்களில் சங்க இலக்கியம் குறிப்பிட்ட மூலக் கூறான பெண் தெய்வம், சிவபெருமான் மனைவியாகக் குறிப்பிடப் பெற்றும் உமையவளாக வணங்கப்பெற்றும் இருப்பதை அறியலாம். இதனையே சித்தாந்த சாத்திரங்களும் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"அம்மை அப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்றறிக
அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பார்........." (திருக்களிறு.1)

என்பது திருக்களிற்றுப்படியாரின் முதல் பாடற் பகுதியாகும். அம்மையாகிய சத்தியும் அப்பராகிய சிவனும் உலகத்திற்குக் காரணம் ஆவார்கள். அம்மையப்பராகிய சிவபெருமானே சத்தியின் வழியாக அருள் தந்து முத்தியைக் கொடுப்பார் என்று குறிப்பிட்டுப் பெண் தெய்வத்தை மெய்ப் பொருளின் சத்தியாக இச்சித்தாந்த சாத்திரம் குறிப்பிடுகிறது.

"போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கமன்றி நிற்குமன்றே.........." (சிவஞான.3:2)

என்பது சிவஞான போதத்தின் இரண்டாம் சூத்திரமாகும். இதன் பொருள் நல்வினை தீவினையாகிய இரண்டு வினைகளால் உயிர்கள் இறப்பு, பிறப்புக்களை அனுபவித்திடச் செய்கின்ற சத்தியிலிருந்து (பெண் தெய்வம்) நீக்கமின்றி இறைவன் இருப்பான் என்பதாகும். எனவே, அருளை வழங்குகின்ற சத்தியிடத்திருந்து சிவபெருமான் பிறிதில்லாது இருப்பான் என்பது பெறப்படுகிறது.

"சத்தியும் சிவமும் ஆய தன்மைஇவ் உலகம் எல்லாம்
ஒத்து ஒவ்வா ஆணும் பெண்ணும் உணர் குணகுணியுமாகி
வைத்தனன் அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம்
இத்தையும் அறியார் பீட லிங்கத்தின் இயல்பும் ஓரார்" (சிவஞான.சி.89)

என்னும் பாடல் வரிகள், பெண் தெய்வம் சிவனாம் மெய்ப்பொருளோடு கலந்த தத்துவ நிலையைக் குறிக்கின்றன. இறைவன் சத்தியும் சிவனும் எனத் தனக்குள் இருவேறுவகைப்பட்ட தன்மைகள் உடையவனாய் இருப்பதால் இவ்வுலகம் எல்லாம் வடிவத்தால் ஒத்தும், இருவகைப்பட்ட ஆணும் பெண்ணுமாகவும், குணமும் குணமுடைய பொருளாகவும் திகழுகின்றன. உலக வாழ்வு எல்லாம் சிவசத்தி கூடினதால் வந்தவையாகும். இதனை அறியாதவர்கள் பீடமும் லிங்கமும் சத்தியும் சிவனுமாய் நிற்பதை அறியாதவர்கள் ஆவார்கள். சாத்திர நூலாகிய திருவருட்பயன்,

"தன்நிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்" (திருவருட்.2)

என்று சிவபெருமான் சத்தியாகிய பெண் தெய்வத்தோடு பிரிவின்றி நிற்கின்றான் என்பதைக் குறிப்பிடுகிறது. இவ்வாறு பெண் தெய்வ வழிபாடு சிறப்பாக இடம்பெற்றுச் சைவ சமயக் கொள்கையாக மலர்ந்து, பெண் தெய்வம் இறைவனோடு உடன் உறையும் பெருமைத்தாகி, உயிர்களுக்கு அருள் வழங்குகின்ற செய்திகளைச் சங்க இலக்கியங்கள் மூலக் கூறுகளாகவும், பின்வந்த திருமுறை, சாத்திரங்கள் இதனை விரித்துத் தத்துவமாகவும் தந்துள்ளன எனலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செவ்வேள் வழிபாடு

தொல்காப்பியத்தில் சேயோன் மேய மைவரை உலகமும் என்று குறிஞ்சி நிலத்திற்குச் சேயோன் கடவுளாகக் கூறப்பெற்றுள்ளான். சேயோன் என்ற சொல்லுக்குத் தேவநேயப் பாவாணர் தன்னுடைய தமிழர் மதம் என்ற நூலில், குறிஞ்சிநில மக்கள் தம் தெய்வத்தைத் தீயின் கூறாகக் கொண்டு சேந்தன் (சிவந்தவன்) என்று பெயரிட்டு வணங்கினர் என்று குறிப்பிடுகின்றார். சேயோன், சேய் என்பன இலக்கிய வழக்கு.

"செய்யன், சிவந்த ஆடையன்,......." *(திருமுருகு.206)*

"பவழத்தன்ன மேனி" *(குறுந். - கடவுள்வாழ்த்து)*

"....... பவழக்கொடி நிறம் கொள்ளும்
உருவம்................................" *(பரி.19)*

என்னும் பாடல்களில் சிவந்தவன் என்ற பொருள் தரப்பெறுகிறது. வேட்டைத் தொழிலால் குறவர் மறம் சிறந்து இருந்ததினால் தம் தெய்வத்தையும் மறவனாகக் கருதி, அதற்கேற்றவாறு அவனை முருகன் என்றனர் என்று குறிப்பிடுவார் பாவாணர். மேலும் அவர், முருகன் என்பதுபோல் குமரன் என்னும் பெயரும் இளைஞன் என்னும் பொருளதே. கடம்ப மலர் அணிவித்ததால் கடம்பன், வேலைப் படையாக்கியதால் வேலன் என்றும் முருகன் உருவம் பொறித்த தூண்கள் அம்பலங்களில் நிறுத்தப்பட்டதால் கந்தன் என்றும் பெயர்க் காரணங்களைக் குறிப்பிடுவார் (ப.30). சிவன் என்ற சொல்லும் சிவந்தவன் என்ற பொருளைத் தரும். சிவந்தவன் என்ற பொருளில் சேய் என்ற சொல்லும், சிவன் என்ற சொல்லும் அமைந்திருப்பதால் சேயோன் என்று குறிப்பிடுவது முருகனையும் சிவனையும் ஒத்தநிலையில் வைத்துப் பார்த்தல் எனக் கொள்ளலாம். எனவேதான் இன்றைய ஆய்வாளர்கள் சிவனும் சேயோனும் ஒருவனே என்று குறிப்பிடுவதும் உண்டு. இக்கருத்தை முனைவர் சௌந்தரபாண்டியன் தம் தமிழர் சிந்தனை சமயக் கோட்பாடுகள் என்ற நூலில் வலியுறுத்துகிறார். சிவனும் முருகனும் ஒன்றே என்பதை அதாவது, முருகன் சிவபெருமானிடத்திலிருந்து வேறுபட்டவன் அல்லன் என்பதைக் கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாசாரியார் குறிப்பிடுவார்.

"ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதகம் அன்றால் நம்போல் பிரிவிலன் யாண்டும் என்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருளவல்லான்"

(க.புராணம்.1070)

இப்பாடல், சரவணப் பொய்கையில் விளையாடிய முருகனின் ஆறு உருவங்களை ஒன்றாக்கிய உமையவளாம் சத்தியை நோக்கிச் சிவபெருமான் கூறுவது போல கச்சியப்பர் பாடியது. இப்பாடலில் அவனும் யாமும் பேதகம் அன்றால் என்ற தொடர், சிவனும் முருகனும் ஒன்று என்பதைச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சுட்டிக் காட்டுவதாகும். அதுபோல பிறிதோர் இடத்தில் அதாவது வீரவாகு சூரபதுமனிடத்தில் கூறுகின்ற தன்னுரையில்,

"ஈசனே அவன் ஆடலால் மதலை ஆயினன் காண்
ஆசிலா அவன் அறுமுகத்து உண்மையால் அறிநீ
பேசில் ஆங்கவன் பரனோடு பேதகன் அல்லன்
……………………………………………" (க.புராணம்.4321)

என்று கூறுவதாகக் கச்சியப்பர் குறிப்பிடுவார். எனவே, சைவ சமய இலக்கியங்களின்படி சிவன் வேறு முருகன் வேறல்ல. சிவனுடைய சத்திதான் முருகனாகக் காட்சியளிக்கிறது என்பது பெறப்படுகிறது.

சங்க இலக்கியங்களில் மற்ற தெய்வங்களைவிட சேயோனாகிய முருகப் பெருமானைப் பற்றியே நூற்றுக்கும் மேலான பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இதில் முருகனின் பிறப்பு, வெறியாட்டுக் களத்தில் முருக தெய்வம், சூரனைக் கொன்ற முருகன் எனப் பல வகைகளில் முருகனைப் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

சிவனின் மகன்

சங்க இலக்கியங்களில் பெண் தெய்வ வழிபாட்டின் மூலம் உமையவள் எவ்வாறு சிவபெருமானின் துணைவியாக இடம்பெற்றாளோ அது போல முருகனாகிய சேயோன் சிவபெருமானின் மகனாக இடம்பெற்றுள்ளான்.

"ஆலமர் செல்வன் அணிசால் மகன் விழாக்
கால்கோள்………………………………" *(கலி.83)*

"ஆல்கெழு கடவுள் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே………………..." *(திருமுருகு.256)*

"உமையொடு புணர்ந்த காம வதுவையுள்
அமையாப் புணர்ச்சி………………." *(பரி.5)*

"மறுமிடற்று அண்ணற்கு மாசிலோள் தந்த
நெறிநீர் அருவி அசும்புறு செல்வ" *(பரி.8)*

என்றெல்லாம் முருகன் சிவபெருமானின் மகனாகக் குறிக்கப்பெறுகிறான். இந்தச் சங்க இலக்கிய மூலக் கூறினைக் கொண்டு பின்னால் வந்த திருமுறைகளும் முருகனை சிவபெருமானின் மகனாகவே குறிப்பிடுகின்றன.

திருஞானசம்பந்தப் பெருமான் தனது இரண்டாம் திருமுறையில் திருச்சக்கர மாற்றுப் பதிகத்தில் விளங்கிய சீர் பிரமன் ஊர் என்று தொடங்கும் பாடலில், "இளங்குமரன் தனைப் பெற்று இமயவர்தம் - பகையெறிவித்த இறைவன் ஊர்" என்று சிவபெருமானை முருகனைப் பெற்றவன் என்று கூறுகின்றார். திருநாவுக்கரசர் தன்னுடைய நான்காம் திருமுறையில் தனித்திரு நேரிசை என்னும் பதிகத்தில், உடம்பெனும் மனையகத்தில் என்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தொடங்கும் பாடலில், "கடம்பமர் காளைத் தாதை கழலடி காணலாமே" என்று கூறுகின்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் திருவாரூர்ப் பதிகத்தில் "ஒட்டி ஆட்கொண்டு" என்று தொடங்கும் பாடலில், "காதலால் கடல்சூர் தணிந்திட்ட செட்டி அப்பனைச் செல்வ ஆரூரனை மறக்கலுமாமே" என்று கடலில் நின்ற மாமரத்தை வென்ற செட்டியாம் முருகனுக்கு அப்பனாகிய திருவாரூரானை மறக்கலுமாமே என்று பாடியிருக்கிறார்.

"எயிலுடைப் புறங்கள் செற்ற எந்தையார் மைந்தரான
மயிலுடைக் கொற்ற ஊர்தி வரையுரம் கிழித்த திண்மை
அயிலுடைத் தடக்கை வென்றி அண்ணலார் அருளினாலே"

(பெரிய.10:12)

என்ற திருமுறைப் பகுதிகள் முருகனைச் சிவபெருமானின் மைந்தனாகச் சங்க இலக்கிய மூலக் கூறின்படி எடுத்துரைக்கின்றன எனலாம்.

போர்த்திறம்

முருகன் சூரனையும் அவன் தம்பி யானை முகனையும் வென்ற செய்திகள் சங்க இலக்கியங்களில் அதிகமாக இடம்பெற்றுள்ளன.

"சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்
சினம்மிகு முருகன் தண்பரங் குன்றத்து" *(அகம்.59)*

"மாகடல் கலக்குற மாகொன்ற மடக்காப்போர்
வேல் வல்லான் நிறனே போல்………………" *(கலி.104)*

"சூர்மருங் கறுத்த சுடர்ப் படையோயே" *(பரி.14)*

"சூர்நவை முருகன் சுற்றத்தன்ன…." *(புறம்.23)*

"சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள்………………" *(பதிற்.11)*

"சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்" *(திருமுருகு.46)*

"வெண்டிரைப் பரப்பில் கடுஞ்சூர் கொன்ற
பைம்பூண் சேஎய்………………………." *(பெரும்பாண்.457-458)*

என்றெல்லாம் முருகனின் போர்த்திறம் சங்க இலக்கியங்களில் வெளிப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இவ்வரலாறு மூலக் கூறாக அமைந்து பின்னால் பனிரெண்டாம் நூற்றாண்டில் கந்தபுராண காப்பியம் தோன்றுவதற்கு அடித்தளமிட்டது எனலாம். பின்னால் வந்த முருகனைப் போற்றிக் கூறும் அனைத்து நூல்களிலும் சங்க இலக்கியத்தில் இடம்பெற்ற சூரனை வதைத்த செய்தி இடம்பெற்றுள்ளது. அருணகிரிநாதர் பாடல்களில் இதனை விரிவாகக் காணலாம்.

"சூர்மா மடியத் தொடு வேலவனே" *(க.அனுபூதி.10)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"கொலை காட்டு அவுணர் கெட மாச்சலதி
குளமாய்ச் சுவற முது சூதம்
குறிபோய்ப் பிளவுபட வேல் கதுவும்
பொதிவேற் படையை விடுவோனே" (திருப்புகழ்.855)

"வாரிதனில் புதிய மாவாய்க் கிடந்த நெடுஞ்
சூர் உடலம் கீண்ட சுடர் வேலோய்" (திரு.கந்தர்கலி.100)

"மாயச்சூர் அன்று அறுத்த மைந்தன்" (திருஞான.2:62:1)

"சூரட்ட வேலவன் தாதை......." (திருநாவுக்.4:6:5)

"............கடல்சூர் தடிந்திட்ட
..........................சேந்தர்" (சுந்தரர்.7.660)

இவ்வாறெல்லாம் முருகப்பெருமான் சூரனுடன் போர் செய்து பெற்ற வெற்றியைச் சங்க இலக்கிய மூலக்கூறு குறிப்பிடப் பின்னால் வந்த அருளாளர்கள் அப்போர்ச் செய்தியினைப் போற்றிப் பாடியுள்ளார்கள்.

திருமுருகன் திருமணம்

அடுத்ததாக முருகக் கடவுளின் திருமணம் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. முருகனுடனான தெய்வயானையின் திருமணத்தை, "மருவில் கற்பின் வாள்நுதல் கணவன்" (திருமுருகு.6) என்றும் வள்ளியின் திருமணத்தை, "குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின் மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே" (திருமுருகு.101-102) என்றும் குறிப்பிடுகின்றது.

வள்ளியின் திருமணத்தை, "முருகு புணர்ந்து இயன்ற வள்ளிபோல..." (82) என்று நற்றிணையும், வள்ளியின் திருமணத்தை, "நறுமலர் வள்ளிப் பூநயந் தோயே" (14) என்று பரிபாடலும் குறிப்பிடுகின்றன. பரிபாடலில் வள்ளி தெய்வயானை ஊடல்களும் தீர்வுகளும் புராணக் கதைபோல் சொல்லப்பெறுகின்றன. சங்கப் பனுவல்கள் தந்த மூலக்கூறுகளை அடுத்துத் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இரண்டாம் திருமுறையில் திருவரிசிற்கரைப்புத்தூர் திருப்பதிகத்தில் "வள்ளி முலைதோய் குமரன்....." (2:63:6) என்ற செய்தி இடம்பெற்றுள்ளது. திருநாவுக்கரசர் தேவாரத்தில் நான்காம் திருமுறையில் திருப்பெருவேளூர் திருப்பதிகத்தில் "குறவி தோள் மணந்த செல்வக் குமரவேள்" (4:60:3) என்றும் திருமறைக்காடு பதிகத்தில் "வள்ளி மணாளன்" (6:23:4) என்றும் குறிக்கப்பெற்றுள்ளது. சுந்தரர் தேவாரத்தில் திருநள்ளாறு பதிகத்தில், "குறவர் மங்கை தன் கேள்வன்......" (7:68:7) என்றும் அருணகிரிநாதர் திருப்புகழில்,

"கனி குதலை சிறு குயிலை கதித்த மற குலப்பதியில்
களிப்பொடு கைப் பிடித்த மண பெருமாளே" (1021)

என்றும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருச்செந்தூர் கந்தர் கலிவெண்பாவில்,

"தெள்ளுத் தினைமாவும் தேனும் பரிசளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே........." (திரு.கந்தர்கலி.54)

என்றும் முருகப்பெருமானின் திருமணத்தைக் குறிப்பிடுவதைப் பார்க்கமுடிகின்றது. பின்னால் வந்த சைவ இலக்கியங்களும் திருமுருகனின் திருமணம் குறித்துப் பேசுகின்றன. சங்க இலக்கியங்களில் முருகன் எனும் சொல் பல இடங்களில் இடம்பெற்றுள்ளது. "முருகமர் மாமலை" (ஐங்.308), "முருகு புணர்ந்து இயன்ற வள்ளி" (நற்.82), "முருகாற்றுப் படுத்த உறுகெழு நடுநாள்" (அகம்.22), "பெரும் பெயர் முருக" (பரி.5), "முருகச் சீற்றத்து உருகெழு குரிசில் (புறம்.16), முருகுடன்று கறுத்த கலியழிமூதூர், (பதிற்.26), "முருகாற்றுப் படுத்த உருகெழு வியன்நகர்" (திருமுருகு.244) எனும் சில பாடல்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

அதுபோல சேய் என்ற சொல்லும் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் வந்துள்ளது. "சேஎய் குன்றம்" (குறுந்.1), "சேயோடு உற்ற சூழே" (அகம்.266), "கடவுள் சேய்" (பரி.5) "செருமிகு சேய் நிற்பாடுநர்" (புறம்.14) என்பனவற்றை உதாரணமாகக் காட்டலாம். சங்க இலக்கியப் பனுவல்களில் முருகன், சேய் என்னும் பெயர்கள் இடம்பெற்றிருப்பது பண்டைத் தமிழர் வரலாற்றில் முருக வழிபாட்டின் மூலம் அமைந்த சைவ சமயப் பெருமையை எடுத்துக்காட்டச் சான்றுகளாக அமைகின்றன.

சிவ வழிபாடு

சங்க இலக்கியப் பனுவல்களில் சிவன் என்ற சொல் இடம்பெறவில்லை. என்றாலும் சிவனுடைய புராணச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு, ஆதிரையான், ஆலின்கீழ் இருந்தோன், நீல மணிமிடற்றன், உமையொரு பாகன், முப்புரம் எரித்தோன் உள்ளிட்டப் பெயர்கள் சங்க இலக்கியங்களில் காணப்பெறுகின்றன. எனவே, சங்க இலக்கியங்களில் காணப்பெறுகின்ற சிவனுக்குரிய பெயர்கள் அனைத்தும் புராணச் செய்திகளைக் கொண்டும் அல்லது அவனுடைய திருவுருவத்தின் அமைப்பைக் கொண்டும் குறிப்பிடப் பெற்றிருக்கின்றனவே தவிர தனி ஒரு பெயரில் குறிப்பிடப்படவில்லை. ஏனென்றால், சிவபெருமான்தான் எல்லாத் தெய்வங்களுக்கும் மேலானவன், அவன் பெயர்சூட்டப்படாத பரம்பொருள் ஆவான். அவனைப் போற்றுகின்றவர்கள் தங்கள் எண்ணம்போல் புராண வரலாறுகளைக் கொண்டு உருவத்தைக் கொண்டு பெயர்களைப் படைத்திருக்கிறார்கள். இதனையே பின்னால்வந்த மணிவாசகரும்,

"ஒருநாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டாமோ" (திருவாசகம்.8:11:1)

என்று குறிப்பிடுவார். திருக்குறளில் கடவுள் வாழ்த்தில் தனி ஒரு பெயரில் குறிப்பிடப்படாது எண் குணத்தான், மலர்மிசை ஏகினான்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வினைசேரா இறைவன் என்று எவ்வாறு குறிக்கப்பெறுகிறதோ அதுபோல சங்க இலக்கியங்களிலும் தனி ஒரு பெயரால் சிவபெருமான் சுட்டிக்காட்டப்பெறாது புராண அடிப்படையில் அழைக்கப்படுகிறான் எனலாம். சிவன் என்ற பெயர், பின்னால் வந்த திருமுறைகளில் தான் இடம்பெற்றுள்ளது. திருமந்திரம் சிவன் என்ற பெயரைப் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"சேர்ந்திருந்தேன் தேன்சிவ மங்கைதன் பங்கனை
சேர்ந்திருந்தேன் சிவன் ஆவடு தண்துறை
சேர்ந்திருந்தேன் சிவபோதியின் நீழலை
சேர்ந்திருந்தேன் தேன்சிவ நாமங்கள் ஓதியே" *(திரு. - பாயிரம் - 79)*

பெயர்கள்

முது முதல்வன்

தனி ஒரு பெயராகக் குறிக்கப்பெறவில்லை என்றாலும் சிவபெருமானுடைய பரத்துவ நிலை (தனிநிலை)யைக் குறிப்பதற்கான நிலையில் முதுமுதல்வன் என்ற சொல், சங்க இலக்கியத்தில் காணப்பெறுகிறது. இச்சொல் சிவனுடைய தலைமைத் தன்மையையும், எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கின்ற வியாபகத் தன்மையையும் குறிப்பதாகும். புறநானூற்றில் ஆலூர் மூலங்கிழார் சிவபெருமானை,

"நன்று ஆய்ந்த நீள் நிமிர்சடை
முது முதல்வன் வாய் போகாது
ஒன்று புரிந்த ஈர் இரண்டின்
ஆறுஉணர்ந்த ஒரு முதுநூல்" *(புறம்.166)*

என்று குறிப்பிடுகின்றார். இதற்கு, "பெரிதும் ஆராயப்பட்ட மிக்க நீண்ட சடையினை உடைய முதிய இறைவனது (சிவபெருமானது) வாக்கை விட்டு நீங்காது, அறம் ஒன்றையே மேவிய நான்கு கூற்றை உடையதாய், ஆறங்கத்தாலும் உணரப்பட்ட ஒரு பழைய நூலாகிய வேதம்" என்று விளக்கமளிக்கிறது உ,வே.சா. உரை. பின்னால் வந்த உரையாசிரியர்களும் இதனையே பின்பற்றி உரை எழுதியுள்ளனர். எனவே, முதன்மைபெற்ற தெய்வமாகச் சங்க இலக்கியத்தில் சிவபெருமான் கருதப்பெற்றிருக்கிறார் என்பது புலனாகின்றது. இதனை வழிமொழியும் மதுரைக்காஞ்சி,

"நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்போடு ஐந்துடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவனாக" *(மதுரைக்.453-55)*

என்று குறிப்பிடுகின்றது. புறநானூற்றிலும், மதுரைக்காஞ்சியிலும் இடம்பெற்றுள்ள முதுமுதல்வன் என்ற சொல்லும், தலைவன் என்ற சொல்லும் சிவபெருமானின் தலைமைப் பண்பைக் குறிப்பனவாகும். இந்தத் தலைமைப் பண்பு சிவபெருமானுக்கு உரியது. மேலும், இரு பகுதிகளிலும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அமைந்துள்ள நீள்நிமிர்சடை என்பதும் மழுவாள் நெடியோன் என்பதும் சிவபெருமானுக்குரிய அடையாளச் சிறப்புக்களே ஆகும். சிவபெருமான் பனித்த சடையுடையவன் என்று திருநாவுக்கரசர் குறிப்பிடுகின்றார். மழுவினை உடையவன் சிவபெருமான் என்பதை, “பாலோடு ஆடலராகி மழுவேந்தி இறை” என்று திருஞானசம்பந்தரும் முதல் திருமுறையில் முதல் திருப்பதிகத்தில் ஆறாவது பாடலில் குறிப்பிடுகின்றார். எனவே, புறநானூறும் மதுரைக்காஞ்சியும் குறிப்பிடுவது சிவபெருமானையே என்பதும் அப்பெருமான் முதன்மைத் தெய்வமாக விளங்குகிறார் என்பதும் பெறப்படுகிறது. இதனடிப்படையிலேயே பின்வந்த சாத்திர நூல்கள் சிவபெருமானை இறைவனின் இலக்கணமாகவும், முதன்மையாகவும் காட்டுகின்றன.

சிவஞானபோதம் முதல் சூத்திரத்தில் மூன்றாவது அதிகரணத்தில் உதாரணப் பாட்டில் “ஈறே முதல்” என்று குறிப்பிட்டு, அழித்தற் கடவுளாகிய சிவபெருமானே முதல் என்று உறுதிசெய்கின்றார் சிவஞான சித்தியார். இதனையே,

> **“தருபவன் ஒருவன் வேண்டும் தான்முதல் ஈறுமாகி**
> **மருவிடும் அநாதி முத்த சித்து உரு மன்னிநின்றே”** *(சிவஞான.சி.21)*

என்று குறிப்பிடுகிறது சிவஞான சித்தியார். தோற்றிக் காத்து ஒடுக்குகின்ற ஒருவன் தனக்கு ஒரு முதல்வன் இன்றித் தானே எல்லாவற்றுக்கும் முதல்வனாய், காரணனாய் அநாதி காலந்தொட்டு நிலைத்து இருப்பவன் ஆவான் என்பது இதன்பொருள். இவ்வாறு சங்க இலக்கியங்கள் குறிப்பிட்ட முதுமுதல்வன் என்ற தலைமைப் பண்பைச் சிவனின் மேன்மை நிலையைப் பின்னால்வந்த திருமுறைகளும் சாத்திரங்களும் உறுதியாக்கிச் சிவபெருமானை முதுமுதல்வன் என்றே வழங்குகின்றன எனலாம்.

ஆதிரையான்

சிவன் என்ற சொல் இடம்பெறவில்லை என்றாலும் ஆதிரையான், ஆலமர்ச் செல்வன், நீலமணிமிடற்றன், உமையொருபாகன் என்றெல்லாம் சிவபெருமான் சங்க இலக்கியங்களில் அழைக்கப்பெறுகின்றான்.

> **“அரும்பெறல் ஆதிரையான் அணிபெற மலர்ந்த**
> **பெருந்தண் சண்பகம்.........................”** *(கலி.150)*

எனும் இப்பாடலின் பொருள், பெறுதற்கரிய ஆதிரை நாளை உடைய இறைவன் திருமேனி அழகைப்பெற்றுள்ள மலர்ந்த பெரிய குளிர்ந்த சண்பக மலர் பருவம் பொய்யாதவாறு போல என்பதாகும். எனவே, சிவபெருமான் ஆதிரை நாளை உடைய இறைவன் என்பதால் ஆதிரையான் என்றே அழைக்கப்பெற்றுள்ளான்.

“ஆதிரை முதல்வனிர் கிளந்த நாதர்” (பரி.8) என்னும் பரிபாடல் பாடல் வரியிலும் சிவபெருமான் ஆதிரையோடு ஒப்பிட்டுக் கூறப்பெற்றுள்ளான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முப்பத்துமூன்று தேவர்களைக் குறிக்கின்றபொழுது பதினொரு உருத்திரர்கள் ஆதிரை முதல்வனாகிய சிவபெருமான் பெயரில் அவன்வழி வந்தவர்கள் என்று குறிக்கப்பெற்றுள்ள பகுதி இது. எனவே, சங்க இலக்கியத்தில் ஆதிரையான் என்ற சொல் சிவபெருமானைக் குறிக்கிறது. இதனைப் பின்வந்த திருமுறைகளும் பின்பற்றி ஆதிரையான் என்றே சிவபெருமானைக் குறிக்கின்றன.

"ஆதியன் ஆதிரையன் அனலாடிய ஆரழகன்
பாதியோர் மாதினொடும் பயிலும் பரமாபரமன்" *(திருஞான.3:61:1)*

"ஆதி நாயகன் ஆதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே" *(திருநாவுக்.5:100:1)*

"அங்கமே பூண்டாய் அனலாடினாய்
ஆதிரையாய் ஆல்நிழலாய் ஆனேறு ஊர்ந்தாய்" *(திருநாவுக்.6:99:2)*

"ஆதியனை ஆதிரை நன்னாளன் தன்னை
அம்மானை மைம்மேவு கண்ணியாளோர்
பாதியன்................................" *(திருநாவுக்.6:69:3)*

என்ற தேவாரப் பாடலடிகள், சங்க இலக்கிய மூலக் கூறின்படியே சிவபெருமானை ஆதிரையாளன் என்றும் ஆதிரை நன்னாளன் என்றும் குறிப்பிட்டுப் பெருமைபேசகின்றன. ஆதிரை என்பது விண்மீன்களில் ஒன்றாகும். இதைச் சிவபெருமானுக்கும் முருகனுக்கும் உரிய விண்மீனாகச் சைவப் பெருமக்கள் கொண்டாடுவர்.

ஆலமர் செல்வன்

சிவபெருமான், ஆலமர் செல்வன் என்று சங்க இலக்கியங்களில் அழைக்கப்பெற்றுள்ளான். கல்லால மரம் என்று கூறப்பெறுகின்ற ஆலமரத்தின் கீழ் இருந்து சிவபெருமான் சனகாதி முனிவர்கள் நால்வர்க்கும் அறமுரைத்தான் என்ற புராணச்செய்தியின் அடிப்படையில் ஆலமர் செல்வன் என்று சிவபெருமான் அழைக்கப்பெறுகிறான்.

"ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல்" *(கலி.81)*

"ஆலமர்ச் செல்வன் அணிசால் மகன்விழா" *(கலி.83)*

"ஆலமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த" *(சிறுபாண்.97)*

"ஆல்கெழு கடவுள் புதல்வ..................." *(திருமுருகு.256)*

என்று சங்க இலக்கியங்களில் ஆலமர் செல்வன் என்ற பெயரில் சிவபெருமான் குறிக்கப்பெறுகிறார். இத்தகைய சங்க இலக்கிய மூலக் கூறினை வழிமொழிந்து,

"பண்டு ஆலின் நீழலானைப் பரஞ்சோதியை" *(திருஞான.2:149:6)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"அழகர் ஆல்நீழற்கீழ் அறம் ஒதிய
குழகர்............................" (திருநாவுக்.5:52:8)

"ஆலநீழல் அமர்ந்த வாட்போக்கியார்
சீலம் ஆர்ந்தவர் செம்மையுள் நிற்பரே" (திருநாவுக்.5:86:1)

"அறம் காட்டி அந்தணர்க்கு அன்று ஆலநீழல்
அறம் அருளிச் செய்த அரனார்.........." (திருநாவுக்.6:2:3)

"ஆலம் நிழல் அமர்ந்தாய் அமரா
அடியேன் உய்யப் போவதோர் சூழல் சொல்லே" (சுந்தரர்.7:2:6)

"அன்றாலின் கீழ்இருந்தங்கு அறம்உரைத்தான் காணேடி"
(திருவாசகம்.8:12:16)

"அன்று ஆல்நிழல்கீழ் அருமறைகள் தானருளி" (திருவாசகம்.8:13:13)

என்றெல்லாம் பின்னர் தோன்றிய திருமுறைகள் பின்பற்றியுள்ளன எனக் கூறலாம்.

மணிமிடற்றண்ணல்

மணிமிடற்று அண்ணல் என்பது சிவபெருமானின் மற்றொரு பெயராகச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

"யாழ்கெழு மணிமிடற்று அந்தணன்" (அகம். - கடவுள் வாழ்த்து)

"மாறாப் போர் மணிமிடற்று எண்கையாய்......."
(கலி. - கடவுள் வாழ்த்து)

"மறுமிடற்று அண்ணற்கு மாசிலோள் தந்த" (பரி.8)

"மணிமிடற்று அண்ணற்கு மதியாரால் பிறந்தோய்..." (பரி.9)

"கறைமிடற்று அண்ணல் காமர் சென்னி" (புறம்.55)

"மாற்றரும் கணிச்சி மணிமிடற்றோனும்" (புறம்.56)

"நீலமணி மிடற்றொருவன் போல" (புறம்.91)

"மாறுஏற்கும் பண்பின் மறுமிடற்றன்...." (பதிற். - கடவுள்வாழ்த்து)

என்றெல்லாம் சங்கப் பனுவல்களில் சிவபெருமான் அழைக்கப்பெறுகிறார். தேவர்களும் அரக்கர்களும் திருப்பாற் கடலைக் கடைந்தபொழுது கடலில் தோன்றிய பொருள்களில் ஒன்று நஞ்சாகும். பாற்கடலில் தோன்றிய நஞ்சு தேவர்களையும் அரக்கர்களையும் அழிக்கத் தலைப்பட்டபொழுது அவர்களைக் காப்பதற்காகச் சிவபெருமான் அந்த நஞ்சை அமுதாக உண்டார் என்பதும் அந்த நஞ்சு தீங்கு செய்துவிடக் கூடாது என்பதற்காகச் சிவபெருமான் கழுத்தை உமையவள் பிடிக்க, அந்த நஞ்சு கழுத்திலேயே தங்கிவிட்டது என்பதும் அந்த நஞ்சுதான் சிவபெருமான் கழுத்தில் நீலநிறமாக அமைந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மணிமிடற்றன் என்ற உருவத்தைக் காட்டிப் பெயர்பெற்றது என்பதும் புராணச் செய்தியாகும். இதனைச் சிவபெருமானின் வடிவத்தைக் குறிப்பிடுகின்ற பொழுதெல்லாம் படைப்பாளர்கள் தவறாது கையாண்டுள்ளனர். சங்க இலக்கியப் புலவர்களும் சிவபெருமானை மேற்குறித்தவாறு நீலமணிமிடற்றனாகக் குறித்துள்ளார்கள். இதனை வழிமொழிந்து பின்வந்த திருமுறையாளர்களும் சிவபெருமானை இப்பெயரிலேயே அழைத்துள்ளனர்.

"பண்டு அமரர் அஞ்சப் படுகடலில் நஞ்சுண்டு
கண்டம் கருத்ததுவும்" *(அற்புதத்.55)*

இப்பகுதியில் நஞ்சுண்ட வரலாறு இடம்பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். அம்மையார் மேலும்,

"நூலறிவு பேசி நுழைவிலாதார் திரிக
நீல மணிமிடற்றான் நீர்மையே......." *(அற்புதத்.34)*

என்று குறிப்பிட்டுள்ளார். அவரைத் தொடர்ந்து,

"நிருத்தன் ஆறங்கன் நீற்றன் நான்மறையன்
நீலமார்மிடற்றன்.........................." *(திருஞான.3:119:3)*

"கறைகொள் கண்டத்து எண்தோள இறை முக்கணன்" *(திருநாவுக்.5:48:3)*

"நீலமாமணி கண்டத்தர் நீள்சடைக்
கோல மாமதி கங்கையும் கூட்டினார்" *(திருநாவுக்.5:51:1)*

"செய்யார் மேனியனே திருநீல மிடற்றினனே" *(சுந்தரர்.7:27:4)*

"கண்டம் கரியான் செம்மேனியான் வெண்ணீற்றான்"
(திருவாசகம்.8:8:9)

"கன்னிமதில் திருக்களரும் போற்றிக் கண்டம்
கறையணிந்தார் பாதாள ஈச்சுவரமும் பாடி" *(பெரிய.12:28:896)*

"நீலகண்டர் உறைபதிகள் பிறவும் வணங்க நினைவுற்றார்"
(பெரிய.12:21:262)

என்றெல்லாம் திருமுறைகள் சிவபெருமானின் திருப்பெயரைச் சங்க இலக்கியங்களின் வழி குறிப்பிடுவதைப் பார்க்க முடிகின்றது.

உமையொரு பாகன்

சங்க இலக்கியங்களில் காணப்படுகின்ற பெயர்களில் ஒன்று உமையொரு பாகனாகும். பிருங்கிமுனிவர் என்பவர் சிவபெருமானை மட்டுமே வணங்கும் கொள்கையை உடையவராய் இருந்தார். எனவே, உமையவள் தன்னை வணங்காத முனிவருக்கு அறிவுபுகட்டச் சிவபெருமானை நோக்கித் தவமிருந்து சிவபெருமானின் ஒரு கூற்றில் உடனுறைந்து சிவனை வலம் வரும்போது, தன்னையும் சேர்த்து வலம்வருவதற்குரிய சூழலை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஏற்படுத்தினாள் என்பது புராணச் செய்தியாகும். இந்தப் புராணச் செய்தியின் அடிப்படையில்,

"நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவன்........................" (ஐங். - கடவுள் வாழ்த்து)

"ஊர்ந்தது ஏறே சேர்ந்தோள் உமையே" (அகம். - கடவுள் வாழ்த்து)

"பெண் உரு ஒருதிறன் ஆகிநின்று...." (புறம். - கடவுள் வாழ்த்து)

"உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்" (திருமுருகு.153)

எனும் சங்க இலக்கியப் பாடற்பகுதிகள் உமையொரு பாகனை நினைவுபடுத்துகின்றன. முன்பு குறிப்பிட்டது போல சத்தியை உடனாகப் பெற்றுப் பிரியாதிருப்பவன் சிவபெருமான் என்பதால் உமையொருபாகன் என்ற பெயர் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது. இதனை அடியொற்றியே பின்னால் வந்த சைவ இலக்கியங்களும் சாத்திரங்களும் உமையவளைப் பிரியாது சிவபெருமான் இருக்கிறான் என்பதைப் பலபட எடுத்துக் கூறுகின்றன.

"குழலார் சிறுபுறத்துக் கோல்வளையைப் பாகத்து
எழிலாக வைத்து................................." (அற்புதத்.51)

"அவள்ஓர் குலமங்கை பாகத்து அகலாள்" (அற்புதத்.95)

"..............................உமையவள்
மேவிய திருவுரு உடையவன்.........." (திருஞான.1:123:1)

"பூமென் கோதை உமையொரு பாகனை" (திருநாவுக்.5:18:8)

"மங்கை ஓர் கூறமர்ந்தீர் மறை நான்கும் விரித்துகந்தீர்" (சுந்தரர்.7:25:4)

"............நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற்பிரிவிலா எங்கோமான்........" (மாணிக்க.திருவெம்.16)

"உமைபாகர் அருள் செய்த ஒழுக்கம் அல்லால்" (பெரிய.12:19:88)

என்றெல்லாம் பின்னர் வந்த திருமுறைகள் சிவபெருமானை உமையொரு பாகனாகச் சங்க இலக்கியங்களின் வழி போற்றிப் புகழுகின்றன எனலாம்.

முக்கட் செல்வன்

சிவபெருமானைக் குறிக்கச் சங்க இலக்கியங்கள் முக்கட் செல்வன் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றன. அதாவது இயற்கையில் அமைந்துள்ள ஒளி வடிவங்களான சூரியன், சந்திரன், அனல் என்ற மூன்றினையும் முறையே வலம், இடம், நெற்றியாக மூன்று அங்கங்களில் சிவபெருமான் பெற்றுள்ளான் என்பது புராணச் செய்தியாகும். இதில் மூன்றாவது கண்ணாகிய நெற்றிக் கண்ணில் இருந்து அனல் தோன்றி மன்மதனை எரித்தது என்றும் காமத்தை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எரித்த கண்ணிலிருந்து முருகப்பெருமான் தோன்றினான் என்றும் சைவப் புராணங்கள் கூறுகின்றன. இதனை,

"நான்மறை முதுநூல் முக்கண் செல்வன்" (அகம்.181)

"முக்கண்ணான் உருவே போல் முரண்மிகு குரால்"(கலி.104)

"முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே" (புறம்.6)

"உமை அமர்ந்து விளங்கும் இமையா முக்கண்" (திருமுருகு.153)

"இமையா நாட்டத்து ஒருவரம் கொண்டு" (பரி.5)

"பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல" (புறம்.55)

என்றெல்லாம் மூன்றாவது கண்ணின் சிறப்பு நோக்கிச் சங்க இலக்கியங்கள் முக்கண்ணன் என்ற பெயரைப் பயன்படுத்தியுள்ளன.

"மற்றொரு கண் நெற்றிமேல் வைத்தான்........" (அற்புதத்.86)

"நெற்றியது மற்றொரு கண் ஒற்றை விடையன்" (திருஞான.3:68:2)

"கறைகொள் கண்டத்து எண்தோள் இறை முக்கணன்" (திருநாவுக்.5:48:3)

"ஒற்றை ஏற்றனை நெற்றிக் கண்ணானை" (சுந்தரர்.7:57:8)

"முறுவல் செய்வாயினீர் முக்கண் அப்பர்க்கு" (திருவாசகம்.8:9:5)

"........................கண்ணுதலான்
திருத்தொண்டர் பலரும் சூழ" (பெரிய.12:28:892)

என்றவாறு சிவபெருமானை முக்கட் பரமனாகச் சங்க இலக்கியத்தின் அடிப்படையில் திருமுறைகள் போற்றிப் புகழுகின்றன.

புராணச் செய்திகள்

சிவபெருமானின் புராணத்தில் இடம்பெற்றுள்ள பல செய்திகள், சங்க இலக்கியங்களில் ஆங்காங்கு இடம்பெற்றுள்ளன. முப்புரம் எரித்தல், தக்கன் வேள்வி அழித்தல், கூற்றுவனை உதைத்தல், கங்கையைத் தலையில் அணிதல், அடிமுடி தேடியது, சந்திரனைத் தலையில் அணிதல் ஆகிய வரலாற்றுச் செய்திகளின் குறிப்புகள் சங்க இலக்கியங்களில் பரவலாகக் காணப்பெறுகின்றன. இப்புராணச் செய்திகள் பெரும்பாலும் வேதங்களிலிருந்து பெறப்பட்டவையாகக் கூறப்படுவதுண்டு. வடமொழி வேதங்கள் ஆரியரின் வருகைக்குப் பிற்பட்டவை என்பதால் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்ற செய்திகள் சங்க கால மக்கள் வாழ்வியலில் நடைமுறையில் வழங்கி வந்த கதைகளாகக் கொள்ளலாம். இத்தகைய புராண வரலாற்றுச் சான்றுகள் சைவ சமயத்தின் தொன்மையைப் புலப்படுத்துவன ஆகும். தத்துவங்களுக்கு ஆதாரமாக இந்தப் புராணச் செய்திகளைச் சைவ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சமய ஞானிகள் மக்களுக்குப் போதித்திருக்கவும் கூடும். எனவே, சைவ சமய மூலக் கூறுகளை அறிந்துகொள்ளுவதற்கு இந்தப் புராணங்கள் பெரிதும் உதவுகின்றன. இப்புராணச் செய்திகள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றமைக்கு ஒருசில சான்றுகளைக் குறிப்பிடுதல் நன்று.

முப்புரம் எரித்தல்

வித்யூத் மாலி, தாரகாட்சன், கமலாட்சன் என்ற மூன்று அசுரர்கள் பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றாலான கோட்டைகளைப் பெற்றிருந்தார்கள். அவர்கள் தாம் விரும்பிய இடங்களுக்கெல்லாம் சென்று அங்கிருந்த தேவர்களைத் துன்புறுத்தினார்கள். பறக்கும் கோட்டைகளாகிய அவற்றின் கீழே அகப்பட்டுக் கொண்டவர்கள் எல்லாம் அழிந்தார்கள். எனவே, துன்புற்ற தேவர்கள் சிவபெருமானிடம் அடைக்கலம் புகுந்து அரக்கர்களை அழிக்க வேண்டினார்கள். சிவபெருமான் அந்த மூன்று கோட்டைகளையும் அழிக்கப் புன்னகை செய்தார். அந்த அளவில் முப்புரங்கள் எரிந்து சாம்பலாயின என்பது திரிபுரம் எரித்த வரலாறாகக் கூறப்பெறுகிறது. இந்த வரலாற்றின் மூலமாகத் தத்துவக் கருத்து ஒன்று சைவ அறிஞர்களால் கூறப்படுவதுண்டு. மூன்று கோட்டைகளைக் கொண்ட மூன்று அரக்கர்கள் என்று கூறப்படுவது சத்துவ, ராஜத, தாமோ என்ற மூன்று குணங்களைக் குறிக்கின்ற உருவகம் ஆகும். அந்த மூன்று குணங்கள் உயிர்களை உலக இன்பங்களில் ஈடுபடச் செய்து, பிறவித் துன்பங்களைத் தருகின்றன. அவற்றை உயிரானது இறைவனிடத்தில் வேண்டி, இறைவனாகிய சிவபெருமான் அருளால் அந்த மூன்று குணங்களையும் அடக்கி, இறைவனது பேரின்பமாகிய வீட்டை அடைய வேண்டும் என்பது சைவ சித்தாந்தக் கொள்கையாகும். இத்தகைய தத்துவப்பொருள் அமைந்த முப்புரம் எரித்த நிகழ்ச்சி சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது.

"கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலும்
உடன்றக்கால்......................................." *(கலி.2)*

"அயந் திகழ் நறுங்கொன்றை அலங்கலந் தெரியலான்
இலங்கு எயில் எயப் பிறந்த எரிபோல..............." *(கலி.150)*

"ஓங்குமலைப் பெருவிரல் பாம்பு ஞான் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
...........................அனல்" *(புறம்.55)*

"
.........................பொன்றார்
எயில் எரியூட்டிய வில்லன்..........." *(பதிற். - கடவுள் வாழ்த்து)*

"மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வன்" *(திருமுருகு.154)*

என்னும் சங்க இலக்கியப் பாடல்களில் சிவபெருமான் முப்புரம் எரித்த செய்தியைப் பார்க்க முடிகின்றது. சங்க இலக்கியங்களில் இடம்பெற்ற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முப்புரம் எரித்த மூலக்கூறு பின்னர்த் தோன்றிய திருமுறைகளிலும் சித்தாந்தங்களிலும் இடம்பெற்றிருக்கின்றது எனலாம்.

"வில்லார் புறம் மூன்று எரித்தீர்
விடையாய் கொடியினீர்" *(திருஞான.2:56:4)*

"கயிலை நாதன் கறுத்தவர் முப்புரம்
எயில்கள் தீயெழ வெல்வல வித்தகன்" *(திருநாவுக்.5:66:2)*

"அரியெனமுப்புரங்கள்அவைஆரழல்ஊட்டல்என்னே" *(சுந்தரர்.7:99:8)*

"முனிவார் திரிபுரம் மூன்றும்வெந்து
அன்றுசெந்தீயில்மூழ்க" *(காரைக்காலம்மையார்.11:3:5)*

"புரம் மூன்றும் செற்றானை,
பூண் நாகம் அணிந்தானை" *(பெரிய.12:59:1)*

"வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீபற" *(திருவாசகம்.8:14:1)*

"ஈரம்பர் கண்டிலம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற" *(திருவாசகம்.8:14:2)*

இவ்வாறு முப்புரம் எரித்த வரலாற்றினைப் பின்னர்வந்த திருமுறைகள் சுட்டிச் செல்கின்றன. இதுபோல, "இடரிய ஏற்றெருமை நெஞ்சு இழந்திட்டு குடர்க்கூளிக்கு ஆர்த்துவான் போன்ம்" (கலி.101) என்று எமனை உதைத்ததைக் கலித்தொகையும், அமரர் வேள்விப் பாகம் உண்ட (பரி.5) தக்கன் வேள்வி அழித்ததைப் பரிபாடலும் குறிப்பிடுவதைப் பார்க்க முடிகின்றது. பின்னர் வந்த திருமுறைகள் இதனை விரிவாக எடுத்தியம்புகின்றன. எனவே, சங்க இலக்கியங்களில் இடம்பெற்ற புராணச் செய்திகள் வழிவழியாகத் திருமுறைகளில் இடம்பெற்று சைவ சமயக் கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன.

தத்துவ நிலையில்

சங்க இலக்கியங்கள், சைவ சமயத்தின் அடிப்படைத் தத்துவங்களை அக் காலத்திலேயே பதிவு செய்துள்ளன. சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பெற்ற தத்துவ மூலங்களே காலத்திற்குக் காலம் வளர்ச்சியுற்றுத் தத்துவ சாத்திரங்களாக விரிந்து மலர்ந்தன எனலாம்.

சைவ சமயத்தின் கொள்கைகளில் ஒன்றான சிவபெருமான், ஆதியும் அந்தமும் இல்லாதவன் மற்றும் நிலையானவன் என்பதைச்சங்க இலக்கியங்கள் குறிப்பாகச் சுட்டிக்காட்டுகின்றன.

"பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே........." *(புறம்.91)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடுகின்றார். பால் போன்ற நிறமுடைய பிறைச்சந்திரனை உடைய திருமுடியினையும், நீலமணி போலும் கரிய மிடற்றினையும் உடைய ஒருவன் (சிவபெருமான்) போல நீ நிலைபெறுவாயாக என்பது இப்பாடலின் பொருளாகும். இப்பகுதியில் பிறைச் சந்திரனை உடைய சென்னியையும், கருத்த கண்டத்தையும் உடைய ஒருவன் உவமையாகக் கூறப்பட்டுள்ளான். இந்த ஒருவன் மானிடராக இருத்தல் இயலாது. கடவுளாகத்தான் இருக்கவேண்டும். இந்த வடிவ அமைப்பு சிவபெருமானுக்கு உரியது என்பது உலக வழக்காகும். எனவே, சிவபெருமானாகிய ஒருவன் போல மன்னுக என வாழ்த்தப்பெற்றிருக்கிறது. மன் என்ற சொல் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் வெளியிட்ட தமிழ் அகரமுதலியின்படி நிலைபேற்றைக் குறிப்பதாகும் (ப.862). எனவே, சிவபெருமான் நிலைபேற்றினை உடையவன் என்பது பெறப்படுகிறது. சைவ சித்தாந்தத்தின்படி இறைவன் ஆதியும் அந்தமும் அற்றவன் ஆவான். அநாதியானவன் என்று கூறப்படுபவன் ஆவான். மேலும் இதனை,

"நிலைபெறு கடவுள் ஆக்கிய" *(அகம்.209)*

"நிலைபெறு கடவுளும் விழைதகப் பேணி" *(பதிற்.21)*

"கடவுள் நிலைஇய கல்லோங்கு நெடுவரை" *(பதிற்.43)*

என அகநானூறும், பதிற்றுப்பத்துப் பாடல்களும் உறுதிப்படுத்துகின்றன. சைவ சித்தாந்தத்தில் முதன்மைபெறும் நூலான சிவஞான போத முதற் சூத்திரம், அந்தம் ஆதி என்று குறிப்பிட்டுச்சிவனின் நிலைபெற்ற தன்மையை வலியுறுத்தும். அதனைத் தொடர்ந்து வந்த சிவப்பிரகாசம்,

"......................பதி பரமே அதுதான்
நிலவும் அரு உருவின்றிக் குணம் குறிகளின்றி
நின்மலமாய் ஏகமாய் நித்தமாகி" *(சிவப்.13)*

என்று குறிப்பிடுவதுடன் இறைவனை நித்தம் என்ற சொல்லால் என்றைக்கும் நிலையானவன், அழிவில்லாதவன் என்கிறது. இதனையே அருணந்தி சிவாசாரியார், இறைவன் எல்லாப்பொருளிலும் நிறைந்து நிலைத்து இருக்கின்றான் என்பதைக் கீழ்வரும் பாடலில் குறிப்பிடுகின்றார்.

"அறிவினில் அருளால் மன்னி அம்மையொடு அப்பன் ஆகி
செறிவு ஒழியாது நின்ற சிவன்அடி சென்னி வைப்பாம்" *(சிவஞான.சுப.2)*

இத்தகைய இறைவன் மூன்று தெய்வங்களாக விளங்குகின்ற பிரமன், திருமால், உருத்திரன் என்ற மூவருக்கும் மேலான மெய்ப்பொருள் ஆவான் என்பது சைவ சித்தாந்தத்தின் அடிப்படை ஆகும். இதனைப் பரிபாடல் முருகன் மீது வைத்துக் குறிப்பிடுவதைப் பின்வரும் பாடலில் காணலாம்.

"மண்மிசை அவிழ்துழாய் மலர்தரு செல்வத்துப்
புன்மிசைக் கொடியோனும் புங்கவ மூர்வோனும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மலர்மிசை முதல்வனும் மற்ற அவனிடைத்தோன்றி
உலகிரு ளகற்றிய பதின்மரு மிருவரும்
மருந்துரை யருவருந் திருந்துநூ லெண்மரும்
ஆதிரை முதல்வனிற் கிளந்த
நாதர்பன் னொருவரும் நந்திசை காப்போரும்
யாவரும் பிறரும் மமரரு மவுணரும்
மேவரு முதுமொழி விழுத்தவ முதல்வரும்
பற்றா கின்றுநின் காரண மாகப்
பாங்குன் றிமயக் குன்ற நிகர்க்கும்" *(பரி.8:1:11)*

நிலத்திடைத் தோன்றி மலர்கின்ற திருத்துழாய் மலரினையும், கருடக் கொடியினையும் உடைய திருமாலும், இடபத்தில் ஊர்வோனும் தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும், ஆதித்தர் பன்னிருவரும் மருத்துவர்கள் இருவரும், வசுக்கள் எண்மரும், பதினொரு உருத்திரரும், இந்திரன், இயமன் உள்ளிட்ட எண்மரும், மற்றுமுள்ள தேவர்களும் அரக்கர்களும், வேதங்களை ஓதுபவர்களும் உன்னைக் கண்டு வணங்குதல் பொருட்டாகத் திருப்பரங்குன்றத்திற்கு வந்தனர் என்பது இப்பாடலின் பொருளாகும். எனவே, திருப்பரங்குன்றம் இமயமலையை ஒத்தது என்பது பொருளாகும். திருமால், பிரமன், உருத்திரன் உள்ளிட்ட தேவர்கள் அரக்கர்கள் மற்றவர்கள் என அனைவரும் வணங்குகின்ற பெருமையை உடையவன் முருகன் என்று கூறப்பெற்றிருப்பதால், சைவத்தின் அடிப்படையில் சிவன் வேறு, முருகன் வேறு அல்ல என்ற நிலையில் சைவப் பரம்பொருளாம் மெய்ப்பொருள் எல்லாத் தெய்வங்களுக்கும் மேற்பட்டது என்பது மேற்கண்ட பரிபாடல் வரிகளால் தெரியவருகிறது. எனவே, சைவ சித்தாந்தத்தின் அடிப்படையான இறைவன் அனைத்திற்கும் மூலமாகிய முதல்வன் ஆவான் என்று சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. இதைத்தான் சிவஞான சித்தியார், எந்தத் தெய்வத்தை நினைத்து வணங்கினாலும் அத்தெய்வமாகி சைவத்தின் முழுமுதற் தெய்வமாகிய உமையொருபாகன் தோன்றிவிடுவான், மற்ற பிரமன், திருமால், இந்திரன் உள்ளிட்ட அத்துணைத் தெய்வங்களும் பிறந்து இறந்து வினைகளைச் செய்யும், ஆனால் சைவப் பெருங்கடவுளாம் சிவன் இறப்பு, பிறப்பின்றி நிலைத்ததாக விளங்குவான் என்பர். இவன் முதன்மைத் தெய்வமாக விளங்கி, உயிர்களுக்கு அருள்புரிகின்றான் என்பதை பரிபாடலின்வழி திருமுறைகளும் சாத்திரங்களும் குறிப்பிடுகின்றன.

"நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக
நீல மணிமிடற்றான் நீர்மையே - மேலுவந்தது
எக்கோலத்து எவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத்து அவ்வுருவே ஆம்" *(அற்புதத்.33)*

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வம்ஆகி ஆங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்மற்று அத்தெய்வங்கள்
வேதனைப் படும் இறக்கும் பிறக்கும்மேல் வினையும் செய்யும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆதலான், இவை இலாதான் அறிந்துஅருள் செய்வன் அன்றே"
(சிவஞான.சுப.115)

எனவே, இறைவன் அனைத்திற்கும் மேலானவன் என்ற சைவ தத்துவக் கொள்கை சங்க இலக்கியத்தில் பரிபாடலிலும், திருமுறை, சாத்திர நூல்களிலும் குறிக்கப்பெற்றுள்ளது. இத்தகைய முதல்வனாக இருக்கும் இறைவன், தன்னேரில்லாத தலைவனாக விளங்குகின்றான் என்பதைப் பண்டை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது" *(குறள்.7)*

எனத் திருக்குறள் குறிப்பிடுகின்றது. "மூத்த புரிசை பராவரு மரபில் கடவுட் பேணி" என்று மலைபடுகடாமும் *(536)*, "தேயா விழுப்புகழ் தெய்வம் பரவுதும்" என்று கலித்தொகையும் *(103)* குறிப்பிடுகின்றன. இவற்றை வழிமொழிந்து பின்வந்த திருமுறைகளும், சாத்திரங்களும் பதியாம் இறைவனைத் தனக்குவமை இல்லாதவனாகக் குறிப்பிடுகின்றன.

"..............தன் ஒப்பாரிலாத்
தூயவன்" *(1:113:2)*

"தன்னேர் பிறர் இல்லானை............" *(2:62:3)*

என்று திருஞானசம்பந்தரும்,

"தன் ஒப்பார் இல்லாதானை" *(6:46:2)*

"மற்றுயாரும் தன்ஒப்பார் இல்லாதானை" *(6:1:2)*

என்று திருநாவுக்கரசரும்,

"ஒப்பரிய குணத்தான்" *(7:51:5)*

என்று சுந்தரரும்,

"ஒப்பிலாதான் *(8:6:29)*, "ஒப்பில் ஒருத்தன்"*(8:5:61)*

என்று மணிவாசகரும்,

"ஒப்பிலாதவர் தமை வழியிடைப் பணிந்து
உருகும் அன்பொடு செல்வார்" *(பெரிய.12:28:961)*

என்று சேக்கிழாரும் இறைவனைத் தனக்கு உவமை மற்றும் ஒப்பு இல்லாதவனாகக் குறிப்பிட்டுப் போற்றுவார்கள். இத்திருமுறைகளை வழியொற்றிச் சித்தாந்த நூல்களும் இறைவனை ஒப்பில்லாதவன் என்று குறிப்பிடுகின்றன.

"ஒன்றும் குறியே குறியாத லால்அதனுக்கு
ஒன்றுங்குறி ஒன்று இலாமையினால் – ஒன்றோடு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உவமிக்க லாவதும் தானில்லை ஒவ்வாத்
தவமிக்கா ரேஇதற்குச் சான்று" *(திருக்களிறு.10)*

என்று திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனாரும்,

"................................இருமுச்
சமயம் கடந்து தனக்கொப்பில்லாது
சுமை துன்ப நீக்கும் துவசம்......" *(நெஞ்சுவிடு.கொடி.8)*

என்று உமாபதிசிவம் நெஞ்சுவிடுதூதிலும் குறிப்பிட்டு ஒப்பில்லாத தன்மையை, இறைவனின் பெருமையைப் பண்டைத் தமிழ் வழியே நிறுவுகின்றனர்.

இறைவனின் தொழில்

சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான் என்றும் உளன் என்ற தத்துவத்தைச் சிவஞான போதம் முதல் சூத்திரத்தால் நிறுவுகிறது. சைவ சித்தாந்த தத்துவம் கொள்ளுகின்ற முப்பொருள் பதி, பசு, பாசம் என்பதாகும். இம் முப்பொருளைப் பற்றிய தத்துவங்களை வகுக்கின்றபொழுது சித்தாந்த நூல்கள் முதலில் முப்பொருளும் உண்டு என்பதை விளக்குகின்றன. இவ்வாறு விளக்குகின்றபொழுது பதி எனும் இறைவன் உண்டு என்பதற்கு உலகத்தின் அல்லது உலகப் பொருள்களின் தோற்றம், நிற்றல், அழிதல் என்ற மூன்று தொழில்களும் முறையாக நடைபெறுவதை நோக்க வேண்டியுள்ளது. இந்த மூன்று தொழில்களைச் செய்ய ஒருவன் வேண்டும் என்பது இதனால் அறியமுடிகின்றது.

"அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்" *(2:1)*

என்பது சிவஞான போதத்தின் முதல் சூத்திரமாகும். இச்சூத்திரத்தை வழிமொழிந்து சிவஞான சித்தியார்,

"ஒருவனோடு ஒருத்தி ஒன்றுஎன்று உரைத்திடும் உலகமெல்லாம்
வருமுறை வந்து நின்று போவதும் ஆதலாலே
தருபவன் ஒருவன் வேண்டும் தான்முதல் ஈறும் ஆகி
மருவிடும் அநாதி முத்த சித்துரு மன்னி நின்றே" *(முதற்சூத்திரம்.21)*

என்ற பாடலாகத் தருகிறது. எனவே, உலகத்தொழிலை வைத்து இறைவன் உண்டு என்பதும் இறைவனுக்கு இம்மூன்று தொழில்கள் உண்டு என்பதும் சித்தாந்தக் கருத்தாகும். இதனைச் சங்க இலக்கியங்கள் தோற்றுவாய் செய்கின்றன. பிரமன், திருமால், உருத்திரன் என்ற மூன்று நிலைகளில் நின்று எல்லாம்வல்ல பரம்பொருள் நிகழ்த்துகிறான் சிவன் என்பது சைவ சமயக் கொள்கையாகும். இம்முக்கடவுள்ர்க்கும் மேலானவன் சிவபெருமான் என்பதும் இதன் கொள்கையாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"தேவர் முனிவர் வந்திறைஞ்சும் தெய்வப் பெருமான் கழல்வணங்கி
மூவர் தமக்கு முதலாகும் அவரைத் திருமும் மணிக்கோவை
நாவ லூரர் தம்முன்பு நன்மை விளங்கக் கேட்பித்தார்" (பெரிய.12:37:69)

என்பது பெரியபுராணம் குறிப்பிடும் சான்றாகும். இக்கருத்தையே சங்க இலக்கியங்கள், உலகம் இறைவனால் தோற்றுவிக்கப்பெற்றது என்றும் அது நான்முகனின் தெய்வநிலையாக அமையும் என்றும் குறிப்பிடுகின்றன.

"நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்போடு ஐந்துடன் இயற்றிய
மழு வாள் நெடியோன்" *(மதுரைக்.453-455)*

என்னும் பாடலடிகள், ஐம்பூதங்களைக் கொண்ட உலகத்தை மழுவாயுத முடைய நெடியோனாம் சிவபெருமான் இயற்றினான் என்று குறிப்பிடுவதால் உலகத் தோற்றம் பெறப்படுகிறது.

"ஐதே கம்ம இவ்வுலகு படைத்தோனே" *(நற்.240)*

என்ற நற்றிணைப் பாடலடி, உலகத்தைப் படைத்தவன் தலைவன் சென்ற கொடிய பாலை நிலத்தில் சென்று வருந்துவானாக என்கிறது. இதுபோல புறநானூறு,

"படைத்தோன் மன்றஅப் பண்பிலாளன்
இன்னா தம்ம இவ்வுலகம்
இனிய காண்க இதன் இயல்புணர்ந் தோரே" *(புறம்.194)*

என்று குறிப்பிட்டு இன்பத்தையும் துன்பத்தையும் கொண்ட இவ்வுலகம், பண்பில்லாத நான்முகனால் படைக்கப்பட்ட கொடிதான இயற்கையை உடையதாகும். ஆதலால் இவ்வுலகத் தன்மை அறிந்தோர் வீட்டின்பத்தைத் தரும் நல்ல செய்கைகளை அறிந்து செய்யவேண்டும் என்ற பொருளைத் தந்து உலகம் படைக்கப்பட்டதை நிறுவுகிறது. மேலும்,

"அவ் ஏற்றை
பிரிவு கொண்டுஇடைப் போக்கி இனத்தோடு புனத்து ஏற்றி
இரு திறனா நீக்கும் பொதுவர்
உரு கெழு மா நிலம் இயற்றுவான்
விரி திரை நீங்குவான் வியன் குறிப்பு ஒத்தனர்" *(கலி.106)*

எனும் கலித்தொகைப் பாடலடிகள், ஆநிரைகள் ஒன்றுக்கொன்று போர் செய்யாமல் இரண்டு கூறாகப் பிரித்து அவற்றின் நடுவே சில மாடுகளைச் செலுத்தி, விலக்கிப் பின்னர் பசுக் கூட்டங்களை மேயும் இடத்தில் மேய வைப்பர். இத்தகைய இடையர்களின் திறன் உலகத்தைப் படைக்கும்பொழுது கடலையும் நிலத்தையும் ஒதுக்கிப் படைக்கின்ற நான்முகனை ஒத்தது (நச்சர் உரை) என்ற செய்தியைத் தருகின்றன. இச்செய்தி உலகம் கடலோடும் நிலப் பகுதிகளோடும் இறைவனால் படைக்கப்பெற்றது என்பதைக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குறிப்பிடுகிறது. இவ்வாறு உலகத் தோற்றத்தைப் பற்றிச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுவதுடன், உலகம் படைக்கப்பட்டதுதான் என்பதையும், அதைப் படைத்தவன் நான்முகன் மூலமாகிய முழுமுதற் கடவுள்தான் என்பதையும் உணர்த்துகின்றன. இவ்வாறு படைக்கப்பட்ட உலகம் ருத்ர நிலையில் அழிக்கப்படுகிறது என்பதையும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

"நீயே மருந்தில் கணிச்சி வருந்த வட்டித்துக்
கூற்றுவெகுண் டன்ன முன்பொடு
மாற்றிரு வேந்தர் மண்ணோக் கினையே" (புறம். 42)

எனும் பாடலில், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை இடைக்காடனார் பாடுகின்ற பொழுது. புலவர்கள் உன்னை நோக்கினர், நீயோ அவர்களுக்குப் பரிசில் வழங்குவதற்காகக் கணிச்சி என்னும் படைக்கலத்தை உயிர்கள் வருந்தும்வண்ணம் சுழற்றுகின்ற கூற்றுவன் சினந்தாற் போல சினந்து மாற்றாருடைய நிலத்தை நோக்கினாயே என்று வாழ்த்துகிறார். இப்பகுதியில் கணிச்சி என்னும் ஆயுதம் கொண்ட கூற்றுவன் குறிக்கப்பெறுவதால் ருத்திரனுடைய அழிப்புத்தொழில் குறிக்கப்பெறுகிறது எனலாம். அதுபோல,

"நாடு கவினழிய நாமம் தோற்றிக்
கூற்றடு நின்ற யாக்கை போல
நீ சிவந்து உறுத்த நீரழி பாக்கம்" (பதிற்.13)

எனும் புறநானூற்றுப் பாடலில், கூற்றுவனால் தாக்குண்ட உயிரைப் பறிகொடுத்த உடம்பு கணத்துக்குக் கணம் அழிவதுபோல பகைவர் நாட்டு அரண்களும் தாமாக அழியும் என்று இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் போற்றுகின்றார் புலவர் குமட்டூர்க் கண்ணனார். இப்பாடலில் உடம்பின் அழிவு கூறப்பெற்றுள்ளது. அதுபோல,

"உருகெழு மா நிலம் இயற்றுவான்
விரிதிரை நீக்குவான் வியன்குறிப்பு ஒத்தனர்" (கலி.106)

எனும் பாடலில், நிலத்தைப் படைத்தற்கு அகற்சியையும் கருத்தினையும் உடைய அந்நிலத்தை மறைத்துக் கிடந்த கடலைப் போக்கும் நான்முகனை ஒத்தார் (நச்சர் உரை) எனக் கடலை நீக்குகின்ற செயல் கூறப்படுகின்றது. இவ்வாறு படைத்தலும் அழித்தலும் இறைவனுக்கு இருப்பது போல காத்தலாகிய தொழிலையும் சேர்த்து மூன்று தொழில்களையும் செய்யக்கூடியவன் இறைவன் என்பதைப் புறநானூற்றின் 56- ஆவது பாடல், ஆனேற்றுக் கொடியினை உடையவனும் தீப்போன்ற சடையினை உடையவனும், கணிச்சியாகிய மழுப்படையை உடையவனும் ஆகிய நீலமணி போலும் கழுத்தினை உடையோனும் (சிவன்), பனைக்கொடியை உடையவனும் (பலராமன்), நீலமணி போலும் திருமேனியையும், கருடக்கொடியை உடையவனும் (திருமால்), மயிலை ஊர்தியாகக் கொண்டவனும் (முருகன்) ஆகிய நால்வருள்ளும் கோபத்தால் நீ கூற்றமாகிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவனை ஒப்பாய், வலிமையால் பலராமனை ஒப்பாய், புகழால் திருமாலை ஒப்பாய், கருதியதை முடித்தலால் முருகனை ஒப்பாய் என்று கருத்தினைத் தந்து முழுமுதற் பொருளாம் சிவபெருமான் நால்வகைத் தெய்வ நிலையில் செயல்படுவதைக் குறிப்பிடுகிறது. பரிபாடலும்,

"முதல்முறை இடைமுறை கடைமுறைத் தொழிலில்
பிறவாப் பிறப்பிலே பிறப்பித்தோர் இலையே" *(பரி.3)*

என்று குறிப்பிட்டு முதல்முறை, இடைமுறை, கடைமுறை என்னும் இம்முத்தொழில் நிகழ்ச்சிகளைச் செய்பவனாகிய இறைவன், பிறப்பிக்காத பிறப்பு எதுவும் இல்லை. அதே நேரத்தில் அவனைப் பிறப்பித்தவர் யாரும் இல்லை என்று இறைத் தத்துவத்தைக் குறிப்பிடுகிறது. இவ்வாறு சங்க இலக்கியங்கள் இறைவனுக்குரிய முத்தொழில்களைக் குறிப்பிட்டுக் காட்டிச் சைவ சமயக் கொள்கைகளுக்கு ஆதாரமாக விளங்குகின்றன. இதனை அடியொற்றியே பின்னால் வந்த திருமுறைகள், சாத்திரங்கள் விரிவாகப் பேசுகின்றன.

"ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய்" *(திருவாசகம்.8:1:1)*

"நலங்கிளர் தோற்றம் நாசம் தனக்கிலா நாதன்
சார்பினில் தோன்றும்" *(சிவஞான.சுப.24)*

என்றெல்லாம் குறிப்பிடுகின்றன. எனவே, சைவ சமயக் கொள்கைகளில் பதி பற்றிய செய்திகளைச் சங்க இலக்கியங்கள் "தத்துவ நிலையில்" முன்னோடியான கருத்துக்களைத் தருகின்றன என்பது பெறப்படுகிறது.

இதுகாறும் எடுத்துக் காட்டியவற்றால் இறைவனது (பதியினது) பொருள்சேர் புகழை விரித்துரைக்கும் திருமுறைகள், சாத்திரங்கள் ஆகியவற்றின் கருத்துக்களுக்கு மூலமாகச் சங்க இலக்கியங்கள் கடவுள் உண்டு என்ற கருத்தினையும், சிவனைத் தெய்வம், இறைவன், முழுமுதல் தெய்வம், முதல்வன், தன்னேரில்லாதவன், தலைமைப் பண்பினை உடையவன், முத்தொழிலைச் செய்ய வல்லவன் என்றெல்லாம் குறிப்பிடுகின்றன என்பதை அறியமுடிகின்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

6. சங்க இலக்கியங்களில் உயிர்க் கொள்கை

மெய்ப்பொருளியலின் முப்பொருள் இயல் குறித்த ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறுகின்ற இரண்டாவது பொருள் உயிராகும். உயிர் பற்றி சைவ சித்தாந்தம் உண்டு என்று நிலைநாட்டி, உயிர் குறித்தான தத்துவங்களைத் தருகிறது. சிவஞான போதம் மூன்றாஞ் சூத்திரம் உயிர் உண்டு என்கிறது. இதனை, இரண்டு நிலைகளில் நிலைநாட்டுகின்றது சிவஞான போதம். இதில் ஒன்று உயிரைப் பற்றிப் பிறர் கூறும் கருத்துக்களை மறுப்பது. இரண்டாவது உடம்போடு உயிர் இணைத்துக் கூறப்பெறுவதால் உயிர் உண்டு என்று நிறுவுவது. முதலில் உயிர் பற்றிப் பிறர் கூறும் ஏழு கருத்துக்களைச் சிவஞான போதம் மறுக்கிறது. அவற்றைப் பின்வருமாறு காண்போம்.

1. புத்த மதத்தைச் சார்ந்த மாத்தியமிகர், உயிர் என்பது இல்லை என்றும் உயிர் என்பது சூனியம் என்றும் கூறுவர்.

மறுப்பு

ஆன்மாவை இல்லை என்று மறுக்கும் சூனியவாதிகளும், இல்லை என்று வெறுமே கூறாமல் ஒவ்வொரு பொருளையும் இது ஆன்மா இல்லை என்று ஒவ்வொன்றாக நீக்கிக்கொண்டே வரவேண்டும். இவ்வாறு ஒன்றை இல்லை என்று கூறுவதற்கு அறிவு வேண்டும். அதாவது உடல், ஆன்மா இல்லை, ஐம்பொறிகள் ஆன்மா இல்லை என்று கூறுவதற்கு ஆராய்ச்சி செய்கின்ற அறிவு வேண்டும். எனவே, இல்லை என்று வாதிடுவது அறிவுடைப் பொருளாகும். எந்த அறிவு ஒவ்வொன்றையும் இல்லை என்று நீக்குகிறதோ அந்த அறிவினை இல்லை என்று மறுத்தல் இயலாது. எனவே, அந்த அறிவே ஆன்மா ஆகும். அதாவது அறிபொருளாகிய ஆன்மா ஒன்று உண்டு என்பதாம்.

2. ஆன்மா என்ற அறிவுடைப்பொருளை உண்டு என்று ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், அந்த ஆன்மா என்பது உடலே ஆகும் என்பர் உலகாயதர்.

மறுப்பு

உடம்பைக் குறிப்பிடும் பொழுது என் உடம்பு என்றும் உடம்பின் உறுப்புக்களைக் குறிப்பிடுகின்ற பொழுது எனது கால், எனது கை என்றுதான் குறிப்பிடுகிறோம். அதாவது உடம்பு, கால், கை ஆகியவை எனது என்ற சொல்லோடு இணைந்து, உடம்பை, உறுப்புக்களை உயிரிடத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. ஆதலால் உடம்புக்கு வேறாக உயிர் என்ற ஒன்று உண்டு என்பதை எனது உடல், கை, கால் எனக் கூறுவதால் உணரமுடிகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதாவது எனது உடல் என்பதில் எனது என்பது உயிரையும் உடம்பு, கை, கால் என்பது உயிரிலிருந்து வேறுபட்ட பொருள்களையும் குறிக்கிறது. நான் உடம்பு, நான் கை என்று கூறாது, எனது உடம்பு, எனது கை என்று கூறுகின்ற வேறுபாட்டை உணரவேண்டும்.

3. **ஐம்பொறிகளே ஆன்மா என்று கூறுபவர்களை இந்திரிய ஆன்மவாதிகள் என்பர்.**

மறுப்பு

இரண்டாவது நிலையில் தேக ஆன்மவாதிகளை மறுத்து மூன்றாவதாக இந்திரிய ஆன்மவாதிகள் மறுக்கப்படுகிறார்கள். இந்திரிய ஆன்மவாதிகள் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகள் - ஐந்து புலன்களாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து புலன்களை அறிவதால் ஆன்மா வேறு உண்டு என்று எவ்வாறு கூறமுடியும் என்கின்றனர். ஆனால், ஓசை முதலிய ஐந்து புலன்களில் ஐம்பொறிகளாகிய மெய் முதலியன ஒன்று ஒன்றை மட்டும்தான் அறியும். அதாவது மூக்கு என்றால் நாற்றத்தை மட்டும்தான் அறியும். காது என்றால் ஓசையை மட்டும்தான் கேட்கும். எனவே, ஒன்று ஒன்றைத்தான் அறியும். ஆனால், சுவை முதலாகிய ஐந்து புலன்களையும் உயிர் என்ற ஒன்று ஒருசேர அறிகிறது. எனவே, ஐம்புலன்களையும் அறிகின்ற ஆற்றல் ஆன்மாவிற்கு உண்டு. ஐம்புலன்களை ஐம்பொறிகள் மூலம் அறிகின்ற ஆன்மா ஐம்பொறிகளாக முடியாது. எது ஐந்து பயனையும் அறிகிறதோ அதுவே ஆன்மாவாகும்.

4. **ஐம்பொறிகளின் தொழிலையும் அறிவது ஆன்மா என்பது பொருத்தமாகும். ஆனால், அந்த ஆன்மா புரியட்ட தேகம் என்று கூறப்படும் நுண் உடம்பே ஆகும் என்பர் சூக்கும தேக ஆன்மவாதிகள்.**

மறுப்பு

கனவில் நிகழ்வதை அறிகின்ற சூட்சும உடம்புதான் நனவிலும் இயங்குகின்ற ஆன்மா ஆகும் என்பது இவர்தம் கொள்கையாகும். ஆனால், கனவில் அறிவதை நனவில் ஆன்மா மாறுபட்டு அறியும். அதுபோல நனவில் அறிந்ததைக் கனவில் மாறுபட்டு அறியும். அதாவது கனவில் நிகழுகின்ற நிகழ்ச்சி கண்விழித்த பிறகு முழுமையாக அறியப்பெறுவதில்லை. மேலும், தெளிவாக அறியப்பெறுவதில்லை. கனவில் ஒருவர் இறந்ததாகக் கண்டால், விழித்தவுடன் அவரை நேரில் பார்க்கிறோம். இது மாறுதலாகும். மேலும், கனவில் உடல் அசையாது வேறு ஓர் ஊருக்குச் சென்றதாகக் கண்டது கண் விழித்தபிறகு உள்ளூரிலேயே இருப்பது அறியப்படுகிறது. இவ்வாறு கனவு, நனவு மாறுபாடாக அமைவதுண்டு. அதுபோலவே நனவில் நடந்தது கனவில் மாறுபாடாக அமையலாம். இந்த அடிப்படையில் கனவில் இயங்குகின்ற நுண்ணுடம்பை ஆன்மாவாகக் கூறுவது பொருத்தமன்று. உயிரானது நுண் உடம்பிலிருந்து வேறுபட்டது. நனவில் பரு உடம்பைப் பொருந்தியும், கனவில் அக உடம்பைப் பொருந்தியும் அறிவது ஆன்மா ஆகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5. நனவிலும் கனவிலும் பிராணவாயு இயங்குவதால் பிராண வாயுவே ஆன்மா என்பார்கள் பிராண ஆன்மவாதிகள்.

மறுப்பு

கனவு, நனவை ஏற்றுக்கொண்ட பிராணவாயு ஆன்மவாதிகள், இரண்டிலும் இயங்குகின்ற பிராண வாயுவை ஆன்மா என்பார்கள். இது பொருந்தாது, ஏனென்றால் நனவில் இயங்குகின்ற பிராண வாயு உறங்கும் போதும் இயங்குகிறது. அவ்வாறு இயங்கும்போது உறக்கத்திலும் அது செயல்பட வேண்டும் அல்லவா? அதாவது நனவில் உண்பது, நடப்பது, ஓதுவது போன்ற செயல்களைச் செய்வதுபோல உறக்கத்திலும் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதில்லை. அதாவது ஆன்மா உறக்கதில் மூச்சுக்காற்று இருந்தாலும் உடம்பைச் செயல்பட வைக்காது உறங்கவைக்கின்றது. மேலும், பிராண வாயுதான் ஆன்மா என்றால் - நனவில் உடம்பைச் செயல்பட வைப்பதுபோல் - உறக்கத்திலும் இயங்கிக் கொண்டிருக்கின்ற பிராணவாயு- உடம்பையும் இயங்கச் செய்ய வேண்டும். அவ்வாறு உடம்பை இயங்க வைக்காது தான் மட்டும் இயங்குகிறது. எனவே, உறக்கத்தில் பிராணவாயுவை இயங்க வைத்து - உடம்பு இயங்காது தூக்கத்தைத் தருகின்ற ஆன்மா பிராண வாயுவிலிருந்து வேறுபட்டது ஆகும்.

6. பிரம்மம் (கடவுள்) என்பது சித்துப் பொருள். எனவே, சித்துப் பொருளாகிய பிரம்மமே ஆன்மாவாகும் என்பர் பிரம்ம ஆன்மவாதிகள்.

மறுப்பு

உடம்பு, கனவு, நனவு, பிராணவாயு இவையெல்லாம் அசத்துப் பொருள்கள். கடவுளாகிய பிரம்மம் மட்டுமே அறிவுப் பொருள். எனவே, அறிவுடைப் பொருள் ஆன்மா என்பதால் பிரமமே ஆன்மா என்பர் இவர்கள். ஆனால், இது பொருந்தாது. ஆன்மாவானது ஒடுக்கத்தை உடையது. ஒடுக்கத்தில் ஆன்மா செயல்படுவதில்லை. அதாவது அறிவு செயல்படுவதில்லை. பிறப்பு இறப்புக்களில் ஆன்மா செயல்படுவதும், ஒடுங்கி இருப்பதுமாக அமைகிறது. ஆனால், பிரம்மமோ (கடவுளோ) தோன்றுவதுமில்லை, அழிவதுமில்லை. கால மாறுபாடுகளையும் கொள்வதில்லை. எனவே, ஒடுங்குகின்ற குறையுடைய ஆன்மா என்றும் ஒரே நிலையாக உள்ள பிரம்மமாக இருக்கமுடியாது.

7. இந்திரியங்கள், சூட்சும உடம்பு, பிராணவாயு ஆகிய அனைத்தும் சேர்ந்ததுதான் ஆன்மா என்ற கொள்கையை உடையவர் வைபாடிகர் போன்ற சமயத்தாராவர்.

மறுப்பு

இவர்கள் உடம்பு முதலிய ஒவ்வொன்றும் ஆன்மா அன்று என்று ஒப்புக்கொண்டு, அவை அனைத்தும் கூடிய கூட்டமே ஆன்மா என்பர். எனவே, இவர்கள் சமூக ஆன்மவாதிகள் எனப்படுவர். இது பொருந்தாது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஏனென்றால் முன்பு கூறப்பட்ட உடம்பு முதலியவற்றிற்குத் தனித்தனியாக உடம்பு என்றும் இந்திரியம் என்றும் பெயர் உண்டு. இவை அனைத்தையும் ஆன்மா என்ற பெயரால் அழைக்க முடியாது. ஏனென்றால் உடம்பு முதலியவை மாயையின் காரியங்கள் என்ற கொள்கையை இவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். மாயையாக இருக்கின்ற உடம்பை அதாவது மயக்கத்தைத் தருகின்ற உடம்பை, அறிவுநிலையில் இருக்கின்ற ஆன்மாவாகக் கூறமுடியாது. இவ்வாறு ஏழு கொள்கைகள் மறுக்கப்பட்டு ஆன்மா பற்றிக் கீழ்க்கண்ட முடிவு கூறப்படுகிறது.

மாயையின் காரியங்களால் உருவாக்கப்பெறுகின்ற தூல உடம்பு, சூக்கும உடம்பு, பர உடம்பு ஆகிய மூன்றும் அடங்க, தனு என்று கூறப்படுகின்ற உடம்பினுள் அதனை இயக்குகின்ற அறிவாகிய ஆன்மா என்ற ஒன்று உண்டு. அது அனுமானத்தால் அறியப்படுவது என்பதே சித்தாந்தத்தின் முடிபு. எனவேதான் தமிழிலக்கணத்தில் அறிவை அடிப்படையாக வைத்து, அவை ஓரறிவு, ஈரறிவு என்று குறிக்கப்பெறுகின்றன.

> "ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே
> இரண்டு அறிவதுவே அதனொடு நாவே
> மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே
> நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே
> ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே
> ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே
> நேரிதின் உணர்ந்தோர் நெறிப் படுத்தினரே" *(தொல்.மரபு.27)*

என்கிறது தொல்காப்பியம். எனவே, அறிவு நிலையில் ஆன்மா உணரப்படுகிறது என்பது இச்சூத்திரத்தால் பெறப்படுகிறது. இவ்வாறு உயிர் பற்றிய விளக்கம் தருகின்ற சிவஞான போதம்,

> "உளது இலது என்றலின், எனது உடல் என்றலின்
> ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படில்
> உண்டி வினை இன்மையின் உணர்த்த உணர்தலின்
> மாயா இயந்திரத் தனவினுள் ஆன்மா" *(சிவஞான.சூ.3)*

என்று உயிர் என்பதை உடம்போடு இணைத்து உண்டு என்று நிறுவுகிறது. உயிரானது ஆன்மா என்றும் உயிர் என்றும் பசு என்றும் வழங்கப்பெறுகின்றது. இவ்வாறு மூன்று சொற்களால் வழங்கப்பெறுகின்ற உயிர்பற்றி சங்க இலக்கியங்களில் பல கருத்துக்கள் வெளிப்பட்டுள்ளன. அவற்றைப் பாகுபடுத்திக் காண்பது நலம் பயக்கும்.

உயிரும் உடம்பும்

சங்க இலக்கியங்கள் உயிர் உண்டு என்பதை ஏற்கின்றன. அவ்வுயிர் உடம்பினின்று வேறுபட்டது என்பதையும் ஏற்கின்றன. உடம்பைவிட்டு உயிர் பிரிகின்ற நிலை உண்டு என்றும் உடம்பும் உயிருமாக இணைந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வாழ்வது உண்டு என்றும் சங்க இலக்கியத் தொடர்கள் விளக்குகின்றன. ஆதனுங்கன் என்ற குறுநில மன்னனைக் கள்ளில் ஆத்திரையனார்,

"எந்தை வாழி ஆதன்................
நெஞ்சந் திறப்போர் நிற்காண் குவரே
நின்யான் மறப்பின் மறக்கும் காலை
என்னுயிர் யாக்கையிற் பிரியும் பொழுதும்
என்னியான் மறப்பின் மறக்குவென்...." (புறம்.175)

என்று பாடுகின்றார். வள்ளலைப் புலவர் மறக்கும் காலம் எது என்பதை, உயிரானது, தன்னுடைய உடம்பை விட்டு நீங்கும் காலத்துத் தன்னை மறக்கும் காலம் உண்டாயின் அப்பொழுது வள்ளலை மறப்பேன் என்று குறிப்பிடுகின்றார். எனவே, உடம்பும் உயிரும் இணைந்திருக்கின்றன என்பதும் உடம்பைவிட்டு உயிர் பிரியுங்காலம் வரும் என்பதும் இப்பகுதியால் பெறப்படுகிறது. ஆதலால் உடம்பினுள் ஆன்மா உள்ளது என்ற சித்தாந்தக் கருத்திற்கு மூலக்கூறாக இச்சங்க இலக்கியப் பாடல் உடம்பையும் உயிரையும் இணைத்துக் கூறுகிறது எனலாம். இதே கருத்தை,

1. "நல் நலம் தொலைய நலம் மிகச் சாஅய்
இன்னுயிர் கழியினும் உரையல்......." (குறுந்.93)

2. "துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்...." (புறம்.182)

3. "நீரின்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" (புறம்.18)

4. "அனையன் என்னாது அத்தக்கோனை
நினையாக் கூற்றம் இன்னுயிர் உய்த்தன்று" (புறம். 221)

5. "..........................உடம்போடு
இன்னுயிர் விரும்பும் கிழமை
தொல் நட்புடையார் தம்முழைச் செலினே" (புறம். 223)

6. "..........................யாக்கை
இன்னுயிர் கழிவதாயினும் நின்மகள்
ஆய்மலர் உன்கண் பசலை
காமநோய் எனச் செப்பாதீமே" (அகம்.52)

என்றவாறெல்லாம் சங்க இலக்கியப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இப்பாடல்கள் உடம்பும் உயிரும் இணைந்திருப்பதையும், உடம்பை விட்டு உயிர் என்பது பிரியும் என்பதையும் சுட்டிக்காட்டுவதைப் பார்க்க முடிகின்றது. இவற்றின் மூலம் சங்க இலக்கியங்கள், உயிர் என்ற ஒன்று உண்டு என்பதையும், அது உடம்போடு சார்ந்துதான் விளங்கும் என்பதையும் உணர்துகின்றன என்பதைப் பார்க்க முடிகின்றது. சங்க இலக்கியங்களில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வெளிப்பட்டிருக்கும் இச்செய்திகள், பின்னர் வந்த சாத்திரங்களில் உயிர்பற்றிய இலக்கணத்தைத் தருவதற்கு அடிப்படையாக அமைந்தன எனலாம். இந்த உயிர் உடம்பைப் பெற்று வாழுகிறது என்பதனைச் சித்தாந்த சாத்திர நூல்களில் ஒன்றான போற்றிப் பஃறொடையில் உமாபதி சிவம் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"..........................எவ்வுயிர்க்கும்- உள்நாடிக்
கட்புலனான் காணார்தம் கைக்கொடுத்த கோலேபோல்
பொற்புடைய மாயைப் புணர்ப்பின் கண் - முற்பால்
தனுகரணமும் புவனமும் தந்து அவற்றால்
மனமுதலால் வந்த விகாரத்தால் - வினையிரண்டும்
காட்டி அதனால் பிறப்பாக்கிக் கைக்கொண்டு
மீட்டறிவு காட்டும் வினை போற்றி........" *(10-14 கண்ணி)*

உயிர்களுக்கு உதவுவதற்காகக் கண்ணற்ற குருடனுக்குக் கோல் கொடுத்து உதவுவது போல, மாயையைக் கூட்டுவித்து அதன்மூலம் உடல், கருவி, உலகு, நுகர்ச்சிப் பொருள்களைத் தந்து, நல்வினை தீவினைகளைப் பொருத்தி, வினைப்பயனை நுகர்வதற்குப் பல பிறப்புக்களைத் தந்து மலநீக்கத்தையும் செய்து, பக்குவம் பெற்றிருக்கின்ற உயிர்களுக்கு எல்லையற்ற பேரின்பத்தைத் தருகின்ற இறைவனின் தொழிலுக்கு நன்றி என்று உமாபதி சிவம் குறிப்பிடுகின்றார். இதன்மூலம் உயிருக்கு உதவுவதற்காக உடம்பு கொடுக்கப்படுகிறது என்பது அழுத்தமாகத் தெரிவிக்கப்படுகிறது. எனவே, உயிரையும் உடம்பையும் இணைத்துப் பேசுகிறது சங்க இலக்கிய மூலக்கூறு. பின்னால் வந்த சைவ சமய சாத்திரங்கள் உயிரின் வினைகளை நீக்குவதற்காக உயிருக்கு உடம்பு கொடுக்கப்படுகிறது என்று குறிப்பிட்டு, உயிருக்கும் உடம்புக்கும் உள்ள தொடர்பினைப் புலப்படுத்துகின்றன.

உயிர் நிலையானது

உயிர் உடம்போடு இணைந்து செயல்படுகின்ற ஒன்று என்பதைக் குறிப்பிட்ட சங்க இலக்கியங்கள், உயிர் என்றும் அழியாதது என்பதை "மன்" என்னும் அடைமொழி கொடுத்துக் குறிப்பிடுகின்றன.

"மன்னுயிர் அறியா துன்னரும் பொதியில்
சூருடை அடுக்கத்து ஆரம் கடுப்ப" *(குறுந்.376)*

"நிலம்புடைப் பெயர்வது அன்றுகொல் இன்றுஎன
மன்னுயிர் மடிந்த மழைமாறு அமையத்து" *(அகம்.31)*

"மன்னுயிர் ஏமுற மலர் ஞாலம் புரவுஈன்று
பன்னீரால் பாய்புனல் பரந்து ஊட்டி....." *(கலி.34)*

"மண்ணுடை ஞாலத்து மன்னுயிர்க்கு எஞ்சாது
ஈத்துக்கை தண்டாக் கைகடுந் துப்பின்" *(பதிற்.15)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"மலர்தலை உலகத்து மன்னுயிர் காக்கும்
முரசு முழங்கு தானை மூவருள்ளும்" *(பெரும்பாண்.32-33)*

என்ற சங்க இலக்கியப் பாடல்கள் உயிரைக் குறிக்கின்றபொழுது, மன் என்ற அடைமொழியைச் சேர்த்துக் கொண்டிருப்பதை அறியலாம். மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் என்ற தொடரில் உலகம் நிலையாமை உடைத்து என்று குறிப்பிடுவது போல மன்னுயிர் நிலையானது என்பதன் மூலம் உயிர் நிலைத்திருக்கிறது என்பதைச் சங்க இலக்கியங்கள் வலியுறுத்துவதை அறியலாம். எனவே, உயிர் என்பது என்றைக்கும் நிலையானது, அழிவில்லாதது என்ற சைவ சித்தாந்த அடிப்படைக் கருத்துக்குச் சங்க இலக்கியங்கள் மூலக் கூறுகளாக அமைகின்றன. இதனை வழிமொழியும் திருமுறைகளும் சைவ சித்தாந்தமும் உயிரை நிலையானது என்றே குறிப்பிடுகின்றன.

"வாணிலவு தாரகையும் மண்ணும் விண்ணும்
மன்னுயிரும் என்னுயிருந் தானாய்........" *(திருநாவுக்.6:91:7)*

"பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அனாதி" *(திரு.10:4:3)*

"......................................எண்ணிலா
மன்னுயிர்க்கும் இந்த வழக்கேஆய்........." *(போற்றிப்.39)*

"எண்ணரிதாய் நித்தமாய் இருள்மலத்தில் அழுந்தி" *(சிவப்.19)*

எனும் பாடலடிகள் உயிர் நித்தம் என்று குறிப்பிடுவதைப் பார்க்க முடிகின்றது.

"கரை பொருது இரங்கும் கனைஇரு முந்நீர்
திரையிடு மணலினும் பலரே உரைசெல
மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே" *(மதுரைக்.235-238)*

உலகங்களைத் தன் கீழ் ஆண்டு எந்தப்பயனும் இல்லாது மாண்டோர் என்பது இப்பாடலடிகளின் பொருள். எனவே, உயிர்களைப் பற்றி குறிப்பிடும் பொழுது, உயர்ந்த எண்ணிக்கையைக் காட்டுவதற்காக கடல் மணல் உவமையாக்கப் பட்டுள்ளதைப் பார்க்க முடிகின்றது. இதிலிருந்து இறந்தவர்களை எண்ண இயலாது என்பது பெறப்படுகிறது. சங்க இலக்கியம் கூறியுள்ள இச்செய்தியைப் பின்னர் வந்த சித்தாந்த சாத்திரங்களில் ஒன்றான திருவருட்பயன்,

"பிறந்த நாள் மேலும் பிறக்கும்நாள் போலும்
துறந்தோர் துறப்போர் தொகை" *(திருவருட்.11)*

என்று குறிப்பிடுகிறது. உயிர்களில் முத்தி அடைந்தோர்களின் தொகை உயிர்கள் பிறந்து வாழ்ந்ததற்குச் சமமாகும். முத்தி அடையாமல் வாழ்ந்துகொண்டிருக்கும் உயிர்களின் தொகை இனிப் பிறந்து வாழும் நாட்களுக்குச் சமமாகும் என்பதைக் குறிப்பிட்டு, உயிர்கள் எண்ணற்றவை என்று சித்தாந்தம் குறிப்பிடுகிறது. இக்கருத்தோடு,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று" *(குறள்.22)*

என்ற திருக்குறளையும் ஒப்பிட்டுக் காணலாம்.

"ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்"
(திருவாசகம்.8:7:11)

எனத் திருவாசகப் பாடலில் உய்வார்கள் என்று உயிர்களின் பன்மை கூறப்பெற்றுள்ளது.

உயிர்கள் வினைக்கு ஏற்ப உடம்புகளை எடுத்து அச்சுமாறிப் பல பிறப்புக்களைப் பெற்றுவரும் என்பதைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

"தேய்தல் உண்மையும் பெருகல் உண்மையும்
மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும்
அறியா தோரையும் அறியக் காட்டி" *(புறம்.27)*

"சாதலும் புதுவதன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந் தன்றும் இலமே" *(புறம்.192)*

"சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவின்
பிறப்பு பிறிதாகுவது ஆயின்
மறக்குவேன் கொல் என் காதலன்...." *(நற்.397)*

"இம்மை மாறி மறுமை ஆயினும்
நீ ஆகியர் எம் கணவனை" *(குறுந்.49)*

"யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
.................................." *(குறுந்.40)*

என்னும் சங்க இலக்கியப் பாடல்கள், உயிர் எடுக்கின்ற பிறப்புக்கள் பல என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. இவ்வாறு சங்க இலக்கியம் கூறியதைப் பின்னால் வந்த திருமுறைகளும், சாத்திரங்களும் வழிமொழிந்துள்ளன.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" (திருவாசகம்.8:1:1)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும் மறவாமை வேண்டும்" (பெரிய.12:24:60)

என்று திருமுறைகள் உயிர்கள் பல பிறப்பெடுக்கும் என்பதை வலியுறுத்துகின்றன. சித்தாந்த சாத்திரங்களில் ஒன்றான சிவஞான சித்தியார்,

"இருவினை - அநாதி ஆதி
இயற்றலால் நுகர்வால் அந்தம்
வரும் மலம் சார்ந்து மாயா
உருவுகள் மருவி ஆர்த்துத்
தருசெயல் முறைமை யாலே
தான்பல பேதம் காட்டி
அருவதாய் நின்று அரன்தன்
ஆணையின் அமர்ந்து செல்லும்" (சிவஞான.சுப.130)

என்று குறிப்பிடுகிறது. இப்பாடலில் "மாயா உருவுகள் மருவி" என்பது உயிரானது ஆணவ மலத்தோடு பல பிறப்புக்களாகிய உருவங்களை அடையும் என்னும் பொருள்பட வந்துள்ளது. இருவினைக்கு ஏற்றவாறு உயிர் உடம்பெடுக்கும் என்பதையும் இப்பாடல் வெளிப்படுத்துகின்றது.

சொர்க்க - நரக வாழ்வியல்

உயிர்கள், வினைக்கு ஏற்பப் பல பிறவிகள் எடுத்து வாழும் என்பதும் பாவ புண்ணியங்களைச் செய்து, அதற்கேற்ற சொர்க்க நரகங்களை அடையும் என்பதும் தமிழர்களின் நம்பிக்கையாகும். இதனைத் திருவள்ளுவர்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" (குறள்.50)

என்று புத்தேளிர் உலகத்தைக் குறிப்பிடுகின்றார். புத்தேளிர் உலகம் குறித்து,

"அரும் பெறல் அமிழ்தம் ஆர்பதம் ஆகப்
பெரும் பெயர் உலகம் பெறீஇயரோ...." (குறுந்.83)

"நிலந்தொட்டுப் புகார் வானம் ஏறார்
இலங்கு இரு முந்நீர் காலின் செல்லார்" (குறுந்.130)

"இன்னாமையினும் இனிதோ
இனிதெனப் படூஉம் புத்தேள் நாடே" (குறுந்.288)

"அம்ம வாழி தோழி! அன்னைக்கு
உயர்நிலை உலகமும் சிறிதால்....." (குறுந்.361)

"இம்மைச் செய்தது மறுமைக்காம் எனும்
அறவிலை வணிகன் ஆய்அலன்..." (புறம்.134)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"மாந்தரஞ் சேரல் இரும்பொறை ஓம்பிய நாடே
புத்தேள் உலகத்து அற்று எனக்கேட்டு உவந்து" *(புறம்.22)*

"எத்துணை ஆயினும் ஈத்தல் நன்றுஎன
மறுமை நோகின்றோ................" *(புறம்.141)*

"காவல் வெண்குடை கால்பரிந் துலறவும்
கால்இயல் கலிமாக் கதியில் வைகவும்
மேலோர் உலகம் எய்தினன்............" *(புறம்.229)*

"கொடி நுடங்கு யானை நெடுமா வளவன்
தேவர் உலகம் எய்தினன்..............." *(புறம்.228)*

"பெறற்கருஞ் தொல்சீர்த் துறக்கம் ஏய்க்கும்
பொய்யா மரபின் பூமலி பெருந்துறை" *(பெரும்பாண்.388-389)*

என்றெல்லாம் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு உயிர்கள் மறுமை அடைவதும் அங்கு புத்தேளிர் நாட்டில் வாழ்வதும் சைவ சமயத்தின் நம்பிக்கையாகும். இதனையே பின்னர் வந்த திருமுறைகளும், சித்தாந்த நூல்களும் வழிமொழிகின்றன.

"மந்திரமும் மறைப்பொருளும் ஆனான் தன்னை
மறுமையும் இம்மையும் ஆனான் தன்னை" *(திருநாவுக்.6:29:4)*

"புகர்ஏதும் இலாத புத்தேள் உலகில்
நிகரா நெல்லிக் காவுள் நிலாயவனை" *(திருஞான.2:19:11)*

"பொறி அரவம் அதுசுற்றிப் பொருப்பே மத்
தாகப் புத்தேளிர் கூடி" *(திருஞான.1:132:2)*

"........இம்மையிலே உயிரின்
பற்றறுத்து பரத்தை அடை பராவு சிவர் அன்றோ" *(சிவஞான.சி.287)*

இவ்வாறு உயிர்கள் வாழ்ந்து மறுமையில் புத்தேள் உலகம் அடைவதைச் சங்க இலக்கியங்கள் வழி திருமுறைகளும் சாத்திரங்களும் கூறுகின்றன.

நிரையம்

உயிர் செய்த புண்ணியத்திற்கு ஏற்பப் புத்தேளிர் உலகமாம் சொர்க்கத்திற்குச் செல்வது போல, பாவங்களைச் செய்த உயிர் நரகத்திற்குச் செல்லுதல் உண்டு என்பது சைவ சமயத்தின் நம்பிக்கை. நிரையம் என்ற சொல், நரகம் என்ற பொருளில் சங்க இலக்கியங்களில் வழங்குகின்றது.

"நிரைய ஒள்வாள் இளையர் பெருமகன்" *(குறுந்.258)*

"பெண்கொலை புரிந்த நன்னன்போல
வரையா நிரையத்துச் செலீயரோ அன்னை" *(குறுந்.292)*

"வரையா நயவினர் நிரையம் பேணார்" *(நற்.329)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரையம் கொள்பவரொடு ஒன்றாது...." (புறம்.5)

இப்பாடல்களில் நிரையம் என்பது துன்பத்தைத் தருகின்ற நரகம் என்ற பொருளில் வழங்கியுள்ளது புலனாகின்றது. தீவினை செய்தவர்கள், இத்தகைய நரகத்தை அடைவார்கள் என்று திருமுறைகளும் சித்தாந்த சாத்திரங்களும் கூறுகின்றன.

"நரியைக் குதிரைசெய்வானும் நரகரைத்தேவு செய்வானும்"
(திருநாவுக்.4:4:2)

"நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம், நடலை இல்லோம்" (திருநாவுக்.6:98:1)

"மூவேழ் சுற்றம் முரணுரு நரகிடை
ஆளாமே அருள்அரசே போற்றி" (திருவாசகம்.8:4:1)

"......நினது அடியாரொடு அல்லால் நரகம் புகினும்
எள்ளேன் திருவருளாலே இருக்கப் பெறின்" (திருவாசகம்.8:5:2)

"பொருள் எனக்களித்து அருநரகத்திடை விழப்புகுகின்றேனை"
(திருவாசகம்.8:26:10)

"இந்திரிய வய மயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்கு" (திருவாசகம்.8:31:1)

"ஆதமிலி யான் பிறப்பு இறப்பு என்னும் அருநரகில்
ஆர்தமரும் இன்றியே அழுந்துவேற்கு.........." (திருவாசகம்.8:38:3)

என்றெல்லாம் நரக வாழ்வின் நிலைகளைத் திருமுறைகள் பலவாறு எடுத்துக் கூறுகின்றன. திருமுறைகளைத் தொடர்ந்து சித்தாந்த சாத்திரங்களும் சொர்க்க - நரகங்களைக் குறிப்பிடுவதைப் பார்க்க முடிகின்றது. மேலும், உயிரானது நல்வினையால் வருகின்ற இன்பத்தையும், தீவினையால் வருகின்ற நரகமாகிய துன்பத்தையும் போற்றிப் பஃறொடை கீழ்வருமாறு சுட்டிக்காட்டுகிறது.

"இந்நிலைமை மானிடர்க்கே யன்றி எண்ணிலா
மன்னுயிர்க்கும் இந்த வழக்கே ஆய் - முன்னுடைய
நாள் நாள் வரையில் உடல் பிரித்து நல்வினைக் கண்
வாழ்நாளின் மாலாய் அயனாகி - நீள் நாகர்
வானாடர் கோமுதலாய் வந்த பெரும் பதத்து
நானா விதத்தால் நலம்பெறு நாள் - தான்மாள
வெற்றிக் கடுந்தூதர் வேகத்துடன் வந்து
பற்றித்தம் வெங்குருவின் பாற் காட்ட- இற்றைக்கும்
இல்லையோ பாவி பிறவாமை ஈன்றெடுத்த
நல்லதோர் இன்சொல் நடுவாகச் சொல்லி இவர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செய்திக்குத் தக்க செயலுறுத்துவீர் என்று
வெய்துற்று உரைக்க விடைகொண்டு - மையல்தரும்
செக்கினிடைத் திரித்தும் தீவாயலில் இட்டெரிந்தும்
தக்க நெருப்புத்தூண் தழுவுவித்தும் - மிக்கோங்கும்
நாராசம் காய்ச்சிச் செவிமடுத்தும் நா அரிந்தும்
ஈறாவுன் ஊனைத்தின் என்றடித்தும் - பேராமல்
அங்கு ஆழ் நரகத்து அழுத்துவித்தும்..........." *(39-48 கண்ணிகள்)*

என்று நரகத்தில் எத்தகைய துன்பம் நடக்கும் என்பதை அச்சமுறுத்தும் வண்ணம் அனுமானமாக உமாபதி சிவம் குறிப்பிடுகின்றார். தீவினைக்குரிய துன்பமாக நரகம் சங்க இலக்கியங்களில் உருவகம் செய்ததைச் சித்தாந்த சாத்திரம் கடுமையான தண்டனைகளாக அச்சமூட்டும் வகையில் உருவகப் படுத்தியிருக்கிறது. இவை அனுபவக் கருத்தால் தீவினைகள் செய்யக்கூடாது என்பதற்காகக் கூறப்படுகின்ற உருவகங்கள் ஆகும்.

சீவன் முத்தர்

ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம் உறவு, சீலம், வழுக்கிலாத் தவம், தானங்கள், அடக்கம் அறிவொடு அர்ச்சித்தல் ஆகியவற்றைக் கடமையாகக் கொண்டு உயிர் வாழுமானால் உடம்போடு வாழுகின்ற இந்த உலகத்திலேயே இறைவனின் அருளைப் பெறமுடியும். அவ்வாறு அருள் பெற்று வாழ்கின்றவர்களைச் சைவ சித்தாந்தம் அணைந்தோர் என்று குறிப்பிடுகின்றது. அவர்களைச் சீவன் முத்தர் என்று குறிப்பிடுவதுமுண்டு. இந்தச் சீவன் முத்தர்கள் எவ்விதக் குற்றமும் இல்லாது பிறருக்கு நன்மை ஏற்படும் வண்ணம் மனித நேயத்தோடு வாழுகின்றவர்கள் ஆவார்கள். இந்த மனிதநேயர்களை சீவன் முத்தர்க்குரிய தகுதி உள்ளவர்களைச் சங்க இலக்கியம் பலவாறு பேசுகிறது. இவர்களுக்கு மறுபிறப்பு இல்லை.

திருமுருகாற்றுப்படையில் பண்டைக்காலத்தில் வாழ்ந்த முனிவர்களாகிய சீவன் முத்தர்களின் தோற்றம் குறிக்கப்பெற்றுள்ளது. திருவாவினன் குடியில் தேவர்களோடு முனிவர்கள் வந்தனர். அத்தகைய முனிவர்கள்,

"மாசற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பு எழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல்
பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம் வரம்பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர்..........." *(128-137)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று குறிக்கப் பெற்றுள்ளனர். முனிவர்கள் உணவு, உடை, இவற்றில் ஆசையின்றிக் கோபம் நீங்கிய மனத்தோடு மெய்ப் பொருளை அறிந்த அறிவுடையவராய், எப்பொழுதும் இறைச் சிந்தை உடையவராய் விளங்குபவர் ஆவர் என்று குறிக்கப் பெற்றுள்ளது. பிற சங்க இலக்கியப் பாடல்களிலும் இச்சான்றோர்கள் குறிப்பாகக் காட்டப்பெறுகின்றனர்.

"கடவுள் நண்ணிய பாலோர் போல" *(குறுந்.203)*

"அழிதவப் படிவத்து அயரியோரும்
மறுபிறப்பு இல்லெனும் மடவோரும் சேரார்
நின்நிழல்................................" *(பரி.5:75-76)*

"வாராச் சேண்புலம் படர்ந்தோர் அளிக்க...." *(பதிற்.61)*

"ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர்........................." *(புறம்.191)*

"அருந்தவம் ஆற்றியார் நுகர்ச்சி போல்...." *(கலி.30)*

"இடன் விட்டு இயங்கா இமையத்து ஒருபால்
இறை கொண்டு இருந்தன்ன நல்லார்....." *(கலி.92)*

"உடனுறை வாழ்க்கைக்கு உதவி உறையும்
கடவுளர் கண் தங்கினேன்" *(கலி.93)*

"திருக் கிளர் கோயில் ஒரு சிறைத் தங்கி
தவம் செய் மாக்கள் தம்உடம்பு இடாஅது
அதன் பயம் எய்திய அளவை மான" *(பொருநர்.90-92)*

என்பன போன்ற பாடற்பகுதிகள் தவம்செய் மாக்களையும், கடவுள் பேணிய அறிஞர்களையும் குறிப்பிட்டுக் காட்டுகின்றன. இத்தகைய அறம்செய் மாக்களை, கடவுள்மாட்டு நயந்த பக்கமுடைய உயிர்களைப் பின்னால் வந்த சாத்திரங்கள் அணைந்தோராகக் காட்டுகின்றன. திருமுறை பாடிய அருளாளர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் உள்ளிட்ட அனைவரும் இவ்வுலகில் வாழுகின்ற பொழுதே இறைவனுடைய அருள் பெற்றிருந்தனர். தங்கள் செயல்களை எல்லாம் இறைச் சிந்தனையோடு கூடிய வாழ்க்கைக்கு உரியதாக்கி, உலகப் பொருள்களில் நுகர்ச்சியின்றி சமுதாயத் தொண்டினைச் செய்கின்ற பெருமக்களாக வாழ்ந்தனர். இவர்களைத்தான் சைவ சமயம் சீவன்முத்தர் என்று குறிப்பிடுகிறது.

சித்தாந்த சாத்திரங்கள் அனைத்திலும் இந்த அணைந்தோர் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. இவர்கள் ஞானிகள் என்ற முறையில் குறிப்பிடப்பட்டு, இவர்களின் தன்மைகள் விரிவாகக் கூறப்படுகின்றன. திருவருட்பயனில் பத்தாம் அதிகாரம் அணைந்தோர் தன்மையைப் பற்றிக் கூறுவதாகும். "ஓங்குணர்வின் உள்ளடக்கி உள்ளத்துள் இன்புஒடுங்கத்" (91), "போகம் நுகர் எந்தொழிலும் மேவார்" (92), ஒன்று (சிவன்) அல்லாது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அறியார்" (93) "புலனடக்கித் தம் முதற்கண் புக்குறுவார்" (94), "எங்கும் இவனை (சிவனை) ஒழிந்து உண்டாதல் இல்" (95) "எள்ளும் திறமேதும் இல்" (96), "ஏறும் வினை தோன்றில் அருளே சுடும்" (98), "மும்மை தரும்வினைகள் மூளாவாம்" (99), "கருணை வெள்ளத் தலைவர்" (100) என்றெல்லாம் சீவன் முத்தரைப் பற்றிய செய்திகளைச் சித்தாந்தம் குறிப்பிடுகிறது.

சைவ சமயக் கொள்கைகளில் முப்பொருளாக விளங்குவது இரண்டாவதாக அமைந்த உயிராகும். இதனைத் தத்துவங்கள் பசு என்று குறிப்பிடும். பசு - பதிதல் என்பது பொருள். "உ" என்பது உடையவனைக் குறிப்பிடும். எனவே, குற்றங்கள் பதிந்து இருக்கின்ற தன்மையை உடைய உயிர்கள் பசு என்று அழைக்கப்படுகின்றன. இப்பசுவாம் உயிர்கள் உண்டு என்பது தத்துவக்காரர்களால் உறுதிப்படுத்தப் பெறுகிறது. இவை இறைவன் தோன்றிய காலத்தே தாமும் தோன்றி இறைவனைப் போல அழியாத்தன்மையில் இருப்பனவாம். உயிர்கள் எண்ணிக்கையை வரையறுக்க இயலாது. அவை உடம்பைச் சார்ந்து பிறப்பெடுத்து உலகில் வாழுகின்றன. பல பிறவிகளை எடுக்கின்றன. பல பிறப்புக்களைப் பெற்ற உயிர்கள், வையத்துள் சொர்க்க நரக வாழ்வைப் பெற்று வாழ்வாங்கு வாழும். என்றாலும் ஒரு பிறவியில் இவ்வுலக வாழ்விலேயே இறையருள் பெற்ற உயிர்கள் சீவன் முத்தராக வாழவும் இயலும் என்பன உள்ளிட்ட செய்திகள் சைவ சித்தாந்த அடிப்படையில் உயிர் பற்றிய சைவக் கொள்கையாகும். இக்கொள்கைகளுக்கு மூலக் கூறுகளைச் சங்க இலக்கியங்கள் பெற்றிருந்தன என்பதையே இப்பகுதி எடுத்தியம்பியது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

7. சங்க இலக்கியங்களில் பாசக் கொள்கை

சைவ சமயத்தில் மூன்றாவது பொருளாகக் கூறப்படுவது பாசம் என்பதாகும். பாசம் என்ற சொல்லுக்கு கட்டுவது என்று பொருள். தமிழில் கயிறு என்ற சொல்லிற்கு நேரிய சொல்லாகவே வடமொழியில் பாசம் என்ற சொல் உள்ளது. இந்தப் பாசம்/ கயிறு என்ற சொற்களைவிடத் தளை என்ற சொல்லையே சிறந்த சொல்லாகக் கொள்வர் சைவ தத்துவ அறிஞர்கள்.

"விளையாததோர் பரிசில்வரு பசுபாச வேதனை ஒண்
தளையாயினதவிர அவ்வருள் தலைவன்தன்னது சார்பாம்
களையார் தருகவிராயிரம் உடையவ் அவனோடு
முளைமாமதி தவழும் உயர்முதுகுன் றடைவோமே" *(1:12:3)*

என்று திருஞானசம்பந்தர் தளை பற்றிக் குறிப்பிடுவார். இந்தத் தளை என்ற சொல் உயிர்களைச் செயல்பட ஒட்டாது அடக்கி வைத்திருக்கின்ற செயலைக் குறிப்பதாகும். இந்தத் தளை என்ற சொல்லிற்குப் பதிலாகத் தடை என்ற சொல்லையும் பயன்படுத்துதல் உண்டு. ஏனென்றால் தளை என்ற சொல் செய்யுள் வழக்காகும். உலக வழக்கின்படி ஒரு சொல்லைப் பயன்படுத்துவது அனைவருக்கும் எளிதாகப் புலனாகும். எனவே, தளை என்பதைத் தடை என்றும் பயன்படுத்துதல் உண்டு.

"சத்திதன் வடிவு ஏதுஎனில் தடையிலா ஞானமாகும்" (சிவஞான.சி.82)

என்று அருணந்தியார் குறிப்பிடுவார். உயிர்கள் தம் விருப்பப்படி செயல்பட முடியாதவண்ணம் தடையுற்று நிற்கும் பொழுது இத்தடை வினைத்தடை என்று ஆகிறது. இந்த வினைத்தடைதான் காலப்போக்கில் ஊழ்வினை என்றும் ஆயிற்று. எனவே, சங்க இலக்கியங்களில் வினை பற்றியும் ஊழ் பற்றியும் வருகின்ற இடங்களில் எல்லாம் பாசம்பற்றிய செய்திகள் இருப்பதாகக் கொள்ளப்பெறுகிறது.

சைவ சமயத்தில் தளை அல்லது தடை அறிவிற்குரிய தடையாக முதலில் எண்ணப்பெற்று, அந்த அறிவுக்குத் தடையாய் இருப்பது ஆணவம் என்று கொள்ளப்பட்டது. அறியாமை என்பது ஆணவத்தின் காரியமாகும். அறியாமையை ஆணவம் என்று உண்மை விளக்கம் கூறும்.

"ஆறாறு தத்துவமும் சொன்னோம் அடைவாக
மாறா மலம் இரண்டும் வாசொல்லக் - கூறில்
அறியாமை ஆணவம் நீயான சுகதுக்கம்
குறியா வினையென்று கொள்" *(உண்மைவிளக்கம்.22)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆணவம் என்ற சொல்லுக்கு அணுத் தன்மையைச் செய்வது என்பது பொருள். இயற்கையில் விரிவுடையதாகிய உயிரின் அறிவை மிகச் சுருங்கியதாகச் செய்வது ஆணவ மலமாகும். அறிவுத்தடைக்குப் பிறகு செயல்தடை நிகழ்கிறது. அதாவது வாழ்க்கையில் நிகழுகின்ற தொழில்கள் முறையாக நடக்காமல் தடை ஏற்பட்டு இன்பதுன்பங்களை மாறி மாறித் தருகின்ற தொழிலாக நடைபெறுகின்றது. எனவே, இந்தத் தொழில் தடைக்குக் கன்மம் என்ற வினை காரணம் ஆகிறது. ஆகவே, கன்மம் அல்லது வினை என்று சொல்லப்படுவது தொழில் தடையைக் குறிப்பதாகும். கருமம் என்பதே கன்மம் ஆகிறது. கருமம் என்பது செயலைக் குறிப்பதாகும். எனவேதான் பாசத்தில் ஆணவத்திற்குப் பிறகு கன்மத்தை அடுத்த பொருளாகச் சைவ சமயம் கொள்ளும்.

உயிரின் செயலைத் தடைசெய்த பாசம் கன்மம் எனப்படுவது போல உலகத்தில் நிகழும் காரியங்களுக்குத் தடையாக இருப்பது மாயை என்பதாகும். மாயையின் காரியப் பொருளே உலகமாகும். உலகம் மட்டுமல்லாமல் தனு, கரண, போகமும் மாயையின் காரியங்களாகும். தனு என்பது உடம்பைக் குறிக்கும். கரணம் என்பது அகக் கருவி, புறக் கருவிகளைக் குறிக்கும். போகம் என்பது நுகர்ச்சித் தன்மையைக் குறிக்கும். எனவே, சைவ சமயம் பாசத்தைத் தத்துவ நிலையில் விரித்துச் சொல்லும் பொழுது ஆணவம், கன்மம், மாயை என்று விரித்துக் கொள்கைகளைத் தருகிறது. எவ்வாறு இருப்பினும் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களாகிய பாசம் தொடக்கத்தில் வினையாகக் கருதப்பட்டது. அந்த வினை நல்வினை, தீவினை, ஊழ்வினை என்று கொள்ளப்பெற்றது. இவற்றின் அடிப்படையில் வினை சைவ சமயத்தில் ஒரு கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்தக் கொள்கையைச் சங்க இலக்கியங்கள் பலவாறாகக் குறிப்பிடுகின்றன.

நல்வினை தீவினை

வாழ்க்கையில் நடைபெறும் செயல்களுக்கு உரிய இன்பதுன்பங்கள் நல்வினை தீவினைகளால் தான் நிகழுகின்றன என்பதும் நல்வினை தீவினைகள் புண்ணிய பாவங்களாக அமைந்து இன்ப துன்பங்களைத் தருகின்றன என்பதும் சைவ சமயத்தின் நம்பிக்கையாகும். எனவே, சங்க இலக்கியத்தில் இன்ப துன்பங்களுக்கு நல்வினை தீவினைகள் காரணங்களாகக் கூறப்பட்டன. இருவினைகள் உண்டு என்பதைச் சங்க இலக்கியக் காலம் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை அறியமுடிகின்றது. இருவினையை,

> "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
> பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" *(குறள்.5)*

என்று திருக்குறள் குறிப்பிடுகின்றது.

புறநானூற்றில் கோப்பெருஞ்சோழன் தான் வடக்கிருக்கையில் பாடிய பாடல் வினைக்கோட்பாட்டைச் சுட்டிக் காட்டுவதாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உலகில் வாழுகின்ற பொழுது நல்வினை செய்தால் துறக்கம் எய்தி, மறுபிறப்பு இல்லாமல் வாழ்வர் என்ற சமயக் கொள்கையை அப்பாடல் வலியுறுத்துகிறது. வாழுகின்ற காலத்தில் நல்வினையைச் செய்ய வேண்டும் என்று நினைத்துச் செய்தால் - தன் முயற்சியாலே யானையை வேட்டையாட வேண்டும் என்று செல்லுகின்றவன் யானையைப் பெறமுடியும். அறவினையைச் செய்வோமா வேண்டாமா என்று எண்ணுகின்றவர்கள் சிறிய பறவையை வேட்டையாடச் சென்றாலும் அந்தப் பறவை கிடைக்காமலும் போகக்கூடும். எனவே, உயர்ந்த அறத்தை விரும்பி நல்வினையைச் செய்யவேண்டும். அவ்வாறு செய்தால் இருவினையே இல்லாத தேவர் உலகம் சென்று அடையமுடியும். அவ்வாறு அந்த இன்பம் இல்லை என்றாலும் அதற்கு மேலான மறுபிறப்பு இல்லாமையை எய்தக் கூடும். அதுமட்டுமல்லாமல் இந்த உடம்பு இருக்கின்ற பொழுதே நல்வினையைச் செய்து இமயம் போன்ற புகழை நிலைநாட்டினால் குற்றம் இல்லாத உடம்போடு நின்று சீவன் முத்தராய் வாழ்ந்து இறத்தல் கூடும் என்ற பொருள்படக் கோப்பெருஞ்சோழன் பாடியிருக்கிறார்.

“செய்குவம் கொல்லோ நல்வினை எனவே
ஐயம் அறாஅர் கசடு ஈண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவு இல்லோரே
யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே
அதனால் உயர்ந்த வேட்டத்து உயர்ந்திசினோர்க்கு
செய்வினை மருங்கின் எய்தல் உண்டு எனின்
தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்
தொய்யா உலகத்து நுகரச்சி இல்லெனின்
மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும்
மாறிப் பிறவாராயினும் இமயத்துக்
கோடு உயர்ந்தன்ன தம்இசை நட்டு
தீது இல் யாக்கையொடு மாய்தல் தவத்தலையே” (புறம். 214)

இப்பாடலில் தவத்தின் பெருமை கூறப்பெற்றிருப்பதைப் பார்க்கமுடிகின்றது. தவம் என்பது தான் கொண்ட நோக்கத்தில் ஒருமை நிலையில் நின்று வாழ்வதாகும். இங்கு வடக்கிருத்தல் என்ற கொள்கையை நினைந்துக் கோப்பெருஞ்சோழன் தவம் செய்திருக்கிறான். அதுபோல அறத்தையே நினைந்து நல்லதைச் செய்ய வேண்டும் என்ற ஒரே கொள்கையோடு வாழுகின்றவர்கள் தவத்தைச் செய்தவராகவும் கருதப்படுவர். இந்த உயர்ந்த எண்ணம் கொண்டவர்கள், யானை வேட்டையாட வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்துடன் விரும்பிச் சென்றவன், யானையைப் பெறுதல் போல தாம் செய்த அறவினைக்குரிய பயனைப் பெறுவர். அற நல்வினையைச் செய்வோமா வேண்டாமா என்று ஐயமுற்று வாழுகின்றவர்கள் எந்தப் பயனையும் பெற மாட்டார்கள். அது எதுபோல என்றால், காடை என்ற பறவையை வேட்டையாடச் செல்லுகின்றவர்கள், அந்தப் பறவைகூடக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கிடைக்காது வெறுங்கையோடு திரும்புவது போன்றதாகும். இத்தகைய செய்தி முதல் ஐந்து வரிகளில் கூறப்பெற்று அதன்பின் நல்வினையின் பயன் கோப்பெருஞ்சோழனால் வலியுறுத்தப்பெறுகிறது.

உயர்ந்த விருப்பத்தை உடையவர்கள் தாம் செய்யும் நல்வினையின் செயலால் அதற்குரிய பயனை அனுபவித்தல் உண்டென்ற நிலை ஏற்படுமானால் அவர்களுக்குத் தேவர் உலகத்து இன்பம் கிட்டும். அதுமட்டு மல்லாது தேவர் உலகத்து இன்பத்திற்கு மேலான மறுபிறப்பு இல்லாத வீடுபேறு கிடைக்கும். ஆதலால் இந்த உலகத்தில் வாழுகின்ற பொழுதே அறவினைகளைச் செய்து, தங்களுடைய புகழை நிலைநாட்டிப் பெருமை பெற்றவர்கள் பழுதில்லாத உடம்போடு மாய்தல் கூடும் (சைவம் கூறுகின்ற சீவன் முத்தர் நிலை). இப்பாடற் பகுதியில் தொய்யா உலகத்து என்பது தேவர் உலகத்தைக் குறிக்கும். இதற்குக் குறிப்புரை எழுதும் உ.வே.சா. இருவினையும் செய்யப்படாத உம்பர் உலகம் என்கிறார். எனவே, இப்பிறப்பில் செய்த நல்வினையால் தேவர் உலகம் எய்துவதும், அங்கு இன்பத்தை அனுபவிப்பதும் உளதாகும். அதே நேரத்தில் தேவர் உலகத்து இன்பம் அனுபவித்த பிறகு மாறிப் பிறக்காத வீட்டுப் பேற்றை அடையவும் கூடும். அடுத்து நல்வினை செய்தவர்கள் தீதுஇல் யாக்கை பெறுவர் என்று பாடலில் குறிப்பிட்டிருப்பது உலகப் பொருள்களில் போக நுகர்ச்சி இல்லாது வாழுகின்ற சீவன் முத்தரைக் குறிக்கும்.

"வெம்பும் பிறவியலை வீழாமல் வீடளித்த
சம்பந்த மாமுனிவன் தார்வாங்கி - அம்புந்தும்
வஞ்சமே வும்விழியார் வல்வினை எல்லாம்அகல
நெஞ்சமே வாராய் நினைந்து"

என்று நெஞ்சுவிடு தூதின் இறுதியில் அமைந்துள்ள உமாபதி சிவம் பாடிய வெண்பா, முன் கருத்திற்குச் சான்றாகும். இப்பாடலில் பிறவி இல்லாத வாழ்க்கை வீட்டுப்பேறு என்பதும் அந்த வீட்டுப்பேறு உமாபதி சிவம் என்று இவ்வுலகத்தில் வாழுகின்ற உயிருக்கு, மறைஞான சம்பந்தர் என்னும் ஆசிரியரால் வழங்கப்பட்டது என்பதும் ஞானாசிரியரின் அருளால் பெண் இன்பம் போன்ற இன்பங்கள் எல்லாம் அகன்று சீவன்முத்தர் வாழ்வு இப்பிறவியிலேயே கிடைத்திருக்கிறது என்பதும் காட்டப் பெற்றுள்ளமை இதற்குமுன் கண்ட புறநானூற்றுப் பாடலுக்கு ஆதாரமாகும். எனவே, சங்க இலக்கியம், நல்வினை செய்தால் துறக்கமும், வீடும் கிடைக்கும் என்பதோடு, சீவன் முத்தராய் வாழலாம் என்ற சைவக் கொள்கைக்கு மூலக் கூறாக விளங்குகிறது எனலாம். மேலும்,

"இருமை வினையும் இல ஏத்தும் அவை
ஒருமை வினைமேவும் உள்ளத்தினை" *(பரி.13)*

நல்லெழுதியார் பாடிய இப்பாடல், இறைவனை வணங்குகின்ற உயிர்களுக்கு இருமை வினைகளில் பற்றுதல் இல்லை என்றும் இறைவனைப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

போற்றுகின்ற உயிர்களுக்கு இறைவன் காத்தலாகிய ஒரு தொழிலையே செய்கின்றான் என்றும் பொருள் தருகிறது. எனவே, நல்வினை தீவினை என்ற இருமை வினை உண்டு என்பது சங்ககாலத்தில் ஏற்றுக்கொள்ளப் பெற்றிருக்கிறது என்பது தெளிவு.

“கொடியோர்த் தெறுதலும் செவ்வியோர்க்கு அளித்தலும்
ஒடியா முறையின் மடிவிலை யாகி
நல்லதன் நலனும் தீயதன் தீமையும்
இல்லை என்போர்க்கு இன னாகிலியர்” *(புறம்.29)*

என்று சோழன் நலங்கிள்ளியை உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடிய பாடல் இது. தீயோரைத் தண்டம் செய்தலும், நடுநிலைமை உடையோர்க்கு அருள் செய்தலும் தொடர்ந்து நிகழ, சோம்பல் இல்லையாகி நல்வினையினது நன்மையும், தீவினையினது தீமையும் இல்லை என்று சொல்லுவாரோடு இனமாகத் திகழாது வாழ்வாயாக என்பது புலவர் வாழ்த்தாகும். சங்ககாலத்தில் நல்வினை தீவினை இல்லை என்று சொல்லுகின்ற சைவம் அல்லாத பிற மதங்கள் இருந்திருக்கின்றன. எனவே, அத்தகைய மதக்கோட்பாடு உடையவர்களோடு சோழன் சேர்தல்கூடாது என்று புலவர் வாழ்த்துவதால் பரிபாடல் பகுதியாலும், புறநானூற்றுப் பகுதியாலும் சைவ சமயம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற வினைக் கொள்கை மூலக்கூறாகச் சங்க இலக்கியத்தில் பதிவுசெய்யப் பெற்றிருக்கிறது எனலாம்.

நல்வினை நன்மையைத் தரும் என்ற செய்தி சங்க இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகின்றது.

“…………..புலி வழங்கு அத்தம்
சென்ற காதலர் வழிவழிப் பட்ட
நெஞ்சே நல்வினைப் பாற்றே….” *(நற்.107)*

“இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி
வாழ்தல் வேண்டும் இவண் வரைந்த வைகல்
வாழச் செய்த நல்வினை அல்லது
ஆழும் காலைப் புணை பிறிதில்லை” *(புறம்.367)*

நல்வினைதான் இப்பொழுது நடக்கின்ற நற்செயல்களுக்குக் காரணம் என்பதை மேற்கண்ட சங்கப் பாடல்கள் வலியுறுத்துவதைக் காணலாம். இக்கருத்தோடு,

1. “நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
   செல்வமன்று தன் செய்வினைப் பயனே” *(நற்.210)*
2. “செய்வினை மருங்கின் எய்தல் அல்லதை
   உடையோர் ஈதலும் இல்லோர் இரத்தலும்
   கடவது அன்மையின் கையறவு உடைத்து” *(புறம்.38)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3. "தீதும் நன்றும் பிறர்தர வாரா" *(புறம்.192)*

4. "செய்தல் வேண்டுமால் நன்றே வானோர்
அரும்பெறல் உலகத்து ஆன்றவர்
விதும்புறு விருப்பொடு விருந்து எதிர்கொளற்கே" *(புறம்.213)*

5. "வைத்ததன்றே வெறுக்கை வித்தும்
அறவினை அன்றே விழுத்துணை அத்துணைப்
புணைகை விட்டோர்க்கு அரிதே..." *(புறம்.357)*

6. "ஆற்றெதிர்ப் படுதலும் நோற்றதன் பயனே
போற்றிக் கேண்மதி புகழ் மேம்படுந" *(பொருநர்.59-60)*

என்னும் சங்க இலக்கியப் பாடல்கள் நல்வினையின் பயன்களைச் சுட்டிக் காட்டுவதைப் பார்க்க முடிகின்றது. மேலும், உயிர்கள் தாம் செய்த நல்வினைப் பயன்களால் இவ்வுலகத்தில் பொருட்செல்வத்தைப் பெறுகின்றன என்பதைச் சங்க இலக்கிய அகப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. இதற்குக் கீழ்வரும் கலித்தொகைப் பாடல்களைச் சான்றாகக் காட்டலாம்.

"கிழவர் இன்னோர் என்னாது பொருள்தான்
பழவினை மருங்கின் பெயர்பு பெயர்பு உறையும்" *(கலி.21)*

"புரை தவ நாடி பொய் தபுத்து இனிது ஆண்ட
அரைசனோடு உடன் மாய்ந்த நல்லூழிச் செல்வம்போல்" *(கலி.130)*

தனி ஒரு மனிதனின் நல்வினைகளைக் கூறும் சங்க இலக்கியம், சமுதாயத்தார் செய்கின்ற நல்வினையையும் குறிப்பிடத் தவறவில்லை. சான்றோர்கள் நல்வினையைச் செய்தால் நாட்டில் மழை பொழியும் என்ற நம்பிக்கையும் சங்ககாலத்தில் இருந்திருக்கிறது.

"சான்றோர் செய்த நன்று உண்டாயின்
இமயத் தீண்டி இன்குரல் பயிற்றிக்
கொண்டல் மாமழை பொழிந்த
நுண்பல துளியினும் வாழிய..." *(புறம்.34)*

இப்பாடல் அதற்குரிய சான்றாகும்.

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி
எய்துப என்ப தம்செய்வினை முடித்தெனக்
கேட்பல் எந்தை சேட்சென்னி நலங்கிள்ளி" *(புறம்.27)*

என்ற புறநானூற்றுப் பாடல்வரிகளும் இதற்குச் சான்றாகும். எனவே, சங்க இலக்கியங்களில் இருவினைகள் உண்டு என்பதும் அவற்றால் இன்பதுன்பங்களை எய்துவர் எனும் கருத்து இடம்பெற்றுள்ளது. மேலும், நல்வினை செய்தோர்க்குரிய இன்பப் பயன்கள் இவை எனவும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தனிமனிதரோடு சமுதாயமும் நல்வினையைச் செய்ய வேண்டும் எனவும் சங்க இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. தீவினைகள் செய்யப்பட்டபோது அதற்குரிய துன்பத்தை அனுபவிக்கத்தான் வேண்டும் என்பதையும் சங்க இலக்கியங்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இதனை,

1. "பணைத்த பகழிப் போக்கு நினைந்து கானவன்
அணங்கொடு நின்றது மலைவான் கொள்கஎனக்
கடவுள் ஓங்குவரைப் பேண்மார் வேட்டெழுந்து
கிளையோடு மகிழும் குன்றநாடன்" *(நற்.165)*

2. "ஆனாக் கௌவை மலைந்த
யானே தோழி நோய்ப்பால் ஏனே" *(நற்.107)*

3. "அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்" *(புறம்.195)*

4. "மலி ஓதத்து ஒலி கூடல்
தீது நீங்கக் கடல் ஆடியும்
மாசு போகப் புனல் படிந்தும்" *(பட்டினப்.98-100)*

எனும் சங்க இலக்கியப் பாடல்களின் வழி உணரலாம்.

ஊழ்வினை

இருவினைகளில் ஊழ்வினையைக் குறிக்கப் பால் எனும் சொல் பண்டைக் காலத்தில் பயன்பாட்டில் இருந்துள்ளது. இதற்குக் கீழ்வரும் தொல்காப்பிய நூற்பா அடியெடுத்துக் கொடுத்திருக்கிறது.

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரை யின்றே" (தொல்.களவு.2)

ஊழ்வினை குறித்த தம் கருத்துக்களை உரையாசிரியர்கள் கீழ்வருமாறு வெளிப்படுத்தியுள்ளனர்.

இளம்புூரணர்

"ஒன்றி உயர்ந்த பாலதாணையின் என்றது இருவர் உள்ளமும் பிறப்புத் தோறும் ஒன்றி நல்வினைக் கண் நிகழ்ந்த ஊழினது ஆணையின் என்றவாறு. உயர்ந்ததன் மேற்செல்லும் மன நிகழ்ச்சி உயர்ந்த பாலாயிற்று. காம நிகழ்ச்சியின் கண் ஒத்த அன்பினராய்க் கூடுதல் நல்வினையான் அல்லது வாராது என்பது கருத்து" என்பது இளம்பூரணர் உரையாகும்.

நச்சர்

"இருவருக்கும் ஓரிடமும் வேற்றிடமும் எனக்கூறப்பட்ட இருவகை நிலத்தின் கண்ணும், உம்மைக் காலத்து எல்லாப் பிறப்பிலும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இன்றியமையாது உயிர் ஒன்றி ஒருகாலைக்கு ஒருகால் அன்பு முதலியன சிறத்தற்கு ஏதுவாகிய பால்வரைத் தெய்வத்தின் ஆணையாலே என்பதாகும்." இது நச்சர் உரை.

வெள்ளைவாரணம்

"இருவரையும் பிறப்புத்தோறும் சேர்த்து வைப்பதும், பிரித்து விலக்குவதுமாகிய இருவகை ஊழினும், இருவர் உள்ளமும் எக்காலத்தும் ஒன்றி வாழ்வதற்கு ஏற்ற நல் ஊழின் ஆணையால் தம்முன் எதிர்ப்படுவர். பாலது ஆணை என்பது வினை செய்த உயிர்கள் நுகர்வதற்குரிய இருவினைப் பயன்கள், ஏனை உயிர்கள்பால் செல்லாது, வினைகளைச் செய்த உயிர்களே நுகரும் வண்ணம் முறைசெய்து நுகர்விப்பதாகிய இறைவனது ஆற்றல்" என்பது வெள்ளைவாரணம் அவர்கள் உரையாகும்.

பால் என்பதற்கு நல்வினை என்றும் அது முற்பிறப்பு ஊழ்வினை என்றும் அதனை ஊட்டுபவன் இறைவன் என்றும் உரை எழுதியுள்ளமை பெறப்படுகிறது. இத்தகைய பால் என்ற சொல்லைக் கொண்டு சங்க இலக்கியங்கள் ஊழ்வினைப் பயனைக் குறிப்பிடுகின்றன.

"சேயள் அரியோள் படர்தி
நோயை நெஞ்சே நோய்ப் பாலோயே" *(குறுந்.128)*

துன்பத்திற்குக் காரணம் ஊழ்வினையே என்று வலியுறுத்துகிறது குறுந்தொகை. மேலும்,

"நல்லை மன்ற அம்ம பாலே மெல்லியல்
துணை மலர்ப் பிணையல் அன்ன இவர்
மணம்மகிழ் இயற்கை காட்டியோயே" *(குறுந்.229)*

மணவினையைத் தந்தது என்று குறிப்பிடுகின்றது இக்குறுந்தொகைப் பாடல்.

"பால்வரைந்து அமைத்தல் அல்லது அவர்வயின்
சால்பு அளந்து அறிதற்கு யாஅம் யாரோ" *(குறுந்.366)*

இப்பாடலடிகளும் நல்வினையைக் குறிப்பதுடன், காதலர் இருவரின் காட்சியை வலியுறுத்துவதைப் பார்க்க முடிகின்றது.

"என்னை என்றும் யாமே இவ்வூர்
பிறிதொன்றாகக் கூறும்
ஆங்கும் ஆக்குமோ வாழிய பாலே" *(ஐங்.110)*

இங்குத் தீவினையால் அலர் எழுந்தமை கூறப்படுகிறது.

"பூப்புரை உண்கண் மடவரற்
போக்கிய புணர்த்த அறன்இல் பாலே" *(ஐங்.376)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இப்பாடலடிகள், தீவினையைக் குறிப்பதுடன் தாயின் அச்சத்தையும் குறிப்பிடுவதைப் பார்க்க முடிகின்றது.

"பல்லூழ் நினைப்பினும் நல்லென்றூழ
மிளிமுன்பு இன்காளை காப்ப" (ஐங்.374)

இப்பாடல், நல்வினையாகி உடன்போக்கு நிகழ்வதைக் குறிப்பிடுகிறது.

"மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்
பால்தர வந்த பழவிரல் தாயம்" (புறம்.75)

இப்புறநானூற்றுப் பாடல், நல்வினைப் பயனானது தலைமுறை தலைமுறையாக அரசாட்சியைத் தருகின்றது என்று குறிப்பிடுகின்றது.

"இல்லோர் சொல்மலை நல்லியக் கோடனை
உடையை வாழி எற்புணர்ந்த பாலே" (புறம்.176)

இப்பாடல் நல்வினையானது நட்பினைக் கொடுக்கின்றது என்கிறது.

"இம்மை போலக் காட்டி உம்மை
இடையில் காட்சி நின்னோடு
உடனுறைவு ஆக்குக உயர்ந்த பாலே" (புறம்.236)

நல்வினையாகி உடன் வாழ்வதை இப்பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

வினை என்பது பால் என்ற பொருண்மையில் ஊழ்வினை குறிக்கப்பட்டதோடு ஊழ் என்ற சொல்லாலும் ஊழ்வினை சங்க இலக்கியங்களில் குறிக்கப் பெறுகிறது.

"உறுகெழு தாயம் ஊழின் எய்தி
பெற்றவை மகிழ்தல் செய்யான்..." (பட்டினப்.227-228)

இப்பாடல் ஊழ்வினை நல்வினையாகி அரசாட்சி செய்ததைக் குறிப்பிடுகிறது.

"மகிழ்ந்து இனிது உறைமதி பெரும
வரைந்து நீ பெற்ற நல் ஊழ் இயையே" (மதுரைக்.781-782)

என்பதில் ஊழ் நல்வினையாகி மகிழ்ச்சியைக் குறிக்கிறது. இத்தகைய சான்றுகளாகப் பால், ஊழ் என்ற சொற்களில் தொன்மை வினையாகிய ஊழ்வினை குறிக்கப்பெறுகிறது. இத்தகைய வினைக்கோட்பாடு வளர்ந்து திருமுறைகளில் ஊழ்வினை குறிக்கப்பெறுவதோடு சைவ சித்தாந்தத்தில் தத்துவமாகவும் குறிக்கப்பெற்றிருக்கிறது.

ஞானசம்பந்தர் தன்னுடைய பாடல்களில் பதிகந்தோறும் பதினோராம் பாடலாகிய திருக்கடைக் காப்புப் பாடல்களில் வினை தீரும் என்று குறிப்பிட்டேச் செல்வார்.

"திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே" (1:1:11)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"உலகம் கொள் வினைபோய் ஓங்கி வாழ்வரே" *(1:23:11)*

"அடையா வினைகள் உலகில்நாளும் அமருல காள்பவரே" *(1:63:12)*

"தொல்லை வல்வினை தீர்ப்பார்சுடலை வெண்பொடி அணிகண்டர்" *(2:93:6)*

"ஞான சம்பந்தன் ஒண்தமிழ் மாலை கொண்டு
ஆம்படி இவை ஏத்த வல்லார்க்கு அடையா வினையே" *(3:2:11)*

"செந்தமிழ்கள் கொண்டு இனிது செப்பவலத்
தொண்டர் வினை நிற்பது இலவே" *(3:33:11)*

இவ்வாறு ஞானசம்பந்தர் திருமுறைகளில், வினை நீங்குதலுக்குத் திருமுறைகள் ஒலிக்கப்படவேண்டும் என்பது குறிக்கப்பெறுகிறது.

"விளைக்கின்ற வினையை நோக்கி வெண்மயிர் விரவி மேலும்
முளைக்கின்ற வினையைப் போக முயல்கிலேன் இயல வெள்ளம்
திளைக்கின்ற முடியினான்தன் திருவடி பரவமாட்டா" *(4:78:8)*

"பற்றினாரைப் பற்றா வினைப் பாவமே" *(5:23:3)*

"வெய்ய வினைப் பகையும் பைய நையும்" *(6:95:2)*

"எண்ணி இருந்து கிடந்தும் நடந்தும்
அண்ணல் எனா நினைவார் வினைதீர்ப்பார்" *(7:11:2)*

"முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்" *(8:1:1:20)*

"ஊனமில் யோனியின் உள்வினை பிழைத்தும்" *(8:4:12)*

"மாயப் பிறப்பறுத்து ஆண்டான் என் வல்வினையின்" *(8:4:1:12)*

"வெய்ய வினையிரண்டும் வெந்தகல.........." *(8:47:1)*

"வினைகடிந்தார் உள்ளத்து உள்ளொளி மேவித்
தனை அடைந்தோர்க்கு எல்லாந் தத்துவமாய் நிற்பன்" *(10:6:4:49)*

"இருவினை ஒத்திட இன்னருள் சத்தி" *(10:8:7:36)*

"இருவினை நேர் ஒப்பில் இன்னருள் சத்தி" *(10:5:16:14)*

"இனம் இரிய முல்லை நகும் ஈங்கோயே நம்மேல்
வினையிரியச் செற்றுகந்தான் வெற்பு" *(திருலை.15)*

"விளையும் வினைஅரவின் வெய்ய விடத்தைக்
களைமினோ காளத்தி ஆள்வார்........" *(11:9:38)*

"இருவினைப் பாசமும் மலக்கலார்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட" *(12:21:129)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவ்வாறு திருமுறைகளில் வினை பற்றிய செய்திகள் அருளாளர்களால் நல்வினைப் பயனாகவும், தீவினைப் பயனாகவும் குறிக்கப்பெற்றுள்ளன. அத்துடன் அவற்றை நீக்குவதற்கு இறைவன் திருவருளை வேண்ட வேண்டும் என்பதும் குறிக்கப்பெற்றுள்ளன. இவற்றை எல்லாம் அடிப்படையாகக் கொண்டுதான் சைவசித்தாந்த சாத்திரங்கள், மும்மலங்களில் ஒன்றாகிய கன்மம் என்பதை வினையாகக் குறித்து, அது நல்வினை தீவினையாக அமையும் என்றும் அதனை ஈசனே ஊட்டுவான் என்றும் அந்த வினைகள் சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என்றும் குறிக்கப்படும் என்று விரிவான விளக்கங்களைத் தந்திருக்கின்றன. சாத்திரங்களில் தலைமை நூலான சிவஞான போதத்தில் 2-ஆம் சூத்திரத்தில் வினை உண்டு என்று நிறுவி 5-ஆம் சூத்திரத்தில் வினையினுடைய இலக்கணத்தையும் முப்பொருளையும் குறிப்பிடுகின்றார் மெய்கண்டார். இதனை,

"உள்ளதே தோற்ற உயிரணையும் அவ்வுடலில்
உள்ளதாம் முன்செய்வினை உள்ளடைவே - வள்ளலவன்
செய்பவர் செய்தி பயன்விளைக்கும் செய்யேபோல்
செய்வன் செயல ணையா சென்று" *(சிவஞான.சி.2:2:1)*

எனும் வெண்பாவில் வினையின் நிகழ்வை அவர் தெளிவாகத் தருகின்றார். முற்பிறவியில் செய்த புண்ணிய பாவமாகிய சஞ்சித வினையே உடம்பினைத் தோற்றுவிக்க, அவ்வுடம்பில் உயிரானது பொருந்தி அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களைப் பிராரத்த வினையாக அனுபவிக்கச் செய்யும். அவ்வாறு முன் செய்த வினையை அனுபவிக்கும்பொழுது, விருப்பு வெறுப்புக்களின் முறைமையால் உயிருக்கு மறுபிறவிக்கு உரிய ஆகாமிய வினை உண்டாகும். உழவு செய்பவரின் உழவுத் தொழிலுக்கு உரிய பயனைத் தருகின்ற வயலைப்போல் இறைவன் வினைப்பயன்களை உயிருக்கு ஊட்டுவான். வினை தானே வந்து பொருந்தமாட்டாது என்பது சிவஞான போதம் தந்திடும் சைவசித்தாந்தக் கொள்கையாகும். சஞ்சித வினை என்பது ஊழ்வினையைக் குறிக்கும் சொல். பிராரத்தம் என்ற சொல் பிறவியில் அனுபவிக்கும் இன்ப துன்பத்தைக் குறிப்பது. ஆகாமியம் என்ற சொல் மறு பிறப்பிற்குரிய வினையைக் குறிப்பது. ஒரு உயிர் செய்த இம்மூன்று வினையை உயிர்களுக்கு இறைவனே ஊட்டுவான் என்பது சைவ சித்தாந்தத்தின் வினைக்கோட்பாடு பற்றிய முக்கியக் கொள்கையாகும்.

சிவஞான போதத்தை அடியொற்றி சிவஞான சித்தியார் பல பாடல்களில் வினை பற்றி விரித்துரைக்கிறது. உடல் ஏற்படுவதற்கு முன் செய்வினைதான் காரணம் என்பதை,

"...முன்பு செய்த கன்மம் இங்கு இவற்றிற்கு ஏது
தேறு நீ இனிச்செய் கன்மம் மேல்உடல் சேரும்..." *(சிவஞான.சி.99)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"..................இந்த உடல் வந்தவாறு ஏது என்னின்
விடப்படு முன் உடம்பின் வினை இந்த உடல் விளைக்கும்"
(சிவஞான.சி.100)

"மேலைக்கு வித்துமாகி விளைந்தவை உணவுமாகி
ஞாலத்து வருமாபோல நாம்செய் வினைகள் எல்லாம்
....
மூலத்தது ஆகி என்றும் வந்திடும் முறைமை யோடே" (சிவஞான.சி.102)

என்றெல்லாம் குறிப்பிடுகின்றது சிவஞான சித்தியார். இதனையே சிவப்பிரகாசம்,

"எண்ணி வரும் மன வாசக கன்மத்தால் இயற்றும்
இயல்பினதாய் மதி கதமாய் இருபயனாம் பாவ
புண்ணியமாய்ப் புலர்காலை மாயை மேவிப்
பொருந்தும் இது கன்ம மலம் புகலுமாறே" (சிவப்.28)

"நன்மையொடு தீமைதரு சேதனனுக்கு இவன் ஊண்
நாடில் அதன் ஊழ்வினையாய் நணுகும் தானே" (சிவப்.29)

"ஞாலத்து வினைகள்இரு திறமாகும் புந்தி
நண்ணாத வினைநணுகும் வினைஎனஒன்று இரண்டாய்
ஏலத்தான் இதம்அகிதம் ஆம் இதனால் வழுவாது
எய்திடும் புண்ணியபா வங்கள் என்றே" (சிவப்.30)

என்னும் பாடல்களில் குறிப்பிடுகின்றது. இவை சைவ சித்தாந்தம் தத்துவமாகத் தந்த வினைக்கோட்பாட்டுச் செய்திகளாகும். இவ்வாறு பாசத்தில் ஒன்றான வினை குறிக்கப்பெற்று, மற்ற இரண்டு மலங்களான ஆணவம், மாயை என்பவையும் அறிவுறுத்தப்பெறுகின்றன.

சைவ சமயக் கொள்கைகளில் முப்பொருள்கள் பற்றிய விளக்கம் தரப்பெறுகின்றன. பதி, பசு, பாசம் எனப்பகர் மூன்று எனக் குறிப்பிடுவார் திருமூலர். அதன்படி பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றினைக் கொண்டது. இதில் ஆணவம் என்பது அறியாமையைக் குறிப்பதாகும். இதனைத் திருவள்ளுவர் இருசேர் இருவினை என்று குறிப்பிட்டு, இருள்சேர் என்பது ஆணவ மலத்தைக் குறிப்பதாகக் காட்டுவார். அறியாமை என்ற நிலையில் ஆணவம் குறிக்கப்பெறுகிறது என்பதை, "அறிதொறும் அறியாமை கண்டற்றால்" (குறள்.1110) எனும் குறளில் அறியாமையைத் திருவள்ளுவர் குறிப்பிடுவதைத் தத்துவ அடிப்படையில் ஆணவ மலமாகக் காணலாம். ஆணவம் நீங்கினால் உயிருக்கு இன்பம் பயக்கும் என்பதைத் திருவள்ளுவர், "இருள் நீக்கி இன்பம் பயக்கும்" (குறள்.352) என்று குறிப்பிடுவார். மேலும், "இருள்தீர எண்ணிச் செயல்" (குறள்.675) என்பதும் அவரின் வாக்காகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வள்ளுவத்தின் வழி திருமுறைகளும் ஆணவத்தை இருள் என்றே குறிக்கின்றன. இதனை,

"இருள் கெடச் சென்று கைதொழுது ஏத்துமே" *(திருநாவுக்.5:47:6)*

"மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக் கொண்ட" *(திருநாவுக்.6:20:6)*

"இருள் கடிந்து அருளிய இன்ப ஊர்தி" *(திருவாசகம்.8:2:123)*

"பொய் இருள் கடிந்த மெய்ச்சுடரே" *(திருவாசகம்.8:22:3)*

"இருள் திணிந்து எழுந்திட்டதோர் வல்வினை" *(திருவாசகம்.8:26:10)*

"ஆணவச் சத்தியுளாம் அதில் ஐவரும்
காணியர்............................" *(திரு.10:2:9:18)*

"ஆணவம் வந்து உற்ற அவித்தா நனவற்றோன்" *(திரு.10:2:15:7)*

"காணுதற்கு அரியார் தம்மை
ஆர்வம் முன் பெருக ஆரா
அன்பினில் கண்டு கொண்டே
நேர்பெற நோக்கி நின்றார்
நீள்இருள் நீங்க நின்றார்" *(பெரிய.12:10:128)*

"மைபொதி விளக்கேஎன்ன
மனத்தினுள் கறுப்பு வைத்து" *(பெரிய.12:மெய்ப்.7)*

எனும் பாடலடிகளில் காணலாம். இவ்வாறு திருமுறைகளில் இருள் என்னும் பொருளில் ஆணவம் குறிக்கப்பெற்று ஆணவத்தின் வலிமை உணர்த்தப்படுகிறது.

ஆணவ மலத்தையே இருள் என்ற நிலையில் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். இதையே பின்னால் வந்த சாத்திரத்தார், "ஆவி இடை அடங்கி/ இன்றளவும் நின்றது இருள்" (திருவருட்.24), "இருள் இன்றேல் துன்பு என்" (திருவருட்.27) என்று திருவருட்பயன் குறிப்பிடுகிறது. இந்த ஆணவத்தினுடைய இலக்கணத்தைக் கீழ்வரும் பாடலில் சிவஞான சித்தியார் குறிப்பிடுகிறது.

"ஒன்றதாய் அநேக சத்தி
உடையதாய் உடனாய் ஆதி
அன்றதாய் ஆன்மா வின்தன்
அறிவொடு தொழிலை ஆர்த்து
நின்றுபோத் திருத்து வத்தை
நிகழ்த்திச் செம்பினில் களிம்பு ஏய்த்து
என்றும் அஞ்ஞானம் காட்டும்
ஆணவம் இயைந்து நின்றே" *(சிவஞான.சி.170)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மெய்கண்டார் நான்காம் சூத்திரத்தில் "ஆன்மா சகச மலத்து உணராது" என்று ஆணவத்தைச் சகசமலம் என்று குறிப்பிடுவார். இவ்வாறு பாசங்களில் ஒன்றான ஆணவ மலத்தைத் திருக்குறள் வழியில், சாத்திரங்கள் விளக்கிக் காட்டுகின்றன.

"பொருள் அல்லனவற்றைப் பொருளென்று உணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு" *(குறள்.351)*

என்று பாசங்களில் ஒன்றான மாயையை மருள் என்று குறிப்பிடுகின்றார் திருவள்ளுவர். நிலையான பொருளல்லவற்றை நிலையான பொருள் என்று எண்ணி உணர்கின்ற மயக்கத்தால் இன்பம் இல்லாத இப்பிறப்பு உண்டாகின்றது என்பது இக்குறட்பாவின் பொருள். எனவே, பிறப்பிற்குரிய உடம்பு தோன்றுவதற்கு மாயைதான் காரணம் என்பது திருக்குறளின் மாறாத கொள்கையாகும். மற்றோர் இடத்திலும், "மருவானாம் மாணாப் பிறப்பு" *(குறள்.1002)* என்றும் திருக்குறள் குறிப்பிடுகிறது. மேலும், ஓர் இடத்தில் "மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு இன்பம் பயக்கும்" *(குறள்.352)* என்றும் குறிக்கப்பெறுகிறது. அதைப்போல மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு" *(குறள்.192)* என்று குறிக்கப்பெறுகிறது. எனவே, மாயை என்ற மலத்தினால் தான் பிறப்பு ஏற்படுகிறது என்பது பண்டைக் காலத்துத் தமிழ்ச் சமுதாயத்தின் நம்பிக்கை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதனை அடியொற்றியே தனு, கரண, புவன, போகம் என்று கூறப்படுகின்ற உடல், உறுப்பு, உலகம், நுகர்வு என்ற நான்கும் மாயையால் ஏற்படுகின்றன என்பதைத் திருமுறைகளும் சாத்திரங்களும் குறிப்பிடுகின்றன.

"மடிநாறு மேனி இம்மாயம் நீங்க
வழிவைத்தார்க்கு அவ்வழியேபோதும் நாமே" *(திருநாவுக்.6:12:4)*

"மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி" *(திருவாசகம்.8:1:14)*

"பவமாயம் காத்தென்னை ஆட்கொண்ட பரஞ்சோதி"
(திருவாசகம்.8:11:4)

"மாய வாழ்க்கையை மெய்யென்று எண்ணி" *(திருவாசகம்.8:42:5)*

"மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை" *(திரு.10:1:27)*

"காயத்திரியே கருது சாவித்திரி
………………………………
மாயத்துள் தோயா மறையோர்கள் தாமே" *(திரு.10:1:15:3)*

"காமியம் எட்டாதல் மாயேயம்" *(திரு.10:2:14:10)*

இவ்வாறு திருமுறைகளில் மாயை என்ற பாசத்தால் உடம்பும் உலகும் தோன்றுகின்றன என்பது குறிக்கப்பெறுகிறது. சித்தாந்த சாத்திரங்களில் மாயை விரிவாகவே விளக்கம்பெறுகிறது. சுத்த மாயை என்றும் அசுத்த மாயை என்றும் மாயை இருவகையாகப் பிரிக்கப்படும். சுத்த மாயை என்பது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இறைவன் உலகம் ஆகும். அசுத்த மாயை என்பது இவ்வுலகம் ஆகும். இந்த அசுத்த மாயையினால் தனு, கரண, புவன, போகங்கள் உருவாகின்றன என்றும் அந்த மாயை நித்தமாய் இருக்கும், ஒன்றாய் நிற்கும், அருவமாய் நிற்கும், கன்ம மலம் நீங்கும்வரை மயக்கத்தைச் செய்யும் என்றெல்லாம் சித்தாந்தம் விளக்கம் தருகின்றது.

> "உருவாதி சதுர்விதமாய் ஒன்றுஒன்று ஒவ்வா
> உண்மையதாய் நித்தமாய் ஒன்றாய் என்றும்
> அருவாகி கன்மாந்த அணுக்கள் யார்க்கும்
> ஆவாரமாய் அசித்தாய் அசல மாகி
> விரிவாய தன்செயலின் வியாபியாய் எல்லாம்
> விரிந்தவகை புரிந்தடைவின் மேவியவை ஒடுங்க
> வருகால உயிர்கள்எல்லாம் மருவிடமாய் மலமாய்
> மன்னியிடும் அரனருளால் மாயை தானே" *(சிவப்.22)*

என்று சிவப்பிரகாசம் குறிப்பிடுகின்றது. உடம்புக்கு முதற்காரணம் அசுத்த மாயைதான் என்பதைச் சிவஞான சித்தியார்,

> "தூலமாம் உருவினுக்குச் சூக்குமம் முதல் அதற்கு
> மூலம் மான் அதற்கு மூலம் மோகினி அதன்முதல்தான்
> மேலதாம் விந்து சத்தி சிவம் இவை மிசையாம்" *(சிவஞான.சி.140)*

என்று குறிப்பிடுகின்றது. தூல உடம்பிற்கு முதற்காரணம் சூக்கும உடம்பு என்பது இதன் பொருள். அதற்கு முதற்காரணம் மூலப்பிரகிருதி, அதற்கு முதற் காரணம் அசுத்த மாயை, அதற்கு முதற்காரணம் சுத்த மாயை. சத்தியும் சிவமும் எல்லாவற்றிற்கும் மேலானதாகும்.

இவ்வாறு மாயா மலம் என்ற தனு, கரண, புவன, போகத்திற்கு மூலகாரணமாய் அமைந்துள்ள பாசத்தைச் சைவ சித்தாந்தம் விரிவாகக் கூறுகின்றது. மாயை பற்றிய விரிவான சங்க இலக்கியச் செய்திகள் இல்லை என்றாலும் சங்க இலக்கியத்தோடு ஒத்து எண்ணக்கூடிய திருக்குறளில் மாயை பற்றிய செய்திகள் இருப்பது பெறப்படுகிறது. அதனால் சைவ சமயக் கொள்கையில் ஆணவம், மாயை என்ற பாசங்களுக்குத் திருக்குறளில் காணப்படுகின்ற செய்திகளை மூலமாகக் கொண்டு பிற்காலத்தில் வளர்ந்த திருமுறைச் சித்தாந்தச் செய்திகள் பாசக் கொள்கைகளாக இக்கட்டுரையில் சுட்டிக் காட்டப்பெற்றுள்ளன.

சைவ சமயத்தின் முப்பொருள்களில் ஒன்றான பாசம் பற்றிய கொள்கைகளைப் பழந்தமிழ் காலத்திலேயே சங்க இலக்கியங்கள் செய்திகளாக - இயல்பான வாழ்வியலாகத் தந்திட, பின்னர் வந்த திருமுறைகளும் சாத்திரங்களும் தத்துவக் கொள்கைகளாக வளர்ச்சியுற்றுள்ளன எனலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

8. சங்க இலக்கியங்களில் சிவத்துவம்

சைவ சமயக் கொள்கைகளில் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் பற்றிய உண்மைகளையும், அவற்றின் இலக்கணங்களையும் தத்துவ நூல்கள் தந்தபிறகு சைவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் கொள்கைகளையும் தத்துவங்களாகத் தந்துள்ளன. சைவ சித்தாந்த சாத்திரங்கள் சைவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் முறைகளைச் சாதனங்கள் என்ற தலைப்பின்கீழ் தருகின்றன. இறைவனுடைய திருவருளை உயிர்கள் நிறைவாகப் பெற்று, இறைவனோடு இரண்டறக் கலக்கின்ற முத்தியாம் வீட்டு நிலைக்கு உரியவையாக இந்த வாழ்வியல் முறைகள் குறிக்கப்பெறுகின்றன. இறைபணி நிற்றல், ஐந்து எழுத்து ஓதல், எல்லாப் பொருள்களிலும் இறைவனைக் காணுதல், உலகப் பொருள்களில் உள்ள நுகர்ச்சியை விடுத்து, இறைவனையே பொருளாகக் கொண்டு உலக வாழ்வில் வாழ்வது சிறப்புடைத்தாம். இத்தகைய சாதனங்களைக் கொண்டு வாழ்ந்தால் கிட்டும் பயன் இம்மை வாழ்வில் சீவன்முத்தர் நிலையாகும். மறுமை வாழ்வில் பிறப்பற்ற நிலையாகிய வீடுபேறாகிய பேரின்பம் ஆகும். இதனைப் பயனியல் என்ற பகுதியாகச் சைவ சித்தாந்தம் குறிப்பிடும். இத்தகைய சாதன பயனியல் கருத்துகளின் வளர்ச்சிக்குப் பண்டைத் தமிழரின் வாழ்வியலாகிய சங்க இலக்கியங்கள் கால்கோள் செய்திருக்கின்றன.

வேதம் முதன்மையானது

இந்திய மெய்ப்பொருள் இயலில் மதங்களின் பிரிவுகள் தோன்றுவதற்கு அடிப்படை வேதங்களே ஆகும். இந்த வேதங்களை ஏற்றுக்கொள்வதும், ஏற்றுக் கொள்ளாமையும், ஏற்றுக்கொண்டும் ஏற்றுக்கொள்ளாமையும் மதங்களின் பிரிவுகளுக்குக் காரணமாயின. இந்த வேதங்கள் யாவை? அவை எந்த மொழியில் முதன்முதலில் தோன்றின? இன்றைக்கு வடமொழியில் இருக்கின்ற அவைதான் வேதங்களா? என்பன போன்ற வினாக்களுக்கு விடையாகப் பலவேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. பொதுவாக ஆன்மீகவாதிகள் ரிக், யசூர், சாம, அதர்வணம் என்ற நான்கு வடமொழி நூல்களே வேதங்கள் என்று கூறுவர். தமிழப் பற்றாளர்கள், ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னமேயே வேதங்கள் வழக்கிலிருந்த காரணத்தால் அவை தமிழில் முதலில் இருந்திருக்க வேண்டும், பின்னால் வந்த ஆரியர்கள் அவற்றை அழித்துவிட்டு, வடமொழிக்கு உரியதாக ஆக்கிவிட்டனர் என வாதிடுவர். இவையெல்லாம் ஒருபுறம் இருக்க, சங்க இலக்கியங்களும், சைவ இலக்கியத் தத்துவ நூல்களும் பொதுவாக வேதம் என்ற நிலையில் குறிப்பிட்டு, அவை இறைவனால் தமிழகத்திற்கும், சைவத்திற்கும் தரப்பெற்றது என்பதை எடுத்துக்காட்டுகின்றன. எனவே, வேதம் பற்றி சங்க இலக்கியத்தில் இடம்பெற்ற செய்திகளும், அவை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மூலங்களாக அமையப் பின்னர் எழுந்த சைவ இலக்கியங்களும், சாத்திரங்களும் ஏற்றுக்கொண்ட செய்திகளும் கிடைக்கப்பெறுகின்றன. அவற்றைத் தொகுத்துப் பார்ப்பது நலமாகும்.

சங்க இலக்கியத்தில் வேதம்

தொல்காப்பியத்தில் மறை என்ற சொல் வேதத்தைக் குறிக்கின்றது. மறை என்பது வேதங்களைக் குறிக்கின்ற தமிழ்ச் சொல்லாகும்.

"நிறை மொழி மாந்தர் ஆணையின் கிளந்த
மறை மொழி தானே மந்திரம் என்ப" *(தொல்.செய்யு.126)*

என்று மறை பற்றித் தொல்காப்பியம் தொடங்கி வைக்கின்றது. இதனைச் சங்க இலக்கியங்கள் வேதம் என்ற நிலையிலும், மறை என்ற நிலையிலும் வழிமொழிந்து அவை பற்றிய செய்திகளைத் தருகின்றன. நான்குமறை என்ற சொல் பலவாறு இடம்பெற்றுள்ளதைக் கீழே காணலாம்.

1. "நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்" *(அகம்.181)*
2. "நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
   வாய்மொழிப் புலவீர் கேண்மின்........" *(பரி.9)*
3. "இறைஞ்சுக பெரும நின் சென்னி சிறந்த
   நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே" *(புறம்.6)*
4. "ஆன்ற கேள்வி அடங்கிய கொள்கை
   நான்மறை முதல்வர் சுற்றமாக" *(புறம்.26)*
5. "அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்" *(புறம்.93)*
6. "நான் மறையோர் புகழ் பரப்பியும்" *(பட்டினப்.202)*

என்னும் இச்சங்க இலக்கியப் பாடல்கள், மறை என்று சொல்லப்படும் வேதங்கள் நான்கு என்று வகைப்படுத்திக் காட்டுகின்றன. சங்க இலக்கிய உரைகாரர்கள் அனைவரும் நான்மறை என்ற இந்தச் சொல்லை நான்கு வேதங்கள் என்றே குறிப்பிடுகின்றனர். அந்த வேதங்கள் எவை என்பதைத் திட்டவட்டமாகக் குறிப்பிடவில்லை. இவ்வாறு நான்கு என்ற எண்ணிக்கையோடு குறிப்பிட்டது அல்லாமல் மறை எ்ன்ற சொல்லைக் கொண்டுள்ள சங்க இலக்கியப் பகுதிகளும் உண்டு.

1. "அறம்புரி அருமறை நவின்ற நாவின்" *(ஐங்.387)*
2. "ஆறு அறி அந்தணர்க்கு அருமறை பலபகர்ந்து"
   (கலி. - கடவுள் வாழ்த்து)
3. "நாவல் அந்தணர் அருமறைப் பொருளே" *(பரி.13)*
4. "நின்ஓர் அன்ஓர் அந்தணர் அருமறை" *(பரி.4)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5. "அருமறை நாவின் அந்தணர்க்கு ஆயினும்" (சிறுபாண்.204)

6. "மறை காப்பாளர் உறை பதிச் சேப்பின்" (பெரும்பாண்.301)

இவ்வாறு மறை என்ற சொல்லோடு வேதம் என்ற சொல்லைப் பயன்படுத்திய சங்க இலக்கியப் பாக்களும் உண்டு. வேதம் என்றும் நால் வேதம் என்றும் அவற்றுள் குறிக்கப்பெறுகின்றன.

1. "நாஅல்வேத நெறி திரியினும்" (புறம்.2)
2. "நற்பனுவல் நால் வேதத்து" (புறம்.15)
3. "வேத முதல்வன் என்ப" (நற். - கடவுள் வாழ்த்து)
4. "வேதத்து மறைநீ பூதத்து முதலும் நீ" (பரி.3)
5. "வேத வேள்வித் தொழில்..........." (புறம்.224)
6. "சிறந்த வேதம் விளங்கப் பாடி" (மதுரைக்.468)
7. "ஓதல் அந்தணர் வேதம்பாட" (மதுரைக்.656)

இவ்வாறு நான்மறை, மறை, நால்வேதம், வேதம் என்றெல்லாம் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றது. வேதம் இறைவனால் தரப்பெற்றது என்பதையும் சங்க இலக்கியம் குறிப்பிடுகின்றது. வேதம் முதுநூல் என்பதையும் சங்க இலக்கியம் குறிப்பிடுகின்றது.

"நன்றாய்ந்த நீள்நிமிர்சடை
முதுமுதல்வன் வாய்போகாது
ஒன்று புரிந்த ஈரிரண்டின்
ஆறு உணர்ந்த ஒருமுதுநூல்" (புறம்.166)

இப்பாடலுக்கு உ.வே.சா. அவர்கள், "பெரிதும் ஆராயப்பட்ட மிக்க நீண்ட சடையினை உடைய முதிய இறைவனது (சிவபெருமானது) வாக்கை விட்டு நீங்காது அறம் ஒன்றையே மேவிய நான்கு கூற்றை உடைத்தாய், ஆறங்கத்தாலும் உணரப்பட்ட ஒரு பழைய நூலாகிய வேதம்" என்று உரையெழுதுவார். மேலும், சிறப்புரையில், "முது முதல்வன் வாய் போகாதென்ற கருத்து, அப்பெரியோனாலும் எக்காலமும் அத்தியாயனம் பண்ணப்படும் என்பதாகக் கொள்க. வாய் போகாதொன்று புரிந்த என்பதற்கு மெய்ம்மை நீங்காமல் வீடு ஒன்றையே புரிந்த என்றும்" என்று உரையெழுதுவார் உ.வே.சா.. இதனையே ஔவை துரைசாமி அவர்கள் அப்படியே எடுத்தாண்டு உரையெழுதி உள்ளார். எனவே, வேதம் இறைவனால் கூறப்பட்டது என்பது சங்க இலக்கியக் கருத்தாகத் தெரிகிறது. இவ்வேதத்தை,

"எழுதாக் கற்பின் நின்சொல் உள்ளும்
பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்தும் உண்டோ................" (குறுந்.156)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இப்பாடலில், எழுதாக் கற்பின் நின்சொல் உள்ளும் என்பதற்கு உ.வே.சா., "வேதத்தை அறிந்த நின்னுடைய அறிவுரைகள்" என்று எழுதுவார். எனவே, வேதம் இறைவனால் கூறப்பெற்றது என்பதும் யார் ஒருவராலும் எழுதப்படாதது என்பதும் பெறப்படுகிறது. இவ்வாறு வேதம் பற்றி சங்க இலக்கியங்கள் குறிப்பிட்ட மூலக்கூறுகளைக் கொண்டு பின்னர் வந்த திருமுறைகளும், சைவ சித்தாந்த சாத்திரங்களும் வேதத்தைக் குறிப்பிடுகின்றன.

1. "வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்
காதியனை ஆதிரைநன் னாளானை - சோதிப்பான்
வல்லேன் மாய்புக்கு மாலவனும் மாட்டாது
கில்லேன மாவென்றான் கீழ்" *(திருஇரட்டை.7)*

2. "வேதத்தை விட்ட அறம் இல்லை வேதத்தின்
ஓதத் தகும் அறம் எல்லாம் உள........" *(திரு.51)*

3. "வேதம் உரைத்தானும் வேதியன் ஆகிலன்
வேதம் உரைத்தானும்......................
....
............மெய்ப்பொருள் காட்டவே" *(திரு.52)*

4. "ஆகுதி வேட்கும் அருமறை அந்தணர்" *(திரு.215)*

5. "ஆதியை வேதத்தின் அப்பொருளானை" *(திரு.555)*

6. "நம்பனை ஆதியை நான்மறை ஓதியை" *(திரு.666)*

7. "வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே" *(திருஞான.3:49:1)*

8. "வேதம் ஓதில் என் வேள்விகள் செய்யில் என்" *(திருநாவுக்.5:99:4)*

9. "வேதத்தின் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு" *(திருஞான.2:66:2)*

10. "......................வான் பழித்தக்கனார்
கொண்ட வேள்வி........................" *(திருநாவுக்.5:52:5)*

11. "ஐ வேள்வி ஆறங்கம் ஆனார் போலும்" *(திருநாவுக்.6:53:4)*

12. "நான்மறையோடு ஆறங்கம் ஆனாய் போற்றி" *(திருநாவுக்.6:5:8)*

13. "வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு" *(திருவாசகம்.8:9:20)*

14. "ஆய நான்மறை அவனும் நீயே ஆதல்" *(திருவாசகம்.8:5:23)*

15. "வேத மொழியர் வெண்ணீற்றர் செம்மேனியர்" *(திருவாசகம்.8:17:1)*

16. "வேதங்கள் மொழிந்தபிரான் மெய்த்தொண்டன் நிலைகண்டு"
(பெரிய.12:24:18)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

17. "வேத முதல்வன் எனும் மெய்த் திருப்பாட்டு..." (பெரிய.12:28:840)

என்ற திருமுறைப் பகுதிகள் வேதம், மறை இவற்றைக் குறிப்பதோடு வேதங்களை இறைவன் அருளினான் என்ற கருத்தினையும் வலியுறுத்துகின்றன. திருமுறைகளின் வழி சித்தாந்த சாத்திரநூல்களும் வேதத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றன என்பதைக் கீழ்வரும் பாடல்களால் அறியலாம்.

"ஆதலினால் இவையெல்லாம் அருமறை ஆகமத்தே
அடங்கியிடும் அவையிரண்டும் அரனடிக்கீழ் அடங்கும்"
(சிவஞான.சுப.265)

"வேதநூல் சைவநூல் என்றுஇரண்டே நூல்கள்
வேறுஉரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அநாதிஅம லன்தருநூல் இரண்டும்
ஆரணநூல் பொதுசைவம் அரும்சிறப்பு நூலாம்
நீதியினால் உலகர்க்கும் சத்திநி பாதர்க்கும்
நிகழ்த்தியது நீள்மறையின் ஒழிபொருள்வே தாந்தத்
தீதுஇல்பொருள் கொண்டுஉரைக்கும் நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வம் சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும்" (சிவஞான.சுப.267)

"பல்கலை ஆகம வேதம் யாவையினும்..." *(சிவப்.13)*

இவ்வாறு வேதம், மறை என்ற இறைவனின் வாக்கினை அடிப்படையாகக் கொண்டு திருமுறைகளும், சித்தாந்த சாத்திரங்களும் இறைவனைப் போற்றுவதும், வினைக் கொள்கைகளின் தத்துவங்களைத் தருவதும் ஆகிய பணிகளைச் செய்திருக்கின்றன என்பது சுட்டிக்காட்டப் பெற்ற செய்திகளால் தெரிய வருகின்றது.

வேள்வி

புறநானூற்றுக் காலத்தில் ஆரியக் கொள்கைகள் தமிழரிடம் பரவி இருந்ததால் வேள்வி இயற்றுதல், வேதம் ஓதுதல் ஆகிய செயல்களைத் தமிழரும் ஏற்றுக்கொண்டனர். வேள்வி செய்தல் சீரிய செயலாகக் கருதப்பட்டதால் புறநானூற்று மன்னர்கள் பலர் வேள்வி இயற்றினர். இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற சிறப்புப் பெயர்களை வேள்வியின் அடிப்படையில் மன்னர்களுக்குச் சூட்டி மகிழ்ந்தனர்.

வேதங்களில் சொல்லப்பட்ட சமித்து, பொரி, நெய் முதலிய ஆவுதிகளை வேள்வித் தீயில் மலிந்து பொலிய வேள்வி முடித்து, வேள்வித் தூணை நட்ட பெருமை உடையவன் என்று முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாராட்டுகிறார் (புறம்.15). நான்மறை கற்ற அந்தணர் சுற்றமாக மன்னர் ஏவல் செய்யப் பல வேள்விகளை இயற்றினான் என்று நெடுஞ்செழியனைப் பாராட்டி வாழ்த்துகிறார் மாங்குடிகிழார் (புறம்.26).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அறமுணர்ந்த அந்தணர்களில் வேள்விமுறை அறிந்தோர் வழிகாட்ட, குல மகளிரோடு வேள்வி செய்து வேள்விச் சாலையில் தூண் நாட்டி வேதவேள்வி முடித்தவன் என்று கரிகாற் பெருவளத்தானைக் கருங்குழலாதனார் போற்றுவார். வேள்வி முற்றிய அந்தணர்களுக்கு அணிகலன்கள் நீரோடு வழங்கிய ஒருவனைப் பற்றிப் புறநானூறு 361-ஆம் பாடல் பாராட்டிப் பேசுகிறது. இவ்வாறு மன்னர்களின் வேள்வித் தொழிலைப் புறநானூறு விரித்துச் சொல்ல, மற்ற சங்க இலக்கியப் பாடல்களும் வேள்வியை நினைவுபடுத்துகின்றன. அவற்றில் ஒருசில பின்வருமாறு,

1. “அருங்கடி நெடுந்தூண் போல” (அகம்.220)
2. “கேள்வி அந்தணர் அருங்கடன் இறுத்த
   வேள்வித் தூணத்து அசைஇ...” (பெரும்பாண்.315-316)
3. “பல்சாலை முதுகுடுமியி
   னல்வேள்வித் துறைபோகிய
   தொல்லானை நல்லாசிரியர்” (மதுரைக்.759-760)
4. “படிநிலை வேள்வியுள் பற்றியாடு கொளலும்” (பரி.2)
5. “உரைசால் வேள்வி முடித்த கேள்வி” (பதிற்.64)
6. “வேள்வியில் கடவுள் அருந்தினை....” (பதிற்.70)
7. “........................நூறு பல்
   வேள்வி முற்றிய.............” (திருமுருகு.155-156)
8. “விரும்பு மெய்பரந்த பெரும்பெயர் ஆவுதி” (பதிற்.21)
9. “ஆவுதி நறும்புகை முனைஇ.........” (பட்டினப்.55)

வேள்வி என்ற சொல் தவிர்த்து வேட்டல், முத்தீ, அங்கி என்ற சொற்களாலும் வேள்வி சங்க இலக்கியங்களில் வழங்கப்பட்டுள்ளது. ஆரியர் தொடர்பால் வேள்விச்சடங்குகள் சங்ககாலத்தில் பலவாறு நிகழ்த்தப்பெற்றுள்ளன. ஆரியர் கலப்பால் ஏற்பட்ட இவ் வேள்விச் சடங்குகள் காலங்கள் மாறினாலும் தமிழர்களை விட்டு விலகவில்லை. காப்பியங்களிலும் புராணங்களிலும் வேள்விகள் நடைபெற்றமை பலப்பலக் காட்சிகளாகப் படைக்கப்பெற்றுள்ளன. கந்தபுராணத்தில் சூரபன்மன் பெரிய யாகத்தைச் செய்தமையைக் கச்சியப்பர் இயற்கை இறந்த நிகழ்ச்சிக்கு ஒப்பப் பாடியுள்ளார். திருஞானசம்பந்தர் தன்னுடைய தந்தையின் யாகத்திற்காகத் திருவாரூர் இறைவனிடத்தில் பொற்கிழி பெற்ற நிகழ்வும் பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ளது. பின்னர் தோன்றிய இராமாயணம், பாரதம் ஆகிய மொழிபெயர்ப்புப் புராணங்களிலும் வேள்விகள் பெரிதாக நடத்தப் பெற்றன. எனவே, திருமுறைகளிலும், சித்தாந்தங்களிலும் தீட்சை முறைகளாகவும், சடங்குகளாகவும் வேள்வி முறைகள் இடம்பெற்றுள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. "ஏழு மூன்றுமொர் தலைக ளுடையவன் இடர்பட அடர்த்து
வேள்வி செற்றதும் விரும்பி விருப்பவர் பலபல உடையார்"
(திருஞான.2:94:8)

2. "அங்கம் ஆறும் அருமறை நான்குடன்
தங்கு வேள்வியர் தாம்பயிலும் நகர்" (திருநாவுக்.5:67:4)

3. "வேதம் ஓதிலென் வேள்விகள் செய்யிலென்
....
ஈசனை உள்குவார்க்கு அன்றி இல்லையே" (திருநாவுக்.5:99:4)

4. "வேதமும் வேள்விப் புகையும் ஓவா
விரிநீர் மிழலை......................" (திருநாவுக்.6:2:2)

5. "தேவிரியத் திகழ்தக்கன் வேள்வி எல்லாம்
சிதைத்தானை.........................." (திருநாவுக்.6-20-7)

6. "விண்ணோர் தலைவர் வெண்புரி நூல்
மார்பர் வேதகீதத்தர்" (சுந்தரர்.7:53:2)

7. "வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்கு" (திருவாசகம்.8:9:20)

8. "சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடியவா பாடி உந்தீபற" (திருவாசகம்.8:14:5)

9. "வேதம் உரைத்தானும் வேதிய னாகிலன்
....
வேதம் உரைத்தானும் மெய்ப்பொருள் காட்டவே" (திரு.97)

10. "வான ளிப்பன மறையவர் வேள்வியின் வளர்தீ
தேனளிப்பன் நறுமலர் செறிசெழுஞ் சோலை" (பெரிய.12:17:2)

11. "வேள்வித் தலைவர் பெருந்தேர்கள்
விண்ணோர் ஏறும் விமானங்கள்" (பெரிய.12:20:6)

என்றெல்லாம் திருமுறைகள் வேள்வியைக் குறிப்பிடுகின்றன. சடங்கு நிலையில் சிவபெருமான் தக்கன் வேள்வியை அழித்ததையும் குறிப்பிட்டு, வேள்விச் சடங்காகிய சாதனத்தை வலியுறுத்துவதையும் மேற்கண்ட பாடலடிகளில் பார்க்க முடிகின்றது.

சாத்திர நூல்களில் முதன்மையான சிவஞானபோதம் 8-ஆம் சூத்திரத்தில் முதல் அதிகரணத்தில்,

"பசித்துண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும்
இசைத்து வருவினையின் இன்பம் - இசைத்த
இருவினை ஒப்பில் இறப்பில் தவத்தான்
மருவுவானாம் ஞானத்தை வந்து"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்னும் பாடல் உதாரணப் பாடலாக அமைந்துள்ளது. இந்தப் பாடலின் இசைத்து வருவினையின் இன்பம் என்பது அறநூல்களில் கூறப்பட்டு (இசைத்து) செய்து வருவனவாகிய வேள்வி (வருவினையின்) முதலாகிய தவங்கள், செய்யப்படுவதால் அவற்றால் உண்டாகும் சொர்க்கம் முதலிய இன்பப் பயன்களும் அவற்றுடன் கூறப்படும். அந்த இன்பங்கள் பசித்தவன் பசியை நீக்க உணவு உண்டாலும் மீண்டும் பசியை ஏற்படுத்துவது போல மீண்டும் மீண்டும் வேள்வியைச் செய்ய வைத்துப் பயனைப் பெற வைக்குமே தவிர நிலையான பயன் தருவது இல்லை. ஆனால், இருவினை ஒப்புக்குரிய சரியை, கிரியை நிலையான பேரின்பத்தைத் தரும் என்று வேள்விச் சடங்கின் பயனையும், நால்வகை நெறிகளின் பயனையும் வேறுபடுத்திக் காட்டுவது பொருளாகும். இப்பாடல் மூலம் வேள்விச் சடங்கும் அதன் பயனாகிய இன்பமும் பெறப்படுகின்றன.

சிவஞான போதத்தின் வழிநூலாகிய சிவஞான சித்தியார், ஐந்தெழுத்து மந்திரத்தை வேள்வி நிலையில் எவ்வாறு செயல்படுத்தலாம் என்பதை விரித்துச் சொல்கிறது. இப்பாடலின் மூலம் வேள்விச் சடங்கு எவ்வாறு நிகழ்த்தப்படுகிறது என்பதை அறியலாம்.

"அஞ்செழுத்தால் ஆன்மாவை அரனுடைய பரிசும்
அரன்உருவும் அஞ்செழுத்தால் அமைந்தமையும் அறிந்திட்டு
அஞ்செழுத்தால் அங்ககர நியாசம் பண்ணி
ஆன்மாவின் அஞ்செழுத்தால் இதயத்து அர்ச்சித்து
அஞ்செழுத்தால் குண்டலியின் அனலை ஓம்பி
அணைவரிய கோதண்டம் அணைந்தருளின் வழிநின்று
அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க மதியருக்கன்
அணையரவம் போல்தோன்றும் ஆன்மாவில் அரனே"

(சிவஞான.சி.299)

என்று வேள்விச் சடங்கின் பாங்கினைச் சாத்திரநூல் குறிப்பிடுகிறது.

சங்க இலக்கியங்களில் இறைவனின் திருவருளைப் பெறுவதற்குச் சாதனமாக விளங்குகின்ற வேள்வி பற்றிய செய்திகள் அமைந்திருக்க, அவற்றின் வழி திருமுறைகளும் சாத்திரங்களும் வேதச் சடங்கினைப் பற்றிக் குறிப்பிடுகின்றன எனலாம்.

கோயில்

சைவ சமய வாழ்வியல் முறைகளில் இறைவனுடைய திருக்கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்வது அன்றாட வாழ்வியல் மரபாக ஏற்றுக்கொள்ளப் பட்டதாகும். ஆன்மீக வளர்ச்சியில் இறை நம்பிக்கை ஏற்பட்ட பிறகு இறைவனுக்கு என்று தனியிடமும், தனி மன்றங்களும், கோட்டங்களும் வழிபாட்டுத் தலங்களாக அமைக்கப்பெற்றன. சிலப்பதிகாரத்தில் இத்தகைய கடவுள் வழிபாட்டுத் தலங்களாகிய கோயில்கள் இருந்தமை கூறப்பெற்றுள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்" *(சிலம்பு.5:586-590)*

என்பதிலிருந்து சிலப்பதிகாரத்தில் கோயில்களாக வழிபாட்டுத் தலங்கள் இருந்துள்ளன என அறியமுடிகின்றது. சங்க காலத்தில் கோயில்கள் தனித்தனி இடங்களில் அமைந்திருந்தன. சங்க காலத்தில் நிலங்கள் குறிஞ்சி முதலாக ஐந்து வகையாகப் பிரிக்கப்பெற்றதால், அவ்வந்நிலத்திற்குரிய தெய்வங்கள் ஏற்கப்பட்டு, அத்தெய்வங்களுக்கு உரிய வழிபாட்டுத் தலங்கள் அமைக்கப்பெற்றன. குறிஞ்சிக்குரிய கடவுளான முருகனுக்கு திருமுருகாற்றுப்படை மலையில் வழிபாட்டுத் தலத்தை அமைத்துப் போற்றுகின்றது. "குன்று தோராடலும் நின்றதன் பண்பே" (திருமுருகு.217) என்ற முறைப்படி குன்றுகளில் முருகனுக்குக் கோயில்கள் இருந்திருக்கின்றன. திருப்பரங்குன்றத்தில் வாயிலோடு கூடிய கோட்டையும், திருச்செந்தூரில் மயில்கொடி திகழும் திருத்தலமும், திருவாவினன்குடியில் தேவியோடு முருகன் அமர்ந்திருந்த மருங்கும், திருஏரகத்தில் பெரிய மகிழ்ச்சியோடு அமர்ந்திருந்த பகுதியும் குறிக்கப்பெறுவதால் முருக வழிபாட்டிற்குரிய இடங்கள் இருந்தமை புலனாகின்றது. தனி ஒரு நூலாம் திருமுருகாற்றுப்படை தவிர மற்ற சங்க இலக்கியங்களில் இறைவனுக்குரிய இடங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

திருமுருகாற்றுப்படையில் கூறப்பெற்ற மலைத்தலங்கள் போல மரத்திலும் தெய்வத்தைக் கண்டு தமிழ்மக்கள் வழிபட்டமை சங்க இலக்கியப் பகுதிகளால் அறியமுடிகின்றது.

1. "சுரந் தலைப்பட்ட நெல்லியம் பசுங்காய்
   மறப்புலிக் குருளை கொளிடம் கறங்கும்" *(குறுந்.209)*

என்ற இக்குறுந்தொகைப் பாடலில், அறந்தலைப்பட்ட நெல்லி என்பது உயிர்களை அறவழியில் செலுத்துகின்ற தெய்வம் வாழுகின்ற நெல்லிமரம் என்னும் பொருளில் வந்துள்ளது. இங்கு நெல்லி மரம் வழிபாட்டுக்குரியதாகத் திகழ்கிறது.

2. "துறையும் ஆலமும் தொல்வலி மராஅமும்
   முறையுளி பராஅய் பாய்ந்தனர் தொழுஉ" *(கலி.101)*

என்று ஆலமரத்தில் உறையும் தெய்வத்தைக் குறிக்கிறது கலித்தொகை. அதுபோல மாமரமும் இப்பகுதியில் குறிக்கப்பெற்று, இவ்விரண்டு மரங்களும் இருக்கும் இடங்களில் உறைந்த தெய்வங்களை வழிபட்டனர் என்னும் செய்தி கூறப்பட்டுள்ளது.

3. "கடவுள் ஆலத்து தடவுச் சினைப் பல்பழம்" *(புறம்.199)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று புறநானூற்றிலும் ஆலமரத்தில் தெய்வம் உறைந்தது என்னும் செய்தி குறிக்கப் பெற்றிருக்கிறது. மேலும், "கள்ளி நீழல் கடவுள் வாழ்த்தி" (புறம்.260) என்று கள்ளி மரத்தின் கீழ் இருந்த தெய்வத்தைப் பாணர்கள் வாழ்த்தினார்கள் என்று புறநானூறு குறிப்பிடுகிறது.

4. "நெடு வீழிட்ட கடவுள் ஆலத்து
உகுபலி அருந்திய தொகுவிரல் காக்கை" *(நற்.343)*

என்ற நற்றிணைப் பாடல், ஆலமரத்தில் இருந்த தெய்வத்திற்குப் படைக்கப்பெற்ற பலி சோற்றைத் தின்ற காக்கை என்று குறிப்பிடுகின்றது. இவை எல்லாம் மக்கள் மரங்களைத் தெய்வம் உறையும் இடங்களாகக் கொண்டு வழிபட்டமையைக் குறிப்பிடுகின்றன. இதனால் வழிபாட்டுத் தலம் என்பது சங்க காலத்திலேயே அமைந்திருந்தது என்பது பெறப்படுகிறது.

மரத்தை வழிபட்டதைப் போல நெய்தல் நிலத்து மக்கள் சுறாமீனின் எலும்பை நட்டு வழிபாடு செய்தமை குறிக்கப்பெறுகிறது. இதனை,

"வெண்கூ தாளத்துத் தண்பூங் கோதையர்
சினைச் சுறவின் கோடு நட்டு
மனைச் சேர்த்திய வல் அணங்கினான்
மடல் தாழை மலர் மலைந்தும்" *(பட்டினப்.85-88)*

என்னும் பட்டினப்பாலை பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றன. அதாவது வெண்தாளியின் குளிர்ந்த பூவினால் தொடுத்த மாலை அணிந்துகொண்டு, சினையை உடைய சுறா மீனின் கொம்பை நட்டு அந்தக் கொம்பில் ஆவாகனம் செய்யப்பெற்ற வலிய தெய்வத்தைத் தாழைமலர் சூட்டி வணங்கினார்கள் என்பது இதன் பொருள்.

"செழுங்கன்று யாத்த சிறுதாள் பந்தர்
பைஞ்சேறு மெழுகிய படிவ நன்நகர்" *(பெரும்பாண்.297-98)*

இப் பெரும்பாணாற்றுப்படைப் பாடலடிகள், நகரில் அமைக்கப்பெற்ற வழிபாட்டு இடத்தைக் குறிக்கின்றன. வளப்பம் மிகுந்த கன்றைக் கட்டிய சிறிய கால்களை உடைய பந்தரையும், பசிய நிறமுள்ள சாணத்தினால் மெழுகப்பெற்ற இடத்தையும் தங்களால் வழிபடப்பெறுகின்ற தெய்வங்கள் உறைகின்ற இடங்களையும் உடையதாகி விளங்கும் நகர் என்பதையே பெரும்பாணாற்றுப்படை குறிக்கப்பிடுகின்றது.

காடுகளை அழித்து நாடாக்கிக் கோயில் எழுப்பித்து, கோயிலைச் சுற்றிலும் மக்களைக் குடியமர்த்திய மன்னன் குறித்து கடியலூர் உருத்திரங் கண்ணனார்,

"காடுகொன்று நாடாக்கிக்
குளம் தொட்டு வளம் பெருக்கிப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிறங்குநிலை மாடத்து உறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ" *(பட்டினப்.283-286)*

என்று குறிப்பிடுகின்றார். சோழ மன்னன் கரிகாற் பெருவளத்தான் கோயில் நிறுவினான் என்பது இதன்மூலம் புலப்படுகின்றது.

தனி இடங்கள் தவிர வீடுகளிலும் வழிபாட்டு இடங்கள் இருந்தமையை அகநானூறு குறிப்பிடுகின்றது. இதனை,

"நல்இறை மெல்விரல் கூப்பி
இல்உறை கடவுளுக்கு ஆக்குதும் பலியே" *(அகம்.282)*

என்னும் பாடல் வரிகளால் அறியலாம். இதில் தலைவன் வருவதற்காக இல்லத்தில் உறையும் தெய்வத்திற்குப் பலியிட்டுக் கைகூப்பித் தொழும் செய்தி கூறப்பெற்றிருப்பதால் வழிபாட்டுத் தலம் இல்லத்திலும் இருந்தமை புலனாகின்றது.

சங்க இலக்கியங்களில் இவ்வாறு கூறப்பட்ட வழிபாட்டுத் தலங்களாகிய மரங்கள், கோயில்கள் ஆகியவை வழிபாட்டிற்குரிய சாதனங்களாகக் கொள்ளப்பெற்றுப் பின்வந்த திருமுறைகளிலும் சாத்திரங்களிலும் இடம்பெற்றுள்ளன. முதலில் மரவழிபாட்டுத் தலம் சிலப்பதிகாரக் காலத்தில் கோயிலாக வடிவெடுத்ததுபோலப் பின்னர் வந்த திருமுறைகளிலும், சித்தாந்த சாத்திரங்களிலும் மரம் மற்றும் கோயில் போன்றவை வழிபாட்டிற்குரிய சாதனங்களாக அமைந்தன எனலாம்.

மரத்தில் தெய்வம் இருந்தமையைப் பின்னர்வந்த திருமுறைகளும் சாத்திரங்களும் கூறுகின்றன. திருமுறைகளிலும் சாத்திரங்களிலும் இறைவன் குருவடிவாகி மரத்தின் கீழ் எழுந்தருளி உபதேசம் செய்தார் என்ற செய்தியை அறியமுடிகிறது. அந்தநிலையில் ஒவ்வொரு திருத்தலங்களுக்கும் இறைவன் எழுந்தருளுவதற்குரிய மரங்கள் உண்டு என்ற அடிப்படையில் ஒவ்வொரு கோயிலிலும் தல விருட்சங்கள் அமைக்கப்பெற்று இன்றைக்கும் வணங்கப்பெறுகின்றன. திருநாவுக்கரசர் "ஆல் அதன்கீழ் அறம் நால்வர்க்கு அருள் செய்தனை" என்றும் திருஞானசம்பந்தர், "ஆலின்கீழ் அறம் ஓர் நால்வர்க்கும் அருளியவன்" என்றும் சுந்தரர், "ஆலக்கோயில் கல்லால நிழற்கீழ் அறங்கள் உரைத்த" என்றும் குறிப்பிட, சாத்திர நூலான சிவஞான போதம், "கல்ஆல்நிழல் மலை வில்லார்" என்று குறிப்பிடுகின்றது. சங்க இலக்கிய மர வழிபாட்டைத் திருமுறை ஆசிரியர்களும், சாத்திர ஆசிரியரும் போற்றியுள்ளனர் என்பது இதன்மூலம் தெரியவருகின்றது.

மரங்களைத் தவிர திருத்தலங்களாகிய கோயில்களிலும் வழிபாடு நடந்துள்ளமையைத் திருமுறைகள் குறிப்பிடுகின்றன.

1. "பணிமல்கு மறையோர்கள் பரிந்திறைஞ்ச வேணுபுரத்துதணிமல்கு கோயிலே கோயிலாக அமர்ந்தீரே" *(திருஞான.2:217:6)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. "நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்" *(திருநாவுக்.5:2:1)*
3. "கோயிலானைக் குணப் பெருங் குன்றினை" *(திருநாவுக்.5:91:1)*
4. "நித்தலும் எம்பிரான் உடைய கோயில் புக்கு" *(திருநாவுக்.6:31:3)*
5. "கோயில் சுடுகாடு, கொல்புலித்தோல் நல்லாடை" *(திருநாவுக்.8:12:3)*
6. "திருஏகம்பன் செம்பொன் கோயில் பாடி" *(திருவாசகம்.8:9:5)*
7. "சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்" *(திருவாசகம்.8:22:10)*
8. "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" *(திரு.789)*
9. "கோயில் கொண்டான் அடி கொல்லைப் பெருமறை" *(திரு.1729)*
10. "கோயில் வாயில் முன்னடைந்து
கூற்றம் செற்ற பெருந்திறல்" *(பெரிய.12:69:8)*
11. "மடுப்பொதி வேணி ஐயர்
மகிழ்ந்துரை வதற்கோர் கோயில்
எடுப்பது மனத்துக் கொண்டார்
.................................." *(பெரிய.12:65:4)*

இவ்வாறு திருமுறைகள் கோயில் அமைப்பதைக் குறிப்பிட்டுக் காட்டச் சித்தாந்த சாத்திரங்களில் மெய்கண்டார் 12-ஆம் சூத்திரத்தில்,

"மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"

என்று குறிப்பிடுவார்.

"திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவன் எனவே கண்டவர்க்குச் சிவன் உறைவன் அங்கே"
(சிவஞான.சி.325)

என்று சிவஞான சித்தியாரும் கோயிலைப் பற்றிய குறிப்புகளைத் தருகின்றது. எனவே, சைவ சமயத்தின் கொள்கைகளில் ஒன்றான உருவத் திருமேனி கொண்ட கோயில்களை வழிபடும் கொள்கைதனைச் சங்க இலக்கியம் தொடங்கி வைக்க, திருமுறைகளும் சித்தாந்தச் சாத்திரங்களும் கோயில் வழிபாட்டு முறையை வற்புறுத்தின எனலாம்.

நிலையாமை

சைவ சமயக் கொள்கையில் உயிரானது உடம்பெடுத்து உலகில் பிறந்து, உலகப் பொருள்களில் நுகர்ச்சி கொண்டு சிற்றின்பத்தை அடைந்தாலும், அவை என்றாவது ஒருநாள் பேரின்பத்தை அடைதல் வேண்டும் என்பதும் ஒன்றாகும். இந்தப் பேரின்பம் அடைய வேண்டுமானால் நுகர்ச்சிக்குரிய பொருள்களாகிய மண், பொன், பெண் இவற்றின் நிலையாமை கருதி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவற்றிலிருந்து தம்மை நீக்கிக்கொள்ள வேண்டும். நிலையாமையை உணர்கின்ற பொழுதுதான் திருவருள் கிடைக்கும் என்பதும் திருவருளாகிய ஞானத்தைப் பெற்றபிறகே இறைவனுடன் இரண்டறக் கலக்கமுடியும் என்பதும் சைவக் கொள்கையாகும். இந்நிலையாமை பற்றி சங்க இலக்கியங்கள் பலவாறு கூறுகின்றன. முதலில் நிலையாமை ஆகிய பொதுப் பண்பைச் சங்க இலக்கியம் தெளிவாக உணர்த்துகின்றது.

1. “நில்லாமையே நிலையிற்று ஆகலின்
நல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சின்
கடப்பட்டாளன் உடைப்பொருள் போல”

என்பது குறுந்தொகை 143- ஆவது பாடலின் நிலையாமை குறித்த கருத்தாகும். நில்லாது அழியும் தன்மையே இவ்வுலகத்தில் நிலைபெற்றதாகும். ஆதலால் நிலைபெறுதலை உடைய நல்ல புகழை விரும்பிய நீதியினை உடைய நெஞ்சை உடைய ஒப்புரவாளன் பெற்ற செல்வம் என்பது பொருளாகும். இப்பகுதியில் நிலையாமைதான் நிலைத்தது என்ற பொது உணர்வு புலப்படுத்தப் பெற்றிருப்பதை உணரலாம். இந்த நிலையாமையை ஒரு திணையாகவே தொல்காப்பியம் வகுத்துக்காட்டும். புறத்திணையில் நிலையாமையைக் குறிப்பிடுவது காஞ்சித் திணையாகும்.

2. “பாங்கரும் சிறப்பின் பல்லாற்றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே” *(தொல்.புறம்.23)*

என்பது காஞ்சித்திணையின் இலக்கணமாகக் கூறப்பெற்றுள்ளது. இச்சூத்திரத்திற்கு இளம்பூரணர், “பாங்காதல் அரிய சிறப்பினால் பல நெறியாயினும் நில்லாத உலகத்தைப் பொருந்திய நெறியை உடைத்து” என்று உரை எழுதுவார். மேலும், பாங்கரும் அருமையாவது ஒருவருக்குத் துணை ஆகாது என்றும் அதுதான் நிலையாமை எனப்படும். அது இளமை, செல்வம், யாக்கை நிலையாமை என மூவகைப் படும்” என்றும் உரை எழுதுவார். இச் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர், “தனக்குத் துணையில்லாத வீட்டின்பம் ஏதுவாக அறம், பொருள், இன்பமாகிய பொருட் பகுதியானும் அவற்றுப் பகுதியாகிய உயிரும் யாக்கையும் செல்வமும் இளமையும் முதலியவற்றானும் நிலைபேறில்லாத உலக இயற்கையைப் பொருந்திய நன்னெறியினை உடைத்து காஞ்சி என்றவாறு” என்று உரையெழுதுவார். ச.வே. சுப்பிரமணியம், “துணையில்லாத சிறப்பினை உடைய வீட்டின்பம் காரணமாகப் பல வழிகளிலும், நிலைபேறில்லாத உலக இயற்கையைப் பொருந்திய நல் நெறியினை உடையது காஞ்சி” என்று உரையெழுதுவார். எனவே, உரையாசிரியர்களின் உரைகளால் ஆன்மீக உணர்வாகிய வீட்டின்பம் பெற, அதாவது பேரின்பம் பெற நிலையாமையை உணர்தல் வேண்டும் என்பது பெறப்படுகிறது. இந்த நிலையாமை பற்றிச் சங்க இலக்கியங்கள் பகுதி பகுதியாகக் கூறுகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. "நின்றது இல் பொருள் பிணி முற்றிய" (ஐங்.336)
2. "நிலையாப் பொருள் பிணிப் பிரிந்திசி னோரே" (குறுந்.350)
3. "..............................பொருளே
வாடாப் பூவின் பொய்கை நாப்பண்
ஓடுமீன் வழியில் கெடுவ..." (நற்.16)
4. "மன்னாப் பொருள் பிணிப் பிரிதும் யாம்..." (நற்.46)
5. "மன்னா பொருட் பிணி முன்னி......." (நற்.71)
6. "நில்லா பொருள் பிணிச் சேறி" (நற்.126)
7. "யாழினும் நிலையிலாப் பொருளையும் நச்சுபவோ" (கலி.8)
8. "திருவினும் நிலையிலாப் பொருளையும் நச்சுபவோ" (கலி.8)

இச்சங்க இலக்கியப் பாடலடிகள், பொருளாகிய செல்வம் நிலையாமை பற்றிக் குறிப்பிடுகின்றன.

1. "வைகல் தோறும் இன்பமும் இளமையும்
எய்கணை நிழலின் கழியும் இவ்வுலகத்து" (நற்.46)
2. "இளமை கழிந்த பின்றை வளமை
காமம் தருதலும் இன்றே........." (நற்.126)
3. "முதிர்ந்தோர் இளமை அழிந்தும் எய்தார்" (நற்.314)
4. "கனவுக் கழிந்தனை யாகி நனவின்
நாளது செலவும் மூப்பினது வரவும்" (அகம்.353)

இவை இளமை நிலையாமையை எடுத்துக்காட்டும் சங்கநூற் செய்திகளாகும். புறநானூற்றின் 243-ஆம் பாடல் தொடித்தலை விழுத்தண்டினார் இயற்றியது. இப்பாடல் முழுமையும் இளமை அழிந்த முதுமை நிலையைக் காட்டி, இளமை நிலையாமையைச் சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளது.

"உயர்சினை மருதத்துறை உறத் தாழ்ந்து
நீர்நணிப்படி கோடு ஏறி சீர்மிக
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடும் எனப்பாய்ந்து
குளித்து மணல் கொண்ட கல்லா இளமை
அளிதோ தானே................."

என்பது அப்பாடற்பகுதி. அதாவது இளமையாய் இருக்கும்பொழுது மகளிர் மகிழும் வண்ணம் வளைந்த மரத்தின் கிளையில் ஏறி, குளத்தில் குதித்துத் தரையில் இருந்த மண்ணை எடுத்துவந்து காட்டி மகிழ்ந்த இளமை, தண்டினை ஊன்றி வாழுகின்ற இம்முதுமைப் பருவத்தில் நினைத்தால் இரக்கத்திற்கு உரியதாகிறது என்பது இப்பாடல் பொருள். இனி யாக்கை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நிலையாமை பற்றிச் சங்க இலக்கியங்கள் தருகின்ற செய்திகளைப் பின்வருமாறு காணலாம்.

1. "பண்புடை யாக்கைச் சிதைவு நன்கு அறீஇ" *(அகம்.392)*

2. "முறைநாள் கழிதல் உறாஅமைக் காண்டை
கடைநாள் இதுவென்று அறிந்தாரும் இல்லை" *(கலி.12)*

3. "..............................பிறந்து
வீற்றிருந் தோரை எண்ணுங் காலை
மரையிலை போலமாய்ந் திசினோர் பலரே" *(புறம்.27)*

4. "செம்புற்று ஈயல் போல
ஒருபகல் வாழ்க்கைக் கலம்வரு வோரே" *(புறம்.51)*

5. "பொதுமை இன்றி ஆண்டிசி னோர்க்கும்
மாண்ட அன்றே ஆண்டுகள்........." *(புறம்.357)*

6. ஈம விளக்கின் வெருவரப் பேரும்
காடு முன்னினரே..............." *(புறம்.359)*

7. நில்லா உலகத்து நிலையாமை நீ சொல்லவேண்டா" *(புறம்.361)*

8. "இடுதிரை மணலினும் பலரே
.........சென்று மாய்ந்தனரே" *(புறம்.363)*

9. "தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே"*(புறம்.165)*

இவ்வாறு யாக்கை நிலையாமையைச் சங்க இலக்கியப் பாடல்கள் விரிவாக எடுத்துரைக்கின்றன. அடுத்து உலகம் நிலையாமையைச் சங்க இலக்கியப் பாடல்கள் பரவலாகத் தருகின்றன.

1. "மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்" *(புறம்.165)*

2. "நில்லா உலகத்து நிலையாமை" *(புறம்.361)*

3. "நில்லா உலகத்து நிலைமை தூக்கிச்
செல்க என விடுக்குவன் அல்லன்...." *(பொருநர்.176-177)*

4. "நில்லா உலகத்து நிலைமை தூக்கி
அந்நிலை அணுகல் வேண்டி......." *(பெரும்பாண்.465- 466)*

இவ்வாறு புறநானூற்றில் பல பாடல்கள் நிலையாமையைக் குறிப்பிடுகின்றன. இந்நிலையாமையைக் குறிக்கின்ற சில சிறப்பான பாடல்களும் புறநானூற்றில் உள்ளன. அதில் ஒன்று பக்குடுக்கை நன்கணியார் பாடியது.

"ஓரி னெய்தல் கறங்க வோரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பைதல் உன் கண் பணிவார்பு உறைப்பப்
படைத்தோன் மன்ற அப் பண்பிலாளன்
இன்னா தம்ம இவ்வுலகம்
இனிய காண்க இதனியல்பு உணர்ந்தோரே"

என்ற 194-ஆம் பாடலில், ஒரு பக்கம் மகிழ்வும் ஒரு பக்கம் துன்பமும் நிகழுகின்ற பிறப்பும் இறப்புமாகிய நிகழ்வுகள் காட்சிப்படுத்தப் படுகின்றன. அடுத்ததாக உலகத்தைப் படைத்தவனுடைய கொடுமை கூறப் பெற்றிருக்கின்றது. இவ்வாறு சங்க இலக்கியங்களில் நிலையாமை எடுத்துக் கூறப்பெற்று, அவற்றை உணர்ந்து அவற்றில் பற்றுகொள்ளாமல் வாழ்ந்தால் இறைவனுடைய முத்திப்பேற்றைப் பெறலாம் என்பதும் குறிக்கப்பெறுகின்றன. மேலும், பரிபாடல் 5-ஆம் பாட்டில்,

"....................யாஅம் இறப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருள் இணர்க் கடம்பின் ஒலி தாரோயே"

எனும் வரிகள் முத்திப்பேறு வேண்டப்படுவதைக் குறிப்பிடுகின்றன. இந் நிலையாமையை உணர்ந்து பின்வந்த திருமுறையாளர்கள், இறைவனிடத்தில் செல்வ, இளமை, வாழ்க்கை என்னும் இன்பங்களை வேண்டாது அருள் வேண்டிப் போற்றிய செய்திகளைக் காணமுடிகிறது. திருமந்திரத்தில் முதல் தந்திரமே உபதேச மொழியில் நிலையாமையை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. யாக்கை நிலையாமை பற்றித் திருமூலர் 25 பாடல்கள் பாடியிருக்கிறார்.

"அடப் பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரோடு மந்தணம் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்து ஒழிந்தாரே" (திரு.148)

என்பது அவற்றில் ஒரு பாடல். சுவையாகச் சமைத்த உணவை உண்டார், மனைவியோடு இன்பம் துய்த்தார், திடீரென இடது பக்கம் நெஞ்சு வலிக்கிறது என்றார், கீழே விழுந்தார், மாய்ந்து போனார் என்று உடம்பு நிலையாமையை ஒருவரின் நிகழ்ச்சியை வைத்துக் கூறியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். செல்வம் நிலையாமை பற்றித் திருமூலர் 9 பாடல்கள் பாடியுள்ளார்.

"மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லும் கலம்போல்" (திரு.173)

இதன் பொருள் - மகிழ்ச்சி தரும் செல்வமும், வீடு வாசல் என்று சொல்லுகின்ற செல்வங்களும் ஆற்று வெள்ளத்தில் மிதக்கின்ற படகைப் போல ஒருநாள் கவிழ்ந்துவிடும் என்பதாகும். அடுத்து நிலையாமை பற்றி 10 பாடல்களைப் பாடியுள்ளார் திருமூலர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

“பாலன், இளையன், விருத்தன் என நின்ற
காலம் கழிவன கண்டும் அறிகிலார்” *(திரு.181)*

சிறுவன், இளைஞன், கிழவன் எனப் பருவ காலங்கள் மாறிமாறிக் கழிந்து போவது கண்டும் இளமைப்பருவம் நிலையற்றது என்பதை உணராது இருக்கின்றார்களே என்பது இப்பாடலடிகளின் பொருளாகும். இவ்வாறு சங்க இலக்கியம் பொதுவாக வகுத்துக் காட்டிய நிலையாமையைப் பின்னால் வந்த திருமுறையாகிய திருமந்திரம் விரிவாகக் குறிப்பிட்டுச் செல்கிறது. இவ்வாறு குறிப்பிடுகின்ற ஒவ்வொரு பாடலிலும் நிலையாமையை உணர்ந்து அவற்றிலிருந்து விலகி இறைவனுடைய திருவடிகளைச் சேரவேண்டும் என்பதும் திருமந்திரம் உணர்த்தும் செய்திகளாகும்.

“நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலவாத புலால் உடம்பே புகுந்துநின்ற
கற்பகமே யான் உன்னை விடுவேன் அல்லேன்” *(திருநாவுக்.6:95:4)*

“இன்றுளார் நாளைஇல்லை எனும்பொருள்
ஒன்றும் ஓராது உழிதரும் ஊமர்காள்” *(திருநாவுக்.5:84:9)*

“இன்றுளேன் நாளை யிலேன் என்செய்வான் தோன்றினேனே”
(திருநாவுக்.4:78:1)

“பலரும் கண்டு அழுது எழ உயிர் உடலைப்
பிரிந்து போம் இது நிச்சயம், அறிந்தாற்
பேதை வாழ்வெனும் பிணக்கினைத் தவிர்ந்து
கருந்தடங் கண்ணி பங்கனை உயிரைக்
கால காலனைக் கடவுளை விரும்பி
செருந்தி பொன்மலர் திருத்தினை நகருட்
சிவக் கொழுந்தினைச் சென்றடை மனனே” *(சுந்தரர்.7:64:8)*

“வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்பு இறப்பு சிவம்
வேண்டார் தம்மை நாளும்
தீண்டேன் சென்று சேர்ந்தேன்மன்னு
திருப்பெருந்துறை இறைதாள்
...............................” *(திருவாசகம்.8:34:7)*

“நில்லாத உலகு இயல்பு கண்டு நிலையா வாழ்க்கை” *(பெரிய.12:21:37)*

இவ்வாறு திருமுறைகள் நிலையாமையைக் குறிப்பிடுகின்றன. திருமுறைகள் இவ்வாறு குறிப்பிட, சாத்திரங்கள் அவற்றைத் தத்துவமாக விரித்துக் கூறுகின்றன. அதிலும் அருணந்தி சிவாசாரியார், நிலையாமையை உணர்ந்து, பொருள்களில் பற்று வைக்காமல் இறைவனடி சேர வேண்டும் எனப் பல பாடல்களில் வற்புறுத்துகின்றார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"வாழ்வெனும் மையல் விட்டு
வறுமையாம் சிறுமை தப்பி
தாழ்வெனும் தன்மை யோடும்
சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெறல் அரிது சால
உயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியி னானை
போற்றுவார் அருள் பெற்றாரே" (சிவஞான.சி.181)

"கருவினுள் அழிவ தாயும்
கழிந்திடாது அழிவ தாயும்
பரிணமித்து அழிவ தாயும்
பாலனாய் அழிவ தாயும்
தருணனாய் அழிவ தாயும்
தான்நரைத்து அழிவ தாயும்
உருவமே அழிவே யானால்
உள்ளபோ தேபார் உய்ய" (சிவஞான.சி.183)

என்று சாத்திரங்களும் நிலையாமையைக் கூறி இறைவனை அடைகின்ற முறைமையை வலியுறுத்துகின்றன.

வழிபாடும் முத்தியும்

பண்டைத் தமிழர் வாழ்வியலில் இறை நம்பிக்கை ஏற்பட்ட பிறகு அதனை வளர்த்துக்கொள்வதற்கு நாள்தோறும் இறை வழிபாட்டைச் செய்வது சைவ சமயக் கொள்கை ஆயிற்று. இறைவனுக்கு உருவம் கொடுத்து வழிபடுகின்ற முறை சைவ சமயத்தில் தனி ஒரு கோட்பாடாகவே அமைந்தது. இந்த வழிபாட்டில் விழாக்கள் ஒரு கூறாக அமைந்தன. சங்க இலக்கியங்களில் கல்நட்டு விழா எடுத்தலும், வெறியாட்டுக்களம் அமைத்து விழா எடுத்தலும், கொற்றவைக்குரிய வழிபாட்டு நிலையில் அணங்காடலும் உள்ளிட்ட வழிபாட்டு முறைகள் இறைவனுடைய திருவருளைப் பெறுவதற்காக அமைந்தன என்பதைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகின்றது.

வெறியாட்டு

சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்த வழிபாட்டு மரபைப் பின்பற்றினர். குறிஞ்சி நிலத்தில் அந்நிலத்திற்குரிய தெய்வமான வேலனின் வேடத்தைப் புனைந்து, வெறியாட்டு அயர்ந்து வழிபடும் செய்தி சங்க இலக்கியப் பாடல்களில் அதிலும் அகத்துறைப் பாடல்களில் பெரிதும் காணப்படுகின்றது. வெறியாட்டு என்பது தெய்வ வழிபாடு செய்யும் ஒருவன் வேலைக் கையில் ஏந்தி முருகப் பெருமானைப் போற்றித் தான் ஆடும் இடத்திற்கு வரவேண்டும் என்று அழைத்துக் கொண்டே கை கால்களை ஆட்டி ஆடுவதாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. "......................வேலன்
வெறியயர் வியன்களம்......." (அகம்.182)

2. "நறுவீ ஞாழலொடு புன்னை தாஅய்
வெறியயர் களத்தினின் தோன்றும் துறைவன்" (குறுந்.318)

3. "கூடு கொள் இன்னியம் கறங்க களன் இழைத்து
....
செல்வன் பெரும்பெயர் ஏத்தி வேலன்
வெறியயர் வியன்களம் பொறப........" (அகம்.98)

4. "காவு தோறிழைத்த வெறியயர் களத்தின்" (புறம்.366)

5. "வல்லோன் தைஇய வெறிக்களங் கடுப்ப" (மதுரைக்.284)

என்று வெறியாட்டுக்குக் களம் அமைந்திருந்த செய்தியைச் சங்க இலக்கியப் பாடலடிகள் குறிப்பிடுகின்றன. அதுபோல வெறியாட்டு ஆடிய நிகழ்ச்சியைச் சங்க இலக்கியப் பனுவல்களின் பல இடங்களில் காணமுடிகிறது. அவற்றுள் ஒருசில பின்வருமாறு.

1. "வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்
செந்நெல் வான்பொரி சிதறி அன்ன" (குறுந்.53)

என்று வேலன் வேடம் புனைந்தோர் வெறியாட்டு அயர்கின்ற இடங்களில் வழிபாடு செய்யப்பெற்றுப் பலி தூவியதால் செந்நெலின் வெண்பொரி சிதறிக் கிடப்பதைக் கூறுகின்றது குறுந்தொகை. அந்தக் களத்தில் முருகன் எழுந்தருளுவான் என்பதை,

2. "கறிவளர் சிலமபில் கடவுள் பேணி
அறியா வேலன் வெறி எனக் கூறும்" (ஐங்.243)

என்று சுட்டிக்காட்டும் ஐங்குறுநூறு, வெறியாட்டுக் களத்தில் கடவுள் தோன்றுவதைக் குறிப்பிடுகிறது. வெறியாட்டுக் களத்தில் நடைபெறும் நிகழ்ச்சியை,

3. "ஆடு அணி அயர்ந்த அகன் பெரும் பந்தர்
வெண்போழ் கடம்பொடு சூடி இன்சீ
ஐதுஅமை பாணி இரீஇ கைபெயரா
செல்வன் பெரும்பெயர் ஏத்தி வேலன்
வெறியயர் வியன்களம் பொறப...." (அகம்.98)

4. "அருங்கடி வேலன் முருகொடு வளைஇ
அரிக்கூடி இன்னியம் கறங்க நேர்நிறுத்துக்
கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின்
சீர்மிகு நெடுவேள் பேணி............" (மதுரைக்.611-616)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்னும் அகநானூறு, மதுரைக்காஞ்சிப் பாடலடிகள், வெறியாட்டுக் களத்தில் ஒலிக்கப்படுகின்ற இசைகளையும், வேலன் மேனி கொண்ட அலங்காரங்களையும் குறிப்பிடுகின்றன. இந்த வெறியாட்டுக் களங்களில் குருதி ஒழுகும் பலிகளும் இடப்பெறும் என்பதை,

5. "களம் நன்கு இழைத்துக் கண்ணி சூட்டி
வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்து
உருவச் செந்திளை குருதியொடு தூஉய்
முருகாற்றுப் படுத்த உறுகெழு நடுநாள்" (அகம்.22)

6. "கணங்கெழு கடவுட்கு உயர்பலி தூஉய்ப்
பரவினம் வருகம் சென்மோ" (நற்.358)

எனும் அகநானூறு, நற்றிணைப் பாடலடிகள் எடுத்துக்காட்டுகின்றன. இந்நிகழ்வுகளுக்கிடையில் வெறியாட்டுக் களத்தில் மலர்கள் தூவி வழிபட்டதை,

7. "நெல்லும் மலரும் தூஉய்க் கைதொழுது" (நெடுநல்.43)

8. "அருவிலை நறும்பூத் தூஉய்......." (பட்டினப்.252)

9. "பரவியும் தொழுதும் விரவு மலர் தூயும்" (குறிஞ்சிப்.5)

என்று சங்க இலக்கியப் பாடலடிகள் குறிப்பிடுகின்றன. நறும்புகை ஊட்டி வழிபாடு செய்தமையை,

10. "புகைபூ அவி ஆராதனை அழல் பல ஏந்தி" (பரி.6)

11. "நறையும் விரையும் ஓச்சியும்............" (குறிஞ்சிப்.7)

12. "..............நெடுவேட்கு எடுத்த
முருகு கமழ் புகை நுழைந்த வளியும்" (பரி.21)

என்று சங்க இலக்கியப் பாடலடிகள் குறிப்பிடுகிறன. இவ்வாறு வெறியாட்டுக் களம் அமைத்துச் சங்ககால மக்கள் வழிபட்ட செய்திகள் சங்க இலக்கியப் பாடல்களால் தெரியவருகின்றன.

நடுகல் வழிபாடு

வெறியாட்டு அகத்துறைச் சார்பில் நடைபெற்ற வழிபாட்டைக் குறித்திட, நடுகல் வழிபாடு புறத்துறை சார்ந்த வழிபாட்டினைக் குறிக்கிறது. மறன் இழுக்கா மானமுடைய வீரர் போர்க்களத்தின் கண்ணே விழுப்புண்பட்டு உயிர்கொடுத்துப் புகழ் கொண்டால் அவ்வீரர் நினைவாக நடுகல் நட்டு வழிபடும் மரபு சங்ககாலத்தில் இருந்தமை புலனாகின்றது. தொல்காப்பியம் நடுகல் நிகழ்வை எடுத்துரைக்கச் சங்க இலக்கியப் பகுதிகள் நடுகல்லின் சிறப்பினைப் பலவாறாக எடுத்துக்கூறுகின்றன. சங்க இலக்கியப் பகுதிகளில் அமைந்த நடுகல் செய்திகளில் சான்றுக்குச் சில,

1. "விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்
எழுத்துடை நடுகல் அன்ன........." (ஐங்.352)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. “வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகல் பீலி சூட்டித் துடிப்படுத்துத்
தோப்பிக் கள்ளொடு துரூஉப் பலிகொடுக்கும்” *(அகம்.35)*

3. “பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்” *(அகம்.67)*

4. “நடுகல் ஆயினன் புரவலன் எனவே” *(புறம்.221)*

5. “நிரை இவண் தந்து நடுகல் ஆகிய
வெவ்வேல் விடலை.............” *(புறம்.261)*

6. “அணி மயில் பீலி சூட்டிப் பெயர் பொறித்து
இனி நட்டனரே கல்லும்...............” *(புறம்.264)*

7. “புடைநடு கல்லின் நாட்பலி ஊட்டி
நன்னீர் ஆட்டி நெய் நறை கொளீஇ
மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும்” *(புறம்.329)*

8. “நடுகல்லின் அரண் போல
நெடுந்தூண்டிலில்..........” *(பட்டினப்.79-80)*

9. “செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட
கல்ஏசு கவலை எண்ணு மிகப் பலவே” *(மலைபடு.388-389)*

இவ்வாறு கல்லில் புகழை எழுதி அதனை நட்டுத் தெய்வவழிபாடு நடத்தியது சங்க இலக்கியத் தரவுகளால் தெரியவருகின்றது.

கொற்றவை வழிபாடு

புறத்துறையில் பெண் தெய்வ வழிபாடாகக் கொற்றவை வழிபாடு அமைகிறது. அச்சம் அடிப்படையிலும், வீரத்தின் அடிப்படையிலும் வெற்றித் தெய்வமான கொற்றவையைச் சங்ககால மக்கள் வழிபட்டுப் போற்றியுள்ளனர். இக்கொற்றவை சூலி என்றும் கொற்றவை என்றும் துர்க்கை என்றும் இற்றைக்கும் கூறப்பெற்று வழிபடப்பெறுகின்றது.

1. “.........................ஓங்கு புகழ்
கானமர் செல்வி அருளலின்.........” *(அகம்.345)*

என்று கொற்றவையைக் காடுறை தெய்வமாகக் கொண்டு போற்றியுள்ளனர். இதனையே,

2. “பெருங் காட்டுக் கொற்றிக்குப் பேய் நொடித்தாங்கு” *(கலி.89)*

என்று கலித்தொகை குறிப்பிடுகின்றது.

3. “பாய்குழை நீலம் பகலாகத் தையினாள்
குவளைக் குழைக்காதின் கோலச் செவியின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவள்செரீஇ நான்கு விழி படைத்தாள் என்று
நெற்றி விழியா நிறைத் திலகம் இட்டாளே
கொற்றவை கோலம் கொண்டு ஓர் பெண்" (பரி.11)

என்று கொற்றவை கோலத்தைக் குறிப்பிடுவது அறியத் தக்கதாம். கொற்றவையை 'அயிரை' என்ற பெயராலும் சங்க இலக்கியம் குறிப்பிட்டு அவ்வழிபாட்டை வெளிப்படுத்துகிறது.

4. "அயிரை பரைஇ ஆற்றல் சால் முன்போடு"

என்று பதிற்றுப்பத்து மூன்றாம் பத்தின் பதிகம் குறிப்பிடுகின்றது.

5. "குருதி விதிர்த்த குவவுச் சோற்றுக் குன்றோடு
உருகெழு மரபின் அயிரை பரைஇ" (பதிற்.38)

6. "உருகெழு மரபின் மரபின் அயிரை பரவியும்" (பதிற்.89)

என்னும் பதிற்றுப்பத்துப் பாடலடிகள், கொற்றவையை அயிரை எனக் குறிப்பிடுவதைப் பார்க்க முடிகின்றது.

கொற்றவை வழிபாட்டில் அணங்கு வழிபாட்டையும் சேர்த்துக் காண்பது மரபாகும். அச்சத்தைத் தருகின்ற பொருளில் இச்சொல் பயன்பட்டு, அந்த அச்சத்தைத் தருகின்ற பெண் தெய்வத்தைப் போற்றுகின்ற நிலையும் சங்க இலக்கியப் பகுதியில் காணப்பெறுகிறது. பெருமளவில் இந்த அணங்கு வழிபாடு குறிக்கப்பெறுகிறது. தாக்கணங்கு என்று வருத்தும் தெய்வமாக, மகளிர் மார்பில், இல்லத்தில், யாழில், மரங்களில், நீர்த்துறைகளில் உறைகின்ற தெய்வமாக, அச்சத்தோடு கூடிய வருத்தத்தைத் தருவதாக இப்பெண் தெய்வம் குறிக்கப்பெறுகிறது. நூற்றுக்கணக்கான இடங்களில் இவ்அணங்கு பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

1. "அணங்கொடு நின்றது............" (நற்.165)
2. "அணங்குடை நெடுவரை உச்சியின் இழிதரும்
கணங்கொள் அருவி........................." (அகம்.22)
3. "அணங்குடை நசரின் மணந்த பூவின்" (அகம்.99)
4. "ஆஅய் நன்னாட்டு அணங்குடைச் சிலம்பின்" (அகம்.198)
5. "அணங்குடை ஆரிடை ஈங்கு நீ வருவதை" (கலி.49)
6. "அருநிலை உயர் தெய்வத்து அணங்குசால்..........." (பரி.9)
7. "அணங்குடை நெடுங்கோட்டு அளையகம் முனைஇ" (புறம்.52)
8. "அணங்குடை மரபின் இருங்களந் தோறும்" (புறம்.392)
9. "மெய்பனி கூரா அணங்கெனப் பராவலின்" (பதிற்.71)
10. "அணங்குறு மகளிர் ஆடுகளம் கடுப்ப" (குறிஞ்சிப்.175)
11. "பேயும் அணங்கும் உருவுகொண்டு......." (மதுரைக்.632)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இத்தகைய அணங்காகிய தெய்வம் தீண்டி வருத்தக்கூடியதாக, "தாக்கணங்காவது எவன்கொல் அன்னாய்" (23) என்று ஐங்குறுநூற்றிலும், "கண்டார்க்குத் தாக்கணங்கு இக்காரிகை காண்மின்" (11) என்று பரிபாடலிலும் குறிக்கப் பெற்றுள்ளது. அத்தெய்வம் பெண்களின் மார்பில் உறைதலை, "சுணங்கு சூழ் ஆகத்து அணங்கென உருத்த இளமுலை" (161) என்று அகநானூறும் இல்லத்தில் உறைதலை, "மணம் புணர்ந்து ஓங்கிய அணங்குடை நல்இல்" (528) என்று மதுரைக்காஞ்சியும், யாழில் உறைதலைப் பொருநர் ஆற்றுப்படையும் (20), நீர்த்துறைகளில் உறைவதை ஐங்குறுநூறும் (28), அகநானூறும் (240), குறுந்தொகையும் (164), நற்றிணையும் (155) குறிப்பிடுகின்றன.

இத்தகைய அணங்குகளைக் குறிப்பிட்டுத் தெய்வம் ஆக்கி அவற்றிற்கு வழிபாடு செய்தலையும் சங்க இலக்கியப் பாடல்கள் பதிவுசெய்கின்றன. இவ்வாறு வழிபாட்டின்பொழுது துணங்கைக் கூத்தாடியதை, "வணங்கு இறைப் பணைத்தோள் எல்வளை மகளிர் துணங்கை நாளும் வந்தன" (குறுந்.364) "மகளிர் தழீஇய துணங்கையானும்" (குறுந்.31) என்ற பகுதிகளால் அறிய முடிகின்றது.

பிற தெய்வ வழிபாடு

சங்க இலக்கியங்களில் வேறு சில வழிபாடுகளும் இடம்பெற்றுள்ளதைப் பார்க்க முடிகின்றது. கார்த்திகைத் திங்களில் நிறைமதிநாளில் முருகவழிபாடு நடைபெற்றதை,

1. "கண்டிசின் வாழியோ குறுமகள் நுந்தை
அருமீன் பயந்த அறம்செய் திங்கள்
செல்சுடர் நெடுங் கொடி போல" (நற்.202)

2. "........................மதி நிறைந்து
அருமீன் சேரும் அகல்இருள் நடுநாள்
மறுகு விளக்குறுத்து மாலை தூக்கி
பழவிறல் மூதூர் பலருடன் துவன்றிய
விழவுடன் அயர வருகதில் அம்ம" (அகம்.141)

என்னும் நற்றிணை, அகநானூற்றுப் பாடல்களால் அறியலாம். இதனால் அறுமீன் தொடர்புகொண்ட முருகனுக்குக் கார்த்திகை முழுநாளில் விளக்குகள் வரிசையாக எடுத்து வழிபட்டதை அறியமுடிகிறது. திருமுருகாற்றுப்படையில் முருகனுக்கு எடுக்கப்பெற்ற விழாக்கள் பற்றிய விரிவான செய்திகள் கூறப்பெற்றுள்ளன. திருப்பரங்குன்றத்தில் பேய்மகளின் துணங்கைக் கூத்து சிறப்பாகக் கூறப்பெற்றுள்ளது. திருவாவினன்குடியில் பாடி வழிபடுவோர் நிலை கூறப்பெற்றிருக்கிறது. திருஏரகத்தில் உச்சியில் கைகூப்பி அருமறைக் கேள்வி நவிலப் பாடி நறுமலர் ஏந்தி வழிபட்ட நிலை கூறப்பெறுகிறது. சிறுதினை மலரோடு தூவி விழாக் காலங்களில் வழிபட்ட நிலையைப் பழமுதிர் சோலைப் பகுதி குறிப்பிடுகிறது. மேலும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"ஆடு களம் சிலம்பப் பாடி பலவுடன்
கோடு வாய்வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டு ஆண்டு உறைதலும் அறிந்தவாறே" *(திருமுருகு.245-249)*

என்று குறிப்பிடுவதும் அறியத்தக்கதாகும். இவ்வாறு ஆன்மீக உணர்வோடு பிற தெய்வங்களை நோக்கி வழிபாடு செய்து, விழாக்கள் எடுத்து வந்துள்ளமை குறித்துச் சங்க இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன.

1. "முந்நீர் விழவின் னெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே" *(புறம்.9)*

என்ற புறநானூற்றுப் பாடலடிகள், கடவுளுக்கு விழா எடுக்கப்பட்டதைக் குறிப்பிடுகின்றன.

2. "................................உயர் சீர்த்தி
ஆலமர் செல்வன் அணிசால் மகன்விழாக்
கால்கோள் என்று ஊக்கி............" *(கலி.83)*

என்ற கலித்தொகைப் பாடலடிகள், முருகப் பெருமானுக்கு எடுக்கப்பட்ட விழாவைக் குறிப்பிடுகின்றன.

3. "முழவு இமிழும் அகல் ஆங்கண்
விழவு நின்ற வியன் மறுகின்" *(மதுரைக்.327-328)*

4. "கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி
ஆடு துவன்று விழவின் நாடு ஆர்த்தன்றே" *(மதுரைக்.427-428)*

5. "கணங்கொள் அவுணர் கடந்த பொலந்தார்
மாயோன் மேய ஓண நல்நாள்" *(மதுரைக்.590-591)*

என்னும் மதுரைக்காஞ்சிப் பாடலடிகள், மதுரை நகரத்தில் நடைபெற்ற பல்வேறு விழாக்களைப் பற்றிக் குறிப்பிடுவதைப் பார்க்க முடிகின்றது.

சங்க இலக்கியப் பனுவல்களில் இடம்பெற்ற வழிபாட்டு முறைகள், விழாக்கள் படிநிலையாக காலத்திற்குக் காலம் தமிழ்ச் சமுதாயத்தில் சமய வளர்ச்சியில் இடம்பெற்று வந்துள்ளன. இம்மரபினை இக்கால இலக்கியங்களிலும் பார்க்கமுடிகின்றது. திருமுறைகளில் மலர் தூவி வழிபடுகின்ற முறை உள்ளிட்ட வழிபாடுகள் பலவாறாக இடம்பெற்றுள்ளன. மலர் தூவி வழிபடுவதைத் தான் இறைவன் விரும்புவான் என்பதைத் திருமுறைகள் எடுத்தியம்புகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. "நன்று நகுநாண் மலரால் நல்இருக்கு மந்திரங் கொண்டு
ஒன்றி வழிபாடு செயலுற்றவன்" *(திருஞான.1:62:3)*

2. "சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்............" *(திருநாவுக்.4:1:6)*

3. "நறப்படுபூ மலர்தூபம் தீப நல்ல
நறுஞ்சாந்தம் கொண்டேத்தி நாளும் வானோர்
சிறப்போடு பூசிக்கும் திருவாரூர்..." *(திருநாவுக்.6:30:5)*

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமையஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே"
(திருநாவுக்.4:76:4)

4. "எட்டுகந்தார் திசை ஏழுகந்தார் எழுத்து ஆறும் அன்பர்
இட்டுகந்தார் மலர்ப்பூசை இச்சிக்கும் இறைவர்......" *(சுந்தரர்.7:19:8)*

5. "மந்தி கடுவனுக்கு உண்பழம் நாடி மலைப்புறம்
சந்திகள் தோறுஞ் சலம் புட்பம் இட்டு வழிபடப்
புந்தி உறைவாய் புக்கொளியூர் அவினாசியே..." *(சுந்தரர்.7:92:7)*

6. "முத்து நல் தாமம், பூ மாலை தூக்கி,
முளைக்குடம் தூபம், நல் தீபம் வைம்மின்" *(திருவாசகம்.8:9:1)*

7. "புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள் புரியா நிற்கும்" *(திரு.10:7:11:6)*

8. "யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை" *(திரு.10:19:2)*

என்று திருமுறைகள் மலர்கொண்டு வழிபாடு இயற்றுகின்ற மரபைக் குறிப்பிடுகின்றன. இவற்றை அடியொற்றிச் சித்தாந்த சாத்திரங்களும் வழிபாடு குறித்துக் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றன.

1. "அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க" *(சிவஞான.10)*

2. "தாபர சங்கமங்கள் என்று இரண்டு உருவின் நின்று
மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க்கு அருளை
வைப்பன்" *(சிவஞான.சி.118)*

3. "கந்த மலர் புகை ஒளி மஞ்சனம் அமுது முதலா
கண்டன எலாம் மனத்தால் கருதிக் கொண்டு
சிந்தைதனில் அர்ச்சிக்க............" *(சிவஞான.சி.301)*

என்றெல்லாம் சங்க இலக்கியப் பகுதிகள் குறிப்பிட்ட செய்திகளைத் திருமுறைகளும் சாத்திரங்களும் வழிபாட்டு நிலையில் ஏற்றுக்கொண்டு, தத்தம் கால வழிபாட்டு முறைகளைச் சுட்டிக் காட்டியுள்ளன

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முத்திப் பேறு

சமயக் கொள்கைகளில் முத்தி என்ற வீட்டுப்பேறு நிறைவு நிலையாகும். இது உயிர்கள் பெறும் பேறுகளில் தலைமையானதும் நிலைத்ததும் ஆகும். இறைவனுடைய திருவருளால் பல பிறப்புக்கள் எடுத்துப் படிப்படியாக மலங்கள் நீங்கிப் பக்குவம் பெற்று இறைவனோடு இரண்டறக் கலப்பதை வீட்டுப்பேறு என்பர். இவ்வீட்டுப் பேறு மீண்டும் பிறவாத நிலையைத் தரும். இதனைப் பேரின்பம் என்றும் இறுதி இன்பம் என்றும் குறிப்பிடுவதுண்டு. திருவள்ளுவர் "வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்" (குறள்.346) என்று குறிப்பிடுவார். இதற்குப் பரிமேலழகர், "வானோர்க்கும் எய்துவதற்கு அரிய வீட்டுலகத்தை எய்தும்" என்று உரை எழுதுகின்றார். மேலும், பரிமேலழகர் அறத்துப்பாலைத் தொடங்கும் பொழுது,

"இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமில் இன்பத்து அழிவு இல் வீடும், நெறி அறிந்து எய்துவதற்கு உரிய மாந்தர்க்கு உறுதி என உயர்ந்தோரால் எடுக்கப்பெற்ற பொருள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. அவற்றுள் வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைக்கு ஆதலின் துறவறம் ஆகிய காரண வகையான் கூறப்படுவதல்லது இலக்கண வகையால் கூறப்படாமையின் நூல்களால் கூறப்படுவன ஏனை மூன்றுமே ஆகும்" என்று குறிப்பிடுவார். சங்க இலக்கியங்களில் வீடுபேறு பற்றிய செய்திகள் கிடைத்தில. அதற்குக் காரணம் முன்னர்க் கூறிய பரிமேலழகரின் உரை நிலையாகக்கூட இருக்கக்கூடும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் வீடு பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன.

1. "ஒல்லுக நல்ல உருவவேல் கண்ணினாய்
   வல்லுவ நாடி வகையினால் - சொல்லின்
   கொடையினார் போகம் சுவர்க்கம் தவத்தால்
   அடையாத் தவத்தினால் வீடு" *(ஏலாதி.76)*

என்று வீட்டுப் பேற்றினைத் ஏலாதி குறிப்பாகக் காட்டுகிறது.

2. "முந்நீர்த் திரையின் எழுத்து இயங்கா மேதையும்
   நுண்ணூல் பெருங்கேள்வி நூற்கரை கண்டானும்
   மைந்நீர்மை இன்றி மயலறுப்பான் இம்மூவர்
   மெய்நீர்மை மேல் நிற்பவர்" *(திரிகடுகம்.35)*

3. "நாவினால் ஆகும் அருள்மணம் அம்மனத்தான்
   வீவிலா வீடாய் விடும்" *(நான்மணி.106)*

4. "பாடே புரியாது பால்போலும் சொல்லினாய்
   வீடே குறிதல் விதி" *(ஏலாதி.21)*

என்னும் நீதிநூற் பாடல்கள் வீடுபற்றிய செய்திகளைக் குறிப்பாகத் தருகின்றன. பின்னர்வந்த திருமுறைகளும் பிறப்பு இல்லா நிலையாகிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வீட்டுப் பேற்றினை இறைவன் திருவருளால் பெறமுடியும் என்று அனுமான அளவையால் வீடு பற்றிய செய்திகளைத் தருகின்றன.

திருமந்திரம், சீவன் முத்தி, பரமுத்தி, சிவமுத்தி என்று சைவ சமயத்தின் மூன்றுவித முத்திகளைக் குறிப்பிடுகிறது. சீவன் முத்தி என்பது உடம்போடு இருக்கும்பொழுது சிவ அருளைப்பெற்று அருளில் திளைத்துத் தன்னை மறந்து சிவனோடு ஒன்றியிருப்பது. பரமுத்தி என்பது உயிர் தன்னிலை மறந்து பரம்பொருள் நினைவில் பொருந்தியிருப்பது. சிவ முத்தி என்பது சிவானந்தத்தில் திளைத்துச் சிவத்துடன் இரண்டறக் கலத்தலாகும். இதனை,

"சீவன்றன் முத்தி அதீததம் பரமுத்தி
ஓ உபசாந்தம் சிவமுத்தி ஆனந்தம்
மூவயின் முச்சொரூப முத்திமுப் பாலதாம்" *(திரு.10:8:23:1)*

என்று திருமந்திரம் முத்திதனைக் குறிப்பிடும் பொழுது,

"உள்ள மலநீங்கி யோங்கு சிவானந்த
வெள்ளந் திளைத்ததுவாய் மேவுதலே - கள்ளவிழ்பூங்
கொத்தார் விரிசடையார் கூறு சிவாகமத்தில்
சித்தாந்த முத்திஎனத் தேறு" *(முத்தி நிச்சயம் -22)*

என்று குருஞானசம்பந்தர் சிவானந்த வெள்ளத்தில் திளைப்பது எனக் குறிப்பிடுவார்.

"முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியம் தருவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பக்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே" *(திருஞான.2:202:3)*

"மாடஞ் சூழ்மரு கற்பெரு மான்திரு
வேடங் கைதொழ வீடு எளிதாமே* *(திருநாவுக்.5:88:2)*

"இருள்அகல வாள்வீசி இன்பமரும் முத்தி
அருளுமலை என்பது காண்ஆய்ந்து" *(திருவாசகம்.8:19:5)*

"பாண்டியனார் அருள்செய்கின்ற முத்திப்பரிசு இதுவே"
(திருவாசகம்.8:36:6)

இவ்வாறு திருமுறைகள் முத்தி பற்றிக் குறிப்பிடச் சாத்திரங்கள், பிற மதங்கள் கூறுகின்ற முத்தி எல்லாவற்றையும் மறுத்து, முத்தி என்பது இறைவனோடு இரண்டறக் கலப்பதுதான் என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றன.

"இம்மையே ஈரெட்டு ஆண்டு எய்திளழில் ஆரும்
ஏந்திழைஆர் முத்தி என்றும், இரும்சுவர்க்க முத்தி
அம்மையே என்றும் முத்தி ஐந்து கந்தம்
அறக்கெடுகை என்றும், அட்ட குணம்முத்தி என்றும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மெய்ம்மையே பாடாணம் போல்கைமுத்தி என்றும்
விவேகமுத்தி என்றும் தன் மெய்வடிவாம் சிவத்தைச்
செம்மையே பெறுகைமுத்தி என்றும்செப் புவர்கள்
சிவனடியைச் சேரும்முத்தி, செப்புவது இங்குயாமே" (சிவஞான.சி.264)

என்று சிவஞான சித்தியார் பிற மத முத்தியை மறுத்துச் சிவமுத்தி பற்றிய செய்தியைத் தெளிவாகத் தருகின்றது.

ஆய்வு முடிவுகள்

1. பண்டைத் தமிழர்களின் வாழ்வியலுக்குச் சான்றுகளாக விளங்குவன சங்க இலக்கியங்கள். அவ்விலக்கியங்களில் தமிழரின் காதல், வீரம், அரசியல், சமயம் ஆகிய வாழ்வியல் அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. சங்க இலக்கியங்களில் பண்டைத் தமிழரின் சமயம் இதுதான் என்று சுட்டிக்காட்ட இயலாத வண்ணம் பொதுவான கடவுள் கொள்கையே இடம்பெற்றுள்ளது. பௌத்தம், சமணம், சைவம், வைணவம் உள்ளிட்ட சமயங்களின் கொள்கைகளும் வழிபாட்டு முறைகளும் அவற்றில் இடம்பெற்றுள்ளன. சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள சமயக் கருத்துக்களில் சைவ சமயத்திற்குரிய மூலப்பகுதிகளை எடுத்துக்காட்டுவது இந்நூலின் நோக்கம். எனவே, இந்திய மெய்ப்பொருளியலில் இடம்பெற்றுள்ள சில சமயங்கள் குறித்து எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. தற்பொழுது கிடைத்திருக்கும் தரவுகளைக் கொண்டு, அவற்றின் கொள்கைகளையும் சங்க இலக்கியங்களில் அக்கொள்கைகள் இடம்பெற்றிருப்பதால் சங்க இலக்கிய காலத்திலேயே அச்சமயங்கள் தமிழ்நாட்டில் நிலவிவந்தன என்பதையும் உறுதிசெய்வதாக இப்பகுதி அமைந்துள்ளது.

2. உலக மெய்ப்பொருளியலில் சைவ சமயம் மிகவும் தொன்மையானது. இதற்கு அகழ்வு ஆராய்வுகள், வேதத்தின் செய்திகள், வீர சைவ வழக்குகள், காஷ்மீர் சைவ செய்திகள் மற்றும் அகச் சமய, புறச் சமயச் செய்திகள் ஆகியவை அத்தொன்மையை எடுத்துக்காட்டும் சான்றுகளாக விளங்குகின்றன.

3. தற்காலத்தில் கிடைத்திருக்கும் தமிழ் இலக்கண நூல்களில் மிகவும் தொன்மையானது தொல்காப்பியம். அத் தொல்காப்பியத்தில் இடம்பெற்ற தெய்வம் சார்ந்த செய்திகளால் பண்டைத்தமிழரின் தெய்வ நம்பிக்கை புலனாகிறது. இலக்கணத்திலேயே தெய்வ நம்பிக்கை குறித்த செய்திகள் இடம்பெற்றிருப்பதால் எடுத்துக்கொள்ளப்பட்ட இலக்கண நூலுக்கு முன், பின் தோன்றிய இலக்கியங்களில் தெய்வ நம்பிக்கை இடம்பெற்றிருப்பது இயல்பு. அத்தெய்வ நம்பிக்கை எடுத்துக்காட்டப்படுவதால் கிடைக்கின்ற சைவ சமயச் சான்றுகள் வலிமைபெறுகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துக்கள் அமைந்துள்ளன. அவை தொகுக்கப்பட்ட காலத்தில் தொகுத்தவர்களால் இணைக்கப்பெற்றன. அப்பாடல்கள் சைவ சமயத்திற்கு உரிய பாடல்களாக அமைந்து சைவ சமய மூலக் கூறுகளாக விளங்குகின்றன.

5. சைவ சமயத்தில் அடிப்படைக் கொள்கைகள் இறை, உயிர், தளை, ஆகியவை ஆகும். இம் முப்பொருள்களைப் பற்றிய கொள்கைகள் தத்துவங்களாக அமைக்கப்பெற்றுள்ளன. தத்துவங்கள் வகுக்கப்படுவதற்கு சைவர்களின் நம்பிக்கையே காரணம் ஆகும். அந்த நம்பிக்கையில் பண்டைத் தமிழர்களின் நம்பிக்கைகள் மூலக்கூறுகள் எனப்படுகின்றன. இறைவனைப் பற்றிய மூலக்கூறுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுவதால் சைவ சமயத்தின் தொன்மை புலனாகின்றது.

6. உயிர் பற்றிய பண்டைத்தமிழரின் நம்பிக்கைகள், சங்க இலக்கியங்களின் மூலக்கூறுகளாக இடம்பெற்றுப் பின்னால் வெளிவந்த தத்துவங்களுக்கு அடிப்படையாக அமைந்தன.

7. உயிரைப் பற்றுகின்ற, மலங்களாகிய குற்றங்கள் தளை எனப்படும். ஆணவம், கன்மம், மாயை என்று அவை மும்மலங்களாக வகுக்கப்பெறும். இம்மும்மலங்கள் பற்றிய கருத்துக்களும் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. அவற்றால் சைவ சமயத்தின் தொன்மை புலனாகின்றது.

8. சமயம் என்று எண்ணுகின்றபொழுது வழிபாடுகள், வழிப்பாட்டுத் தலங்கள், விழாக்கள் என்ற செயல் முறைகளும் அச்செயல் முறைகளால் கிடைக்கின்ற பயன்களும் நினைவுக்கு வரும். இவற்றைத் தத்துவ நூலார் சாதனம், பயன் என்று குறிப்பிடுவார்கள். இவை பற்றிய செய்திகளும் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றிருப்பதால் சைவத்தின் தொன்மை தெரியவருகிறது.

9. இத்தகைய எடுத்துக்காட்டுகள் மூலக்கூறுகளாக அமைந்து சங்க இலக்கியத்திற்கும், சைவ சமயத்திற்கும் உள்ள தொடர்பினை வெளிப்படுத்திப் பண்டைத் தமிழரின் சைவ சமய உணர்வுகளை உணர்ந்து கொள்வதற்குச் சான்றுகளாக அமைகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

துணைநூற் பட்டியல்

அண்ணாமலை, வே., 2000, சங்க இலக்கியத் தொன்மைக்களஞ்சியம், 1.2, மெய்யப்பன் தமிழாய்வகம், 53, புதுத்தெரு, சிதம்பரம்.

அருட்கலை, கோ., 1996, தமிழர் பண்பாட்டில் நம்பிக்கை, அருள்நிலைப் பதிப்பகம், வெங்கட்டா நகர், புதுச்சேரி.

அருணாசலம், பா., முனைவர், 2002, சைவசமயம், பாரிநிலையம், சென்னை - 108.

அறவாணன், க.ப., அருங்கலச் செப்பு மூலமும் உரையும், ஜைன இளைஞர் மன்றம், போக் சாலை, சென்னை - 17.

அறவேந்தன், இரா., முனைவர், 2010, குறுந்தொகைப் பதிப்பு வரலாறு, காவ்யா பப்ளிகேஷன்ஸ், கோடம்பாக்கம், சென்னை - 24.

இரத்தினசபாபதி, வை., முனைவர், 1990, வீரசைவம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

இராமச்சந்திரன், கே. என்., 2009, சமணசமய வரலாறும் விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும், தமிழ்நிலையம், 40, சரோஜினி தெரு, தியாகராய நகர், சென்னை - 17.

இராஜசேகரன், இரா., 2003, சைவப் பெருவழியில் காலம், நர்மதா பதிப்பகம், தியாகராய நகர், சென்னை - 17.

இராஜமாணிக்கம், மு., முனைவர், 1970, பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

இராஜமாணிக்கம், மா., முனைவர், 2011, சைவ சமய வளர்ச்சி, பூம்புகார் பதிப்பகம், சென்னை.

கந்தசாமி, சோ. ந, முனைவர், 2003, இந்தியத் தத்துவக் களஞ்சியம், தொகுதி 1.2.3, மணிவாசகர் நூலகம், 31. சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை- 108.

கந்தசாமி, சோ. ந., முனைவர், 1976, தமிழும் தத்துவமும், மணிவாசகர் நூலகம்,

கந்தசாமி, சோ. ந., முனைவர், 1977, பௌத்தம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

கந்தையா, ந. சி., 2011, சைவசமய வரலாறு, பாவை பப்ளிகேஷன்ஸ், 142, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை- 14.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சரவணன், சா, முனைவர், 2010, சங்க இலக்கியச் செம்மை நலம், பாவை பப்ளிகேஷன்ஸ், இராயப்பேட்டை, சென்னை - 16.

சாமி, பி. எல்., 2011, தமிழிலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் , அம்பத்தூர், சென்னை - 78.

சித்தலிங்கம், டி. பி., முனைவர், 1984, சைவசமயத் தோற்றமும் வளர்ச்சியும், கஸ்தூரிபாய் காந்தி கன்னியா குருகுலம், வேதாரண்யம்.

சிவத்தம்பி கார்த்திகேசு, 2009, சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

சுந்தரமூர்த்தி, கு, முனைவர், 1991, சங்க இலக்கியங்களில் சமய நோக்கு, தருமையாதீனம், தருமபரம்.

சுப்பிரமணிய பிள்ளை, கா, 1980, சைவ சித்தாந்த உண்மை வரலாறு, சைவ சித்தாந்த நூற் பதிப்புக்கழகம், சென்னை.

சுப்பையா, அ. சொ, 1997, தொல்காப்பியம் சைவ சித்தாந்த நோக்கில், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.

சேதுபதி, சொ, முனைவர், 2009, திருக்குறளில் தொல்காப்பிய மெய்ப்பாடுகள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை - 14.

ஞானசம்பந்தம், அ. ச., 1987, பெரியபுராணம் ஓர் ஆய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.

ஞானன், செ., கவிஞர், 1999, தத்துவ தரிசனங்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108

தத்துவப்பிரகாச சுவாமிகள், சீர்காழி, 2003, தத்துவப் பிரகாசம், சைவ சித்தாந்தப் பெருமன்றம், மயிலாப்பூர், சென்னை - 4.

தமிழண்ணல், முனைவர், 2002, புதியநோக்கில் தமிழிலக்கிய வரலாறு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

திருஞானசம்பந்தம், ம. ந., 2011, சமயமும் தமிழும், வானதி பதிப்பகம், 23. தீனதயாளு தெரு, சென்னை- 17

திருஞானசம்பந்தன், பெ, 1978, காச்மீர சைவம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

திருநாவுக்கரசு, தி., 2006, இதுதான் சைவ சித்தாந்தம், திருவரசு புத்தக நிலையம், 23, தீனதயாளுதெரு, தியாகராய நகர், சென்னை - 17.

தேவசேனாபதி, வ. ஆ., 1981, சைவ சித்தாந்தத்தின் அடிப்படைகள், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேவநேயப் பாவாணர், ஞா, 1972, தமிழர் மதம், நேசமணி பதிப்பகம், 2ஆம் மேற்குக் குறுக்குச் சாலை, காட்டுப்பாடி.

தேவி பிரசாத் சட்டோபாத்தியாயா, 2010, உலகாயதம், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை - 98.

தேவி பிரசாத் சட்டோபாத்தியாயா, 2011, இந்தியத் தத்துவ இயல், அலைகள் வெளியீட்டகம், சென்னை - 24.

நடராசன், பி.ச., 2008, தமிழகத்தில் வைதீக சமயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர்,

நிலாதேவி, சிந்தா, 2004, ஓங்கு பரிபாடல், சங்கீதம் பதிப்பகம், இலாஸ்பேட்டை, புதுச்சேரி.

நெடுஞ்செழியன், க. முனைவர், 2000, தமிழரின் தருக்கவியல், மனிதம் பதிப்பகம், திருச்சி.

நெடுஞ்செழியன், க., முனைவர், 1990, தமிழிலக்கியத்தில் உலகாயதம், பாரிநிலையம், சென்னை.

நெடுஞ்செழியன், க., முனைவர், 2002, ஆசீவகம் என்னும் தமிழர் அணுவியம், மனிதம் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி.

நெடுஞ்செழியன், க., முனைவர், 2006, சங்ககாலத் தமிழர் சமயம், பாலம் பதிப்பகம், அண்ணாநகர், சென்னை.

பாலசுந்தரம், ஆதி, 2002, சங்க இலக்கியங்கள் புலப்படுத்தும் வழிபாட்டு வரலாறு, மணிமேகலைப் பிரசுரம், தியாகராயநகர், சென்னை -17.

பாலசுப்பிரமணியன், சிற்பி., முனைவர், சேதுபதி. சொ, முனைவர் 2010, தமிழிலக்கிய வரலாறு, கவிதா பப்ளிகேஷன்ஸ், தியாகராயநகர், சென்னை - 17.

பாலசுப்பிரமணியன், கு. வெ., முனைவர், 1986, மீரா பதிப்பகம், புதுக்கோட்டை.

பேரின்பன், தேவ, 2006, தமிழர் தத்துவம், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், அம்பத்தூர், சென்னை-98.

பொன்னம்பல அடிகளார், 2002, குன்றக்குடி அடிகளார் நூல் வரிசை, சமயம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 108.

மறைமலை அடிகள், 2003, தமிழர் மதம், பூம்புகார் பதிப்பகம், சென்னை - 108.

மாணிக்கம், வீ, முனைவர், 2010, தமிழர் வாழ்வியல், சிலியோ பப்ளிகேஷன்ஸ், மதுரை-1

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மிருணாள் காந்தி காங்கோபாத்தியாயா, 2011, இந்தியாவின் மெய்யியல், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் , அம்பத்தூர், சென்னை - 98.

முத்தப்பன், பழ., முனைவர், 2002, அருணந்தி சிவாசாரியார் நூல்கள் ஓர் ஆய்வு, மீனாட்சி நூலகம், பொன்னமராவதி.

முத்துக்குமாரசுவாமி, பா, 2007, சிவன், பழநியப்பா பிரதர்ஸ், 25. பீட்டர்ஸ் சாலை, சென்னை.

ராகுல் சாங்கிருத்தியாயன், 2009, இந்துத் தத்துவ இயல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை - 98.

ராகுல் சாங்கிருத்தியாயன், 2011, ரிக் வேத கால ஆரியர்கள், அலைகள் வெளியீட்டகம், லிங்கிசெட்டித் தெரு, சென்னை - 1.

லட்சமிநாராயணன், கே. சி, 2005, வேதங்களை ஏற்றிப் போற்றும் தமிழிலக்கியங்கள், எஸ்,கே.எம். பப்ளிகேஷன்ஸ், தியாகராயநகர், சென்னை -17.

லெட்சுமணன், கி, 1980, இந்தியத் தத்துவ ஞானம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை - 14.

வரதராசன், பெ, 2009, சங்ககால மக்களின் பழக்க வழக்கங்கள், தேன்மொழி பதிப்பகம், கொழுந்தம்பட்டு, திருவண்ணாமலை மாவட்டம்.

வரதராசன், மு, 2012, தமிழிலக்கிய வரலாறு, சாகித்திய அகாடமி, புதுதில்லி.

வேங்கடசாமி, மயிலை. சீனி, 2004, சமணமும் தமிழும், வர்த்தமானன் பதிப்பகம், 40, சரோஜினி தெரு, தியாகராயநகர், சென்னை -17.

வேலுப்பிள்ளை, ஆ, 2011, தமிழர் சமய வரலாறு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

FOR COPIES
CONTACT

Rs.600/-

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தமிழின் தொன்மைக்குச் சான்றாகத் தொல்காப்பியத்தையும், சங்க இலக்கியங்களையும், காப்பியங்களையும் குறிப்பிடுவதைப் போன்று அதன் அடுத்தநிலை வளர்ச்சிக்குப் பக்தி இலக்கியங்கள் வித்திட்டன என்று குறிப்பிடலாம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருமாளிகைத் தேவர், திருமூலர், காரைக்காலம்மையார், சேக்கிழார் போன்ற அடியார்களின் தமிழ்ப்பணி வியக்கத்தக்கதாகும். "தென்னாடுடைய சிவனே போற்றி-எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்ற மணிவாசகரின் திருவாக்கு சைவசமய நெஞ்சங்களில் எல்லாம் கொலுவிருக்கும் திருவாக்காகும். இது சைவ சமயத்தின் பெருமையையும் அதன் பரப்பினையும் வெளிப்படுத்தும் வாக்கும் ஆகும். "சைவத்தின் மேல் சமயம் வேறில்லை" என்ற உணர்வோடு வாழ்வது சைவ சமய உலக வாழ்வு. சிவபெருமானின் சம்பந்தம் உடைய சைவ வாழ்வு இன்று நேற்றல்ல, அநாதி காலந்தொட்டு அமைந்தது. சைவ சமய வாழ்வு, தொன்மையும் சிறப்பும் மிக்கது. மெய்ப்பொருளியலார் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுகின்ற உலகச் சமயங்களில் சைவ சமயமும் ஒன்றாக இருக்கின்றது. இச்சைவ சமயத்தின் தோற்றம் யாரால் எப்பொழுது அமைந்தது என்பதை அறுதியிட்டுக் கூறமுடியாத அளவிற்குப் பழமை வாய்ந்தது. இத்தகைய சைவசமயம் பண்டைக்காலந்தொட்டே மக்களின் வாழ்வியலில் இரண்டறக் கலந்திருந்தது என்பதற்குச் சங்க இலக்கியங்கள் சான்றாக விளங்குகின்றன. இவ்வாறு சங்க இலக்கியங்களில் விரவியிருக்கும் சைவ சமய மூலக் கூறுகளை அறிந்து வெளிப்படுத்தும் நோக்கில் உருவாக்கம் பெற்றதே "சங்க இலக்கியத்தில் சைவ சமய மூலக் கூறுகள்" எனும் இந்நூல்.

முனைவர் பழ. முத்தப்பன்

இவர் 13.5.1945 இல் பிறந்தார். மயிலம் பொம்மபுர ஆதீனக் கல்லூரி, மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, திருச்சி செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரி ஆகியவற்றில் பேராசிரியராகவும், முதல்வராகவும் பணியாற்றிய இவர் பல்வேறு நூல்களை எழுதியவர். செம்மொழி நிறுவனத்தின் வழியாக பயிலரங்கு, ஆய்வுத்திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்தியவர். சிந்தாந்தத்தில் துறை போகியவர். பல்வேறு அமைப்புகளின் விருதுகளையும் பெற்றவர்.

Rs.600/-

ISBN 978-81-963293-8-9

செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம்,
சென்னை - 600 100